மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)



# எம். ஏ.

# அரசியல்

## இரண்டாம் ஆண்டு

## தாள் - VI

# தற்கால அரசியல் முறையமைவுகள்

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

(DEC அங்கீகாரம் பெற்றது)

www.mkudde.org

S 274

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக் கல்வி



# எம்.ஏ. - அரசியல்

## இரண்டாம் ஆண்டு

### தாள் - VI

# தற்கால அரசியல் முறையமைவுகள்

DEC அங்கீகாரம் பெற்றது

www.mkudde.org

**S 274**

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி இயக்ககம்

முதுகலை இரண்டாம் ஆண்டு

# தற்கால அரசியல் முறையமைவுகள்

அன்புடைய மாணவர்களே!

தற்கால அரசியல் முறையமைவுகள் என்ற இந்தப் பாடம் அரசியல் முதுகலை இரண்டாமாண்டு மாணவர்கட்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது. முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இந்தப் பாடத்திற்கான தேர்வினை இந்தக் கல்வி ஆண்டின் இறுதியில் எழுதவேண்டும். தேர்வில் 10 வினாக்கள் கேட்கப்படும். அவைகளில் 5 வினாக்களுக்கு மட்டும் நீவிர் விடையளிக்க வேண்டும். இப்பாடத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி வினாக்களைப் பார்த்து தேர்வில் கேட்கப்படும் வினாக்களின் தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

இப்பாடத்திற்குரிய பாடத்திட்டமும், பாடவரிசையும் முதலில் தரப்பட்டுள்ளது. இவைகள் இப்பாடத்தில் நீங்கள் கற்க வேண்டிய விஷயங்களை விளக்குகின்றன. உங்களுடைய வசதிக்காக இந்தப் பாடத்தை 10 பகுதிகளாகப் பிரித்து அமைத்துத் தந்திருகிறோம்.

தொலை நிலைக்கல்வி இயக்ககம் உங்களுக்கு என நடத்தும் தொடர்பு வகுப்புகளுக்கு தவறாமல் வாருங்கள். அங்கு பாடம் சம்பந்தப்பட்ட உங்களுடைய ஐயப்பாடுகள் தீர்த்து வைக்கப்படும். கடினமான பாடப் பகுதிகள் விளக்கப்படும்.

தொலை நிலைக்கல்வி இயக்ககத்தில் இருந்து உங்களுக்கு வரும் பாடங்களை அன்றாடம் படித்து விடுவீர்களேயானால் தேர்வு எழுதும்பொழுது சிரமம் இருக்காது. பாடத்தை நீங்கள் படிக்க ஆரம்பித்ததும் இந்தப் பாடம் சுலபம் என்பதை புரிந்து கொள்வீர்கள். அதனால் காலங்கடத்தாமல் உடனே கற்க ஆரம்பியுங்கள், உங்கள் வெற்றி உறுதி.

எமது நல்வாழ்த்துக்கள்.

அரசியல் துறை

# SYLLABUS

## Paper VI

## Contemporary Political System

### (U.K., U.S.A., France and Switzerland)

**Unit: 1** Meaning Nature and Characteristics of Political System – Traditional and Modern Approaches to the Study of Political Systems.

**Unit: 2** Classification of Political Systems on the basis of Distribution of Powers – Classification of Political Systems on the basis of the Relations between the Legislature and the Executive.

**Unit: 3** Basic features of the Political Systems – U.K., U.S.A., France and Switzerland.

**Unit: 4** Legislature – U.K., U.S.A., France and Switzerland.

**Unit: 5** Executive – U.K., U.S.A., France and Switzerland.

**Unit: 6** Judiciary – U.K., U.S.A., France and Switzerland.

**Unit: 7** Parties and Pressure Groups – U.K., U.S.A., France and Switzerland.

**Unit: 8** Local Governments – U.K., U.S.A., France and Switzerland.

**Unit: 9** Civil Service – U.K., U.S.A., France and Switzerland.

**Unit: 10** Electoral System – U.K., U.S.A., France and Switzerland.

## SELECT REFERENCES


1. W. Bagehot, The English Constitution, Londong, Fontana, 1963.
2. J. Blondel, An Introduction to Comparative Government, London, Weidenfeld and Nicolson, 1969.
3. Finer, Theory and Practice of Modern Government, London, Methuen, 1969.
4. A Lijphart, Electoral Systems and Party System, New Haven CT, Yale University Press, 1994.
5. A Lijphart, (ed.)., Parliamentary Versus Presidential Government, Oxford and New York, Oxford University Press, 1992.
6. R.C. Macridis and R.E. Ward, Modern Political Systems: Europe and Asia, 2nd Edn., Englewood Cliffs N.J., Prentice Hall, 1968.
7. R. Maddex, Constitutions of the World, 2nd Edn., Washington DC and London, CQ Press, 2000.
8. H.G. Nicolas, The Nature of American Politics, 2nd Edn., Oxford, The Clarendon Press, 1986.
9. F.A. Ogg and Zink, Modern Foreign Governments, New York, Macmillan, 1964.
10. R. Rose, Politics in England: An Interpretation for the 1980s, Boston, Little Brown, 1980.
11. J. Wilson, American Government, 4th Edn., Boston Massachusetts, Houghton Miffin, 1997.
12. V. Wright, Government and Politics of France, 3rd Edn., London, Unwin Hyaman, 1989.

# பாடப்பட்டியல்

| அலகு எண் | பாட வரிசை |
|---|---|
| 1. | அரசியல் முறைமைவுகள் பொருள், தன்மை, குணநலன் |
| 2. | இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு - சிறப்புப் பண்புகள் - முடியாட்சி - ஆட்சித்துறை |
| 3. | பிரிட்டனின் அமைச்சர் குழு – தலைமை அமைச்சர் - சட்டமன்றம் |
| 4. | பிரிட்டனின் நீதித்துறை – அரசியல் கட்சிகள் - தன்னலக் குழுக்கள் – தேர்தல்கள் - செய்தித் தொடர்புகள் |
| 5. | அமெரிக்க அரசியலமைப்பு - பண்புகள் - கூட்டாட்சி - குடியரசுத் தலைவர் |
| 6. | அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டமன்றம் - காங்கிரசு – தலைமை நீதிமன்றம், அரசியல் கட்சிகள் |
| 7. | பிரான்சின் அரசியலமைப்பு – பண்புகள் - குடியரசுத் தலைவர் - அரசாங்கம் |
| 8. | பிரான்சின் சட்டமன்றம் – அமைப்பு – சட்டமியற்றும்முறை |
| 9. | சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பு - பண்புகள் - கூட்டாட்சி – சட்டமன்றம் - நீதித்துறை |
| 10. | சுவிட்சர்லாந்தின் அரசியல் கட்சிகள் - தன்னலக்குழுக்கள் - தேர்தல்கள் |

# பாடம் - 1

# அரசியல் முறைமைவுகள் பொருள், தன்மை, குணநலன்

## முன்னுரை

இந்த அலகில் அரசியல் முறையமைவுகளின் பொருள், தன்மை, குணநலன், அணுகுமுறைகள், முறையமைவு பகுப்பாய்வு, உள்ளீடு, வெளிப்பாடு அணுகுமுறை, அமைப்பு, பணிப்பகுப்பாய்வு அணுகுமுறை, அரசியல் முறையமைவுகளை வகைப்படுத்துதல், அதிகாரப்பங்கீட்டின் அடிப்படையில் அரசியல் முறையமைவுகளை வகைப்படுத்துதல், ஆட்சித்துறைக்கும், சட்டமன்றத்திற்குமிடையேயுள்ள தொடர்பின் அடிப்படையில் அரசியல் முறையமைவுகளை வகைப்படுத்துதல் மற்றும் தற்கால அரசியல் முறையமைவுகளின் வகைப்பாடு ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளன.

## நோக்கங்கள்

அரசியல் முறைமைவுகள் பொருள், தன்மை, குணநலன் பற்றி அறிந்துகொள்வது.

அரசியல் முறையமைவின் அணுகுமுறைகள் பற்றி விளக்குவது.

அரசியல் முறையமைவின் பகுப்பாய்வினை பற்றி தெரிந்து கொள்வது.

அரசியல் முறைமைவுகளை வகைப்படுத்துதல் பற்றி அறிந்து கொள்வது.

## வடிவமைப்பு

பொருளும், தன்மையும்

G.A.ஆல்மண்டின் அரசியல் முறையமைவு ஆய்வு

மரபார்ந்த அணுகுமுறை

தற்கால அணுகுமுறை

நடத்தை இயல் அணுகுமுறை

முறையமைவுப் பகுப்பாய்வு (Systems Analysis): வளர்ச்சியும் பொருளும்

உள்ளீடு – வெளிப்பாடு பகுப்பாய்வு அணுகுமுறை

அமைப்பு – பணிப்பகுப்பாய்வு அணுகுமுறை

அரசியல் முறையமைவுகளை வகைப்படுத்துதல்

## 1.1 பொருளும், தன்மையும்

தற்கால அரசியல் அறிவியலில் அரசியல் முறையமைவு என்னும் சொல் அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. இச்சொல் அரசியல் நிகழ்ச்சிகளை ஒரு புதிய கோணத்தில் இருந்து நோக்குகிறது. அரசியல் முறையமைவு என்பது, அரசியல் அறிவியலில் பழைய உறவுகள் பயன்படுத்திய அரசு, அரசாங்கம் போன்ற சொற்களுக்குப் புதுப் பெயர்களை கொடுத்திருப்பதோடு, அரசியல், அறிவியல் அதனுடைய ஒரு பகுதி என இதுகாறும் கருதாத அரசியல் செயல், அரசியல் நடைமுறை ஆகியவற்றையும் அரசியல் அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.

அரசு, அரசாங்கம் போன்ற பழைய சொற்களுக்குச் சட்டப்பூர்வமான நிறுவனங்களை குறிக்கும் பொருளே உண்டு. அவைகள் மேற்கத்திய நாடுகளில் காணும் அரசியல் நிறுவனங்களின் மீதே குறிப்பாக கவனம் செலுத்தியது. இதைத்தான் அரசியல் விஞ்ஞானத்தின் பழைய மரபார்ந்த அணுகுமுறை ஆய்வு செய்து வந்தது. ஆனால் எல்லா அரசியல் சமுதாயங்களிலும் சட்டமன்றம், நீதிமன்றம் போன்ற அரசாங்க நிறுவனங்களின் செயல்களும், நடத்தையும், மக்கள் பிரிவு, மக்களின் அரசியல் மனப்பான்மை போன்றவற்றினால் உருவாக்கப்படுகின்றன. எனவே, எல்லாவிதமான அரசியல் சமுதாயங்களின் அரசியல் நிகழ்ச்சிகளைத் தீவிரமாக ஆய்வு செய்ய

வேண்டுமாயின், இவைகள் அனைத்தும் சேர்ந்த ஒரு விரிவான ஆய்வுமுறை தேவை. அது தான் அரசியல் முறையமைவின் குறிக்கோளாகும். அரசியல் முறையமைவு என்ற சொல் பலவியல் அணுகுமுறை மூலம் அரசாங்கத்தையும், அதன் நிறுவனங்களையும் கற்பதைக் குறிக்கும். அரசியல் முறையமைவு என்பதில் சட்டமன்றம், நீதிமன்றம் நிர்வாகத் துணை அமைப்புகள் போன்ற அரசாங்க நிறுவனங்கள் மட்டுமன்றி அரசியல் பண்புடைய எல்லா அமைப்புகளும் அடங்கும் என ஆல்மண்ட் விளக்கம் கொடுத்துள்ளார். உறவு முறை, சாதிமுறை, கொலை, ஆர்ப்பாட்டங்கள், அரசியல் கட்சிகள், தன்னலக் குழுக்கள் போன்றவை தான் அரசியல் பண்புடைய அமைப்புகள் என அழைக்கப்படுகின்றன. மேற்கூறிய கூறுகளை இணைத்து பியர், உலாம் ஆகியோர் அரசியல் முறையமைவிற்கு விளக்கம் கொடுக்கின்றனர். சமுதாயத்திற்காக சில பணிகளை செய்யும் அமைப்பே அரசியல் முறையமைவு. அரசியல் முடிவுகள் செய்வதற்குள்ள கூறுகள் அதில் அடங்கும். அம்முடிவுகளுக்குச் சட்டபூர்வமாக ஏற்புடைய பண்பு உண்டு. காரணம் அவைகள் நோக்கம், அதிகாரம் ஆகியவற்றைப் பற்றி மக்களின் கருத்துக்களை ஒத்திருப்பதேயாகும். சமுதாயத்தின் குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டு, சட்டபூர்வமான கொள்கைத் தீர்மானங்களினால் அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது அரசியல் முறையமைவின் மூலமேயாகும்.

### 1.2 G.A. ஆல்மண்டின் அரசியல் முறையமைவு ஆய்வு

ஆல்மண்டின் கருத்துப்படி, அரசியல் முறையமைவில் மூன்று பொதுப் பண்புகள் (Properties) உண்டு. அவை கீழே வருவனவாகும்.

#### 1.2.1 விரிவானது (Comprehensiveness)

அரசியல் முறையமைவு என்பது சட்டமன்றம், நீதிமன்றம், ஆட்சித்துறை போன்ற முறையான அரசாங்க நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், தன்னலக் குழுக்கள் போன்ற முறைசாரா நிறுவனங்கள் ஆகியவற்றை மட்டுமன்றி, உறவுமுறை, சாதிமுறை, சமய, கலாச்சார ஸ்தாபனங்கள், ஆர்ப்பாட்டங்கள், கலகம், கொலை போன்ற அரசியல் அம்சமுடைய அமைப்புக்களையும் உட்கொண்டதாகும்.

#### 1.2.2 உள் உறுப்புகள் ஒன்றோடொன்று சார்ந்து நிற்கும் நிலை (Interdependence)

ஒரு அரசியல் முறையமைவின் உள் உறுப்புகள் அனைத்தும் ஒன்றோடொன்று சார்ந்து நிற்கின்றன. அதாவது ஒரு உள் உறுப்பில் ஏற்படும் மாற்றம் மற்ற உள் உறுப்புகள் அனைத்தையும் பாதிக்கும். செய்தித் தொடர்பு முறையில் ஏற்பட்ட முன்னேற்றமானது தேர்தல் முறை, அரசியல் கட்சிகள், சட்டமன்றம், ஆட்சித்துறை ஆகியவற்றின் அடிப்படைக் கூறுகளையே மாற்றி விட்டதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

#### 1.2.3 அரசியல் முறையமைவுக்கு எல்லையுண்டு (Existence of Boundaries)

சமுதாயம் பல முறையமைவுகளைக் கொண்டது. அவற்றில் அரசியல் முறையமைவு ஒன்றாகும். ஒவ்வொரு முறையமைவும் அதன் எல்லைக்குள் தான் செயல்படும். அதாவது அரசியல் முறையமைவின் எல்லை முடியமிடத்திலிருந்து இன்னொரு முறையமைவு தொடங்குகிறது. எடுத்துக்காட்டாக, தேர்தல் நாளன்று ஒரு குடிமகன் அவனுடைய வயலிலிருந்து ஓட்டுச்சாவடிக்குச் செல்கிறான் என்றால், அவன் பொருளாதார முறையமைவின் எல்லையைத் தாண்டி, அரசியல் முறையமைவின்

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
>
> 1. G.A. ஆல்மண்டின் அரசியல் முறையமைவை விளக்குக.

எல்லைக்குள் நுழைகிறான் எனப் பொருள். சமுதாயத்திற்கும் அரசியலுக்குமிடையேயுள்ள எல்லை ஒவ்வொரு அரசியல் முறையமைவிலும் மாறுபடும். எடுத்துக்காட்டாக, பழங்கால சமுதாயத்தில் அரசியலுக்கும் சமுதாயத்திற்குமிடையேயுள்ள எல்லை வரையறுக்கப்படாமலிருந்ததைக் கூறலாம். ஒரு அரசியல் முறையமைவிற்குக் கீழ்காணும் ஐந்து சிறப்பு கூறுகள் உண்டு என ஆல்மண்ட் கூறுகிறார்.

### 1.2.4 உலகளாவிய அரசியல் முறையமைவு (Universality of Political System)

பழங்கால, தற்கால அல்லது வளர்ந்து வரும் வளர்ச்சியுற்ற எல்லா வகையான அரசியல் முறையமைவுகளிலும் அரசியல் சார்ந்த அமைப்புகள் உண்டு. அவ்வமைப்புகளிலும் அரசியல் சார்ந்த அமைப்புகள் உண்டு. அவ்வமைப்புகளின் வாயிலாகத்தான் ஒரு அரசியல் முறையமைவு அதன் உள்நாட்டு, வெளிநாட்டு ஒழுங்கைப் பராமரிக்கிறது. எனவே அரசியல் விஞ்ஞானம் ஐரோப்பிய, அமெரிக்க அரசியல் முறையமைவுகளை மட்டுமின்றி, ஆசிய, ஆப்பிரிக்க கண்டங்களிலுள்ள அரசியல் முறையமைவுகளையும் அதன் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள வளர்ந்து வரும் நாடுகளின் அரசியல் முறையமைவுகளை ஆய்வு செய்யும்போது, வளர்ச்சியுற்ற மேற்கத்திய நாடுகளின் அரசியல் முறையமைவுகளை ஆய்வு செய்யும் போது கிடைக்கக்கூடிய மூலக் கூறுகளைவிட அதிக மூலக்கூறுகளும் செய்திக் கூறுகளும் கிடைக்கின்றன என்றே கூறலாம்.

### 1.2.5 உலகளாவிய அரசியல் அமைப்புகள் (Universality of Political Structures)

எல்லா அரசியல் முறையமைவுகளிலும் பல அமைப்புகள் உண்டு. அவ்வமைப்புகள் ஒவ்வொன்றும் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ பல பணிகளைச் செய்கின்றன. சமுதாயத்திற்குள் அப்பணிகள் பரவலாக்கப்பட்டும் செய்யப்படலாம், அல்லது உறவுமுறை போன்ற ஒரு அமைப்பு மூலமும் செய்யப்படலாம். ஒரு அரசியல் முறையமைவை ஆய்வு செய்யும்போது அதிலுள்ள எல்லா அமைப்புகளின் பணிகளையும், அப்பணிகளின் தன்மையையும் ஆராய்ந்து உணர வேண்டும். சட்ட மன்றம், நீதி மன்றம் போன்ற அமைப்புகளின் பணியை மட்டும் ஆராய்ந்தால் போதாது.

### 1.2.6 உலகளாவிய பணிகள் (Universality of Political Functions)

அரசியல் முறையமைவை ஆய்வு செய்யும் அணுகுமுறையானது அமைப்பை அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, பணிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த அணுகுமுறை ஒரு அரசியல் முறையமைவிலுள்ள சட்டமன்றம், ஆட்சிமுறை, நீதித்துறை போன்ற அரசின் அமைப்புகளின் பணிகளை மட்டுமன்றி, அரசு சாராத அமைப்புக்களான அரசியல் கட்சிகள், தன்னலக் குழுக்கள் ஆகியவற்றின் பணிகள் ஆகியவைகளையும் ஆய்வு செய்கிறது. மக்கள் எவ்வாறு அரசியலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களுக்கு எவ்வாறு அரசியல் விஷயங்களைப் பற்றிய உணர்வு ஊட்டப்படுகிறது போன்ற பிரச்சனைகளையும் ஆய்வு செய்கிறது. இவற்றை எல்லாம் மனதிற்கொண்டு உள்ளீடு, வெளிப்பாடு அமைப்புகள் செய்யும் பணியை அவர் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கிறார்.

#### உள்ளீட்டுப் பணிகள் (Input Functions)

1. அரசியல் சமூக போதனையும், அரசியலில் ஆட்சேர்ப்பும் (Political socialisation and Recuruitment )

2. நலன்களைத் தெளிவுப்படுத்துதல் (Interest Articulation)
3. நலன்களைத் தொகைப்படுத்துதல் (Interest Aggregation)
4. அரசியல் செய்தித் தொடர்பு (Political Communication)

**வெளிப்பாட்டு பணிகள் (Output Functions)**

1. சட்டத்தை ஏற்படுத்துதல் (Rule Making)
2. சட்டத்தை அமலாக்குதல் (Rule Application)
3. சட்டத்திற்கு விளக்கம் கொடுத்தல் (Rule Adjudication)

### 1.2.7 அமைப்புகளின் பன்முகப் பணித்தன்மை (Multifunctionality of Political Structures)

ஒரு அரசியல் முறையமைவிலுள்ள எல்லா அமைப்புகளும் பன்முகப் பணிகளைச் செய்கின்றன. நீதிமன்றம் சட்டத்திற்கு விளக்கமளிக்கும் பணியை மட்டுமன்றி, அதன் தீர்ப்புக்கள் வாயிலாகச் சட்டத்தை உருவாக்குவதையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். அரசியல் கட்சிகள் சட்டத்தைத் துவக்கும் பணியை மேற்கொள்வதோடு, ஆட்சியிலும் பங்குபெறும் பணி இதற்கு இன்னொரு எடுத்துக்காட்டாகும்.

### 1.2.8 அரசியல் முறையமைவின் கலப்புக் கலாச்சராத் தன்மை (Culturally Mixed Character of Political System)

எல்லா அரசியல் கலாச்சாரமும் (Political culture) கலப்புத் தன்மையுடையதாகவே காணப்படும். ஒவ்வொரு அரசியல் முறையமைவிலும் முறைசார்ந்த, முறைசாராத அமைப்புக்கள் காணப்படுகின்றன. பழங்கால அரசியல் முறையமைவுகளுக்கே உரித்தான பல அமைப்புகள் தற்கால அரசியல் முறையமைவுகளிலும் காணப்பெறும்.

## 1.3 பழைய மரபார்ந்த அணுகுமுறை (Traditional Approach)

இரண்டாம் உலகப்போருக்கு முன் பின்பற்றப்பட்ட அரசியல் கல்வி அணுகுமுறை பழைய மரபார்ந்த அணுகுமுறை என்றழைக்கப்பட்டது. இந்த அணுகுமுறை பின்வரும் நான்கு குணநலன்களைக் கொண்டிருந்தது. அவை

1) ஒப்பீடு இன்மை (Non-comparative)
2) விரிந்துரைக்கும் பண்பு (Descriptive)
3) குறுகிய நிலை (Parochial)
4) ஆய்வில் தேக்க நிலை (Static)

பழைய மரபார்ந்த அணுகுமுறையைப் பின்பற்றிய அரசியல் அறிவியல் அறிஞர்கள் ஓரினப் பொருள் பற்றிய நூல்களை உருவாக்கினர். அவை தனிப்பட்ட அரசியல் முறையமைவுகளை விவரிப்பவையாக அமைந்தன. இங்கிலாந்தின் அரசியல் முறையமைவைப் பற்றி ஹெரால்டு லாஸ்கி, ஐவர்ஜென்னிங்ஸ் ஆகியோர் எழுதிய நூல்களை அரசியல் அறிவியல் மாணவர்களால் மறக்க இயலாது. ஒரு அரசியல் முறையமைவை சரியாகப் புரிந்து கொள்ள அம்முறையமைவை வரலாற்று, சமூக மற்றும் கலாச்சார அடிப்படையில் கற்க வேண்டும். இல்லையென்றால் அக்கல்வி திருத்தமற்ற மேலெழுந்த வாரியான கல்வியாகக் கருதப்படும். வெளிநாட்டு அரசியல் முறையமைவைப் பற்றிக் கற்பது பரந்த நோக்கமுடைய கல்வியின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. சுருங்கக்கூறின், பழைய மரபார்ந்த அணுகுமுறை பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளது.

1. இம்முறையில் முறை சார்ந்த நிறுவனங்களைக் கற்பதற்கு முக்கியத்துவம் வழங்கி, அரசியல் நடைமுறைகள் புறக்கணிக்கப்பட்டன.

2. மேற்கத்திய அரசியல் முறையமைவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு பிற அரசியல் முறையமைவுகள் புறக்கணிக்கப்பட்டன. இவ்வணுகுமுறை கலாச்சார வரையறைக்குள் கட்டுப்பட்டுள்ளது.
3. பகுப்பாய்வு மற்றும் அரசியல் ஆராய்ச்சியில் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒழுங்கான பொதுக்கருத்துகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்காமல் நடைமுறையில் இயங்கும் நிறுவனங்களைப் பற்றிய விளக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.
4. குறிப்பிட்ட பொதுக் கோட்பாடுகளைச் சோதனை செய்ய தேவையான கோட்பாடுகளை புள்ளி விவரங்களுடன் சேகரித்து பகுப்பாய்வு செய்யும் முறைக்கு முக்கியத்துவம் கிடையாது.
5. அரசியல் ஆய்வுக்கு பயன்படும் பிற சமூக அறிவியல் ஆய்வுக் கண்டுபிடிப்புகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
6. அரசியல் நடவடிக்கையை உறுதிப்படுத்தும் அரசியல் சாராத நடவடிக்கைகளை பழைய மரபார்ந்த அணுகுமுறை ஏற்றுக்கொள்ளாமல் அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் அரசியல் சாராத அடிப்படைகளை புறக்கணிக்கிறது.

## 1.4 தற்கால அணுகுமுறை (Modern Approach)

அரசியல் நடைமுறைப் பற்றிய உண்மைகளை பழைய மரபார்ந்த அணுகுமுறையால் சரிவர கண்டுபிடிக்க இயலாத நிலையும், இரண்டாம் உலகப்போரின் இறுதியில் பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் உதயமாகியதும், பழைய மரபார்ந்த அணுகுமுறையின் முடிவிற்குக் காரணங்களாக அமைந்தன. மேற்கத்திய நாடுகளின் அரசியல் முறையமைவை அறிய உகந்த அணுகுமுறையாக அமைந்த பழைய மரபார்ந்த அணுகுமுறை புதிதாய் தோன்றிய நாடுகளின் அரசியல் முறையமைவை அறிய இயலாத ஒன்றாய் காணப்பட்டது. இத்துறையில் உள்ள அறிஞர்கள் தங்கள் கல்வியை மேற்கத்திய நாடுளைப் பற்றி அறிவதோடு நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை. தற்கால அணுகுமுறை விரித்துரைக்கும் பண்பிற்கு முக்கியத்துவம் வழங்காமல், கோட்பாடு உருவாக்கலுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளது. அரசியல் அறிவியலில் கோட்பாடுகள் வகுக்குமுன்னர் பழக்கத்திலிருந்த பொதுக் கருத்துக்கள் போதாது என்பது உணரப்பட்டது. அரசியல் அறிவியல் அரசு நிறுவனங்களையும், சட்ட நடைமுறைகளையும் விளக்குவதாகக் காணப்பட்டது. தற்கால அரசியல் முறையமைவுக் கல்வி ஆராய்ச்சி முறைகளுக்கு முக்கியத்துவம் வழங்குகிறது. பிற சமூக அறிவியல்கள் ஏற்கனவே இந்நிலையை அடைந்துவிட்டன. இச்சமூக அறிவியல்களிலிருந்து குறிப்பாக சமூகவியலிலிருந்து தற்கால அரசியல் முறையமைவு தன் கல்வி முறைகளையும் ஆராய்ச்சிகளையும் பொருள் பதிந்ததாக மாற்றும் உணர்வினைப் பெற்றது. இம்முறைகளைப் பின்பற்றினால் தான் எல்லோரும் ஏற்கும் கோட்பாடுகளை உருவாக்கி தற்கால அரசியல் முறையமைவு கல்வி அறிவியலாக உருவெடுக்க இயலும். தற்கால அரசியல் முறையமைவு கல்வி அனுபவத்தால் அறியப்படும் முறையமைவை உடைத்ததாய் இருத்தல் வேண்டும். அப்போது தான் அரசியல் ஆராய்ச்சிக்குகந்த அறிவை முறையாகப் பெற முடியும்.

> தன்னறிவு சோதனைக் கேள்வி
> 2. அரசியல் முறையமைவின் தற்கால அணுகுமுறை பற்றி விளக்குக.

## 1.5 நடத்தை இயல் அணுகுமுறை (Behavioural Approach)

இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலகட்டத்தில் அரசியல் அறிவியலைக் கற்க உதவிய அணுகுமுறைகளில் நடத்தை இயல் அணுகுமுறை முக்கியமான

ஒன்றாகக் கருதப்பட்டது. அரசியல், அதன் அமைப்பு, நடைமுறை மற்றும் நடத்தை ஆகியவற்றைக் கற்க விஞ்ஞான வழிமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை இவ்வணுகுமுறை வலியுறுத்துகிறது. இது தனிப்பட்ட நபர் மற்றும் குழுக்களின் நடத்தைக்கு முக்கியத்துவம் வழங்குகிறது. அவர்களின் முறையான பங்கினையும், நடவடிக்கையும் புறக்கணிக்கிறது. நடத்தை இயல் அணுகுமுறையை பின்பற்றும் அறிஞர்கள் முறையாக ஆய்வு செய்ய முயற்சிக்கின்றனர்.

அவர்கள் ஆய்வுக்கு அடிப்படையான தற்காலிகப் பொதுக்கோட்பாடுகளை அனுபவத்தால் அறியப்படுகின்ற முயைறமைவின் மூலம் உருவாக்கிச் சோதித்து, புள்ளி விவரங்களை கணக்கிட்டு அரசியல் முறையமைவு கல்வியை அறிவியல் பண்புடையதாய் மாற்ற முயற்சிக்கின்றனர். அரசியல் நடத்தையில் ஒரே சீரான நிலையை ஏற்படுத்திக் கோட்பாடுகளை உருவாக்க இவ்வணுகுமுறை முயற்சிக்கிறது.

அரசியல் அறிவியலைக் கற்க பின்பற்றப்பட்டு வந்த மரபார்ந்த, வரலாறு சார்ந்த, தத்துவங்கள் அடிப்படையிலான, விரித்துரைக்கும் பண்பு படைத்த அணுகுமுறைகளை எதிர்க்கும் ஒரு இயக்கமாக இந்த அணுகுமுறை காட்சியளித்தது.

நடத்தை இயல் அணுகுமுறையின் முக்கிய பண்புகளை பின்வருமாறு கூறலாம்.

1) உற்று நோக்கிய மற்றும் உற்று நோக்க முடியும் மனித நடத்தையை அடிப்படையாய் வைத்து அரசியல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நடத்தை இயல் அணுகுமுறை கூறுகிறது.
2) அரசியல் ஆராய்ச்சிகளைப் பற்றி இவ்வணுகுமுறை அறிவியல் சார்ந்த விளக்கம் கூறுகிறது.
3) மதிப்பீடு ஆராய்ச்சிகளைப் பற்றி இவ்வணுகுமுறை அறிவியல் சார்ந்த விளக்கம் கூறுகிறது.
4) நடத்தை இயல் அணுகுமுறை இயற்கை விஞ்ஞானத்தை தன் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு மனித இயல்பு கல்வியை புறக்கணிக்கிறது.
5) ஒழுக்கமுறை விதி அல்லது பயன்மதிப்பு அறிக்கை போன்றவற்றை இவ்வணுகுமுறை புறக்கணிப்பதோடு ஆராய்ச்சியில் ஆராய்ச்சியாளரின் உள்ளாந்த தகவலையும் புறக்கணிக்கிறது.
6) இவ்வணுகுமுறை அரசியல் அறிவியல் ஆய்வுக்கு பலவியல் அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. மேலும், இவ்வணுகுமுறை சமூக இயல் (ளுழஉழைடழபல)இ உளவியல் (ீளலஉhழடழபல), மானிட இயல் (யுவொசழிழடழபல), பொருளாதாரம் (நுஉழழெஅழைஉள) போன்ற மற்ற இயல்களில் அதன் ஆய்வுக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கருத்துக்கள், உத்திகள், முறைகள் ஆகியவற்றை அரசியல் ஆய்வுக்குப் பயன்படுத்தலை எடுத்தியம்புகிறது.
7) இவ்வணுகுமுறை அனுபவத்தால் அறியப்படும் ஆராய்ச்சியினால் கண்டுணர்ந்தவற்றை திரும்ப ஊட்டும் முறையின் வாயிலாக ஆராய்ச்சி முறைமை சீரமைத்தலை வலியுறுத்துகிறது.
8) இவ்வணுகுமுறை ஒப்பீட்டு ஆய்வுமுறை வலியுறுத்துகிறது. நடத்தை இயல் அணுகுமுறையின் முக்கிய இயற்பண்புகளை பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.
   1) பகுப்பாயின் அடிப்படை அலகாக இயங்கு இயல் அரசியல் நிறுவனங்களை ஏற்காமல், தனிமனிதனின் நடத்தையை ஏற்கின்றது.

2) அரசியல் அறிவியல் பிற சமூக அறிவியல்களோடு ஒருங்கிணைதலை இது வலியுறுத்துவதோடு சமூக அறிவியல்களின் பெயரை நடத்தை இயல் அறிவியல் என மாற்றுகின்றது.

3) உற்றுநோக்கி, வகைப்படுத்தி ஆதாரக் குறிப்புக்களை அளவிட துல்லியமான வழிமுறைகளைப் பயன்படுத்த, புள்ளி விபரத்தோடு கூடிய பண்பு சார்ந்த வழிமுறைகளை நடத்தை இயல் அணுகுமுறை எடுத்தியம்புகிறது.

4) ஒழுங்குபடுத்தப்பட்ட, அனுபவத்தால் அறியப்படும் முறைமையினால் கோட்பாடுகளை உருவாக்கலை இவ்வணுகுமுறை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

அரசியல் கல்விக்கு நடத்தை இயல் அணுகுமுறை முக்கியப் பங்கை ஆற்றியுள்ளது என நம்பப்படுகிறது. ஆனால் பலர் இவ்வணுகுமுறையினால் அரசியலை சரியாக புரிந்து கொள்ள முடியுமா என ஐயப்பாடு கொண்டுள்ளனர். எனினும், அரசியல் கல்வியை முறையாக அணுகும் பல அணுகுமுறைகளில் ஒன்றாக இவ்வணுகுமுறை கருதப்படுகிறது. புள்ளிவிவரம் மற்றும் கணக்கீட்டு வழிமுறைகள் சார்ந்த விஞ்ஞான வழிமுறைகளை அறிமுகப்படுத்தி ஏற்புடைத்தாய் மாற்றிய பெருமை இவ்வணுகுமுறையைச் சாரும்.

## 1.6 முறையமைவுப் பகுப்பாய்வு (Systems Analysis): வளர்ச்சியும் பொருளும்

அரசியல் அறிவியலில் முறையமைவுப் பகுப்பாய்வு ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகாறும் அரசியல் அறிவியல் நூற்கள் அரசியலமைப்புகள், அரசாங்கங்கள் போன்ற அரசியல் நிறுவனங்களை மட்டும் ஆய்வு செய்து வந்தது. ஆனால் கையாளத் துவங்கிய பகுப்பாய்வு முறையை அரசியல் பாட ஆய்வில் கையாளத் துவங்கியதோடு, அரசியல் முறைமைவுகளை ஆய்வு செய்ய துவங்கியது. இம்மாற்றத்திற்குள்ள முக்கிய காரணம் அரசியல் அறிவியலில் ஏற்பட்ட ஆய்வு வளர்ச்சியேயாகும். ஏராளமான அரசியல் விஞ்ஞானிகள் அரசியல் முறையமைவுகளை அரசாங்கத்தைச் சாராத நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யத் துவங்கினர். டேவிட் ஈஸ்டன், ஆல்மண்ட், கார்ல் டோஷ், மார்ட்டன், கப்லான் போன்ற சமூகவியல் அறிஞர்கள் அரசியல் நிகழ்ச்சிகளை அறிய சட்டமன்றம், அமைச்சரவை, நீதிமன்றம் போன்ற அரசாங்க அமைப்புகள் போதிய வழிகாட்டிகள் அல்ல என்று திடமாக நம்பினர். மாறாக, அரசியல் நிகழ்ச்சிகளை அறிய எல்லா நாடுகளிலும் காணக்கூடிய சில அமைப்புக்களையும், அவற்றின் பணிகளையும் ஆய்வு செய்ய வேண்டுமென அவர்கள் வாதிட்டனர்.

முறையமைவுப் பகுப்பாய்வை அரசியல் அறிவியலில் புகுத்தியவர்கள் அண்மைக்கால அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளாவர். அவர்களுடைய முயற்சியின் பயனாக அரசியல் அறிவியலின் குறிக்கோள் அது ஆய்வு செய்யும் பிரச்சனைகள் வழிமுறைகள் ஆகியவற்றில் ஒரு பெரும் புரட்சியே ஏற்பட்டுள்ளது. முறையமைவுப் பகுப்பாய்வு அறிவியலில் மட்டுமன்றி, எல்லாச் சமூக இயல்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இயற்கை அறிவியல் (Natural Science) தூண்டுதலாக இருந்தது. அரசியல் அறிவியலில் முறையமைவுப் பகுப்பாய்வை புகுத்தியவர்களில் முக்கியமானவர்கள் டேவிட் ஈஸ்டன், ஆல்மண்ட், மார்ட்டன், கப்லான் ஆகியோராவார்.

பழைய மரபார்ந்த அணுகுமுறைகள் சமூகவியல்களின் ஆய்வுக்குக் கடைபிடிக்கப்படுவதினால் சமூக இயல் பாடத்துறைகளிடையே எவ்வித தொடர்புமின்றி, ஒவ்வொரு பாடத்துறையும் தனித்தனியாக விளங்குகின்றது. இதன் விளைவாக ஒரு சமூக இயலில் ஏற்பட்டுள்ள அறிவு வளர்ச்சி மற்ற சமூக இயல்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமற் போகிறது. மேலும் இந்த ஆய்வுமுறை ஆய்வுப்பணிச ா விரயமாக்குவதோடு சமூக இயல்களின் அறிவை ஒருமுகப்படுத்தும் முயற்சிக்கும் தடையாக விளங்குகிறது என அவர்கள் வாதிட்டனர். ஒரு சமூக இயலைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்ற சமூக இயல்களின் துணையோடு ஒரு பிரச்சனை ஆய்வு செய்வாரெனில் விஞ்ஞான பூர்வமான ஆய்வுக்கும் சமூக இயல் அறிவு வளர்ச்சிக்கும் அதிகமான வாய்ப்புக்கள் உண்டு என இந்த அறிஞர்கள் அரசியல் அறிவியல் பகுப்பாய்வுக்குப் பல இயல் அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றனர்.

1930 ஆம் ஆண்டிற்குப் பிறகு லட்விக் வான் பெர்ட்டலன்பி (Ludvig Von Bertallanfy) என்ற உயிரியல் மேதை, இயற்கை அறிவியல்களின் அறிவை ஒருமைப்படுத்த வேண்டுமென்ற இயக்கத்தை துவக்கினார். இதற்காக இயற்கை அறிவியல்களின் கடைபிடிக்கப்பட்ட இந்த முறையமைவுப் பகுப்பாய்வு அரசியல் விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்த்தது. மனிதனின் நடவடிக்கையை பகுப்பாய்வு செய்ய ஒருமைப்படுத்தப்பட்ட ஒரு கோட்பாட்டை உருவாக்குவதற்குள்ள சாத்திய கூறுகளை ஆராய அமெரிக்காவின் முக்கிய பல்கலைக்கழகங்களில் பல மாநாடுகள் நடத்தப்பட்டன. இதன் விளைவாகப் பொது முறையமைவு பகுப்பாய்வு கோட்பாடு (General systems theory) அரசியல் அறிவியலில் தோன்றியது. இக்கோட்பாட்டின் மையக் கருத்து முறையமைவு (System) ஆகும். பல்வேறு இயல்களிலும் பொதுவான சிலபொருள்கள் உண்டு என்றும் அவற்றை ஒரு அமைப்பாக ஒழுங்குபடுத்தினால், ஒரு பொதுக்கோட்பாட்டை உருவாக்க முடியுமென்றும், அந்தப் பொதுக்கோட்பாடு ஒவ்வொரு பாடத்துறையில் பிரச்சனைகளை நன்கு அறிந்துகொள்ள உதவும் என்றும் பாடத்துறையில் தீவிர ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாக அது அமையும் என்றும் முறையமைவுப் பகுப்பாய்வாளர்கள் திடமாக நம்புகின்றனர். இந்த அணுகுமுறை ஒவ்வொரு பாடத்துறையும் தனித் தனியாக, மற்ற பாடத்துறைகளுடன் தொடர்பின்றிச் செயல்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. பல்வேறு பாடத்துறைகளை ஒன்றோடொன்று தொடர்புடன் செயல்படுத்துவதினால் ஒரு பாடத்துறையில் தோன்றும் அறிவு வளர்ச்சி மற்ற பாடத்துறைகளுக்கும் பரவும். இதனால் எல்லா இயல்களும், பாடத்துறைகளும் பயனடையும் என்று அவர்கள் வற்புறுத்துகின்றனர். சுருங்கக்கூறின், முறையமைவுப் பகுப்பாய்வானது பலவியல் அணுகுமுறையைக் கொண்டதாகும்.

முறைமைவுப் பகுப்பாய்வில் சில அடிப்படைக் கருத்துக்களும் (Concepts) உண்டு. அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### 1.6.1 வகைப்படுத்துவதற்குதவும் மதிப்புருக்கள் பற்றிய கருத்துக்கள் (Concept of classifactory Variables)

இப்பிரிவிலுள்ள கருத்துக்கள், ஜனநாயக அரசியல் முறையமைவு (Democratic political system), ஜனநாயகமல்லாத அரசியல் முறையமைவு ஆகியவற்றைப் பிரித்துரைத்து, அவற்றிற்கிடையேயுள்ள வேற்றுமைகளைச் சுட்டிக்காட்ட உதவுகிறது. எல்லை (Boundary), உள்ளீடு (Inputs), வெளிப்பாடு (Outputs) போன்ற வார்த்தைகள் இங்கு புகுத்தப்படுகின்றன.

### 1.6.2 ஒழுங்குபடுத்துதல், பேணுகை ஆகியவற்றிற்குதவும் மதிப்புருக்கள் பற்றிய கருத்துக்கள் (Concept of Regulatory and Preservative Variables)

இந்தப் பிரிவிலுள்ள கருத்துக்கள் பொதுமுறையமைவுக் கோட்பாட்டின் முக்கிய பாகங்களாய்த் திகழ்கின்றன. ஒரு முறையமைவை ஒழுங்குபடுத்தி அதைப் பேணுவதில் இக்கருத்துக்கள் பங்கு வகிக்கின்றன. உறுதி (Stability), திரும்ப ஊட்டுதல் (Feed back), நடுநிலையமதி (Equilibrium) போன்ற வார்த்தைகள் இக்கருத்துகளில் புகுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு முறையமைவுக்கும் ஒரு நடுநிலையமதி இருக்கவேண்டும் அந்த நடுநிலையமைதி நிலையுள்ளதாகவோ (Stable Equilibrium) அல்லது நிலையில்லாததாகவோ (Unstable Equilibrium) இருக்கலாம்.

### 1.6.3 மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் பற்றிய கருத்துக்கள் (Concept in the Nature of Forces causing Dynamics)

மாற்றம் என்பது இயற்கையின் நியதியாகும். ஆனால் இம்மாற்றம் தொடர்பு கெடக்கூடிய (Disruptive) முறையிலோ, அல்லது தொடர்பு கெடாத (Non-disruptive) முறையிலோ, அல்லது தொடர்பு கெடாத முறையிலோ, இருக்கலாம். சூழ்நிலையின் மாறுபட்ட நிலைகளுக்கேற்ப மாற்றத்தை உருவாக்கும் பொழுது ஒரு தொடர்பு கெடா மாற்றம் ஏற்படுகிறது. தொடர்பு கெடா மாற்றம் முன்னை நிலைக்கு மீள்வு செய்யக் கூடிய தன்மையுடையதாகவோ (Reversible) மீள்வு செய்ய முடியாத தன்மையுடையதாகவோ (Irreversible) இருக்கலாம். முன்னை நிலைக்கு மீள்வு செய்யக்கூடிய தன்மையுடைய மாற்றங்களில் அனுசரணை (Adaptation), வளர்ச்சி (Growth), குறிக்கோள்கள் (Goals) போன்ற வார்த்தைகளும் முன்னை நிலைக்கு மீள்வு செய்யக்கூடிய தன்மையில்லா மாற்றங்களில் தொடர்பு கெடல் (Disruption), வீழ்ச்சி (Breakdown), நெருக்கடி (Crisis) போன்ற வார்த்தைகளும் பயன்படுகின்றன.

### 1.6.4 பொது முறையமைவுக் கோட்பாடும், அரசியல் அறிவியலுக்கு அதைப் பயன்படுத்தலும் (General Systems Theory and its application to Political Science)

முதன் முதலாக இயற்கை அறிவியல்களில் ஆய்வுக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பொதுமுறையமைவுக் கோட்பாட்டின் தத்துவங்கள் அரசியல் அறிவியல் ஆய்வுக்கு எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி இயற்கையாக எழுகிறது. பொதுமுறையமைவுக் கோட்பாடு அரசியல் நிகழ்ச்சிகளை ஆய்வு செய்ய விரிவாகவும் பரவலாகவும் பயன்படுத்தப்படுவது இல்லை என்பது ஓரளவு உண்மையே. இதற்குள்ள காரணம் இக்கோட்டை பயன்படுத்தி ஒரு சமூக இயல் விஞ்ஞானி ஆய்வில் அதிக தூரம் செல்ல முடியாது என்பதாகும்.

பொது முறையமைவுக் கோட்பாட்டின் தத்துவங்கள் பரவலாக சிதறிக் கிடக்கின்றன. இதன் காரணமாக இக்கோட்பாட்டின் தத்துவங்களை அடிப்படையாக வைத்துச் சிறந்த ஒரு பகுப்பாய்வு முறையை உருவாக்க முடியாது. ஆயினும், அரசியல் ஆய்வுக்கு முறையமைவு அணுகுமுறைகளினால் அதிக பயன் உண்டு. ஆய்வு அரசியல் இயல்புடைய ஏராளமான செய்திக் குறிப்புக்களை வகைப்படுத்திப் பிரிக்க இந்த அணுகுமுறை சாலச்சிறந்ததாகும். செய்திக் குறிப்புக்களை இவ்வாறு வகைப்படுத்திப் பிரிக்கும் பொழுது ஒரு முறையமைவிலுள்ள உள் உறுப்புகளை இணைக்கும் அவைகளுடைய ஒருமுகத் தன்மைகள் நன்கு புலப்படும். இதன் காரணமாகத்தான் இந்த அணுகுமுறையிலுள்ள உள்ளீடு – வெளிப்பாடு, உறுதி,

நடுநிலையமதி, திரும்ப ஊட்டுதல் போன்ற கருத்துக்களை அரசியல் விஞ்ஞானிகள் தங்களுடைய அனுபவரீதியின் ஆய்வுக்குப் பரவலாக பயன்படுத்துகின்றனர். இக்கருத்துக்களைப் பயன்படுத்தி ஜனநாயக நாடுகள், ஜனநாயகமல்லாத நாடுகள், வளர்ச்சியுற்ற நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள், ஆகியவற்றின் முறையமைவுகளைத் தீவிரமாக அரசியல் விஞ்ஞானிகள் ஆய்வு செய்கின்றனர். இந்த அணுகுமுறை அரசியல் முறையமைவுகளில் எவ்வாறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. அரசியல் வளர்ச்சி (Political Development), அரசியல் சிதைவு (Political Decay), ஆகியவை எத்திசை நோக்கிச் செல்கின்றன போன்ற செய்திகளை நுணுக்கமாக அறிய உதவுகிறது. மேலும், முறையை ஊக்குவிக்கிறது. இதனால் அரசியல் முறையமைவுக் கல்வி அதிக அறிவியல் செய்திகளைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது.

முறையமைவுப் பகுப்பாய்வில மேற்கூறிய நன்மைகள் இருப்பதினால் தான், டேவிட் ஈஸ்டன், டேவிட் A. ஆல்டர், G.A. ஆல்மண்ட் போன்ற அரசியல் விஞ்ஞானிகள் இவ்வாய்வு முறையை அரசியல் அறிவியல் ஆய்வுக்குத் தீவிரமாகப் பயன்படுத்துகின்றனர். இது அனுபவ அறிவைக் கொண்ட தற்கால அரசியல் கோட்பாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் வழிகோலியது. இதன் காரணமாக தான் முறையமைவுப் பகுப்பாய்வின் இரு பிரிவுகளாக உள்ளீடு – பணி அணுகுமுறையும் அரசியல் விஞ்ஞானிகளிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

## 1.7 உள்ளீடு – வெளிப்பாடு பகுப்பாய்வு அணுகுமுறை (Input – Output Approach)

முறையமைவு பகுப்பாய்வில் உள்ளீடு – வெளிப்பாட்டு அணுகுமுறையை உருவாக்கிப் பிரபலப் படுத்தியவர் டேவிட் ஈஸ்டன் என்ற அமெரிக்க அரசியல் விஞ்ஞானியாவார். இந்த அணுகுமுறையை 1965 ஆம் ஆண்டு வெளிவந்த அவருடைய "A System Analysis of Political Life" என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஈஸ்டனின் உள்ளீடு – வெளிப்பாட்டு அணுகுமுறையை ஆராய்வதற்கு முன்பு அவர் இவ்வணுகு முறையில் பயன்படுத்தியுள்ள சில வார்த்தைகளின் தனிப்பொருள்களை அறிதல் இன்றியமையாததாகும்.

### 1.7.1 சூழல் அல்லது சுற்றுப்புறம் (Environment)

ஒரு சமுதாயத்திற்கு வெளியேயும் உள்ளேயும் சமூக, சமுதாயப் பொருளாதார, அரசியல் சக்திகள் உண்டு. ஒரு அரசியல் முறையமைவு அச்சக்திகளைப் பாதிக்கிறது அல்லது அச்சக்திகளால் பாதிக்கப்படுகிறது. அச்சக்திகள் அனைத்தையும் சூழல் என்ற ஒரே வார்த்தையால் ஈஸ்டன் குறிப்பிடுகிறார்.

### 1.7.2 உள்ளீடு (Input)

உள்ளீடு என்பது அரசியல் முறையைப் பாதிக்கக்கூடிய மக்களின் கோரிக்கைகளைக் குறிக்கும். இக்கோரிக்கைகள் (Demands) ஒரு அரசியல் முறையமைவின் உள்ளிருந்தும், வெளியிருந்தும் வரலாம். எனவே, கோரிக்கைகள் சூழலிலிருந்து தோன்றுகின்றன எனக் கூறலாம். இக்கோரிக்கைகள் நான்கு வகைப்படும். 1) பொருள்கள், சேவைகள் ஆகியவைகள் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் எடுத்துக்காட்டு சாலைப்போக்குவரத்து, அதிக ஊதியம், கல்வி வாய்ப்புக்கள் போன்றவை அதிகமாக வேண்டுமென்ற கோரிக்கைகள் 2) பொதுப் பாதுகாப்பு சுகாதாரம், திருமணம் போன்ற விஷயங்களில் மனிதனின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான கோரிக்கைகள் 3) வாக்களித்தல் பதவி வகித்தல் போன்ற

அரசியல் முறையமைவில் பங்கு பெறுவதற்கான கோரிக்கைகள் 4) அரசியல் முறையமைவில் செய்தித் தொடர்புக்கான கோரிக்கைகள். மேற்கூறிய ஒரு கோரிக்கைகளினால் அரசியல் முறையமைவில் அரசியல் செயல் தோன்றுகிறது.

உள்ளீடு என்பது அரசியல் முறையமைவிற்குக் கொடுக்கப்படும் ஆதரவுகளையும் (supports) குறிக்கும். அரசியல் முறையமைவின் நலனைப் பேணும் செயல்கள் அல்லது மனப்பாங்கு ஆகியவற்றைத் தான் ஆதரவுகள் என்ற சொல் குறிக்கிறது. வரி கொடுப்பது, இராணுவப் பணிபுரிதல் போன்ற பொருள் வகையான ஆதரவுகள், சட்டத்திற்குக் கீழ்ப்படிதல், அரசியல் விவாதங்களில் பங்கு பெறுதல், வாக்குரிமையைப் பயன்படுத்தல், அரசியல் சின்னங்கள் முதலியவற்றை மதித்தல் ஆகியவைகள் ஆதரவுகள் என்பதில் அடங்கும்.

### 1.7.3 மாற்றும் முறை (Conversion Process)

அரசியல் முறையமைவிற்கு வரக்கூடிய கோரிக்கை (உள்ளீடு) களை அதிகாரபூர்வமான முடிவுகளை வெளிப்பாடுகளாக மாற்றும் அரசியல் முறையமைவிலுள்ள சட்டமன்றம், நீதித்துறை, நிர்வாக அலுவலர்கள் போன்ற அமைப்புகளின் பணிகளே மாற்றும் முறையாகும்.

### 1.7.4 வெளிப்பாடு (Output)

அரசியல் முறையமைவிலுள்ள தலைவர்கள் அரசியல் முறையமைவிற்கு வரும் உள்ளீடுகளின் மீது மேற்கொள்ளும் முடிவுகள் வெளிப்பாடுகள் என அழைக்கப்படுகின்றன. இது சட்டங்கள், ஆட்சித்துறையின் ஆணைகள், நீதிமன்றத் தீர்ப்புகள் போன்றவற்றைக் குறிக்கின்றன. ஒரு அரசியல் முறையமைவு உறுதியுடன் செயல் படவேண்டுமாயின் உள்ளீடு, வெளிப்பாடு ஆகிய இரண்டுக்குமிடையே ஒரு சமநிலை இருக்கவேண்டும்.

### 1.7.5 திரும்ப ஊட்டுதல் (Feedback)

அரசியல் முறையமைவிலிருந்து வெளிப்படும் வெளிப்பாடுகளை உள்ளீடுகள் தோன்றும். உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழல்களுக்கு அறிவிக்கும் செயலுக்கு திரும்ப ஊட்டுதல் எனப் பெயராகும். வெளிப்பாடுகளைச் சூழல்களில் திரும்ப ஊட்டுதலின் விளைவாக சூழல்கள் பாதிக்கப்படுகின்றன.

### 1.7.6 செயல் வல்லமை (Capability)

சூழல்களிலிருந்து வரும் கோரிக்கை (உள்ளீடு)களை அதிகார பூர்வமான முடிவு (வெளிப்பாடு)களான மாற்றுவதற்குள்ள அரசியல் முறையமைவுகளின் திறமையைச் செயல் வல்லமை என்ற சொல் குறிக்கிறது.

டேவிட் ஈஸ்டன் ஒரு அரசியல் முறையமைவை உள்ளீடு வெளிப்பாடு அணுகுமுறை மூலம் ஆய்வு செய்வதை பின் வரும் வரைபடம் (Diagram) வாயிலாக விளக்குகிறார்.

## டேவிட் ஈஸ்டனின் உள்ளீட்டு – வெளிப்பாடு மாதிரி

## (David Easton's Input – Output Model)




கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில், அரசியல் முறையமைவு ஒரு பெட்டி (Box) யாகக் காட்டப்பட்டுள்ளது. அப்பெட்டியின் ஒரு பக்கம் கோரிக்கைகள், ஆதரவுகள் ஆகியவற்றைக் கொண்டு சூழலிலிருந்து எழும் உள்ளீடுகள், மறுபக்கம் அரசியல் முறையமைவினால் மாற்றம் செய்யப்பட்டு வெளிவரும் வெளிப்பாடுகள் (முடிவுகள் அல்லது கொள்கைகள்). உள்ளீடுகளுக்கும் வெளிப்பாடுகளுக்குமிடையே திரும்ப ஊட்டும் இணைப்பி (Feed back Loop) ஆகியவைகளும் காட்டப்பட்டுள்ளன.

அரசியல் முறையமைவிற்குச் சூழல்லிலிருந்து உள்ளீடுகள் கோரிக்கைகளும், ஆதரவுகளும் வருகின்றன. இந்த உள்ளீடுகளை அரசியல் முறையமைவிலுள்ள அமைப்புக்கள், சட்டமன்றம், ஆட்சித்துறை, நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் பரிசீலனை செய்து அவற்றின் மீது சாதகமாகவோ, பாதகமாகவோ முடிவுகள் எடுக்கின்றனர். இம்முடிவுகள் அரசியல் முறையமைவின் வெளிப்பாடாகளாக வெளிவருகின்றன. இவ்வெளிப்பாடுகளை கோரிக்கைகளை எழுப்பியவர்களுக்கு திரும்ப ஊட்டும் இணைப்பு அறிவிக்கிறது. திரும்ப ஊட்டலின் வாயிலாக முடிவுகளை-வெளிப்பாடுகளை அறியும்போது கோரிக்கைகளை (உள்ளீடுகளை) எழுப்பியவர்கள் (சூழல்கள்) எதிர்த்தடிக்கின்றனர். அதாவது, புதுக்கோரிக்கைகளை எழுப்புகின்றனர். மீண்டும் அரசியல் முறையமைவு அக்கோரிக்கைகளை முடிவுகளாக மாற்றுகின்றது. திரும்ப ஊட்டும் இணைப்பி மீண்டும் அதைச் சூழல்களுக்கு அறிவிக்கிறது. சூழல்களின் செயல் தொடர்கிறது. இவ்வாறாகத்தான் ஒரு அரசியல் முறையமைவு செயல்படுகிறது என்பது ஈஸ்டனின் கருத்தாகும். ஒரு அரசியல் முறையமைவின் உறுதி அதன் உள்ளீடுகள், வெளிப்பாடு ஆகியவற்றிற்கு இடையிலுள்ள சமநிலை (Balance) யைப் பொறுத்துள்ளது. ஒரு அரசியல் முறையமைவு உள்ளீடுகள் அனைத்தையும் வெளிப்பாடுகளாக மாற்றுமாயின் அந்த அரசியல் முறையமைவு உறுதிப்பாட்டுடன் விளங்கும். மாறாக, உள்ளீடுகள் அதிகமாகி, அவைகள் அனைத்தையும் வெளிப்பாடுகளாக மாற்ற இயலாமற் போகுமாயின் அந்த அரசியல் முறையமைவிற்கு அதிக சுமை (Overload) ஏற்படுகிறது.

இதனால் இந்த அரசியல் முறையமைவிற்கு சீர் குலைவு ஏற்படலாம். அதைத் தவிர்க்க வேண்டுமாயின் உள்ளீடுகள் அனைத்தையும் வெளிப்பாடுகளாக மாற்றக்கூடிய செயல் வல்லமையை (Capability) அந்த அரசியல் முறையமைவு பெற்றிருக்க வேண்டும். அது உள்ளீடுகளை வெளிப்பாடுகளாக மாற்றும் அரசியல் முறையமைவிலுள்ள சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை, நிர்வாக அலுவலர்கள் குழாம் ஆகிய அமைப்புகள் செயல் வல்லமை பெற்றிருப்பதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகிறது. ஒரு அரசியல் முறையமைவிற்கு ஆறு வகையான செயல் வல்லமைகள் இருக்க வேண்டுமென ஆல்மண்ட் கூறுகிறார். அவையாவன:

1) சமுதாயத்திலிருந்து தேவையான பொருள் வளங்களை வலிமையைப் பயன்படுத்தி பெறக்கூடிய செயல் வல்லமை (Extractive Capability)
2) தனிமனிதர்கள், பிரிவுகள் (Groups) ஆகியவற்றின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான செயல் வல்லமை (Regulative Capability)
3) பொருள்கள், சேவைகள், பட்டங்கள் ஆகியவற்றைத் திறமையாகப் பங்கீடு செய்வதற்கான செயல் வல்லமை (Distributive Capability)
4) தேசிய தினங்களைக் கொண்டாடுதல், தியாகிகள் நாட்களைக் கொண்டாடுதல், பல துறைகளில் சிறந்த சேவை செய்த குடிமக்களுக்கு விருது வழங்குதல் போன்ற அடையாளச் சின்னங்களை வழங்குவதற்கான செயல் வல்லமை (Symbolic Capabilty)
5) அரசாங்கத்தின் வெளிப்பாடுகளைப் பற்றி மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்பச் செயல்படும் செயல் வல்லமை (Responsive Capability)
6) இன்றைய உலகில் எந்த ஒரு அரசியல் முறையமைவும் உலகிலுள்ள மற்ற அரசியல் முறையமைவிற்கு தொடர்பின்றிச் செயல்பட முடியாது. எனவே ஒரு அரசியல் முறையமைவு மற்ற அரசியல் முறையமைவுகளின் கட்டுப்படுத்தும் செயல் வல்லமை (International Capabilty) யைப் பெற முயல வேண்டும். இச்செயல் வல்லமை அந்த அரசியல் முறையமைவின் இராணுவ, பொருளாதார கோட்பாட்டு வல்லமையைப் பொறுத்துள்ளது.

### 1.7.7 உள்ளீடு – வெளிப்பாடு அணுகுமுறையின் குறிக்கோள்

டேவிட் ஈஸ்டன் உள்ளீடு-வெளிப்பாடு அணுகுமுறையின் முக்கிய நோக்கம், ஒரு அரசியல் முறையமைவின் உய்வு (Survival), (Stability) பராமரிப்பு (Maintenance) ஆகியவற்றைப் பேணுவதேயாகும். ஒரு அரசியல் முறையமைவில் ஏற்பட வேண்டிய மாற்றத்தைப் (Change) பற்றி ஈஸ்டன் அதிக அக்கறை காட்டவில்லை. ஆனால் ஈஸ்டன் அரசியல் முறையமைவின் மாற்றத்தை அடியோடு ஆதரிக்கவில்லையென்று நாம் கூறி விட முடியாது. மாற்றம் தேவைதான். ஆனால் அம்மாற்றம் அமைதியான வழிகளில் படிப்படியாக காலப்போக்கில் அரசியல் முறையமைவின் உறுதி குலையாமல் ஏற்பட வேண்டுமென்பது அவர்தம் கருத்தாகும். இது புரட்சியின் மூலம் உடனடியாக சமுதாய அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த விரும்புவோரின் கருத்துக்கு முரணானதாகவே விளங்குகிறது.

### 1.8 அமைப்பு – பணிப்பகுப்பாய்வு அணுகுமுறை
**(Structural – Functional Approach)**

அரசியல் முறையமைவு மொத்த சமூக முறையமைவின் ஒரு துணை முறையமைவு ஆகும். ஒவ்வொரு அரசியல் முறையமைவும் பல அமைப்புகளை

தன்னறிவு சோதனைக் கேள்வி
3. பணிப்பகுப்பாய்வு அணுகுமுறையின் அமைப்பினை விளக்குக.

கொண்டுள்ளது. அமைப்பு என்ற சொல் சட்டமன்றம், நீதித்துறை, அரசியல் கட்சிகள் போன்ற நிறுவனங்களை மட்டுமின்றி, ஒரு அரசியல் முறையமைவு உருவாக உதவும் மக்களின் செயல் எதிர்ச்செயல்கள் ஆகியவைகளையும் குறிக்கும். அதாவது, உறவு முறை (Kinship), ஆர்ப்பாட்டங்கள் (Demonstration) (யுளளயளளைெவழை) போன்றவைகளையும் அமைப்புகள் என்ற சொல் குறிக்கும். எனவே தான் அமைப்புகள் என்பதை ஒரு அரசியல் முறையமைவை ஏற்படுத்தவும், தேவைகளுக்கேற்ப அம்முறையமைவில் மாற்றங்களைப் புகுத்தவும் உதவக்கூடிய மக்களின் செயல்கள் என ஆல்மண்ட் விளக்கம் கொடுக்கிறார்.

அரசியல் முறையமைவிலுள்ள ஒவ்வொரு அமைப்பும் சில செயல்களைச் செய்கின்றன. எடுத்துக்காட்டாக, அரசியல் கட்சிகள் மக்களின் கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு தெரிவித்தல், அரசாங்கத்தின் தீர்மானங்களையும், கொள்கைகளையும் மக்களுக்குத் தெரிவித்தல், மக்களுக்கு அரசியலில் பங்கு பெற வாய்ப்பளித்தல் ஆகிய பல திரட்டப்பட்ட செயல்களைச் செய்கிறது. ஒரு அமைப்பின் இச்செயல்களை அவ்வமைப்பின் பணிகள் என நாம் அழைக்கின்றோம். ஒரு அரசியலில் முறையமைவின் பணிகள் இல்லாத அமைப்பே இருக்க முடியாது. ஒவ்வொரு அமைப்பும் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ பணிகளைச் செய்கிறது. எனவே, அமைப்பு பணிப்பகுப்பாய்வு அணுகுமுறையானது ஒரு அரசியல் முறையமைவிலுள்ள எந்த அமைப்பு என்ன பணிகளைச் செய்கின்றது என்பதை விளக்கும் ஒரு முறையாகும். அமைப்பு – பணிப்பகுப்பாய்வு அணுகுமுறையை உயிரியியலிலிருந்து எடுத்து ராட்கிளிப் பிரௌன் (Radcliff Brown), மாலிநோவ்ஸ்கி (Malinowski) போன்றோர் மனித இன இயலிலும் (Anthrology), மாரியன் லெவி (Marion Levy) மெர்ட்டன் (Merton) டால்காட் பார்சன்ஸ (Talcott Parsons) போன்றோர் சமூக இயலிலும் (Sociology) ஆய்வுக்குப் பயன்படுத்தினர். இவ்வணுகுமுறையை அரசியலில் புகுத்திப் பிரபலப்படுத்தியவர் G.A. ஆல்மண்ட் ஆவர். அவர் The Politics of the Developing Areas என்ற தமது நூலில் இவ்வணுகுமுறை மூலம் அரசியல் முறையமைவுகளை ஆய்வி செய்கின்றார். அமைப்பு – பணிப்பகுப்பாய்வு அணுகுமுறை சில அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. முதலாவதாக இவ்வணுகுமுறை ஒரு அரசியல் முறையமைவை பல உள்உறுப்புக்களைக் கொண்ட ஒரு முறையமைவாகக் கருதுகிறது. அந்த உள்உறுப்புக்கள் அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகும். அந்த உள்உறுப்புக்களின் செயல்களும், எதிர்ச்செயல்களும் தான் அந்த முறையமைவிற்குச் சமநிலையை வழங்குகின்றன. இரண்டாவதாக உள்உறுப்புக்கள் அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாதலின் ஒரு உள்உறுப்பில் ஏற்படக் கூடிய மாற்றம் மற்ற உள்உறுப்புக்கள் அனைத்தையும் பாதிக்கும். உள்உறுப்புக்கள் அனைத்தும் பாதிக்கப்படுவதால் அரசியல் முறையமைவே பாதிக்கப்படும்.

ஒரு அரசியல் முறையமைவிற்கு மூன்று பொதுப் பண்புகளும், ஐந்து சிறப்புக் கூறுகளும் உண்டு என G.A. ஆல்மண்ட் குறிப்பிட்டுள்ளதைக் கண்டோம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு அரசியல் முறையமைவு ஏழு பணிகளை மேற்கொள்ளுவதாக அவர் கூறுகிறார். இவ்வேழு பணிகளில் நான்கு உள்ளீட்டு பணிகளும் (Input functions) மூன்று வெளிப்பாட்டுப் பணிகளும் (Output functions) ஆகும். இவ்விரண்டு விதமான பணிகளில் உள்ளீட்டுப் பணிகளுக்குத் தான் அவர் முக்கியத்துவம் கொடுக்கிறார். இப்பணிகளை சிறிது விளக்குவோம்.

### 1.8.1 உள்ளீட்டு பணிகள்

**குடிமக்களுக்கு அரசியல் சமூக போதனை ஏற்படுத்துவதும் அரசியல் ஆட்சேர்ப்பும் (Political Socialisation and Recuritment)**

இது குடிமக்களின் குடியுரிமை பயிற்சியையும், அரசியல் பதவிகளில் ஆட்களை அமர்த்துதலையும் குறிக்கும் எல்லா அரசியல் முறையமைவுகளும் அவற்றின் அரசியல் கலாச்சாரங்களையும், அமைப்புகளையும் குடிமக்கள் பெறுகின்ற பயிற்சிகள் மூலம் நிலைநிறுத்திக் கொள்கின்றன. இந்தப் பயிற்சி ஒரு குடிமகனுடைய இளவயதிலிருந்து தொடங்கி அவனுடைய முதுமை வரை தொடருகின்றன. இந்தப் பயிற்சியை அளிக்கக் கூடிய அமைப்புக்கள் குடும்பம், பள்ளி, திருச்சபை, நண்பர்கள், சங்கங்கள், அரசியல் கட்சிகள் போன்றவையாகும்.

இந்தக் குடியுரிமைப் பயிற்சி வெளியில் காணப்படாததாகவோ (Latent), வெளிப்படையானதாகவோ (Mainfest) இருக்கலாம். அரசியல் முறையமைவிலுள்ள பலவிதமான பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தல் அமைப்புகளின் இன்னொரு பணியாகும். இப்பணிகளை அரசியல் கட்சிகள், குடும்பம் உறவுமுறை பொது அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை போன்ற அமைப்புகள் செய்கின்றன.

**நலன்களைத் தெளிவுபடுத்துதல (Interest Articulation)**

அரசியல் ரீதியாகச் செயல்படுத்துவதற்காக கோரிக்கைகள், நலன்கள் ஆகியவற்றை உருவாக்கி வெளிப்படுத்தும் பணியை இது குறிக்கும். இப்பணியை மேற்கொள்ளும் அமைப்புகளை நிறுவன ரீதியாக தன்னலக் குழுக்கள் (Institutional Interest groups), சங்கம் சாரா தன்னலக் குழுக்கள் (Non-Associational Interest groups), பொருளாதார தன்னலக் குழுக்கள் (Economic Interest groups), சங்கம் சார்ந்த தன்னலக் குழுக்கள் (Economic Interest groups) என நான்கு வகையாக ஆல்மண்ட் பிரிக்கிறார். சட்டமன்றம், ஆட்சித்துறை, பணியாளர் குழாம், படைகள் போன்றவை முதல் வகையான தன்னலக் குழுக்களையும், கலகங்கள், ஆர்ப்பாட்டங்கள், கொலை ஆகியவை மூன்றாவது வகையான தன்னலக் குழுக்களையும் தொழிற்சங்கங்கள், வணிகர் சங்கங்கள் ஆகியவை நான்காவது வகையையும் குறிக்கும்.

**நலன்களைத் தொகைப்படுத்துதல் (Interest Aggregation)**

மேற்கூறிய அமைப்புகளினால் உருவாக்கி வெளிப்படுத்தப்பட்ட நலன்களை ஒன்றாக இணைத்துப் பொதுக்கொள்கைகளை உருவாக்குதல், அரசியல் பதவிகளில் ஆட்களை அமர்த்துதல் ஆகிய பணிகளை சில அமைப்புகள்-தன்னலக் குழுக்கள் சட்டமன்றம், ஆட்சித்துறை, அரசியல் கட்சிகள் போன்றவைகள் செய்கின்றன.

**அரசியல் தொடர்பு (Political communication)**

உள்ளீட்டுப் பணிகளில் இது முக்கியமான பணியாகும். தொடர்பு (communication) இன்றி எவ்விதமான அரசியல் சமூகச்செயலும், எதிர்ச்செயலும் சாத்தியமில்லை. இதனால் தான் ஒரு அரசியல் முறையமைவிலுள்ள உள் உறுப்புகளிடையே தொடர்பு இல்லையானால் அந்த அரசியல் முறையமைவு செயல்பட முடியாது என ஜீன்பிளாண்டல் கூறுகிறார். ஒரு அரசியல் முறையமைவின் எல்லாப் பணிகளும் இத்தொடர்பு மூலம் தான் செயல்படுகின்றன. தொடர்பு மூலம் தான் குடிமக்களுக்கு அரசியல் குடியுரிமை வழங்கப்படுகிறது. குடிமக்களின் கோரிக்கைகளை ஆட்சியாளருக்குத் தெரியப்படுத்துவதும் இத்தொடர்பே ஆகும்.

சட்டமன்ற உறுப்பினர்கள், பொது அலுவலர்கள், நீதிபதிகள் ஆகியோர் அவர்களிடையே தொடர்பு உண்டாக்கித் தான் தங்களுடைய பணிகளைச் செய்கின்றனர். ஒரு அரசியல் முறையமைவின் பராமரிப்பு இப்பணி மிக முக்கியமானதாகும். ஐந்து விதமான அமைப்புகள் இத்தொடர்புப் பணியை மேற்கொள்வதாக ஆல்மண்ட கூறுகிறார். (1)நண்பர்கள், அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஆகியோருடன் கொண்ட நேர்முகத் தொடர்பு (2)குடும்பம், சமயம் போன்ற புதுமையான மரபு சார்ந்த சமூக அமைப்புக்கள் (3)தன்னலக் குழுக்கள், அரசியல் கட்சிகள் போன்ற உள்ளீட்டு அமைப்புகள் (4)சட்டமன்ற, நீதிமன்றம் போன்ற வெளிப்பாட்டு அமைப்புகள் (5)செய்தித்தாள்கள் (6)வானொலி, தொலைக்காட்சி, புத்தகங்கள் போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள். ஒரு அரசியல் முறையமைவிலுள்ள தொடர்பு அமைப்புகளின் ஆற்றல் அவை பெற்றிருக்கும். சுதந்திரத்தை பொறுத்துள்ளது. அந்த அமைப்புகள் அரசியல் கட்டுப்பாட்டிற்குச் செயல்படுமாயின், அது அரசியல் முறையமைவின் உறுதியையும், பராமரிப்பையும் பாதிக்கும்.

### 1.8.2 வெளிப்பாட்டு பணிகள் (Output functions)

இது சட்டத்தை ஏற்படுத்துதல், சட்டத்தை அமலாக்குதல், சட்டத்திற்கு விளக்கம் கொடுத்தல் ஆகிய அரசாங்கத்தின் மூன்று பணிகளைக் குறிக்கும்.

### சட்டத்தை ஏற்படுத்தும் பணி (Rule-making function)

'சட்டமியற்றல்' (Legislative) என்ற வார்த்தை ஒரு குறிப்பிட்ட அமைப்பின் நடைமுறையை மட்டும் குறிப்பதால், சட்டத்தை ஏற்படுத்துதல் (rule making) என்ற வார்த்தையை ஆல்மண்ட் பயன்படுத்துகிறார். இந்த வார்த்தை சட்டத்தை ஏற்படுத்துவதில் பங்கு பெறும் எல்லா அமைப்புகளின் நடைமுறைகளையும் குறிக்கும் அளவிற்கு விரிவானதாகும் என அவர்கள் கருதுகிறார். சட்டத்தை ஏற்படுத்துவதும், பணியில் மூன்று துணைப்பணிகள் அடங்கியுள்ளன. அவை சட்டத்தைத் துவக்கல், சட்டத்தைத் திருத்துதல், சட்டத்தை தடுப்பாணை மூலம் தடுத்தல் ஆகும். சட்டத்தை ஏற்படுத்தும் அமைப்புகள் ஒவ்வொரு முறையமைவிலும் காணப்படும் சட்டம், அரசியலமைப்பு ஆகியவற்றிற்கேற்ப மாறுபடும். சட்டத்தை ஏற்படுத்துவதில் ஜனநாயக ஆட்சிமுறைக்கும் எதேசச்சதிகார ஆட்சி முறைக்குமிடையே வேறுபாடு உண்டு. ஜனநாயக ஆட்சிமுறையில் சட்டமன்றம் ஏற்படுத்தும் சட்டமானது தன்னலக்குழுக்கள் அரசியல் கட்சிகள் ஆகியவைகள் உருவாகித் தொகைப்படுத்திய கோரிக்கைகளின் விளைவாகும். ஆனால் எதேசச்சதிகார ஆட்சிமுறையில் ஆளும் கூட்டத்தின் விருப்புகளுக்கேற்ப சட்டம் ஏற்படுத்தப்படுகிறது.

### சட்டத்தை அமலாக்கும் பணி (Rule application function)

சட்டத்தை அமலாக்கும் பணியைச் செய்யக்கூடிய முக்கிய அமைப்பு அதிகார வர்க்கம் (bureaucracy) ஆகும். அந்த அமைப்பு ஒரு அரசியல் முறையமைவின் வெளிப்பாடு முழுவதிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. சட்டத்தை அமலாக்குவதோடு ஒப்படைப்புச் சட்டத்தின்கீழ் புது விதிகளையும் அந்த அமைப்பு ஏற்படுத்துகிறது.

பெய்ன்சாட் (M. Fainsod) அதிகார வர்க்கங்களை ஐந்து வகையாகப் பிரித்துள்ளார். அவையாவன (1) பிரதிநிதித்துவ அதிகார வர்க்கம் (Representative Bureaucracy) இதில் உண்மையான அதிகாரம் அனைத்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும். (2) கட்சி அதிகார வர்க்கம் (Party bureaucracy) இதில் அதிகாரம் அனைத்தும் கட்சி அலுவர்களிடம் குவிந்து கிடக்கும். இது சீனா போன்ற ஒரு கட்சி நாடுகளில் நிலவுகிறது. (3) இராணுவ ஆதிக்கமுடைய

அதிகார வர்க்கம் சிவில் அதிகார வர்க்கத்தைக் கட்டுப்படுத்துகிறது. (4) ஆட்சியாளர் அதிகார வர்க்கம் (Ruler Dominated Bureaucracy) இதில் ஒரு ஆட்சியாளர் அவரால் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் மூலம் தமது ஆட்சியை மக்கள் மீது சுமத்துகிறார். (5) ஆளும் அதிகார வர்க்கம் (Ruling Bureaucracy) இதில் அதிகாரம் சிவில் அலுவலர்களிடம் தேங்கிக் கிடக்கும்.

**சட்டத்திற்கு விளக்கம் கொடுக்கும் பணி (Rule adjudication function)**

சட்டத்தை அமலாக்கும் போது எழக்கூடிய சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதற்காக கொடுக்கப்படும் தீர்வுகள் வழங்கும் பணியைத்தான் சட்டத்திற்கு விளக்கம் கொடுக்கும் பணி என அழைக்கிறோம். பொதுவாக இப்பணியைச் செய்யக்கூடிய அமைப்பு நீதிமன்றமாகும். ஆயினும், சட்டத்தை அமலாக்கும் அமைப்பு ஓரளவு இப்பணியைச் செய்வதைக் காணலாம். சட்டத்திற்கு விளக்கம் கொடுக்கும் பணியைச் செய்யக்கூடிய அமைப்புகள் (நீதிமன்றங்கள்) சுதந்திரமாகவும், பாரபட்சமின்றியும் செயல்படுமாயின் அது சட்டத்தை அமலாக்கும் அமைப்புகளின் செயல்களுக்கு ஒரு கட்டுப்பாடாக அமையும்.

G.A. ஆல்மண்டின் அரசியல் முறையமைவுகளை ஆய்வதற்கான ஏழு பணி ஆய்வு முறையானது அரசியல் முறையமைவு கல்வியின் ஒரு முக்கிய பாகமாகும். அரசியல் முறையமைவுகளை ஒப்பீடு செய்யப் பழைய மரபான அணுகுமுறையில் போதிய உத்திகள் இல்லை என எண்ணி இந்த ஏழுவகைப் பணி ஆய்வுமுறையை அவர் உருவாக்கினார். ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய பகுதிகளில் தோன்றியுள்ள புதிய அரசியல் முறையமைவுகளை பழைய மரபான அணுகுமுறை மூலம் ஆய்வு செய்ய முடியாது என்ற அவருடைய கருத்தே இந்தப் புது ஆய்வு முறை தோன்றக் காரணமாகும்.

திறனாய்வு ஆல்மண்டின் அமைப்புப் பணிப்பகுப்பாய்வு முறையில் காணக்கூடிய பல குறைபாடுகளை ஒப்பீட்டு அரசியல் விஞ்ஞானிகள் எடுத்துக்காட்டியுள்ளனர். முதலவாவதாக, இந்த ஆய்வுமுறையின் நோக்கம் தற்பொழுது மேற்கத்திய நாடுகளிலும், அமெரிக்காவிலும் நிலவும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசியல் முறைகளைப் பேணிப் பராமரிப்பதேயாகும் எனப் பொதுவுடைமைவாதிகள் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். அரசியல் முறையமைவிலுள்ள எல்லா உறுப்புக்களிடையேயும் ஒரு சமநிலை ஏற்படுத்தி அந்த முறையமைவிற்கு உறுதிப்பாட்டை அளிப்பதே இந்தப் பகுப்பாய்வின் முக்கிய நோக்கமாகும். ஆனால் சுரண்டப்பட்ட வர்க்கம் ஆகிய உள் உறுப்புகளிடையே சமநிலை ஏற்பட முடியாது என்பது பொதுவுடைமைவாதிகளின் வாதமாகும்.

இரண்டாவதாக, நடைமுறையில் உள்ள அரசியல் முறையமைவுகளில் உறுதி, பராமரிப்பு ஆகியவை மட்டும் தான் இந்தப் பகுப்பாய்வின் முக்கிய குறிக்கோளாக இருப்பதினால், சமுதாய, அரசியல் மாற்றத்தை அது புறக்கணித்து விட்டது.

மூன்றாவதாக, பகுப்பாய்வு முறை அரசியல், பண்பாடு, மொழி ஆகியவற்றில் ஒருமைப்பாடுடைய மேற்கத்திய அரசியல் முறையமைவுகளை ஆய்வு செய்யப் பயன்படும் தவிர ஒருமைப்பாடு அடையாத ஆப்பிரிக்கா ஆசிய நாடுகளில் அரசியல் முறையமைவுகளை ஆய்வு செய்ய பயன்படாது. மாறாக, மேற்கத்திய அரசியல்

முறையமைவு மாதிரிப் படிவத்தை வளர்ந்து வரும் நாடுகளில் புகுத்துவதே இந்த ஆய்வு முறையின் நோக்கமாகும். மேற்கூறிய குறைபாடுகள் இருப்பினும் அரசியல்

முறையமைவு கல்வியில் இந்தப் பகுப்பாய்வு முறைக்குள்ள முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பீட்டு விடக்கூடாது. ஒரு அரசியல் முறையமைவை அதன் பணியை வைத்துத்தான் நன்கு அறிந்து கொள்ள முடியும். இந்த ஆய்வுமுறை ஒரு அரசியல் முறையமைவை ஆய்வு செய்வதற்கு உருவாக்கப்பட்டதன்று. பல அரசியல் முறையமைவுகளை ஒப்பீடு செய்ய உருவாக்கப்பட்டதாகும். சமுதாய அரசியல் மாற்றத்தை இந்த ஆய்வுமுறை அடியோடு புறக்கணித்து விட்டது என்ற குற்றச்சாட்டை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. மாற்றத்தை அது எதிர்க்கவில்லை. மாற்றம் அவசியம். ஆனால் அம்மாற்றம் காலப்போக்கில் அமைதியான முறையில் ஏற்படவேண்டுமென்பதே அதன் அடிப்படை கருத்தாகும். இந்த ஆய்வுமுறை இதுவரை அரசியல் முறையமைவு கல்வியில் அனுபவத்தால் அறியப்படுகின்ற ஆய்வுக்கு (Empirical Investigation) விரிவாகப் பயன்படுத்தப்படவில்லை. அதை விரிவாக இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தும் போது அதன் நிறைகுறைகள் இன்னும் அதிகமாக வெளிப்படும் அதுவரை அதைப்பற்றி ஒரு இறுதி முடிவுக்கு வரக்கூடாது.

## 1.9 அரசியல் முறைமைவுகளை வகைப்படுத்துதல்

அரசியல் முறைமைவுகளை வகைப்படுத்தும் முயற்சி அரசியல் விஞ்ஞானம் தோன்றிய நாளிலிருந்தே தோன்றிவிட்டது எனக் கூறலாம். அரிஸ்டாட்டிலுக்கு முன்பே கிரேக்கர்கள் இவ்விஷயத்தை பல தலைமுறைகளாக விவாதித்து வந்தனர். அரசியல் விஞ்ஞானத்தின் தந்தை என போற்றப்படும் அரிஸ்டாட்டில் (1) ஆட்சியாளர்களின் எண்ணிகை (2) அவர்களின் குறிக்கோள் ஆகிய இரண்டு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் முறைமைவுகளை ஆறு விதமாக வகைப்படுத்தினார். ஆட்சியாளர் ஒருவராக இருந்தால் அந்த அரசாங்கம் முடியாட்சியாகும். சிலராக இருப்பின் அது பிரபுக்களாட்சி; ஏராளமானவர்களாக இருந்தால் அது வரம்பிற்குட்பட்ட மக்களாட்சி ஆகும். ஆட்சியாளர்கள் அவர்களின் பொதுநல நன்மைக்காகப் பயன்படுத்தும் பொழுது மேற்கூறிய மூன்று அரசாங்க முறைகளும் இயல்பான (Normal) முறையாக இருக்கும். அதிகாரத்தை ஆளுநர்கள் அவர்களின் சுயநலத்திற்காகப் பயன்படுத்தத் துவங்கும் பொழுது இம்மூன்று முறைகளும் முரணான (perverted) அரசாங்க முறைகளாக மாறிவிடுகிறது. அதாவது, முடியாட்சி கொடுங்கோலாட்சி (tyranny) யாகவும், பிரபுக்களாட்சி சுயநலம் படைத்த சிறு குழு ஆட்சி (oligarchy) யாகவும், வரம்புக்குட்பட்ட மக்களாட்சி வரம்பிலா மக்களாட்சி (democracy or Mobocracy) யாக மாறிவிடுகிறது என அரிஸ்டாட்டில் கூறுகிறார். எனவே அரிஸ்டாட்டிலின் வகைப்படுத்தலுக்கு அடிப்படை ஆட்சியாளர்களின் நோக்கம் ஆகும். அதைக் கீழ்க்காணும் அட்டவணை வடிவமாக விளக்கலாம்.

| ஆட்சியாளர்களின் எண்ணிக்கை | ஆட்சியாளர்களின் குறிக்கோள் | | | |
|---|---|---|---|---|
| | சுயநலம் | | பொதுநலம் | |
| ஒருவர் | முடியாட்சி | இயல்பான முறை | கொடுங்கோலாட்சி | முரணான முறை |
| சிலர் | பிரபுக்களாட்சி | | சிறுகுழு ஆட்சி | |
| பலர் | (வரம்புக்குட்பட்ட மக்களாட்சி) | | (வரம்பிலா மக்களாட்சி) | |

அரசியல் முறைமைவுகளை அரிஸ்டாட்டில் வகைப்படுத்திய முறை பிற்கால அரசியல் சிந்தனையாளர்களுக்கு ஒரு வழியாக விளங்கியது எனக் கூறலாம். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சு தத்துவமேதை மாண்டெஸ்க்யூ (Montesquieu) அரசாங்கங்களை குடியரசு (Republic), முடியாட்சி (Monarchy), எதேச்சதிகார ஆட்சி (Despotism) என மூன்றாக வகைப்படுத்தினார். மாண்டெக்ஸ்யூவினுடைய குடியரசு அரசாங்க முறையானது அரிஸ்டாட்டிலினுடைய பிரபுக்கள் ஆட்சி முறையையும் அவருடைய வரம்பிலா மக்களாட்சி முறையையும் உட்கொண்டிருக்கிறது. இது அவ்விருவருடைய வகைப்படுத்துதலுக்குமுள்ள வேறுபாடாகும். அரசாங்கங்களை வகைப்படுத்த ஆட்சியாளர்களின் எண்ணிக்கையை ஒரு அடிப்படையாக இருவரும் வைத்துள்ளனர். இது அவ்விரு சிந்தனையாளர்களிடயேயுள்ள ஒற்றுமையாகும். அதிகாரம் சில பேரிடமோ அல்லது பல பேரிடமோ இருப்பின் அது குடியரசு அரசாங்கம், பொது நல நோக்கடைய ஒருவரிடம் இருப்பின் அது முடியாட்சி, சுயநலம் படைத்த ஒரு நபரிடம் இருந்தால் அது எதேச்சதிகார ஆட்சி என மான்டெஸ்க்யூ அரசாங்கங்களை வகைப்படுத்துகிறார். ஒரு சமூகத்திலுள்ள அரசாங்க முறைக்கும் அச்சமூகத்தின் அமைப்பு முறைக்குத் நெருங்கிய தொடர்பு உண்டு என மாண்டெஸ்க்யூ வலியுறுத்துகிறார். எடுத்துக்காட்டாக ஒரு சமூகத்திலுள்ள மக்களின் கல்வித் தரம், ஒழுக்கம், நாட்டுப்பற்று, பொருளாதாரத் தத்துவம் ஆகியவைகள் அச்சமூகத்தில் நிலவும் அரசாங்க முறையை நிர்ணயிக்கிறது என அவர் கூறுகிறார். மேலும் ஒரு நாட்டின் நிலப்பரப்பின் அளவு அந்நாட்டின் அரசாங்க முறையை நிர்ணயிக்கிறது. ஏராளமான நிலப்பரப்பைக் கொண்ட ஒரு பேரரசு எதேச்சாதிகார ஆட்சிக்கு வழிகோலுகிறது. மிதமான நிலப்பரப்பைக் கொண்ட நாட்டில் முடியாட்சி நிலவும் நிலப்பரப்பு மிகவும் குறுகியதாக இருப்பின் அது குடியரசு முறைக்கு மிகவும் ஏற்றதாகும் என்பது மாண்டெஸ்க்யூவின் கருத்தாகும்.

16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசியல் சிந்தனையாளர்கள் ஜீன்போதின் (Jean Bodin) அரிஸ்டாட்டிலினுடைய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கங்களை வகைப்படுத்தியுள்ளார். அவர் அரசாங்கங்களை முடியாட்சி, பிரபுக்களாட்சி, மக்களாட்சி என வகைப்படுத்தினார். அவ்வகைப்படுத்தலுக்கு அடிப்படை ஆளுனர்கள் எண்ணிக்கையேயாகும். இறைமை (Sovereignty) ஒருவரிடமிருப்பின் அது முடியாட்சி சில பேரிடம் இருப்பின் அது பிரபுக்களாட்சி, பல பேரிடம் இருப்பின் அது மக்களாட்சியாகும். தவிர ஒவ்வொரு அரசாங்க முறையையும் போதின் பல உட்பிரிவுகளாக வகைப்படுத்துகிறார். எடுத்துக்காட்டாக முடியாட்சி முறையை எதேச்சாதிகார முடியாட்சி (Despotic monarchy), மாண்புறு முடியாட்சி (Royal monarchy), கொடுங்கோன்மை (Tyranny) என அவர் மூன்றாகப் பிரிக்கிறார். ஒவ்வொரு அரசாங்க முறைமையின் நன்மை தீமைகளை ஆராய்ந்த பிறகு பரம்பரை முடியாட்சி (Hereditary monarchy) முறைதான் மிகச் சிறந்த அரசாங்கமாகும் என்ற முடிவுக்கு போதின் வருகிறார். இதற்கு அவர் கூறும் காரணங்கள் பரம்பரை முடியாட்சி அரசாங்க முறை மக்கள் எல்லோருடைய நலனைப் பேணி அவர்களின் முழு ஒத்துழைப்பைப் பெற்று அரசியல் உறுதித் தன்மையை வழங்குகிறது என்பதாகும்.

மேற்கூறியதிலிருந்து கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் அரிஸ்டாட்டிலினால் செய்யப்பட்ட அரசாங்கங்களின் வகைப்படுத்தல் முறை பிற்கால சிந்தனையாளர்களை எந்த அளவுக்கு ஈர்த்தது என்பது புலனாகும். அண்மைக் காலத்தில் ஆட்சிமுறையின் அமைப்பிலும்

பாணியிலும் ஏராளமான வேற்றுமைகளைக் கொண்டு எண்ணிலடங்கா சுதந்திர அரசுகள் தோன்றியிருப்பது அரசியல் முறையமைவுகளின் ஆய்வை மிகவும் சிக்கலாக மாற்றிவிட்டது. அத்தோடு பழைய வகைப்படுத்தல் முறைகளையும் அவைகளுக்குப் பொருந்தாத நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த குறைபாட்டை உணர்ந்து S.E. பைனர் **(S.E. Finer)** என்னும் அறிஞர் அவருடைய **'Comparative Government'** என்னும் நூலில் அரசியல் முறையமைவுகளை புதிய அடிப்படையில் வகைப்படுத்த முயற்சித்துள்ளார். அவர் அரசாங்கங்களை கீழ்க்காணும் முறையில் ஆறு விதமாக வகைப்படுத்தியுள்ளார். பைனரின் வகைப்படுத்துதல் ஓரளவு விரிவானதேயாகும். ஆயினும், எல்லா விதமான அரசாங்க முறைகளையும் வகைப்படுத்துமளவுக்கு அது விரிவானது அல்ல. எடுத்துக்காட்டாக, பாராளுமன்ற ஜனாதிபதி அரசாங்க முறை, ஒற்றையாட்சி, கூட்டாட்சி அரசாங்க முறை ஆகியவைகள் பைனருடைய வகைப்படுத்தும் திட்டத்தில் கூறப்படவில்லை.

| | அரசாங்கத்தின் வகை | அதன் முக்கிய சிறப்புக் கூறுகள் |
|---|---|---|
| 1. | இராணுவ ஆட்சி | மக்களை கட்டாயப்படுத்துதல் |
| 2. | பரம்பரை வாரிசு ஆட்சி | ஆட்சியாளரிடம் மக்களுக்குள்ள நன்மதிப்பு |
| 3. | புறத்தோற்ற மக்களாட்சி | அரசியலமைப்பு, குறிப்பிட்ட காலத்தில் அது தேர்தல்கள், சட்டமன்றம் போன்ற தாராள மக்களாட்சியின் தோற்றமுடையவை. ஆனால் ஒரு சிறு குழுவிடம் எல்லா அதிகாரங்களும் குவிந்திருக்கும். |
| 4. | அரைகுறை மக்களாட்சி | ஒரு கட்சியின் ஆதிக்கத்தினால் மக்களாட்சிப் பண்பான பிரதிநிதித்துவ முறை பல மட்டங்களிலும் காணப்பெறும் |
| 5. | சர்வாதிகார ஆட்சி | ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு முழுத்தன்மை வழங்கி, அதன் கட்டுப்பாட்டில் செய்யப்படக் கூடியவை |
| 6. | தாராள மக்களாட்சி | உட்குழுக்களுக்கு அதிகபட்ச சுயாட்சி, அரசியலில் மக்களின் தீவிர பங்கேற்பு மக்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்தல், அவர்களின் கோரிக்கைகளுக்கு உடனடி பரிகாரம் காணல். |

### 1.9.1 அதிகார பங்கீட்டை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தல்

அரசியல் முறையமைவுகளை, அதிகார பங்கீட்டை அடிப்படையாகக் கொண்டு இரண்டு விதமாக வகைப்படுத்தலாம். அரசாங்க அதிகாரம் அனைத்தும் ஒரு மைய அரசாங்கத்திடம் மட்டும் குவிக்கப்பட்டிருப்பின் அதற்கு ஒற்றையாட்சி (Unitary State) என்றும், அதிகாரம் மைய அரசாங்கத்திற்கும், பிராந்திய அல்லது மாநில அரசாங்கங்களுக்குமிடையே பங்கீடு செய்யப்பட்டிருந்தால் அதற்கு 'கூட்டாட்சி முறை' (federation) என்றும் வகைப்படுத்தப்படுகிறது. சில அரசியல் முறையமைவுகள் மேற்சொன்ன இரண்டு முறைகளின் கலப்பாகவும் காணப்படலாம். ஒற்றையாட்சி முறையில் நாடு முழுவதற்குமாக ஒரு அரசாங்கம் தான் இருக்கும். அதிகாரம் அனைத்தும் அதனிடம் குவிக்கப்பட்டிருக்கும். நிர்வாக சௌகரியத்திற்காகவும், பொது நன்மைக்காகவும் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கலாம். அவைகளுக்கு சில அதிகாரங்களையும் வழங்கியிருக்கலாம். ஆனால் அப்பகுதிகளை ஆக்கவும், அழிக்கவும், வழங்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப் பெறவும் மைய அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் உண்டு. இந்த விதமான அரசாங்க முறையில் இறைமை பிரிக்கப்படுவதில்லை மைய அரசாங்கத்திற்கு வரம்பற்ற அதிகாரம் அரசியலமைப்பினால் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே சட்டமன்றம் இயற்றும் சட்டம் நாடு முழுவதற்கும் பொருந்தக் கூடியதாக இருக்கும்.

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

4. அதிகார பங்கீட்டை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தல் என்றால் என்ன விளக்குக.

கூட்டாட்சி முறை, ஒற்றையாட்சி முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். கூட்டாட்சி முறையில் அதிகாரிகள் மைய மாநில அரசாங்கங்களுக்கிடையே பங்கீடு செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு அரசாங்கமும் தனக்கென்று ஒதுக்கப்பட்ட அதிகார எல்லைக்குள் சுதந்திரமாகச் செயல்படுகின்றன. எனவே கூட்டாட்சி முறையில் மைய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் சமஅந்தஸ்து உடையவைகள் ஆகும். ஒன்று மற்றொன்றுக்கு கீழ்ப்பட்டவை அல்ல. கூட்டாட்சி என்பது தனித்தனியாகவுள்ள அரசியல் பகுதிகளை அரசியல் முறையமைவு என்ற வளைவின் கீழ்க்கொண்டு வந்து, ஒவ்வொரு பகுதியும் அதனுடைய அரசியல் ஒருமைப்பாட்டை பராமரித்துக் கொள்ளும் ஒரு கருவியேயாகும் என டேனியல் J.எலசாரா (Daniel J.Elazara) வர்ணிக்கிறார். மையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் மாநிலங்கள் தலையிடக் கூடாது அதே போன்று மாநில அதிகாரங்களின் மையமும் தலையிடாது மைய சட்டமன்றத்திற்கும் மாநில சட்டமன்றங்களும் வரையறுக்கப்பட்ட அதிகாரிகளே உண்டு.

தற்கால உலகில் காணப்படும் அரசியல் முறையமைவுகள் அனைத்தும் ஒற்றையாட்சி, கூட்டாட்சி அல்லது இரண்டின் கலப்பான அரைகுறை கூட்டாட்சி முறைகளேயாகும். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் கூட்டாட்சி முறைக்கு எடுத்துக்காட்டுகளாகும். இங்கிலாந்து, பிரான்ஸ், நியுசிலாந்து, இலங்கை போன்ற நாடுகள் ஒற்றையாட்சி முறைக்கு எடுத்துக்காட்டுகளாகும். சோவியத் ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளை பேராசிரியர் கே.சி. வியர் (K.C. Wheare) அரைகுறை கூட்டாட்சி முறை எனக் குறிப்பிடுகிறார். இந்த அரசாங்க முறையில் மைய, மாநிலங்களுக்கிடையே அதிகாரப் பங்கீடு இருப்பினும் மையத்திடம் ஏராளமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டு இருப்பதினாலும் மாநிலங்களுக்கு மையத்துடன் சமஅந்தஸ்து இன்மையினாலும் இதற்கு அரைகுறைக் கூட்டாட்சி முறை என்று பெயர்.

கூட்டாட்சியின் அடிப்படை அச்சம் பன்முகத் தன்மையுடையது, கூட்டாட்சி என்றால் மைய மாநிலம் என்ற இரட்டை அரசாங்க முறையைக் கொண்டது. அடிப்படைக் கொள்கைகளை உருவாக்குவதிலும் அவற்றை அமுலாக்குவதிலும், இரு அரசாங்கங்களும் பங்கு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே கூட்டாட்சி என்பது அரசியல் சக்திகளையும் அரசியல் அல்லாத சமூக, பொருளாதார சக்திகளையும் ஒன்றாக இணைப்பதற்குள்ள ஒரு ஏற்பாடே ஆகும்.

கூட்டாட்சி முறை என்ற அமைப்பு காலத்தின் தேவைக்களுக்கேற்ப வளைந்து கொடுத்துத் தான் ஆகவேண்டும். இதன் காரணமாக பழைய கூட்டாட்சிக் கோட்பாடு புதிய சூழ்நிலைகளுக்கேற்ப மாறுபட்டுள்ளது. இம்மாறுபாடுகளுடைய கூட்டாட்சி மாதிரிப் படிவம் தனிக் கூட்டாட்சி முறையுமல்ல. தனி ஒற்றையாட்சி முறையுமல்ல. எனவே, இப்புதிய மாதிரிப் படிவத்தை 'மைய வலிமக் கூட்டாட்சி முறை' (Unitarianism) என அரசியல் அறிஞர்கள் அழைக்கின்றனர். கூட்டாட்சி அராசங்க முறையின் வளர்ச்சி வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போமேயானால் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் எல்லா கூட்டாட்சிகளிலுமுள்ள மைய அரசாங்கங்களின் அதிகாரங்கள் பெருமளவு வளர்ந்துள்ளதை கண்கூடாகக் காணலாம். இதற்குள்ள முக்கிய காரணங்கள், போர், பொருளாதார வீழ்ச்சி, மையம் வழங்கும் மானிய உதவித்தொகை கட்சி அரசியல், பொதுநல அரசு கோட்பாட்டின் வளர்ச்சி, செய்திப் போக்குவரத்து வளர்ச்சி ஆகியவையாகும்.

ஆட்சித்துறைக்கும், சட்டமன்றத்திற்குமிடையேயுள்ள தொடர்பின் அடிப்படையில் வகைப்படுத்தல், ஆட்சித்துறைக்கும் சட்டமன்றத்திற்குமிடையேயுள்ள தொடர்பை அடிப்படையாக வைத்து அரசியல் முறையமைவுகள் இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆட்சித்துறை சட்டமன்றத்திற்கு பொறுப்புடையதாக இருப்பின் அல்லது சட்டமன்றத்தின் நம்பிக்கையை பெற்றிருக்கும் வரையில் தர்ன அதிகாரத்தில் ஆட்சித்துறை இருக்க முடியுமெனில் இதற்குப் 'பாராளுமன்ற அராசங்கமுறை' என்று பெயர். மாறாக ஆட்சித்துறை சட்டமன்றத்திற்கு பொறுப்புடையதாக இல்லாமல், குறிப்பிட்ட காலத்தில் வாக்களர்களுக்கு மட்டும் பொறுப்புடையதாக இருக்கக்கூடிய முறைக்கு இங்கிலாந்தும், ஜனாதிபதி அரசாங்க முறைக்கு அமெரிக்காவும் எடுத்துக்காட்டுகளாகும். பிரான்ஸில் மேற்கூறிய இரண்டு முறைகளின் ஒரு கலப்பு முறை அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அரைகுறை ஜனாதிபதி அரசாங்க முறை என்றழைக்கப்படுகிறது.

பாராளுமன்ற அரசாங்க முறையில் இரண்டு ஆட்சித்தலைவர் காணப்படுவர். பெயரளவிலான ஆட்சித்தலைவர், உண்மையான ஆட்சித்தலைவர். பெயளரவிலான ஆட்சித்தலைவர் நாட்டின் தலைவராவர். அவர் அரசனாகவோ அல்லது அரசியாகவோ, அல்லது ஜனாதிபதியாகவோ இருக்கலாம். சட்டப்படி எல்லா அதிகாரங்கள் அனைத்தையும் ஒப்படைக்கப்பட்டிருக்கும். ஆனால் நடைமுறையில் அந்த அதிகாரங்கள் அனைத்தையும் பயன்படுத்தும் பிரதம அமைச்சரின் தலைமையிலுள்ள அமைச்சரவை ஆகும். அதுவே உண்மையான ஆட்சித்துறையாகும். பிரதம அமைச்சர், சட்டமன்றத்தின் கீழ்சபையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைவராவர் அமைச்சரவையிலுள்ள அமைச்சர் அனைவரும் அவர் கட்சியைச் சார்ந்தவரேயாவார். அமைச்சரவை அதனுடைய செயல்கள் அனைத்துக்கும் சட்டமன்றத்திற்குப் பொறுப்புடையவை. சட்டமன்றம் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அமைச்சரவையை வெளியேற்ற முடியும். ஆனால் கொள்கைக்கும் நடைமுறைக்கும் ஏராளமான வேறுபாடு உண்டு. சட்டமன்றத்தின் ஒரு சிறு குழுவான அமைச்சரவை இன்று சட்டமன்றத்தின் அதிகாரங்களை பறித்துக் கொண்டு விட்டது. எனவே தான் பாராளுமன்ற அரசாங்க முறையை அமைச்சரவை அரசாங்க முறை என்று அழைக்கிறார்கள். ஆனால் அண்மைக் காலத்தில் அமைச்சரவையின் அதிகாரங்கள் அனைத்தும் பிரதம அமைச்சரின் கைக்கு வந்துவிட்டது. எனவே, அமைச்சரவை அரசாங்க முறையை பிரதம் அமைச்சர் முறை என்றும் கூறுகிறார்கள். இன்று பிரதம அமைச்சர் அரசாங்க முறையானது பழைய பாராளுமன்ற அரசாங்க முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு விட்டது. இன்றைய பாராளுமன்ற முறையை கட்டுப்படுத்துவது வாக்காளர்களேயன்றி சட்டமன்றமல்ல.

அமெரிக்கா, பிரேசில், மெக்சிகோ, அர்ஜெண்டினா போன்ற நாடுகளில் ஜனாதிபதி முறை அரசாங்கம் செயல்படுகிறது. இந்த அரசாங்க முறை அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அதாவது சட்டமன்றமும், ஆட்சித்துறையும் தனிதனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி என்று அழைக்கப்படும் ஆட்சித்துறைத் தலைவர் ஆவார். அவர் நாட்டின் தலைவரும் ஆவார். அவர் மக்களால் மறைமுகமாகவோ நேரடியாகவோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் சட்டமன்றத்திற்கு பொறுப்புடையர் அல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அவரைப் பதவியிலிருந்து வெளியேற்ற சட்டமன்றத்தினரால் முடியாது. அவரை ஒரு குற்ற விசாரணை (Impeachment) மூலம் தான் பதவியிலிருந்து வெளியேற்ற முடியும்.

ஜனாதிபதியும், இவருடைய அமைச்சரவை உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் அங்கத்தினர்களாக இருக்கக் கூடாது. ஆகையினால் அவர்கள் சட்டமன்றத்தில் அமரவோ, விவாதங்களில் பங்கு பெறவோ, மசோதாக்களை அறிமுகம் செய்யவோ உரிமையில்லை. அவர்கள் அவர்களுடைய செயலுக்கும், கொள்கைக்கும் சட்டமன்றத்திற்கும் பொறுப்புடையவர்கள் அல்ல.

சட்டமன்றமும் ஆட்சித்துறையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும், அவ்விரண்டும் முழுக்க முழுக்க சுதந்திரமான நிறுவனங்கள் அல்ல. அவை இரண்டையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிறுவனங்களாகத் தான் அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது. அதேபோன்று நீதித்துறைக்கும் இவ்விரண்டு நிறுவனங்களுடன் தொடர்புகள் உண்டு. இம்மூன்று நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை உருவாக்கியுள்ளதன் நோக்கம், ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்தின் அதிகார மீறலுக்குத் தடையாக இருக்க வேண்டுமென்பதாகும். இந்த ஏற்பாட்டினால் ஜனாதிபதி ஆங்கில அரசர் மூன்றாசம் ஜார்ஜைப் போன்று ஒரு எதேசச்சாதிகாரியாக மாற வாய்ப்பில்லை. காரணம் ஜனாதிபதியின் எதேச்சாதிகாரப் போக்கை சட்டமன்றமும், நீதித்துறையும் கட்டுப்படுத்திவிடும். இந்த ஏற்பாட்டிற்கு 'தடைகளும் சமநிலைகளும்' (checks and balances) என்று பெயர் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இந்த ஏற்பாடு நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை என்பது உண்மையே ஆயினும் அது அமெரிக்க அரசியலமைப்பின் ஒரு அடிப்படைய அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாராளுமன்ற, ஜனாதிபதி அரசாங்க முறைகள் இரண்டின் கலப்பான அரசியல் முறையமைவுகளும் தற்போது காணப்படுகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு பிரான்சு ஆகும். இம்முறைக்கு 'அரைகுறை குடியரசுத் தலைவர் (Quasi-Presidential) முறை' என்று பெயர். 'அரைகுறை பாராளுமன்ற (Quasi-Parliamentary) முறை' என்றும் அழைக்கலாம். இம்முறையில், ஜனாதிபதி மக்களால் குறிப்பிட்ட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உண்மையான அதிகாரம் பெற்று விளங்குகிறார். ஒரு குற்ற விசாரணை மூலம் தான் அவரைப் பதவியிலிருந்து வெளியேற்ற முடியும். அவர் சட்டமன்றத்திற்குப் பொறுப்புடையவரும் அல்ல. அதே நேரத்தில் ஒரு பிரதம அமைச்சரும் அவர் தலைமையில் ஒரு அமைச்சரவையும் உண்டு. பிரதமரும், அமைச்சர்களும் சட்டமன்ற அங்கத்தினர் அல்ல. இருப்பினும் அவர்கள் சட்டமன்றத்திற்குப் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். சட்டமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையிலர் தான் அவர்கள் பதவியிலிருக்க முடியும். ஆனால் ஜனாதிபதிக்கு சட்டமன்றத்தின் மீது முழுக்கட்டுப்பாடு உண்டு. அதன் கீழ்ச்சபையைக் கலைக்கவும் அரசியலமைப்பு முக்கியத்துவமுடைய பிரச்சனைகளை மக்களின் ஒப்புதலுக்கு (Referundum) அனுப்பவும், குடியரசின் அரசியலமைப்பு நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என ஜனாதிபதி எண்ணினால் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தவும் அவருக்கு அதிகாரம் உண்டு. எனவே பிரான்சின் அரசாங்க முறையை, 'மிகக்குறைவான அதிகாரப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரைகுறை ஜனாதிபதி முறை' என்று வர்ணிப்பது மிகப் பொருத்தமாகும்.

### 1.9.2 தற்கால வகைப்படுத்தல்

அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகள் இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் அரசியல் முறையமைவுகளை

வகைப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டுள்ளனர். எட்வர்டு ஷில் (Edward Shil) டேவிட் ஆப்டர் (David Apter) ஆகியோர்கள் இதில் முக்கியமானவர்கள் ஆவார்கள். அவர்களுடைய முயற்சி அரசியல் விஞ்ஞானத்தை சமூகவியலுடன் (Sociology) இரண்டாக இணையச் செய்துவிட்டது. அதன் விளைவாக, அவர்கள் உருவாக்கிய அரசியல் முறையமைவுகளின் வகைப்படுத்தல் அவைகளின் (அரசி முறையமைவுகளின்) ஒரு சமூகவியல் விளக்கத்தைப் போன்று தோற்றமளிக்கிறது.

**ஷில்லின் வகைப்படுத்தல்**




எட்வர்டுஷில் தற்கால அரசியல் முறையமைவுகளை ஐந்துவிதமாக வகைப்படுத்தியுள்ளார். முதலாவது, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் காணப்படும் "அரசியல் மக்களாட்சி" (Political democracy) இதில் சிவிலியன் ஆட்சி (Civilian Rule) / பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனங்கள், மக்களுக்கு உரிமைகள் காணப்படும். இரண்டாவது "காப்பு" மக்களாட்சி (Tutelary democracy) அரசு மக்களாட்சியின் கூறுகளை பின்பற்ற முயற்சிக்கக்கூடிய அரசியல் முறையமைவுகள் இவைகள். மூன்றாவது "நவீனப்படுத்தும் சிறுகுழு ஆட்சி" (Modernising Oligarchy) இது முறையமைவை தற்காலப் பணியாக்க முயற்சிக்கிறது. இதில் அதிகாரம் சிவிலியன்கள் கையிலோ இராணுவத்திடமோ இருக்கும். இராணுவ ஆட்சிக்கு சட்டபூர்வமான நிலையைப் பெற அவர்கள் சிவிலியன்களின் ஆதரவை நாடுவர். நான்காவதாக, "சர்வாதிகார சிறுகுழு ஆட்சி" (Totalitarian Oligarchy) இது இத்தாலியிலிருந்த பாசிசத்தைப் போன்று வலது சாரிப் போக்குடையதாகவோ அல்லது ரஷ்யாவிலுள்ள பொதுவுடைமையைப் போன்ற இடதுசாரிப் போக்குடையதாகவோ இருக்கலாம். இறுதியாக "மரபார்ந்த சிறுகுழு ஆட்சி" (Tradional Oligarchy) சமய

மரபுகளையும், நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு பரம்பரை வாரிசு முறையுடைய அரசியல் முறையமைவுகள் இவைகள்.

## 1.10 தொகுப்புரை

அரசியல் முறையமைவின் பகுப்பாய்வு முறையின் குறைகளைப் பல அறிஞர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். முதலாவதாக, டேவிட் ஈஸ்டன் போன்ற முறையமைவுப் பகுப்பாய்வு ஆதரவாளர்கள் பயன்படுத்தும் பல கருத்துக்களும் எளிதில் புலனாகாத தன்மையுடையதாக விளங்குகின்றன. இரண்டாவதாக, இந்த அணுகுமுறை வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசியல் முறையமைவுகளை ஆய்வு செய்யப் பயன்படலாம். ஆனால் வளர்ந்து வரும் நாடுகள் பலவற்றின் அரசியல் முறையமைவுகளை ஆய்வு செய்ய இது ஒரு நம்பகமான அணுகுமுறையல்ல. மூன்றாவதாக, இந்த ஆய்வுமுறை தற்போது நிலவியுள்ள அரசியல் முறையமைவுகளை பேணிப் பராமரிப்பதில் தான் கவனம் செலுத்துகிறதே தவிர சமுதாய மாற்றத்திற்கு வழி கோலுவதில்லை. எனவே, இது ஒரு பிற்போக்குக் கோட்பாடு என்ற கருத்து பல அறிஞர்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. குறைபாடுகள் பல காணப்படினும், முறையமைவுப் பகுப்பாய்வின் நிறைகளை நாம் புறக்கணித்து விடக்கூடாது. அதை சமூக இயல்களிலும், ஒப்பீட்டு அரசியலிலும் தீவிரமாக ஆய்வுக்குப் பயன்படுத்துவதில்லை. அவ்வாறு பயன்படுத்தும் போது ஒருவேளை முறையமைவுப் பகுப்பாய்வின் நிறைகளை நன்கு அறிந்து கொள்ள இயலும்.

டேவிட் ஈஸ்டனின் உள்ளீடு-வெளிப்பாடு அணுகுமுறையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. முதலாவதாக, இவ்வணுகுமுறையில் ஈஸ்டன் பயன்படுத்தியுள்ள கருத்துக்களும் வார்த்தைகளும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாக இல்லை. மேலும், மற்ற இயல்களிலிருந்து ஏராளமான வார்த்தைகள் எடுத்து அவர் பயன்படுத்துகிறார். ஒரு இயலில் ஒரு வார்த்தைக்கு குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு தனிப்பொருள் உண்டு. அதே வார்த்தை இன்னொரு இயலில் பயன்படுத்தப்படும்போது அதற்கு அந்த தனிப்பொருள் உண்டு எனக் கூற முடியாது.

இரண்டாவதாக, இவ்வணுகுமுறை வாக்குப் பதிவு, பொது மக்கள் கருத்து எவ்வாறு உருவாகிறது. வேலை நிறுத்தம், ஊர்வலங்கள் போன்ற பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகளை ஆய்வு செய்யப் போதுமான கருவியாகத் தெரியவில்லை. ஒரு அரசியல் முறையமைவிலுள்ள உயர்மட்ட நபர்களை பற்றி ஆய்வுகளை செய்யக்கூடிய ஒரு அணுகு முறையாக இது தோற்றமளிக்கிறது.

மூன்றாவதாக, இந்த அணுகுமுறை ஒரு அரசியல் முறையமைவின் ஓய்வு உறுதி, பராமரிப்பு ஆகியவற்றைப் பேணுவதில்தான் அதிக கவனம் செலுத்துகிறதே தவிர, அதன் மாற்றத்தைப் பற்றி அதிகமாக எதுவும் சொல்லுவதில்லை. அதாவது இந்த அணுகுமுறை சமுதாயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல் பழமையைப் போற்றிப் பாதுகாப்பதற்கு உறுதுணையாக விளங்குகிறது எனப் பொதுவுடைமை வாதிகள் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். முதலாளித்துவ சமுதாய அமைப்பைக் காப்பாற்றும் பொருட்டு முதலாளித்துவ மனப்பாங்கு கொண்ட அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளின் ஒரு புதிய கண்டுபிடிப்பு இது என அவர்கள் இதைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். பொதுவுடைமைக் கோட்பாடு பின்தங்கிய ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் பரவுவதைத் தடுப்பதே இக்கோட்பாட்டின் முக்கிய நோக்கம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

மேற்கூறிய குறைபாடுகள் காணப்பெறினும், உள்ளீடு-வெளிப்பாடு அணுகுமுறை வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசியல் முறையமைவுகளைக் கூர்ந்து ஆய்வு செய்ய ஒரு சிறந்த முறையாகும் என்பதில் சந்தேகமில்லை.

பண்டைய கிரேக்கர்கள் காலத்திலிருந்து தற்காலம் வரை ஏராளமான அறிஞர்கள் அரசியல் முறையமைவுகளை பலவாறு வகைப்படுத்திக் கூறியுள்ளார். அவைச .. எல்லாம் ஆராய்ந்து பார்ப்போமானால் அரசியல் முறையமைவுகளை ஒரு தத்துவத்தை அடிப்படையாக வைத்து விஞ்ஞான பூர்வமாக வகைப்படுத்த இயலாது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியுள்ளது. இந்த அறிஞர்கள் அரசியல் முறையம ுகளை வகைப்படுத்த கடைப்பிடித்துள்ள தத்துவங்கள் காரண காரியத் தொடாபேயாகும். ஆயினும் அவைகள் எல்லா அரசியல் முறையமைவுகளுக்கும் பொருந்தாது. இதற்குள்ள காணரம் அரசியல் முறையமைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் ஆகும். அவ்வாறு வேறுபட்டுள்ள அரசியல் முறையமைவுகளை எல்லா இடத்திற்கும் பொருந்தக்கூடிய முறையில் வகைப்படுத்த முயற்சிப்பது பயனற்ற வேலையாகவே முடிகிறது.

## 1.11 முக்கிய வார்த்தைகள்

முறையமைவு – உள்ளீடு – நடத்தை இயல் – பணிப்பகுப்பாய்வு – அதிகாரப் பங்கீடு.

## 1.12 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

கேள்வி எண் 1 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1.2ல் அறிக

கேள்வி எண் 2 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1.4ல் அறிக

கேள்வி எண் 3 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1.8ல் அறிக

கேள்வி எண் 4 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1.9.1ல் அறிக

## 1.13 பார்வை நூல்கள்


1. J. Blondel, An Introduction to Comparative Government, London, Weidenfeld and Nicolson, 1969.
2. Finer, Theory and Practice of Modern Government, London, Methuen, 1969.
3. A Lijphart, (ed.)., Parliamentary Versus Presidential Government, Oxford and New York, Oxford University Press, 1992.
4. R.C. Macridis and R.E. Ward, Modern Political Systems: Europe and Asia, 2nd Edn., Englewood Cliffs N.J., Prentice Hall, 1968.
5. R. Maddex, Constitutions of the World, 2nd Edn., Washington DC and London, CQ Press, 2000.


## 1.14 மாதிரி வினாக்கள்

1. 'அரசியல் முறையமைவு' என்பதன் பொருளையும் தன்மையையும் விளக்குக.
2. அரசியல் அறிவியல் முறையமைவுப் பகுப்பாய்வை விளக்கி திறனாய்வு செய்க.
3. அரசியல் முறையமைவு என்ற கருத்தை விளக்கி, அதன் பொதுப் பண்புகளை சுட்டிக் காட்டுக.

4. உள்ளீடு – வெளிப்பாடு பகுப்பாய்வு அணுகுமுறையை விளக்கி அதன் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுக.
5. அமைப்பு – பணிப்பகுப்பாய்வு முறையை விளக்கி. அதன் குறைபாடுகளை விளக்குக.
6. அரசியல் முறையமைவுகளை வகைப்படுத்துதலை விவரி

# அலகு - 2

# இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு - சிறப்புப் பண்புகள் - முடியாட்சி - ஆட்சித்துறை

## முன்னுரை

பாராளுமன்ற மக்களாட்சியின் உதாரணம் பிரிட்டனின் அரசியலமைப்பாகும். படிப்படியாக பல்வேறு வளர்ச்சிகளை உள்ளடக்கி பாராளுமன்றம் ஏற்பட்டதென்றால் மிகையல்ல. இறைவழித் தோற்ற அரசர்களின் ஆதிக்கத்தையும் முறியடித்து மக்களாட்சி நிறுவனமான மக்கள் ஆட்சிசெய்யும் பாராளுமன்ற மக்களாட்சி உருவானது. பிரிட்டனின் உள்நாட்டுப்போர், மரபுவழி ஆட்சிமுறை ஆகியனவும் மக்களாட்சி நிறுவனத்தை வலுப்படுத்த உதவியதெனலாம். இப்பாடப் பிரிவில் இங்கிலாந்து அரசியலமைப்பு, அதன் வளர்ச்சி, ஆதாரங்கள் மற்றும் சிறப்புப் பண்புகள் ஆகியன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பரம்பரை பரம்பரையாக இயங்கிவந்த மன்னராட்சி பாராளுமன்ற முறைக்கு எவ்வாறு இயைந்த நிறுவனமாக உள்ளதென்பதையும் இப்பாடப் பிரிவில் காணலாம்.

## நோக்கங்கள்

இங்கிலாந்து அரசியலமைப்பு வளர்ந்து வந்த வளர்ச்சி முறையை அறிதல்

இங்கிலாந்து அரசியலமைப்பின் அடிப்படையை தெரிந்து கொள்தல்

இங்கிலாந்து அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகள் ஆகியவற்றை வெளிக்கொணர்தல்

## வடிவமைப்பு

இங்கிலாந்தின் அரசியலமைப்பு

அரசியலமைப்பின் ஆதாரக்கூறுகள்

அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகள்

ஆட்சித்துறை

மன்னராட்சி

அரசரின் நிலை

ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்

சட்டமன்றத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்

நீதித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்

அரசியின் பணிகளும் சேவைகளும்

மன்னராட்சி தேவை

## 2.1 இங்கிலாந்தின் அரசியலமைப்பு

### நாடும் மக்களும் (Land and People)

இங்கிலாந்தின் அரசியல் முறையமைவை விரிவாக ஆய்வு செய்வதற்குப் பல முக்கிய காரணங்கள் உண்டு: பாராளுமன்ற அரசாற்கத்தின் தாயகம் என இங்கிலாந்து கருதப்படுகிறது. இங்கிலாந்து பாராளுமன்றம் தற்கால பாராளுமன்றங்களின் தாய் என போற்றப்படுகிறது; அதன் அரசியலமைப்பு எழுதப்படாதது. ஏனினும், மக்களாட்சியின் அடிப்படை ஆவணமாகக் கருதப்படுகிறது. உட்ரோ வில்சன் (Woodrow Wilson) கூறுவதைப் போல், இங்கிலாந்தின் அரசியல் நிறுவனங்கள் நிரந்தர வளர்ச்சிக்கு இலக்காயிருப்பதனால் அவைகள் அதன் பழைய அமைப்பிலிருந்து விடுபட்டு தற்கால நிலையையடைந்துள்ளன. இங்கிலாந்தின் அரசியல் முறையமைவின் இத்தனிச்சிறப்புக்

கூறுகளுக்குள்ள காரணங்கள் மூன்று: ‘ஓரினத்தன்மை’ (Hemogenity) ‘கருத்தொருமைப்பாடு’ (Consensus) ‘நன்மதிப்பு’ (Reverence). இங்கிலாந்தின் சமூகமானது இனம், சமயம், சமூக, பொருளாதாரம் ஆகிய விஷயங்களில் ஓரினத்தன்மையுடையதாக விளங்கியது; மேலும், அடிப்படை அரசியல் பிரச்சினைகளைப் பற்றி மக்கள் விரிவான கருத்தும், ஒருமைப்பாடும் அரசியல் தலைவர்களிடம் நன்மதிப்பையும் வைத்துள்ளனர்.

இங்கிலாந்தின் சமூக, அரசியல் அமைப்பிற்கு அதன் பூகோள அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஐரோப்பா கண்டத்தில் வடமேற்கில் கடலால் சூழப்பட்ட ஒரு சிறிய நாடான இங்கிலாந்தின் நிலப்பரப்பு உலக நிலப்பரப்பில் 0.2% மட்டுமேயாகும். நிலப்பரப்பில் உலக நாடுகளில் எழுபத்தைந்தாவது இடத்திலிருக்கும் இங்கிலாந்து மக்கள் தொகையில் பத்தாவது இடத்தில் இருக்கிறது. அதன் மக்கள் தொகை 59.8 மில்லியன் மக்கள் அடர்த்தி (Dencity)யில் அது நான்காவது இடத்தில் உள்ளது.

ஐரோப்பா கண்டத்திலிருந்து 22 மைல் அகலமுள்ள ஆங்கில கால்வாய் (English Channel) மூலம் பிரிக்கப்பட்டுள்ள இங்கிலாந்தின் நிலப்பரப்பு நான்கு பெரிய பகுதிகளைக் கொண்டதாகும். ஆவையாவன: 1. ஸ்காட்லாந்து 2. இங்கிலாந்து 3. வேல்ஸ் (Wales) 4. வட அயர்லாந்து (North Ireland) இவைகளைத் தவிர மேன் தீவு (Isle of Man) ஜெர்சி (Jersey) போன்ற சிறு பகுதிகளும் உண்டு.

ஐரோப்பிய கண்டத்திலிருந்து ஒதுக்கமாக உள்ள பிரிட்டனின் பூகோள அமைப்பு அதன் சமூக, அரசியல் தன்மையை பெரிதும் நிர்ணயித்துள்ளது. பல தீவுகளின் ஒரு கூட்டமாக இருப்பதனால் பிரிட்டனுக்கு ஒரு நிரந்தரப்படை தேவையிருக்கவில்லை. ஆயினும் அதன் வலுவான கடற்ப்படையின் தேவைகளுக்காக பிரிட்டன் ஒரு நிரந்தரப் படையை வைத்திருந்தது. கடற்படையின் வலிமையின் காரணமாகத் தான் பிரிட்டன் ‘கடல்களின் தலைவி’ (Mistress of the Seas) என்ற பெருமையைப் பெற்றது. மக்கள் கடல் பயணத்தில் அதிக அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்ததினால் எதிரிகள் உள்ளே நுழைய முடியவில்லை என்பதோடு உள்நாட்டிலுள்ள பல தேசிய இனமக்களும் ஒன்றாக இணைந்து வாழ்ந்தனர். மற்றெல்லோரையும் விட வலிமையிலும் செல்வத்திலும் சிறப்புற்று விளங்கிய இங்கிலாந்து அரசர் 14-ஆம் நூற்றாண்டில் வேல்சைக் கைப்பற்றி இங்கிலாந்துடன் இனைத்தார். 1707-ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தை இங்கிலாந்துடன் இணைத்தார்.

இங்கிலாந்து ஒற்றையாட்சி (Unitary) அரசாகும். ஆயினும் அதன் முக்கிய பகுதிகளாக இங்கிலாந்து ஸ்காட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகியவைகள் ஒவ்வோன்றிக்கும் தனித்தனியான சட்ட அரசியல் முறைகள் உண்டு. ஸ்காட்லாந்து மக்கள் இன்றுவரை அவர்களுக்கென தனிச்சட்ட முறை, கல்வி முறை, உள்ளாட்சி முறை, பிரெஸ்பெட்டிரியன் திருச்சபை (Presbyterian Church) ஆகியவற்றை வைத்துக் கொண்டுள்ளனர்.

1800-ஆம் ஆண்டு அயர்லாந்து இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது. ஆயினும் கலாச்சார ரீதியில் அயர்லாந்தை இங்கிலாந்துடன் இணைக்க முடியவில்லை. அயர்லாந்து மக்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கர்; இங்கிலாந்து மக்கள் பிராட்டஸ்டண்டுகள். இச்சமய வேற்றுமையின் காரணமாக 1919-ஆம் ஆண்டில் கலகமும் கிளர்சியும் தோன்றி 1922-ஆம் ஆண்டில் அயர்லாந்து பிரிந்து தனி நாடாக மாறியது. ஆயினும் வட அயர்லாந்து என்ற சிறுபகுதி பிரிட்டனிடமே இருந்தது. 1907-ஆம் ஆண்டு முதல் ஜெர்மானிய அரசு குடும்பமான ‘ஹனோவர்’ (Hanover) அரசு குடும்பவழித் தோன்றல்கள்

பிரிட்டனின் அரசன் அல்லது அரசியாக இருக்கின்றனர்.

**அரசியல் கலாச்சாரம் (Political Culture)**

இங்கிலாந்து மக்களில் அரசியல் கலாச்சாரம் பழமைக் கொள்கை (Conservatism) ஆகும். ஆதாவது, பழமைக் கருத்து, நிறுவனங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து பராமரிக்க வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணமாகும். இக்கொள்கையின் காரணமாக அவர்கள் அரசிலில் தீவிர திடீர் மாற்றங்களை விரும்புவதில்லை. ஆனால் இது அரசியலில் எவ்வித மாற்றங்களையும் அவர்கள் விரும்புவதில்லை எனப் பொருளாகாது. அரசியல் மாற்றங்கள் வேண்டும்; ஆனால் அம்மாற்றங்கள் நிலவி வந்துள்ள சமூக அரசியல் நிறுவனங்களுக்கும் அமைப்புக்களுக்கும் எவ்வித சீர்குலைவையும் ஏற்படுத்தாத முறையில் நிகழ வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றார்கள். இங்கிலாந்தின் வரலாற்றில் இக்கொள்கைக்குக் காணப்படும் ஒருவித விலக்கு 1649-ஆம் ஆண்டில் ஆங்கில மக்கள் அவர்களுடைய மன்னன் முதலாம் சார்லசை சிரச்சேதம் செய்து முடியாட்சியையும் பிரபுக்கள் அவையையும் ஒழித்ததாகும். ஆனால் 1660-ஆம் ஆண்டில் இவ்விரு நிறுவனங்களையும் ஏற்படுத்தி ஆங்கில மக்கள் அவர்களுக்குள்ள பழமைக் கருத்தின் உறுதியை வெளிப்படுத்தினார். 1688-ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாண்புமிகு புரட்சி (Glorious Revolution) 1707-ஆம் ஆண்டின் □னோவர் அரச குடும்பத்தை ஆங்கில சிம்மாசனத்தில் அமர்த்தியது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்சிகள் அமைதியான முறையில் தான் பிரிட்டனில் நடைபெற்றது. ஸி.நி.நியுமன் (R.g. Neumann) கூறுவதைப்போல, மற்ற நாடுகளில் இம்மாதிரியான மாற்றங்கள் நீண்ட நாள் இரத்தம் சிந்தி, நடத்தப்பட்ட உள்நாட்டுப் போருக்கு பிறகு தான் ஏற்படுகின்றன. ஆனால், இங்கிலாந்தின் அவைகள் ஒரு சிம்மாசன உரை (Speech from the throne) யின் மூலம் அறிவிக்கப்பட்டன.

பழம்பண்பு பாதுகாப்புக் கொள்கை பிரிட்டிஷ் அரசியல் நிறுவனங்கள் காலத்தின் தேவைகளுக்ற்ேப மாற்றங்களைப் புகுத்த பெரிதும் உதவுகிறது. மாற்றங்களை அடியோடு வெறுக்காமலேயே இங்கிலாந்து மக்கள் அவற்றை எதிர்க்கக் கூடியவர்கள் ஆவார்கள். ஆதாவது அவர்கள் சமூகத்தை சீர்திருத்துவதற்கான எந்த ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஒவ்வோரு சீர்திருத்தக் கருத்தையும் அதன் நன்மையின் அடிப்படையில் தான் ஏற்றுக்கொள்கின்றனர். ஆங்கில மக்கள் பொதுவாக அமைதியில் நாட்டமுடையவர்கள். ஆகையால் மாற்றங்கள் பரிணாமரீதியில் ஏற்பட வேண்டுமென அவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். அவர்களுடைய இப்பண்பு பிரெஞ்சு மக்களின் பண்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்.

இங்கிலாந்து மக்களின் பழம்பண்பு பாதுகாப்புக் கொள்கை அந்த நாட்டிலுள்ள இரு கட்சிகளின் நடவடிக்கைகளும் காணப்படுகிறது. 1850-ஆம் ஆண்டிலிருந்து 1893-ஆம் ஆண்டில் இறகும் வரை கார்ல்மார்க்ஸ் இங்கிலாந்தில் வாழ்ந்திருந்த போதிலும், தொலழிலாளர் கட்சி (Labour Party) மார்க்சினுடைய பொதுவுடைமைக் கோட்பாட்டை ஏற்கவில்லை மாறாக ஜான்ஸ்டுவார்ட் மில்லின் (Political Economy) என்ற நூலைத் தான் தொழிலாளர் கட்சி வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டதே ஒழிய மார்க்சின் நூல்களை அல்ல. அதே போன்று பழம் பண்பு பாதுகாப்பில் அக்கறையுடைய கன்சர்வேட்டிவ் கட்சி (Conservative Party) தொழிலாளர்கள் கட்சியின் சமதருமக் கொள்கை (Socialism)யை அடியோடு வெறுக்கவில்லை. எடுத்துக்காட்டாக, 1911 ஆம் ஆண்டில் லிபரல் (Luberals) கட்சியின் 1949-ஆம் ஆண்டில் தொழிலாளர் கட்சியும் பிரபுக்கள்

அவையை சீர்திருத்தக் கொண்டுவந்த சட்டங்களை கன்சர்வேட்டிவ் கட்சி ஏற்றுக் கொண்டதையும் கூறலாம்.

புதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளுக்கு எதிராக, பழம் பண்பு பாதுகாப்பு கொள்கை இங்கிலாந்திலும், மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. இங்கிலாந்தில் இக்கொள்கையின் தீவிர ஆதரவாளர் எட்மண்ட் பர்க் (Edmund Burke) ஆவார். சமூக அரசியல் நிறுவனங்களில் செய்யக்கூடிய எந்தச் சீர்திருத்தமும் நியாயத்தை அடிப்படையாகக்கொண்டு அந்நிறுவனங்கள் பாராமரிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆச்சீர்திருத்தங்களை திடீரென புகுத்தாமல் காலப்போக்கில் ஏற்பட வேண்டுமென்பதே பர்க்கின் கூற்று, பழமை பாதுகாப்புக் கொள்கையில் அவருக்கு இருந்த தீவிரப்பற்றைக் காட்டுகிறது. பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளை கடுமையாக எதிர்த்த பர்க் ஆங்கில அரசியலமைப்பை வானளாவப் புகழ்கிறார். 'நம்முடைய அரசியலமைப்பு அடிப்படையில் வளர்ந்த ஒன்றாகும்...உங்களுடைய பிரபுக்கள் உங்களுடைய நீதிபதிகள்... எல்லோரும் மரபின் அடிப்படையில் தோன்றி வளர்ந்தவர்களே ஆகும்' என பர்க் இங்கிலாந்தின் அரசியலமைப்பை வர்ணிக்கிறார்.

## 2.2 அரசியலமைப்பின் ஆதாரக்கூறுகள்

அரசாங்கத்தின் அமைப்பையும் அதிகாரங்களையும் நிர்ணயிக்கும் விதிகளின் தொகுப்புதான் அரசியலமைப்பு எனப்படுவது. இங்கிலாந்தில் இவ்விதிகள் ஒரு படிவத்தில் இல்லை. எழுதப்பட்டதும் எழுதப்படாததுமான பல்வேறு ஆதாரக்கூறுகளில் இவ்விதிகள் காணப்படுகின்றன. பின்வருபவை இங்கிலாந்தின் அரசியலமைப்பின் ஆதாரக்கூறுகளாகும்.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாசனங்கள் (Historic Documents)**

மகாசாசனம் (Magna Carta or the Great Charter), உரிமை விண்ணப்பம் (Petition of Rights), உரிமைச் சட்டம் (Bill of Rights) ஆகிய மூன்றும் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த சாசனங்களாகும். 1215 ஆம் ஆண்டு ஜுன் மாதம் பதினைந்தாம் தேதி ரன்னிமீட் (Runnymede) என்ற இடத்தில் ஜான் அரசர் மகாசாசனத்தை ஒப்புக்கொண்டார். இம்மகாசாசனம் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. அரசன் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட முடியாதென்ற கொள்கையை இது நிலைநாட்டியது. மன்னரால் செய்யப்பட்ட தவறுகளை எதிர்த்தும் பரிகாரம் காணமுடியும் என்பதை இம்மகாசாசனம் உறுதிப்படுத்தியது. ஜான் அரசர் மறைவிற்குப் பின்னர் இம்மகாசாசனம் 1217, 1225 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பிறப்பிக்கப்பட்டது. 1297 ஆம் ஆண்டு முதலாம் எட்வர்ட் மன்னரால் இம்மகாசாசனம் இங்கிலாந்தின் சட்டப்புத்தகத்தில் ஏற்றப்பட்டது. இன்று வரையிலும் இம்மகாசாசனம் இங்கிலாந்து அரசியலமைப்பின் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது. உரிமைப் போராட்டத்தின் முதல் கட்டமாக இச்சாசனம் அமைந்தது. முதலாம் ஜேம்ஸ் மன்னர் இறைவழிக்கோட்பாட்டை ஆதரித்ததோடு மட்டுமின்றி பாராளுமன்றத்தையும் அவமதித்தார். அவருக்குப் பின்னால் வந்த முதலாம் சார்லஸ் மன்னரைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் பாராளுமன்றமும் கட்டாயமாக உரிமை விண்ணப்பத்தை 1628இல் ஏற்றுக் கொள்ள வைத்தன. எதேச்சதிகாரமாக கைது செய்தலையும் பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கெதிரான வரிவிதிப்பையும் இவ்விண்ணப்பம் தடைசெய்தது. அமைதிக்காலத்தில் படைத்துறை சட்டத்தைப் பயன்படுத்துவதையும் தனியார் கட்டடங்களில் படைவீரர்களைத் தங்கவைப்பதையும் இவ்விண்ணப்பம் தடைசெய்தது. இந்த புரட்சிக்குப் பின்னர்

பாராளுமன்றம் தன்னுடைய நிலையை உறுதிப்படுத்தத் தொடங்கியது. இதன் விளைவாக இங்கிலாந்தின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் பெற்ற அரசியலமைப்புச் சார்ந்த ஆவணமாகிய உரிமைச்சட்டம் 1689 ஆம் ஆண்டு (Bill of Rights, 1689) தோன்றியது. புதுமையான எதையும் இச்சட்டம் புகுத்தவில்லை. பாராளுமன்றமும் குடிமக்களும் கொண்டிருந்த உரிமைகளை இச்சட்டம் உறுதிசெய்தது. சட்டங்களை ரத்து செய்ய அரசர் கொண்டிருந்த அதிகாரத்தையும் அரசர் தமது சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தின் ஆமோதிப்பின்றி வரி வசூலிப்பதையும் அமைதிக்காலத்தில் படைதிரட்டுவதையும் இச்சட்டம் அறவே ஒழித்தது. பாராளுமன்றக் கூட்டத்தொடர் நடத்துவதற்கும் அதில் பேசுவதற்கும் உள்ள உரிமையும் அரசிடம் விண்ணப்பம் செய்ய மக்கள் கொண்டுள்ள உரிமையும் வலியுறுத்தப்பட்டன.

2. சட்டங்கள் **(Statutes)**

பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சில முக்கியமான சட்டங்கள் அரசியலமைப்பில் மற்றொரு ஆதாரக் கூறு ஆகும். அரசியலமைப்பில் விரிவான கோட்பாடுகளைக் கொண்டுள்ள சில சட்டங்களைப் பார்ப்போம். சட்டமன்றம் சில மரபுகளைச் சட்டங்களாக இயற்றுவது உண்டு.

**ஆட்கொணர்சட்டம் (1679) (The Habeas Corpus Act, 1679)**

இச்சட்டம் மக்களுக்குத் தனி உரிமையைப் பெற்றுக் கொடுத்தது. இவ்வுரிமை முன்பே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் அதில் காணப்பட்ட பரிகாரங்கள் பற்றாக்குறையாக இருந்தன. இச்சட்டம் இக்குறையை நிவர்த்தி செய்துவிட்டது.

**அரசுரிமை நிர்ணயச் சட்டம் (1701) (The Act of Settlement, 1701)**

இச்சட்டம் அரியாசனத்திற்குள்ள உரிமையை நிர்ணயிக்கும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை நிலை நாட்டிற்று.

**ஸ்காட்லாந்து இணைப்புச் சட்டம் (1707) (The Act of Union, 1707)**

இச்சட்டம் ஸ்காட்லாந்தையும் இங்கிலாந்தையும் இணைத்து ஐக்கிய அரசை உருவாக்கியது. மேலும் ஐக்கிய அரசிற்கு ஒரு பாராளுமன்றத்தையும் உருவாக்கியது.

**சீர்திருத்தச்சட்டங்கள் (1832, 1867, 1884 மற்றும் 1885)**

இச்சீர்திருத்தச் சட்டங்கள் வாக்குரிமை அடிப்படையை விரிவாக்கி, காமன்ஸ் சபையை உண்மையிலேயே மக்கள் சபையாக மாற்றியது.

**மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் (1918 & 1928) (Representation of the People Acts 1918 and 1928)**

இச்சட்டம் மக்கள் சபைக்கு வயதுவந்தோர் வாக்குரிமையை உருவாக்கின.

**நீதித்துறைச் சட்டம் (Judicature Consolidation Act, 1925)**

இச்சட்டம் நீதிபதிகளுக்கு சுதந்திரம் வழங்கியது.

பாராளுமன்றச் சட்டங்கள் (Parliament Acts of 1911 & 1949)

இச்சட்டங்கள் பிரபுக்கள் சபை அதிகாரங்களைக் குறைத்து மக்கள் சபையை உண்மையிலேயே மிகவும் உயர்வான ஒரு சட்டமன்றத்துறையாக ஆக்கின.

பாராளுமன்றச் சட்டம் **(Parliament Act of 1918)**

இச்சட்டம் அமைச்சர்களுக்கு ஊதியத்தை அளித்தது.

**வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் (The Statute of Westminster, 1931)**

இச்சட்டம் டொமினியனர்கள் மீது சட்டப்பூர்வமான கட்டுப்பாடு செலுத்த வழிவகுத்தது.

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

1. இங்கிலாந்தின் எழுதப்பட்ட அம்சங்களை எழுது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள சட்டங்களின் பட்டியல் விரிவானது என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் இப்பட்டியல் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களை உள்ளடக்கி இருக்கின்றது. இச்சட்டங்கள் இங்கிலாந்து அரசியலமைப்பின் விரிவான முக்கிய கோட்பாடுகளை கொண்டவையாகும்.

### 3. மரபுச் சட்ட விதிகள் (Rules of Common Law)

நீதிமன்றங்களின் தீர்ப்புகளினால் நிலைநாட்டப்பட்ட பரம்பரைச் சட்டம் தான் மரபுச் சட்டம் எனப்படுகின்றது. மக்கள் அனுவித்து வரும் அடிப்படை உரிமைகள் யாவும் மரபுச்சட்ட உரிமைகளே. இவ்வுரிமைகட்கு ஹேபியஸ் கார்பஸ் அல்லது ஆட்கொணர் சட்டம் போன்ற சட்டங்கள் உறுதி அளிக்கின்றன. மரபுச் சட்ட விதிகள் யாவற்றிற்கும் சட்டரீதியான விளக்கம் அளிக்கப்படவில்லை. இவ்விதிகள் சிலவற்றிற்கு அரசியலமைப்புச் சட்ட வல்லுநர்களான ரானல்டி கிரான்வில், சர் வில்லியம் பிளாக்ஸ்டன் போன்றோரும் வால்டர்பேஜட் போன்ற கருத்துரையாளர்களும் விளக்கம் அளித்தனர்.

### 4. தீர்ப்புவழிச் சட்டம் (Case Law)

ஒரு குறிப்பிட்ட வழக்கிற்கு சட்டம் ஒன்றை செயல்படுத்துவதில் குழப்பம் ஏற்படும் பொழுது நீதிமன்றங்கள் அச்சட்டத்திற்கு விளக்கம் அளிக்கின்றன. பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு மட்டும்தான் நீதிபதிகள் விளக்கம் அளிக்கமுடியும். ஒரு சட்டத்தின் பொருள் இவ்விளக்கத்தின் அடிப்படையில் பின் எழும் வழக்குகளழில் பயன்படுத்தப்படுகின்றன. நீதிமன்றங்கள் இங்ஙனம் அளித்துள்ள தீர்ப்புகளில் பல. அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை. இதனை விளக்க பின்வரும் இரு எடுத்துக்காட்டுகளை கூறலாம். பொது அறிவிப்புகள் சம்பந்தப்பட்ட வழக்கின் (Proclamations, 1911) விசாரணையின் முடிவில் தலைமைநீதிபதி கோக் (Lord Chief Justice Coke) பின்வரும் தீர்ப்பைக் கூறினார் : அரசரின் சிறப்புரிமை அதிகாரம் நாட்டுச் சட்டத்திற்கு உட்பட்டது. ஆகவே பொது அறிவிப்பு மூலமாக புதிய குற்றம் எதையும் அரசர் உருவாக்க முடியாது. புஷெல்லின் வழக்கின் (Bushell's Case 1670) விசாரணையின் போது வழக்குகளில் சம்பந்தப்பட்டவரும் வக்கீல்களும் சாட்சிகளும் நீதிமன்றத்தில் கூறும் வார்த்தைகளுக்கு பாதுகாப்பளிக்கப்பட்டது.

### 5. பாராளுமன்றச் சட்டமும் மரபும் (Custom and Law of Parliament)

பாராளுமன்றத்தின் இரு சபைகட்குமுள்ள சிறப்புரிமைகள் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும். இது பாராளுமன்றத்தின் உயர்நீதி மன்றத்தால் செயலாற்றப்படுகின்றது. இருசபைகட்குமுள்ள சுதந்திரம், பாதுகாப்பு, அந்தஸ்து ஆகியவை இச்சிறப்புரிமைகளால் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் இரு சபைகளும் பின்பற்றும் வழிமுறைகள் சட்டமாகாது.

### 6. மரபுகள் (Conventions)

எழுதப்பட்ட விதிகளை மட்டும் கொண்டு ஓர் அரசியலமைப்பு செயல்படமுடியாது. எழுதப்பட்ட விதிகளோடு மரபுகள் எனப்படும் எழுதப்படாத விதிகளும் இருக்கவேண்டும். சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தக் கூடிய பழக்கவழக்கங்களைத் தான் மரபுகள் என்கிறோம். நிலவியிருக்கும் அரசாங்க நிறுவனங்களின் வளர்ச்சிக்கு மரபுகள் தேவைப்படுகின்றன. மனித உறவிகளினின்று உருவாகுபவைதான் மரபுகள். மனித உறவுகள் தான் அரசியல் எனப்படுவது. எல்லா மரபுகளும் ஒரேமாதிரி முக்கியத்துவம் உடையவை அல்ல. அரசருக்குள்ள சிறப்புரிமைகள், அமைச்சர் குழு சம்பந்தப்பட்ட விதிகள், பாராளுமன்றத்தின் இரு சபைகளும் பின்பற்றக்கூடிய முக்கியமான நடவடிக்கைகள், காமன்வெல்த் உறவுகள் போன்ற அனைத்தும் மரபுகளால் உருவாக்கப்பட்டுள்ளன.

தன்னறிவு சோதனைக் கேள்வி
2. இங்கிலாந்து அரசியலமைப்பின் ஆதாரக் கூறுகள் யாவை?

காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அரசியலமைப்பு மாறுவதற்கு மரபுகள் உதவுகின்றது. தேவைப்படும் பொழுது பழைய மரபுகளைப் புனரமைக்கலாம் அல்லது புதியவற்றை உருவாக்கலாம். "சட்டமெனும் உலாந்த எலும்புகளை மறைக்கும் சதையாக மரபுகள் அமைகின்றன. சட்டப்பூர்வமான அரசியலமைப்பை இவை செயல்படுத்துகின்றன. அரசியலமைப்பை வளரும் கருத்துக்களுடன் தொடர்பு கொள்ளச் செய்வதே மரபுகள்" என்று சர் ஐவர் ஜென்னிங்ஸ் கூறுகின்றார்.

நீதிமன்றங்கள் மரபுகளைச் செயல்படுத்த முடியாது. சில மரபுகள் தெளிவற்றவை. இதனால் மரபுகளின் முக்கியத்துவம் குன்றிவிடவில்லை. சில மரபுகளைக் கடைப்பிடிக்காமல் இருந்தால் அது சட்டத்தை மீறுவதற்கு ஏதுவாகும். மக்கள் கருத்துதான் மரபுகளை செயல்படுத்துகின்றது. நன்னெறியை அடிப்படையாகக் கொண்டவை மரபுகள். அரசியலமைப்பின் உட்கருத்திற்கேற்ப அரசியல்வாதிகள் செயல்பட வேண்டும் என்று பொது மக்கட்கருத்து எதிர்பார்க்கின்றது.

## 2.3 அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகள்

இங்கிலாந்து அரசியலமைப்பைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு அதனுடைய சிறப்புப் பண்புகளை அறிந்திருத்தல் அவசியமாகும். பின்வருபவை இங்கிலாந்து அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகளாகும்.

1. இங்கிலாந்தின் அரசியலமைப்பிற்குள் குறிப்பிடத்தக்க சிறப்புப் பண்பு அதன் எழுதப்படாத தன்மையாகும். அரசாங்கத்தின் அமைப்பு அதிகாரங்கள், பணிகள், அதற்கும் மக்கட்கும் உள்ள உறவுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட விதிகள் யாவும் ஒரே படிவத்தில் தொகுக்கப்படவில்லை. எட்மண்ட்பர்க் (Edmund Burke) என்பவர் தம்முடைய Reflections on the French Revolution என்ற நூலில் இங்கிலாந்து அரசியலமைப்பை மிகவும் ஆதரிக்கின்றார். எழுதப்பட்ட அரசியலமைப்புகளின் ஆதரவாளரான தாமஸ் பெயின் (Thomas Paine) என்பவர், பர்க் அவர்களால் இங்கிலாந்து அரசியலமைப்பைச் சமர்ப்பிக்க முடியுமா என கேள்விக்கணை தொடுத்துள்ளார். இவரைத் தொடர்ந்து பிரெஞ்சு அரசியல் ஞானியாகிய டிடொக்யு வெல் என்பவர் இங்கிலாந்து அரசியலமைப்பு என்று ஒன்று இல்லை என்று கூறுகிறார். இவர்களது கருத்துக்கள் எதைக் காட்டுகிறது என்றால் இங்கிலாந்து தன்னுடைய அரசியலமைப்பை ஒரு படிவத்தில் கொடுப்பதற்கு எம்முயற்சியும் எடுக்கவில்லை என்பதேயாகும். இருப்பினும், இவ்விதிகளில் சில பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களிலும் சில விதிகள் எழுதப்படாத மரபுகளிலும் காணப்படுகின்றன. ஆகையினால் இவ்வரசியலமைப்பை முற்றிலும் எழுதப்படாததென்றும் கூறுவதற்கில்லை.
2. அரசியலமைப்பின் நெகிழும் தன்மை அதன் இரண்டாவது சிறப்புப் பண்பாகும். அரசியலமைப்பில் காணப்படும் சரத்துக்களைத் திருத்தி அமைப்பதற்கென விசேட முறைகளோ அல்லது பெரும்பான்மையோ தேவையில்லையென்றால் அவ்வரசியலமைப்பு நெகிழும் அரசியலமைப்பு எனப்படும். உலகிலுள்ள அரசியலமைப்புகளில் மிகவும் நெகிழக்கூடியது இவ்வரசியலமைப்பு ஆகும். எழுதப்படாத தன்மைதான் இதற்குக் காரணம். பாராளுமன்றத்தால் ஒரு சாதாரண மசோதா எங்ஙனம்

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
> 3. இங்கிலாந்து அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகளை கூறுக.

நிறைவேற்றப்படுகின்றதோ அங்ஙனமே அரசியலமைப்பும் திருத்தி அமைக்கப்படுகின்றது.

3. பாராளுமன்ற முறை அரசாங்கம் இவ்வரசியல் அமைப்பால் நிலைநாட்டப்பட்டுள்ளது. பாராளுமன்ற முறையிலான அரசாங்கத்தில் பெயரளவிலான ஆட்சித்துறை என்றும், உண்மையான ஆட்சித் துறையென்றும் இருவகையான ஆட்சித்துறை இங்கிலாந்தில் காணப்படுகின்றது. அரசியார் பெயரளவிலான ஆட்சித்துறையாகவும், தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர் குழு உண்மையான ஆட்சித்துறையாகவும் செயல்படுகின்றது. உண்மையிலான ஆட்சித்துறையாகிய அமைச்சர் குழு பாராளுமன்றத்தினின்றும் உருவாக்கப்பட்டு அதற்குப் பொறுப்புடன், அதனால் எத்தருணமும் பதவியினின்று நீக்கப்படக்கூடிய நிலையில் உள்ளது.

4. இவ்வரசியலமைப்பின் மற்றொரு சிறப்பம்சமாகத் திகழ்வது வரையறுக்கப்பட்ட மன்னராட்சி. அரசரின் அதிகாரங்கள் யாவும் அரசியலமைப்பால் வரையறுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கட்கும், அரசியலமைப்பின் மரபுகட்கும் கட்டுப்பட்டவர் அரசர்.

5. இவ்வரசியலமைப்பு ஒருமுக அரசை உருவாக்கி உள்ளது. இங்கு ஒரே அரசாங்கமும் ஒரே சட்டமன்றமும் தான் இருக்கின்றன. ஏனென்றால் லண்டனில் எல்லா அதிகாரங்களையும் ஒன்றாகக் கொண்டுள்ள மத்திய அரசாங்கம் ஒன்றுதான் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வரசாங்கம் உள்ளூர் ஆட்சி நிறுவனங்களை உருவாக்கி இருக்கின்றது. மேலும், அவை அனைத்தும் மத்திய அரசாங்கத்திற்க் கீழ்ப்பட்டவையாகும். இவற்றை எப்பொழுது வேண்டுமானாலும் அரசாங்கம் ரத்து செய்யலாம்.

6. அரசியலமைப்பினக் மற்றொரு சிறப்பு அம்சம் பாராளுமன்றத்தின் முதன்மைத் தன்மையாகும். பாராளுமன்றம் வரம்பற்ற அதிகாரத்தை உடையது. பாராளுமன்றத்தின் முதன்மைத் தன்மையானது இரண்டு கோட்பாடுகளைக் குறிக்கின்றது. முதலாவதாக, பாராளுமன்றம் சட்டங்களை உருவாக்கவும் எச்சட்டத்தையும் திருத்தவும் நீதிமன்றங்களின் முடிவுகளை மாற்றியமைப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கின்றது. இரண்டாவதாக பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கெதிராக வினா எழுப்ப யாருக்கும் அதிகாரம் இல்லை. சட்டமன்றத் துறையான பாராளுமன்றம் தான் இறைமையுடையது. இத்தகைய நிலையை பல நூற்றாண்டு கால வளர்ச்சியின் பயனாக எய்தியுள்ளது.

7. அரசியலமைப்பில் ஏராளமான மரபுகள் இருப்பதும், அவற்றின் முக்கியத்துவமும் அரசியலமைப்பின் ஒரு சிறப்புப் பண்பாகும். அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவிலும் சம்பந்தப்பட்ட மரபுகள் உள்ளன. அம்மரபுகளின் காரணமாகத்தான் இவ்வரசியலமைப்பு எழுதப்படாததாகக் கருதப்படுகிறது.

8. சட்டத்தின் ஆட்சி அரசியலமைப்பின் மற்றொரு சிறப்புப் பண்பு சட்டம் முதன்மையானது என்பதைத் தான் சட்டத்தின் ஆட்சி குறிப்பிடுகின்றது. சட்டத்திங்கு அப்பாற்றபட்டவர் எவருமில்லை. சட்டம் மக்களை பாகுபாடு செய்வதில்லை. எல்லோரும் சட்டத்தின் முன் சமம். எதேச்சதிகாரமாகக் கைது செய்வதும், காவலில் வைப்பதும், தண்டனை அளிப்பதும் சட்ட விரோதமானவை. மக்களுக்கு பல்வேறு அடிப்படை உரிமைகளைச் சட்டத்தின் ஆட்சி அளித்துள்ளது.

9. மிகவும் பிரபலமான அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினைக் குறைந்த அளவில் உபயோகிப்பது இவ்வரசியலமைப்பின் மற்றுமொரு சிறப்புப் பண்பாகும். மாண்டெஸ்க்யூ என்பவர் இங்கிலாந்தின் அரசியலமைப்பு அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை பின்பற்றியிருப்பதாகக் கூறியுள்ளார். அதாவது அரசர் ஆட்சித் துறையாகவும் நீதிமன்றங்கள் நீதித்துறையாகவும் பாராளுமன்றம் சட்டமன்றத்துறையாகவும் பிரிந்து செயல்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இன்றைய நிலையில் இக்கோட்பாடானது மிகவும் குறைந்த அளவிலேயே நடைமுறையில் இருக்கின்றது. அரசாங்கத்தின் மூன்று துறைகளுக்கிடையே அதிகாரப் பிரிவினைக்குப் பதிலாக அதிகார ஒன்றிப்பைத்தான் அங்கு காணமுடிகிறது.

10. பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாகவும், ஆட்சித்துறையில் தலைவராகவும் உள்ள அரசியார், கோட்பாட்டளவில் அனைத்து அதிகாரங்களையும் உடையவர். மன்னரையும் பிரபுக்கள் சபையையும், மக்கள் சபையையும் கொண்ட பாராளுமன்றம் தான் சட்டங்களை உருவாக்குகின்றது. ஆனால் நடைமுறையில் பாராளுமன்றத்தின் இறைமையைச் செயற்படுத்தி அமைச்சர்களை உருவாக்கவும், அழிக்கவும் உண்மையிலேயே அதிகாரம் கொண்டதாக விளங்குவது மக்கள் சபை ஆகும். கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கும் பொழுது இங்கிலாந்து மன்னராட்சியே உடைய நாடாகவும், நடைமுறையில் மக்களாட்சி நாடாகவும் காட்சியளிக்கின்றது.

தேசிய வாழ்விலும் பன்னாட்டு உறவிலும் அன்றாடம் நிகழக்கூடிய மாற்றங்களுக்கு ஏற்ப எப்பொழுதும் வளர்ந்து கொண்டே இருக்கும் இங்கிலாந்து அரசியலமைப்பு மற்ற அரசியலமைப்புகளுக்கு ஒரு முன்னோடியாகும்.

**மரபுகளும் அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான காரணங்களும் (Convention and their Sanctions)**

இங்கிலாந்து அரசியலமைப்பில் மரபுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அரசாங்கம் செயல்படுவதற்குத் தேவையான முக்கிய வீதிகளில் பெரும்பாலனவை மரபுகளேயாகும் அரசியலமைப்பின் மரபுகள் என்றால் அரசியல் நடவடிக்கையின் எழுதப்படாத விதிகள் அல்லது கோட்பாடுகள் ஆகும். அவைகள் சட்டத்தின் மூலமோ, அல்லது நீதிமன்றத் தீர்ப்பின் மூலமோ உருவாக்கப்பட்டவையல்ல. அரசியல் நடவடிக்கையை கட்டுப்படுத்த இவை இரண்டிற்கும் வெளியே உருவாக்கப்பட்டவையாகும் என □ர்மன் பைனர் (Herman Finer) இவற்றிற்கு விளக்கம் கொடுக்கிறார். "அரசியலமைப்பின் மரபுகள்" என டைசி (Dicey) யினால் வர்ணிக்கப்பட்ட இவற்றை அரசியலமைப்பின் பழக்கவழக்கங்கள் என அன்சன் (Anson) அழைக்கிறார். சட்டம் என்ற எலும்புகளுக்கு

சதையாக விளங்குவது மரபுகளாகும். அரசியலமைப்பை அவைகள் செயல்படச் செய்கின்றன. காலத்தின் தேவைக்கு ஏற்ப அரசியலமைப்பில் மாற்றங்கள் ஏற்பட அவைகள் உதவுகின்றன என ஐவர் ஜென்னிங்ஸ் மரபுகளைப் பற்றிக் கூறுகிறார்.

மரபுகளுக்கும் சட்டத்திற்கும் வேறுபாடு உண்டு. சட்டம் சட்டமன்றத்தினால் உருவாக்கப்படுகின்றது. ஆனால் மரபுகள் அப்படி உருவாக்கப்படுவதில்லை. சட்டத்தை நீதிமன்றத்தின் மூலம் அமுலாக்க முடியும். ஆனால் மரபுகளை அப்படி அமுலாக்க முடியாது. மேலும் சட்டம் எளிதில் மாறாது ஆனால் மரகள் மாறிக்கொண்டேயிருக்கும்.

மரபுகளும் பொதுச்சட்ட (Common Law) த்திற்குமிடையே சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உண்டு. இரண்டும் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்டவையல்ல. ஆனால் மரபுகள் நாட்டிலுள்ள பழக்க வழக்கங்களிலிருந்து எழுந்தவை. பொதுச்சட்டம் நீதிமன்றத் தீர்ப்பிலிருந்து எழுந்தவையாகும். மேலும் பொதுச்சட்டத்தை நீதிமன்றத்தின் மூலம் அமுலாக்க முடியும். ஆனால், மரபுகளை அப்படி அமுலாக்க முடியாது.

**முக்கியமான மரபுகள்**

**அ. அரசியைப் பற்றியது**

அரசி அவருடைய சிறப்பு உரிமைகளை பயன்படுத்துவது சம்பந்தமாக பல மரபுகள் தோன்றியுள்ளன. ஆவையாவன, அரசி ஆளவேண்டுமே தவிர நிர்வாகம் செய்யக்கூடாது. அவர் நாட்டின் பெயரளவிலான தலைவியாக விளங்குவதோடு, அமைச்சரவை ஆலோசனைப்படிதான் செயல்பட வேண்டும். அமைச்சரவை கூட்டங்களில் அவர் பங்கு கொள்ளக்கூடாது. காமன்ஸ் சபையில் பெரும்பான்மை கட்சியின் தலைவரை அவர் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும். தலைமை அமைச்சரின் ஆலோசனைப்படி மற்ற அமைச்சர்களை அரசி நியமனம் செய்யவும், அவர்களை பதவியிலிருந்து வெளியேற்றவும் செய்ய வேண்டும். பாராளுமன்றம் இயற்றிய சட்டமுன்வரைவை தள்ளுபடி செய்யக்கூடிய அதிகாரம் (Veto Power) அரசிக்கு உண்டு. எனினும் அவர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது.

**ஆ. அமைச்சரவை பற்றியது**

அமைச்சரவை செயல்படுத்துவதிலும் ஏராளமான மரபுகள் தோன்றியுள்ளன. தலமை அமைச்சர் காமன்ஸ் சபையில் அங்கத்தினராக இருப்பதோடு, அச்சபையின் பெரும்பான்மை கட்சியின் தலைவராகவும் இருக்க வேண்டும் அமைச்சர் எல்லோரும் தலைமை அமைச்சரின் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினரல்லாத ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டால், அவர் 6மாத காலத்திற்குள் பாராளுமன்ற உறுப்பினராகி விட வேண்டும். காமன்ஸ் சபைக்கு எல்லா அமைச்சர்களும் கூட்டுப்பொறுப்பு (Collective Responsibility) உடையவர்கள் ஆவார். கீழ் சபையில் ஒரு அமைச்சர் தோற்கடிக்கப்பட்டாலோ அல்லது ஒரு நம்பிக்கையில்லாத் தீமானம் இயற்றப்பட்டாலோ அமைச்சரவை பதவியை விட்டு விலக வேண்டும். பதவியை விட்டு விலகும் தலைமை அமைச்சருக்கு, காமன்ஸ் சபையை கலைத்து விட்டு புதுத்தேர்தலுக்கு ஆணையிடும்படி அரசிக்குப் பரிந்துரை செய்ய உரிமை உண்டு. அப்பரிந்துரையை அரசி ஏற்றுக் கொள்ளவேண்டும்.

**இ. பாராளுமன்றத்தைப் பற்றியது**

பாராளுமன்றம், வருடத்திற்கு ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டும் பிரபுக்கள் சபை உயர்நீதிமன்றமாகச் செயல்படும்போது 9 சட்ட பிரபுக்கள் மட்டும்தான் நீதிபதிகளாக

அமர்ந்து விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டும். காமன்ஸ் சபையின் அவைத் தலைவர் (Speaker) ஆக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் கட்சி சார்பற்றவராக மாறிவிட வேண்டும். பொதுத்தேர்தலில். அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு போட்டியின்றி அவைத் தலைவராகவும் அவர் விரும்பும் காலம் வரை தேர்ந்தெடுக்கப்படுவார். பாராளுமன்றத்தில் ஒரு சட்டமுன்வரைவு மூன்று வாசிப்பு (Reading) க்குப் பிறகுதான் சட்டமாக இயற்றப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தை அரசி 'சிம்மாசன உரை' (Speech from the Throne) மூலம் தொடங்கி வைக்கிறார். படைச்சட்டம் ஒவ்வொரு ஆண்டும் இயற்றப்பட வேண்டும்.

**ஈ. காமன்வெல்த் நாடுகளைப் பற்றியது**

காமன்வெல்த் நாடுகள் சம்பந்தமாகவும் சில மரபுகள் எழுந்துள்ளன. டொமினியன் அந்தஸ்த்துடைய காமன் வெல்த் நாடுகளுக்கு பிரிட்ஷ் அரசி தான் அரசியாக செயல்படுகிறார். அந்நாடுகளின் ஆலோசனைப்படி அரசி செயல்பட வேண்டும். அந்நாடுகளின் வேண்டுகோளின்றி இங்கிலாந்து பாராளுமன்றம் அந்நாடுகளுக்காக சட்டம் இயற்றக் கூடாது. டொமினியன் அரசாங்கத்தின் பரிந்துரையின் பேரில் அந்நாட்டின் கவர்னர்-ஜெனரலை அரசி நியமனம் செய்கிறார்.

**மரபுகள் மீறப்படாமலிருப்பதற்குள்ள காரணிகள் (Sanctions behind the conventions)**

அரசியலமைப்பின் மரபுகள் சட்டங்கள் அல்ல. நீதிமன்றம் மூலம் அமுலாக்கவும் முடியாது. சட்டத்தை மீறினால் தண்டனை கிடையாது. ஆயினும் இங்கிலாந்து மரபுகள் மீறப்படாமல் முறையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது இதற்கு காரணங்கள் என்ன?

மரபுகள் மீறியவர்கள் குற்ற விசாரணைக்கு (Impeachment) உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்ற பயம் தான் மரபுகள் மீறப்படாமலிருப்பதற்குள்ள காரணம் என சில அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இக்காரணம் ஏற்புடையதன்று. பழங்காலத்தில் குற்ற விசாரணைப்பயம் மரபுகள் மீறப்படாமலிருப்பதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் தற்காலத்தில் பயம் இல்லை. நீண்ட காலமாக குற்றவிசாரணை என்ற அதிகாரம் பயன்படுத்தாமையினால் அவ்வதிகாரம் இன்று மறைந்துவிட்டது என்று கூறலாம். ஏனவே மரபகள் மீறப்படாமலிருக்க குற்றவிசாரணை என்ற பயம் ஒரு காரணமாகக் கருதமுடியாது.

எ.வி.டைசி மரபுகள் மீறப்படாமலிருப்பதற்கு வேறொரு காரணத்தை கூறுகிறார். ஒருவர் மரபை மீறும் பொழுது அவர் சட்டத்தை மீற வேண்டி வருகிறது. சட்டத்ததை மீறும் பொழுது அவர் தண்டனைக்கு ஆளாகிறார். இதை தவிர்ப்பதற்காக மரபுகள் கடைப்பிடிக்க வேணடிய கட்டாயம் அவருக்கு ஏற்படுகிறது என டைசி கூறி எடுத்துக்காட்டையும் சுட்டிக் காட்டுகிறார். வருடத்திற்கு ஒரு முறையாவது பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்பது ஒரு மரபாகும். அப்படிக் கூட்டினால்தான் படைச் சட்டத்தையும், வரவுசெலவுத் திட்டத்தையும் இயற்ற முடியும். இம்மரபு மீறப்பட்டு இரண்டு வருடத்திற்கு பாராளுமன்றம் கூட்டப்படவில்லை எனில் படைச் சட்த்தை இயற்ற முடியாது. ஏனவே படைகளை வைத்திருப்பது சட்ட விரோதமாகும். இதேபோன்று வரவு செலவுத் திட்டம் இயற்றப்படவில்லையெனில் பொது பணத்தை செலவழிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை செலவழிப்பது சட்ட விரோதச் செயலாகும். இந்த மாதிரியான தொல்லைகள் வருடத்திற்கு ஒரு முறை பாராளுமன்றத்தைக்

கூட்டுவதன் மூலம் தவிர்க்க முடிகிறது. ஏனவேதான் வருடத்திற்கு ஒரு முறையாவது பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்ற மரபு மீறாபடாமல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பது டைசியின் வாதமாகும். ஆனால் டைசியன் வாதம் வலுவானதல்ல. ஒரு தடவை பாராளுமன்றம் கூடி ஐந்து ஆண்டிற்கு படைச்சட்டத்தையும் வரவு செலவு திட்டத்தையும் இயற்றிக் கொடுக்கிறது என வைத்துக்கொள்வோம். அப்படியாயின் பாராளுமன்றத்தை அடுத்து ஐந்து ஆண்டுகளுக்கு கூட்ட வேண்டிய அவசியமில்லை. வருடத்திற்கு ஒரு முறையாவது பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்ற மரபு இங்கு மீறப்படுகிறது. சட்டம் எதுவும் மீறப்படவில்லை. எனவே டைசியின் வாதம் ஏற்புடையதன்று.

மரபுகள் மீறப்படாமல் கடைப்பிடிப்பதற்குள்ள உண்மையான காரணம் பேராசிரியர் ஆக் (Prof.Ogg) கூறுவதைப் போல், பொது மக்களின் கருத்தே (Public Opinion) ஆகும். ஆட்சியிலிருப்போர் மரபுகள் மீறப்படாமல் கடைப்பிடிக்க வேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்கின்றார்கள். அவ்வெதிர்பார்ப்பிற்கு மாறாக ஆட்சியிலிப்போர் செயல்பட்டால் அடுத்த பொதுத்தேர்தலில் மக்கள் அவர்களை தூக்கி எறிந்து விடுவார்கள். இந்த பயம் தான் மரபுகளை முறையாக கடைப்பிடிக்க ஆட்சியிலிருப்போரை தூண்டும் சக்தி காமன்ஸ் சபையில் தோற்கடிக்கப்பட்ட அமைச்சரவை உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டுமென பொது மக்கள் எதிர்பார்கின்றார்கள். அப்படி ராஜினாமா செய்யவில்லையெனில் அந்தக் கட்சியை அடுத்த பொதுத் தேர்தலில் பொது மக்கள் தோற்கடித்து விடுவார்கள்.

**இங்கிலாந்தில் அரசியலமைப்பு உண்டா என்ற சர்ச்சை**
**(Controversy regarding the existence of English Constitution)**

இங்கிலாந்தில் உண்மையில் அரசியலமைப்பு என்று ஒன்று உண்டா என்ற சர்ச்சை அறிஞர்களிடையே பல காலமாக காணப்படுகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த தாமஸ் பெயின் (Thomas paine) னும் பிரான்சைச் சேர்ந்த அலெக்சி டிடாக்விலும் (Alexie De Tocque ville) இந்த சர்ச்சையில் பங்கு பெற்றவர்களில் முக்கியமானவர்கள் ஆவார்கள். இங்கிலாந்தில் மரபின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு அரசியலமைப்பு உண்டு என்ற எட்மண்ட் பர்க் (Edumund Burke) வாதத்தை இவ்விருவரும் கடுமையாக எதிர்கின்றனர். இங்கிலாந்து அரசியலமைப்பை ஒரு ஆவணத்தில் காட்டமுடியாததாகையினால் இங்கிலாந்து அரசியலமைப்பு என்று ஒன்று இல்லை.∴ இருக்கவும் இல்லை என பெயின் வாதிடுகிறார்.

ஒரு தலைமுறைக்குப் பிறகு டி.டாக்வில் பெயினுடைய வாதத்தை மீண்டும் வலியுறுத்தினர். இங்கிலாந்து அரசியலமைப்புச் சட்டத்திற்கும், சாதாரண சட்டத்திற்கும் எவ்வித வேறுபாடும் இல்லாமையினாலும், அரசியலமைப்புச் சட்டத்தை சாதாரணச் சட்டத்தைத் திருத்தும் முறையிலேயே திருத்த முடிவதினாலும்; இங்கிலாந்து அரசியலமைப்பே இல்லை என்பது டி. டாக்வில்லுடைய வாதமாகும்.

இவ்விருவருடைய வாதங்களையும், பிரிட்டிஷ் அரசியலமைப்பின் உள் உறுப்புகளை ஆராய்ந்து பார்த்தால், ஏற்க முடியாது என்பது புலனாகும். இங்கிலாந்து அரசியலமைப்பு ஆறுவிதமான உள் உறுப்புகளை கொண்டு விளங்குகிறது. ஆவையாவன 1) மகாசாசனம், உரிமை விண்ணப்பம் போன்ற சாசனங்கள் 2) பாராளுமன்றம் இயற்றிய முக்கியமான சட்டங்கள் 3) முக்கியமான நீதிமன்றத் தீர்ப்புகள் 4) பொதுச்சட்டம் 5) மரபுகளும் வழக்காறுகளும். 6) சட்ட வல்லுநர்கள் அறிஞர்கள் ஆகியோரின் நூல்கள்.

மேற்கூறியதிலிருந்து அரசியலமைப்பு முறையான ஒன்றை ஆவணம் அல்ல. அது ஆதாரங்களின் மொத்த தொகுப்பே ஆகும் என்பது புலனாகும். பெயின் டிடாக்வில் ஆகியோரின் காலத்திற்கு முன்பிருந்தே அது முறையாக வளர்ந்து வந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. பெயின் டிடாக்வில் ஆகியோரின் கருத்துப்படியுள்ள அரசியலமைப்பு இங்கிலாந்தில் இல்லை என்பது உண்மையே. ஆயினும் இங்கிலாந்த மக்களின் கருத்துக்கும் அறிவிற்கும் ஒத்த ஒரு அரசியலமைப்பின் வளர்ச்சி மக்களாட்சி வளர்சியுடன் ஒன்றிக் கிடக்கிறது என்ற உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை. மன்ரோ (Munro) கூறுவதைப் போல், அது ஒரு ஆவணம் அல்ல ஆனால் நூற்றுக்கணக்கானவை. ஒரு மூலாதாரத்திலிருந்து தோன்றியதல்ல பல மூலாதாரங்கள் உண்டு. அது அறிவு, சந்தர்ப்பம் ஆகியவற்றின் குழந்தையாகும்.

## 2.4 ஆட்சித்துறை

இங்கிலாந்தின் அரசியலமைப்பு பாராளுமன்ற முறையிலான ஆட்சித் துறையைக் கொண்டுள்ளது. இவ்வகையான ஆட்சித்துறையை பெயரளவிலானதென்றும், உண்மையிலானதென்றும், இருவகையாகப் பிரிக்கலாம். பெயரளவிலான ஆட்சித்துறை பெயரளவில் மட்டுமே காணப்படும். இதற்கு உண்மையான அதிகாரமேதும் இருக்காது. அதிகாரம் யாவும் உண்மையான ஆட்சித்துறையிடம் உறையும். உண்மையான ஆட்சித்துறை தனது அதிகாரங்களைப் பெயரளவிலான ஆட்சித்துறையின் சார்பில் செயற்படுத்தும். இவ்வகையிலான ஆட்சித்துறையானது பாராளுமன்றத்தினின்று தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாக இருக்கும். மேலும் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்துவிட்டால் இது பதவியிலிருந்து விலகவேண்டும். எனவே தான் இதனை பாராளுமன்ற முறையிலான ஆட்சித்துறை என்று அழைக்கிறோம். பொறுப்புடைய ஆட்சித்துறை என்றும் இதனைக் கூறலாம். அமைச்சர் குழு முறையிலான அரசாங்கம் என்பதும் இதன் பெயராகும். ஏனெனில் அமைச்சர் குழு தான் உண்மையான ஆட்சித்துறையாக இருக்கின்றது. கோட்பாட்டளவில் இன்றும் சர்வ வல்லமை படைத்த ஆட்சித் துறைத்தலைவர் அரசரே ஆவார். சட்டரீதியாக இவரை அரசாங்கத்தின் தலைவர் என்று அழைக்கலாம். ஆட்சித்துறை அதிகாரம் முழுவதையும் அரசரது பெயரால் அமைச்சர் குழு செயற்படுத்துகின்றது. அதிகாரத்தின் அடையாளமான மணிமுடியை (Crown) தனிநபரான மன்னர் அணிகின்றார். ஆனால் இப்பொழுது அம்மணி முடியானது முடிமன்றம் (Crown) என்ற நிறுவனமாகிவிட்டது. மன்னருக்கும் இம்முடிமன்றத்திற்கும் இடையே வேறுபாடுள்ளது. இங்கிலாந்தின் சிறந்த மன்னராட்சி பண்பு இதனுள் அடங்கியிருக்கிறது. இங்கிலாந்தில் அரசர் ஆள்கிறார். ஆனால் நிர்வாகம் செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. மன்னர் ஒரு பொம்மையைப் போன்றவராவார். இங்கிலாந்தில் அமைச்சர் குழு அரசாங்கத்தையுடைய வரம்பிற்குட்பட்ட மன்னராட்சி தான் செயல்படுகிறது.

## 2.5 மன்னராட்சி

### அரசர்க்கு "முடிமன்ற"த்திற்கும் உள்ள வேற்றுமை

இங்கிலாந்தில் காணப்படும் ஆட்சி நிறுவனங்களில் மிகப்பழமையானவற்றில் ஒன்று மன்னராட்சி. அரசாள்பவர் மன்னராகவோ அல்லது அரசியாகவோ இருக்கலாம். ஆரம்பகாலத்தில் காணப்பட்ட மன்னர்கள் படை பலத்தால் ஆட்சி நடத்தினர். காலப்போக்கில் மன்னரது அதிகாரம் நாட்டின் பொதுச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக ஆயிற்று. இதனைத் தொடர்ந்து மன்னரது சிறப்புரிமை அதிகாரங்கள்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

4. அரசருக்கும் முடிமன்றத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

"முடிமன்றம்" (Crown) என்ற நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. தொன்றுதொட்டு மன்னர் கொண்டிருந்த சிறப்புரிமை அதிகாரங்களை அவர்கள் தமது விருப்பத்திற்கேற்ப பயன்படுத்தி வந்தனர். 'முடிமன்றம்' என்ற சொல் அரசர் அல்லது அரசியாரையும் பாராளுமன்றத்தையும் குறிக்கின்றது. அரசியாரும் பாராளுமன்றமும் என்றால், அரசியாரும் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் என்று பொருள். 'முடிமன்றம்' என்பது ஒரு நிறுவனம் மட்டுமே. அது ஒரு நபரைக் குறிப்பது அல்ல. 'முடிமன்றம்' என்பது பதவியையும் அரசியார் என்பது அப்பதவி வகிக்கும் நபரையும் குறிக்கின்றது. ஓர் அரசனோ அல்லது அரசியோ உயிர் துறக்கலாம். ஆனால் 'முடிமன்றம்' என்பது மறையாது. அரசர் மறைந்து விட்டார். அரசர் நீடுழி வாழட்டும் என்ற கூற்று இதனைத் தெளிவாக்குகிறது.

## 2.6 அரசரின் நிலை

மரபுகளினின்றும், சட்டங்களினின்றும் பெறப்பட்டவை தான் மன்னரது நிலையும், அதிகாரங்களும். அரசர் என்ற காரணத்தால் ஆரம்பத்தில் அதிகாரங்கள் யாவும் அவரிடமே இருந்தன. ஆனால் 1688 ஆண்டிற்கும், 1911 ஆம் ஆண்டிற்கும் இடையில் மன்னரிடம் இருந்த அரசியல் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் யாவும் படிப்படியாகப் பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டன. தற்போது மன்னராட்சி சம்பந்தப்பட்ட விதிகள் யாவும் மரபுகளாலோ அல்லது பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களாலோ நிர்ணயிக்கப்படுகின்றன. சட்டங்கள், மரபுகள் ஆகியவற்றின் தொகுப்பான அரசியலமைப்பு அரசின் நிலையையம், அதிகாரங்களையும் வரையறை செய்கின்றது. ஆகவே தான் இதனை வரையறை செய்யப்பட்ட மன்னராட்சி என்கிறோம்.

1689 ஆம் அண்டு பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட உரிமைச்சட்டம் (Bill of Rights) அரசுரிமையின் தகுதிகளை நிர்ணயித்துள்ளது. மன்னர் ரோமன் கத்தோலிக்கராக இருக்கக்கூடாதென்பதும், அவர் ரோமன் கத்தோலிக்க மதத்தினருடன் திருமண உறவு கொள்ளக் கூடாதென்பதும் இச்சட்டத்தில் காணப்படும் முக்கியமான நிபந்தனையாகும். அரசரின் சட்டமும் அரியாசனத்தில் அமரும் உரிமையும் 1701 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வாரிசுரிமைச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அரியாசன உரிமை வின்ட்சர் பரம்பரைக்கு (House of Windsor) அளிக்கப்பட்டிருக்கிறது. மன்னரின் மூத்த மகவிற்குத்தான் அவ்வுரிமை என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மூத்த மகவு பெண்ணாகவும், அடுத்த மகவு ஆணாகவும் இருப்பின் அரசரிமை ஆண்மகவிற்குத்தான் உரியது. அரசர் அயல்நாட்டுப் பயணம் மேற்கொள்ளும் பொழுதும் உடல்நலமற்றிருக்கும் பொழுதும் ஆலோசகர் நியமிக்கப்படலாம்.

மன்னனின் மறைவிற்கும் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்திற்கும் தொடர்பில்லையென்று 1867 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (Representation of the People Act) கூறுகின்றது. இதன் பொருள் என்னவெனில் அரசர் மறைந்தவுடன் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டியதில்லை. அரசரின் மறைவின் காரணமாக அரசின் கீழ் பதவி வகிப்போரின் பதவிக்காலம் பாதிக்கப்பட வேண்டியதில்லை என்று 1901 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மன்னர் மறைவு சம்பந்தப்பட்ட சட்டம் (Demise of the Crown Act) கூறுகின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இதற்கு நேர்மாறாக நடக்கின்றது. புதிய ஜனாதிபதி பதவி ஏற்றால் அதனைத் தொடர்ந்து பல அதிகாரிகளும் மாறுவர்.

சட்டப்பூர்வமாகப் பார்க்குமிடத்து அரசின் தலைவர் மன்னராவார். அரசின்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

5. இங்கிலாந்து அரசரின் சிறப்புரிமைகள் யாவை?

அதிகாரங்கள் யாவும் அவரிடம் இருக்கின்றன. ஆனால் நடைமுறையில் இவ்வதிகாரங்கள் அனைத்தையும் மன்னரது சார்பில் பல நபர்களும், நிறுவனங்களும் பயன்படுத்துகின்றனர். இங்ஙனம் அதிகாரங்கள் பயன்படுத்தப்படும் பொழுது மன்னருக்குப் பொறுப்பேதுமில்லை. மன்னர் நாட்டிலுள்ள திருச்சபையின் தலைவராகவும் இருக்கின்றார். இது பல்லாண்டு காலமாகக் காணக்கூடிய நிலை. காமன்வெல்த்தின் அலங்காரத் தலைவர் மன்னராவார்.

**அரசருக்குள்ள சிறப்புரிமைகள் :**

சட்டத்திற்கப்பாற்பட்ட மன்னரை எந்த நீதிமன்றத்தின் முன்பும் கொணர முடியாது. இவரைக் கைது செய்யவோ விசாரணை செய்யவோ முடியாது. சட்டத்தையும், நீதியையும் வழங்குபவர் அரசராவார்.

பண்டைய அரசர்கள் தமது செலவினங்கள் யாவற்றையம் தமது நிலமானிய வருவாயிலிருந்து சரிக்கட்டினர். காலப்போக்கில் இது போதாது என்ற நிலை எழுந்தபோது பாராளுமன்றம் அரசருக்கு உதவுவதற்காகப் புதிய வரிகளை அனுமதித்தது. இதுவும் போதாது என்ற நிலை எழுந்தது. அரச குடும்பத்தின் செலவினங்களை அரசாங்கத்தின் இதர செலவினங்களினின்று பிரிப்பதற்கான முடிவு 1630 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. மூன்றாவது வில்லியத்தின் ஆட்சிக்காலத்தில் (1690-1702) அரசரின் வருவாய் 'அரசருக்கான மானியம்' (Civil List) என அழைக்கப்படலாயிற்று. தற்பொழுது செலவுத்தொகையில் அரச குடும்பத்தின் அங்கத்தினருக்குப் பாராளுமன்றத்தால் அளிக்கப்படும் செலவுப்படியும் அடங்கும். ஓர் அரசர் அரியாசனத்தில் அமர்ந்தவுடன் ஒரு தேர்வுக்குழு மன்னர் மானியத்தைப் பரிசீலிக்கின்றது. இக்குழுவின் சிபாரிசுகளும் ஒரு சட்டத்தில் சேர்க்கப்படுகின்றன. அரச குடும்பத்தின் இதர அங்கத்தினருக்கும் ஊதியம் அளிக்கப்படுகின்றது. நேரடியாகத் தொகு நிதியினின்று (Consolidated Fund) எடுக்கப்படும் இத்தொகைகளை ஆண்டுதோறும் பாராளுமன்றம் பரிசீலிக்க வேண்டியதில்லை. தற்பொழுது எலிசபெத் அரசியார் தமது வருமானத்திற்கான வரியைச் செலுத்தி வருகிறார்.

**அரசரின் அதிகாரங்கள்**

அரசர் அரசாங்கத்தின் மூன்று துறைகளையும் சார்ந்த அதிகாரங்களைப் பெற்றுள்ளார். அவர் பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாவார். அமைச்சர்கள் யாவரும் அவரது அமைச்சர்கள். அவரது நீதிபதிகள் நீதி நிர்வாகம் செய்கின்றனர்.

ஆரம்பகாலத்தில் அரசரின் அதிகாரங்கள் யாவும் நாட்டின் பொதுச் சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தன. காலப்போக்கில் இவை சிறப்பதிகாரங்கள் என அறியப்படலாயின. பிற மனிதர்களினின்று மாறுபட்ட விசேட நிலையில் அரசன் இருப்பதனாலும் மரபுச் சட்டத்தின் வாயிலாகவும் அரசபதவியின் அடிப்படையிலும் தான் சிறப்பதிகாரங்கள் அரசர்க்குக் கிடைக்கப் பெற்றன என்று பிளாக்ஸ்டன் கூறுகின்றார். தமது மன்னர்க்கு அஷர் பிரபு (Lord Usher) அளித்த அறிவுரையை இத்தருணத்தில் எடுத்துரைப்பது பொருத்தமாகும். அதாவது காமன்ஸ் சபையின் பெரும்பான்மை ஆதரவுடைய அமைச்சரது ஆலோசனைக்கேற்ப மன்னர் செயல்படும் பொழுது அவர் அரசியலமைப்பிற்குப் புறம்பாகச் செயல்பட முடியாது. அமைச்சர்களின் பொறுப்பு அரச பதவிக்கும் பாதுகாப்பு அளிக்கின்றது. இப்பொறுப்பில்லாவிடில் அடிக்கடி வீசும் அரசியற் சுழல்காற்றில் அரியாசனம் நிலைக்காது. அரசர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தும் பொழுது எழுதப்பட்ட ஆணையுரிமையைப் பெறவேண்டும். இங்ஙனம் செய்தால்தான் அமைச்சரைக் கலந்தாலோசிக்கவும், அரசரின் நடவடிக்கைகட்கு அவரைப்

பொறுப்புடையவராகவும் முடியும். பின்வருபவை அரசர் விடுக்கும் சில முக்கியமான ஆணையுரிமைகள்.

1. மன்றக்கூட்ட ஆணைகள் **(Orders-in-Council)** : இவ்வாணைகள் பிரிவி கவுன்சிலால் அதன் சம்மதத்தோடு இடப்படுகின்றன. இவ்வாணைகட்கான விண்ணப்பத்தை அமைச்சரொருவர் பிரிவிக் கவுன்சிலின் தலைவருக்குக் கொடுக்க வேண்டும். குடியேற்ற நாடொன்றின் அரசாங்கத்தை மாற்றுவதற்காகவும், புதிய பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்காகவும் இவ்வாணைகள் அளிக்கப்படுகின்றன.

2. பிரகடனங்கள் **(Proclamations)** : போர் பிரகடனம், சமாதான அறிவிப்பு, பாராளுமன்றத்தைக் கூட்டுதல், தற்காலிகமாகக் கலைத்தல் ஆகியவை பிரகனடங்களால் அறிவிக்கப்படுகின்றன.

3. தனியுரிமை அரசுப் பட்டயம் **(Letters Patent)** : பாராளுமன்றத்தை துவங்குவதற்கான அதிகாரம், நீதிபதிகள், பிரபுக்கள் ஆகியோரின் நியமனம், மசோதாக்களுக்கு ஆமோதிப்பு அளித்தல் ஆகியவை தனியுரிமை அரசுப்பட்டயங்களால் கவனிக்கப்படுகின்றன. அமைச்சரொருவர் மேற்கையொப்பம் இட்ட அத்தாட்சிப் பத்திரத்தின் அடிப்படையில் தான் தனியுரிமை அரசுப்பட்டயம் கொடுக்கப்பட முடியும்.

அத்தாட்சிப் பத்திரம் **(Sign Manual Warrant)** : சில குறிப்பிட்ட நடவடிக்கைகட்கு அரசரின் ஆமோதிப்பைத் தெரிவிப்பவை இவ்வத்தாட்சிப் பத்திரங்கள். அதிகாரியொருவரை நியமித்தல், நகரங்கட்குப் பட்டயம் அளித்தல், குடியேற்ற நாட்டு ஆளுநருக்கு கட்டளைகள் அளித்தல், நாட்டில் அரசர் இல்லாத பொழுதும் அவர் சுகவீனமுற்றிருக்கும் பொழுதும் ஆலோசகர்களை நியமித்தல் போன்றவற்றிற்கு இப்பத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொறுப்புள்ள அமைச்சர்கள் இப்பத்திரங்களில் மேற்கையொப்பம் இடவேண்டும்.

அரசர்க்குரிய அதிகாரங்கள் அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகட்கும், நாட்டுவாழ்க்கைக்கும் தொடர்புடையவையாகும். இவ்வதிகாரங்களை ஆட்சித்துறை, சட்டமன்றத்துறை, நீதித்துறை ஆகிய துறைகள் சம்பந்தப்பட்டவையென்றும் அலங்காரப் பணிகள், சமயம் போன்றவைகள் சம்பந்தப்பட்டவையென்றும், இதர அதிகாரங்களென்றும் வகைப்படுத்தலாம்.

## 2.7 ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் :

### 2.7.1 தலைமை அமைச்சர், அமைச்சர்கள் ஆகியோரை நியமித்தல் :

ஆட்சித்துறைத் தலைவர் என்ற காரணத்தால் அரசியார் பல நியமனங்களை செய்யவேண்டும். இவருடைய நியமனங்களில் குறிப்பிடத்தக்கதான தலைமை அமைச்சரை நியமிப்பதில் அரசியார் மரபுகட்குக் கட்டுப்பட்டவர். இதில் தன் விருப்பத்துக்கு அதிக இடமில்லை. காமன்ஸ் சபையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைவரைத் தலைமை அமைச்சராக நியமிப்பது மரபு. காமன்ஸ் சபையில் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டவுடனும் தலைமை அமைச்சர் ராஜினமா செய்யும்பொழுதும் அரசியார் எதிர்க்கட்சித் தலைவரை அழைப்பார். அசாதாரண வேலைகளில் நியமனம் செய்வதற்கு முன்னர் அரசியார் யாரை வேண்டுமென்றாலும் கலந்தாலோசிக்கலாம். சாதாரணமாக அரசின் கண்களாகவும் காதுகளாகவும் திகழும் தன் சொந்தச் செயலாளரை அவர் கலந்தாலோசிப்பது வழக்கம்.

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

6. இங்கிலாந்து அரசரின் ஆட்சித்துறை அதிகாரங்களை வரையறு.

அமைச்சர்கள் மன்னரால் தேர்வு செய்யப்பட்டு அவருக்கு மட்டும் பொறுப்புடன் இருந்த நாட்களும் இருந்தன. (1831-ஆம் ஆண்டினின்று அமைச்சர்களைத் தேர்வு

செய்து, அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பு தலைமை அமைச்சருடையதாயிற்று). தலைமை அமைச்சர் தாம் தேர்வு செய்துள்ள அமைச்சர்களின் பெயர்ப்பட்டியலை மன்னருக்குச் சமர்ப்பித்து அவருடன் கலந்துரையாட வேண்டும் என்பது மரபு. ஒரு குறிப்பிட்ட நியமனம் செய்யப்பட வேண்டும் என்று அரசியார் வற்புறுத்த முடியாது. அமைச்சர்களைத் தேர்வு செய்வது பிரதம அமைச்சரெனினும் அவர்களை நியமிப்பது அரசியாராகும். இது ஒரு பழக்கமேயன்றி வேறல்ல.

அரசாங்கத்தின் அதிகாரிகள் யாவரும் அரசியாரின் அதிகாரிகள். இவர்களை நியமிப்பவர் அரசியார். நடைமுறையில் நியமனங்கள் உண்மையில் குடிமுறைப் பணியாளர் தொகுதி வாரியத்தால் செய்யப்படுகின்றன. ஆனால் இவ்வாரியத்தின் இந்தச் செயல்கள் அரசியின் பெயரில் செயல்படுகின்றன.

நியமனம் செய்யும் அதிகாரத்துடன் இணைந்தது பதவியினின்று விலக்கும் அதிகாரம். அரசியார் ஒரு அரசாங்கத்தைப் பதவியினின்று அகற்றலாம். தலைமை அமைச்சரைப் பதவியினின்று அகற்றுதல்தான் அரசாங்கத்தை அகற்றுதல் என்பதாகும். 1783ஆம் அண்டிற்கு பின்னர் எந்த அரசாங்கமும் இப்படி பதவியினின்று அகற்றப்படவில்லை. இவ்வதிகாரம் தெளிவற்றது. அரசர் இவ்வதிகாரத்தை மிக்க கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். தமது செயலுக்கு வாக்காளரின் ஆதரவு இருக்கிறதா என்று அரசர் பார்க்க வேண்டும். உயர் அதிகாரிகள் யாவரும் அரசரின் விருப்பக்காலத்தில் பதவி வகிப்பர். அதுதான் கோட்பாடு. ஆனால் நடைமுறையில் அவர்களது பணி சம்பந்தப்பட்ட விதிகளைப் பொறுத்தது; நிரந்தரமானது.

### 2.7.2 படைத்துறை, போர், சமாதானம், அயல்நாட்டுறவு சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்:

ஆட்சித்துறைத் தலைவர் என்ற காரணத்தால் அரசியாருக்கு படைத்துறை, அயல்நாட்டுறவு போன்றவை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் இருக்கின்றன. அரசியார் முப்படைகளின் தளபதியாவார். அயல்நாட்டு உறவும் பன்னாட்டு ஒப்பந்தங்கள் செய்தலும் இவரது அதிகாரங்கள். நடைமுறையில் இப்பணிகளைச் செய்வது தலைமை அமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும் வெளி விவகார அலுவலகமுமாகும்.

## 2.8 சட்டமன்றத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் :

### 2.8.1 பாராளுமன்றம் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் :

பாராளுமன்றத்தைக் கூட்டுவதும், தற்காலிகமாக ஒத்திவைப்பதும், கலைத்துவிடுவதும் அரசியாராகும். ஆனால் இவற்றைச் செய்வதற்கு முன்னர் சரியான ஆலோசனையைத் தலைமை அமைச்சர் அரசியார்க்கு வழங்குகின்றார். புதிய பாராளுமன்றத்தின் முதற் கூட்டத் தொடரும் அரசியாரின் பேருரையுடன் துவங்குகின்றது. பிரபுக்கள் சபையில் கூடும் காமன்ஸ் சபையினர் முன் அரசியார் நிகழ்த்தும் உரையைத் தலைமை அமைச்சர் தயாரிக்கின்றார்.

பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுமாறு அரசிக்குத் தலைமை அமைச்சர் ஆலோசனை வழங்கிய போதிலும் பின் குறிப்பிடும் மூன்றில் ஏதாவதொரு காரணத்திற்காக அரசியார் பாராளுமன்றத்தைக் கலைக்க மறுக்கலாம். அதாவது பதவியிலிருக்கும் பாராளுமன்றம் தொடர்ந்து பணியாற்றக் கூடிய ஆற்றலும் வலிமையும் கொண்டிருந்தால்; அல்லது ஒரு பொதுத் தேர்தல் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்ற சூழ்நிலையிலிருந்தால் அல்லது தேவைப்பட்ட பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை நடத்திச் செல்லக் கூடிய தலைமை அமைச்சர் கிடைப்பார் என்ற நிலையிலிருந்தால்

அரசியார் பாராளுமன்றத்தைக் கலைக்க மறுக்கலாம்.

### 2.8.2 மசோதாக்களுக்கு ஆமோதிப்பு அளித்தல் :

அரசியும் பாராளுமன்றமும் (Queen-in-Parliament) என்பது அரசாங்கத்தின் சட்டமியற்றும் பகுதியில் அரசியும் உண்டு என்பதைக் குறிக்கின்றது. பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட மசோதாக்கள் சட்டங்களாவதற்கு அரசியாரின் ஆமோதிப்பைப் பெற வேண்டும். மசோதாக்களுக்கு ஆமோதிப்பு அளிப்பதென்பது இன்று தானாக நடக்கின்றது. மசோதாக்களை அரசியார் நேரடியாக ஆமோதிக்கலாம் அல்லது தமது ஆமோதிப்பை அறிவிப்பதற்காக ஆணையாளர்களை நியமிக்கலாம். மசோதாக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் அதிகாரம் அரசிக்கு உண்டு. நடைமுறையில் இவ்வதிகாரம் பயன்படுத்தப்படுவதில்லை. இவ்வதிகாரத்தைக் கடைசியாகப் பயன்படுத்தியவர் ஆன் (Queen Anne 1702 – 1714) என்ற அரசியாராவார்.

### 2.8.3 பிரபுக்களை நியமித்தல் :

பரம்பரைப் பிரபுக்களும், ஆயுட்கால பிரபுக்களும் நியமிக்கப்படுகின்றனர். தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப அரசியார் பிரபுக்களை நியமிக்கின்றார். நான்கு காரணிகளில் ஏதாவதொன்றிற்காகப் பிரபுக்கள் நியமிக்கப்படுகின்றனர். முதலாவதாகப் பொதுச் சேவைக்காக நபர்களை கவுரவிப்பதற்காக இவ்வதிகாரம் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டாவதாக, ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்குப் பிரபுக்கள் சபையில் அதிகப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக இது பயன்படுத்தப்படலாம். மூன்றாவதாக, விசேஷத் தேர்ச்சியுடையவர்கள் பிரபுக்கள் சபையின் நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்காகவும் இதைப் பயன்படுத்தலாம். நான்காவதாக, இரு சபைகளிடையே எழக்கூடிய முட்டுக்கட்டைகளைத் தவிர்ப்பதற்காகவும் பிரபுக்கள் உருவாக்கப்படலாம். நான்காவது காரணம் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆன் அரசியார் 1711 ஆம் ஆண்டு இவ்வதிகாரத்தை பயன்படுத்தி 12 பிரபுக்களை உருவாக்கிப் பிரபுக்கள் சபையில் உட்ரெக்ட் ஒப்பந்தம் (Treaty of Utrecht) நிறைவேற்றப்பட வழி வகுத்தார். 1882 ஆம்ஆண்டும் 1911 ஆம் ஆண்டும் பிரபுக்கள் சபையைக் காமன்ஸ் சபையின் விருப்பத்திற்குப் பணியவைப்பதற்கு இவ்வதிகாரம் பயன்படுத்தப்படும் என்று அச்சுறுத்தப்பட்டது.

## 2.9 நீதித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் :

நீதியின் உறைவிடம் அரசியாராகும். நீதிபதிகள் இவரால் நியமிக்கப்படுகின்றனர். நீதி இவர் பெயரில் வழங்கப்படுகின்றது. மன்னிப்பளிக்கும் அதிகாரம் அரசிக்குண்டு. இவர் இவ்வதிகாரத்தை உள்துறை அமைச்சரின் ஆலோசனைக்கேற்பப் பயன்படுத்துகின்றார். கருணை மனுக்கள் மீதான முடிவு உள்துறை அமைச்சரால் தான் எடுக்கப்படுகின்றது. இம்முடிவை அரசியார் ஆமோதிக்கின்றார். இவ்விஷயத்தில் அரசியாரின் சொந்தக் கருத்துக்களுக்கு முக்கியத்துவமில்லை.

### அலங்காரப் பணிகள் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் :

பட்டயங்கள், விருதுகள் ஆகியவற்றை அரசியார் வழங்குகின்றார். தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப இவர் பட்டங்களையும் வழங்கி மக்களைக் கவுரவிக்கின்றார். இது சம்பந்தமாக ஆலோசனை வழங்குவதற்கு முன் தலைமை அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரைக் கலந்தாலோசிப்பார். அரசியும் பல பேர்களைச் சிபாரிசு செய்யலாம். பட்டங்களும், விருதுகளும் விலைபேசப்படாமல் இருப்பதற்காகத்தான் இப்பரிசீலனை நடக்கின்றது. சில விருதுகள் அரசியாலேயே வழங்கப்படுகின்றன.

ஆர்டர் ஆஃப் தி கார்ட்டர் (Order of the Garter), ஆர்டர் ஆப் மெரிட் (Order of Merit), ராயல் விக்டோரியன் ஆர்டர் (Royal Victorian Order) ஆகியவை அரசியால் நேரடியாக வழங்கப்படுபவையாகும்.

**சமயம் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் :**

நாட்டின் திருச்சபையின் தலைவர் அரசியார். ஆர்ச் பிஷப்புகள், பிஷப்புகள், டீக்கன்கள் போன்றோரை இவர் நியமிக்கின்றார். இந்நியமனங்கள் செய்யும் பொழுதும் அரசியார் தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்பத்தான் செயல்படுகின்றார்.

**இதர அதிகாரங்கள் :**

பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்காமல் அரசியார் செய்யும் பணிகளின் எண்ணிக்கையை மக்கள் அறிந்தால் அது அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடும் என்று வால்டர் பேஜட் கூறுகின்றார். கூட்டுரிமைக் கழகங்களை உருவாக்குதல், கழகங்களின் அங்கத்தினரை நியமித்தல் ஆகிய பணிகளையும் அரசி செய்கின்றார். இது பொறுப்புள்ள அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப இவ்வதிகாரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

## 2.10 அரசியின் பணிகளும் சேவைகளும் :

அரசியின் சிறப்பதிகாரங்கள் பல அவரிடமிருந்து அகற்றப்பட்டு விட்டன. அவரிடம் எஞ்சியுள்ள அதிகாரங்களையும் அவர் அமைச்சரொருவரின் பொறுப்பில் தான் செயற்படுத்த வேண்டும். தமக்கிருந்த அதிகாரமனைத்தையும் இழந்து விட்டு அரசியலமைப்பிற்கு உட்பட்டவராக அரசர் தற்பொழுது காணப்பட்ட போதிலும் மக்களுக்கு அவரிடமுள்ள மதிப்பு அதிகரித்துள்ளதெனலாம் என்று மாரிசன் பிரபு (Lord Morrison) கூறியுள்ளார். பின்வருபவை அரசி ஆற்றி வரும் பணிகளாகும்.

அரசி தாமாகவே ஒரு அரசாங்கம் அமைக்க வேண்டிய சூழ்நிலை எழலாம். அத்தருணத்தில் அவர் பதவியினின்று விலகும் தலைமை அமைச்சரைக் கலந்தாலோசிக்கலாம். ஆனால் அவர் கொடுக்கும் முடிவு அரசியல் ஆலோசனை அரசியைக் கட்டுப்படுத்தாது. இறுதி முடிவு அரசியையே சாரும். தமது முடிவு அரசியல் சார்புடையதாக இல்லாதவாறு அவர் பார்த்துக்கொள்ள வேண்டும். பிற விஷயங்களில் எல்லாம் அவர் பொறுப்புள்ள அமைச்சர்களின், குறிப்பாகத் தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்பத்தான் செயல்படுவார். அரசரின் நிலையைக் குறிக்கும் 1913-ஆம் அண்டு ஆக்ஸ்வித் பிரபு (Lord Asquith) கூறியது இன்றும் செல்லுபடியாகும். இறுதியில் அரியாசனத்தில் அமர்ந்திருப்பவர் தமது அமைச்சர்களது ஆலோசனையை ஏற்று அதன்படி செயல்படுவார் என்ற இருநூறு ஆண்டுகால மரபை நாம் கொண்டுள்ளோம். அரசர் தமது சொந்த அதிகாரங்களை இழந்திருக்கலாம். அடிக்கடி வீசும் அரசியற் சுழற்காற்றினின்று அரச பதவி பிரிக்கப்பட்டுவிட்டது. அரசரின் நிலை தேசீய வாழ்வின் தொடர்ச்சிக்கு இன்றியமையாத பாதுகாப்பு என்ற பொது நம்பிக்கையும், பல்லாண்டுகளான பழக்கவழக்கங்களும் அரச பதவிக்கு பாதுகாப்பு அளிக்கின்றன.

அமைச்சர்களின் ஆலோசனைக்கேற்பத்தான் அரசி செயற்பட வேண்டுமென்றிருப்பினும் அமைச்சர்கள் எடுக்கும் முடிவுகள் யாவற்றிற்கும் அவர் உடனடியாகத் தமது ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டியதில்லை. அரசருக்கு மூன்று உரிமைகள் உள்ளன என்று வால்டர் பேஜட் கூறுகின்றார். கலந்தாலோசிக்கப்படுதல், ஊக்கமளித்தல், எச்சரித்தல் ஆகிய மூன்றும்தான் இவ்வுரிமைகள் (The right to be consulted, the right to encourage and the right to warn) புத்திக்கூர்மையுடைய

திறமைசாலியான அரசர்க்கு இம்மூன்று உரிமைகளுமே போதுமானவை. அரசியார் தமது சிறப்பதிகாரங்களைப் பயன்படுத்த வெண்டும் என்று தலைமை அமைச்சர் கூறும் பொழுது அதற்கான காரணங்களையும் கூற வேண்டும். அரசாங்கத்தின் கொள்கை சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் அரசியார் கலந்தாலோசிக்கப்படல் வேண்டும்.

தம்மைக் கலந்தாலோசிக்கும் பொழுது தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தை அரசி பெறுகிறார். அரசியின் உயர்வான நிலையினால் பல நன்மைகள் இருப்பதனால் அவருடைய ஆலோசனை முக்கியத்துவம் உடையதாக இருக்கும். அரசியின் நீண்ட கால ஆட்சியில் பல அரசாங்கங்கள் இருந்திருக்கலாம். இரண்டாவது எலிசபெத் அரசியார் இதுவரையில் பல தலைமை அமைச்சர்களின் பல அரசாங்கங்களைத் தம் ஆட்சியல் பார்த்திருக்கிறார். நிலையற்ற அரசாங்கங்களைச் சரிக்கட்டுவது நிலையான பதவி வகிக்கும் மன்னராகும். அமைச்சர்கள் இன்றிருப்பவர் நாளை இரார். ஆனால் அரசர் எப்பொழுதும் மக்கள் நலனை மனதிற்கொண்டு, அரசியலினின்று விலகி அரசாங்கத்தின் நடுநாயகமாகத் திகழ்வார். அரசியலமைப்பிற்கு ஒரு தொடர்ச்சியை அளிப்பவர் அரசர். பொது விவகாரங்களை நன்கறிந்தவர் அரசர் ஒருவரேயாவார். தமது பல்லாண்டு கால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர்கட்கு நல்ல அறிவுரை வழங்க அரசியாரால் இயலும். ஓர் அமைச்சர் தவறான நடவடிக்கை எடுக்கும் பொழுது அதனைத் தடுக்க அரசரின் அனுபவம் பயன்படுகிறது. இதற்கு விளக்கமாக பின்வரும் கற்பனை உரையாடலைக் குறிக்கலாம். இக்கற்பனை உரையாடலை வால்டர் பேஜட் தமது The English Constitution என்ற நூலில் கொடுத்துள்ளார். அரசர் கூறுகின்றார் - "ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் இன்னாரது ஆட்சியின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பார்த்தீரா? நீங்கள் இப்பொழுது செயலாற்ற விரும்பும் கொள்கையின் தீயவிளைவுகளைப் பற்றி அறிய அவை உதவும். இன்றுபோல் அன்று நீங்கள் பொது விஷயங்களில் முக்கிய பங்கு எடுக்கவில்லை. ஆதலால் எல்லா நிகழ்ச்சிகளும் உங்கள் ஞாபகத்தில் இருக்காது. குறிப்பிட்ட நடவடிக்கைகளை நீங்கள் பின்பற்றாதிருத்தல் நன்றெனக் கருதுகிறேன். மேலும் அந்நடவடிக்கைகளில் பங்கு கொண்ட உமது தோழர்களையும் நீர் கலந்தாலோசிக்கலாம். மிகத் தீய விளைவுகளை உருவாக்கிய அத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த முற்படுவது புத்திசாலித்தனமல்ல". 1956 ஆம் ஆண்டு தலைமை அமைச்சராக இருந்த அண்டனி ஈடன் (Anthony Eden) சூயஸ் பகுதியைத்தாக்க திட்டமிட்ட பொழுது அது சரியான நடவடிக்கையல்ல என்று அரசி அறிவுரை வழங்கினார். ஆனால் அவரது அறிவுரை ஏற்கப்படவில்லை. சூயஸைத் தாக்கியதின் விளைவாக அந்நிகழ்ச்சி தலைமை அமைச்சரையும் அவரது அரசாங்கத்தையும் மிகவும் பாதித்தது.

அரசி மிக உயர்ந்த நிலையில் இருப்பதால் பல்வேறு இடங்களினின்று அவருக்குத் தகவல்கள் வருகின்றன. அமைச்சர் குழு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும் அயல்நாட்டுத்துறை அலுவலகச் செய்திகளையும் இவர் ஆராய்கின்றனர். அமைச்சர் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலும் துறைகள் சம்பந்தப்பட்ட கொள்கை முடிவுகளும் முன்னதாகவே அரசியாருக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. பாராளுமன்ற கூட்டத் தொடர் நடக்கும் பொழுது வாரத்திற்கொருமுறை தலைமை அமைச்சர் அரசியை சந்திக்கின்றார். தலைமை அமைச்சர் அயல்நாட்டுத்துறை அமைச்சர், காமன்வெல்த் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆகியோருடன் அரசியார் எப்பொழுதும் கலந்தாலோசிக்கின்றார். காமன்வெல்த்தின் அங்கத்தினரிடமிருந்து தகவல்கள் அரசிக்கு நேரடியாக வருகின்றன.

டொமினியன்களின் ஆளுநர் தலைவர்களும் பிரிட்டன் பிரதிநிதிகளும் அரசிக்கு நேரடியாகத் தகவல்கள் அனுப்புகின்றனர். இங்கிலாந்திற்கு வரும் அயல் நாட்டு தூதுவர்களை இவர் வரவேற்கின்றார். பிரிவி கவுன்சிலின் கூட்டங்கட்கு இவர் தலைமை தாங்குகின்றார். உயர் நிலையிலுள்ள அதிகாரிகள் பலருடனும் கலந்தாலோசிப்பதன் காரணமாகவும் அரசி தகவல்களை பெறுகின்றார். அமைச்சர்கட்கு ஆலோசனை அளிப்பதற்கு இத்தகவல்கள் யாவும் அவருக்கு உதவுகின்றன.

அரசி கட்சி சார்பற்றவராதலால் அவரது கருத்துக்களுக்கு நல்ல மதிப்பு உள்ளது. அரசியல் சார்பாக இவர் பெறவேண்டிய பயனேதுமில்லை. அவர் அரசியல்வாதியுமல்ல. அரசியல்வாதிகளால் கட்டுப்படுத்தப்படுபவருமல்ல. சாதாரண மனிதன் எளிதில் அணுகக்கூடிய நிலையில் அரசியை அரசியலமைப்பு வைத்துள்ளது என்று சர் ஐவர் ஜென்னிங்ஸ் குறிப்பிடுகின்றார். "அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் முட்டாள்களாகாமல் தடுப்பதற்க ஒரு அரசர் அதாவது ஒரு தலைவர் இருப்பது மிக நல்லது" என்று நெவில் சூட் (Nevil Shute) என்பவர் சாதாரண மனிதர் அரசரைப் பற்றி கொண்டுள்ள கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தமது The Far Country என்ற நூலில் எழுதியுள்ளார்.

தனது கல்வி, அறிவு, சமுதாயத்தில் தனக்குள்ள உயர்நிலை, தமது நட்புறவுகள் பொதுவாகத் தன்னை வளர்த்த முறை ஆகியவை காரணமாக அரசியாருக்கு சொந்த விருப்பு வெறுப்புகள் தோன்றலாம். இதன் காரணமாக அவர் முற்றிலும் நடுநிலைமையுள்ளவராக இருப்பார் எனக் கருதமுடியாது.

அரசியார் அளித்த ஆலோசனையை ஏற்ற பின்னரோ அல்லது ஏற்காமலோ அமைச்சர் முடிவெடுத்த பின்னர் காமன்ஸ் சபையின் பெரும்பான்மை ஆதரவுடைய அரசாங்கத்தை முழுமையாக ஆதரிக்க வேண்டியது அரசியின் கடமை. இது பற்றி அஸ்க்வித் (Asquith) கூறுவதாவது இறுதியில் அரியாசனத்தில் இருப்பவர் அவரது அமைச்சர்களின் ஆலோசனைக்கிணங்கவே செயல்படுகின்றார். தனக்கு வரக்கூடிய தகவல்கள் யாவற்றையும் அவர் அமைச்சர்கட்கு அளிக்க வேண்டும். அமைச்சர்கள் தவறான நடவடிக்கை எடுக்க முற்படுகையில் அவர்களை அரசர் எச்சரிக்க வேண்டும். தேவைப்பட்டால் தனக்குச் சரியெனப்படும் மாற்றுவழியையும் அவர் கூறலாம். இங்ஙனம் அளிக்கப்படும் ஆலோசனைகள் மிகுந்த மரியாதையுடன் அமைச்சர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் இறுதியில் அமைச்சர்களது ஆலோசனைக்கேற்பத்தான் அரசர் செயல்படுவார். மன்னருக்குத் தாம் அளிக்கும் ஆலோசனைக்குப் பாராளுமன்றத்திற்கு முழுப் பொறுப்புடையவர்கள் தாமே என்ற உணர்வுடன் அமைச்சர்கள் ஆலோசனை அளிக்கின்றனர்.

அரசியல் கட்சி மூலமாகத்தான் இங்கிலாந்தின் அரசியலமைப்பு செயல்படுகின்றது. எப்பொழுதும் ஒரு கட்சி பெரும்பான்மை பெறும் என கூற இயலாது. சில வேளைகளில் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமற் போகலாம். சிக்கல்கள் ஏற்படும் பொழுது வேற்றுமைகளை அகற்றுவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். இச்சூழ்நிலைகளில் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட அரசியார் கட்சித் தலைவர்களை ஒத்துழைக்குமாறு அவர்கட்கு வேண்டுகோள் விடுக்கலாம். குறிப்பாக ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் எடுத்த முயற்சிகளின் பயனாகத் தான் 1931-ஆம் ஆண்டு கூட்டு அரசாங்கம் நிறுவப்பட்டது. விக்டோரியா அரசியார் எடுத்த முயற்சிகளின் பயனாகத்தான் 1832 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சீர்திருத்த சட்டம் சம்பந்தப்பட்ட

கருத்தொருமிப்பு நிகழ்ந்தது. அயர்லாந்தின் சுய ஆட்சி சம்பந்தப்பட்ட விசயத்தில் கருத்தொருமிப்பு நிகழ்ந்தது. அரசபதவிக்குள்ள கவுரவத்தின் பயனாக நல்ல ஆதரவு கிடைக்கின்றது. இதனால் தான் போர்க்காலத்தில் படையில் சேருவதற்காக விண்ணப்பம் அரசியின் பெயரால் பிறப்பிக்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் நாட்டுத்தலைவருக்கு அயல்நாடுகளில் மிக உயர்ந்த மதிப்பு அளிக்கப்படுகின்றது. அயல்நாட்டுத் தலைவர்களுடன் தனக்குள்ள நேரடித்தொடர்பைப் பயன்படுத்தி நல்ல பன்னாட்டு உறவை நிலைநாட்ட அரசிக்கு இயலும். இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையே காணப்பட்ட சுமூகமான உறவிற்குக் காரணமாக அமைந்தது. 1903 ஆம் ஆண்டு ஏழாவது எட்வர்டு மன்னர் நடத்திய பாரீஸ் விஜயமாகும். அமெரிக்கா இரண்டாவது உலகப்போரில் ஈடுபடுவதற்கு முன் இங்கிலாந்திற்கு உதவியதன் காரணம் இங்கிலாந்தின் மன்னரான ஆறாவது ஜார்ஜ்க்கும் அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்டிற்கும் இடையே காணப்பட்ட நட்புறவாகும். அரசியார் பன்னாட்டு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதற்கு முன்னர் தலைமை அமைச்சரின் அனுமதியைப் பெறவேண்டும்.

அரசியார் ஆற்ற வேண்டிய அலங்காரப் பணிகள் பல உள்ளன. இப்பணிகளை ஆற்றுவதன் மூலம் அரசாங்கத்திற்கு மதிப்பையும் அதன் மீது ஆர்வத்தையும் அவர் உருவாக்குகின்றார். பாராளுமன்றத்தைத் துவக்கி வைத்தல், அயல்நாட்டுத் தலைவர்களை வரவேற்று உபசரித்தல், இங்கிலாந்திலும் அயல்நாடுகளிலும் அரசாங்கம் சம்பந்தப்பட்ட பல்வேறு பணிகளை ஆற்றுதல் ஆகியவை தான் அலங்காரப்பணிகள். அலங்காரப்பணிகள் ஆற்றும் வேளையில் அரசாங்கம் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டுக் காணப்படுகிறது. அரசாங்கம் கவுரவத்துடனும் கவர்ச்சியுடனும் தோற்றமளிக்கிறது. இன்றும் சாதாரண மனிதன் அரசு என்பதை அரசியாகத்தான் கருதுகின்றான். இக்கருத்து தேசிய கீதத்திலும பிரதிபலிக்கப்பட்டுள்ளது. பரம்பரைப் பதவியினாலும், தொன்று தொட்டே ஆரம்பித்த தமது அலங்காரப் பணிகளாலும் அரசியார் அரசுக்கு ஒரு தொடர்ச்சியை அளிக்கின்றார்.

நாட்டுத் தலைவராகவும் நாட்டின் சமயம், நல்வாழ்வு ஆகியவற்றில் முன் மாதிரியாகத் திகழ்ந்து அரசி நாட்டிற்கு ஒருமைப்பாட்டை நல்கி நாட்டை ஒருமைப்படுத்தும் ஒரு சின்னமாக திகழ்கின்றார். மக்களின் பழக்கவழக்கங்கள், அவர்கள் எதிர்காலம் ஆகியவற்றின் பிரதிபலிப்பு அரசியாகும். அவர்களது தேவைகளின் மையமும் அவர்களின் ஒருமைப்பாட்டின் சின்னமும் அவர்களது பிரதிநிதியும் அரசியேயாவார். காமன்வெல்த்தின் தலைவரான அரசி அதன் பிரதிநிதித்துவ நாடுகளின் ஒற்றுமையின் சின்னமாகத் திகழ்கின்றார்.

## 2.11 மன்னராட்சி தேவை

அரசியின் அதிகாரங்களில் பெருமளவு மற்றவர்க்கு மாற்றியளிக்கப்பட்டுள்ள போதிலும் அரசி இன்றும் தேவைப்படுகின்றார். அரசுகள் ஒவ்வொன்றிற்கும் தலைவரொருவர் தேவை. இங்கிலாந்தின் அரசிதான் அந்நாட்டின் தலைவர். இந்திய, அமெரிக்க ஜனாதிபதிகள் ஆற்றும் பல பணிகளை இவரும் ஆற்றுகின்றார். மக்களாட்சி யுகத்திற்குப் பொருந்தாதது மன்னராட்சி என்று கூறுவோரும் உள். ஆனால் இங்கிலாந்தில் காணப்படும் மன்னராட்சி உபயோகமும் மதிப்பும் உடையது.

பரம்பரை அடிப்படையிலான மன்னர் ஆட்சியில் அவர் ஒரு தொடர்ச்சியை அளிக்கின்றார். அரியாசனத்திற்காகத் தேர்தல் இல்லையாதலால் அரசியல் பேரமும் தேவையற்ற செலவினங்களும் தவிர்க்கப்படுகின்றன. மன்னராட்சி அதிக

செலவுடையதல்ல. தேசிய வருமானத்தின் ஒரு சிறிய பகுதிதான் மன்னராட்சிக்கெனச் செலவு செய்யப்படுகின்றது. அரசியல் கட்சிகளுடன் அரசிக்கு தொடர்பில்லாத காரணத்தால் அவர் நடுநிலையுடன் திகழ்கின்றார். அவர் நாட்டின் தலைவராகவும் காமன்வெல்த்தின் தலைவராகவும் கருதப்படுகிறார். அரசிக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவும், மரியாதையும் அமெரிக்க ஜனாதிபதிக்குக் கூடக் கிட்டுவதில்லை எனலாம். அமெரிக்காவில் ஜனாதிபதியின் தேர்தலின் போது ஏறத்தாழ ஒரு பாதி வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதிக்கெதிராக வாக்களிக்கின்றனர் எனலாம். இந்நிலை இங்கிலாந்தில் இல்லை.

இங்கிலாந்தில் மக்கள் பழமையை விரும்புபவர்கள் என்ற காரணத்தால் மன்னராட்சி அங்கு நிலை நிற்கின்றது. இங்கிலாந்தின் மக்கள் பழமையில் ஊறியவர்கள். அரசியற்ற ஒரு அரசியலமைப்பை அவர்களால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. இறுதியாக அரசி தீங்கிழைக்க முடியாது. மக்களுக்கு எதிராகச் செயல்பட முடியாது என்பதால் மன்னராட்சி நீடிப்பதில் தவறில்லை. தீங்கிழைக்க இயலாத, ஆனால் உபயோகமுள்ள நிறுவனம் மன்னராட்சி.

## 2.12 தொகுப்புரை

இங்கிலாந்து அரசியலமைப்பு படிப்படியாக வளர்ச்சிபெற்ற முறையையும், மரபுகள் வழக்காறுகள் ஆகியன எவ்வாறு இங்கிலாந்து அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ளதென்பதையும் அரசியலமைப்பின் சிறப்புத்தன்மைகள் பற்றியும் இப்பாடப்பிரிவிலிருந்து தெரிந்து கொண்டுள்ளோம்.

## 2.13 முக்கிய வார்த்தைகள்

மரபுகள் - மணிமுடி - வழக்காறுகள் - மகாசாசனம் - உரிமைகள் சாசனம்

## 2.14 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

| | | |
|---|---|---|
| கேள்வி எண் 1 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 2:2ல் அறிக |
| கேள்வி எண் 2 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 2:2ல் அறிக |
| கேள்வி எண் 3 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 2:3ல் அறிக |
| கேள்வி எண் 4 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 2:5ல் அறிக |
| கேள்வி எண் 5 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 2:6ல் அறிக |
| கேள்வி எண் 6 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 2:7ல் அறிக |
| கேள்வி எண் 7 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 2:11ல் அறிக |

## 2.15 பார்வை நூல்கள்


1. W. Bagehot, **The English Constitution,** London, Fontana, 1963.
2. J. Blondel, **An Introduction to Comparative Government,** London, Weidenfeld and Nicolson, 1969.
3. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.


**தன்னறிவு சோதனைக் கேள்வி**

7. மன்னராட்சியின் அவசியத்தைக் கூறுக.

4. F.A. Ogg and Zink, **Modern Foreign Governments,** New York, Macmillan, 1964.

## 2.16 மாதிரி வினாக்கள்

1. இங்கிலாந்து அரசியலமைப்பின் வளர்ச்சியைப் பற்றி விளக்குக.
2. இங்கிலாந்து அரசியலமைப்பிற்குரிய ஆதாரக் கூறுகளை விவரிக்கவும்.
3. இங்கிலாந்து அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகளை விளக்குக.

# அலகு - 3

# பிரிட்டனின் அமைச்சர் குழு – தலைமை அமைச்சர் - சட்டமன்றம்

## முன்னுரை

பிரிட்டன் பாராளுமன்றம் பாராளுமன்ற முறை ஆட்சியின் அடிப்படை எனலாம். மக்கள் உரிமைகள் எவ்வாறு பாராளுமன்றத்தால் காக்கப்படுகின்றன, காக்கப்படவேண்டுமென்ற வழிகாட்டலை உலகுக்கு எடுத்துக் கூறியது பாராளுமன்ற முறை ஆட்சித்துறை. பாராளுமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பெறும் அமைச்சரவை, அமைச்சரவையை தலைமை தாங்கி நடத்தி வரும் தலைமை அமைச்சர் பற்றியும் இதில் விளக்கப்பட்டுள்ளது. ஈரவை கொண்ட பாராளுமன்றத்தின் அமைப்பு, அதிகாரங்கள், சட்டம் உருவாக்கப்படும் செயல்முறை ஆகியன இப்பாடப்பிரிவில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

பாராளுமன்ற முறை ஆட்சி பற்றி விளக்குதல்

மன்னரின் நிலை மற்றும் அதிகாரங்களை வெளியிடல்

அமைச்சரவை – தலைமை அமைச்சர் பற்றித் தெரிந்து கொள்தல்

சட்டமன்றத்தின் ஈரவை பற்றியும் சட்டம் உருவாகும் முறையையும் அறிவது.

## வடிவமைப்பு

அமைச்சர் குழு

பிரிவி கவுன்சில்

அமைச்சர் குழுவின் வளர்ச்சி

அமைச்சர் குழுவின் பணிகள்

தலைமை அமைச்சர்

தலைமை அமைச்சர் முக்கியத்துவம்

சட்டமன்றம்

பிரபுக்கள் சபை

பொதுச் சபை

பொதுச்சபை சபாநாயகர்

இங்கிலாந்தில் சட்டமியற்றல்

பொதுச்சபையிலுள்ள குழுக்கள்

## 3.1 அமைச்சர் குழு

இங்கிலாந்தின் உண்மையான ஆட்சித்துறை தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர் குழுவாகும். இங்கிலாந்தின் அரசியலமைப்பு முறையின் உயிர்த்துடிப்பு போன்றது அமைச்சர் குழு. எல்லாவற்றையும் நடத்திச் செல்லும் உயர் அதிகாரம் இதனிடம் தான் உள்ளது. பலவகைப்பட்ட பணிகளை ஆற்றும் மாறுபட்ட பல அதிகாரிகளை ஒருங்கிணைப்பது அமைச்சர்குழு. இங்கிலாந்தின் அரசாங்க முறைக்கு ஓர் ஒற்றுமையை அமைச்சர் குழு அளிக்கின்றது.

அரசாங்கத்தின் அடிப்படையாகத் திகழ்வது அமைச்சர் குழு. அரசாங்கம் என்ற சக்கரம் அமைச்சர் குழு என்ற அச்சாணியைச் சுற்றித்தான் இயங்குகின்றது. அரசு என்ற கப்பலை இயக்கும் கருவி தான் அமைச்சர் குழு. சூரியனைச் சுற்றி பிற கோள்கள் வலம் வருவது போல அமைச்சர் குழுவைச் சுற்றி பிற நிறுவனங்கள்

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
> 1. இங்கிலாந்து அமைச்சர் குழு பற்றி எழுது.

இயங்குகின்றன. காமன்ஸ் சபையின் பெரும்பான்மை ஆதரவுடைய ஒரு கட்சியின் அல்லது ஒரு சில கட்சிகளின் குழுதான் அமைச்சர் குழு என்ற பேராசிரியர் லாஸ்கி (Laski) கூறியுள்ளார். 1937ஆம் ஆண்டு அரசு அமைச்சர்களின் சட்டம் நிறைவேற்றப்படும் வரையிலும் அமைச்சர்குழு (Cabinet) என்ற சொல்லுக்கு சட்டத்தில் இடமிருக்கவில்லை. அமைச்சர்குழு சம்பந்தப்பட்ட விதிகள் பல. பின் வருபவை அமைச்சர் குழு சம்பந்தப்பட்ட முக்கியமான விதிகளிற் சிலவாகும்.

1. அமைச்சர் குழுவைத் தேர்வு செய்பவர் தலைமை அமைச்சர். இதை அவர் தன்னிச்சைப்படி செய்கின்றார். சாதாரணமாக ஒரு அமைச்சர் குழுவில் ஏறத்தாழ இருபது அங்கத்தினர் இருப்பர். இவ்வெண்ணிக்கை நிலையானதல்ல. துறை ஏதுமில்லாத அமைச்சர்களும் அமைச்சர் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதுண்டு. புதிய அமைச்சர்களை உருவாக்கத் தலைமை அமைச்சரால் இயலும்.

2. காமன்ஸ் சபையில் பெரும்பான்மையுள்ள அரசியற் கட்சியினின்று அமைச்சர்குழு தேர்வு செய்யப்படுகின்றது. காமன்ஸ் சபையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் அரசியால் தலைமை அமைச்சராக நியமிக்கப்படுகின்றார். ஓர் அரசாங்கத்தை (அமைச்சர் குழுவை) உருவாக்கும் பொறுப்பு இவருடையது. இதற்கு இரண்டு விதிவிலக்குகள் உண்டு. முதலாவதாக, காமன்ஸ் சபையில் மூன்றாவது கட்சியொன்று இருப்பின் எக்கட்சிக்கும் பெரும்பான்மையில்லாத நிலை ஏற்படலாம். இரண்டாவது கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் உருவாகலாம்.

3. காமன்ஸ் சபையில் நடந்த முக்கியமான வாக்கெடுப்பொன்றின் விளைவாக அரசாங்கம் முறியடிக்கப்படின் அவ்வரசாங்கம் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் அல்லது பாராளுமன்றத்தைக் கலைத்து விடக் கோரவேண்டும். காமன்ஸ் சபையில் அரசாங்கம் தோற்கடிக்கப்படுவதென்பது சாதாரணமாக நடப்பதல்ல. இதற்கு முக்கியக் காரணம் கட்சிக் கட்டுப்பாடுதான். இது சம்பந்தமாக பேஜட் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. அமைச்சர் குழு என்று அழைக்கப்படும் குழு அதனை உருவாக்கிய அவையைக் கலைத்து விடலாம். இக்குழு மக்களிடம் மேல் முறையீடு செய்யும் அதிகாரம் உடையது. இது ஒரு பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட போதிலும், விரும்பினால் மேல் முறையீடு செய்யலாம். அரசாங்கத்திற்கெதிராக வாக்களித்துத் தமது பதவிகளை இழக்கக் காமன்ஸ் உறுப்பினர்கள் சாதாரணமாக விரும்புவதில்லை. இதனால் அமைச்சர் குழுவை காமன்ஸ் கட்டுப்படுத்துவதற்கு மாறாக காமன்ஸ் சபையை அமைச்சர் குழு கட்டுப்படுத்துகின்றது.

4. தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட அரசாங்கம் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்திடம் நம்பிக்கை வாக்கை நாடுதல் வழக்கமாக இருந்தது. ஆனால் தற்போது தேர்தலில் தோல்வியுறும் அரசாங்கம் உடனடியாக இராஜினாமா செய்கின்றது. இப்பழக்கத்தை 1868 ஆம் ஆண்டு டிஸ்ரேலி (Disreali) துவக்கினார். தேர்தலின் முடிவில் எக்கட்சிக்கும் பெரும்பான்மை கிட்டாவிடில் இப்பழக்கத்தைப் பின்பற்ற இயலாது.

5. கூட்டுப் பொறுப்பு என்பது அமைச்சர் சம்பந்தப்பட்ட முக்கியமான கோட்பாடாகும். அமைச்சர் குழுவால் எடுக்கப்பட்ட முடிவுகட்கு எல்லா அமைச்சர்களும் கூட்டுப் பொறுப்புடையவர்கள். அமைச்சர் குழுவின் கூட்டங்களில் எவ்விசயத்தைக் குறித்தும் எதிர்த்துப் பேச ஒரு அமைச்சருக்கு உரிமையிருப்பினும் ஒரு முடிவெடுத்த பின்னர் யாவரும் ஆதரிக்க வேண்டும். எடுக்கப்பட்ட முடிவை ஏற்காதவர் இராஜினாமா செய்ய வேண்டும். அமைச்சர் குழு வாழ்வதும், வீழ்வதும் ஒன்றாகத்தான். முக்கியமான

விஷயமொன்றில் அமைச்சரொருவருடைய தீர்மானம் பாராளுமன்றத்தில் முறியடிக்கப்பட்டால் அது அரசாங்கம் முறியடிக்கப்பட்டதற்குச் சமமாகும். ஒரு அமைச்சரின் தனிப்பட்ட பொறுப்பிற்கும், அவர் இழைக்கும் தவறுகட்கும் எல்லோரும் பொறுப்பல்ல.

## 3.2 பிரிவி கவுன்சில்

பிரிவி கவுன்சிலினின்று தான் அமைச்சர்குழு ஆரம்பமாகிறது. இடைக்கால மன்னர்கள் அரசாங்க சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்கள் குறித்து மாக்னம் கன்சிலியம் (Magnum Concilium) என்ற பேரவையைக் கலந்தாலோசித்து வந்தனர். அரசாஙக பணிகளின் அளவு அதிகரித்ததைத் தொடர்ந்து இப்பேரவையைக் கலந்தாலோசிப்பது சரியாகப்படவில்லை. ஆகவே, ஒரு சிறு குழுவை மன்னன் நியமித்தான். இக்குழுவில் மிக முக்கியமான அதிகாரிகளாக ஜுஸ்டிசியர் (Judiciar) சான்லர் பிரபு (Lord Chancellor), முத்திரைக் காப்பாளர் பிரபு (Lord Keeper of the Privy Seal) உயர் நீதிபதிகள் ஆகியோர் அங்கத்தினராக இருந்தனர். இக்குழு நிலையானதாக இருந்தது. ஆரம்பத்தில் கியூரியா ரெஜீஸ் (Curia Resis) என அழைக்கப்பட்ட அக்குழு தான் பிரிவி கவுன்சிலாக மாறியது. தேவைப்படும் பொழுது மன்னனுக்கு ஆலோசனை அளிப்பதுதான் அக்கவுன்சிலின் முக்கிய பணிகளாகும். இக்கவுன்சில் பிறப்பித்த பிரகடனங்கள் மூலமாகத்தான் மன்னன் தனது கருத்தை மக்களுக்கு தெரிவித்து வந்தார். ஆட்சித்துறை, பணிகளை ஆற்றிவந்த இக்கவுன்சில் காலப்போக்கில் நீதித்துறை சம்பந்தப்படட பணிகளை ஆற்றிலாயிற்று. டியுடர் மன்னர்கள் இக்கவுன்சிலுக்கு ஆட்சித்துறை, சட்டமன்றத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகள் சம்பந்தப்பட்ட அதிகாரங்களை வழங்கினர்.

தற்பொழுது பிரிவி கவுன்சில் ஏழத்தாழ 300 அங்கத்தினர்கள் உள்ளனர். அமைச்சர் குழுவின் அங்கத்தினர்கள் (முன்பிருந்தவரும், தற்பொழுதுள்ளவரும்). கான்டர்பரி ஆர்ச் பிஷப், காமன்ஸ் சபையின் சபாநாயகர். சட்டபிரமுகர்கள், தலைமை நீதிபதி பதிவியினின்று ஒய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், உயர்நிலையிலுள்ள தூதுவர்கள் பிற முக்கிய நபர்கள் ஆகியோர் அக்கவுன்லின் அங்கத்தினராவர். அரசர் இறக்கும் பொழுது அல்லது அவர் திருமணம் செய்ய விரும்புவதாக அறிவிக்கும் பொழுது மட்டும் தான் முழுக்கவுன்சில் கூடுகின்றது. சாதாரணமாக இக்கவுன்சிலின் பணிகள் அரசியின் முன்னிலையில் கூடும் நான்கு அல்லது ஆறு கவுன்சிலர்கள் ஆற்றுகின்றன.

## 3.3 அமைச்சர் குழுவின் வளர்ச்சி

ஆறாம் எட்வர்ட் மன்னரது ஆட்சிக்காலத்தில் பிரிவி கவுன்சிலின் குழுக்களில் ஒரு குழுவினரிடம் முக்கியமான சில பணிகள் ஒப்படைக்கப்பட்டன. இக்குழுவினை அரசின் குழு (Committee of State) என்று அழைத்தனர். பதினேழாம் நூற்றாண்டில் பிரிவி கவுன்சில் நல்லதொரு ஆலோசனை கூறும் நிறுவனமாக செயல்படவில்லை. கவுன்சிலின் அங்கத்தினரது எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்ததுதான் இதற்குக் காரணமாகும். ஆகவே, முதலாவது ஜேம்ஸ், முதலாவது சார்லஸ் ஆகிய மன்னர்கள் தாம் கலந்தாலோசிப்பதற்கு ஒரு சிறுகுழுவை அல்லது ஒருவரையோ நாட ஆரம்பித்தனர். இரண்டாவது சார்லஸ் மன்னர் 1697 ஆம் ஆண்டு கலந்தாலோசிப்பதற்கும் ஆலோசனை கூறுவதற்குமாக நம்பிக்கையுள்ள ஆலோசகர்களைக் கொண்ட கபால் என்ற நிறுவனத்தை உருவாக்கினார். கிளி∴போர்ட், ஆர்லிங்டன், பக்கிங்□ாம், ஆஷ்லி லாடர்டேல் ஆகிய

ஐந்து ஆலோசகர்களது முதல் எழுத்துக்கள் இணைந்து கபால் என்ற இப்பெயர் உருவாக்கப்பட்டது. மன்னரது தனி (Cabinet) அறையில் இக்குழுவின் கூட்டங்கள் நடந்தமையினால் இப்பெயர் நாளடைவில் இக்குழுவிற்காக அமைச்சர் குழு (Cabinet) என அழைக்கப்பட்டது. இவ்வமைச்சர் குழுவிற்கும் இன்றைய அமைச்சர் குழுவிற்கும் பெயரில்தான் ஒற்றுமையிருக்கிறது. அந்நாளைய அமைச்சர் குழு மக்களிடம் நற்பெயர் உடையதாக இருக்கவில்லை.

1688-ஆம் ஆண்டிலிருந்து அமைச்சர் பொறுப்பு (Ministerial Responsibility) என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அங்கு கூட்டுப் பொறுப்பு இல்லை. இதற்கு காரணம் என்னவெனில் அமைச்சர்கள் பாராளுமன்றத்திலுள்ள முக்கியமான அரசியல் கட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். தனக்குள்ளேவே கருத்து வேறுபாடு கொண்டிருந்த ஒரு அவையாக அமைச்சர் குழு செயல்பட்டது. ஆகையால் 1697-ஆம் ஆண்டிலிருந்து பெரும்பான்மைக் கட்சியிலிருந்து அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை பெற்றிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உருவான முதல் அமைச்சரவை சண்டர்லேண்ட் (Sunderland) அவர்களுக்கு ஜுன்டோ (Junto) வாகும். ஆன் அரசியாரும் (Queen Anne) தமது ஆட்சியின் போது இக்கோட்பாட்டைப் பின்பற்றினர்.

அமைச்சர் குழு ஒரு தனித்தியங்கும் நிறுவனமாக வளருவதற்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் சாதாகமாக அமைந்தது. முதலாவது ஜார்ஜ் மன்னர் பதவியேற்றவுடன் அமைச்சர் குழுவின் அமைப்பிலும் செயல் முறையிலும் ஒரு முக்கியமான மாற்றம் நடந்தது. முதலாம் ஜாஜ் மன்னரால் ஆங்கில மொழியை பேசவும், புரிந்து கொள்ளவும் முடியாது. ஆகையால் அவர் அமைச்சர் குழுவின் கூட்டங்களுக்குச் செல்வதில்லை. அவர் தன்னுடைய பணிகளை தன்னுடைய அமைச்சர்களில் ஒருவரிடம் ஒப்படைத்தார். இதன் விளைவாக அரசின் நடவடிக்கைகளில் அரசருக்கு இருந்த தனிச் செல்வாக்கு ஓரளவிற்குக் குறைய ஆரம்பித்து, அமைச்சர் குழுவில் அவருடைய இடத்தை மூத்த அமைச்சர் ஏற்றுக் கொண்டார். முதலாவது தலைமை அமைச்சராகவும், அதே சமயத்தில் காமன்ஸ் சபைத் தலைவராகவும் இருந்த பெருமையைக் கொண்டவர் சர்.ராபர்ட் வால்பால் இரண்டாம் ஜார்ஜ் மன்னரும் முதலாம் ஜார்ஜின் வழியைப் பின்பற்றி, சர்.ராபர்ட் வால்போல் அவர்களையே அரசாங்க செயல்களைச் செயலாற்றுவதற்கு அனுமதித்தார். இரண்டாவது ஜார்ஜ் மன்னர் காலத்தில்தான் அமைச்சர் குழு சர்.ராபர்ட் வால்போல் தலைமையில் உறுதியாக செயலாற்றி ஒரு நிறுவனமாக நிலைநாட்டப்பட்டது. சர்.ராபர்ட் வால்போல் தான் அமைச்சராவதற்குத் தன்னுடைய கட்சியின் ஆதரவைக் கோரிப்பெற்று செயல்பட்டார். இவ்வாறாக அமைச்சர் குழுவும், கட்சி முறையும் ஒன்றாக வளர்ச்சியடைந்தன. 1742-ஆம் ஆண்டு காமன்ஸ் சபையின் ஆதரவை இழக்க நேரிட்டாதால் ராபர்ட் வால்போல் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். மூன்றாவது ஜார்ஜ் மன்னர் அமைச்சர் குழுவை வெறுத்தார். டோரி கட்சியின் ஆதரவோடு அமைச்சர் குழுவை அழிக்கவும் முற்பட்டார். ஆனால் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் இழப்பினால் மன்னரது சுய அரசாங்கம் மறைந்தது. பிட் அவர்களது தலைமையின் கீழிருந்த டோரிக் கட்சியும் விக் கட்சியினரைப் போன்ற அமைச்சர் குழுவிற்கும் கட்சி முறைக்கும் விசுவாசமுடையதாக மாறியது.

1832-ஆம் ஆண்டு வருடத்திய சீர்திருத்தச் சட்டம் மன்னரது அதிகாரத்தை மிகவும் குறைத்தது. இதன் பின்னர் மக்கள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு

அமைச்சர் குழுவை பயன்படுத்தலாயினர். விக்டோரிய அரசியாரும் அமைச்சர் குழு முறையை ஏற்றுக் கொண்டார். அமைச்சர் குழு சம்பந்தப்பட்ட மரபுகளும் உருவாயின.

"அரசாங்கம் என்ற கட்டிடத்தில் மூலைக்கல்லாக தழகழ்வது அமைச்சா குழு; அரசாங்கம் என்ற ஒரு சக்கரம் அமைச்சர் குழு என்ற அச்சாணியைச் சுற்றித்தான் இயங்குகிறது; அரசு என்ற கப்பலை இயக்கும் சுக்கான் அமைச்சர் குழு ஆகும்" சூரியனைச் சுற்றி பிற நிறுவனங்கள் இயங்குகின்றன; காமன்ஸ் சபையில் பெரும்பான்மை ஆதரவுடைய ஒரு கட்சியின் அல்லது ஒரு சில கட்சிகளின் குழு தான் அமைச்சர் குழு என்று பேராசிரியர் வாஸ்கி கூறுகிறார். 1937-ஆம் ஆண்டு Ministers of the Crown Act என்ற சட்டம் நிறைவேற்றப்படும் வரை அமைச்சர் குழு என்ற சொலலுக்கு சட்டத்தில் இடமிருக்கவில்லை. அமைச்சர் குழு சம்பந்தப்பட்ட விதிகள் பல மரபுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இம்மரபுகள் தான் இங்கிலாந்தின் அரசியலமைப்பில் அடிப்பயைான மரபுகள்.

**அமைச்சரவைக்கும் அமைச்சர்குழுவிற்குமுள்ள வேற்றுமை**

அமைச்சரவையை (Ministry) விட அளவிற் சிறியது அமைச்சர் குழு (Cabinet). ஒரு அமைச்சரவையில் ஏறத்தாழ நூறு அமைச்சர்கள் இருப்பார்கள். காமன்ஸட் சபையின் அங்கத்தினராகவும், அதற்கு பொறுப்புள்ளவர்களாகவும் உள்ள அரசின் அதிகாரிகள் யாவரும் அமைச்சரவையின் உறுப்பினர்கள். அமைச்சர் குழுவின் அங்கத்தினர் யாவரும் அமைச்சர்கள். ஆனால் எல்லா அமைச்சர்களும் அமைச்சர் குழுவின் அங்கத்தினரல்ல. அமைச்சர் குழுவில் பிரபுக்கள் சபையைச் சேர்ந்தோரும் அங்கத்தினராக இருப்பர். அமைச்சரவை கூடுவதே கிடையாது. கொள்கை உருவாக்கும் பணியும் இதற்கில்லை. அமைச்சர் குழுவின் அங்கத்தினரல்லாத அமைச்சரொருவர் அரசாங்கத்தின் துறையொன்றின் தலைவர் மட்டுமே. ஆனால் அமைச்சர் குழுவின் அங்கத்தினரான அமைச்சர் அரசாங்கத்தின் துறையொன்றின் தலைவராகவும் அரசாங்கத்தின் கொள்கையை உருவாக்குவதில் பங்குடையவராகவும் இருக்கின்றார்.

**3.4 அமைச்சர் குழுவின் பணிகள்**

1. அமைச்சர் குழு முறையிலான அரசாங்கம் என்பது கட்சி அரசாங்கமாகும். அமைச்சர் குழுவால் செயல்படுத்தப்படும் கொள்கைகள் யாவும் அவ்வமைச்சர்குழு சார்ந்துள்ள அரசியல் கட்சியால் உருவாக்கப்படுகின்றன. இங்ஙனம் உருவாக்கப்படும் கொள்கைகள் அக்கட்சியின் கோட்பாட்டைப் பிரதிபலிக்கும். தான் உருவாக்கும் கொள்கைகள் யாவற்றையும் செயற்படுத்த வேண்டுமென்று கட்சியானது அமைச்சர் குழுவைக் கட்டுப்படுத்த முடியாது. எக்கொள்கையைச் செயல்படுத்த வேண்டும் என்று முடிவெடுப்பதற்கு அமைச்சர் குழுவிற்குப் போதிய சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். எப்பொழுதும் செயற்படுத்த வேண்டுமென்பதையும் அமைச்சர் குழு நிர்ணயிக்கின்றது. அரசாங்கத்தின் கொள்கையைப் பிரதிபலிப்பது பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களாகும்.

2. கொள்கைகள் சம்பந்தப்பட்ட நுணுக்கங்களை உருவாக்குவது அமைச்சர்குழு. ஒரு குறிப்பிட்ட கொள்கையைச் செயற்படுத்துவதற்குப் பல தேவைகளை கவனிக்க வேண்டியதாக இருக்கலாம். நாட்டு நிலவரம், பொருளாதார நிலை, பல்வேறு துறைகளிடையே உறவு போன்ற பல விஷயங்கள் கவனிக்கப்படல் வேண்டும். இது அமைச்சர் குழுவின் பணியாகும்.

3. பல்வேறு துறைகளின் கொள்கைகளை இணைக்கும் பணி அமைச்சர்

குழுவினுடையதாகும். ஒரு சிறிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு பல துறைகள் ஒத்துழைக்க வேண்டும். இவ்வொத்துழைப்பைப் பெறுவதும் அமைச்சர் குழுவிற்கு எளிது. ஏனெனில் இக்குழுவிலுள்ள அமைச்சர்கள் தாம் அரசாங்கத்தின் பல துறைகளின் தலைவர்கள்.

4. சட்டமியற்றல், பொருளாதாரம், நிர்வாகம் போன்றவை சம்பந்தப்பட்ட அன்றாடப் பணிகள் தவிர வெளி விவகாரம் சம்பந்தப்பட்ட முக்கியமான முடிவுகள் எடுப்பதும் அமைச்சர் குழுவேயாகும். பத்திரிக்கைகள் மூலமாகவும், பாராளுமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகள் வாயிலாகவும் சில விசயங்கள் அமைச்சர் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படலாம்.

5. எதிர்காலத்திற்கான திட்டங்களை உருவாக்குவது அமைச்சர் குழுவின் பணியாகும். அவ்வப்பொழுதுள்ள விஷயங்களைக் கவனிப்பதால் மட்டும் அமைச்சர் குழுவின் பணி முடிவதில்லை. இக்குழு எதிர்காலத்திற்கு திட்டங்களைத் தீட்ட வேண்டும். ஒரு அமைச்சர் குழுவால் உருவாக்கப்பட்ட திட்டம் மற்றொன்றால் ஒத்திவைக்கப்படலாம்.

**அமைச்சரவைப் பொறுப்பு மற்றும் அதனைச் செயற்படுத்துத் வழிகள்**
**(Ministerial Responsibility and way of enforcing it)**

அமைச்சர் குழு முறையிலான அரசாங்கத்தில் அடிப்படைக் கோட்பாடு அமைச்சரவைப் பொறுப்பாகும். ஒவ்வோரு அமைச்சரும் அரசருக்கும் தன்னுடைய சக அமைச்சர்களும் மற்றும் காமன்ஸ் சபைக்கும் தனிப் பொறுப்புடையவர். அதிலும் குறிப்பாக அமைச்சர் குழுவின் உறுப்பினர்க்குத் தனிப் பொறுப்பு மற்றும் கூட்டுப்பொறுப்பு என்ற இருவகைப் பொருப்புகள் உண்டு.

ஒரு அமைச்சருக்கு மன்னரித்தில் உள்ள பொறுப்பு வரலாறு மற்றும் செயல் அடிப்படையில் உருவானதாகும். மன்னர் ஒரு அமைச்சரைப் பதவியினின்று நீக்க முடியாது. இருப்பினும் அமைச்சரவைச் செயல்கள் தம்முடைய பெயரால் நடைபெறுவதால் தன்னிடம் அனைத்து விஷயங்களையும் தெரிவிவக்கவேண்டும் என்று கேட்கும் உரிமை மன்னருக்கு உண்டு. இதனைத்தான் அமைச்சருக்கு மன்னரிடத்தில் உள்ள பொறுப்பு என்று கூறுகிறோம். ஒரு அமைச்சரின் தவறான நடவடிக்கை அமைச்சரவை முழுவதையும் பாராளுமன்றம் தாக்கிப் பேசுவதற்கு வழி வகுக்கும் இவ்வாறு அமைச்சரவையானது பாராளுமன்றத்திற்கு இரண்டு விதங்களில் பொறுப்புடையதாகிறது. முதலாவதாக, அரசாங்கத்தின் கொள்ளைகளுக்கும் செயல் நடவடிக்கைகளுக்கும் அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். இரண்டாவதாக ஒவ்வோரு அமைச்சரும் அவர் தலைமை தாங்கிச் செயலாற்றுகிற துறையின் செயல் நடவடிக்கைகளுக்குத் தனிப் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். இவ்விரு வகையான பொறுப்புகளும் மரபுகளில் காணப்படுகின்றன. இவ்விரு மரபுகளும் 19-ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி அடைந்தன.

தற்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு இங்கிலாந்து வழங்கிய முக்கிய கொடை கூட்டுப் பொறுப்பு என்ற கோட்பாடாகும். கூட்டுப் பொறுப்பு அரசாங்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்துகிறது. வாழ்வதிலும் விழ்வதிலும் அமைச்சர்குழு ஐக்கியமாக இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் உருவானதே கூட்டுப் பொறுப்பாகும். இதனால் ஒவ்வோரு அமைச்சரும் அமைச்சர் குழுவின்னறு தனித்து வெளியே செல்லமாட்டார் என்பது பொருள் அல்ல கூட்டுப் பொறுப்பு என்பது சாதாரணமாக இளநிலை அமைச்சரிலிருந்து அனுபவிக்க அமைச்சர் குழுவின் காபினெட் அமைச்சர் வரையிலும்

பொருந்தும். அமைச்சர் குழுவின் முடிவை விரும்பாதவர்கள் அமைச்சர் குழுவினின்று இராஜினமா செய்துவிட வேண்டும்.

1914-ஆம் ஆண்டு யுத்தத்தில் பங்கெடுக்க வேண்டும் என்ற அமைச்சர் குழுவின் முடிவை விரும்பாததினால் மோர்லி இராஜினாமா செய்ததும், நெவில் சேம்பர்லேன் என்பவரால் பின்பற்றப்பட்டு வந்த வெளி நாட்டுக் கொள்ளையை ஏற்றுக் கொள்ளாத அந்தோணி ஈடன் 1938 ஆம் ஆண்டு இராஜினாமா செய்ததும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

அரசாங்கத்தை ஆதரிப்பது மட்டுமின்றி அமைச்சர் குழுவின் கொள்ளைக்கெதிராக பேசாமலும் இருக்க வேண்டியது ஒரு அமைச்சருடைய கடைமையாகும். தவறாக அதிகாரத்தை பயன்படுத்துவதற்காகவோ அல்லது தவறான நடவடிக்கைக்காகவோ அமைச்சரொருவரைப் பதவியிலிருந்து நீக்கும்படி மன்னருக்கு தலைமை அமைச்சர் ஆலோசனை கூறலாம். 1922-ஆம் ஆண்டு அரசாங்க இரகசியங்களை பகிரங்கப் படுத்தியதற்காக எட்வின் மாண்டேகு என்ற இந்திய செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இயற்கையாகவே அமைச்சர் குழு ஒற்றுமையுடன் செயல்படும் தன்மையுடையதாகும். இத்தன்மையை கூட்டுப் பொறுப்பின் மூலம் அது அடைய முடிகின்றது. கூட்டுப் பொறுப்பு என்ற கொள்கை எவ்வித மாற்றமுமின்றி இருக்கின்றது. ஆனால் கட்சிக் கட்டுப்பாட்டின் வளர்ச்சியனால் உருவான பாராளுமன்றத்தின் அதிகாரம் குறைந்து கூட்டுப் பொருப்பின் முக்கியத்துவம் மிகக் குறைந்து விட்டது என்று ஏ.எச்.பர்ச் (A.H.Birch) என்பவர் கருத்துத் தெரிவித்துள்ளார். மேலும் இவர் கூட்டுப் பொறுப்பு என்ற கொள்ளையானது இன்றைய அரசியல் முறையில் அது பெற்றிருக்க வேண்டிய இடத்தைப் பெறவில்லை என்றும் கூறுகின்றார்.

**பொறுப்பை உறுதிபடுத்தும் வழிகள்**

ஐந்து வழிகளில் பொறுப்பு உறுதிப்படுகின்றது. முதலாவதாக காமன்ஸ் சபை அமைச்சரிடம் கேள்விகள் கேட்டல்; இரண்டாவதாக பொதுக் கொள்ளைக்கு ஒப்புதல் அளிக்காமல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுதல்; மூன்றாவதாக, ஒரு குறிப்பிட்ட அமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்; நான்கவதாக, அமைச்சர் குழுவால் கொண்டுவரப்பட்ட முக்கிய தீர்மானத்தை தோற்கடித்தல்; ஐந்தாவதாக, அமைச்சர் குழு ஏற்றுக் கொள்ளாத அளவிற்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றல் அல்லது அதனைத் திருத்தி அமைத்தல் ஆகியவை அவ்வழியாகும்.

மேற்கூறிய ஐந்து முறைகளில் முதலாவது நீங்கலாக மற்ற நான்கு முறைகளில் ஏதேனுமொன்று காமன்ஸ் சபையில் எடுக்கப்பட்டால் தலைமை அமைச்சரும் அமைச்சர்குழுவும் ராஜினாமா செய்ய வேண்டும். அல்லது பொதுத்தேர்தல் மூலமாக நாட்டு மக்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளர்களது ஆதரவை இழந்துவிட்டால் அமைச்சர் குழு ராஜினாமா செய்யவேண்டும் ஒரு அமைச்சர் தன்னுடைய நடவடிக்கைகளுக்குப் பாராளுமன்றத்திற்கு பொறுப்புடையவர். சட்டத்திற்கு விரோதமாக அவரது செயல் இருப்பின் அவர் நீதிமன்றத்திற்கும் பொறுப்புடையவராவர்.

**அமைச்சர் குழுவின் முக்கியத்துவம்**

தற்பொழுது இங்கிலாந்தின் அரசாங்கத்தில் காணப்படும் மிக முக்கியமான நிறுவனம் அமைச்சர் குழுவாகும். இதனால் தான் இதனை உண்மையான ஆட்சித்துறை என்கின்றனர். அரசியலமைப்பிற்கு இது ஒரு தொடர்ச்சியை அளிக்கிறது.

ஆட்சித்துறைக்கும் சட்டமன்றத்திற்குமிடையே சுமூகமான உறவை இது ஏற்படுத்துகின்றது. சட்டமன்றத்துறைக்குத் தலைமையை இது அளிக்கின்றது. ஆட்சித்துறையான அமைச்சர் குழு சட்டமன்றத்தினின்று தனது அதிகாரத்தைப் பெறுகின்றது. ஆட்சித்துறையை சட்டமன்றத்துறையுடன் இணைப்பது அமைச்சர் குழு. அதன் தோற்றத்தில் ஒன்றைச் சார்ந்த அமைச்சர்குழு தனது செயலாற்றலில் மற்றொன்றைச் சார்ந்துள்ளது என்று வால்டர் பேஜட் கூறியுள்ளார்.

**அமைச்சர் குழுவின் எதேச்சதிகாரம்**

பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடைய பாராளுமன்றத்தால் பதவியினின்று அகற்றப்படக்கூடிய நிலையில் அமைச்சர் குழு உள்ளது என்ற கோட்பாடு இருப்பினும் நடைமுறையில் பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தி அதற்கு வழி காட்டுவது அமைச்சர் குழுவேயாகும். கட்சி அரசியல் தான் அதற்கு முக்கியக் காரணம். நடைமுறையில் பாராளுமன்றத்தைக் கலைத்தல் என்ற ஆயுதம் அமைச்சர் குழுவிடம் உள்ளது. எப்பொழுது வேண்டுமெனினும் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடும்படி அமைச்சர்குழு கோரலாம். பாராளுமன்றத்திலுள்ள தமது பதவிகளை எப்பாராளுமன்ற உறுப்பினரும் இழக்க விரும்பமாட்டார் என்பதனால் பாராளுமன்றத்தைக் கலைத்து விடக்கூடிய சூழ்நிலையை அவர்கள் உருவாக்கமாட்டார்கள். அமைச்சர் குழுவினுடைய முக்கியத்துவத்திற்கும் அதன் அதிகார வளர்ச்சிக்கும் மற்றொரு காரணமும் உண்டு. அமைச்சர் குழுவின் அங்கத்தினர்கள் தான் பெரும்பாலான விஷயங்களைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்கின்றனர். ஒரு மசோதாவின் நுணுக்கங்களை பாராளுமன்றத்தின் சாதாரண அங்கத்தினரொருவர் எளிதாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆகவே, இவர்கள் அமைச்சர்குழுவின் உதவியை நாடுகின்றனர். இதன் காரணமாக அமைச்சர் குழுவின் செல்வாக்கு அதிகரிக்கின்றது. சட்டமியற்றுவதை அமைச்சர் குழுவால் துவக்கப்படுகின்றன. பாராளுமன்றக் கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது அமைச்சர் குழுவாதலால் விவாதத்திற்கான காலத்தைக் கட்டுப்படுத்த இதனால் இயலும். மேலும் சட்டமியற்றுவதில் முக்கிய பங்கிருப்பதால் அதன் அதிகாரம் அதிகரித்துள்ளது. அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக காமன்ஸ் சபையில் ஏறத்தாழ நூறு அங்கத்தினர்கள் அமைச்சர்களாக உள்ளனர். அமைச்சர் குழுவில் மிக முக்கியமானவர் தலைமை அமைச்சர். உண்மையான ஆட்சியாளர் இவர் தான். சட்டமன்றத்தின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் இவரே.

## 3.5 தலைமை அமைச்சர்

மிகப்பெரிய உருவமொன்றும் மிகச்சிறிய நிழலைக் காட்டுவதும் அளவற்ற அதிகாரம் உடைய மனிதரொருவர் தமது அதிகாரத்தின் அடையாளமாக்க காட்டுவதற்குச் சிறப்புரிமையோ தமது அதிகாரத்தின் அடையாளமாகக் காட்டுவதற்குச் சிறப்புரிமையோ பட்டமோ இல்லாதிருப்பதும் உலகில் வேறெங்கும் காண இயலாது "Gleanings of the past years" என்று நூலில் கிளர்ட்ஸ்டன் (Gladstone) தலைமை அமைச்சரது நிலைமையைப்பற்றிக் கூறுகிறார். அரசாங்கத்தில் உண்மையான அதிகாரம் படைத்தவர் தலைமை அமைச்சராவார் என்பதில் சந்தேகமில்லை. இவ்வளவு அதிகாரமுள்ள இப்பதவி அண்மையில் தோன்றியதாகும்.

அமைச்சர் குழுவின் கூட்டங்களில் கலந்து கொண்டு அவற்றிற்குத் தலைமை தாங்கும் பழக்கத்தை முதலாவது ஜார்ஜ் மன்னர் கைவிட்டதைத் தொடர்ந்து அமைச்சர்

தன்னறிவு சோதனைக் கேள்வி
2. தலைமை அமைச்சரின் பணிகளை விவரி.

குழுவின் அங்கத்தினரொருவர் இப்பணியைச் செய்ய வேண்டியதாயிற்று. இப்பணியைப் புரிந்தவர்கள் குறிப்பிடத்தக்க நபர்களாக இருந்து வந்துள்ளனர். ஸ்டான்ஹோப் (Stanhope), சண்டலண்ட் (Sunderland) ஆகியோர் 1717-ஆம் ஆண்டும், 1721-ல் டவுன்செண்ட் (Townshend) 1722-1742ல் வால்போல் (Walpole), 1742-ல் பெல்ஹாம் (Pelham), 1756-ல் பிட் (Pitt), 1770-1782-ல் நார்த் பிரபு (Lord North) போன்றோர் குறிப்பிடத்தக்க நபர்களாகத் திகழ்ந்தனர். பதினெட்டாவது நூற்றாண்டில் அமைச்சர் குழுவின் கூட்டங்கட்குத் தலைமை வகித்த நபரைத் தற்காலத்தில் காணப்படும் தலைமை அமைச்சருக்கு இணையாகக் கொள்ள முடியாது. அவரது நிலை அரசரைச் சார்ந்திருந்ததேயன்றி வாக்களாரையல்ல. முதலாவது தலைமை அமைச்சர் எனக் கருதப்படும் வால்போல் கூட இப்போதுள்ள தலைமை அமைச்சர் ஆற்றும் பணிகளைச் செய்யவில்லை. தற்பொழுதுள்ள தலைமை அமைச்சரின் பதவி 1832-ஆம் வருடத்திய சீர்திருத்தச் சட்டத்தின் பயனாகத் தோன்றியதாகும். இப்பொழுதுள்ள தலைமை அமைச்சரின் பணியிலான முதல் தலைமை அமைச்சராக சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel) என்பாரைக் குறிப்பிடலாம்.

**தலைமை அமைச்சரின் பணிகள்**

தலைமை அமைச்சரின் நிலை மரபுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். தலைமை அமைச்சர் என்ற பதத்தை முதல் முறையாக குறிப்பிட்ட சட்டம் 1917 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட செக்கர்ஸ் எஸ்டேட் சட்டமாகும். (Chequers Estate Act). 1937-ஆம் அண்டு அரசரின் அமைச்சர் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து தலைமை அமைச்சருக்கு அங்கீகாரம் கிடைத்தது. இச்சட்டம் தலைமை அமைச்சருக்கு ஊதியத்தையும் ஓய்வு ஊதியத்தையும் அளித்தது. எனினும் அவருடைய பணிகளைப் பின்வருமாறு தொகுக்கலாம். தலைமை அமைச்சரின் அதிகாரங்களைப் பற்றி இச்சட்டம் ஏதும் குறிப்பிடவில்லை.

1. பாராளுமன்றத்தின் உள்ளேயும், வெளியிலும் தமது அரசியல் கட்சியின் தலைவராகத் திகழ்பவர் தலைமை அமைச்சர். பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் தான் ஒருவர் தலைமை அமைச்சராகின்றார். தமது கட்சியின் ஒருமைப்பாட்டைக் காப்பது இவரது பணி. இவர் பொது மக்கட் கருத்தை உணர்ந்து அதற்கேற்பக் கட்சியின் கொள்கையில் மாறுதல் செய்ய வேண்டும். தலைமை அமைச்சரைப் புறக்கணிப்பது கட்சிக்கு நன்றன்று.
2. ஓர் அரசாங்கத்தை அமைப்பது தலைமை அமைச்சர் பொறுப்பு ஆகும். எல்லா அமைச்சர்களும் தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப அரசியால் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர்களை தேர்வு செய்வதில் தலைமை அமைச்சர் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவரது பணிகளில் மிகக் கடுமையானது இதுவே. முக்கியமான பதவிகள் கட்சியிலுள்ள அனுபவசாலிகளான முக்கியமான அங்கத்தினர்கட்கு அளிக்கப்படுகின்றன. சிறிய பதவிகட்கு ஆட்களைத் தேர்வு செய்யும் கொறடாவையும் கலந்தாலோசித்தல் வழக்கம்.
3. சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு தலைமை அமைச்சர் இதர அமைச்சர்களைப் பதவியினின்று அகற்றலாம். முடிந்த வரையில் அமைச்சர்கள் இராஜினாமா செய்வதைத்தான் அவர் விரும்புவார்.

அமைச்சர் குழுவைப் புனரமைப்பதற்கோ அல்லது இளவயதினருக்கு அமைச்சரவையில் இடமளிப்பதற்கோ ஓர் அமைச்சரைப் பதவியினின்று நீக்கலாம். தலைமை அமைச்சரது விருப்பத்திற்கேற்ப பதவியினின்று விலகும் அமைச்சர்களைப் பிரபுக்களாக்குவது வழக்கம். விரும்பத்தகாத நடவடிக்கையில் ஈடுபடும் அமைச்சரைப் பதவியினின்று நீக்கும் பணியைத் தலைமை அமைச்சர் மிக்க கவனத்துடன் செய்ய வேண்டும்.

4. அமைச்சர் குழுவைத் தேர்வு செய்பவர் தலைமை அமைச்சர். சாதாரணமாக பதினாறிலிருந்து இருபத்தி நான்கு அங்கத்தினர் வரை ஒரு அமைச்சர் குழுவில் காணப்படலாம். நிதி அமைச்சர், வெளி விவகார அமைச்சர், உள்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், வர்த்தக வாரியத் தலைவர், தொழில் அமைச்சர், காமன்வெல்த் விவகார அமைச்சர், ஸ்காட்லாந்திற்கான அமைச்சர் முத்திரைக்காப்பாளர் பிரபு ஆகியோர் அமைச்சர் குழுவின் உறுப்பினராகவே இருப்பர். தலைமை அமைச்சர் மிக்க கவனத்துடன் அமைச்சர் குழுவின் அங்கத்தினரைத் தேர்வு செய்ய வேண்டும். தலைமை அமைச்சரின் முக்கியத் தோழர்கட்கு முக்கிய பதவிகள் அளிக்கப்படுவது வழக்கம். அமைச்சர் குழுவின் உறுப்பினர்கள்ட நிர்வாகத்திறன் உடையவர்களாகவும் ஒன்றாகப் பணிபுரியக்கூடியவராகவும் இருக்க வேண்டும். தனித்தனி அமைச்சர்களைத் தமது தலைமையின் கீழ் இணைக்க வேண்டிய பொறுப்பு தலைமை அமைச்சருடையதாகும். இது தலைமை அமைச்சரது திறமை, ஆற்றல், தலைமைப் பண்பு ஆகியவற்றைப் பொறுத்ததாகும். அமைச்சர் குழுவை உருவாக்கும் பொழுது தலைமை அமைச்சருக்குள்ள அதிகாரம் எதேச்சதிகாரிகட்குக் கூடக் கிடையாது என்று அமரி (L.S. Amery) என்பவர் கூறியுள்ளார்.

5. அமைச்சர் குழுவின் தலைவர் தலைமை அமைச்சர். குழுவின் கூட்டங்களின் போது கட்டுப்பாடு செலுத்துவது இவரது பொறுப்பு. இவர் ஒரு சாதாரணத் தலைவரைப் போன்றவரல்ல என்பதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவதாக அமைச்சர் குழுவின் அங்கத்தினர்கள் இவரால் தேர்வு செய்யப்பட்டவர்கள். இவரை அவர்கள் தேர்வு செய்யவில்லை. அமைச்சர் குழுவின் கூட்டங்கட்கு அழைப்புக் கிடைக்கும் வரையில் இவ்வமைச்சர்கள் காத்திருக்க வேண்டும். இரண்டாவதாக நிகழ்ச்சி நிரலிலுள்ள விஷயங்கள் தலைமை அமைச்சரது விருப்பத்திற்கேற்ப பரிசீலிக்கப்படுகின்றன. மூன்றாவதாக, அமைச்சரவை முடிவுகளில் தலைமை அமைச்சரின் கருத்துகட்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

6. கொள்கையைச் செயலாற்றுவதற்கு வழிகாட்டுபவர் தலைமை அமைச்சர். பின்பற்ற வேண்டிய பொதுக்கொள்கை கட்சியின் தலைமை பீடத்தால் உருவாக்கப்படுகின்றது. இக்கொள்கைக்கு விளக்கமளித்தலும் அதனைச் செயலாற்றுவதும் தலைமை அமைச்சரது பொறுப்பு. இதற்காக இவர் அரசாங்கத்தின் எல்லாத்துறைகளையும் மேற்பார்வை செய்கின்றார்.

7. காமன்ஸ் சபையின் தலைவர் தலைமை அமைச்சர். சிறிது நாட்கட்கு

முன்பு வரையிலும் இவர்தான் காமன்ஸ் சபையின் தலைவராக இருந்தார். தற்பொழுது இப்பணியை அவைத்தலைவர் செய்கின்றார். தலைமை அமைச்சர் ஆட்சித்தலைவராதலால் கட்சியை மேற்பார்வை செய்தலும் அரசாங்கப்பணியைக் குறித்த காலத்தில் முடிப்பதும் இவரது பொறுப்பாகும். கட்சிப்பிளவுகட்கு அப்பாற்பட்டு பாராளுமன்றம் தனது ஏகோபித்த கருத்தைத் தெரிவிக்க முற்படும்பொழுது அப்பணியைச் செய்பவர் தலைமை அமைச்சர். அவ்வமயம் எதிர்கட்சித் தலைவர் சபையின் ஒற்றுமையை ஆமோதிப்பார்.

8. அரசாங்கத்தையும் அரசியாரையும் இணைக்கும் பாலமாக இருப்பவர் தலைமை அமைச்சர். அரசாங்கம் சம்பந்தப்பட்ட யாவும் அரசிக்கு தெரியப்படுத்த வேண்டும். அவை சம்பந்தமாக அவர் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்ற அரசியலமைப்பு சார்ந்த உரிமை அரசிக்கு உள்ளது. வாரத்திற்கொருமுறை தலைமை அமைச்சர் அரசியைச் சந்திக்கின்றார். திருமணம் சம்பந்தமாக எழக்கூடிய அரசியலமைப்புப் பிரச்சனைகள், அரசியின் பெயர்களிலும் பட்டங்களிலும் ஏற்படும் மாற்றங்கள், அயல் நாடுகளிலிருந்து வரும் அழைப்புகள் போன்ற விஷயங்களில் அரசிக்கும் அந்தக் குடும்பத்திற்கும் ஆலோசனை அளிப்பவர் தலைமை அமைச்சர்.

9. ஆதரவுகளின் இருப்பிடம் தலைமை அமைச்சர். முன்னர் அரசருக்கிருந்த சிறப்பதிகாரங்கள் யாவும் தற்சமயம் தலைமை அமைச்சரிடம் இருப்பதுதான் இதற்குக் காரணம். பொது அலுவலர்கள் தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப அரசியால் நியமிக்கப்படுகின்றனர். பட்டங்கட்கும் பதவிகட்கும் ஆட்களை பரிந்துரை செய்பவர் தலைமை அமைச்சரே.

10. காமன்வெல்த்திலுள்ள தலைமை அமைச்சர்களுடன் அரசாங்க அதிபர்களுடனும் தலைமை அமைச்சர் தொடர்பு கொள்கின்றார். பன்னாட்டுப் பிரச்சனைகட்குப் பரிகாரம் காண்பதற்கும் சுமுகமான பன்னாட்டுறவிற்கும் இது அவசியம்.

## 3.6 தலைமை அமைச்சரின் முக்கியத்துவம்

இங்கிலாந்தின் அரசியலமைப்பிலுள்ள சிறப்பம்சம் தலைமை அமைச்சர் பதவி ஆகும். தலைமை அமைச்சரது பணிகட்கும், அதிகாரங்கட்கும் அவரது ஆற்றலும் கட்சியின் ஆதரவும் தான் அடித்தளங்களாகும். வாக்காளர்களால் தேர்வு செய்யப்பட்ட இவர் தனது அரசாங்கத்தை ஊர்ஜிதப்படுத்த எப்பொழுது வேண்டுமெனினும் வாக்காளரை அணுகலாம். அரசாங்கத்தின் உறுப்பினர்கள் இவருக்குக் கட்டுப்பட்டவர்கள். அரசாங்கத்தின் கொள்கையை உருவாக்குவதில் முக்கிய பங்கு இவருக்கு உண்டு. காமன்ஸ் சபையில் இவருக்குள்ள முதன்மையும் செல்வாக்கும் இவருக்கு சிறப்பு அளிக்கின்றது.

சிறிது காலமாகத் தலைமை அமைச்சரது அதிகாரங்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. அவரது அதிகாரங்கள் அதிகரித்ததற்குப் பல காரணங்கள் கூறலாம்.

கட்சியின் முக்கிய அங்கத்தினரும் கடைநிலை அங்கத்தினரும் தலைமை அமைச்சரைத் தலைவராக்கிக் கொள்வது ஒரு முக்கிய காரணமாகும். தமது

ஆதரவாளர்கட்குத் திருப்தியளிக்க இவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார். எல்லா அமைச்சர்களையும் இவர் நியமனம் செய்கின்றார். இவருடைய ஆலோசனையின் பேரில்தான் எல்லா சமய சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நியமனம் செய்யப்படுகிறார்கள். இவருடைய பரிந்துரை அடிப்படையில் தான் அரசியார் பிரபுத்துவம் வழங்குகிறார். மேலும் வெகுமதிகளும் வழங்கப்படுகின்றன. தலைமை அமைச்சருடன் ஒத்துப்போகாத அமைச்சர்களைப் பதவியினின்று அகற்றலாம். அல்லது அவர்களை இராஜினாமா செய்யச் சொல்லலாம். பாராளுமன்றத்தைக் கலைத்துவிடப் போவதாக இவர் பயமுறுத்தலாம். இக்காரணத்தைச் சுட்டிக்காட்டி கிறிஸ்டோபர் ஹாலிஸ் போன்ற எழுத்தாளர்கள் இங்கிலாந்தில் காணப்படுவது அமைச்சர் குழு அரசாங்கமே அன்றி பாராளுமன்ற முறையிலான அரசாங்கமல்ல என்கின்றார். சட்டமியற்றுவது சம்பந்தமாக வரக்கூடிய அனைத்துத் துவக்க முயற்சிகளும் அமைச்சர் குழுவிடமிருந்தே வருகின்றன. இவ்விரு அதிகாரங்களும் அமைச்சர் குழுவுடைய சர்வாதிகாரத்திற்கு வழி வகுக்கும். அமைச்சர் குழுவின் அலுவலகமும் அமைச்சர் குழுவின் குழுக்களும் தலைமை அமைச்சரது அதிகார வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அமைச்சர் குழுவின் அலுவலகம் தலைமை அமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பணிபுரிகின்றது. எல்லா முக்கியக் குழுக்களிலும் இவருக்குப் பிரதிநிதித்துவமுண்டு.

அண்மையில் நிகழ்ந்துள்ள விஞ்ஞான வளர்ச்சியும் பன்னாட்டு உறவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் கூட தலைமை அமைச்சரது அதிகார வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. டெலிவிஷனும், வானொலிப் பெட்டியும் தலைமை அமைச்சரை மக்களது இல்லங்களுக்குக் கொணருகின்றன. உச்ச மாநாடுகளில் இவர் அவ்வப்போது கலந்து கொள்வதனால் இவர் அயல் நாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் முக்கிய பங்கு வகிக்க முடிகின்றது.

உலக நாடுகளிலுள்ள தலைவர்களில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சரைப் போன்று அதிகாரங்களைக் கொண்டவர்கள் அதிகம் இல்லை. எல்லா நாட்டு தலைமை அமைச்சர்களும் சம அதிகாரம் கொண்டவர்கள் என்று பொருளல்ல. அப்பதவியை வகிப்பவரையொத்துக் தான் தலைமை அமைச்சர் பதவி அமையும் என்று முன்னாள் தலைமை அமைச்சரான ஆஸ்க்வித் பிரபு கூறியுள்ளார். எல்லாவற்றையும் விட முக்கியமானவை தலைமை அமைச்சரது குணநலனும் திறமையுமாகும். தமது கட்சியின் முழு ஆதரவுடைய பிரதமர் பண்டைய உரோமப் பேரரசையும் இந்நாளைய எதேச்சதிகாரியையும் ஒத்தவர் என்று சர் ஐவர் ஜென்னிங்ஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் அதிக அளவு அதிகாரம், கவுரவம் மற்றும் ஆதரவாளர்களை உயர்ந்த அளவிற்கு ஆதரிக்கும் தன்மை போன்றவைகளை உடையவர் என்பது அவருடைய அதிகாரங்களைப் பற்றிய திறனாய்வில் நமக்குத் தெரிகின்றது. இருப்பினும் இவர் தன்னுடைய அந்தஸ்த்தையும் அதிகாரத்தையும் உபயோகப்படுத்துவதற்குச் சில கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. இவர் தன்னுடைய அதிகாரத்தை தன் இச்சைக்கேற்றாற் போல உபயோகிக்க முடியாது. அதிலும் குறிப்பாக தொழிற் கட்சியைச் சார்ந்த தலைமை அமைச்சராக இருந்தால் சமவலிமை பெற்ற தொழிற்சங்கப் பிரிவுகளின் மாறுபட்ட கருத்துக்களை இவர் உதாசீனப்படுத்த முடியாது. ஆகையால் இவர் எல்லோருக்கும் திருப்தி தரக்கூடிய கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் அல்லது கட்சிக்குள் ஏற்படும் தகராறுகளைச் சந்திப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். வரப்போகின்ற தேர்தல்களைச் சந்திக்க வேண்டிய நிலையில்

கட்சியின் தலைவர் என்ற முறையில் இவர் ஒரு எதேச்சதிகாரி போல தவறான கொள்கைகளைக் கடைப்பிடிக்கக் கூடாது.

இருகட்சி முறையின் கீழ் அரசாங்கம் குறுகிய பெரும்பான்மைக் கொண்டிருப்பதும், கட்சி மாறி வாக்களிப்பது சாதாரணமாக இருப்பதும் தலைமை அமைச்சரது நிலையை ஓரளவு பலமற்றதாக்கியிருக்கிறது. ஆனால் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் தலைவராக இருந்துகொண்டு, எழுதப்படாத அரசியலமைப்பின் கீழ் உயர்வான சட்டமன்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றார். இவ்வாறாக இவர் மாற்றார் கண்டு பொறாமைப்படும் அளவில் சட்டமன்ற அதிகாரத்தையும் ஆட்சித்துறை அதிகாரத்தையும் கொண்டிருக்கின்றார்.

## 3.7 சட்டமன்றம்

அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் அதன் மூன்று உறுப்புகளில் ஒன்றான சட்டமன்றத்துறை முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. தற்கால அரசுகள் ஒரு சபையை மட்டும் கொண்ட சட்டமன்றம் அல்லது இரண்டு சபைகளைக் கொண்ட சட்டமன்றம் என்ற இருவகையான சட்டமன்றங்களைக் கொண்டிருக்கின்றன. பெரும்பான்மை அரசுகள் இரு சபைகளைக் கொண்ட சட்டமன்றங்களைக் கொண்டிருக்கின்றன. இரு சபைகளில் ஒன்று மேலவை, மற்றொன்று கீழ் சபையாகவும் இருக்கும். போர்ச்சுக்கல், துருக்கி, நியூசிலாந்து, செக்கோஸ்லோவியா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் ஒரு சபையை மட்டும் கொண்ட சட்டமன்றங்கள் உள்ளன. ஒரு சபையை மட்டும் கொண்ட சட்டமன்றம் அமைக்க கிராம்வெல் காலத்தில் இங்கிலாந்தில் முயற்சிக்கப்பட்டது. ஆனால் அம்முயற்சி தோல்வியடைந்து விட்டது.

மேல்சபை அல்லது இரண்டாவது சபையின் அமைப்பைப் பொறுத்தமட்டில் தற்கால அரசுகளிடையே ஒருமித்த கருத்து இல்லை. இங்கிலாந்தின் மேலவை பாரம்பரியத்தின் அடிப்படையில் தோன்றியது. கனடாவின் மேலவை நியமன உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அமெரிக்காவில் மேலவை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இந்தியாவில் மேலவை மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. மேலவையினுடைய அதிகாரங்கள் சம்பந்தமாக மூன்று கோட்பாடுகள் உள்ளன. முதலாவதாக, சுவிட்சர்லாந்தில் இருப்பது போல கீழவையுடன் சம அதிகாரம் கொண்டிருத்தல், இரண்டாவதாக, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளில் இருப்பது போல பண விஷயங்களில் கீழவை மேன்மை பெற்றிருத்தல், மூன்றாவதாக இங்கிலாந்தின் மேலவையான பிரபுக்கள் சபை போன்று மசோதாக்களை மறு ஆய்வு செய்யும் அதிகாரம் மட்டும் கொண்டிருத்தல் என்பனவாகும்.

ஆனால், கீழவையினுடைய அமைப்பைப் பொறுத்தமட்டில் தற்கால அரசுகளுக்கிடையே ஒருமித்த கருத்து காணப்படுகின்றது. வேட்பாளர்களுடைய தகுதியைப் பொறுத்தமட்டில் ஒரு சில வேறுபாடுகள் இருக்கலாம்.

இங்கிலாந்தில் சட்டமன்றத் துறையாகத் திகழ்வது அதன் பாராளுமன்றமாகும். அரசி, பிரபுக்கள் சபை, காமன்ஸ் சபை ஆகியவை அடங்கியது தான் பாராளுமன்றம் எனப்படுவது. பிரபுக்கள் சபை மேல்சபையாகவும், காமன்ஸ் சபை கீழ்சபையாகவுமிருக்கின்றன. கடந்த காலங்களில் பிரபுக்கள் சபை அதிக அளவில் அதிகாரங்களையும், மதிப்பையும் உடையதாக இருந்தது. காலப்போக்கில் தனது அதிகாரங்களனைத்தையும் இழந்த இப்பிரபுக்கள் சபை இன்று அரசியலமைப்பில் ஒரு பகுதியாக மட்டுமே கருதப்படுகிறது.

## 3.8 பிரபுக்கள் சபை (The House of Lords)

**அமைப்பு**

பிரபுக்கள் சபையில் ஆயிரத்திற்கும் அதிகமான அங்கத்தினர்கள் உள்ளனர். இவ்வங்கத்தினர்கள் பின்வரும் வகைப்பட்டவர்கள்.

1. பரம்பரைப் பிரபுக்கள் **(Hereditary Peers)** : பிரபுக்கள் சபையின் மொத்த அங்கத்தினரில் பத்தில் ஒன்பது பேர் இவ்வகைப்பட்டவர். பிரபுக்களை உருவாக்கும் அதிகாரம் அரசியினுடையது. பிரபுக்கள் பதவி வாரிசுரிமையின் அடிப்படையில் மூத்த மகவிற்குக் கிடைக்கின்றது. 1963-ஆம் ஆண்டைய பிரபுக்கள் சட்டத்திற்கேற்ப தமது ஆயுட்காலத்திற்குப் பதவியை விட்டு விடும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

2. ஆயுட்காலப் பிரபுக்கள் **(Life Peers)** : 1958-ஆம் ஆண்டைய பிரபுக்கள் சட்டத்திற்கிணங்க ஆயுட்கால பிரபுக்கள் மற்றும் பெண் பிரபுக்கள் ஆகியோரை உருவாக்க அரசி உரிமை பெற்றுள்ளார்.

3. ஸ்காட்லாந்தின் பிரபுக்கள் **(Peers of Scotland)** : 1963-ஆம் ஆண்டைய பிரபுக்கள் சட்டத்தின்படி ஸ்காட்லாந்தின் பிரபுக்கள் யாவரும் இங்கிலாந்தின் பிரபுக்கள் சபையில் அமர உரிமை பெற்றனர்.

4. சட்டப் பிரபுக்கள் **(Lords of Appeal)** : 1870-ஆம் ஆண்டைய மேல் முறையீட்டு நீதிச்சட்டத்திற்கேற்பவும் (Appellate Jurisdiction Act) அதன் திருத்தங்களுக்கேற்பவும் 9 சட்டப் பிரபுக்கள் இச்சபையில் அங்கத்துவம் பெற்றுள்ளனர். இவர்கள் தாம் நாட்டின் உயர்நீதிபதிகள்.

5. மதப் பிரபுக்கள் **(Spiritual Peers)** : கான்டர்பரி (Canterbury), யார்க் (York) ஆகிய பகுதிளில் ஆர்ச் பிஷப்புகளும் (Archbiships), ஆங்கிலிக்கன் திருச்சபையைச் (Anglican Church) சேர்ந்த 24 பிஷப்புகளும் (Bishops) இச்சபையின் அங்கத்தினர்.

21 வயத்திற்குக் குறைந்தவரும், வேற்று நாட்டவரும், திவாலானவர்களும் தேசத்துரோகம் போன்ற குற்றங்களுக்குத் தண்டனை பெற்றவரும் பிரபுக்கள் சபையில் அமர்வதற்கு உரிமை இல்லை.

ஆயிரத்திற்கும் அதிகமான அங்கத்தினரை இச்சபை கொண்டிருப்பினும் இதன் கூட்டங்களில் ஏறத்தாழ 250 அங்கத்தினர்களே பங்கெடுப்பர்.

பிரபுக்கள் சபை அங்கத்தினருக்கு ஊதியம் ஏதும் கிடையாது. சபையின் கூட்டங்களில் பங்கெடுப்பதற்கென மேற்கொள்ளும் பயணச் செலவுகள் மட்டுமே அவர்கட்கு அளிக்கப்படும்.

இச்சபையின் குறைவெண் வரம்பு (Quorum) மூன்றாகும். ஒரு மசோதாவைப் பரிசீலனைக்கு எடுக்கும் வகையில் குறைந்த பட்சம் முப்பது அங்கத்தினராவது சபையில் ஆஜராயிருக்க வேண்டும்.

காமன்ஸ் சபையின் அங்கத்தினருக்குள்ள எல்லா சலுகைகளும், உரிமைகளும் பிரபுக்கள் சபையினருக்குமுண்டு. பிரபுக்கள் பொதுத் தேர்தலின் போது வாக்களிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகத் தேர்தல்களில் அவர் போட்டியிட முடியாது. எந்த பிரபுவேனும் அங்ஙனம் போட்டியிட விரும்பினால் 1963-ஆம் ஆண்டு ஹியூம் பிரபு (Lord Hume) செய்தது போல தமது பிரபு பட்டத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்.

இரு சபைகளின் கூட்டத் தொடர்களும் ஒரே வேளையில் கூட்டப்படுகின்றன.

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

3. பிரபுக்கள் அவையின் சட்டமன்றப்பணிகளைத் தொகுத்தெழுது.

ஆனால் இவற்றின் தற்கால ஒத்திவைப்பு (adjournment) மாறுபடலாம். பிரபுக்கள் சபையிலுள்ள பேச்சு சுதந்திரத்திற்கு வரம்பு கிடையாது. இதன் நடைமுறை விதிகளும் (rules of procedure) கடினமானவையல்ல. இச்சபையில் பல்வேறு குழுக்களிருப்பினும் அவற்றிற்கு காமன்ஸ் சபைக் குழுக்கட்குள்ள முக்கியத்துவம் இல்லை.

**அதிகாரங்களும் பணிகளும்**

1. **சட்டமியற்றுதல்** : பாராளுமன்றத்தில் சட்டமியற்றும் பணியில் பிரபுக்கள் சபைக்கு ஒரு பெரும் பங்கு உள்ளது. மசோதாக்களை (bills) மறுபரிசீலனை செய்வதுதான் பிரபுக்கள் சபையின் முக்கியமான சட்டமியற்றும் பணி. ஒரு மசோதா நல்ல முறையில் செயலாற்றப்படுவதற்கெனவே அது மறுபரிசீலனை செய்யப்படுகின்றது. மறுபரிசீலனையின் பொழுது பல கோளாறுகளை அகற்ற இயலும். காமன்ஸ் சபையின் வேலைப் பளுவைக் குறைக்கவும் தனியார் மசோதாக்களைப் பரிசீலிக்கவும் ஆட்சித் துறை இயற்றும் சட்டங்களைப் பிரிசீலிக்கவும் பிரபுக்கள் சபை பயன்படுகிறது.

எல்லா மசோதாக்களும், அரசின் முக்கிய கொள்கைகள் சம்பந்தப்பட்ட மசோதாக்களும் காமன்ஸ் சபையில் தான் உருவெடுக்கின்றன. வாதத்துக்கிடமற்ற மசோதாக்கள் மட்டும்தான் பிரபுக்கள் சபையில் தாக்கல் செய்யப்படுகின்றன. ஒரு மசோதா பண மசோதாவாக தீர்மானிக்கப்படுவதற்கு காமன்ஸ் சபையின் சபாநாயகரின் (Speaker) அத்தாட்சி தேவை. 1911-ஆம் ஆண்டைய பாராளுமன்றச் சட்டத்திற்கேற்ப பிரபுக்கள் சபை ஒரு பண மசோதாவுக்கான தனது ஆமோதிப்பை ஒரு மாத காலத்திற்கு மட்டுமே அளிக்காமல் இருக்க முடியும். ஒரு மாதம் முடிந்தவுடன் பிரபுக்கள் சபையின் ஒப்புதல் கிடைக்காவிடினும் அம்மசோதா சட்டமாகாலாம். முன்னர் ஒரு சாதாரண மசோதாவிற்கு இரு ஆண்டுகள் வரையிலும் தான் பிரபுக்கள் சபை ஆமோதிப்பை வழங்காமல் இருக்கமுடியும். இந்நிலை 1949-ஆம் ஆண்டின் பிரபுக்கள் சபை சீர்திருத்தச் சட்டத்தால் (House of Lords Reform Act) மாற்றப்பட்டது. 1947 ஆம் ஆண்டு காமன்ஸ் சபையால் நிறைவேற்றப்பட்ட இது 1949-ஆம் ஆண்டு வரையிலும் சட்டமாக முடியவில்லை. இதற்குக் காரணமென்னவெனில் 1911-ஆம் வருடத்திய சட்டதிற்கேற்ப பிரபுக்கள் சபை தனக்கு விருப்பமற்ற இச்சட்டத்தை இரண்டாண்டுகள் காலதாமதப்படுத்திற்று. 1949-ஆம் ஆண்டின் சட்டத்தின்படி பிரபுக்கள் சபை ஒரு சாதாரண மசோதாவை ஒரு வருடகாலம் மட்டுமே காலதாமதப்படுத்த முடியும். பிரபுக்கள் சபை எதிர்ப்புத் தெரிவிக்கும் மசோதா மீண்டும் ஒருமுறை மட்டும் காமன்ஸ் சபையால் நிறைவேற்றப்பட்டால் போதும். பிரபுக்கள் சபை எதிர்க்கும் மசோதா சட்டமாக நிறைவேற்றப்படுவதற்குப் பாராளுமன்றத்தின் இரு கூட்டத் தொடர்கள் போதும்.

2. **ஆழ்ந்தாராய்தல்** : பிரபுக்கள் சபையில் நடக்கும் விவாதங்கள் கொள்கையின் முக்கிய அம்சங்களைத் சார்ந்தவையாகத்தான் இருக்கும். உயர்ந்த நிலையிலானவை இவ்விவாதங்கள். முதிர்ந்த அரசியல்வாதிகளும், முன்னாள் அமைச்சர்களும் மற்றும் விசேஷத்திறமை பெற்றவர்களே இச்சபையின் உறுப்பினர்கள். கீழவையில் உறுப்பினர்கள் தமக்கு விளம்பரம் கிடைப்பதற்காகவும் பேசுவர். ஆனால் பிரபுக்கள் சபையினர் முக்கியமான கருத்து ஏதேனும் தெரிவிக்க இருந்தால் மட்டுமே பேசுவர். கட்சியின் கட்டுப்பாடு பிரபுக்கள் மீது அதிகம் கிடையாது. மேலும், மசோதாக்களைப் பரிசீலிப்பதற்கு பிரபுக்கள் சபைக்குக் கிடைக்கும் நேரம் அதிகம். பிரபுக்கள் சபை அரசாங்கத்தின் அலுவல்களை முதலில் கவனிக்க வேண்டும் என்ற நியதி கிடையாது. ஆகவே தமக்கு விருப்பமான எந்தப் பிரச்சனையும் ஒரு பிரபு எழுப்பலாம். வாத நிறுத்தத்

தீர்மானம் (Closure) இச்சபையில் செயற்படுத்தப்படுவதில்லை. பிரபுக்கள் சபையில் நடக்கும் வாதங்கள் கொள்கை உருவாக்கப்படுவதற்கும் பரந்த கருத்துக்கள் தெரியப்படுத்துவதற்கும் உதவுகின்றன.

**3. நீதி வழங்குமதிகாரம் :** பிரபுக்களின் பதவி உரிமை குறித்து எழும் தகராறுகளை இச்சபை பரிசீலித்து முடிவெடுக்கின்றது. தனது சிறப்புரிமைகட்குப் பங்கம் விளைவிக்கக் கூடியவரைத் தண்டிக்கும் அதிகாரம் இச்சபைக்கு உண்டு. குற்ற விசாரணை (impeachment) செய்யக் கூடிய அதிகாரம் இச்சபைக்கு உண்டெனினும் கடைசியாகக் குற்றவிசாரணை நடந்தது 1806-ஆம் ஆண்டிலாகும். பிரபுக்களை நீதி விசாரணை செய்யும் அதிகாரம் கிடையாது. 1918-ஆம் ஆண்டைய குற்றவியல் நீதிச் சட்டத்தினால் (Criminal Justice Act) இவ்வுரிமை அகற்றப்பட்டது.

குற்றவியல் அரசுத்துறை வழக்குகளுக்கு உயர்நீதிமன்றமாகத் திகழ்வது பிரபுக்கள் சபையே. இச்சபையின் சட்டப்பிரபுக்களும், ஏற்கனவே உயர்நீதிபதிகளாக இருந்து தற்பொழுது பிரபுக்களாக உள்ள அங்கத்தினரும்தான் இப்பணியில் ஈடுபடுகின்றனர். இப்போது இது போன்ற பிரபுக்கள் 9 பேர் இச்சபையில் உள்ளனர்.

**4. அரசியலமைப்புச் சார்ந்த அதிகாரம் :** ஒரு விதத்தில் தலைமை அமைச்சருக்கு பிரபுக்கள் சபை உதவி புரிகின்றது. அரசாங்கத்தில் புதிதாகப் புகும் அமைச்சர் இச்சபையின் அங்கத்தினராக்கப் படலாம். முதிர்ந்த அரசியல்வாதிகட்கு ஓய்வுக்கால உறைவிடமாக விளங்குவது இச்சபையே. திறமையிலும், அறிவாற்றலிலும், பயிற்சியிலும் முதிர்ந்த ஆனால் காமன்ஸ் சபையின் அங்கத்தினராக விரும்பாதவர்களை இச்சபையின் அங்கத்தினராக்கி அவர்களது அறிவை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தலாம்.

பிரபுக்கள் சபை மசோதாக்களைத் திறனாய்வு செய்வதன் மூலம் காமன்ஸ் சபையால் நிறைவேற்றப்படும் குறைகளுள்ள சட்டங்களுக்குத் தடங்கல் விதிக்கின்றது. இச்சபையின் விவாதங்களுக்கு அளிக்கப்படும் விளம்பரம் அரசாங்கத்தின் கொள்கை முழுவதையும் மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றது. சட்டங்கள் நிறைவேற்றப்படுவதைத் தாமதப்படுத்துவதானால் கட்சி வெறியின் அடிப்படையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களைப் பற்றி ஒன்றிற்கு இருமுறை சிந்திக்க இச்சபை வாய்ப்பு அளிக்கின்றது. இச்சபை அதன் அதிகாரமனைத்தையும் இழந்துவிட்ட போதிலும் அரசியலமைப்பில் அதற்குரிய பங்கு இன்றும் இச்சபைக்கு உண்டு.

**பிரபுக்கள் சபையின் தலைவர் :** பிரபுக்கள் சபையின் கூட்டத் தொடர்களுக்குத் தலைமை தாங்குபவர் சான்சலர் பிரபு. இவர் அமைச்சர் குழுவில் ஓர் உறுப்பினர். வழக்கமாக பிரபு ஒருவரே சான்சலர் பிரபுவாக இருப்பார். ஆனால் சான்சலர் பிரபு ஒரு பிரபுவாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆகையால் அவர் அவையில் அதன் எல்லைக்குச் சிறிது வெளியேயுள்ள இருக்கையில் அமருகிறார். பிரபுவாக இல்லாத ஒருவர் சான்சலர் பிரபுவாக நியமிக்கப்பட்டால் அவரை உடனே பிரபுவாக ஆக்கிவிடுவார்கள்.

சான்சலர் பிரபுக்கும் பலவிதமான அதிகாரங்கள் உண்டு. தன்னுடைய வழிமுறைகளை சபையே கட்டுப்படுத்திக் கொள்கிறது. ஒழுங்குப் பிரச்சனைகளின் மீது தனது தீர்மானத்தை வெளியிடும் உரிமை அவைத் தலைவருக்குக் கிடையாது. உதாரணமாக அவையில் இரு உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் பேச முயற்சி செய்யும் பொழுது எந்த ஒருவர் பேச வேண்டும் என்பதை அவைதான் தீர்மானிக்க வேண்டுமே

தவிர அவைத் தலைவர் அல்ல. சான்லர் ஒரு பிரபுவாக இருந்தால் அவர் மற்ற பிரபுக்களைப் போல தனது வாக்குரிமையைப் பயன்படுத்தலாம். ஆனால் ஒரு தீர்மானத்தை நிர்ணயம் செய்யும் வகையில் கடைசியாக இவ்வுரிமையைப் பயன்படுத்த முடியாது. மக்கள் அவையின் சபாநாயகருடன் ஒப்பிடும்பொழுது பிரபுக்கள் அவையின் சான்சலர் பிரபுக்கு குறிப்பிடத்தகுந்த அதிகாரங்கள் எதுவுமில்லை என்றே குறிப்பிடலாம். ஆனால், 2003-ம் ஆண்டு, பிரபுக்கள் சபையை சீரமைக்கும் விதமாக, சான்சலர் பதவியை நீக்க அரசு முடிவு செய்தது.

## 3.9 காமன்ஸ் சபை (House of Commons) :

**அங்கத்தினர் தேர்வு :**

இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் கீழ்சபையாகத் திகழ்வது காமன்ஸ் சபையாகும். இச்சபை 635 அங்கத்தினர்களை உடையது. இவ்வங்கத்தினர்களை வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் பிரிட்டனின் குடிமக்களும் ஐரிஷ் மக்களும் தேர்ந்தெடுக்கின்றனர். பிரபுக்களும் வேற்று நாட்டவரும் புத்திய சுவாதீனமற்றவரும், அறிவிலிகளும், பன்னிரண்டு மாத காலத்திற்கதிகமாகச் சிறைத்தண்டனை அனுபவிக்கும் பெருங்குற்றம் புரிந்தோரும், தேர்தல்களின் போது ஊழல்களில் ஈடுபட்டதற்காகத் தண்டனை பெற்றோரும் காமன்ஸ் சபை தேர்தல்களில் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாது.

காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விழையும் வேட்பாளர்கள் 18 வயது நிரம்பியவராகவும் பிரிட்டனின் குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும். இவர்களது வேட்புமனு பத்து வாக்காளர்களால் ஆதரிக்கப்பட வேண்டும். வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் தொகுதியில் வசிக்க வேண்டும் என்ற நிபந்தனையில்லை. பிரபுக்கள் சபையின் அங்கத்தினர், இங்கிலாந்தின் திருச்சபை, ஸ்காட்லாந்தின் திருச்சபை ஆகியவற்றைச் சேர்ந்த மதகுருக்கள், வேறு நாட்டவர்கள், வக்கற்ற கடனாளிகள், பெருங்குற்றம் புரிந்து தண்டனை அனுபவிப்பவர்கள், தேர்தல்களின்போது ஊழல்களில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டவர்கள், சில அரசுத் துறை பணியாளர்கள், நீதிபதிகள், அயல்நாட்டுத் தூதுவர்கள், முப்படைகளையும் காவல் துறையையும் சேர்ந்தவர்கள், தேசிய உடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களில் ஊதியத்துடன் பணிபுரியும் வாரிய அங்கத்தினர்கள், பாங்க் ஆப் இங்கிலாந்தின் இயக்குநர்கள், மாவட்ட மன்ற எழுத்தர்கள், நகர எழுத்தர்கள் போன்றோர் வேட்பாளர்களாக உரிமை அற்றவர்கள்.

**காமன்ஸ் சபைக்குள்ள சிறப்புரிமைகள் :**

1. கைது செய்யப்படாமலிருக்கக்கூடிய உரிமை : குற்றவியல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இவ்வுரிமை பயன்படாது. சபையின் முன்னும் அதன் குழுக்களின் முன்னும் அழைக்கப்படும் சாட்சிகளுக்கும் சபையின் ஊழியர்கட்கும் இவ்வுரிமை பயன்படுகிறது.

2. பேச்சுரிமை : ஆரம்பத்தில் மன்னரிடமிருந்த அங்கத்தினரைப் பாதுகாப்பதற்கு இவ்வுரிமை பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது அங்கத்தினர் சபையினுள் பேசுவதற்கெதிராகவும் சபையின் உத்தரவுக்கிணங்க வெளியிடப்படும் அறிக்கைகட்கெதிராகவும் வழக்குத் தொடர முடியாது.

3. அரசரை அணுகும் உரிமை : அரசருக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் உரிமை இச்சபைக்கு உள்ளது.

4. தனது அமைப்பை நிர்ணயிக்கும் உரிமை : இவ்வுரிமையைப் பயன்படுத்தி

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

4. காமன்ஸ் சபையின் அமைப்பை எழுது.
5. சபாநாயகரின் நிலையைக் கூறுக.

காமன்ஸ் சபை தனது அங்கத்தினரது தகுதிகளை நிர்ணயிக்கிறது. இதே உரிமையை பயன்படுத்தித் தற்செயல் வெற்றிடங்களை நிரப்பவும், சபைக்கு இழிவுண்டாக்கும் அங்கத்தினரை தற்காலிகமாக நீக்கவும், அல்லது வெளியே தள்ளவும் செய்கின்றது.

5. தனது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் : எந்த விஷயத்தையும் பரிசீலிக்கும் அதிகாரம் காமன்ஸ் சபைக்கு உண்டு. இச்சபையே தனது நடவடிக்கை வரிசையை நிர்ணயிக்கின்றது. சபையினுள் எழும் விஷயங்கள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் இச்சபைக்கு மட்டுமே உண்டு.

6. உரிமை மீறலையும் அவமதிப்பையும் தண்டிக்கும் அதிகாரம் : உரிமை மீறல் என்பது பாராளுமன்றத்தை அவமதிப்பதற்குச் சமமாகும். தனது மதிப்பையும் ஆற்றலையும் நிலைநாட்டத் தகுந்த நடவடிக்கை எடுக்க காமன்ஸ் சபைக்கு உரிமையுண்டு.

## 3.10 காமன்ஸ் சபை சபாநாயகர்

அரசியலமைப்பின் உட்கருத்தை உண்மையில் பிரதிபலிக்கும் ஒரே நிறுவனம் காமன்ஸ் சபையின் சபாநாயகர் என்று பேராசிரியர் டைசி (Professor Dicey) கூறுகின்றார். காமன்ஸ் சபையின் கூட்டத்தொடர்களுக்கு தலைமை தாங்குபவர் சபாநாயகர்.

ஆரம்பத்தில் விவாதங்களின்போது தலைமை தாங்குவதும், அவற்றின் முடிவில் எடுக்கப்படும் தீர்மானங்களை அரசருக்கும் பிரபுகட்கும் அறிவிப்பது மட்டும் சபாநாயகரின் பணிகளாக இருந்தன. இவ்வகைப்பட்ட முதல் சபாநாயகர் 1937-இல் பதவி வகித்த தாமஸ் ஹங்கர் ஃபோர்டு (Sir Thomas Hunger Ford) என்பவர். பல சபாநாயகர்கள் அரசராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். 17-வது நூற்றாண்டில் சபாநாயகர் தீவிர அரசியல்வாதியாகவும், அமைச்சர் பதவி வகிப்பவராகவும் வாதங்களில் பங்கெடுப்பவராகவும் இருந்தார். ஏபர்க்ராம்பி (Abercrombie) சபாநாயகராக இருந்தபொழுதுதான் சபாநாயகர் விவாதங்களில் பங்கெடுக்கக் கூடாதென முடிவெடுக்கப்பட்டது. இவருக்கடுத்து சபாநாயகராக வந்த ஷாலஃபீவர் (Shaw Lefever) (1839 to 1857) என்பவர் தான் இன்று நாம் பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் காணக்கூடிய சபாநாயகரின் உயர்ந்த நடுநிலைத் தன்மையை நிலைநாட்டியவர்.

சபாநாயகர் அவரது நடுநிலைமையைப் பாதுகாப்பதற்கென தொகுதியினின்று எடுக்கப்படுகின்றது. வெஸ்ட் மினிஸ்டர் மாளிகையில் இவர் தங்குவதற்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது. பதவியினின்று ஓய்வு பெறும் சபாநாயகரை பிரபுவாக்குவதும் அவருக்கு ஓய்வு ஊதியம் அளிப்பது மரபு.

பல்லாண்டுகாலம் அனுபவம் உள்ள பாராளுமன்ற அங்கத்தினர்தான் சபாநாயகராக இருப்பார். அவரது தேர்தல் என்பது பெயரளவில் மட்டும் நடப்பது ஆகும். பதவியினின்று ஓய்வுபெறும் சபாநாயகருக்கு வழியுமையராக (Successor) வருபவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் கலந்தாலோசிப்பது வழக்கம். இதன் விளைவாக சபாநாயகர் எப்பொழுதும் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்படுவார். ஓய்வு காலம் வரையிலும் சபாநாயகர் பதவியில் நீடிப்பது வழக்கம்.

**சபாநாயகரின் பணிகள் :** காமன்ஸ் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதுதான் சபாநாயகரின் முக்கியபணி. மிகக் கண்டிப்புடன் தமது சுதந்திரத்தையும் நடுநிலைமையையும் பின்பற்றினால்தான் சபாநாயகரால் மேற்கூறிய பணியைச் சரிவர செய்யமுடியும். சபாநாயகரது பதவியைக் காப்பதில் அங்கத்தினர் எடுத்துக் கொள்ளும்

அக்கறையின் விளைவாகத்தான் அவரால் கட்சி அரசியலுக்கப்பாற்பட்டு செயலாற்ற இயலுகின்றது. இவரது முடிவுகளை சாதாரணமாக ஆட்சேபிப்பதில்லை. ஒழுங்காக விவாதங்கள் நடத்தப்படுவதற்கு இவர் கவனம் செலுத்த வேண்டும். சபாநாயகரின் அதிகாரத்திற்குக் கட்டுப்படாவிடில் சபை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படவோ, ஒத்திவைக்கப்படவோ செய்யலாம்.

நிலை ஆணைகட்கும் (Standing orders) முன்னோடிகள் உருவாக்கிய வழக்காறுகட்கும் ஏற்ப சபாநாயகர் நடைமுறை விதிகளை விளக்கிச் செயலாற்றுகின்றார். விவாதங்களை நேர்மையாகவும் கட்டுப்பாடின்றியும் நடத்த வேண்டும். இதற்கென சபாநாயகர் மூன்று முறைகளை கடைப்பிடிக்கின்றார். முதலாவது, விவாதத்திற்குரிய காலம் எல்லா கட்சிக்கும் நேர்மையான முறையில் அளிக்கப்பட்டுள்ளதா என்று இவர் பார்க்கின்றார். இரண்டாவது, தனிநபர்கள் கேள்விகள் கேட்பதற்கும், விவாதங்களில் பங்கு கொள்வதற்கும் இவர் இடமளிக்கிறார். மூன்றாவது சபையின் உரிமைகளை அரசாங்கம் மீறாவண்ணம் கண்காணிக்கின்றார். திருத்தங்களையும் கேள்விகளையும் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்காக விவாதத்திற்குக் கொண்டுவரும் விஷயங்களையும் அனுமதிப்பதில் சபாநாயகருக்கு இறுதி அதிகாரம் உண்டு. ஒரு மசோதாவைப் பணமசோதா என்று சான்றிட சபாநாயகருக்கு மட்டும்தான் உரிமை உண்டு.

காமன்ஸ் சபை ஒரு தீர்மானத்திற்காக வாக்கு எடுக்கப்போகும் தருணத்தில் சபாநாயகர் முக்கிய பணியாற்றுகின்றார். வாக்களிப்பு சமமாக இருந்தால் இவர் தமது முடிவுகட்கும் வாக்கைப் (Casting vote) பயன்படுத்துகின்றார். இடைத்தேர்தல்கள் நடத்துவதற்குச் சான்றாணைகள் (Standing committees) வழங்குவதும், தனியார் மசோதாக்களைப் பரிசீலிப்பதற்கும் ஆராய்வாளர்களை நியமிப்பதும் தலைவர்களைத் தேர்வு செய்வதும் பல்வேறு நிலைக் குழுக்களுக்கு மசோதாக்களை அனுப்புவதும் சபாநாயகரின் பணிகள்.

பாராளுமன்றத்தின் வெளியில் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளைப் பாதுகாப்பதும், அதன் பிரதிநிதியாகத் திகழ்வதும், அயல்நாடுகளினின்றும், அயல்நாட்டுச் சட்டமன்றங்களினின்றும் இங்கிலாந்தின் காமன்ஸ் சபைக்கு வரும் செய்திகளையும் ஆவணங்களையும் பெறுவதும் சபாநாயகரே. அரசாங்கத்திற்கும் காமன்ஸ் சபைக்குமிடையே செய்திகள் அனுப்புவதும் அவரே. பாராளுமன்ற நிறுவனங்கள் நடைமுறை விதிகள் சம்பந்தப்பட்ட முக்கியமான மாநாடுகள் சபாநாயகரின் தலைமையின் கீழ் நடைபெறுகின்றன.

**சபாநாயகரைச் சேர்ந்த பிற அதிகாரிகள்**

1. **வழிவகைகள் குழுத்தலைவர் (Chairman of the Committee of Ways and Means) :** இவர்தான் துணைச் சபாநாயகர், பாராளுமன்றத்தின் கூட்ட காலத்திற்கு இவர் நியமிக்கப்படுகின்றார். சபை குழுவாக அமரும்பொழுது இவர் தலைமை தாங்குகின்றார். தனியார் அலுவல்மீது இவர் மேற்பார்வை செலுத்துகின்றார்.

2. **சார்ஜெண்ட் (Sargeant-at-arms) :** சபாநாயகரின் உதவியாளரான இவர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றார். சபையின் உத்தரவுகளையும், சபாநாயகர் பிறப்பிக்கும் சான்றணைகளையும் இவர் செயற்படுத்துகின்றார்.

காமன்ஸ் சபையின் எழுத்தரும் (Clerk of the House of Commons) இரண்டு உதவி எழுத்தர்களும் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றனர். சபையின் பரிந்துரைக்கேற்பத்தான் இவர்களைப் பதவியினின்று விலக்க முடியும்.

**காமன்ஸ் சபையின் பணி**

பாராளுமன்றத்தைக் கூட்டுவதும், கலைத்துவிடுவதும் அரசியார் அதிகாரமாகும். தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப சட்டப்படியான ஐந்து ஆண்டு காலம் முடிவதற்கு முன்னரே இது கலைக்கப்படலாம். இரு சபைகளின் கூட்டத் தொடர்களும் ஒத்திவைப்பின் மூலம் முடிவடைகின்றன. பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் அரசியின் உரையுடன் ஆரம்பமாகின்றது. இவ்வுரையை அரசியார் நேரடியாகவோ அல்லது ஆணையர்கள் மூலமாகவோ நிகழ்த்தலாம்.

பல நூற்றாண்டுகளாக உருவாக்கப்பட்ட வழக்காறுகளின்படியும் நிலை ஆணைகளின்படியும் காமன்ஸ் சபையின் பணிகள் நடக்கின்றன. இச்சபையின் நிலை ஆணைகளும், அதன் வழக்காறுகளும் தேவைப்படும் அதிகாரங்களை அரசாங்கத்திற்கு அளிக்கின்றன. இச்சபையின் நடைமுறை விதிகள் சபையிலுள்ள சிறுபான்மையினருக்கு அரசாங்கத்தைத் திறனாய்வு செய்யும் முழு உரிமையையும் அளிக்கின்றன.

சாதாரணமாக காமன்ஸ் சபையின் கூட்டத்தொடரொன்று 150 நாட்கள் நடக்கும். இவற்றில் எழுபத்தைந்திற்கும் அதிக நாட்களில் தனி அங்கத்தினரது பணிகளையம் அவ்வப்பொழுது எழும் பணிகளையும், நடைமுறைப் பணிகளையும், நிதி சம்பந்தப்பட்ட பணிகளையும், சபை கவனிக்கிறது. அரசாங்கத்தின் பணிகளைக் கவனிப்பதற்கு அதிக நாட்கள் கிட்டுவதில்லை. ஆனால் கீழ்காணும் காரணங்களால் அரசாங்கம் தனது பணிகளை முடிக்க முடிகின்றது. சபையின் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்ட விஷயங்கள் மட்டுமே விவாதத்துக்குட்படுகின்றன. தேவைப்பட்டால் அரசாங்கத்தின் பணிக்கு முதன்மை அளிக்கப்படுகின்றது. விவாதங்கள் பற்றிய ஏற்பாடுகள் சபைக்கு வெளியிலேயே செய்யப்படுகின்றன. விவாதங்களின் ஒழுங்கு ஏற்கனவே முடிவாக்கப்பட்டு அவை சுருக்கமாகவே நிகழ்த்தப்படுகின்றன. சட்டமியற்றுதல் சம்பந்தப்பட்ட பணிகள் ஏற்கனவே முடிவாக்கப்பட்டு அவை சுருக்கமாகவே நிகழத்தப்படுகின்றன. சட்டமியற்றுதல் சம்பந்தப்பட்ட பணிகள் ஏற்கனவே அமைச்சர் குழுவால் திட்டமிடப்படுகின்றன. ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் அதிக அளவில் பிரயோகிக்கப்படுகின்றது.

மன்னருக்குப் பணம் தேவைப்பட்டதன் விளைவாகக் காமன்ஸ் சபை தோன்றிற்று. 500 ஆண்டுகட்கு முன்பிருந்த காமன்ஸ் சபை புரிந்த பணிகட்கும் இப்பொழுதுள்ள காமன்ஸ் சபை புரியும் பணிகட்கும் அடிப்படை வேற்றுமை ஏதுமில்லை. கீழ்க்காண்பவைதான் காமன்ஸ் சபை புரியம் பணிகள்.

அரசாங்கத்தை ஆதரித்தல், கண்காணித்தல், திறனாய்வு செய்தல்.

விவாதங்கள் நடத்தி அதன் மூலம் அரசாங்கத்தை அதன் கொள்கைகட்கு விளக்கமளிக்கச் செய்து மக்களுக்கு அறிவு புகட்டுதல்.

மக்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.

நிதி வசூலிப்பதையும் செலவிடுவதையும் கட்டுப்படுத்துதல்.

சட்டங்களியற்ற உதவிபுரிதல்.

**இரண்டாம் மன்றமாக பிரபுக்கள் சபை :**

ஒரு நல்ல மேல்சபை கீழ்க்காணும் குணநலன்களை உடையதாக இருத்தல் வேண்டும். மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சபையைப் போலல்லாது, மேல்சபை மாறுபட்ட முறையில் அமைக்கப்பட வேண்டும். இச்சபை கீழ் சபைக்குப் போட்டியானதாகவோ, அதற்குத் தடையானதாகவோ இருக்கக்கூடாது. சீரான முறையில் இச்சபை மசோதாக்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும். திறமையும் அனுபவமும்

உடையவர்கள் இச்சபையில் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். மேற்கூறிய குணநலன்களின் அடிப்படையில் நாம் பிரபுக்கள் சபையைத் திறனாய்வு செய்யலாம்.

காமன்ஸ் சபையைப் போலல்லாது மாறுபட்ட முறையில் பிரபுக்கள் சபை அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளிலுள்ள சிறந்த நபர்கள் அச்சபையில் அங்கத்தினராக உள்ளனர். இதன் காரணமாக சபையில் நடக்கும் விவாதங்களின் சிறப்பானவையாக அமைகின்றன. புதிய கருத்துக்களும் விசேடக்கருத்துக்களும் விவாதங்களில் புகுத்தப்படுகின்றன. பிரபுக்கள் என்று ஏற்கனவே கண்டோம். மக்களாட்சிக் கருத்துக்கள் பிரபலமடைந்துள்ள இக்காலத்தில் வாரிசுரிமை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. வாரிசுரிமை ஆளும் திறமையை அளிக்கும் எனக்கூற இயலாது. வாரிசுரிமை அடிப்படையிலான பிரபுக்களது வளர்ச்சியின் சூழ்நிலைகளும் அவர்கள் பின்னணியும் அவர்களை சாதாரண மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிய முடியாதவராக்கிவிடும். சமுதாயம் முழுவதற்கும் இச்சபையில் சரியான பிரதிநிதித்துவம் கிடையாது. அதன் அமைப்பினின்றே பிரபுக்கள் சபை பழமையை விரும்புவது எனப் புலப்படுகின்றது. ஆனால் அவசரத்தில் இயற்றப்படும் மசோதாக்களுக்குத் தடங்கல் அளிக்கும் நற்பணியை அச்சபை ஆற்றுகின்றது.

**பிரபுக்கள் சபையின் புனரமைப்பு :**

பிரபுக்கள் சபையின் அமைப்பிலும், அதிகாரத்திலும் மாற்றங்கள் அவ்வப்போது ஏற்பட்டுள்ளன. பணமசோதாக்கள் மீது பிரபுக்கள் சபைக்கு எந்த அதிகாரமும் கிடையாது. சாதாரண மசோதாக்களை பன்னிரண்டு மாதகாலம் வரையிலும் இச்சபை தாமதப்படுத்தலாம். அத்தாமதப்படுத்தலும் குறிப்பிடத்தக்க அளவு கிடையாது. ஏனெனில் சாதாரண மசோதா ஒன்று காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்படுவதற்கே ஒன்பது மாதங்கள் ஆகிவிடும். சட்டத்தின்படியன்றி அரசாங்கம் செயல்படுவதைத்தடுக்க பிரபுக்கள் சபைக்கு அதிகாரம் கிடையாது. பிரபுக்கள் சபையின் ஆமோதிப்பு இல்லாமலேயே பொருளாதாரக் கொள்கையிலும், படைத்துறை சம்பந்தப்பட்ட கொள்கையிலும் அடிப்படை மாற்றங்கள் கொண்டு வரலாம்.

கன்சர்வேடிவ் (Conservative) கட்சியினர் ஆட்சியிலிருந்தபொழுது சில சிறிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. பிரபுக்களுக்கு ஊதியமளிக்கும் முறை 1657-ஆம் ஆண்டு ஆரம்பமாயிற்று. பெண்களும், ஆண்களும் பிரபுக்களாக்கப்படலாம் என்று 1985-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிரபுக்கள் நிலைச்சட்டம் (Life Peerage Act) கூறுகின்றது. பிரபுக்களுரிமை பெற்ற ஆண்களும் பெண்களும் தமது ஆயுட்காலத்திற்குத் தமது பதவியை விடுத்து காமன்ஸ் சபைக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு போட்டியிடலாம் என்று 1963-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிரபுக்கள் நிலைச்சட்டம் (Peerage Act) கூறுகின்றது. இதே சட்டத்தின்படி பெண்கள் பிரபுக்கள் மன்றத்தில் அமர உரிமை பெற்றனர்.

பிரபுக்கள் சபையில் அங்கத்துவ முறையைப் புனரமைக்க வேண்டும் என்ற கூற்று வலுப்பெற்றது. 1967-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிகழ்த்திய பேருரையில், பிரபுக்கள் சபையை தற்கால பாராளுமன்ற முறைக்குள் வளரச் செய்வதற்கு அதன் அதிகாரங்களைக் குறைக்கவும் அதன் பரம்பரைத் தன்மையை அகற்றவும் சட்டமியற்றப்படும் என்று அரசி குறிப்பிட்டார். மசோதாக்களை மறுபரிசீலனை செய்வதற்கென ஒரு மேல்சபை வேண்டும் என்பதை யாவரும் உணர்ந்துள்ளனர். அதன் அங்கத்தினரைத் தேர்வு செய்யும் முறை குறித்துத்தான் பிரச்சனை எழுகின்றது. 1969-ஆம் ஆண்டு தொழிற்கட்சி அரசாங்கத்தால் பிரபுக்கள் சபையைப்

புனரமைப்பதற்கென எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. 2000ம் ஆண்டில் இச்சபையின் தலைவர் பதவி, உறுப்பினர் எண்ணிக்கை, நீதி அதிகாரங்கள் சீரமைக்கப்பட்டன.

## 3.11 இங்கிலாந்தில் சட்டமியற்றல் :

அரசின் ஆமோதிப்பைப் பெறும் வரையிலும் சட்டம் என்பது மசோதா என்று அழைக்கப்படுகிறது. மசோதாக்களை பொது மசோதாக்கள் என்றும் தனியார் மசோதாக்கள் என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

பண மசோதாக்கள் தவிர பிற எல்லா மசோதாக்களும் இரு சபைகளிலும் தாக்கல் செய்யப்படலாம். சாதாரணமாக, எல்லா முக்கிய மசோதாக்களும் காமன்ஸ் சபையிலேயே தாக்கல் செய்யப்படுகின்றன.

அரசாங்கத்தின் மசோதாக்கள் பாராளுமன்றத்தின் சட்ட ஆலோசகரது அலுவலகத்தால் தயாரிக்கப்படுகின்றன. இங்ஙனம் தயாரிக்கப்பட்ட மசோதா அமைச்சர் குழுவின் சட்டக்குழுவால் பரிசீலிக்கப்படுகிறது. இங்கு அம்மசோதாவின் அமைப்பும் நுணுக்கங்களும் பரிசீலனை செய்யப்படுகின்றது.

கீழ்க்காணும் கட்டங்களைக் கடந்த பின்னர் ஒரு மசோதா சட்டமாகின்றது

1. **தாக்கல் செய்தலும் முதல் வாசிப்பும் :** ஒரு மசோதாவை தாக்கல் செய்ய விரும்பும் அங்கத்தினர் இதனை சபைக்குத் தெரிவிக்கின்றார். குறிப்பிட்ட நாளில் அங்கத்தினரது பெயரைச் சபாநாயகர் கூப்பிட்டவுடன் அவர் அம்மசோதாவை சபையின் எழுத்தரிடம் கொடுக்கின்றார். இவ்வெழுத்தர் அம்மசோதாவின் குறுகிய தலைப்பை வாசிக்கின்றார். இதுவே முதல் வாசிப்பு. இக்கூட்டத்தில் அம்மசோதாவால் பாதிக்கப்படக்கூடியவருக்கும், சபைக்கும் அதனைப் பற்றிய முன்னறிவிப்புக் கிடைக்கின்றது.

2. **இரண்டாவது வாசிப்பு :** மசோதாவிற்குப் பொறுப்பான அங்கத்தினர் அதன் வரலாற்றையும், குறிக்கோளையும் முக்கிய அம்சங்களையும் கொள்கையையும் சபைக்கு விளக்குகின்றார். இவ்விளக்கம் முடிந்தவுடன் மசோதா இரண்டாவது முறை வாசிக்கப்படலாம் என்கிறார். இதை அடுத்து மசோதாவின் கொள்கை சம்பந்தப்பட்ட விவாதம் நடக்கின்றது. மசோதாவின் விவரங்களைப் பற்றி விவாதம் நடப்பதில்லை. இக்கூட்டத்தில் முறியடிக்கப்படாத மசோதா ஒரு குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றது.

3. **குழுநிலை :** சாதாரண நிலைக்குழுவொன்றிற்கு மசோதா அனுப்பப்படுகின்றது. ஒவ்வொரு வார்த்தையாகவும் ஒவ்வொரு பிரிவாகவும் மற்றும் வார்த்தைக்கு வார்த்தை மசோதா பரிசீலிக்கப்படுகின்றது. மசோதாவின் முக்கிய கோட்பாடுகளைப் பாதிக்காத திருத்தங்கள் குழுவில் கொண்டு வரப்படலாம்.

4. **அறிக்கை நிலை :** சபை முழுவதுமான குழுவிற்கு மசோதா அனுப்பப்பட்டு அதனில் திருத்தங்கள் ஏதும் செய்யப்படாமலிருந்தால் அம்மசோதாவின் அறிக்கை நிலையில் விவாதங்கள் நிகழாமல் அது மூன்றாவது வாசிப்பிற்குக் கிடைக்கின்றது.

பிற குழுக்களுக்கு அனுப்பப்பட்ட மசோதாக்கள் அறிக்கையுடன் சபைக்குத் திரும்புகின்றன. இதனைத் தொடர்ந்து விவாதம் நடக்கின்றது. அறிக்கை நிலையில் சபையில் திருத்தங்களைக் கொணரலாம். புதிய கூறுகளையும் புகுத்தலாம். சாதாரணமாக இவ்வறிக்கை நிலை இரண்டாவது குழுநிலையாக மாறுகின்றது. குழுவின் சிபாரிசுகளை சபை ஏற்கவோ புறக்கணிக்கவோ செய்யலாம். இறுதி வடிவம் அளிக்கப்படும் மசோதா

சபையின் பெரும்பான்மைக் கருத்தைப் பிரதிபலிப்பதாக அமையும்.

**5. மூன்றாவது வாசிப்பு** : அறிக்கை நிலை முடிந்தவுடன் மூன்றாவது வாசிப்பு நடக்கின்றது. இதுதான் மசோதாவின் மேல் நடக்கும் கடைசி விவாதம். மசோதாவின் உள்ளடக்கம் மட்டும் இக்கட்டத்தில் பரிசீலிக்கப்படுகின்றது. குறிப்பிடத்தக்க திருத்தங்கள் இக்கட்டத்தில் கொண்டு வரப்படுவதில்லை.

**6. பிரபுக்கள் சபை** : மேற்கூறிய ஐந்து கட்டங்களையும் ஒரு மசோதா தாண்டிய பின்னர் அது பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்படுகின்றது. இங்கும் மேற்கூறியது போன்ற கட்டங்களை இது கடக்க வேண்டும். பணமசோதாக்கள் தவிர பிற எல்லா மசோதாக்களையும் திருத்தவும் நிராகரிக்கவும் பிரபுக்கள் சபைக்கு அதிகாரமுண்டு. இதுதான் சட்டரீதியான நிலை. ஆனால் இது நடைமுறையில் காணமுடியாது.

ஒரு மசோதாவில் பிரபுக்கள் சபை கொண்டு வரும் திருத்தங்கள் காமன்ஸ் சபை ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருக்க வேண்டும். பண மசோதா இருசபைகட்கும் மாறி மாறிப் போவதும் உண்டு.

**7. அரசியின் ஆமோதிப்பு** : அவசரச் சட்டமாக வேண்டிய மசோதாக்கள் உடனே அரசியாரின் ஆமோதிப்பிற்குச் சமர்ப்பிக்கப்படும். சாதாரணமாக பாராளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் பல மசோதாக்கள் மொத்தமாக அரசியாருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

ஒரு மசோதா பல கட்டங்களையும் கடந்து வருவதற்குக் கால தாமதம் ஏற்படுகின்றது. ஆனால் நெருக்கடி நேரத்தில் ஒரு மசோதா சில மணி நேரங்களில் சட்டமாக முடியும்.

**தனி அங்கத்தினர்களது சட்ட முன்வரைவு (Private member bills)**

அரசாங்கத்தில் அங்கத்தினரல்லாத சட்டமன்ற அங்கத்தினரொருவரால் தாக்கல் செய்யப்படும் சட்டமுன்வரைவு தனியார் அங்கத்தினரது சட்டமுன்வரைவு என அறியப்படுகின்றது. இவ்வகை சட்டமுன்வரைவுகளுக்கு முக்கியதுவம் அதிகமில்லை. இவ்வரை சட்டமுன்வரைவு இரு முறைகளில் தாக்கல் செய்யப்படுகின்றது. முதலாவதாக, பத்து நிமிட விதிக்கேற்ப இவ்வகை சட்டமுன்வரைவு தாக்கல் செய்யப்படலாம். சட்டமுன்வரைவை தாக்கல் செய்யும் அங்கத்தினர் அதனை ஆதரித்து பத்து நிமிட நேரமும் வேறு அங்கத்தினர் அதனை எதிர்த்துப் பத்து நிமிட நேரமும் பேசலாம். அவை சட்டமுன்வரைவை ஏற்றுக்கொண்டால் அதன் முதல் வாசிப்பு முடிந்ததென்று பொருள். இதன் பின்னர் அதன் இரண்டாவது வாசிப்பிற்கு நாள் குறிப்பிடுகின்றது. இரண்டாவது தனியார் அங்கத்தினரது நிலை ஆணையின் விதிக்கேற்ப முதலாவது உட்பிரிவிற்கேற்ப தாக்கல் செய்யப்படலாம். இவ்வகை சட்டமுன்வரைவுகள் சட்டமாவது அரிது. பல தடங்கல்களையும் கடந்து இவ்வகை சட்டமுன்வரைவுகள் சட்டமாகவேண்டும்.

**தனியார் சட்டமுன்வரைவுகள் (Private Bills)**

ஒரு நபரையோ அல்லது ஒரு சில நபர்களையோ பாதிக்கக்கூடிய சட்டமுன்வரைவு, தனியார் சட்டமுன்வரைவு என அறியப்படுகிறது. பல விஷயங்கள் சம்பந்தப்பட்டவையாக இவ்வகை சட்டமுன்வரைவுகள் அமையலாம். இவ்வகை சட்டமுன்வரைவு கீழ்க்காணும் கட்டங்களைக் கடக்க வேண்டும்.

1) விண்ணப்பம், விளம்பரம் பரிசீலனை: தனியார் சட்டமுன்வரைவுகளுடன் அவற்றைச் சட்டமாக்க விழைவோரின் விண்ணப்பங்கள் இயற்றப்பட வேண்டும். இவ்வகை சட்டமுன்வரைவும், அதன் குறிக்கோள்களும் நாளேடுகளிலும் லண்டன்

அரசிதழிலும் விளம்பரப்படுத்தப்பட வேண்டும். இச்சட்டமுன்வரைவு சம்பந்தப்பட்ட யாவருக்கும் அறிவிப்பு அளிக்கப்பட வேண்டும், சபாநாயகராலும், பிரபுக்கள் அவையாலும் நியமிக்கப்பட்ட இரு பரிசோதகர்கள் இச்சட்டமுன்வரைவைப் பரிசீலனை செய்வர்.

2) முதல் வாசிப்பு: சட்டமுன்வரைவு நிலை ஆணைகட்கு உட்பட்டதென்று பரிசோதனையின் விளைவாகப் புலப்படின் சம்பந்தப்பட்ட அவையின் முன் அது வைக்கப்படுகிறது.

3) இரண்டாவது வாசிப்பு: முதல்வாசிப்பிற்கும், இரண்டாவது வாசிப்பிற்குமிடையே நான்கு முதல் ஏழு நாட்களாவது கடந்திருக்க வேண்டும். எதிர்ப்பற்ற சட்டமுன்வரைவு அவ்வண்ணமே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. எதிர்ப்புள்ள சட்டமுன்வரைகளின் மேல் விவாதம் நடத்துவதற்குள்ள நாளை சபாநாயகர் நிர்ணயிக்கின்றார்.

4) குழுநிலை: இரண்டாவது வாசிப்பு முடிந்தவுடன் இச்சட்டமுன்வரைவு தேர்வுக் குழுவிற்கு விடப்படுகிறது. எதிர்ப்பில்லாத சட்டமுன்வரைவுகளை குழுவிற்கு அனுப்படுகின்றது. இக்குழுவில் மக்களவையைச் சேர்ந்த நான்கு பேரும், பிரபுக்கள் அவையைச் சேர்ந்த ஐந்து பேரும் அங்கத்தினர்களாவர். குழுநிலை மிக முக்கியமான கட்டமாகும். தனியார் சட்ட முன்வரைவுகள் குழுவின் நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்தவையாகும். முடிவெடுக்கப்பட்ட சட்டமுன்வரைவு அவைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

5) கவனிப்பு சட்டம்: குழுவில் திருத்தப்பட்ட சட்டமுன்வரைவு அவையால் கவனிக்கப்படுவதற்கு முன் குறைந்தது மூன்று நாட்களாவது அவையில் வைக்கப்பட்டிருக்கும். திருத்தப்படாத சட்டமுன்வரைவுகள் உடனடியாக மூன்றாவது முறை வாசிக்கப்படும். சாதாரணமாக இக்கூட்டத்தில் திருத்தங்களும் விவாதமும் இருக்காது.

6) மூன்றாவது வாசிப்பு: இக்கூட்டம் பொதுவான சட்டமுன்வரைவுகளின் மூன்றாவது வாசிப்பிற்கு இணையானது.

7) பிரபுக்கள் அவையின் திருத்தங்களும் அரசியின் ஏற்பும்: மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட சட்டமுன்வரைவு பிரபுக்கள் அவைக்கு அனுப்பப்படுகிறது. பிரபுக்களால் ஏற்கப்பட்டு அரசியின் ஏற்பையும் பெற்ற பின்னர் இது அச்சிடப்படுகிறது.

**நிதியின் மீது மக்களவைக்குள்ள கட்டுப்பாடு**

அரசாங்கத்தின் குறிக்கோள்கள், தேவைப்பட்ட நிதியைத் திரட்டுவது குறிததும், அரசாங்கம் விதிக்கும் வரிகளின் தன்மையையும், செலவினங்களில் ஏற்படக் கூடிய தேவைகளையும் பாராளுமன்றம் திறனாய்வு செய்கின்றது. தற்பொழுது மக்களவை மட்டும் தான் நீதி விவகாரங்கள் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துகின்றது. நிதி சம்பந்தப்பட்ட சட்டமுன்வரைவுகள் மக்களவையில் மட்டுமே ஆரம்பிக்கின்றன. மேலவைக்கு நிதிச் சட்டமுன்வரைவைத் திருத்தவோ, நிராகரிக்கவோ உரிமை கிடையாது. அரசாங்கம் முதலில் தனது தேவைகளைத் தெரிவிக்கின்றது. மக்களவை தனது குறைகட்கு அரசாங்கதிடமிருந்து பரிகாரம் கண்டபிறகு அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இப்பழைய கோட்பாடு இன்றும் பின்னற்றப்பகின்றது. நிதி விவகாரங்களில் தனக்குள்ள அதிகாரத்தின் வாயிலாகத் தான் மக்களவை

அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் கொள்கை ஆண்டிற்கொரு முறையேனும் மக்களவையில் விளக்கப்படல் வேண்டும். அரசாங்கம் கோரும் நிதியை அளிக்க மறுப்பதன் மூலம் அரசாங்கம் செயல்படமுடியாத சூழ்நிலையை மக்களவை உருவாக்கலாம். வரி விதிப்பதற்கும் ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரிகளை மாற்றியமைப்பதற்கும் அளிக்கப்படும் கருத்துக்கள் அரசாங்கத்தின் சார்பில் அமைச்சரொருவரால் அளிக்கப்பட வேண்டும்.

செலவினங்கள் தேவையுள்ளவைதானா, சிக்கனமானவைதானா, கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டவைதானா என்று பார்ப்பதன் மூலம் அவை அரசாங்கத்தின் செலவினங்கள் மீது நன்றாக மேற்பார்வை செய்ய முடியும். இப்பணி புரிவதில் மக்களவைக்கு உதவுபவர் தணிக்கைத் துறைத் தலைவரும், அரசுக் கணக்கு ஆய்வுக் குழுவும் ஆகும்.

## 3.12 காமன்ஸ் சபையிலுள்ள குழுக்கள் :

ஒரு பெரிய நிறுவனமாகிய காமன்ஸ் சபை கொள்கைகளை விவாதிப்பதற்குகந்தது. ஆனால் விவரங்களை ஆராய்ந்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கென ஒரு சில அங்கத்தினரைக் கொண்ட பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது காமன்ஸ் சபையில் முக்கியமாக ஐந்து வகைப்பட்ட குழுக்கள் உள்ளன.

1. முழுச்சபை குழு **(Committee of Whole House)** : காமன்ஸ் சபை முழுவதும் குழுவாக அமரும் பொழுது முழு சபைக்குழு என அறியப்படுகின்றது. சபை குழுவாக மாறும் பொழுது சபாநாயகரின் இருக்கையில் வழிவகைகள் குழுத்தலைவர் (Chairman of Ways and Means Committee) அமர்ந்து கூட்டத்தை நடத்துவார்.

எவ்விஷயத்தையும் இக்குழுவின் முன் கொண்டு வரலாம். ஆனால் பொதுப்படையான முக்கியத்துவம் உள்ள மசோதாக்களை இக்குழு பரிசீலிக்கின்றது. ஒரு மசோதா முழுவதையுமோ, அல்லது அதன் ஒரு பகுதியை மட்டுமோ இக்குழுவின் பரிசீலனைக்குக் கொண்டு வரலாம். காமன்ஸ் சபையில் அரசாங்கத்திற்கு நல்ல பெரும்பான்மையில்லாவிடில் கருத்து மாறுபாடுள்ள மசோதாக்கள் இக்குழுவின் பரிசீலனைக்கு விடப்படும். இதற்குகக் காரணம் என்னவெனில் நிலைக்குழுவில் இவ்வகை மசோதாக்களை தோற்கடிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

2. நிலைக்குழுக்கள் **(Standing Committees)** : நிலைக்குழுக்கள் பொது மசோதாக்களைப் பரிசீலித்து திருத்தியமைக்கும். தொகு நிதி ஒதுக்க மசோதாக்கள், தற்காலிகமான உத்திரவுகளை நிலைப்படுத்தும் மசோதாக்கள் ஆகியவை நிலைக்குழுக்களுக்கு அனுப்பக்கூடாது. இவை தவிர பிற மசோதாக்கள் யாவும் நிலைக் குழுக்களால் பரிசீலிக்கப்பபெறும்.

எவ்வளவு நிலைக்குழுக்கள் தேவையோ அவ்வளவு குழுக்களை காமன்ஸ் சபை நியமிக்கின்றது. இக்குழுக்கள் முறையே A, B, C, D என அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிலைக்குழுவிலும் இருபதிலிருந்து முப்பது அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்கள் தேர்வுக்குழுவால் நியமிக்கப்படுகின்றனர். சபையில் கட்சிக்குள்ள பலம் இக்குழுவிலும் பிரதிபலிக்கின்றது. குழுக்களின் அங்கத்தினர் அவர்களது தகுதியின் அடிப்படையிலும் தேர்வு செய்யப்படுகின்றனர். நாட்டின் பல பகுதிகட்கும் இக்குழுக்களில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகின்றது.

தன்னறிவு சோதனைக் கேள்வி
6. பாராளுமன்ற குழுக்கள் பற்றி விவரி.

ஒவ்வொரு நிலைக்குழுவிற்கும் ஒரு தலைவர் உண்டு. ஒவ்வொரு மசோதா பரிசீலிக்கப்படும் பொழுதும் ஒவ்வொரு தலைவரை தலைவர்களின் தேர்ந்த பெயர் பட்டியலினின்று காமன்ஸ் சபைச் சபாநாயகர் நியமிக்கின்றார். தலைவர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலில் ஏறத்தாழ பத்து பாராளுமன்ற அங்கத்தினர் இருப்பர். இவர்களை காமன்ஸ் சபைக் கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் சபாநாயகர் நியமிப்பார். ஒவ்வொரு நிலைக்குழுவின் குறைவெண் வரம்பு அதன் மொத்த அங்கத்தினரின் மூன்றில் ஒரு பகுதியாகும்.

ஒரு மசோதாவின் விவரங்கள் முழுவதும் நிலைக்குழுவால் பரிசீலிக்கப்படுகின்றன. பரிசீலிக்கப்படும் விஷயத்தில் விசேடத் தேர்வுடைய அங்கத்தினர் தான் இங்ஙனம் பரிசீலிப்பர். நிலைக்குழுவின் நடவடிக்கைக்கு விளம்பரம் அளிப்பது அபூர்வம்.

3. **தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் (Select Committees)** : அவ்வப்போது மசோதாக்களைப் பரிசீலிப்பதற்கும் விசாரணைகள் நடத்தவும் மேற்பார்வைப் பணிகள் புரிவதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் சபையால் நியமிக்கப்படுகின்றன. இக்குழுக்களில் சாதாரணமாக 15 அங்கத்தினரிருப்பர். தமது தலைவர்களை இக்குழுக்கள் தாமே தேர்வு செய்கின்றன. சில வேளைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவொன்றிற்குக் காமன்ஸ் சபை விசேட அதிகாரங்களையும் வழங்கும்.

கூட்டத்தொடர் குழுக்கள் (Seasonal Committees), தற்காலிகக் குழுக்கள் (Adhoc Committees), சிறப்பறிஞர் குழுக்கள் (Specialist Committees) என மூன்று வகை தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் உள்ளன.

பின்வருபவை காமன்ஸ் சபைக் கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் நிலை ஆணையின் படியோ, அல்லது சபையின் உத்திரவிற்கேற்பவோ நியமிக்கப்படும் கூட்டத்தொடர் குழுக்கள். இக்குழுக்களுக்குள்ள பணி மேற்பார்வை புரிவதாகும். 1) அரசுக்கணக்கு ஆய்வுக்குழு (Public Accounts Committee), 2) தேர்வுக்குழு (Committee of Selection), 3) நிலை ஆணைக்குழு (Standing Orders Committee), 4) மதிப்பீட்டுக் குழு (Estimates Committee), 5) சிறப்புரிமைக் குழு (Committee of Privileges), 6) பொது விண்ணப்பக்குழு (Public Petitions Committee), 7) வெளியீடுகள் மற்றும் விவாத அறிக்கைக்குழு (Publications and Debates Reports Committee), 8) காமன்ஸ் சபைப் பணிக்குழு (Statutory House Committee), 9) சட்டவிதிகள் குழு (Statutory Instruments Committee), 10) அரசுடமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட குழு (Select Committee on Nationalised Industries), 11) பாராளுமன்ற ஆணையாளருக்கான குழு (Committee for the Parliamentary Commissioner).

தற்காலிக குழுக்கள் (Adhoc Committees) மசோதாக்களைப் பரிசீலனை செய்வதற்காகவும் விசாரணைகள் நடத்துவதற்காகவும் நியமிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட துறைகளில் பணிகளை மேற்பார்வை செய்வதற்கென சிறப்பறிஞர் குழுக்கள் (Specialist Committees) நியமிக்கப்படுகின்றன. இது போன்ற குழுக்கள் இதுவரை இரண்டு தான் நியமிக்கப்பட்டன. அதிலொன்று 1968ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.

4. **இணைக்குழுக்கள் (Joint Committees)** : இரு சபைகளும் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பரிசீலிப்பதற்காகவும் இக்குழுக்கள் பயன்படுகின்றன.

இரு சபைகளிலுமுள்ள இரு சிறிய தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இணைந்து அமைவது தான் கூட்டுக் குழு எனப்படுவது. சாதாரணமாக இக்குழுவிற்கு ஒரு பிரபு

தான் தலைமை வகிப்பார். இக்குழுவின் ஒவ்வொரு பகுதியும் தனது சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றது.

**5. தனியார் மசோதாக் குழுக்கள் (Private Bills Committee)** : இக்குழுக்கள் இருவகைப்படும். எதிர்க்கப்படாத மசோதாக்களுக்கான குழுக்கள் ஒருவகை, வழிமுறைகள் குழுவின் தலைவரும், துணைத்தலைவரும் தேர்வுக் குழுவால் தயாரிக்கப்படும் பெயர்ப்பட்டியலினின்று தேர்ந்தெடுக்கப்படும் நான்கு அங்கத்தினர்களும் இக்குழுவில் அங்கத்தினர். எதிர்க்கப்பட்ட மசோதாக்களுக்கான குழுக்கள் மற்றொருவகை. இவ்வகைக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் தேர்வுக் குழுவால் நியமிக்கப்படும் அங்கத்தினருமிருப்பர்.

தற்பொழுது இங்கிலாந்தின் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் பணியில் குழுக்களுக்கு மிக முக்கிய பங்கு உண்டெனினம் அவற்றிற்கு அமெரிக்கக் குழுக்களுக்குமுள்ள அதிகாரம் கிடையாது.

## 3.13 தொகுப்புரை

இங்கிலாந்து பாராளுமன்ற ஆட்சித்துறையின் இருபிரிவுகளான மன்னர் - அமைச்சரவை மற்றும் தலைமை அமைச்சரின் நிலை, அதிகாரங்கள், பணிகள் ஆகியன தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் சட்டமன்றத்தின் ஈரவைகள் பற்றியும், சட்டம் உருவாகும் முறை பற்றியும் இதுவரை நாம் படித்துள்ளோம்.

## 3.14 முக்கிய வார்த்தைகள்

முழுமைக்குழு - பிரபுக்கள் - சான்சலர்பிரபு - பொதுமக்களவை - கருவூலம்

## 3.15 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

| | | |
|---|---|---|
| கேள்வி எண் 1 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 3:1ல் அறிக |
| கேள்வி எண் 2 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 3:5ல் அறிக |
| கேள்வி எண் 3 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 3:8ல் அறிக |
| கேள்வி எண் 4 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 3:9ல் அறிக |
| கேள்வி எண் 5 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 3:10ல் அறிக |
| கேள்வி எண் 6 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 3:12ல் அறிக |

## 3.16 பார்வை நூல்கள்

1. Punnett R.M., **British Govt. and Politics,** Oxford, 1976.
2. W. Bagehot, **The English Constitution,** London, Fontana, 1963.
3. J. Blondel, **An Introduction to Comparative Government,** London, Weidenfeld and Nicolson, 1969.
4. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.
5. F.A. Ogg and Zink, **Modern Foreign Governments,** New York, Macmillan, 1964.

## 3.17 மாதிரி வினாக்கள்

1. இங்கிலாந்தின் பேரரசியாரின் நிலையும் அதிகாரங்களையும் விளக்குக.
2. இங்கிலாந்தின் தலைமை அமைச்சரது நிலையையும் அதிகாரங்களையும் ஆராய்க. இவரது அதிகாரம் அதிகரிப்பதற்கான காரணங்கள் என்ன?
3. இங்கிலாந்தில் ஒரு மசோதா எவ்வாறு சட்டமாகிறது என்பதை விவரிக்கவும்.
4. இங்கிலாந்தின் பிரபுக்கள் சபையின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றை விவரிக்கவும்.
5. தற்காலத்தில் சட்டமியற்றலில் குழு முறையின் செயற்பாட்டை விளக்குக.

## அலகு - 4

# பிரிட்டனின் நீதித்துறை – அரசியல் கட்சிகள் - தன்னலக் குழுக்கள் - தேர்தல்கள் - செய்தித் தொடர்புகள்

## முன்னுரை

மக்களாட்சியின் மாண்பே சட்டம்தான். அச்சட்டம் எவ்வாறு ஆட்சி செய்கின்றது? சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதையும், செயல்படும் விதம் குறித்தும் இப்பாடப்பிரிவில் விளக்கம் தரப்பட்டுள்ளது. இங்கிலாந்து நாட்டின் நீதித்துறையின் அமைப்பு, அதிகாரங்கள், நிருவாகமுறை, அரசியல் கட்சிகள் தோற்றமும் வளர்ச்சியும் கூறப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

பிரிட்டனின் நீதித்துறை,

சட்டத்தின் ஆட்சியின் சிறப்புப் பண்புகள் பற்றி விளக்குதல்

சட்டத்தின் ஆட்சியின் கட்டுப்பாடுகள் பற்றித் தெரிந்து கொள்தல்

அரசுப்பணி, கட்சிமுறை ஆகியன பற்றி அறிதல்.

## வடிவமைப்பு

நீதித்துறை

நீதிமன்றங்கள் செயல்படுத்தும் சட்டம்

சட்டத்தின் ஆட்சி

சட்டத்தின் ஆட்சிக்குள்ள கட்டுப்பாடுகள்

பிரிட்டனில் கட்சிமுறை

கன்சர்வேடிவ் கட்சி

தொழிற்கட்சி

தன்னலக்குழுக்கள்

பிரிட்டனின் தேர்தல்கள்

செய்தித் தொடர்பு

உள்ளாட்சி அரசாங்கம்

அரசுப்பணியாளர்கள்

அரசுப்பணி

## 4.1 நீதித்துறை :

### அமைப்பும் பணிகளும் :

இங்கிலாந்தின் நீதித்துறை ஒருங்கிணைக்கப்பட்ட வடிவத்தைக் கொண்டிருக்கின்றது. பாராளுமன்றத்தின் முதன்மைத்துவத்தை வலியுறுத்தும் அரசியலமைப்பினுள் அது சுதந்திரமாய் இயங்குகின்றது. அரசுத்துறை வழக்குகளை விசாரிக்கவும், குற்றவியல் வழக்குகளை விசாரிக்கவும் இருவகை நீதிமன்றங்கள் உள்ளன.

### 1. அரசுத்துறை வழக்கு அதிகார வரம்பு (Civil Jurisdiction) :

பொதுவாக எல்லா அரசுத்துறை வழக்குகளும் மாவட்ட நீதிமன்றத்தின் (County Court) முன்போ அல்லது உயர்நீதிமன்றத்தின் முன்போ கொண்டுவரப்படுகின்றன. விசாரணையின்றித் தீர்ப்பு வழங்கும நீதிமன்றங்கள் Courts of Summary Jurisdiction) முன்பும், பேரூர் மற்றும் தல நீதிமன்றங்கள் (Local Courts) முன்பும், கொணரப்படும் வழக்ககள் மட்டும் மேற்கூறியதற்கு விதிவிலக்கு.

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
> 1. இங்கிலாந்தின் நீதித்துறையின் அமைப்பை எழுது.

**1. மாவட்ட நீதிமன்றம் (County Court) :**

மாவட்ட நீதிமன்றங்கள் 1846-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இப்பொழுது இவ்வகை நீதிமன்றங்கள் ஏறத்தாழ 500 உள்ளன. இந்நீதிமன்றங்களது நீதிபதிகளை சான்சலர் பிரபு நியமிக்கின்றார். நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் ஏழாண்டு காலம் வழக்கறிஞராக (Barrister) இருந்திருக்க வேண்டும். இந்நீதிபதிகள் எழுபத்திரண்டு வயது பூர்த்தியானவுடன் தமது பதவிகளினின்று ஓய்வு பெறுகின்றனர். ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திற்கும் பதிவாளர் (Registrar) ஒருவர் சான்சலர் பிரபுவால் நியமிக்கப்படுகின்றார். இப்பதிவாளரை பதவியினின்று விலக்க சான்சலருக்கு அதிகாரமுண்டு. பதிவாளர் நீதிமன்றத்தின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்பவராயினும் வழக்குகளை விசாரணை செய்வதும் இவரது கடமையாகும். மாவட்ட நீதிமன்றங்களது அதிகாரவரம்பு உள்ளாட்சி சம்பந்தப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமாகும்.

**2. உயர்நீதிமன்றம் (High Court) :**

மாவட்ட நீதிமன்றங்களிலிருந்து கொண்டுவரப்பட வேண்டும் என்றுள்ள சில வழக்குகளைத் தவிர பிற எல்லா அரசுத்துறை வழக்குகளும் மாவட்ட நீதிமன்றத்திலோ அல்லது உயர் நீதிமன்றத்திலோ கொண்டுவரப்படலாம். பெரிய வழக்குகள் உயர்நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படுவது வழக்கம். இந்நீதிமன்றத்தில் கொண்டு வரப்படும் வழக்குகள் அதன் மூன்று பிரிவுகளில் ஏதாவதொன்றிற்கு அனுப்பப்படுகின்றன.

**(அ) நாட்டு நீதிமன்றப்பிரிவு (Queen's Bench Division) :**

நாட்டு மரபுச்சட்ட நீதிமன்றங்களின் (Common Law Courts) வழிவந்த இந்நீதிமன்றம் அரசுத்துறை வழக்குகளையும் விசாரணை செய்கின்றது. தலைமை நீதிபதிப் பிரபு (Lord Chief Justice) தான் இந்நீதிமன்றத்தின் தலைவர் (President). தனது சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி தனக்குக் கீழுள்ள நீதிமன்றங்களையும், தீர்ப்பாயங்களையும் (tribunals) மேற்பார்வை செய்வதும், ஆட்கொணர் ஆணையை (Writ of Habeas Corpus) பயன்படுத்தி மக்களது உரிமைகளைப் பாதுகாப்பதும் இந்நீதிமன்றத்தின் முக்கிய பணிகளாகும்.

**(ஆ) நீதித்துறை முதல்வர் மன்றப் பிரிவு (Chancellor Division) :**

பெயரளவில் இதற்குத் தலைவராக இருப்பவர் சான்சலர் பிரபு. ஆனால் இவர் அலுவல்கள் அதிகமுடையவர். இதனால் சான்சலர் பிரபுவின் துணைவரான மேல்முறை மன்ற நடுவர் (Master of the Rolls) முன்னவரின் பணிகளைச் செய்து வந்தார். இவர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் (Court of Appeal) தலைவராதலால் இருவருக்கும் அலுவல்கள் அதிகம். ஆகவே இந்நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பணிகளில் பெரும்பாலானவற்றைப் புரிவது துணை நடுவர்களாகும் (Puinse Judges). சில வழக்குகள் மீது இந்நீதிமன்றம் விசேட உரிமை பெற்றுள்ளது. சில வழக்குகள் இந்நீதிமன்றத்திற்கு அரசின் நீதிமன்றப் பிரிவுடன் ஒருங்கியல் அதிகாரங்கள் உள்ளன.

**(இ) விருப்புறுதி, மெய்ப்பிதழ், விவாகரத்து, கடற்படைத் துறைப் பிரிவு (Probate, Divorce and Admiralty Division)**

உரோமானியச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை என்ற காரணத்திற்காக 1873-ஆம் ஆண்டும் இம்மூன்றும் ஒருங்கிணைக்கப்பட்டன. விருப்புறுதியை (Will) அரசாங்கப் பூர்வமாக மெய்ப்பிப்பதைத் தான் விருப்புறுதி மெய்ப்பிதழ் (Probate) என்கிறோம். 1950-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட திருமணஞ் சார்ந்த சட்டத்தின் (Matrimonial Causes

Act) அடிப்படையில் விவாகரத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. கடலாண்மைச் சட்டத்தின் அடிப்படையில் கடற்படைத்துறைக்கு சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன.

**3. வரையறுக்கப்பட்ட பழக்கங்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்றம் (Restrictive Practices Court) :**

1956-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வரையறுக்கப்பட்ட வணிகப்பழக்கச் சட்டத்தின் (Restrictive Trade Practices Act) அடிப்படையில் இந்நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. பதிவு செய்யும் மேலான நீதிமன்றமான இது உயர்நீதிமன்றத்திற்கு இணையானது. ஐந்து நீதிபதிகளையும் பத்திற்குட்பட்ட சாதாரண அங்கத்தினரையும் கொண்டது இந்நீதிமன்றம். ஒரு நீதிபதியும் இரண்டு சாதாரண அங்கத்தினரும் இதன் குறைவெண்வரம்பாகும். இந்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் பெரும்பான்மைக் கருத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன.

**4. மேல் முறையீட்டு நீதிமன்றம் (The Court of Appeal) :**

மாவட்ட நீதிமன்றங்களினின்றும், உயர்நீதிமன்றங்களினின்றும், இந்நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம். பதினோரு நீதிபதிகள் (Lord Justices of Appeal) இந்நீதிமன்றத்தின் பணிகளைக் கவனிக்கின்றனர். இப்பதினொரு நீதிபதிகள் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவோ அல்லது 15 வருடங்கள் வழக்கறிஞர்களாகப் (Barrister) பணியாற்றியவராகவோ இருத்தல் வேண்டும். சான்சலர் பிரபுக்கள், சட்ட பிரபுக்கள், தலைமை நீதிபதி (Lord Chief Justice) போன்றோர் இந்நீதிமன்றத்தின் பதவி வழி அங்கத்தினர்கள் மேல் முறையீடுகள் குறைந்தபட்சம் மூன்று நீதிபதிகளால் விசாரிக்கப்பட வேண்டும். பெரும்பான்மை கருத்தின்படி தீர்மானிக்கப்படுகிறது.

**5. பிரபுக்கள் சபை**

இங்கிலாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து ஆகிய பகுதிகட்கு இறுதி மேல் முறையீட்டு நீதிமன்றம் பிரபுக்கள் சபையாகும். ஸ்காட்லாந்திலிருந்து வரும் அரசுத்துறை சம்பந்தப்பட்ட மேல்முறையீடுகட்கு இதுவே இறுதி நீதிமன்றம். மேல்முறையீட்டு நீதிமன்றத்திலோ அல்லது பிரபுக்கள் சபையின் முன்னரோ முறையீடுகள் கொணரப்பட முடியம். பிரபுக்கள் சபை மேல் முறையீடுகளை விசாரிக்கும் பொழுது சாதாரணப் பிரபுக்கள் சபையில் அமர்வதில்லை. இச்சபையில் நீதிவழங்குவது சம்பந்தப்பட்ட பணிகளை சான்சலர் பிரபுவும், ஒன்பது சட்டப்பிரபுக்களும், முன்னாள் சான்சலர் பிரபுக்களும், முன்னர் உயர்நீதித்துறைப் பதவிகள் வகித்த பிரபுக்களும், கவனிப்பது மரபு. இதற்கு மூன்று பேர் குறைவெண் வரம்பு. பிரபுக்கள் சபையின் மேல் முறையீட்டுக் குழுபோல் அமர்ந்து இவர்கள் விசாரணை நடத்தினாலும் இவர்களது தீர்ப்பை முழுச்சபையின் முன்பு தான் அளிக்கின்றனர். 2003-ல் இவ்வதிகாரம் நீக்கப்பட்டது.

**II. குற்றவியல் அதிகார வரம்பு (Criminal Jurisdiction) :**

அரசுத்துறை வழக்குகளைப் போல் குற்றவியல் வழக்குகளும் அவற்றின் முக்கியத்திற்கேற்பப் பிரிக்கப்பட்டுள்ளன. சாதாரண வழக்குகள் உடனடித் தீர்ப்புக்கூறு நீதிமன்றங்கள் (Court of Summary Jurisdiction) முன்பும், முக்கியமான வழக்குகள் கிரௌன் நீதிமன்றத்திற்கு முன்பும் கொண்டு வரப்படுகின்றன.

**1. குற்றவியல் நீதிமன்றங்கள் (Magistrate Court) :**

குற்றவியல் நீதிமன்றங்கள் உடனடித் தீர்ப்பு மன்றங்கள் (Petty Sessions) எனவும் அழைக்கப்படுகின்றன. சிறிய வழக்குகள் இவற்றால் விசாரிக்கப்படுகின்றன.

இந்நீதிமன்றங்கள் நான்கு வகைப்படும். அவை பின்வருமாறு 1. இரண்டிலிருந்து ஏழுவரையான அமைதிகாப்பு நீதிபதிகளைக் (Justice of the Peace) கொண்ட குற்றவியல் நீதிமன்றம் 2. ஊதியம் பெறும் அமைதிகாப்பு நடுவர் நீதிமன்றம் (Stipendary Magistrate's Court). இந்நடுவர் குறைந்தது ஏழு வருட அனுபவமாவது உள்ள வழக்கறிஞராக (Barrister) இருந்திருக்க வேண்டும். சான்சலர் பிரபுவின் ஆலோசனைக்கேற்ப அவர் அரசரால் நியமிக்கப்படுகின்றார். முழு நேர நடுவரான இவருக்கு ஊதியமுண்டு. 3. உதவிப்பணம் பெறும் தலைநகர நீதிமன்றம் (Metropolitan Stipendary Court) : சான்சலர் பிரபுவின் ஆலோசனைக்கேற்ப அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு உதவிப்பணம் பெறும் நடுவரைக் கொண்டது. இவ்வகை நடுவர்கள் எழுபது வயது எய்தியவுடன் பதவியினின்று ஓய்வு பெறுகின்றனர். 4. இளங்குற்றவாளிகள் நீதிமன்றமும் திருமணஞ்சார்ந்த நீதிமன்றங்களும் (Juvenile and Matrimonial Courts) இவை வெவ்வேறாக விசாரணைகள் நடத்துகின்றன. இவ்விரு நீதிமன்றங்களிலிருந்து மூன்று நடுவர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் பெண்ணாக இருத்தல் வேண்டும்.

2. கிரௌன் நீதிமன்றம் :

1971-ஆம் ஆண்டைய நீதிமன்றச் சட்டத்தின் மூலம் இயற்றப்பட்டது. பழைய காலாண்டுப் பருவ மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்குப் பதிலாக இது செயல்படுகின்றது. குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து வரும் முறையீடுகளையும், கூடுதல் வீரியமுடைய குற்ற வழக்குகளையம் இது கவனிக்கிறது.

3. மேல் முறையீட்டு நீதிமன்றம் :

இம்மன்றம் பழைய குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றம் இருந்த இடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தலைமை நீதிபதி பிரபு அல்லது மேல் முறையீட்டு நீதிபதி பிரபு அவர்களால் தலைமை தாங்கப்படுகிறது. இது கிரௌன் நீதிமன்றத்திலிருந்து வரும் மேல் முறையீடுகளைக் கவனிக்கிறது.

4. பிரபுக்கள் சபை :

நீதிமன்றத் துறையில் உயர்ந்த இடத்தில் இருப்பது பிரபுக்கள் சபையாகும். குற்றவியல் மற்றும் அரசுத்துறை வழக்குகளுக்கு இதுவே மேல்முறையீட்டு மன்றமாக விளங்குகிறது.

## 4.2 நீதிமன்றங்கள் செயல்படுத்தும் சட்டம் :

இங்கிலாந்தின் நீதிமன்றங்கள் செயற்படுத்தும் சட்டத்தின் அடிப்படைகள் பின்வருமாறு :

1. நாட்டு மரபுச் சட்டம் **(Common Law)** :

இங்கிலாந்தில் மதத்தைச் சார்ந்த நீதிமன்றங்கள் உரோமானியச் சட்ட நீதிமுறை நீடிப்பதையே விரும்பிய போதிலும் அந்நாட்டிற்குச் சொந்தம் என்று கூறத்தக்க ஒரு சட்டமுறை அங்கு வளர ஆரமபித்து. ஒருங்கமைக்கப்பட்ட அரசாங்க முறை தோன்றுவதற்கு முன் இங்கிலாந்தில் குற்றங்கள் ஆங்காங்கேயுள்ள தல நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டன. ஆகவே, மதத் தலைவர்களோ, அரசனோ இந்நீதிமன்றங்களில் சுதந்திரப் போக்கிற்கு எதிராகத் தம் விருப்பத்தினைத் திணித்து தீர்ப்பை மாற்ற இயலாமல் போயிற்று.

12-ஆம் நூற்றாண்டில் அரசனால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று நீதி வழங்க ஆரம்பித்தனர். இதன் விளைவாக அவர்கள் ஒரே மாதிரியான வழக்குகளில் தான் முன்பளித்த நீதியினைச் சார்ந்த தீர்ப்பு வழங்கத்

தலைப்பட்டனர். ஆகவே இப்பழக்கத்தினால் சட்டம், நீதி இவற்றை அமுல்படுத்துவதில் வேறுபாடு இல்லாமல் ஒரே தன்மை தோன்றலாயிற்று. 13-ஆம் நூற்றாண்டளவில் முன் வழக்குகளின் தீர்ப்புகள் சட்டத்தோடிணைந்த முக்கிய பகுதியாக உருப்பெற்றது.

நாட்டு மரபுச் சட்டமானது, இத்தகைய வழக்குச் சட்டங்கள் அல்லது நீதிபதி உருவாக்கும் சட்டங்கள் ஆகியவற்றின் தொகுப்பேயாகும். இத்தகைய சட்டங்கள் சட்டமன்றத் துறையினரால் மதிக்கப்படுகிறது. இவற்றிற்குப் புறம்பாக சட்டமன்றத்தின் சட்டங்கள் இயற்றப்படுவது அரிது. ஆங்காங்கே இத்தகைய நாட்டு மரபுச்சட்டம் சட்டமன்றத்தால் சட்டமாக இயற்றப்படுவதும் உண்டு. துவக்கத்தில் அநேக குற்றவியல் வழக்குகளைப் பரிசீலனை செய்ய நாட்டு மரபுச்சட்டங்கள் தான் இருந்தன. இச்சட்டத்திற்குப் பதில் இப்பொழுது அவற்றை விசாரிக்கச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்கள் தோன்றிவிட்டன.

"மக்களாட்சி அரசாங்கமும் அரசியலும்" எனும் தம் நூலில் J.A. காரி என்பவர் "நாட்டு மரபுச்சட்டம் என்பது எழுதப்படாத ஒரு சட்ட தொகுதியாகும். ஏனெனில் இம்முறையில் அமைந்த எல்லாச் சட்டங்களையும் எழுத்து வடிவில் ஒன்றாகக் காண்பதறிது. இந்த சட்டத்தை பற்றிய பல பயன் தரும் புத்தகங்கள் வெளிவந்துள்ள போதிலும் அப்புத்தகங்களின் அடிப்படையில் நீதி வழங்குவது என்பது இயலாது இதுதான் சட்டம் என்று நீதிமன்றத்தை கட்டுப்படுத்துவது முன்வழக்குத் தீர்ப்பே (Precedent) தவிர இத்தகைய புத்தகங்கள் அல்ல" என்று கூறியுள்ளார்.

மரபுச் சட்டம் இன்று சட்டத்தின் ஆய்வுக் கட்டுரைகளிலும், நீதிமன்றங்களிலும் பல்வேறு தீர்ப்புகளிலும் காணப்படுகின்றது. ஒரு சட்டத்தின் கருத்தைக் குறித்து சந்தேகம் எழும் போது நீதிபதிகளுக்கு உதவுவது மரபுச் சட்ட விதிகளாகும்.

**2. தீர்ப்பு வழிச் சட்டம் (Case Law) :**

ஒரே மாதிரி சட்ட நுணுக்கமுள்ள வழக்குகளில் தீர்ப்பளிக்கும் பொழுது உயர்நீதிமன்றங்களது தீர்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மரபுச் சட்ட விதிகளைச் செயல்படுத்தும்பொழுது குறிப்பிட்ட வழக்குகளின் முடிவில் தீர்ப்பு அளிக்கும் பொழுதும் நீதிபதிகள் சட்டத்தை உருவாக்குகின்றனர்.

**3. தரும நியாய முறை விதிகள் (Rules of Equity) :**

இவை பல்வேறு சான்சலர் பிரபுக்களது தீர்ப்புகளிலிருந்து உருவானவையாகும். இவ்விதிகள் நாட்டு மரபுச் சட்டங்களுக்கு எதிராகச் செல்பவை அல்ல. மாறாக, நாட்டு மரபுச்சட்டங்களின் குறைகளை நிவர்த்தி செய்கின்றன. தரும நியாய முறை விதிகள் நாட்டு மரபுச் சட்டங்களுக்கு துணை நிற்கின்றன. ரோமானியச் சட்டங்களிலிருந்தும் தன் மனசாட்சிக்கொப்பவும் நீதிபதிகள் இத்தகைய வழிதிகளை வளர்த்துள்ளனர். இந்த வகையில் இவ்விதிகளும் நாட்டு மரபுச்சட்டத்தை ஒத்துள்ளன.

**4. இயற்றுச் சட்டம் (Positive Law) :**

இவை பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களாகும். இச்சட்டங்களே நீதி மன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் பெரும்பாலானவைக்கு அடிப்படையாக அமைகின்றன. குறிப்பிட்ட நோக்கங்களுக்காக எழுதப்பட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விளங்குவதால் இச்சட்டங்கள் பிற சட்டங்களை விட நீதிக்கு அடிப்படையாக விளங்குகின்றன. தற்காலத்தில் இயற்றுச் சட்டமே சட்டத்திற்குப் பெருத்த ஆதாரமாகும்.

**அரசுத்துறை குற்றவியல் அதிகார வரம்பு பற்றிய ஒரு மதிப்பீடு**

அரசுத்துறை, வழக்குகளை விசாரிக்கும் உயர்நீதிமன்றத்தின் பிரிவுகள்

பற்பலவாக அமைக்கப்பட்டுள்ளன. வழக்குகளை விசாரிப்பதில் அதிக காலதாமதம் ஏற்படுகின்றது. அரசுத்துறை வழக்குகளின் விசாரணை அதிக பணி செலவுள்ளது. நிர்வாக பணிகளிலேயே நீதிபதிகள் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். ஒரு நீதிபதி நிர்வாகத் திறனுடையவராக இருப்பார் எனக் கூறமுடியாது.

இதற்கு நேர்முரணாக உள்ளது குற்றவியல் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விசாரணை குற்றவியல் வழக்குகள் துரிதமாகவும் செலவு குறையாகவும் நடுநிலையாகவும் விசாரிக்கப்படுகின்றன. கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் ஒரு நீதிமன்றத்திற்கு முன் கொண்டுவரப்படுகின்றார். இங்கிலாந்தில் வழங்கப்படும் நீதியின் தரம் 2 முக்கிய கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டது. முதலாவதாக, நடைமுறையில் இருக்கும் நிறுவனங்களில் மாற்றங்கள் தானாக வரவேண்டுமேயன்றி புகுத்தக்கூடாது. இரண்டாவதாக, தமது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் நீதித்துறை நீதி வழங்குவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்மென ஆங்கிலேயர் கருதுகின்றனர். நீதி வழங்குவதில் நீதிபதிகள் அரசியல் கட்டுப்பாட்டிற்குட்படக்கூடாது. மேலும் அவர் அரசாங்க அதிகாரிக்கு விசேடச் சலுகைகள் காட்டக்கூடாது.

## 4.3 சட்டத்தின் ஆட்சி

சட்டம் இரு குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக தனிநபர்களது நடவடிக்கைகளை இது வரையறுக்கின்றது. இரண்டாவதாக, ஆட்சி நடத்துவோரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தித் தனி நபரைப் பாதுகாக்கின்றது. சட்டம் தான் முக்கியமானது என்ற அடிப்படைக் கருத்தை சட்டத்தின் ஆட்சி வலியுறுத்துகின்றது. இது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றது. எதேச்சதிகார அரசாங்கத்திற்கெதிரான பாதுகாப்பாக இது அமைகின்றது. ஒழுங்கை நிலைநாட்ட சட்டம் பயன்பட வேண்டும். சட்டத்திற்கேற்ப தான் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி என்றால் சட்டம் ஆட்சி செய்கின்றது என்று பொருள். தனி நபரும் அரசாங்கமும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவரே.

சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தை உருவாக்கியவர் பேராசிரியர் டைசி. இவர் இதனை இங்கிலாந்தின் அரசியலமைப்பின் அடிப்படைத் தத்துவமாக கருதினார். சட்டத்தின் ஆட்சிக்கு இவர் அளித்துள்ள விளக்கம் மிகக் கடுமையாகத் திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. இங்ஙனம் திறனாய்வு செய்தவருள் குறிப்பிடத்தக்கவர் பேராசிரியர் சர். ஐவர் ஜென்னிங்ஸ். பின்வருபவை சட்டத்தின் ஆட்சியின் முக்கிய தத்துவங்களாகும்.

1. சட்டம் துல்லியமாகவும், புரியக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
2. அரசாங்கத்தின் நடவடிக்கைகளும், அரசாங்க அலுவலர்களது நடவடிக்கைகளும் சட்டத்தின் ஆதரவுடன் தானிருக்க வேண்டும். ஒரு தனி மனிதரது வாழ்க்கையில் எவரும் எதேச்சதிகாரமாகத் தலையிடக் கூடாது. சட்டத்தை மீறியதற்காக மட்டும் தான் ஒருவர் கைது செய்யப்படலாம்.
3. சட்டத்தை மீறியதற்காகத்தான் ஒருவர் தண்டிக்கப்பட முடியும். அதுவும் பாரபட்சமற்ற தீர்ப்பாயத்தின் முன் நேர்மையான விசாரணைக்குப் பின்னர் தான் இத்தண்டனை அளிக்கப்பட வேண்டும்.
4. நீதித்துறை சட்டத்திற்கு விளக்கமளிப்பதால் பாராளுமன்றமோ அல்லது அரசாங்கமோ தலையிடக் கூடாது.

பேராசிரியர் டைசி சட்டத்தின் ஆட்சிக்கு மூன்று உட்பிரிவுகளுண்டென்றார். நாம் இனி இவற்றை விரிவாக ஆராய்வோம்.

1. "No man is punishable or can be lawfully made to suffer in body or goods except for a distinct breach of the law established in the ordinary legal manner before the ordinary courts of the land".

சட்டத்தின் உயர்வு இங்கு வலியுறுத்தப்படுகின்றது. தண்டனைகள் நீதிமன்றங்களால் தான் வழங்கப்பட முடியும். சட்டத்திற்கேற்பத்தான் தண்டனை வழங்கப்பட வேண்டும். சட்டத்தை மீறாத குடிமகன் ஒவ்வொருவனுக்கும் சுதந்திர உரிமையுண்டு. ஒருவன் சட்டத்தை மீறிவிட்டான் என்பது சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டள்ள வழிமுறைக்கேற்ப சாதாரண நீதிமன்றங்கள் முன் நிரூபிக்கப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சியில் மேற்கூறிய பகுதிகள் யாவும் இங்கிலாந்தின் மக்களுக்கு உரிமை விண்ணப்பம் (Petition of Rights 1628), ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் (Hebeas Corpus Act 1679), அரசுரிமை நிர்ணயச் சட்டம் (Act of Settlement, 1701) ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கப் பெற்றன.

2. "Not only is no man above the law but every man whatever his rank or condition is subject to the ordinary law of the realm and amenable to the jurisdiction of the ordinary tribunals".

மக்களைப் பல வகைப்பட்டவராகச் சட்டம் பிரிப்பதில்லை என்று டைசி இங்கு குறிப்பிடுகின்றார். அரசாங்க அலுவலரும் தனிநபரும் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். இரு சாராருக்கும் ஒரே மாதிரிதான் சட்டம் செயல்படுகிறது. அரசாங்க அலுவலர்கட்கும் தனிநபர்களுக்கும் இடையே எழக்கூடிய தகராறுகள் சாதாரண நீதிமன்றங்களால் தான் விசாரிக்கப்பட வேண்டும். பிரத்யேக தீர்ப்பாயங்கள் நிறுவப்படக்கூடாது. சட்டத்திற்கு மாறான நடவடிக்கை எடுத்தால் அதற்கு ஒரு குடிமகனுக்கு எவ்வளவு பொறுப்புண்டோ அதே அளவு பொறுப்பு தலைமை அமைச்சரினின்று ஒரு காவலர் அல்லது வரி வசூலிப்பவர் வரையுள்ள அலுவலர்க்கு உண்டு என்று டைசி கூறுகின்றார்.

மேற்கூறியதற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் வழக்கை கூறலாம். 1763-ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினரும், நார்த் பிரைட்டன் (North Briton) என்ற ஏட்டின் பதிப்பாசிரியருமான ஜான் வில்க்ஸ் (John Wilkes) என்பவரும் வேறு நாற்பத்தெட்டு நபர்களும் உள்துறை அமைச்சர் ஹாலி பாக்ஸ் பிரபுவினால் (Lord Halifax) வெளியிடப்பட்ட பொது வாராண்டிற்கேற்பக் கைது செய்யப்பட்டனர். வில்க்ஸ் தமது ஏட்டில் அரசரின் பேருரையைத் தாக்கி எழுதினார் என்பது தான் குற்றச்சாட்டு. சார் செயலாளரான (Under Secretary) உட் (Wood) என்பவரது மேற்பார்வையின் கீழ் பொது வாராண்ட் செயல்படுத்தப்பட்டது. (யாரைக் கைது செய்ய வேண்டும், எந்த இடத்தை சோதனையிட வேண்டும், எப்பொருளைக் கைப்பற்ற வேண்டும் என்று குறிப்பிடாததுதான் பொது வாரண்ட் என்பது) தாம் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டதாக குற்றம் சாட்டி வில்க்ஸ் உள்துறை அமைச்சர் மீது வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் வில்க்ஸை கைது செய்தது. சட்ட விரோதமான நடவடிக்கையாகும் எனக் கூறி ஹாலிபாக்ஸ் பிரபு எண்ணூறு பவுன்களும் வில்க்ஸிற்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பளித்தது. இவ்வழக்கினின்று இரு உண்மைகள் புலனாயின. ஒரு தனி நபர் அரசாங்க அதிகாரியின் எதேச்சதிகார

நடவடிக்கையினின்று பாதுகாக்கப்பட்டார். அரசிற்காக, அரசின் நலனுக்காகத்தான் பணிபுரிகின்றோம் எனக் கருதிய அதிகாரிக்கு நீதிமன்றத்தின் பாதுகாப்புக் கிட்டவில்லை. பொது வாரண்டுகள் சட்டவிரோதமானவை என்பது இவ்வழக்கிலிருந்து முடிவாயிற்று. அமைச்சர்கள் சட்டத்திற்குப் பொறுப்புடையவர்கள் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. ஓர் அமைச்சரின் அதிகாரப்பூர்வமான நடவடிக்கைகளின் அடிப்படையில் அவருக்கெதிராக சாதாரண நீதிமன்றத்தின் முன் வழக்குத் தொடரலாம் என்றும் தெளிவாயிற்று.

3. "With us, the law of the constitution, the rules which in foreign countries naturally form part of constitutional code, are not the source, but the consequence of the rights of individuals as defined and enforced by the courts".

குடிமக்களின் உரிமைகள் அரசியலமைப்பால் அளிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுபவையல்ல என்று டைசி கூறுகின்றார். (அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள உரிமைகளின் பிரகடனம் குடிமக்கட்கு உரிமைகளை அளித்து அவற்றைப் பாதுகாக்கின்றது). அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டவையான மனித உரிமைகள் அரசியல் அமைப்பு தோன்றுவதற்கு முன்னரே இருக்கின்றன என்று டைசி கூறுகின்றார். நாட்டின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை தான் உரிமைகள் என்பது இவரது கருத்து. வாழ்க்கை உரிமை, பேச்சுரிமை, பொதுக்கூட்டம் நடத்துவதற்கான உரிமை போன்ற உரிமைகள் பொதுச்சட்ட உரிமைகளின் ஒரு பகுதியாகும். இதனால் தான் இவை காணப்படுகின்றனவேயன்றி அரசியலமைப்பால் அவை அளிக்கப்பட்டவை என்ற காரணத்திற்காக அல்ல. "அரசியலமைப்பு சாதாரணச் சட்டத்தினின்று தோன்றியதாகும். ஏனெனில் சில குறிப்பிட்ட வழக்குகளின் அடிப்படையில் நீதிமன்றங்களால் நிலைநாட்டப்பட்ட மனித உரிமைகளினின்று தான் அரசியலமைப்பின் பொதுக் கொள்கைகள் உருவெடுத்துள்ளன." பிறநாட்டு மக்கட்கு அவர்களது உரிமைகள் அவர்களது அரசியலமைப்புக்களால் அளிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படலாம். ஆனால் இங்கிலாந்தில் இவை சட்டத்தின் ஆட்சியால் அளிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

டைசியின் சட்டத்தின் ஆட்சியை திறனாய்வு செய்துள்ளவர்களில் முதன்மையானவர் சர் ஐவர் ஜென்னிங்ஸ். இரு கோணங்களினின்று இவர் சட்டத்தின் ஆட்சியைத் தாக்குகின்றார்.

மனித உரிமைகட்குள்ள முக்கியத்துவத்தை டைசி வகைப்படுத்துகின்றார். தனி உரிமைக் கோட்பாடும் பொதுச்சட்டக் கொள்கைகளும் இவரைக் கவர்ந்தன. இவர் தனிநபருக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளாக ஆட்சித்துறைச் சட்டம் செயல்பட்டு வந்ததை டைசி உணரவில்லை என்று ஜென்னிங்ஸ் சுட்டிக் காட்டுகின்றார்.

அரசியலமைப்பு சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்ற கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று ஜென்னிங்ஸ் கூறுகின்றார். இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் பாராளுமன்றம் தான் உயர்வானது. பாராளுமன்றம் எச்சட்டத்தையும் இயற்றலாம். மனித உரிமைகளைப் பெருமளவு சுருக்கவும் இதனால் இயலும். நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை மாற்றுவதற்காகவும் இது சட்டமியற்றலாம். இதனினின்று பாராளுமன்றம் தான் உயர்வாகத் தெரிகின்றதேயன்றி சட்டத்தின் ஆட்சியல்ல.

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

2. சட்டத்தின் ஆட்சியின் கட்டுப்பாடுகள் யாவை?

## 4.4 சட்டத்தின் ஆட்சிக்குள்ள கட்டுப்பாடுகள் :

சட்டத்தின் ஆட்சிக்குள்ள முக்கியத்துவத்தை குறைகூற முடியாதெனினும்

இதனால் பல விதிவிலக்குகள் இருக்கின்றன. பலதரப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் சட்டத்தின் ஆட்சி செயல்படவில்லை.

1893-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பொதுப்பணியாளர் பாதுகாப்புச் சட்டம் (Public Authorities Protection Act) அரசாங்க அலுவலர்கட்குத் தேவையான அளவு பாதுகாப்பு அளித்தது. அரசாங்க அலுவலர் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்குத் தோற்றால், அவ்வழக்கைத் தொடர்ந்தவர் அவ்வலுவலர்க்கு பெருத்த நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருந்தது. இச்சட்டத்திற்குப் பதிலாக வேறொ( சட்டம் இயற்றப்பட்டு இச்சட்டம் தற்பொழுது குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றது.

"அரசர் ...ற்றம் புரிய முடியாது" (The King can do no wrong) தமது அலுவலர்களது ... வடிக்கை...ட்கு முடிமன்றம் பொறுப்பல்ல. அதற்கெதிராக வழக்குத் தொடர முடியாது. உரி... ...க்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு போதுமானதல்ல என்பது இதனினின்று தெளிவாகின்றது.

இங்கிலாந்தின் சட்டங்களை மீறும் இங்கிலாந்திலுள்ள அயல்நாட்டுத் தூதுவர்கள் மீது இங்கிலாந்தின் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியாது. அவர்களின் விசாரணை அவரவர் நாடுகளிலுள்ள நீதிமன்றங்களில் தான் நடத்தப்பட முடியும். வாணிபப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள அயல்நாட்டு கப்பல்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க முடியாது.

சேம்பர்லைன் பிரபுவால் (Lord Chamberlain) நாடகங்கட்கு விதிக்கப்படும் தடையை எந்த நீதிமன்றமும் அகற்ற முடியாது. தனியார் கடிதங்களை நிறுத்தி வைத்துப் பரிசீலிக்க அமைச்சருக்கு அதிகாரமுண்டு. இது சட்டத்தின் ஆட்சியை மீறும் நடவடிக்கையாகும்.

நீதிபதிகளின் உத்தியோகப்பூர்வமான நடவடிக்கைகட்கு அவர்கள் பொறுப்பல்ல. அரசாங்கத்தின் அலுவலரை எப்பொழுது வேண்டுமாயினும் பதவியினின்று விலக்க அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. அரசாங்கத்தின் அலுவலர் முடிமன்றத்தின் விருப்பக் காலத்தில் பதவி வகிப்பவர் என்பது இதன் பொருள்.

பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள குடிமக்கள் நாட்டுச் சட்டத்திற்கு மாத்திரமின்றி அவர்கள் பணி சம்பந்தப்பட்ட சட்டங்கட்கும் கட்டுப்பட்டவர்களாவர். படைத்துறைகளில் பணிபுரிபவர்கள் சாதாரணச் சட்டத்திற்கும் படைத்துறைச் சட்டத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். திருச்சபையில் பணிபுரிவோர், சாதாரணச் சட்டத்திற்கும், திருச்சபையின் சட்டத்திற்கும் கட்டுப்பட்டவர்கள்.

சட்டத்தின் ஆட்சி எல்லோரையும் ஒரே மாதிரி பாதிக்கவில்லை என்பது மேற்கூறியவற்றினின்று புலனாகிறது.

## 4.5 பிரிட்டனில் கட்சி முறை

இக்கால அரசாங்க முறையை நடத்துவதற்கு அரசியல் கட்சிகளின் அமைப்பும் செயலும் இன்றியமையாதவை ஆகும். அரசியல் கட்சிகள் தாம் பிரதிநிதித்துவ அரசாங்க முறையைச் செயல்படத்தக்கதாக ஆக்குகின்றன. பிரதிநிதித்துவ அரசாங்க முறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக பிரிட்டன் உள்ளது.

பிரிட்டனின் கட்சிமுறை படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. அதனுடைய தோற்றமும், வளர்ச்சியும் வரலாற்றின் தற்காலப் பதியின் தொடக்கத்தில் காணப்படுகின்றன. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டனின் எல்லா பிராட்டஸ்டண்ட் கிருஸ்த்துவர்களையும் போப்புக்கு எதிராக ஒரு அமைப்பின் கீழ் இணைக்கும்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

3. பிரிட்டனில் கட்சிமுறை வளர்ச்சியை கூறுக.

நோக்கத்துடன் பிரிட்டனில் ஒரு கிருஸ்த்துவ திருச்சபை கட்சி தோன்றிற்று. பின்னர் அவர்கள் அரசையும் திருச்சபையையும் ஆதரிப்பவர் என்றும், பாராளுமன்றத்தை ஆதரிப்பவரென்றும் இரு பிரிவுகளாகப் பிரித்தனர். 1642-49 ஆம் ஆண்டுகளுக்கிடையே நடைபெற்ற புரட்சியில் கவலியர்களெனப்படும் அரசையும், திருச்சபையையும் ஆதரிக்க, ரவுண்ட் ஷெட்ஸ் எனப்படுவோர் பாராளுமன்றத்தை ஆதரித்தனர். பாராளுமன்ற இறைமைக் கொள்கை மூன்றாம் வில்லியத்தின் ஆட்சிக்குப் பின்னர் நிறுவப்பட்ட பொழுது, இரு கட்சிகளும் டோரி என்றும் விக் என்றும் புதிய பெயர்களை ஏற்றுக் கொண்டன. விக்குகளுக்கும் ஆதரவாக அமைந்தவை பெரிய நிலப்பரப்புகளடங்கிய குடும்பத் தொகுதிகளாகும். ஆனால் டோரிகள் பெரும்பாலும், சிறிய நிலச்சுவான்தார்களே ஆவர். 1832- ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் அப்போது வளர்ந்து வந்த தாராளக் கருத்துக்களின் விளைவே ஆகும். அது நிறைவேற்றப்படுவதற்கு விக்குகளே காரணமாவர். 1851-ஆம் ஆண்டிற்கு பின்னர் விக்குகள் லிபரல்கள் அல்லது தாராளக் கட்சியினர் என்றும், டோரிகள் தங்கள் பெயரை கன்சர்வேடிவிகள் என்றும் மாற்றிக் கொண்டனர்.

19-ஆம் நூற்றாண்டின் நடுவில் இரு கட்சிகளும் தெளிவாக பிரிந்து காணப்பட்டன. கன்சர்வேட்டிவ் கட்சியினர் அரசருடைய விசேட அதிகாரங்களையும், பிரபுக்கள் அவையின் அதிகாரங்களையும், கிருஸ்துவத் திருச்சபையின் தனி உரிமையையும், நிலப்பிரபுக்களின் உரிமையையும், ஏகாதிபத்திய முறைமையையும் ஆதரித்தனர். லிபரல் கட்சிப் பெரும்பாலும் இடைத்தர வகுப்பாராலும் நகர மக்களாலும் ஆதரிக்கப்பட்டது. தடையற்ற வாணிபக் கோட்பாட்டை ஆதரித்த லிபரல்களோடு பல செல்வமிக்க தொழிலதிபர்களும் சேர்ந்தனர். அக்காலத்தில் நிலவிய சூழ்நிலைக்கேற்ப பல மாறுதல்கள் அரசாங்க வடிவத்திலும், தொழிலும் செயல்படுத்தல் வேண்டுமென்று லிபரல் கட்சி கோரிக்கை விடுத்தது. வாணிபச் சுதந்திரம், தடையற்ற போட்டி, அரசியல உரிமைகள் யாவருக்கும் கிடைக்குமாறு விரிவாக்குதல் ஆகியவையே லிபரல்களுடைய நோக்கங்களாகும். 1900-ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி நடைபெற்றது. அப்பொழுது மூன்றாவது கட்சி ஒன்று உருவாகியது. இந்தக் கட்சி தொழிற்கட்சி என்று அழைக்கப்பட்டது. அதில் பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து இருந்தனர். காலப்போக்கில் லிபரல் கட்சி அங்கத்தினர்கள் குறைந்தனர். அதனுடைய இடத்தை தொழிற்கட்சி பிடித்துக் கொண்டது. பிரிட்டன் மீண்டும் இருகட்சி முறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக ஆயிற்று. 1923-ஆம் ஆண்டு ராம்சே மாக்டனால்டு என்றும் பிரதமரின் தலைமையில் தொழிற்கட்சி முதல் முறையாக ஆட்சி அமைந்தது. இவ்வகையில் பிரிட்டனின் கட்சி முறை தோன்றிற்று.

பிரிட்டனின் கட்சி முறையில் அதற்கே உரிய சில முக்கிய இயல்புகள் இருக்கின்றன் முதலாவதாக பதினேழாம் நூற்றாண்டிலிருந்து இரு கட்சி முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக பிரிட்டன் இருந்து வருகிறது. ஜென்னிங்ஸ் என்பவர் கூறுவது போல, ஆங்கில வரலாறு "இருவருக்கிடையே ஓர் அரசியல் போராட்டம் நிகழ்கிறது" என்ற எண்ணத்தை நம்மிடம் தோற்றுவிக்கிறது. இரண்டாவதாக பிரிட்டன் இரு கட்சிகளுக்கிடையேயும் தெளிவான இலட்சிய வேறுபாடுகள் இருக்கின்றன. உற்பத்தி சாதனங்களையும், பங்கீட்டு சாதனங்களையும் பிரிட்டனின் கட்டுப்படுத்தப்படுகின்ற வெல்வந்தர் வகுப்பினர் நலன்களைப் பாதுகாக்கவும், வளர்ப்பதற்கும் கன்சர்வேட்டிவ் கட்சி உறுதி கொண்டிருக்க, தொழிற் கட்சியானது இதே செயலைத் தொழிலாளர் வகுப்பிற்காக செய்கிறது. மூன்றாவதாக, பிரிட்டன் கட்சிகளின் முக்கிய இயல்பு

அவற்றின் அமைப்பையும் ஒழுங்கையும் பற்றியதாகும். அங்கு கடுமையான கட்சிக் கட்டுப்பாடு இருப்பதால் கட்சிக்கு மாறாக வாக்களித்தால், கட்சி மாறுதல் முதலிய அரசியல் தீமைகளுக்கு இடமில்லை. அங்கு கட்சி முறையில் காணப்படும் சிறந்த அமைப்பும், கட்டுப்பாடான இயல்பும் கேபினட் முறை வெற்றியாக செயல்படுவதற்கும், அந்த முறையை ஒரு சிறந்த எடுத்துக்காட்டான முறையாக ஆக்குவதற்கும் வழி வகுத்துள்ளன. கடைசியாக பிரிட்டனின் அரசியல் கட்சிகள் தங்களுடைய நோக்கங்களையும், குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்கு குடியாட்சி முறையமைவுகளையும் சட்ட வரம்பிற்கந்த முறைகளையும் முழுவதும் நம்பி இருக்கின்றன. இந்தக் காரணத்தினால்தான் இந்த நாட்டில் வன்முறைச் செயல்கள் நடைபெறுவதில்லை. குடியாட்சிக்கொவ்வாத வன்முறையிலான செயலைச் செய்யும் முயற்சி எதுவும் கவனமாக தவிர்க்கப்படுகிறது. சுருக்கமாக பிரிட்டனின் அரசியல் முறையின் நிலையான தன்மை அதன் பாராளுமன்ற கட்சிக் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

## 4.6 கன்சர்வேட்டிவ் கட்சி (conservative party)

கன்சர்வேட்டிவ் கட்சியானது, கண்மூடித்தனமான மூடப்பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் ஒரு குழுவாக ஒருபோதும் இருந்ததில்லை. அது தனது மரபுகளையும், முன்னிகழ்வுகளையும் உறுதியாக மதித்து, கூடுமானவரை மாறுதல்களை உண்டாக்க விரும்புகிறது கன்சர்வேட்டிவ் கட்சி நாட்டிலுள்ள உயர்குடிப் பிரபுக்களோடு தொடர்புடையதாயினும் அது சமுதாயத்தில் செல்வர், வறியோர், உழைப்பாளிகள் ஆகிய எல்லா வகுப்பாருடைய ஆதரவையும் பெறுகிறது. முக்கியமாக அது செல்வருக்கும், வணிகருக்கும் பிரதிநிதியாக விளங்குகிறது. அதே சமயத்தில் அது வறியவர், தொழிலாளர் ஆகியோருடைய நலனைப் பேணும் மனப்பான்மையையும் கொண்டுள்ளது. அதனுடைய கொள்கைகள் பரந்தவையாகவும் செயல்முறை இயல்புடையவையாகவும் இருக்கின்றன.

கன்சர்வேட்டிவ் கட்சியின் அமைப்பில் கன்சர்வேட்டிவ்களின் தேசிய ஒன்றியம் 1867-ல் அமைக்கப்பட்ட ஒன்றியக் கழகங்கள், பாராளுமன்றக் கட்சி, 1870-ல் அமைக்கப்பட்ட மத்திய அலுவலகம் முதலிய மூன்று கூறுகள் இருக்கின்றன. மத்திய அலுவலகமே கட்சியின் தலைவரின் செயலகமாகும். இக்கட்சியின் கொள்கையை உருவாக்குவோர் அதன் பாராளுமன்ற குழுவினர் ஆவர். அதில் கன்சர்வேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கின்றனர். இந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரின் கீழ் இக்குழு வேலை செய்கிறது. 1965 ஆம் ஆண்டிற்கு பின்னர் கன்சர்வேட்டிவ் கட்சியினர் தங்களுடைய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு ஒரு புதிய முறையைக் கையாண்டனர். இம்முறைப்படி தலைவரைத் தேர்ந்தெடுக்கப்படுதற்கு முதல் வாக்கெடுப்பில் ஒருவர் பெரும்பான்மை வாக்குகளை பெறுவதோடு இரண்டாவது வரக்கூடியவரை விட கூடுதலாக 15% வாக்குகளைப் பெறுதல் வேண்டும். இம்முறையில் எவரும் வெற்றி பெறாவிடில் இரண்டாவது முறையாக வாக்கெடுப்பு நடைபெறுகிறது. அதில் வெற்றி பெறுவதற்கு ஒருவர் 51% வாக்குகள் பெறுதல் வேண்டும். இவ்விரண்டு தடவையிலும் எவரும் தேர்ந்தெடுக்கப்படாவிடில், மூன்றாவது வாக்கெடுப்பு நடைபெறுகிறது. அதில் விருப்ப வாக்குமுறையின் மூலமாக (Preferential Vote System) தேர்வு செய்யப்படுகிறது.

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
> 4. கன்சர்வேடிவ் கட்சியின் அமைப்பு, பணிகளை விவரி.

தலைவர் கட்சியின் மையமான முக்கியமான இடத்ததைப் பெறுகிறார்.

ஆண்டுதோறும் அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு விதி இல்லையாகையால் அவர் வரைமுறையில்லாத காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். கட்சி மக்களவையில் முழுப்பெரும்பான்மையோடு வந்துவிட்டால், கட்சித் தலைவர் தலைமை அமைச்சராகிறார். கட்சி எதிர்க் கட்சியாக வந்தால் 'மாற்று கேபினெட்' மந்திரி சபையை அமைக்கிறார். கட்சி கொறடாக்களை அவர் அமர்த்துகிறார். அவருடைய அதிகாரம் வரம்பற்றது அன்று. ஏனெனில் அவர் செய்த குற்றங்களுக்காகவும் செய்யத் தவறிய கடமைக்காகவும் அவர் மீது கட்சியின் பின்னணியில் இருப்பவர்கள் குற்றம் சுமத்தலாம். எடுத்துக்காட்டாக,1964 டிசம்பரில் 1000 பவுண்டு வெடிகுண்டுகளை, காங்கோவிலுள்ள ஐக்கிய நாடுகளின் படைகளுக்கு வழங்குவதங்கு ஆங்கில அரசாங்கம் ஒப்புக் கொண்ட போது தலைமை அமைச்சர் தனது முடிவை மாற்றிக்கொள்ளுமாறு அவர் கட்சியின் பின்னணியில் வற்புறுத்தினர்.

கட்சியின் இலட்சியத்தை ஆராயும்போது பின்வரும் உண்மைகள் புலனாகின்றன. பல்வேறு சமுதாய அமைப்புகளும் தத்தமது சிறப்பியல்புகளோடு பணிகளை செய்வதனால் நாடு நிலைத்து நிற்கிறது என்று இக்கட்சி நம்புகிறது. பொதுவுடைமையாளர்கள் கூறுவது போல வர்க்கப்பான்மையோ, வர்க்கப் போராட்டமோ இருத்தல் இயலாது. மனித வாழ்விற்கும், அதன் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதது வேண்டப்படுவது சுதந்திரம் என்று அவர்கள் நம்புகின்றனர். இப்பொழுதும் அவர்கள் சுதந்திரமான தொழில் உரிமையை ஆதரித்து வருகின்றனர். ஊதியம் பெறுதல் என்ற நோக்கமும் மறைமுக வரிமுறையும், அதிகாரப் பகிர்வு முறையும் மனித சுதந்திரம் என்ற கொள்கையோடு முற்றிலும் ஒத்து போகின்றன என்று அவர்கள் நம்புகின்றனர். பொருளாதாரத்துறையில் அதிகாரத்தின் செயல் அல்லது பங்கு என்பது வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். பொருளாதாரத்தின் மீது பலவாறாக புறக்கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதால், பொருளாதாரம் வளராமல் தடைபடுகிறது.

கன்சர்வேட்டிவ் கட்சியினர் அறிவுமிக்கவர்கள். தங்களுடைய பழைய கனவுகளையும் மனப் போக்குகளையும் அவர்கள் வெறுக்கின்றனர். காலப்போக்கின் கருத்தை அறிவதில் அவர்கள் நாட்டமுடையவராக இருக்கின்றனர். இதன் பொருட்டு அவர்கள் தங்களுடைய எண்ணத்ததை மாற்றி அதன் மூலமாக அரசியலமைப்பில் ஓர் எழுர்ச்சியை ஏற்படுத்த விழைகின்றனர். அதன் உறுப்பினர்களிடையே அவ்வப்போது சில கருத்து வேறுபாடுகள் எழுகின்றன. எனினும் பெரும்பாலோர் தொழிற்கட்சியின் கொள்கையான வேறுபாடு அகற்றல், தேசிய உடைமையாக்கல், அமைதி நிலை நிறுத்தல் போன்றவற்றை அடிப்படையாக வைத்து சமுதாய அமைப்பு காப்பாற்றப்படல் போன்ற கொள்கைப் போக்கிற்கும் நடுவானதொரு போக்கை ஆதரிக்கின்றனர்.

## 4.7 தொழிற்கட்சி (Labour Party)

இக்கட்சி 1900 இல் நிறுவப்பட்ட போதிலும் இதனுடைய மூலாதாரங்கள், சமதர்ம குடியாட்சி கூட்டு பேபியின் கழகம் என்ற ஒரு வகை சமதர்மக்குழு, சுதந்திர தொழிற்கட்சி முதலிய பல தொழிலாளர் அமைப்புகளிலும், சோசலிச சார்புடைய அமைப்புகளிலும் காணப்படுகின்றன. இக்கட்சி பழைய இரு கட்சிகளையும் எதிர்க்கும் ஒன்றாக நிறுவப்பட்டது. தொழிற்கட்சி ஓர் உழைப்பாளர் வகுப்பினுடைய இயக்கத்தின் அரசியல் தன்மையை வெளிப்படுத்திய ஒன்று. இந்த இயக்கமானது தொழிற்சங்கங்களிலும், கூட்டுறவுக் கழகங்களிலும், 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் தோன்றிய பட்டயக்காரர் இயக்கத்திலும் (Chartist Agitation) தன்னை வெளிப்படுத்திற்று.

தொழிற்கட்சியானது மற்ற கட்சிகளைவிடக் கூடுதலாக சமுதாயத்தின் பிரதிநிதியாக விளங்குகிறது. அது வாழ்வின் எல்லாத் துறைகளிலிருந்தும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்கிறது. அதன் உறுப்பினர்கள் நான்கு வகைப்படுவர். பல்கலைக் கழக ஆசிரியர்கள், சிறு வணிகர்கள், எழுத்தாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் முக்கியமாக இக்கட்சியின் உறுப்பினர்கள் தனி உறுப்பினரெனவும், மறைமுக உறுப்பினரெனவும் இரு வகைப்படுவர். தனி உறுப்பினர் ஒரு தொகுதியைச் சேர்ந்தவராவர். ஆனால் மறைமுக உறுப்பினர் ஒரு தொழிற்சங்கத்துடனோ அல்லது ஒரு சோசலிச கழகத்தோடு இணைந்திருப்பவர். தனி உறுப்பினர் வேறு எந்தக் அமைப்பிலோ அல்லது கட்சியிலோ உறுப்பினராக இருக்கக் கூடாது.

தொழிற்கட்சியின் நிறுவன அமைப்பானது கன்சர்வேட்டிவ் கட்சியினுடையதினின்று அடிப்படையிலே வேறுபடுகின்றது. நாம் முன்னே கூறியபடி தொழிற்கட்சியானது பல தொழிற்சங்கங்கள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பு ஆகும். இத்தகைய கூட்டமைப்பு அதற்கு இருக்கின்ற காரணத்தால் அதனுடைய அடித்தளத்தில் தொழிற்சங்கங்கள், சிறிய சோசலிச கழகங்கள், உள்ளாட்சி கூட்டுறவு கழகங்கள் ஆகிய குழுக்கள் இருக்கின்றன. தொகுதி மட்டத்தில் தொழிற்கட்சி குழுக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்கிறது. எல்லா இணைப்புக் குழுக்களின் பிரதிநிதிகளும் ஒரு பொது மேலாண்மை குழுவில் இருக்கின்றனர். இக்குழுவே பல அலுவலர்களையும் உள்ளூர் மட்டத்தில் உள்ள கட்சியின் செயற்குழுவையும் தேர்ந்தெடுக்கிறது. தொகுதிகள் (Constituencies) வார்டுகள் எனவும் சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வோரு சிறு பிரிவுக்கும் ஒரு சிறு பிரிவுக்குழு இருக்கிறது. தனி உறுப்பினரெல்லோரும் தொகுதி மட்டத்தில் வந்து ஒன்றுகூடாமல் அவர்கள் தங்களது சிறு பிரிவுக் குழுக்களின் மூலமாகவே பங்கு எடுத்துக் கொள்கின்றனர். மேல்மட்டத்தில் தேசிய தொழிற்கட்சி இருக்கிறது. அது நிதி திரட்டும் செயல்களையும், தேர்தல்களில் போட்டியிடுதல், உள்ளாட்சிக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல், பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களின் பெயர்களைக் குறித்தல் முதலியவற்றையும் செய்கிறது. அரசியலமைப்புடைய தொழிற்கட்சியின் மிக முக்கிய அதிகாரம் அதன் செயலாளர் ஆவார்.கட்சியின் வருடாந்திர மாநாட்டிற்கு ஒரு தனிப்பட்ட முக்கியத்துவம் இருக்கிறது. இந்த மாநாட்டுக் கூட்டத்தில், கட்சியோடு இணைக்கப்பட்ட இணைப்புகளின் சார்பாளர்கள் எல்லோரும் பங்கு கொள்கின்றனர். இது கட்சியின் பொதுக் கொள்கையைத் தீர்மானிக்கிறது; தேசிய நிர்வாகக் குழுவின் 28 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இவர்களைத் தவிர 12 உறுப்பினர்களைப் பல்வேறு தொழிற்சங்க ஒன்றியங்களைச் சேர்ந்த குழுக்களும், 7 உறுப்பினர்களைத் தொகுதி மட்ட கட்சிகளும், பிரதேசக் கூட்டமைப்புகளும், ஒரு உறுப்பினரை சோசலிச கூட்டுறவுக் கழகங்களும் தேர்ந்தெடுக்கின்றன. 5 பெண் உறுப்பினர்களும் இருக்கின்றனர். இச்செயற்குழு அல்லது நிர்வாகக் குழு அவ்வப்பொழுது கூட்டம் நடத்துகிறது. இதனுடைய முக்கிய அலுவல் கட்சியின் வருடாந்திர மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைச் செயல்படுத்துவதே ஆகும். கட்சியின் நிதிகளை மேற்பார்வை செய்தல், பாராளுமன்ற கட்சியோடு தொடர்பு கொள்ளுதல், உள்ளூர் மட்டத்திலுள்ள கழகத்தின் மீது ஒழுங்கைக் கட்டுப்படுத்தல் போன்ற மற்ற அலுவல்களும் அதற்கு ஒரு தலைவரையும் ஒராண்டுக்குத் தேர்ந்தெடுக்கிறது. இவர் ஒரு முக்கியமான பதவியிலிருந்தாலும் கன்சர்வேட்டிவ் கட்சியில் தன்னை ஒத்த நிலையிலுள்ளவரைப் போன்ற ஆதிக்கம் உடையவரல்ல.

கோட்பாட்டடிப்படையில் தொழிறகட்சியானது ஜனநாயக சோசலிசமென்ற கோட்பாட்டிற்குப் பொறுப்பேற்றுள்ளது. பேபியன் வகையைச் சேர்ந்த சோசலிசக் கருத்தினடிப்படையில் அது ஒரு வகை சோசலிசத்தைப் பின்பற்றுகிறது. ஆயினும் தொழிற்கட்சி பின்பற்றும் சோசலிசமானது மார்க்சிய சோசலிசத்தின்று அடிப்படையில் வேறுபாடு உடையது. அதனுடைய ஒரு பெரும் நோக்கம் சோசலிசத்தைக் கொண்டு வருவதைவிட தொழிலாளர் அரசாங்கத்தை நிறுவுதலே ஆகும். தொழிற்கட்சி பின்பற்றும் பரந்த கொள்கையைப் பின்வருமாறு கூறலாம். முதலாவதாக பொருளாதார நிறுவனங்களில் பின்பற்றப்படும் கொள்கையால் மக்கள் பாதிக்கப்பட்டு ஏழ்மையான நிலைமைக்கு வழிவகுக்கப்படுகின்றதென தொழிற்கட்சி குற்றம் சாட்டுகிறது. ஆகையால், குடியாட்சித் தத்துவமானது அரசியலில் இருந்தும் பொருளாதாரத்துக்கும் விரிவாக்கப்படுதல் வேண்டுமென்று அது விரும்புகிறது. தனியார் ஊதியப் பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட்டு, கூட்டுறவு முறை நிறுவப்படல் வேண்டும் என தொழிற்கட்சி கூறுகிறது. தனியார் நிறுவனங்களும், பொருளாதாரக் கழகங்களும், சமுதாய உடைமை ஆக்கப்பட்டு சமுதாயக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுதல் வேண்டும். முக்கிய தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டு மற்றவை குடிமக்களிடத்தில் விடப்படவேண்டும். இராண்டாவதாக, தொழிற்கட்சியானது பொதுநல அரசு நிறுவப்படுதலை ஆதரிக்கிறது. இதில் தனியார் பொருளாதார முறையானது சமுதாயக் கட்டுப்பாட்டிலும் ஒழுங்கிலும் வைக்கப்படுகிறது. தேசிய நிறுவனங்கள் ஓர் உண்மையான குடியாட்சி நிறுவப்படுவதற்கு ஒத்துவர வேண்டுமென்று தொழிற்கட்சி விரும்புகிறது பிரபுக்கள் சலுகைகள் குறைக்கப்படுதல் வேண்டுமென்று அது விரும்புகின்றது. மூன்றாவதாக, தொழிற்கட்சியானது உலகநாடுகளிடையே கூட்டுறவு வளர்க்கப்பட வேண்டுமெனக் கூறுகின்றது. மேலும் உலகத்தில் அமைதி, ஐக்கிய நாடுகள் சபை வலுவாக்கப்படுதல் ஆகியவற்றை உறுதியாக நம்புகிறது. முன்னேறிய நாடுகள் உலகத்தில் வறிய, வலுவிழந்த நாடுகளின் வளர்ச்சிக்காக உதவி செய்தல் வேண்டும். அணு ஆயுதக் கருவிகளைச் செய்வதற்காகப் பெருமளவில் பொருள் செலவழிப்பதைத் தொழிற்கட்சி எதிர்க்கிறது.

சுருக்கமாக, தொழிற்கட்சியின் நோக்கத்தை மூன்று தலைப்புகளில் குறிப்பிடலாம். சமூகச் சமத்துவம், பொருளாதாரப் பாதுகாப்பு, தொழில் துறையில் ஜனநாயகம் என்பவையே ஆகும். இறுதியாக இங்கிலாந்து அரசுமுறையிலுள்ள இரு கட்சிகளுமே குடியாட்சிக்குகந்த வழிகளிலேயே அதிகாரத்தைப் பெறுதல் என்ற ஒரு நோக்கத்தைப் பொதுவாகக் கொண்டிருப்பது முக்கியமானதாக கருதப்படுகிறது.

## 4.8 தன்னலக் குழுக்கள் (Pressure Groups)

பல சிக்கல்கள் நிறைந்த சமுதாயத்தில், அரசாங்கத்திற்கு தன்னலக் குழுக்கள் தேவைப்படுகின்றன. இதற்கு பிரிட்டனும் விதிவிலக்கு அன்று. மக்களுடைய சமுதாய, பொருளாதார வாழ்வில் அரசாங்கம் கூடுதலாகப் பங்கு கொள்கின்ற காரணத்தால் தன்னலக் குழுக்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. இங்கிலாந்து அரசியல் முறையமைவில் அரசாங்க இயந்திரத்தின் பிற பாகங்களோடு இணைந்து தன்னலக் குழுக்கள் செயல்படுகின்றன. இன்று பிரிட்டனில் பல தன்னலக் குழுக்களை நாம் காணலாம். பிரிட்டனின் தன்னலக் குழுக்கள் புதிதாக வளர்ந்தவை அல்ல. ஸ்காட்லாந்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான பரோக்கள் பிரிட்டனின் மிகப்பழமையான தன்னலக் குழுக்களாகக் கருதப்படுகின்றன. அவை 14-ஆம் நூற்றாண்டிலிருந்தே இருந்ததாகக்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

5. பிரிட்டனில் தன்னலக்குழுக்களின் அதிகாரத்தை எழுது.

கணக்கிடப்பட்டுள்ளது. 18-ஆம் நூற்றாண்டில் இருந்த அடிமை ஒழிப்புக்குழுவும், தானியச்சட்ட எதிர்ப்புக் கழகமும் மிக வெற்றிகரமாகச் செயல்பட்ட தன்னலக் குழுக்களாகும். எனினும், தொழிற்கட்சியின் தோற்றமானது தனக்கே உரிய சிறப்பைப் பெற்றிருந்தது. எவ்வாறெனில் அது பல தொழிற்சங்கங்களும் சோசலிச இயக்கமும் சேர்ந்த தன்னலக்குழுக்கள் தோன்றியுள்ளன. பிரிட்டன் ஒற்றையாட்சி முறையைச் சேர்ந்த நாடு. ஆகையினால் அனைத்து அதிகாரங்களும் இலண்டனில் அமைக்கப்பட்டுள்ள மைய அதிகாரம், மாநில அதிகாரம் என்ற இரண்டாகப் பிரிக்கிறது. பிரிட்டனில் பல தன்னலக் குழுக்களும் ஏதேனும் ஒரு முக்கிய அரசியல் கட்சிகளோடு இரகசியத் தொடர்பு வைத்துக் கொள்கின்றன. பிரிட்டனின் தன்னலக் குழுக்கள் குடியாட்சி கோட்பாடுகளையும் அரசியல் அமைப்புத் தத்துவக் கோட்பாடுகளையும் மிகக் கவனமாகப் பின்பற்றுகின்றன. தன்னலக் குழுக்கள் தங்களுடைய நலனைப் பெறுவதற்காக எந்தவிதமான சட்டத்தை மீறிய செயல்களிலும் ஈடுபடுவதில்லை. தங்களுடைய செயலர் மூலமாக தமது கருத்துக்களை உரியவர்களிடம் தெரிவித்தல் என்ற முறைதான் அவர்களுடைய வழக்கமான வழிமுறையாகும். அந்த முறையின் மூலம் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் தங்களுடைய ஆதரவைத் தாங்கள் கொடுக்க மாட்டோம் என்ற அச்சுறுத்தலும் அடங்கும். ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நலனைப் பெறுவதற்காகப் பணம் கொடுத்தல் என்பது ஆங்கில அரசியல் முறையில் ஒரு பெரிய குற்றமாகும்.

பிரிட்டனின் தன்னலக் குழுக்களிலே காணப்படக்கூடிய ஒரு குறிப்பிடத்தக்க இயல்பு அவற்றினுடைய எளிமையான, சிக்கலில்லாத இயல்புதான். அவை தமது குறிப்பிட்ட நலனைப் பெறுவதற்காகவோ அல்லது பாதுகாத்து கொள்வதற்காகவோ அரசியல் அமைப்பிற்குப் புறம்பான எந்த முறையையும் கையாளுவதில்லை. நிலையான வலுவான இரு கட்சி முறையினுடைய வளர்ச்சியானது தன்னலக்குழுக்களின் வளர்ச்சியை தேவையற்றதாகச் செய்துவிட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிரான்சிலும் உள்ள தன்னலக்குழுக்களைப் போலல்லாமல் பிரிட்டனின் தன்னலக்குழுக்கள் நுண்ணிய விஷயங்களைப் பற்றியும் ஆட்சியைப் பற்றியுமே அதிகக் கவனம் செலுத்துகின்றன. இதனால் அவை பெருமளவில் ஆற்றலும் வெற்றியும் பெற்று விளங்குகின்றன.

அமைப்பு, கட்டுக்கோப்பு அன்ற அடிப்படையில் பிரிட்டனின் தன்னலக்குழுக்களை இரு முக்கிய வகைகளாகவும், அவற்றிற்கிடையே ஒரு ஓட்டுக்குழுவாகவும் நாம் பிரிக்கலாம். வணிகர் குழுக்கள், கூட்டுறவுகள், தொழிற்சங்கங்கள் போன்ற சில தன்னலக் குழுக்கள் அமைதி, அணு ஆயுதக் குறைப்பு, விலங்குகள் பாதுகாப்பு போன்ற சில தனிப்பட்ட நோக்கங்களுக்காக வேலை செய்கின்றன. இந்த இரண்டு வகைகளுக்குமிடையே, நாம் சில தன்னலக் குழுக்களையும் செயலாற்றும் குழுக்களையும் காணலாம். மோட்டார் சங்கம் போன்ற சாராருக்கான சில நன்னோக்க குழுக்களுக்கும் இடையேயும் ஒரு சிறப்பு வேறுபாட்டைக் காணலாம். மேற்கூறப்பட்டவகை சார்ந்த குழுக்கள் சில பொதுவான நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு சாராருக்கான தன்னலக் குழுக்கள் திட்டவட்டமான நோக்கத்துக்கு அமைக்கப்பட்டிருப்பதால் அவை எப்போதும் ஆதிக்கம் செலுத்துபவையாக இருக்கின்றன. இத்தகைய ஒரு சார்புடைய தன்னலக் குழுக்களின் வகையில் வணிக, தொழில், பணியாளர் குழுவைச் சேர்த்துக் கூறலாம். பிரிட்டனில் மருத்துவக் கழகம், தேசிய ஆசிரியர் சங்கம் போன்ற பணிவகைக் குழுக்களும் இருக்கின்றன. குழந்தைகளின்

துயர் நீக்குதல், மரண தண்டனை ஒழிப்பு போன்ற சில பொது நன்மைக்காக அமைக்கப்படும் குழுக்கள் பொது நலக் குழுக்கள் ஆகும்.

தன்னலக் குழுக்கள் அரசியற் கட்சிகளோடு தொடர்பு கொண்டிருந்தாலும், அரசியலில் அவற்றின் செயல்கள் நிர்வாகம் பாராளுமன்றம் பொது மக்கள் ஆகிய மூன்று நிலைகளிலும் ஆதிக்கம் பெறுகின்றன. இம்மூன்று நிலையில் கொள்கை வகுத்தல், கொள்கை நிறைவேற்றுதல் முதலிய அரசாங்க அதிகாரங்கள் நிர்வாகத் துறையினிடத்தும் குவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், தன்னலக் குழுக்கள் நிர்வாகத் துறையின் மீது தங்களுடைய கூடுதலான அதிகாரத்தைக் கையாளுகின்றன. தற்கால பொது ஆட்சித் துறையில் தொழில்நுட்ப ஆலோசனையும், செய்தியும் தேவைப்படுவதால், சில வேளைகளில் அரசாங்க ஆட்சித் துறைகளும், தனியார் கழகங்களும் அல்லது குழுக்களும் ஒன்றோடொன்று ஒத்துழைக்கின்றன. எடுத்துக்காட்டாக உள்ளாட்சியில் சீர்திருத்தங்களைப் பொறுத்த வரையில் அரசாங்கமானது, வட்டமன்றங்களின் கழகம், நகராண்மைக் கழகங்களின் சங்கம் ஆகியவற்றைப் பெரும்பாலும் கலந்தாலோசிக்கிறது. சில தன்னலக் குழுக்கள் தனிப்பட்ட அமைச்சர்கள் மீதும், அலுவலர் மீதும், முறைசாரா வழியில் செலுத்தக் கூடிய நிலையில் இருக்கின்றன. இத்தகைய புதிய வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ள காரணத்தால் வீயர் என்னும் அறிஞர் பிரிட்டனின் அரசியலமைப்பானது ஓரளவு கூட்டுறவுத்தன்மை இயல்பு உடையது என்று கூறுகிறார்.

ஒரு தன்னலக் குழு நிர்வாகத் துறையினால் பயன் ஏதும் பெறாவிட்டால், அது தனது கோரிக்கையைப் பாராளுமன்றத்துக்கு எடுத்துச் செல்கிறது. இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளுதல், தீர்மானங்களைக் கொண்டு வருதல், விவாதம் நடத்தக் கோருதல் போன்ற ஆதிக்கச் செயல்கள் தோன்றுகின்றன. ஏதேனுமொரு தன்னலக் குழுவின் உதவியினால் தேர்தலில் வெற்றி பெற்று, பொதுமக்கள் மன்றத்தில் அமர்ந்திருக்கும் பிரதிநிதிகள் மூலமாக இச்செயல்களெல்லாம் நடைபெறுகின்றன. சிறு குழுக்கள் இவ்வாறு தொடர்பு கொள்தலையே தொழிலாக உள்ள பாராளுமன்ற செயலர்களை அமர்த்துகின்றன, பிரிட்டனின் தொழில் சாலைகளின் இணைப்பு அமைப்பு (Confederation of British Industries) போன்ற தன்னலக் குழுக்கள் ஒவ்வோராண்டிலும் மக்களவையில் நிதிசட்டமுன்வரைவு நிறைவேற்றப்படுதலில் மிகவும் தீவிரமாய் கவனம் செலுத்துகின்றன. கடுமையான கட்சிக் கட்டுப்பாடும், கொறடாக்களும், பாராளுமன்றம் செயலாற்றலில் தன்னலக் குழுக்களின் செயலைக் கட்டுப்படுத்துகின்றன.

பிரிட்டனில் ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பொதுமக்கள் கருத்தை தன்னலக் குழுக்கள் உருவாக்குதலைக் காணலாம். இங்கு இந்த முயற்சி ஒரு சாராரைப் பொறுத்தோ அல்லது முழு அளவில், யாவரையும் பொறுத்த வரையிலுமோ நடைபெறுகிறது. ஒரு முயற்சியானது உள்ளூர் செய்தியாளர்கள், திருச்சபையினர், மருத்துவர், ஆசிரியர், போன்றவர்களின் கருத்துக்களை உருவாக்குகின்ற தனிப்பட்ட அளவில் நடைபெறுகிறது. இதற்கு மாறாக முழு அளவு அல்லது அடிமட்ட ஆதிக்க முயற்சியானது அமெரிக்காவில் இருப்பது போன்ற பெரும் பயன் அளிப்பது இல்லை. அந்த நாட்டில் செய்தித் தாள்கள் மட்டுமின்றி, வானொலியும், தொலைக்காட்சியும் வணிக நிறுவனங்களாக இயங்குகின்றன. ஆனால் பிரிட்டனின் வணிகக் குழுக்கள் இந்த முழு அளவு ஆதிக்க முறையைக் கையாளுவதில்லை. ஏனெனில், அதிகக் கூச்சல் எழுப்புதல் மிகச்சிறு பயனே அளிக்கும் என்ற விதியை அவை பின்பற்றுகின்றன.

பிரிட்டனின் அரசியல் முறையமைவில், தன்னலக்குழுக்கள் பல அரும் பணிகளைச் செய்துள்ளன. என்பதையும் நாம் மறுக்க இயலாது. அவை பாராளுமன்றத்திற்கும் ஆட்சியாளருக்கும் சில நுட்பமான செய்திகளைத் தருகின்றன. சில சமயங்களில் அவை அரசாங்கத் துறைக்கு ஆட்சி இயலில் துணை செய்கின்றன. அதே சமயத்தில் அது பாராளுமன்றத்தாலோ அல்லது நிர்வாகத்தாலோ ஏதேனுமொரு ஏதேச்சதிகாரமான சட்டம் செயல்படுதலையும் தடுக்கிறது. இவ்வாறு தன்னலக் குழுக்கள் அரசாங்கத்தின் செயல் முறையில் மக்களையும் ஈடுபடுத்துகின்றன. தன்னலக்குழு அரசியலின் வளர்ச்சியையும், பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டையும், குறிப்பாக பொதிந்த பிரதிநிதித்துவம் (Implied Representation) என்ற விதியையும் பாதித்துள்ளது என்பதை நாம் கவனித்தல் வேண்டும். பல சமயங்களில் பாராளுமன்றத்தின் விருப்பமானது குழுக்களின் விருப்பத்தினால் தகர்க்கப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டனில் தன்னலக் குழுக்கள் தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக பலவந்தம், கையூட்டு போன்ற அரசியலமைப்புக்கு புறம்பான வழிகளைப் பின்பற்றுவதில்லை என்பது அவற்றின் முக்கிய இயல்பு ஆகும். இவ்வாறு தன்னலக் குழுக்கள் ஆட்சியாளரையும் ஆளப்படுபவரையும் தற்கால அரசியலமைப்பில் இணைக்கும் உறுப்புகளாக இருக்கின்றன.

## 4.9 பிரிட்டனில் தேர்தல்கள்

மக்கள் சபையின் 635 இடங்களுக்கு உள்ள தேர்தல் குறைந்தது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும். இது 1911-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் தோன்றிய விதியாகும். (The Parliament Act of 1911) மேலும் தலைமை அமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அரசியார் பாராளுமன்றத்தின் கால அளவு முடிவுறுமுன்பே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய பாராளுமன்றத்திற்கான தேர்தலை நடத்தலாம். பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்பு இடையில் ஏற்படும் ஒரு சில காலி இடங்களுக்கு இவ்வப்போது இடைத்தேர்தல் நடத்தப்படும். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுள் அதிக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கும் முறை இங்கிலாந்து நாட்டில் பின்பற்றப்படுகிறது. தேர்தலுக்காக பிரிட்டன் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இத்தொகுதிகள் இரண்டு வகைப்படும். ஒன்று பரோ தொகுதிகள் (Borough Constituencies), மற்றொன்று கவுன்டித் தொகுதிகள் (Country Constituencies) இவை அனைத்தும் ஒற்றை உறுப்பினர் தொகுதிகள். 18 வயது நிரம்பிய ஆண், பெண் அனைவருக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை இங்கிலாந்தில் அளிக்கப்பட்டுள்ளது. பிரபுக்கள், குழந்தைகள், வெளிநாட்டவர்கள், 12 மாதங்களுக்கு மேல் தண்டனை அடைந்தவர்கள் போன்றவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது.

### வேட்பாளர் (Candidate)

ஒரு தொகுதியிலுள்ள போட்டியிடும் நபர் அந்த தொகுதியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. எல்லோரும் வாக்களிக்க உரிமை பெற்றவர்கள். எல்லோரும் தேர்தலில் 0ந்த முறையில்தான் இங்கிலாந்தில் தேர்தல்கள் நடைபெறுகின்றன.

## 4.10 பிரிட்டனில் செய்தித் தொடர்பு

பிற சமூக செயற்பாடுகளைப் போன்று அரசியல் செயல்பாட்டிற்கும் செய்தித் தொடர்பு தேவை. எனவே பிரிட்டனின் அரசியலமைப்பைப் பற்றி ஆழமாக அறிய பிரிட்டனின் அரசியல் முறையமைவு பற்றி அறிய செய்தித் தொடர்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் மைய பிரிட்டனின் செய்தித் தொடர்பு பரந்து வளர்ந்தது. 19-ஆம் நூற்றாண்டில் பத்திரிகை உலகை ஆரம்பித்த 'டைம்ஸ்' (Times) என்ற பத்திரிக்கையின் 50,000பிரதிகள் மட்டுமே பிரிட்டனில் விநியோகம் ஆனது. 1896-ஆம் ஆண்டு நார்த்கிளிப் (North Cliff) என்ற பிரபு 'டெய்லி மெயில்' (Daily Mail) என்ற பத்திரிகையை வெளியிட்டார். 1900-ஆம் ஆண்டில் அப்பத்திரிகையின் பிரதிகள் ஏறக்குறைய ஒரு மில்லியன் விநியோகம் செய்யப்பட்டன. 1947-ஆம் ஆண்டு ஒவ்வொன்றும் ஏறக்குறைய நான்கு மில்லியன் பிரதிகள் விற்கும் அளவில் 'டெய்லி மிரர்' (Daily Mirror) டெய்லி எக்ஸ்பிரஸ் (Daily Express) என்ற பத்திரிகைகள் உலகில் ஆதிக்கம் செலுத்தின. 1960-ஆம் ஆண்டு எக்ஸ்பிரஸ் தனது விநியோகத்தைப் பெருக்கிக் கொண்டது. 1921-ஆம் ஆண்டு பிரிட்டனில் தேசிய அளவில் பன்னிரண்டு காலைப் பத்திரிக்கைகள் வெளிவந்தன. 1964-ஆம் ஆண்டு அதன் எண்ணிக்கை எட்டாக குறைந்தது. பிராந்திய அளவில் 1921-ஆம் ஆண்டு நாற்பத்தொரு பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. 1961-ஆம் ஆண்டு பிராந்திய அளவில் வெளியிடப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை பத்தொன்பதாகக் குறைந்தது. பத்திரிக்கைகளை உடைமையாக்குவதில் சில தடைகள் விதிக்கப்பட்டன.

பிரிட்டனின் வானொலி மூலமான செய்தித் தொடர்பு 1922-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வானொலியில் ஆதிக்கம் செலுத்தும் பொதுக் கழக அமைப்பு முறையைக் கொண்ட பிரிட்டன் வானொலி கழகம் (British Brodcasting Corporation) 1927-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த நிறுவனம் தொலைக்காட்சி மூலம் செய்தி தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டனின் மக்கள் தொகையில் 90 விகிதத்தினருக்கும் மேல்பட்டவர்கள் இன்று தொலைக்காட்சி மூலம் செய்தித் தொடர்பு கொள்ளும் வசதியைப் பெற்றிருக்கின்றனர். பிரிட்டனின் சுதந்திர தொலைக்காட்சி, அதிகாரம் பெற்ற வியாபார ரீதியில் தோன்றிய தொலைக்காட்சி நிறுவனங்கள் தோன்றி, தொலைக்காட்சியில் பிரிட்டன் வானொலி கழகத்திற்கு இருந்த ஆதிக்கத்தை 1951-ஆம் ஆண்டு தகர்ந்தது. வானொலி இன்றும் அசைக்க முடியாத அளவில் நகரங்களில் செயல்பட்டு வருகின்றன.

இன்று அரசியல் செய்திகளை அறிவிக்க மற்றும் அரசியல் கருத்துக்களை அறிய மிகச் சிறந்த கருவியாக காணப்படுவது தொலைக்காட்சி நிகழச்சிகளாகும். பொதுமக்களின் கவனத்தை கவருவதில் தொலைக்காட்சி, செய்தித்தாள்களை மிஞ்சிய நிலையில் காணப்படுகிறது.

இங்கிலாந்து அரசாங்கத்தின் இரகசிய காப்புத் தன்மை அதன் அரசியல் முறையமைவில் செய்தித் தொடர்பின் ஆதிக்கத்தை அவ்வப்போது மாற்றியமைக்கிறது. கட்சி ஒற்றுமை, கூட்டுப் பொறுப்பு மற்றும் நடுநிலை சார்ந்த அரசுப் பணி ஆகிய சில பழக்கங்கள் அதிகார மையங்களில் சில தடைகளைத் தோற்றுவிக்கின்றன. இரகசிய காப்பு என்ற தத்துவத்தின் கீழ் அரசாங்கம் தன்னைப் பத்திரிக்கைகளிடமிருந்து காத்துக் கொள்கிறது. செய்தித் தொடர்பு அதிகாரிகள், செய்திச்சுருக்கங்கள், செய்தியாளர் மாநாடுகள் போன்றவை அரசாங்கம் செய்தியாளர்களுக்கு செய்திகளை வழங்கும் முறையான வழிமுறைகளாகக் காணப்படுகின்றன. பாராளுமன்றத்தோடு இணைக்கப்பட்டுள்ள பத்திரிக்கையாளருக்கும் அமைச்சர்களோடும் தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களோடும் தடையின்றி தொடர்பு கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர்களும் பத்திரிக்கையாளர்களோடு நட்புறவு கொள்ள

முயற்சிக்கின்றனர்.

## 4.11 உள்ளாட்சி அரசாங்கம்

இங்கிலாந்தின் உள்ளாட்சி அரசாங்கத்தின் அமைப்பு, பணிகள் ஆகியனவற்றை தெரிந்து கொள்ளுமுன் அந்நாடு ஒற்றையாட்சி அமைப்பினை உடையதென்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அங்கு கூட்டாட்சி நாடுகளைப் போல் அதிகாரமானது மத்திய மற்றும் மாநிலப் பிரிவுகள் கைகளில் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. அங்கு மத்திய அரசாங்கம் முழு வல்லமை பெற்றுள்ளது. ஆட்சித்துறை வசதிக்காக சிறுசிறு பிரிவுகளாக பகுக்கப்பட்டுள்ள பிரிவுகள் மத்திய அரசாங்கம் அவற்றிற்கு வழங்கியுள்ள பணிகளை மட்டுமே செய்கின்றன.

### அதிகாரக் கூறுகள் (Sources of Authority)

உள்ளாட்சி அரசாங்கங்கள் தங்களது அதிகாரங்களைப் பாராளுமன்றத்திடமிருந்து பெறுகின்றன. பாராளுமன்றமே பல சட்டங்கள் இயற்றி உள்ளாட்சி அரசாங்கங்களின் அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றை தீர்மானிக்கின்றன. எடுத்துக் காட்டாக, 1882-ஆம் ஆண்டின் நகராட்சி, 'மாநகராட்சி சட்டம்' (Municipal Corporation Act) ஆகியவற்றைக் கூறலாம். பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படாமல் நீதி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பொதுச் சட்டங்களும் உண்டு. அரசுத் துறையானது 'மின் திட்டங்கள்' போன்றவற்றை உருவாக்குமாறு உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு அனுமதியளித்ததும் உண்டு. நீதிமன்றங்கள், உள்ளாட்சி அரசாங்கச் சட்டங்கள் பற்றிய சிக்கல்களைத் தீர்த்து வைக்கின்றன. அத்தகைய தீர்ப்புக்கள் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு அதிகாரத்தைப் பெருக்குகின்றன.

### இன்றைய அமைப்பு (Present Set up)

இன்று இங்கிலாந்தில் ஆறு பிரிவுகள் உள்ளாட்சி அரசாங்க அமைப்பில் உள்ளன. அவை கவிண்டி, கவண்டிபரோ, பரோக்கள், நகர்புறஞ் சார்ந்த ஜில்லா, நாட்டுபுறஞ் சார்ந்த ஜில்லா பாரிஷ் என்பனவாகும்.

பாரிஷ் (Parish) – உள்ளாட்சி அதிகாரத்தின் அடிமட்டத்திலுள்ளது பாரிஷ். அது நகரம் சார்ந்ததாகவோ அல்லது கிராமம் சார்ந்ததாகவோ இருக்கலாம். நகர பாரிஷ்களுக்கு உள் அரசாங்க அமைப்பு கிடையாது. ஏனெனில் அவை நகர்புறஞ் சார்ந்த ஜில்லா அல்லது பரோக்களில் அடங்கியுள்ளமையால் அவற்றிற்கு அத்தேவைகள் ஏற்படவில்லை. நாட்டுபுறஞ் சார்ந்த பாரிஷ் என்பனவை உண்மையில் அடிமட்ட உள் அரசாங்க அமைப்பாகும். 100 பேரடங்கிய உள் பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன. அதில் 5க்கும் குறையாமல் பதினைந்துக்கு மேற்படாத அளவுள்ள உறுப்பினர்களடங்கிய பாரிஷ் கவுன்ஸில்கள் உண்டு. உறுப்பினர்கள் உள்ளூர் வாக்காளர்களால் ஆண்டின் இறுதிக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1933-ஆம் ஆண்டு உள்ளாட்சி அரசாங்கச் சட்டப்படி ஓர் ஆண்டுக் கூட்டமும் மூன்று சிறப்புக் கூட்டங்களும் நடத்த வேண்டுமென முடிவு செய்தபடி, சிறப்புக் கூட்டங்கள் நீண்டகால இடைவெளியில் நடப்பதால் அதன் பணிகள் கவுன்சில் குழுக்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

### அதிகாரங்களும் பணிகளும் (Powers and Functions)

பாரிஷ் குழுவிற்கு விரிவான அதிகாரங்கள் உள்ளன. குளிப்பறை மற்றும் கழிவு அறைகள் ஏற்படுத்தி தருகின்றன. நடைபாதைகளைப் பராமரிக்கின்றன. சிறு அளவு கல்வி அதிகாரத்தைக் கொண்டுள்ள இக்குழு பள்ளிகளின் ஆட்சிக் குழுவிற்கென

தன்னறிவு சோதனைக் கேள்வி
6. உள்ளாட்சி முறையை விளக்குக.

சில உறுப்பினர்களை நியமிக்கின்றது. நோய்கள் பரவாமல் தடுப்பதும் இதன் தலையாய பணியாகும்.

**கிராமிய ஜில்லா (Rural District)**

பாரிஷுக்கு மேலானவை கிராமஞ்சார்ந்த ஜில்லாக்களாகும். பல பாரிஷ்கள் அதில் அடங்கியிருக்கும். ஒரு குழுவும் அதற்கான சேர்மன் மற்றும் உறுப்பினர்களும் உண்டு. உறுப்பினர்களின் எண்ணிக்கை இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கும். கவுன்சிலர்கள் என்ற உறுப்பினர்கள் மூன்றாண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால் அவர்களுள் மூன்றிலொரு பங்கினர் ஆண்டு இறுதியில் பதவியிலிருந்து விலகுவர். கவுன்சிலர்கள் சேர்மன் ஒருவரை ஆண்டுக்கு ஒரு முறை தமது குழுவுக்குள்ளிருந்தோ வெளியிலிருந்தோ தேர்ந்தெடுப்பர். வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராயிருப்பின் அவர் கவுன்சிலராகவும் தகுதியடையவராயிருக்க வேண்டும். சேர்மன் இல்லாத காலங்களில் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க உதவி சேர்மன் என்ற துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுவர். சேர்மன் நீதியின் காவலராகவும் திகழ்வார். குழுக்கள், சிறப்புக்கூட்டங்களையும், ஆண்டுக் கூட்டங்களையும் நடத்துகின்றன.

**அதிகாரங்களும் பணிகளும் (Powers and Functions)**

கிராமம் மற்றும் ஜில்லாக் குழு இருவகையான பணிகளை மேற்கொள்ளுகின்றன. இவை இயல்பாக கட்டுப்படாதவை. மற்றும் அனுமதிக்கப்பட்டவை எனப்படும். முன்னவை உள்ளூர் அதிகாரிகளால் செய்யப்பட வேண்டியவை. பின்னவை உள்ளூர் அதிகாரிகள் விரும்பினால் செய்யக் கூடியவை. எடுத்துக்காட்டாக, தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்து தருவது இயல்பான கடமையாகும். ஆனால் குளிப்பறை கழிவறை ஆகியவற்றைத் தருதலென்பது விருப்பப்பணியாகும்.

கிராம ஜில்லா குழுக்களுக்கு ஏராளமான பணிகள் உண்டு. அவை 1. பொதுச் சுகாதாரத்தைக் கவனிக்கின்றன. 2. குடிநீர் வசதி, நோய்கள் தடுப்பு, கழிவுகளை அகற்றுதல் போன்ற கடமைகள். 3. மின் விளக்குகள் மேற்பார்வையிட்டு மின் வசதிகளை வழங்கல், 4. வரிகளைத் தீர்மானித்தல்.

**நகர் சார்ந்த ஜில்லாக்கள் (Urban Districts)**

மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக கிராம ஜில்லாக்கள் நகர் சார்ந்த ஜில்லாக்களாக மாற்றப்படும். கவுண்டி, கவுன்சில்களுக்கு அறிவித்து விட்டு மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக அவை நகர் ஜில்லாக்களாக மாற்றப்படுகின்றன. இப்பிரிவின் குழு உறுப்பினர்களும் மூன்றாண்டுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மூன்றிலொரு பங்கினர் ஆண்டுதோறும் பதவியிலிருந்து விலகுவர். இக்குழு ஆண்டுக் கூட்டங்களையும், உறுப்பினர்கள் விரும்பினால் சிறப்புக் கூட்டங்களையும் நடத்துகின்றன.

**அதிகாரங்களும் பணிகளும்**

1. பொதுச் சுகாதாரம் பற்றிய அடிப்படைச் சட்டங்களை இவை இயற்றுகின்றன. 2. பாராளுமன்றச் சட்ட வரைவுகளை ஆதரிக்கின்றன அல்லது எதிர்க்கின்றன. 3. பொதுச் சுகாதாரத் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதியளித்தல், நோய் தடுப்பு, கழிவுகளை அகற்றுதல் போன்ற பணிகள் ஆற்றுகின்றன. 4. மின் விளக்குகளை மேற்பார்வையிட்டு தேவையான மின்சாரத்தை வழங்குதல். 5. முக்கியமான வருவாய்களாக விளங்கக்கூடியவற்றிற்கான வரிகளைத் தீர்மானிக்கிறது.

சட்டத்திற்குப்புறம்பான வாணிபத்தைத் தடுத்தல், அருங்காட்சியங்கள், கலைக் கூடங்கள், நூல் நிலையங்கள் ஆகிய பணிகளுடன் வாயு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதும் இக்குழுவின் பணிகளே.

**பரோக்கள் (Boroughs)**

1963-ஆம் ஆண்டில் உள்ளாட்சி அரசாங்க சட்டம் கிரேட் பிரிட்டனில் நிலப்பரப்பினை 32 பரோக்களாகப் பிரித்தது. பொதுவாக ஒரு நகர் ஜில்லாவில் மக்கள் தொகை ஒரு நகரத்தின் தொகையைப் போல நெருக்கடியானதாகப் பெருகினால் நகர் ஜில்லாவின் பாராளுமன்றத்தின் பட்டயத்திற்கு முறையீடு செய்கிறது. பாராளுமன்றம் அப்பட்டயத்தை வழங்கியதும் நகர் ஜில்லாக்கள் பரோக்களாகின்றன. அங்கு கவுன்ஸிலர்கள் மூன்றாண்டுகட்கு ஒரு முறை நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆல்டர்மென் என்பவர்கள் கவுன்ஸிலர்களால் 6 ஆண்டுக்கு பதவியிலிருக்குமாறு தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களில் பாதிப்பேர் மூன்றாண்டுகட்கு ஒரு முறை பதவி விலகுவர். மேயரை கவுன்ஸிலர்களும் ஆல்டர்மென்களும் கூட்டாக அமர்ந்து தேர்ந்தெடுப்பர்.

**பணிகள்**

1. சாலைப் பராமரிப்பு 2. தெருக்களுக்கு மின் விளக்கு வசதியளித்தல் 3. கழிவுகளைச் சேகரித்து அகற்றுதல். 4. பொது-நூல் நிலையங்கள், அருங்காட்சியகங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல், 5. பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியவற்றைப் பதிவு செய்தல், 6. கடைகள் ஆலைகள் ஆகியவற்றுடன் உணவு, மருந்து ஆகியவற்றைப் பரிசோதித்தல், ஆஸ்பத்திரிகளை நிறுவுவது.

**கவுண்டி பரோ (County Borough)**

பரோவானது பெரும் நகரமாக விரிவடையும்பொழுது அது பாராளுமன்றத்திற்கு கவுண்டி பரோ அந்தஸ்துக்கு உயர்த்த முறையிடுகின்றது. அது ஏற்கப்பட்டால் பரோ கவுண்டி பரோவாகிறது. அவற்றின் அதிகாரங்களும், பணிகளும் இந்தியாவிலுள்ள நகராட்சிகளின் பணிகளை ஒத்ததாக உள்ளது. கவுண்டி மற்றும் பரோக்களின் பணிகள் இணைந்து இங்கு நடத்தப் பெறுதலால் அவை கவுண்டி பரோக்கள் எனப்படுகின்றன. இது கவுண்டி கவுன்ஸிலுக்குக் கட்டுப்படாமல் சுதந்திரமாக இயங்கி வருகிறது. 1965-ம் ஆண்டில் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் மொத்தம் 182 கவுண்டி பரோக்களிருந்தன.

இப்பிரிவிலும் ஒரு கவுன்ஸில் உண்டு. இதிலும் கவுன்ஸிலர்கள், ஆல்டர்மென், மேயர் என்ற மூன்று பிரிவுகளுண்டு. ஆனால் பரோக்களை விட கவுண்டி பரோக்கள் அதிக அதிகாரம் படைத்தவையாயுள்ளன. ஜாக்ஸன் என்பவர் குறிப்பிட்டதைப் போல ஆட்சித்துறையைப் பொறுத்தமட்டில் கவுண்டி பரோக்கள், தன்னிறைவு பெற்றவையாகத் திகழ்கின்றன. 'கவுண்டி பரோக்களின் அதிகாரங்கள் சுருங்க கூறின், கவுண்டி கவுன்ஸில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களின் கட்டாய மற்றும் பலதரப்பட்ட பணிகளைச் சேர்ந்தவைகளாக உள்ளன. எனவே அவை விரிவானவையாக உள்ளன' என பேராசிரியர் பைனர் குறிப்பிடுகின்றார். விட்டு வசதி, பொதுப்பணி, தாய்சேய் நலம், ஆயாக்கள் நியமனம், மற்றும் மேற்பார்வை, மனநோய் தீர்த்தல், விழியற்றோர் நலம், பதிவு செய்தல், லைசென்ஸ் வழங்கல், கல்வி போன்ற பணிகள் இப்பிரிவின் பணிகளாகும்.

**கவுண்டிகள் (County)**

இங்கிலாந்தில் தற்போது இரு வகையான கவுண்டிகள் காணப்படுகின்றன. அவை மரபு வழிக்கவுண்டிகள் (Historic Counties) என்றும் ஆட்சித்துறை கவுண்டிகள்

என்றும் அழைக்கப்படுகின்றன. இங்கிலாந்தின் முழுநிலப்பரப்பும், தற்போது 52 மரபு வழிக் கவுண்டிகள் எனப் பிரிக்கப்பட்டன. 1888 முதல் அவை உள்ளாட்சி அரசாங்க பிரிவுகளாகச் செயல்படவில்லை. அவை பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தொகுதிகளாக உள்ளன. அதற்கு தனிப்பட்ட குழுக்களோ அல்லது தெர்ந்தெடுக்கப்பட்ட அரசியலமைப்பு குழுக்கள் உள்ளன. உள்ளாட்சி அரசாங்கத்தில் சம்பந்தப்படாத அதனைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

ஆட்சித் துறை கவுண்டிகளே உள்ளாட்சி அரசாங்கத் துறையில் முக்கியத்துவம் பெற்றவை. அவை 1888ஆம் ஆண்டில் உள்ளாட்சி அரசாங்க சட்டப்படி உருவாக்கப்பட்டவை. 1965ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நிலப்பரப்பு முழுவதும் 58 ஆட்சித்துறைக் கவுண்டிகளாகப் பிரிக்கப்பட்டன. அதற்கு கவுண்டி கவுன்ஸிஸ் ஆட்சி அமைப்பு அங்கமாக திகழ்கிறது. அவற்றுக்கும் கவுன்ஸிலர்கள், ஆல்டர்மென் மற்றும் சேர்மன் என்று மூன்று பிரிவு உறுப்பினர்களுண்டு. ‘சேர்மன்’ என்பவர் தலைமை வகிக்கிறார். முக்கியமான விழாக்களில் கவுண்டியின் சார்பாக அவர் பங்கேற்கிறார். எல்லா உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களும், சட்டமியற்றி அவற்றை நிருவகிக்கும் பொறுப்புடையவனவாக உள்ளன. உறுப்பினர்கள் மூன்றாண்டுகட்கு ஒரு முறை நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். உறுப்பினர்களிடமிருந்து ‘ஆலட்ர்மென்கள’ தேர்ந்தெடுக்கப்படுவர். உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கு எண்ணிக்கையுடைய ஆல்டர்மென்களில் பாதிப்பேர் மூண்றாண்டுகட்கு ஒரு முறை பதவி விலகும் வண்ணம் ஆறு ஆண்டுகட்கு தேர்ந்தெடுக்கப்படுவர். கவுன்ஸிலர்களின் பணியை போன்ற ஆல்டர் மென்களின் பணிகளும் உள்ளன. கவுன்ஸிலர்களும் ஆல்டர்மென்களும் இணைந்து கவுண்டி சேர்மனைச் தேர்ந்தெடுக்கின்றனர். ‘கவுன்ஸில்’ ஆண்டுக்கு நான்கு முறைகள் கூடுவது வழக்கம்.

**கவுண்டிகள் அதிகாரங்களும், பணிகளும்**

கவுண்டிகள் அதிகாரங்களை 1) கவுண்டித் தொடர்புடையவை என்றும் 2) தலப்பிரிவுகள் மீதுள்ள கட்டுப்பாட்டு அதிகாரங்கள் எனவும் இருபிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதலில் கவுண்டிகள் பணிகளைக் கவனிப்போம் 1) நெடுஞ்சாலைகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முக்கிய சாலைகளுடன் பல மாவட்டங்களின் சாலைகளையும் அவர்கள் நிர்வகிக்கின்றனர். 2) நகர்புறத் திட்டத்தில் கவுன்ஸிலின் பணி மகத்தானது. 3)பழைய பாலங்களைப் புதுப்பித்தல். புதியவற்றை உருவாக்குதல் ஆகியன அவர்களது பணிகளே. 5) தொழிற்சாலை கேடுகள், நீரில் கிருமிகள் பரவுதல் ஆகியவற்றை தடைசெய்தல். 6) பந்தயத் திடல்களுக்கு அனுமதி வழங்குவது. 7) எடை, அளவு ஆகியவற்றைக் கண்காணித்தல் ஆகியவையாகும்.

## 4.12 அரசுப்பணியாளர்கள்

இங்கிலாந்தில் அரசுப்பணியாளர்கள் அனைவரையும் முழுயுரிமைப் பணியாளர்கள் என்று அழைப்பர். அரசாங்கத் துறைகளின் அன்றாடப் பணிகளை நிறைவேற்றக் கூடியவர்கள். இவர்கள், அரசியல், நீதித்துறை ஆகியவற்றில் தொடர்பில்லாது அரசாங்கப் பணிகளை மட்டும் செய்யக் கூடியவர்கள். இவர்கள் அனைவரும் ஊதியம் பெறுவார்கள். இங்கிலாந்தில் 1929-31 ஆம் ஆண்டுகளில் 1 மில்லியன் பணியாளர்கள் இருந்தனர். ஆரம்ப காலத்தில் தொழிற்துறைப் பணியாளர்களையும் அரசுப் பணியாளர்கள் எண்ணிக்கையில் இடம் பெற்றனர். பின்னர் தொழிற்துறை பணியில் இடம் பெறாதவர்கள் மட்டும்தான் அரசுப் பணியாளர்களாகக் கருதப்பட்டனர். அரசுப் பணியாளர்களிடம்

1969 ஆம் ஆண்டிலே மூன்றில் ஒரு பங்கு பெண் அரசுப்பணியாளர்கள் இருந்தனர். தற்போது அவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ சமநிலைக்கு வந்துள்ளனர்.

**அரசுப்பணியின் பண்புகள்**

இங்கிலாந்து அரசுப்பணியின் சில அடிப்படைப் பண்புகள் உள்ளன. அரசாங்கம் மாறலாம். அரசுப்பணியாளர்கள் நிரந்தரமாகத் தொடர்ந்து பணியில் இருக்கக் கூடியவர்கள். பதவிகளுக்கு பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட பதவிக்காலத்திற்கு பதவியில் இருக்கலாம். இதுமாதிரியாக அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுப் பணியில் இல்லை.

## 4.13 அரசுப்பணி

ஆரம்பகாலத்தில் அரசுப்பணி என்பது Partronage ஆக நியமனம் செய்யப்பட்டது தற்போது பணியாளர்கள் தகுதி அடிப்படையில் நியமனம் பெறுகின்றனர். நார்த்காட்-டிரிவில்யன் அறிக்கை 1853ல் அரசுப்பணியை இரண்டு பிரிவாக அமைந்தது. கொள்கை உருவாக்கும் தலைமை அறிவார்ந்த பிரிவு, இயந்திரங்கள் போல் அன்றாடப் பணியைச் செய்பவர்கள் என்பதாகும். பின்னர் 1855 ஆம் ஆண்டு அரசுப்பணி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. 1870 ஆம் ஆண்டு தேர்வுகள் நடத்தி பணியாளர்களை போட்டித்தேர்வு முறையின் மூலம் தேர்வு செய்தது. 1875 ஆம் ஆண்டு பிளேபேர் ஆணையம் (Playfair Commission) பணித்தரங்கள் முதல்நிலை இரண்டாம் நிலை என்றும் பின்னர் அவை ஒவ்வொன்றும் சிறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. 1920 ஆம் ஆண்டு விட்லி மன்றம் அரசுப் பணியை மூன்று வகைகளாகப் பிரிந்தது.

1. நிர்வாகப்பணி - பல்கலைக்கழக பட்டதாரிகளால் நிரப்பப்பட்டது.
2. ஆட்சித்துறை பணி - பள்ளிக் கல்வி முடித்தவர்கள் நியமனம் பெற்றனர்.
3. எழுத்தர் பணி - குறைந்தபட்ச கல்வித் தகுதி கொண்டவர்களைக் கொண்டதாக அமைந்தது.

இப் பாகுபாடு 1970 ஆம் ஆண்டு வரைச் செயல்பட்டது. பின்னர் ஒவ்வொரு பணியும் பல வகைகளாக (grades) பிரிக்கப்பட்டன. அயல்நாட்டுப் பணி, அறிவியல் தத்துவப் பணிகள் ஆகியயையும் உருவாக்கப்பட்டன.

**அரசுப் பணியாளர் தேர்வும் பயிற்சியும்**

அரசுப் பணியாளர் ஆணையம் சுதந்திரமாகச் செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அரசியார் இவ்வாணய உறுப்பினர்களை நியமனம் செய்கின்றார். ஆணையம் எழுத்துபூர்வ, வாய்மொழித் தேர்வுகள் நடத்தி, பணியாளர்களைத் தேர்வு செய்கிறது. பொதுக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. 1943ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அசட்டன் (Assheton) குழுவின் பரிந்துரைக்கேற்ப அரசுப் பணியாளர்களுக்கு ஏராளமான பயிற்சிகளை அரசாங்கம் பணியாளர்களுக்கு அளித்து வருகின்றது. இதற்காக அரசுப் பணி படிப்பு மையங்கள், பயிற்சி மையங்கள், கல்லூரி ஆகியன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**குறைபாடுகள்**

அரசுப் பணியில் பெரும்பாலும் அங்கம் வகிப்பவர்கள் ஆக்ஸ்போர்டு, காம்பிரிட்ஷ் ஆகிய பல்கலைக்கழகங்களிலிருந்து வந்த பொதுத் தகுதி நிறைந்தவர்கள்தான். தனித்துவம் கொண்ட அறிவியல் படிப்பு படித்தவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. அரசுப்பணி என்பது பிரபுக்கள் அவை

**தன்னறிவு சோதனைக் கேள்வி**
7. இங்கிலாந்து அரசுப் பணியின் வகைப்பாட்டை எழுது.

செயல்படுவதுபோல் உள்ளது என்று குறைபடுகின்றனர். தொழிற்சாலைக்கும் அரசுப்பணிக்கும் தொடர்பு இருக்கும் வகையில் அரசுப்பணியாளர்கள் இருந்தால் நன்றாக இருபிரிவும் வளரும் என்கின்றனர். தற்போது இத்தொடர்பு முறை இல்லை. பொதுக் கல்வியைத் தகுதியாக வைப்பதைக் காட்டிலும் சிறந்த ஒரு வழிமுறையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்கின்றனர். 1963-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பியூல்டன் **(Fulton)** குழுவின் பரிந்துரை 1968ல் வெளியிடப்பட்டது. அதன் பரிந்துரையின்படி 'பிரபுக்கள்' வகுப்பு என்பது நீக்கப்பட்டு, அரசுப்பணித்துறை உருவாக்கப்பட்டது. அரசுப் பணி கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. அரசுப் பணியின் திறமையும், சிக்கனமும் ஏற்படும் வண்ணம் பல பரிந்துரைகளைச் செய்தது. அவற்றை அரசாங்கம், ஏற்றுக் கொண்டு முறையாக நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

## 4.14 தொகுப்புரை

இப்பாடபிரிவில் சட்டத்தின் ஆட்சி, நீதித்துறை, நிர்வாக முறை, அரசியல் கட்சிமுறை ஆகியன குறித்து படித்துள்ளோம்.

## 4.15 முக்கிய வார்த்தைகள்

நிர்வாகச் சட்டம் - நிர்வாகநீதிமன்றம் - விக்ஸ் - டோரிஸ் - சட்டத்தின் ஆட்சி

## 4.16 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

| | | |
|---|---|---|
| கேள்வி எண் 1 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 4:1ல் அறிக |
| கேள்வி எண் 2 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 4:4 ல் அறிக |
| கேள்வி எண் 3 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 4:5 ல் அறிக |
| கேள்வி எண் 4 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 4:6ல் அறிக |
| கேள்வி எண் 5 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 4:8ல் அறிக |
| கேள்வி எண் 6 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 4:11ல் அறிக |
| கேள்வி எண் 7 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 4:13ல் அறிக |

## 4.17 பார்வை நூல்கள்


1. Punnett R.M., **British Govt. and Politics,** Oxford, 1976.
2. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.
3. R.C. Macridis and R.E. Ward, **Modern Political Systems : Europe and Asia,** 2nd Edn. Englewood Clifs NJ, Prentice Hall, 1968.
4. H.G. Nicolas, **The Nature of American Politics,** 2nd edn., Oxford, The Clarendon Press, 1986.
5. F.A. Ogg and Zink, **Modern Foreign Governments,** New York, Macmillan, 1964.

## 4.18 மாதிரி வினாக்கள்

1. பிரிட்டன் அரசாங்கச் செயல்முறையில் அரசியற் கட்சிகளின் பங்கு என்னவென்பதை விளக்கவும்.
2. மக்களாட்சிக்கு அரசியல் கட்சிகள் எவ்வாறு மிகவும் அவசியமென்பதை விவாதிக்கவும்.
3. இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சியின் தன்மையையும் செயல் முறையையும் விளக்குக.

# அலகு - 5
# அமெரிக்க அரசியலமைப்பு - பண்புகள் - கூட்டாட்சி - குடியரசுத் தலைவர்

## முன்னுரை

உலகிலேயே வல்லரசாகத் திகழும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்கு முழுமையாக உரிமைகளுக்கு உத்தரவாதமளித்து, அரசாங்க பிரிவுகள் ஒன்றையொன்று சார்ந்து, அதிகாரச் சமநிலையைப் பாரமரித்து நடத்தும் அரசாங்கம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் உலகிலேயே சிறிய வடிவிலான அரசியலமைப்பு இது. உலகத்திற்கு குடியுரிமை வழங்கியுள்ள அரசியலமைப்பு இது. குடியரசுத் தலைவர் முறையிலான அரசாங்கத்தை கொண்டது அமெரிக்க ஐக்கிய அரசு குடியரசுத் தலைவர் முழுமையாக அதிகாரம் பெற்று, நிர்வாகம் முழுவதையும் தன்னகத்தே வைத்து நடைடிபறும் அரசாங்க முறை இது. குடியரசுத் தலைவரே தன்னுடைய அமைச்சரவையைத் தேர்ந்தெடுத்து, செனட் அவையின் ஒப்புதலைப் பெறுவார். இந்த அமைச்சரவை அவருக்கு ஆலோசனையும் உதவியும் செய்யக் கூடியது. குடியரசுத் தலைவர் ஒவ்வொரு துறையிலும் வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களைத் துறைகளுக்குத் தலைமையாளராக நியமிப்பார். இவர்கள் குடியரசுத் தலைவருக்கு நிர்வாகத்தில் உதவி புரிவர். இவற்றையெல்லாம் விரிவாகப் பார்ப்போம்.

## நோக்கங்கள்

அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்களை அறிதல்

அமெரிக்க குடியரசுத் தலைவரின் தேர்தல் முறை, அதிகாரங்களை தெரிந்து கொள்ளுதல்

அமெரிக்க குடியரசின் அமைச்சரவை பற்றி விளக்கம் பெறுதல்

அமெரிக்க நிர்வாகத்துறைகள் பற்றி விபரம் பெறல்

## வடிவமைப்பு

நாடும் மக்களும்

மக்களின் அரசியல் கலாச்சாரம்

அரசியலமைப்பின் தன்மைகள்

அரசியலமைப்புத் திருத்த முறை

அரசியல் அமைப்பின் வளர்ச்சி

அமெரிக்க கூட்டாட்சி

மைய அதிகார குவியல் போக்கு

குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவரின் அதிகாரங்களும் பதவி நிலையும்

குடியரசுத் துணைத் தலைவர்

அமைச்சரவையும் நிர்வாகத் துறைகளும்

## 5.1 நாடும் மக்களும்

அமெரிக்க அரசியல் முறையமைவில் காணப்படும் பல முக்கிய பண்புகள் அம்முறையமைவை ஆழ்ந்து ஆராய நம்மைத் தூண்டுகிறது. மக்களாட்சி நாடுகளில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடு என்பதற்காகவே நாம் ஆராய முற்படவில்லை. எழுதப்பட்ட அரசியலமைப்பின் தொடக்கம், அரசியல் தேசிய ஒருமைப்பாடு,

மக்களாட்சியின் வளர்ச்சி, மக்களுக்கும் செய்திதாள்களுக்குமுள்ள சுதந்திரம், தேவைக்கு ஏற்ப மாறுதல் ஆகியவைகள் அமெரிக்க அரசியல் முறையமைவின் சிறப்பு பண்புகளாகும். அப்பண்புகள்தாம் அம்முறையமைவை ஆழ்ந்து ஆராய அறிஞர்களைத் தூண்டுகிறது. மேற்கூறிய பண்புகளின் விளைவாகத்தான் "பலதரப்பட்ட மக்கள் ஒரு கண்டத்தை உருவாக்கி ஒரு நாட்டை உருவாக்கியுள்ளனர். உலகம் இது வரையில் கண்டிராத அளவிற்கு அவர்களின் தரத்தை உயர்த்தி சாதாரண மக்களுக்கு கல்வி பொருளாதார துறையில் ஏராளமான வாய்ப்புக்களை அளித்து உரிமைகளைப் பாதுகாத்து, இரண்டாவது உலகப்போர்களில் வெற்றிகரமாக ஈடுபட்டு இன்று வரலாறு காணாத வகையில் உலகத் தலைமையில் பல கடமைகளையும் அமெரிக்கா மேற்கொண்டிருக்கிறது" என இ.எஸ் கிரிபித்ஸ் அமெரிக்க அரசியல் முறையமைவை வானளாவப் புகழ்கின்றார். மேற்கூறிய பண்புகள் தான் வலுவான மக்களாட்சியை அமைக்க விரும்பும் நாடுகளுக்கு அமெரிக்கா வழங்கும் தானங்கள் ஆகும் என பெர்கூசன், மாக் ஹென்றி என்ற அறிஞர்கள் கூறுவது ஓரளவு உண்மையேயாகும்.

மக்கள் தொகையிலும் இயற்கை வளங்களிலும் மேற்கத்திய நாடுகள் எல்லாவற்றையும் விட முன்னணியில் நிற்கும் அமெரிக்கா 50 மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சிக் குடியரசாகும். அலாஸ்காவையும், ஹாவாய் தீவுகளையும் தவிர மீதியுள்ள 48 மாநிலங்கள் தொடர்ச்சியான நிலப்பகுதிகளைக் கொண்டவையாகும். அந்நிலப்பகுதி கிழக்கே அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து மேற்கே பசிபிக் சமுத்திரம் வரை பரவிக் கிடக்கிறது. வடக்கு கனடாவும், தெற்கு மெக்சிகோ நாடும், மெக்சிகோ வளைகுடாவும் நாட்டின் எல்லைகளாக இருக்கின்றன. 1959 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 49-வது மாநிலமாக இணைந்த அலாஸ்கா வட அமெரிக்க கண்டத்தின் வடமேற்கு பகுதியாகும். 1929-ஆம் ஆண்டில் 50ம் மாநிலமாகச் சேர்ந்த ஹாவாய், அமெரிக்காவின் பெரும் நிலப்பகுதியின் வடமேற்கு எல்லைக்கும் அலாஸ்காவிற்கும் இடையேயுள்ள தூரம் 500 மைல்கள் ஆகும். ஆனால், அலாஸ்காவிற்கும் சோவியத் ரஷியாவிற்குமிடையேயுள்ள தூரம் வெறும் 50மைல்கள் மட்டுமே ஆகும். இந்த 50 மாநிலங்களைத் தவிர பியுர்டோ ரிகோ, வர்ஜின் தீவுகள் சூவாம், பனாமா கால்வாய்ப் பகுதி போன்ற சில வெளி நிலப்பகுதிகளும் அமெரிக்காவிற்குச் சொந்தமானவையேயாகும். அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பு 35 லட்சம் சதுர மைல்கள் ஆகும்.

2001-ஆம் ஆண்டு கணக்குப்படி அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகை 275.6 மில்லியன் ஆகும். இந்நாட்டில் புராதன குடிமக்களான சிவப்பு இந்தியர்கள், வெளிநாடுகளிலிருந்து குடியேறிய வெள்ளையர்கள், கறுப்பர்கள் (நீக்ரோக்கள்) ஆகியவர்கள் அடங்குவர். ஐரோப்பா கண்டத்திலிருந்து 3000 மைல் அட்லாண்டிக் கடலினால் அமெரிக்கா பிரிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் (அமெரிக்காவின்) ஆரம்பகால வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது. வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய மக்களின் எண்ணிக்கை அமெரிக்க வளர்ச்சிக்குள்ள இன்னொரு முக்கிய காரணி ஆகும். நாளுக்க நாள் குடியேற்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்தது அது 3.5 கோடியைத் தாண்டிய போது, ஒவ்வொரு நாட்டிலும் அமெரிக்காவில் குடியேறுபவர்கள் எண்ணிக்கையை 1921-ஆம் ஆண்டு அமெரிக்க நிர்ணயிக்க வேண்டி வந்தது. ஆரம்பகாலத்திலும், பிற்காலத்திலும் அமெரிக்கவில் குடியேறுபவர்களின் நோக்கம் ஒன்றே. புதுவாழ்வு காணவேண்டுமென்ற ஆவல் ஆகும். பல நாடுகளிலிருந்து பல

திறப்பட்ட மக்கள் குடியேறியதன் விளைவாக அமெரிக்காவில் பல இன மக்கள் ஒன்றாக வாழ்ந்து, ஒரு புதிய தேசிய கலாச்சாரம் உருவாக வழிகோலின. அமெரிக்காவில் ஆரம்பத்திலிருந்து 13 காலனிகளும் பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகளாக இருந்தமையினால், அங்கு வாழ்ந்த மக்களின் அரசியலமைப்பு நிறுவனங்கள்,கலாச்சாரம் ஆகியவைகள் இங்கிலாந்திலுள்ளவைகளையே ஒட்டியே இருந்தன. பிரெஞ்ச், ஸ்பானிஷ் மக்களைப் போன்றல்லாமல், அவர்கள் சகிப்புத்தன்மையைக் (Tolerance) கடைப்பிடித்து ஆங்கில மக்கள் அல்லாதவர்களையும் பிற சமயத்தவர்களையும் மதித்து நடந்தனர்.

பதின்மூன்று காலனியிலிருந்து 50 மாநிலங்களைக் கொண்ட ஒரு பெரிய அரசாக விரிவடைந்தது. ஏராளமான வேற்றுமைகளுக்கிடையே வியத்தகு ஒற்றுமை உருவாகியிருப்பது ஆகியவைகள் அமெரிக்கா அரசியல் முறையமைவின் வளர்ச்சியில் காணக்கூடிய இரண்டு முக்கிய சிறப்பு கூறுகளாகும். டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்கள், ஸ்பானிஸ், ஜெர்மன், போன்ற பல இன, கலாச்சாரத்தை சார்ந்த மக்கள் அமெரிக்காவில் குடியேறிய போதிலும், கலப்புத் திருமணங்கள் மூலம் அவர்களிடையே கலப்பு ஏற்பட்டு, "அமெரிக்கர்" என்ற புது தலைமுறையை ஏற்படுத்தினர்.

## 5.2 அமெரிக்க மக்களின் அரசியல் கலாச்சாரம்

ஓர் அரசியல் முறையமைவைப் பற்றி மக்களுக்குள்ள அடிப்படை மனப்பாங்கு, நம்பிக்கை, கருத்து ஆகியவற்றை அரசியல் கலாச்சாரம் குறிப்பிடுகிறது. அமெரிக்க மக்களின் அரசியல் கலாச்சாரத்தை ஆராய்வோமானால், அவர்கள் மக்களாட்சி முறையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பதைக் காணலாம். மக்களாட்சி என்பது ஓர் அரசாங்க முறை மட்டுமின்றி, அது வாழ்க்கை முறையும் கூட ஆகுமென அவர்கள் நம்புகிறார்கள். எனவே தான் நிலவியுள்ள அவர்களுடைய அரசியல் முறையமைவிற்கு அவர்கள் முழு ஆதரவை அளிக்கின்றனர். அதை மாற்ற வேண்டுமென ஒரு சிறு குரல் கூட அமெரிக்காவில் கேட்க முடியாது.

தனிமனிதனுடைய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் போட்டி மனப்பான்மை இன்றியமையாதது என்பது அமெரிக்காவின் தேசியப் பண்பாகும் இப்பண்புதான் அமெரிக்க மக்களின் அரசியல் கலாச்சாரத்தை நிர்ணயிக்கிறது. அமெரிக்கர்கள் ஸ்காட்லாந்து மக்களைப் போன்று சிக்கனவாதிகளுமல்ல.அரசியல் கலாச்சாரத்தை நிர்ணயிக்கிறது. பிரெஞ்சுக்காரர்களைப் போன்று தீவிரவாதிகளுமல்ல, இலத்தின் அமெரிக்க மக்களைப் போன்று உணர்ச்சி வசப்படுபவர்களுமல்ல, ஆங்கிலேயர்களைப் போன்று பழைமை பற்றுடையவர்களுமல்ல, இப்படிக் கூறுவதினால் அமெரிக்க மக்களுக்கு அவர்களுக்கென்று தனியான ஒரு அரசியல் கலாச்சாரமே இல்லையென பொருளாகாது. பேராசிரியர் மோன்ஸ்மா (Prof Monsma) அமெரிக்க கலாச்சாரத்தில் கீழ்க்காணும் அம்சங்கள் உண்டு என சுட்டிக் காட்டுகிறார். அவையாவன.

1. தனிமனிதன் இவனுடைய சுய முயற்சியில் "வறிய நிலையிலிருந்து வலிய நிலை"க்கு வரவேண்டுமென்ற கொள்கையில் அமெரிக்க மக்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. தனிமனித நலனில் அவர்கள் அக்கறை கொண்டிருப்பதனால் சமூகக் குழுக்கள் அல்லது சமூக வர்க்கம் ஆகியவற்றின் நலனைப் பற்றிக் கவலைப்படுவது கிடையாது. சமதரும (Socialism) த்தில் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. அது அடிமைத்தனத்திற்குள்ள வழியென அவர்கள் கருதுகிறார்கள்.
2. அமெரிக்க மக்கள் இவ்வுலக முறைமைகளுக்குதான் முழு முக்கியதுவம்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

1. அமெரிக்க மக்களின் கலாச்சாரத்தை விளக்கு.

கொடுக்கின்றார்கள். ஆன்மீக, சமூகத் தகவுகளைப் பற்றி அவர்கள் அதிகமாகக் கவலைப்படுவதில்லை.

3. அமெரிக்க மக்களின் சிந்தனையில் சுய நலன் மிளிர்ந்து காணப்படும் "உலகத்தில் மக்களாட்சியைப் பாதுகாப்போம்" எனக் கூறிக்கொண்டு அமெரிக்கா உலகப் போர்களில் ஈடுபட்டது இதற்கு சான்றாகும்.

4. அமெரிக்கர்கள் சமயச்சார்பு இன்மை (Secularism) யில் நம்பிக்கையுடையவர்கள் ஆவார்கள். சமயம் என்பது சொந்த விசயம். ஆகையினால் ஒரு சமயத்தைக் கடைப்பிடிக்கவும், கடைப் பிடிக்காமலிருப்பதற்கும் ஒவ்வோரு மனிதனுக்கும் உரிமையுண்டு என்பது அவர்கள் கருத்தாகும்.

5. நன்னம்பிக்கை (Optimism) என்பது அமெரிக்க மக்களின் தேசிய சமயம் என்றே கூறலாம். ஒருவன் வாழ்க்கையில் ஏற்படும் தோல்வி விதியினால் ஏற்படுவதல்ல, அவன் செயலில் உள்ள குறைபாடே அதற்கு காரணம் என்று அவர்கள் நம்புகிறார்கள் "nra;Ak; njhopNy nja;tk;" என்பது அவர்களின் கருத்தாகும்.

6. இனப்பாகுபாடு அமெரிக்காவில் காணப்பட்ட போதிலும் அவர்கள் அதைப் பெரிதுப்படுத்தவோ, உறுதிபடுத்தவோ முயற்சிப்பது கிடையாது.

7. இறுதியாக, அமெரிக்க மக்களுக்கு "நாம் அமெரிக்கர்கள்" என்ற உணர்வு அதிகமாக உண்டு. இதன் காரணமாகத்தான் அவர்கள் " அமெரிக்காவைச் சார்ந்த" எல்லாவற்றிலும் பற்றுடையவர்களாக இருக்கிறார்கள். அமெரிக்காவிற்கு எதிரான எல்லாவற்றையும் அவர்கள் வெறுக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் அமெரிக்காவிற்கு எதிரான எல்லாச் செயல்களையும் விசாரணை செய்ய அமெரிக்க பாராளுமன்றத்தில் ஒரு நிரந்தர குழுவையே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கடந்த 235 ஆண்டு காலமாக அமெரிக்க ஒரு தாராள மக்களாட்சி (Liberal Democracy) முறையை நோக்கி வளர்ந்துள்ளது கண்கூடு. அந்த மக்களாட்சி முறையிலிருந்து கீழ்க்காணும் ஐந்து முக்கிய கோட்பாடுகள் தோன்றியுள்ளன.

1. மக்கள் இறைமை **(Popular Sovereignty)**

அரசாங்கத்தின் அதிகாரம் அனைத்தும் மக்களிடம் இருக்கிறதே தவிர ஒரு சிலரிடமோ ஒரு நபரிடமோ அல்ல. சமூகத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் அவர்களின் ஆட்சியாளர்களைத் தேர்தெடுக்க உரிமையுண்டு என்பது மக்கள் இறைமையின் பொருளாகும். அமெரிக்க மக்களாட்சியில் இக்கோட்பாடு தீவிரமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

2. அரசியல் தத்துவம் **(Political Equality)**

அமெரிக்க மக்களாட்சி பொருளாதார, சமூக சமத்துவத்தை மட்டுமின்றி, அரசியல் சமத்துவத்தையம் அடிப்படையாகக் கொண்டது. எவ்வித வேறுபாடுமின்றி எல்லா மக்களுக்கு வழங்கியிருக்கிறது.

3. மெய்யான விருப்பத் தேர்வு **(Effective choice)**

அமெரிக்காவில் வலுவான போட்டித்தன்மையுடைய இரு கட்சிமுறை இருப்பதினால் மக்கள் அவர்கள் விரும்பும் கட்சியைத் தேர்வு செய்வதற்குள்ள வாய்ப்பை அமெரிக்க மக்களாட்சி மக்களுக்கு வழங்குகிறது.

4. கருத்தறித்தலும், பொறுப்பும் **(Consultation and Accountability)**

அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைளை அவ்வப்போது மக்களுக்கு விளக்கி, மக்களின் கருத்தை அறிந்து, அதற்கேற்ப தேசியக் கொள்கைகளை உருவாக்க வேண்டும். அல்லது மாற்றம் செய்யவேண்டுமென அமெரிக்க மக்களாட்சியில் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

5. பெரும்பான்மையோரின் ஆட்சி சிறுப்பான்மையோரின் உரிமைகளுக்கு **(Majority Rule vis-a-vis Minority Rights)**

தேர்தலில் பெரும்பான்மை பெறுவோருக்கு ஆட்சி செயவதற்குள்ள உரிமை உண்டு. ஆனால் அவர்கள் சிறுபான்மையினர் உரிமைகளை நசுக்கக்கூடாது என்று அமெரிக்க மக்கள் கருதுகின்றார்கள். தங்கள் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என சிறுபான்மையினர் எண்ணினால், நீதிமன்றங்கள் மூலம் அதற்கு அவர்கள் பரிகாரம் தேட முடியும். இதன் காரணமாகத்தான் தென்னாப்பிரிக்காவிலுள்ள நீகரோக்களை விட அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்கள் செழிப்பாக இருக்கின்றார்கள்.

அமெரிக்க மக்களாட்சி அரசியல் முறையமைவில் இவ்வளவு சிறப்பான அரசியல் கலாச்சாரமும், பண்புகளும் இருந்த போதிலும், அதில் இரண்டு பெரிய குறைபாடுகள் காணப்படுகிறது. முதலாவதாக, அமெரிக்க மக்களின் வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் பணத்திற்கு முக்கிய பங்கு உண்டு. ஆகையினால் பணத்தை எப்படியாவது சம்பாதிக்க வேண்டுமென்பது அவர்களின் முழு நோக்கமாக இருக்கிறது. இரண்டாவதாக, பொதுவுடைமைக் கொள்கையை நசுக்க வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமாகும். அதற்காக அவர்கள் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான செயல்களும், கொள்கைகளும் அமெரிக்காவின் மக்களாட்சி முறைக்கு களங்கம் கற்பிக்கக் கூடியதாக இருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு காலத்தினால் ஏற்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் உருவானதொன்றாகும். அட்லாண்டிக் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட 13 குடியேற்ற நாடுகளின் சுதந்திர வேட்கைதான் அமெரிக்கக் கூட்டாட்சியை வளர வைத்தது. பெரும்பாலும் ஆங்கிலேயர்கள் வாழ்ந்த இக்குடியேற்ற நாடுகள் சுதந்திரத்திற்காகப் போராடி முடிவில் 1776-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4-ஆம் நாள் சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டன. இந்த 13 குடியேற்ற நாடுகளில் 12 குடியேற்ற நாடுகளின் 55 பிரதிநிதிகளால் ஓர் அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரோட்தீவு (Rhode Island) மட்டும்தான் இதில் கலந்து கொள்ளவில்லை. இந்த அரசியலமைப்பு குடியேற்ற நாடுகளை ஒரு கூட்டமைவாக (Confederation) ஏற்படுத்தியது. இந்த கூட்டமைவு எதற்காக ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கத்தை அடைய முடியாது போனதால் மாநிலங்கள் அதை மாற்றியமைக்க விரும்பின. அதன் விளைவாக 1787-ம் ஆண்டு பிலடெல்பியாவில் கூட்டப்பட்ட மாநாட்டில் இந்த 13 குடியேற்ற நாடுகளுக்கான ஓர் அரசியல் அமைப்பு வரையப்பட்டது. தேவையான குடியேற்ற நாடுகளின் ஒப்புதலைப் பெற்றபின் அமைப்பு வரையப்பட்டது. தேவையான குடியேற்ற நாடுகளின் ஒப்புதலைப் பெற்றபின் இவ்வரசியலமைப்பு 1789 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ஆம் நாள் அமலபடுத்தப்பட்டது.

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

2. அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியலமைப்பின் தன்மைகளை எழுது.

## 5.3 அரசியலமைப்பின் தன்மைகள் :

தற்கால அரசியலமைப்புகளிலெல்லாம் மிகவும் சுருக்கமானதாக அமெரிக்க அரசியலமைப்பு விளங்குகிறது. இவ்வரசியலமைப்பு ஒரு முன்னுரையையும் 9

பக்கங்களில் எழுதப்பட்ட 7 விதிகளையும் இதுகாறும் ஏற்படுத்தப்பட்ட 26 திருத்தங்களையும் பெற்று விளங்குகிறது. மிகவும் சுருக்கமானதொரு அரசியலமைப்பாயிருப்பினும் இது 200 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்க மக்களின் தேவைகளைத் திறம்பட பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அரசியலமைப்பு நெகிழா அரசியலமைப்பாகும். அரசியலமைப்பைத் திருத்துவதற்கு கடினமானதொரு திருத்த முறை பின்பற்றப்பட வேண்டியதிருக்கிறது. திருத்த முறை பற்றி பிறிதொரு இடத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க அரசியலமைப்பின் ஒரு சிறப்பான அம்சம் அதனுடைய கூட்டாட்சித் தன்மையாகும். முதலில் அமெரிக்க அரசியலமைப்பு ஒரு கூட்டமைவைத்தான் ஏற்படுத்தியது. ஆனால் 1789-ஆம் ஆண்டைய அரசியலமைப்போ அதை கூட்டாட்சியாக மாற்றியமைத்தது. கூட்டமைவிற்கும் (Confederation) கூட்டாட்சிக்கும் (Federation) உள்ள வேறுபாடு யாதெனில் முன்னது அரசுகளின் நெகிழ்வான கூட்டாகும். பின்னதோ மாநில அரசுகளின் ஒரு வலுவான கூட்டாக உள்ளது என்பதாகும். 1874-ஆம் ஆண்டைய ஜெர்மானிய கூட்டமைவும், 1874 வரை அமலிலிருந்த சுவிஸ் கூட்டமைவும் கூட்டமைவிற்கு மேலும் சில உதாரணங்களாகும். இப்படிப்பட்ட ஒரு கூட்டமைவு குறிப்பிட்ட அரசியல் அல்லது பொருளாதார நோக்கங்களை அடைவதற்கென ஏற்படுத்தப்பட்ட ஒரு தற்காலிகக் கூட்டுச்சேர்தலைத் தான் குறிக்கும். கூட்டமைவு போல்லாமல் ஒரு கூட்டாட்சியில் ஒன்று சேரும் அரசுகள் தங்களுடைய சுய உரிமைகளை ஓர் உயர் அதிகாரம் படைத்த அமைப்பிடம் விட்டுக்கொடுத்து விட்டு ஒரு சில அதிகாரங்களை மட்டும் தங்களிடம் வைத்துக் கொள்கின்றன. இவ்விதம் பல அரசுகள் ஒன்று சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டாட்சி நாடு வெளி விவகாரச் செயல்களில் முழு ஆதிக்கமும் செலுத்த உரிமை பெற்று விடுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசு நிரந்தரமாக அமைக்கப்பட்ட ஒரு கூட்டாட்சியாகத் திகழ்கிறது. இந்த கூட்டாட்சியில் 50 மாநிலங்கள் உள்ளன.

கூட்டாட்சி என்று கூறுவதற்கான எல்லாச் சிறப்புத் தன்மைகளையும் இந்த அரசியலமைப்பு பெற்று விளங்குகிறது. முதலாவதாக, அரசியலமைப்பு எழுதப்பட்ட நெகிழா அரசியலமைப்பாக விளங்குகிறது. இரண்டாவதாக, கூட்டாட்சியின் அரசியலமைப்பிற்கு உட்பட்டுத்தான் காங்கிரசும் மாநிலச் சட்டமன்றங்களும் சட்டங்களியற்ற முடியும். எனவே கூட்டாட்சி அரசியலமைப்பு மேன்மையான அடிப்படைச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமோ அல்லது மாநில அரசாங்கமோ தமது விருப்பப்படி அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பங்கீட்டு முறையை மாற்றியமைக்க முடியாது.

கூட்டாட்சி அரசியல் முறையின் ஒரு சிறப்புத் தன்மையாகக் கருதப்படும் அரசியலமைப்பின் மேன்மை, சுயேச்சையாகச் செயல்படும் கூட்டாட்சியின் நீதித்துறையால் நிலைநிறுத்தப்படுகிறது. அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்திற்கு நீதிப்புனராய்வு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி கூட்டாட்சி அரசியலமைப்பிற்கு எதிராக எடுக்கப்படும் ஆட்சித்துறையின் நடவடிக்கைகளையும் மாநிலச் சட்டமன்றங்களோ அல்லது காங்கிரஸோ இயற்றிவிடும் சட்டங்களையும் செல்லாது என்று கூறித் தள்ளிவிடும் உரிமையை தலைமை நீதிமன்றம் பெற்றிருக்கிறது.

மூன்றாவதாக, அரசியலமைப்பின் மூலம் கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே, அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. மேலும்

எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. நான்காவதாக, அமெரிக்க குடிமகனொருவனுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது அமெரிக்க நாட்டின் குடியுரிமையும் அவன் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவனோ அந்த மாநிலத்தின் குடியுரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க அரசியலமைப்பு அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு மிகவும் தெளிவான முறையில் சட்டம் இயற்றும் அதிகாரங்களை காங்கிரஸிடமும், ஆட்சித்துறை அதிகாரங்களை ஜனாதிபதியிடமும். நீதித்துறை அதிகாரங்களை தலைமை நீதிமன்றத்திடமும் அளித்துள்ளது.

ஒரு கூட்டாட்சியின் வேறு இரு அம்சங்களாக சுதந்திரமான ஒரு நீதித்துறையும், தேர்தல் அடிப்படையில் அமைந்த ஓர் இரண்டாம் மன்றத்தையும் கூறலாம். அமெரிக்க நீதித்துறை குடிமக்களுடைய உரிமைகளுக்கும் மாநிலத்தின் உரிமைகளுக்கும் உத்திரவாதமளிக்கும் வகையில் அரசியல் நெருக்கங்களுக்கும் அப்பாற்பட்டுச் செயல்படும் வகையிலும் நிறுவப்பட்டள்ளது. (விளக்கத்திற்கு நீதித்துறை பற்றிய பாடத்தைப் பார்க்கவும்). மேலும் இரண்டாம் மன்றமாக விளங்கும் செனட் சபை மாநிலங்களுக்குச் சம அளவில் பிரதிநிதித்துவம் கொடுப்பதிருப்பதோடு தேர்தல் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

வேறு எந்த ஒரு நாட்டின் அரசியலமைப்பிலும் இவ்வளவு தெளிவான முறையில் அதிகாரங்கள் அரசாங்கத்தின் முக்கிய பிரிவுகளுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்படவில்லை. அமெரிக்காவில் அரசாங்கத்தின் எந்த ஒரு பிரிவும் மற்ற பிரிவை நாடியிருக்கத் தேவையில்லல. அரசியலமைப்பை உருவாக்கிய தலைவர்கள் மான்டெஸ்க்யூவின் அதிகாரப்பிரிவினைக் கொள்கை மீது ஆர்வம் கொண்டு அதனடிப்படையில் அரசியலமைப்பை வகுத்துள்ளனர். மான்டெக்ஸ்யூ என்னும் பிரெஞ்சு அரசியல் மேதை தனது சட்டங்களின் கருப்பொருள் (Spirit of Laws) என்னும் நூலில் சட்டமியற்றும் அதிகாரமும் சட்டத்தை அமலாக்கும் அதிகாரமும் மற்றும் நீதிவழங்கும் அதிகாரமும் ஒருவருடைய கையில் குவிந்திருந்தால் மக்கள் சுதந்திரமாக வாழ முடியாது என்று கூறியுள்ளார். இதை உணர்ந்த அமெரிக்க அரசியல் தலைவர்கள் அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளையும் பிரித்து வைக்க விரும்பி அரசாங்கப் பிரிவுகளை ஒன்றிலிருந்து ஒன்று விடுபட்ட நிலையில் ஏற்படுத்தி விட்டனர். எடுத்துக்காட்டாக அதிபர் ஒரு குறிப்பிட்ட காலம் பதவி வகிக்க முடிகிறது. அவர் காங்கிரசுக்குப் பொறுப்புடையவரல்லர். சட்டமன்றம் ஆட்சித்துறையினின்று சுதந்திரமாகச் செயல்படுகின்றது. அதாவது காங்கிரஸின் கூட்டத்தொடரை காலவரம்பின்றி ஒத்தி போடவோ அல்லது சபையைக் கலைத்துவிடவோ அதிபருக்கு உரிமையில்லை. மேலும் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளை குற்ற விசாரணை மூலமன்றி, மற்ற எந்த விதத்திலும் பதவியிலிருந்து நீக்க முடியாது என்பதால் நீதித்துறை மற்ற இரு பிரிவுகளினின்றும் தனித்து செயல்பட முடிகிறது. அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளும் இவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புகளேதுமின்றி ஏற்படுத்தப்பட்டால் நிர்வாகம் சுமுகமாக நடைபெறமுடியாது என்பதால் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் தடைகளும் சமநிலைகளும் என்றும் தத்துவத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளுக்குமிடையே பல தொடர்பு முறைகளை ஏற்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, பதவி நியமனம் மற்றும் உடன்படிக்கைகள் செய்தல் போன்ற காரியங்களில் ஆட்சித்துறை செனட் சபையால் கட்டுப்படுத்தப்படுகிறது. காங்கிரஸ் இயற்றும் சட்டங்களுக்கு

இசைவளிக்கும் அதிகாரத்தின் மூலம் ஆட்சித்துறை சட்டமன்றத்தைக் கட்டுப்படுத்துகிறது. நீதிபதிகளை நியமிக்க காங்கிரசும் அதிபரும் சேர்ந்து பெற்றிருக்கும் அதிகாரத்தின் மூலம் நீதிமன்றம் கட்டுப்படுத்தப்படுகின்றது. சட்டமன்றமும் ஆட்சித்துறையும் ஆட்சித்துறையின் நடவடிக்கைகளையும் திறனாய்வு செய்ய தலைமை நீதிமன்றம் பெற்றிருக்கும் நீதிப்புனராய்வு அதிகாரத்தின் மூலம் நீதித்துறைக்கு மற்ற இருபிரிவுகள் மீதும் கட்டுப்பாடு மேற்கொள்ள முடிகிறது. இவ்வாறு அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளும் சுயேச்சையாகச் செயல்படும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருப்பினும் எந்த ஒரு பிரிவும் ஏகபோக முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாத வகையில் ஒன்றையொன்று தடுத்து நிறுத்தும் கட்டுப்பாடு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவின் அரசியலமைப்பு சட்டத்தின் ஆட்சி கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது.

அமெரிக்க அரசியலமைப்பின் மற்றுமோர் சிறப்பு இறைமை பொதுமக்களிடம் இருக்கிறது என்னும் ஜனநாயகக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகும். அதாவது, பொதுமக்களே இறுதி அதிகாரமுடையவர்கள். இக்கருத்திற்கு ஏற்ப நாட்டின் தலைவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் மக்களிடமிருந்து அரசியல் அமைப்பின் மூலம் அதிகாரத்தைப் பெறுகின்றார். எனவே அமெரிக்க நாடு ஒரு குடியரசாக விளங்குகிறது.

## 5.4 அரசியலமைப்புத் திருத்த முறை :

திருத்தம் என்பது மாறுகின்ற சூழ்நிலைக்கேற்ப மக்களுடைய விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு அரசியலமைப்பின் ஒரு விதியை நீக்குவதையோ அல்லது மாற்றியமைப்பதையோ குறிக்கும். பல்வேறு திருத்த முறைகள் நடைமுறையில் இருக்கின்றன. சில நாடுகளில் திருத்தங்கள் சட்ட மன்றத்தின் மூலமாகச் செய்யப்படுகின்றன. சாதாரணச் சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் வேறுபாடு எதுவுமில்லாத பிரிட்டனில் பாராளுமன்றம் சாதாரணப் பெரும்பான்மையைக் கொண்டு சாதாரண சட்டத்தை இயற்றுவது போலவே அரசியலமைப்புச் சட்டத்தையும் திருத்தி விடுகிறது. சில நாடுகளில் சிறப்புப் பெரும்பான்மை மூலம் சட்டமன்றங்கள் திருத்தங்களை மேற்கொள்கின்றன. பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், நார்வே, ஸ்வீடன் போன்ற நாடுகளில் அரசியலமைப்பிற்குத் திருத்தங்கள் கொண்டுவரும் பொழுது சட்டமன்றங்கள் கலைக்கப்படுகின்றன. புதிய சட்டமன்றமே அரசியலமைப்புத் திருத்தத்தைச் செய்கிறது. தென் ஆப்பிரிக்காவில் சட்டமன்றத்தின் இணைப்புக் கூட்டத்தில்தான் திருத்தம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் மற்ற நாடுகளில் திருத்த மசோதா சட்டமன்றத்தின் இருசபைகளிலும் தனித்தனியாக நிறைவேற்றப்படுகிறது. சுவிட்சர்லாந்து, பிரான்சு, இத்தாலி போன்ற நாடுகளில் திருத்தங்கள் கட்டாய மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, அதில் பங்கு பெறும் மக்களின் பெரும்பான்மையினரின் இசைவைப் பெற்ற பின்னரே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் சட்டமன்றம் நிறைவேற்றிய திருத்தங்கள் மாநிலங்கள் இசைவையும் பெற வேண்டியிருக்கிறது. இங்கு நாம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்தும் முறையை விரிவாகக் காண்போம்.

அமெரிக்க அரசியலமைப்பு ஒரு நெகிழா அரசியலமைப்பாகும். அரசியலமைப்பின் 5-வது விதியில் அரசியலமைப்புத் திருத்தமுறையைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் மாற்றம் கொணர்வதற்கு இருமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவைகளைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

1. அரசியலமைப்பில் ஏற்படுத்த வேண்டிய திருத்தத்தை காங்கிரசின்

இருசபைகளிலும் தனித்தனியாக மூன்றில் இருபங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும். பிறகு அந்த திருத்தம் நான்கில் மூன்று பங்கு மாநிலங்களின் சட்டசபைகளிலோ அல்லது அதற்கென கூட்டப்படும் மாநாடுகளாலோ ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மாநில இசைவை எந்த முறையில் பெற வேண்டும் என்பதை காங்கிரசே தீர்மானிக்கும்.

2. மாநிலங்களும் அரசியலமைப்பிற்கான மாற்றத்தை முன்மொழியலாம். மூன்றில் இரண்டு பங்கு மாநிலச் சட்டமன்றங்கள் அரசியலமைப்பைத் திருத்தக்கோரி காங்கிரஸிற்கு மனுச்செய்தால் காங்கிரஸ் அரசியலமைப்பு மாநாடு ஒன்றைக் கூட்டுகிறது. இந்த மாநாடு மாநிலங்களின் சிபாரிசுகளுக்கிணங்க அரசியலமைப்பில் கொண்டுவரவேண்டிய மாற்றத்தை முன்மொழிகின்றது. இவ்வாறு முன்மொழியப்பட்ட திருத்தம் நான்கில் மூன்று பங்கு மாநிலங்களின் இசைவைப் பெற வேண்டும். அதிலும் இசைவு அளிக்கும் முறையை காங்கிரசே தீர்மானிக்கிறது. மாநிலச் சட்டமன்றங்கள் மூலமாகவும் அல்லது சிறப்பு மாநாடுகள் மூலமாகவும் இத்திருத்தத்திற்கு இசைவு அளிக்கலாம். இதுவரை எல்லாத் திருத்தங்களும் காங்கிரசால் தான் முன்மொழியப்பட்டிருக்கின்றன. 21-ஆம் திருத்தத்தைத் தவிர்த்து மற்ற எல்லா திருத்தங்களுக்கும் மாநிலச் சட்டமன்றங்களால் தான் இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் அரசியலமைப்பின் திருத்தத்திற்கு இசைவு அளிப்பதற்கான காலவரம்பு பற்றி எதுவும் கூறப்படவில்லை. அதன் காரணமாக ஒரு திருத்தத்தை ஒப்புக் கொள்வதற்கு ஒரு மாநிலம் 80 ஆண்டுகாலம் எடுத்துக் கொண்டது. இது மாதிரியான கால தாமதத்தை தவிர்ப்பதற்கென்று மாநிலம் இசைவளிப்பதற்கான காலவரம்பினை நிர்ணயிக்கும் உரிமையினை காங்கிரஸ் பெற்றது. 18, 20, 21 ஆம் திருத்தங்களின்படி ஏழு ஆண்டு காலத்துக்குள் மாநிலங்கள் இசைவளிக்காவிட்டால் திருத்தம் கைவிடப்பட்டு விடுகின்றது. திருத்த முறையின் பிறிதொரு சிறப்பு யாதெனில் ஒரு மாநிலம் ஒரு திருத்தத்திற்கு இசைவு அளித்துவிட்ட பின்னர் அந்த இசைவை மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால் ஒரு தடவை இசைவு தர மறுத்திருந்தால் திரும்பவும் இசைவு அளிக்க முடியும்.

காங்கிரஸ் ஒரு திருத்தத்தை முன்மொழியத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை, சபையின் முழு எண்ணிக்கை அங்கத்தினர்களின் பெரும்பான்மையா அல்லது வந்திருந்து வாக்களிப்பவர்களின் பெரும்பான்மையா என்று அரசியல் அமைப்பில் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. ஆனால் வந்திருந்து வாக்களிப்பவர்களின் பெரும்பான்மையை கருத்தில் எடுத்துக் கொள்வதே வழக்கமாகி விட்டது. அரசியலமைப்புத் திருத்த முறை இரண்டு வரையறைகட்கு உட்பட்டு அமல்படுத்தப்படுகிறது. முதலாவதாக, செனட்டில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சம பிரதிநிதித்துவ உரிமையை குறிப்பிட்ட மாநிலத்தின் சம்மதமின்றி திருத்தத்தின் மூலம் மாற்றியமைக்க முடியாது. இரண்டாவதாக ஒரு மாநிலத்தின் சம்மதமின்றி அதனை இரு மாநிலங்களாக்கவோ அல்லது வேறு ஒரு மாநிலத்துடன் அதை இணைக்கவோ முடியாது.

கடந்த காலத்தில் மொத்தம் 26 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. முதல் பத்து திருத்தங்களும் அமெரிக்க மக்கள் அனைவருக்கும் சமத்துவம், சுதந்திரம், பேச்சு சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், நடுவர் மூலம் விசாரணை பெறும் உரிமை, அனுமதி முறையில் ஏதாவதொரு காரியத்திற்காகக் கூடும் உரிமை, குறைதீர்க்க வேண்டி மனுதரும் உரிமை, ஆயுதம் வைத்திருக்கும் உரிமை போன்ற திருத்தங்களை

ஒரு பிரிவாகப் பிரித்து இவற்றை உரிமைச் சாஸனம் சம்பந்தப்பட்டவைகள் என்று கூறலாம். அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட உடனேயே இந்த 10 திருத்தங்களும் 1791-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன. இத்திருத்தங்களின் முக்கியத்துவம் என்னவென்றால் இத்திருத்தங்கள் வல்லாட்சிக்கு எதிராக தனிமனிதனது உரிமைக்கு பாதுகாப்பு அளிப்பதுவேயாகும். முறையே 1796, 1804 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட 11-வது, 12-வது திருத்தங்களும் உரிமைச் சாசனம் சம்பந்தப்பட்டவைகளேயாகும். 1865-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 13-ஆவது திருத்தம் அடிமைத்தனத்தை ஒழித்தது. 1868-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட 14-வது திருத்தமும் 1870-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 15-ஆவது திருத்தமும், மாநிலங்களிலெல்லாம் சமகுடிமை உரிமையை வழங்கியது. 1913-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 16ஆவது திருத்தம் அமெரிக்கக் காங்கிரஸ் நேரடி வரி விதிக்கவும் வசூலிக்கவும் மைய அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கியது. அதே ஆண்டில் (1913) நிறைவேற்றப்பட்ட 17ஆவது திருத்தம் அமெரிக்க மேல்சபையாகிய செனட்சபையின் உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மாற்றி அமைத்தது. போதைப் பொருள்களை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விற்பதை செய்வதை 1919-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 18-ஆவது திருத்தம் தடை செய்தது. 1929-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 19-ஆவது திருத்தம் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது. 1933-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 20-ஆவது திருத்தம் குடியரசுத் தலைவர், துணைத்தலைவர், செனட்டர்கள், பிரதிநிதிகள், சபை உறுப்பினர்கள் ஆகியோருடைய பதவிக்காலத்தின் ஆரம்ப முடிவு நாட்களைக் குறிப்பிடுகிறது. 1939-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 21-ஆவது திருத்தம், 1919-ஆம் ஆண்டு போதைப் பொருள்கள் மீது செலுத்திய தடையை ரத்து செய்தது. 1951-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 22-ஆவது திருத்தம் குடியரசுத் தலைவருடைய பதவிக்காலத்தை இரண்டு முறையாக நிர்ணயித்தது. 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட 23-ஆவது திருத்தம் கொலம்பியா மாவட்ட மக்களுக்கு குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசு துணைத்தலைவருடைய தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை வழங்கியது. 24-ஆவது திருத்தம் வாக்குரிமையைப் பாதிக்கக் கூடிய எல்லா வரியையும் ரத்து செய்தது. குடியரசு துணைத்தலைவருடைய பதவி காலியாக இருந்தால் அமெரிக்க காங்கிரஸின் சம்மதத்தோடு ஒரு குடியரசு தலைவரை தேர்ந்தெடுக்கும் உரிமையை குடியரசுத் தலைவருக்கு வழங்கி இருக்கிறது 25-ஆவது திருத்தம். 18 வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கியது 26-ஆவது திருத்தம்.

**அதிகாரப் பங்கீடு (Division of Powers) :**

கூட்டாட்சியின் ஒரு முக்கிய அம்சம் கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையே காணும் அதிகாரப் பங்கீடு முறையாகும். பாதுகாப்பு, வெளி விவகாரம், தபால் தந்தி போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களை பொதுவாக மத்திய அரசாங்கத்திற்கும் கல்வி, பொதுச் சுகாதாரம், சாலையமைத்தல், உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளித்தல் போன்ற உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களை மாநில அரசாங்கங்களுக்கும் கொடுப்பது வழக்கம். அதிகாரப்பங்கீட்டு முறை கூட்டாட்சி நாடுகளில் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பட்டியலிட்டுக் கூறிவிட்டு, சில அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் கொடுத்துள்ளனர். இந்தியா, கனடா போன்ற நாடுகளில் இணைப்புப் பட்டியல் என்று

ஒன்று ஏற்படுத்தி அதில் கூறப்பட்டுள்ள காரியங்கள் மீது மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இங்கு நாம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசில் கையாளப்பட்டுள்ள அதிகாரப் பங்கீட்டு முறையைக் காண்போம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு கூட்டாட்சி முறையை ஏற்படுத்தியுள்ளது. இக்கூட்டாட்சியில் 50 மாநிலப் பகுதிகள் இடம் பெறுகின்றன. கூட்டாட்சியைத் தோற்றுவித்த மாநிலங்கள் தங்களுடைய எல்லா அதிகாரங்களையும் கூட்டாட்சிக்கு அளித்துவிடவில்லை. எனவே இன்றைக்கு கூட்டாட்சி அரசாங்கம் மாநிலங்கள் ஒப்படைத்த அதிகாரங்களை மட்டுமே பெற்று விளங்குகிறது. அரசியலமைப்புப்படி கூட்டாட்சி அரசாங்கத்திற்கு ஒரு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடமே இருக்கின்றன. அரசியலமைப்பில் அதிகாரங்கள் பற்றிய மூன்று பட்டியல்கள் இடம் பெறுகின்றன. அதாவது காங்கிரஸ் என்ன செய்யலாம் என்பது பற்றிய ஒரு பட்டியல், காங்கிரஸ் என்ன செய்ய கூடாது என்பது பற்றிய ஒரு பட்டியல். மாநிலங்கள் என்ன செய்யக் கூடாது என்பது பற்றிய பட்டியல் அரசியல் அமைப்பில் இடம் பெறுகின்றன.

அரசிலமைப்பின் முதலாம் விதியின் 8ஆம் பிரிவில் காணப்படும் முதலாம் பட்டியலில் காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ள 18 அதிகாரங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் முக்கியமாக வரிகள் விதிக்கவும், வசூலிக்கவுமான அதிகாரம், வெளிநாட்டு வாணிபம், மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம், பொதுப் பாதுகாப்பு, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொதுநலன் நாணயம் மற்றும் அளவு முறைகள், கலை மற்றும் விஞ்ஞான வளர்ச்சி (தலைமை), நீதிமன்றத்திற்குக் கீழான நீதிமன்ற அமைப்புக்களை நிறுவுதல், போர்ப் பிரகடனம் செய்தல், ராணுவமேற்படுத்தல் போன்ற அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்கெனத் தேவையான சட்டங்களை உருவாக்குதல் உள்ளடங்கும்.

மற்ற இரண்டு பட்டியல்களும் கூட்டாட்சி அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கங்களுக்கும் தடை செய்யப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறிப்பிடுகின்றன. முதலாம் விதியில் 9-ஆம் பிரிவில் கூட்டாட்சி அரசாங்கத்திற்குத் தடை செய்யப்பட்ட அதிகாரங்கள் உள்ளன. அவைகளில் முக்கியமாக 'தன்முன் நிறுத்தல்' (Habeas Corpus) சட்டத்தை ரத்து செய்தல், உயர் பட்டங்கள் அளித்தல், மக்களின் மத உணர்வுகளைப் பாதிக்கும் சட்டங்களை நிறைவேற்றுதல், பத்திரிக்கை உரிமை, பேச்சுரிமை போன்றவைகளைப் பாதிக்கும் சட்டங்களை இயற்றுதல் ஆகியவைகளாகும். மாநிலங்களைப் பொறுத்தவரையில், அவைகள் வெளிநாட்டுடன் உடன்படிக்கைகள் எதுவும் செய்து கொள்ளக் கூடாது. இராணுவம் வைத்துக் கொள்ளக் கூடாது, நாணயம் அச்சிடக்கூடாது. 14 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி மாநிலங்களுக்குக் கொடுக்கப்படாமல் மத்திய அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மக்களிடமே இருப்பதாகக் கருதப்படுகிறது. இவ்வுரிமைகள் மக்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ள, அரசாங்கத்தால் பறித்துக் கொள்ள முடியாத உரிமைகளாகும். இதிலிருந்து தெரிவது என்னவெனில் மாநிலங்கள் அவைகளுக்குத் தடை செய்யப்படாத அதிகாரங்களையும் மத்திய அரசாங்கத்திற்கு அளிக்கப்படாத அதிகாரங்களையும் பெற்றிருக்கின்றன என்பதாகும்.

மேற்படி அதிகாரப் பங்கீட்டு முறையால் கூட்டாட்சி அர்சாங்கம் மிகவும் பலகீனமடைந்து விட்டது என்று கூற முடியாது. அரசியலமைப்பு நடைமுறையில்

அமல்படுத்தும்பொழுது "பொதிந்த அதிகாரங்கள்" அரசியல் அமைப்பில் கொண்டுவரப்பட்டுள்ள பல்வேறு திருத்தங்கள், மத்திய நிதி உதவி, திறமை வாய்ந்த அதிபர்களின் ஆட்சிமுறை ஆகியவைகளின் காரணமாக கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்கள் அதிகரித்து வருவதைக் காணலாம்.

## 5.5 அரசியலமைப்பின் வளர்ச்சி (Growth of the Constitution)

கடந்த 235 ஆண்டுகளில் அமெரிக்க அரசியலமைப்பு வெகுவாக வளர்ந்துள்ளது. இவ்வளர்ச்சிக்குள்ள முக்கிய காரணங்கள் நீதிமன்றம் வழங்கிய "பொதிந்த அதிகாரங்கள்" அரசியலமைப்பு திருத்தங்கள், மைய அரசின் நிதி உதவி, திறமை வாய்ந்த சில குடியரசுத் தலைவர்கள் ஆகியவைகள் ஆகும்.

தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய மார்ஷல் விளக்கிய "பொதிந்த அதிகாரங்கள்"(Implied Powers) என்னும் கருத்துப்படி கூட்டாட்சி அரசாங்கத்திற்கு அரசியல் அமைப்பு ஒரு சில அதிகாரங்களை அளித்திருப்பதுடன் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் உள்ளூரக் காணப்படும் அல்லது பொதிந்துள்ள அதிகாரங்களையும் காங்கிரசுக்கே அளித்துள்ளது. தலைமை நீதிமன்றம் இத்தத்துவத்தை தாராளமாகக் கடைப்பிடித்ததினால் மத்திய அரசாங்கம் வலுவிழந்துவிட்டது. உதாரணமாக, வரி விதிப்பதற்கு காங்கிரஸ் பெற்றிருக்கும் அதிகாரத்தின் மூலம் அமெரிக்க நாட்டு மத்திய வங்கியை ஏற்படுத்தி அதன் மீது கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் உரிமையையும் காங்கிரஸே பெற்றுவிட்டது. இவ்விதமாகவே மத்திய அரசாங்கம் அரசியலமைப்பின் கூறப் படாத அநேக அதிகாரங்களைத் தன் வசப்படுத்தியுள்ளது.

அரசியல் அமைப்பிற்கு இதுவரை கொண்டு வரப்பட்ட 26 திருத்தங்களும் கூட்டாட்சி அரசாங்கத்தை வலுவடையச் செய்துள்ளது. உதாரணமாக 15 ஆம் திருத்தப்படி தலைமை நீதிமன்றம் மாநிலச் சட்டங்களை நீதிப்புனராய்வு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

மத்திய அரசாங்கம் வழங்கும் நிதி உதவியும் அதிகார குவிப்பு ஏற்பட ஓர காரணமாக அமைந்தது. தள ஆட்சி நிறுவனங்களும் மாநில நிர்வாகக் கூறுகளும் சமூக நலச் செயல்களும் மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெறுவதால் கூட்டாட்சி அரசாங்கத்திற்கு மாநில நிர்வாகத்தின் மீது கூடுதல் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இறுதியாக ஜார்ஷ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், ரூஸ்வெல்ட், கென்னடி போன்ற திறமை வாய்ந்த குடியரசுத்தலைவர்கள் அரசியலமைப்பின் அங்கீகாரமின்றியே சில வேளைகளில் செயல்பட்டிருக்கின்றனர். உதாரணமாக ரூஸ்வெல்டின் 'நியு டீல்'(New Deal) கொள்கை மாநிலங்களின் கட்டுப்பாட்டிற்கு கீழ் இருந்த செயல்கள் மீது கூட்டாட்சி அரசாங்கத்திற்கு கட்டுபாட்டு உரிமையை வழங்கியது. இவ்விதமாக குடியரசுத்தலைவர்களின் துணிவான செயல்களின் மூலமும் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்கள் பெருகியுள்ளன.

## 5.6 அமெரிக்க கூட்டாட்சி

அமெரிக்க கூட்டாட்சி சில பூகோள வரலாற்று, இனக் காரணிகளின் படைப்பேயாகும். அமெரிக்காவில் குடியேறிய பல இன மக்கள், காலப்போக்கில் அவர்களிடையே ஒரு பொது தேசிய உணர்வை வளர்த்தனர். வட அமெரிக்க கண்டத்தில் சுதந்திரப் போரில் வெற்றி பெற்ற பிறகு சுதந்திர நாடுகளாக செயல்பட்டு வந்த 13 குறுநிலப் பகுதிகளை ஒன்றாக இணைத்து 1781-ஆம் ஆண்டில் அமெரிக்க கூட்டமைவு உருவாக்கப்பட்டது. சுதந்திர நாடுகளாக செயல்பட்டு வந்தமையினால் இப்பதிமூன்று

குறுநிலப் பகுதிகளும், தங்களுடைய உரிமைகளையும் அதிகாரங்களையும் ஒரு மைய அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுக்கத்தயங்கின. ஆகையினால் 1781-ஆம் ஆண்டு முதல் 1789 வரை செயல்பட்ட அமெரிக்க கூட்டமைவில் (Confederation) மைய அரசாங்கம் பலம் குன்றியிருந்தது. இக்கூட்டமைவு முறையின் செயல்பாட்டில் ஏராளமான முறைகள் காணப்படவே, அதை தவிர்த்து ஒரு புதிய அரசாங்க அமைப்பை உருவாக்கும் நோக்குடன் 13 குறுநிலப் பகுதிகளின் பிரதிநிதிகள் 1787-ஆம் ஆண்டில் பிலடெல்பியாவில் (Philaedelphia) ஒரு மாநாட்டைக் கூட்டினர். இம்மாநாடு வரைந்த அரசியலமைப்பிற்கு 13 மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்திக் கொண்டு 1789 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது. இந்தக் கூட்டாட்சியை சிறிது விளக்கமாக ஆராய்வோம்.

ஓர் உண்மையான கூட்டாட்சியில் மூன்று அடிப்படை அம்சங்கள் அவசியம் இருந்தாக வேண்டும். /அவையாவன: 1) எழுதப்பட்ட, நெகிழா அரசியலமைப்பு 2) மைய மாநிலங்களுக்கிடையே அதிகாரப் பங்கீடு 3) மைய - மாநிலங்களுக்கிடையையோ அல்லது மாநிலங்களுக்கிடையையோ எழும் சச்சரவுகளை தீர்த்து வைப்பதற்கு சுதந்திரமாக பாரபட்சமின்றி செயல்படும் ஒரு நீதிமன்றம். இம் மூன்று அம்சங்களும் அமெரிக்க கூட்டாட்சியில் உண்டு. முதலாவதாக அமெரிக்க அரசியலமைப்பு எழுதப்பட்ட ஓர் ஆவணமாகும். 400 வார்த்தைகள் மட்டும் கொண்ட இந்த அரசியலமைப்பு இன்று உலகிலுள்ள அரசியலமைப்புகளிலேயே மிகவும் குறுகியதாகும். எழுதப்பட்ட அரசியலமைப்பிற்கு முதல் எடுத்துக்காட்டு அமெரிக்க அரசியலமைப்பாகும். அமெரிக்க அரசியலமைப்பு எழுதப்பட்டது மட்டுமல்ல, அது எளிதில் திருத்த முடியாத ஒரு நெகிழாத் தன்மையுடையதாகும். கூட்டாட்சி முறையில் மைய மாநிலங்களுக்கிடையேயுள்ள அதிகாரப்பங்கீடு அரசியலமைப்பில் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கும். அரசியலமைப்பில் எளிதாக திருத்தக்கூடிய தன்மையில் இருக்குமாயின், மையம் அதைத் திருத்தி மாநிலங்களின் அதிகாரத்தை பறிப்பதற்குள்ள வாய்ப்புண்டு. இந்நிலையைத் தவிர்க்கும் பொருட்டுத் தான் கூட்டர்ட்சி அரசியலமைப்புக்கள் நெகிழாத் தன்மையுடையனவாக உருவாக்கப்படுகின்றன. அமெரிக்க அரசியலமைப்பும் இத்தன்மையுடையதேயாகும். அமெரிக்க அரசியலமைப்பை மையமோ மாநிலங்களோ தனியாகச் செயல்பட்டுத் திருத்த முடியாது. இரண்டும் சேர்ந்துதான் திருத்த முடியும். தவிர நாட்டின் அடிப்படைச் சட்டமாகவும் அரசியலமைப்பு மதிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, அமெரிக்க அரசியலமைப்பு மைய - மாநிலங்களுக்கிடையே அதிகாரங்களைப் பங்கீடு செய்துள்ளது. அரசியலமைப்பு மைய அரசாங்கத்தின் அதிகாரங்களை மட்டும் வரையறுத்துக் கூறி விட்டு எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers)அனைத்தையும் மாநிலங்களுக்கு ஒதிக்கியுள்ளது. மாநிலங்கள் எஞ்சிய அதிகாரங்கள் முழுவதையம் பெற்றுள்ளமையினால், அவைகள் மைய அரசாங்கத்தை விடவும் பலம் பொருந்தியதாக விளங்கின. இந்தியா, கனடா போன்ற கூட்டாட்சியிலுள்ள மாநிலங்களின் அதிகாரத்திற்கு நேர்மாறானது. அமெரிக்க மாநிலங்களின் அதிகாரநிலை, அரசியலமைப்புச் சட்டத்தின் முதலாவது விதி கீழ்க்காணும் 18 அதிகாரங்களை மைய அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது.

1. வரி விதித்தலும், பணம் கடன் வாங்கலும்
2. மாநிலங்களுக்கிடையேயுள்ள வாணிபம், வெளிநாட்டு வாணிபம்.
3. வெளியுறவு

4. பாதுகாப்பு படை
5. போர்ப் பிரகடனம்
6. நாணயம் வெளியிடல்
7. தபால் அலுவலகங்களை ஏற்படுத்துதல்
8. பதிப்புரிமை
9. திவாலாவது சம்பந்தமாக ஒரே மாதிரியான சட்டத்தை ஏற்படுத்துதல்
10. பன்னாட்டு சட்டத்திற்கெதிரான குற்றம், கடற்கொள்ளை, பாதகச் செயல் போன்ற குற்றங்களுக்குத் தண்டனை வழங்கல்.
11. கள்ள நாணயம் தயாரித்தலை தண்டித்தல்
12. கப்பற்படை
13. உச்ச நீதிமன்றத்திற்கு கீழ்ப்பட்ட நீதிமன்றங்களை அமைதல்
14. தரை, கப்பற்படைகளைக் கட்டுப்படுத்தத் தேவையான விதிகளை உருவாக்குதல்
15. மைய அரசாங்கத்தின் சட்டங்களை அமுலாக்கவும், கலகங்களை நசுக்கவும் ராணுவத்தைப் பயன்படுத்தல்.
16. மைய அரசாங்கம் இருக்கும் நிலப்பகுதியை நிர்வாகம் செய்தல்
17. சிவிலியன் மக்களுக்கு ராணுவப் பயிற்சியளித்தல்
18. மேற்கூறிய அதிகாரங்களைப் பயன்படுத்த தேவையான சட்டங்களை இயற்றல்.

எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு மையத்தின் அதிகாரங்களை வரையறுத்துக் கூறுவதோடன்றி மையத்தின் மீதும் மாநிலங்கள் மீதும் சில கட்டுப்பாடுகளையும் சுமத்தியுள்ளது. மையத்தின்மீது சுமத்தியுள்ள கட்டுப்பாடுகளாவன ஆட்கொணர் ஆணை வழங்கும் உரிமையை (Writ of Habeas Corpus) எச்சூழ்நிலையிலும் ரத்து செய்யக்கூடாது. ஒரு குற்றம் புரியும் போது அக்குற்றத்திற்குள்ள தண்டனையை மாற்றக் கூடிய சட்டங்களை இயற்றக்கூடாது. பிரபுப் பட்டங்களை வழங்கக்கூடாது. சமயச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியற்றைக் குறைப்பதற்கான சட்டங்களுடன், கூட்டு வைத்தல் அல்லது உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளுதல், நாணயம் வெளியிடுதல், படை வைத்திருத்தல் ஆகிய உரிமைகள் மாநிலங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன.

மேலும் மைய அரசாங்கம் அரசியலமைப்பு வழங்கியுள்ள அதிகாரங்களைத் தவிர வேறு சில அதிகாரங்களை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் மூலம் குறிப்பாக நீதிமன்றம் உருவாக்கிய அதிகாரம் என்னும் கோட்பாட்டின் (Doctrine of Implied Powers) வாயிலாக பெற்றுள்ளது. சமூகப் பாதுகாப்புச் சட்டங்களை (Social Security Legislation) இயற்றும் அதிகாரம், மாநிலங்களுக்கிடையேயுள்ள போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வங்கி முறையை கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆகியவைகள் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளிலிருந்து மையத்திற்குக் கிடைத்தது.

அரசியலமைப்பு, சில அதிகாரங்களை மையத்திற்கும் மாநிலங்களுக்கும் பொதுவாக வைத்துள்ளது. வரி விதித்தல், பொதுக்கடன் வாங்கல், எடை அளவு ஆகியவற்றை நிர்ணயம் செய்தல், நீதிமன்றங்களை அமைத்தல், பொதுகாரியங்களுக்காக தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்தல் ஆகியவைகள் மைய மாநிலங்கள் இரண்டிற்கும்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**
3. அமெரிக்கக் கூட்டாட்சியின் சிறப்பம்சங்களை விவரி.

பொதுவான அதிகாரங்களாகும். இவ்விளைவுகளைப் பற்றி சட்டம் இயற்ற இரண்டு அரசாங்கங்களுக்கும் சம அதிகாரம் உண்டு.

இறுதியாக ஒரு கூட்டாட்சியில் இருக்க வேண்டிய மூன்றாவது அம்சம் சுதந்திரமாகச் செயல்படும் நீதிமன்றமாகும். அமெரிக்க உச்சநீதிமன்றம் இதைப் பூர்த்தி செய்கிறது. அரசியலமைப்பு, சட்டங்கள் ஆகியவற்றிற்கு விளக்கமளித்து, மைய மாநில சச்சரவுகளை தீர்த்து வைக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

மேற்கூறிய மூன்று அடிப்படை அம்சங்களைத் தவிர அமெரிக்க கூட்டாட்சி இன்னும் சில இலட்சியக் கூட்டாட்சி அம்சங்களைக் கொண்டு விளங்குகிறது. மாநிலங்களின் நிலப்பரப்பு, எல்லைகள் ஆகியவற்றை மைய அரசாங்கம் மதித்துச் செயல்படவேண்டும், ஒரு மாநிலத்தின் ஒப்புதலின்றி அதன் பெயரை மாற்றவோ அல்லது அதன் நிலப்பரப்பில் மாற்றம் செய்யவோ மைய அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை. எல்லா மாநிலங்களிலும் குடியரசு அரசாங்க முறை இருக்க வேண்டும். வெளிநாட்டுத் தாக்குதலிலிருந்து மாநிலங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மையத்திற்கு உண்டு. மாநிலங்களின் நிலப்பரப்பு, மக்கள் தொகை ஆகியவற்றைக் கருதாமல் மாநிலங்கள் அனைத்திற்கும் காங்கிரஸின் மேலவையான செனட்டில் சமப்பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து அமெரிக்கா ஒரு இலட்சிய கூட்டாட்சியைக் கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இக்கூட்டாட்சி ஒரு சில சூழ்நிலைகளினால் தோன்றியதாகும். ரீட் வெஸ்ட்(Read West) என்பவர் கூறுவது போல, சுதந்திர நாடுகளாக செயல்பட்டு வந்த 13 அமெரிக்க குடியேற்ற நாடுகள் கூட்டாட்சி முறையைக் கடைப்பிடிக்க முக்கிய காரணம் அவர்களுக்கிடையே நிலவிய பூசல்களும் உரிமைகளை முழுமையான விட்டுக் கொடுக்க மனமின்மையுமேயாகும். தவிர, அமெரிக்க கூட்டாட்சியில் மாநிலங்கள் சுயாட்சியுடன் செயல்படுகின்றன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளன. மாநிலங்களின் அதிகாரங்களும் வரையறுக்கப்படவில்லை யானாலும் அது வரம்பற்றது அல்ல. 1861 முதல் 1865 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அமெரிக்க உள்நாட்டுப்போர் அமெரிக்க கூட்டாட்சி ஒரு அழிவில்லா இணைபு (An Indestructible Union of Industructible States) என்பதை நிருபித்துவிட்டது.

## 5.7 மைய அதிகாரக் குவியல் போக்கு (Centripetal trends)

கூட்டாட்சி அரசாங்க முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு அமெரிக்கா என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இன்று நிலவும் அமெரிக்க கூட்டாட்சி முறை பிலடெல்பியா மாநாட்டினால் உருவாக்கப்பட்ட கூட்டாட்சி முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகிறது. எல்லா கூட்டாட்சிகளிலுமே மைய அரசாங்கத்தின் அதிகாரங்கள் விரிவடைந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்கு அமெரிக்க ஒரு விதிவிலக்காக இருக்கமுடியாது. அமெரிக்க மைய அரசாங்கத்தின் அதிகார வளர்ச்சியின் வேகத்தை ஓரளவு தடுக்க வில்லையெனில், வெகுவிரைவில் மாநிலங்கள் மைய அரசாங்கத்தின் நிர்வாக பகுதிகளாக மாறிவிடுவது நிச்சயம் என ஈ.எஸ். கிரிபித் (E.S.Griffith) அமெரிக்க மைய அதிகார வளர்ச்சியின் அபாயத்தைப் பற்றி எச்சரிக்கிறார்.

மாநிலங்கள் தங்களுடைய அதிகாரங்களை இழந்து மைய அரசாங்கம் அதன் அதிகாரங்களை விரிவுபடுத்திக் கொண்டதற்குப் பல காரணங்கள் கூறலாம். முதலாவதாக அமெரிக்காவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நிறுவனங்களின் வளர்ச்சி, விஞ்ஞானத்

துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் ஆகியவைகள் அமெரிக்காவை, விவசாயத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறு நாடு என்ற நிலையிலிருந்து உலகிலேயே மிகப் பெரிய தொழில் மயமான வல்லரசு நாடு என்ற நிலைக்கு மாற்றிவிட்டது. இப்புது அந்தஸ்து மையம் வலுப்பெற உள்நாட்டுப்போர் நாட்டில் தலைதூக்கிய பிரிவினைச் சக்திகளை அடியோடு நசுக்கியது. போரில் ஏற்பட்ட மைய அரசாங்கத்தின் வெற்றியும். பிறகு மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புத் திட்டமும் (Reconstruction Programme) மையத்தின் அதிகாரங்களை பன்மடங்கு விரிவுபடுத்தின. மூன்றாவதாக உச்ச நீதிமன்றத்தின் பல தீர்ப்புக்களும் குறிப்பாக அது உருவாக்கிய உள்ளடங்கிய அதிகாரங்கள் என்னும் கோட்பாடு, மையத்தின் அதிகாரங்களைப் பல புதுத் துறைகளுக்கு விரிவுபடுத்தியது. நான்காவதாக, மைய அரசாங்கம் மாநிலங்களுக்கு வழங்கும் உதவி மானியங்கள் (Grants-in-aid) மாநிலங்களின் செயல் சுதந்திரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. மாநிலங்கள் மையம் வழங்கும் மானியங்களை மையம் சுமத்தும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தான் பயன்படுத்த முடியும். இதன் மூலம் மையம் மாநிலங்களைக் கட்டுப்படுத்த முடிகிறது. ஐந்தாவதாக உலகப்போர் அபாயம் பொதுவுடமை பரவும் அபாயம் ஆகிய இரண்டும் மையத்தின் வலிமை வளர மாநில அரசாங்கங்களுக்கு போதிய ஆற்றல் இல்லையென உணர்ந்து அதற்காக மையத்தை வலுப்படுத்தும் முயற்சியை மக்கள் ஆதரித்தனர். ஆறாவதாக 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மையத்தின் அதிகாரத்தை பல துறைகளுக்கும் விரிவுபடுத்த அறியதொரு வாய்ப்பாக அமைந்தது. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க நாடு முழுமைக்கும் பொதுவான சட்டங்கள், செயல் திட்டங்கள் ஆகியவைகள் தேவைப்பட்டமையினால் மையம் தலையிட வாய்ப்பு கிட்டியது. அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி மைய அரசு அதன் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டது. இறுதியாக மக்களின் நம்பிக்கையும், ஆதரவும் தேசிய அரசாங்கத்திடம் தான் அதிகமாகக் காணப்பட்டது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றயதோடு, அவர்களுக்கு இன்றியமையாத பல சேவைகளையும் மைய அரசாங்கம் வழங்குவதில் வெற்றி பெற்றுள்ளது. இது மக்களிடையே பிராந்திய மனப்பாங்கு மறையக் காரணமாயிற்று.

ஆகவே, அமெரிக்க கூட்டாட்சியில் மைய அரசாங்கத்தின் அதிகாரங்கள் பெருமளவு வளர்ந்துள்ளன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதன் காரணமாகத்தான் டிரம்மண்ட் என்ற அறிஞர், அமெரிக்கவில் கூட்டாட்சி என்று ஒன்று தற்போது இல்லை எனக் கூறுகிறார். ஆயினும், இவருடைய கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள இயலாது. மையத்தின் அதிகாரங்கள் வளர்ந்துள்ளன என்பது உண்மையே. ஆனால் மாநிலங்களின் அதிகாரங்கள் அடியோடு மறைந்து விடவில்லை. மாநிலங்கள் இன்று தேர்தல் நடத்தல், காவல் நிர்வாகம், கல்வி, உரிமையியல், கிரிமினல் சட்டங்களை அமுலாக்குதல் ஆகிய துறைகளில் தங்களுடைய அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தி, மக்களுக்கு சேவை செய்து வருகின்றன, இன்னும் அமெரிக்க அரசியல் முறைமைவு மாநிலங்களை நடுநாயகமாக வைத்துத்தான் செயல்படுகிறது.

## 5.8 குடியரசுத் தலைவர் (The President) :

அமெரிக்க அரசியலமைப்பின் இரண்டாவது விதி குடியரசுத் தலைவர் பதவியை ஏற்படுத்தி ஆட்சித்துறை அதிகாரங்கள் எல்லாவற்றையும் அவரிடம் அளித்துள்ளது. அமெரிக்க குடியரசுத் தலைவர் சட்டமன்றத்தினின்று தனிப்பட்டு விளங்குகிறார். தடைகளுக்கும் சமநிலைகளுக்கும் உட்பட்ட நிலையில் ஆட்சித்துறையின் மேலான

தலைவராக குடியரசுத் தலைவர் காணப்படுகிறார். குடியரசுத் தலைவர் காங்கிரசுக்குப் பொறுப்புடையவரல்லர். தமது அமைச்சரவையின் ஆலோசனைக்கு இவர் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதில்லை. இவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பார்க்குமிடத்து இவர் உலகிலேயே அதிக அதிகாரமுடைய ஒரு ஆட்சித்துறைத் தலைவராகத் திகழ்கிறார் என்பது புலனாகிறது.

**தகுதிகள்** : அரசியலமைப்பின்படி குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடக்கூடிய ஒருவர் அமெரிக்காவின் இயற்கைக் குடிமகனாக இருத்தல் வேண்டும். 35 வயதை எய்தியவராக இருத்தல் வேண்டும். அமெரிக்காவில் 14 வருடங்கள் வாழ்ந்துமிருக்க வேண்டும். நடைமுறையில் குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பாளர்கள் செனட்டர்கள், மாநில ஆளுநர்கள், அமைச்சரவை உறுப்பினர்கள், முந்திய நிர்வாகத்தில் பணியாற்றி முக்கிய அலுவலர்கள் போன்றவர்கள் மத்தியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பதவிக்காலம்** : அரசியலமைப்பு குடியரசுத் தலைவர் 4 ஆண்டுகாலம் பதவி வகிக்கலாம் என்று கூறுகிறது. மறுபடியும் குடியரசுத் தலைவர் போட்டியிடலாமா என்பது பற்றி அரசியலமைப்பு எதுவும் கூறவில்லை. முதலாவது குடியரசுத் தலைவரான ஜார்ஜ் வாஷிங்டன் இரண்டு முறைதான் பதவி வகித்தார். அது ஒரு வழக்காறாக ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேல் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் இந்த வழக்காற்றை மீறி 1940-ஆம் ஆண்டில் மூன்றாவது தடவையாகவும் 1944-இல் நான்காவது தடவையாகவும் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அதனால் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இத்திருத்தச் சட்டத்தின்படி எந்த ஒரு குடியரசுத் தலைவரும் 2 தடவைக்கு மேல் குடியரசுத் தலைவர் பதவி வகிக்கத்தடை விதிக்கப்பட்டது. அல்லது வேறொரு குடியரசுத் தலைவர் விட்டுச் சென்றதில் பாதிக்கும் மேற்பட்ட பதவிக்காலத்தை வகித்த ஒரு குடியரசுத் தலைவர் ஒரு தடவைக்கு மேல் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்று கொண்டுவரப்பட்டது. எடுத்துக்காட்டாக நிக்ஸனுடைய 4 ஆண்டு பதவிக்காலத்தில் இரண்டாவது ஆண்டிலேயே ஃபோர்டு பதவிக்கு வந்துவிட்டதால் கூடுதலாக ஒரு தடவை தான் அவரால் பதவி வகிக்க முடிந்தது.

**தேர்தல் முறை** : அரசியலமைப்பின்படி குடியரசுத் தலைவர் காங்கிரஸின் இரு சபைகளிலும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையுடைய தேர்வாளர்களைக் கொண்ட ஒரு தேர்வாளர் குழுவால் (Electoral College) தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒவ்வொரு மாநிலமும் காங்கிரசில் தனக்கு எத்தனை செனட்டர்களும் பிரதிநிதிகளும் இருக்கிறார்களோ அத்தனை தேர்வாளர்களை அக்குழுவில் பெற்றிருக்கும். கொலம்பியா மாவட்டத்திற்கு காங்கிரஸில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாதிருப்பினும் 23 ஆம் திருத்தச் சட்டப்படி தேர்வாளர் குழுவில் மூன்று இடங்கள் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கொலம்பியாவின் இடங்களை சேர்த்துத் தேர்வாளர் குழுவின் மொத்த எண்ணிக்கை 538 ஆகும். தேர்வாளர்கள் முதன் முதலில் மாநிலச் சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இப்பொழுதோ அவர்கள் மக்களால் நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்தலில் வெற்றி பெற அறுதிப் பெரும்பான்மை அதாவது 270 வாக்குகள் தேவை. கட்சி முறையின் வளர்ச்சியால் குடியரசுத் தலைவர் தேர்தல் நடைமுறையில் ஏறக்குறைய நேரடித் தேர்தலாகவே மாறிவிட்டது. இந்த தேர்வாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது எந்த கட்சி வெற்றி பெறுகிறதோ அந்தக் கட்சியின் குடியரசுத் தலைவர் வேட்பாளரின்

வெற்றி உறுதியாகி விடுகிறது. ஏனெனில் கட்சிக் கட்டுப்பாட்டின் மூலம் தேர்வாளர்கள் தங்களை எந்தக் கட்சித் தேர்தலில் நிறுத்தியதோ அந்தக் கட்சியின் குடியரசுத் தலைவர் வேட்பாளருக்கே தங்கள் வாக்குகளை அளிக்கின்றனர்.

தேர்வாளர்கள் குடியரசுத் தலைவர் தேர்தல் தினத்தன்று ஒவ்வொரு மாநிலத் தலைநகரத்திலும் கூடி தங்கள் வாக்குகளைப் பதிவு செய்கின்றனர். எந்த வேட்பாளர் தேர்வாளர் குழுவின் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுகிறாரோ அவரே வெற்றி பெறுகிறார். தேர்வாளர் குழுவின் ஆதரவைப் பெற்றவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுவதற்கில்லை. உதாரணமாக, ஆபிரகாம் லிங்கன் (1860), ஜேம்ஸ் கார்பீல்டு (1880), குரோவர் கிளீவ்லாண்டு (1884, 1892) போன்ற குடியரசுத் தலைவர்கள் எல்லாம் மக்களுடைய வாக்குகளின் பெரும்பான்மையைப் பெறவில்லை. எனினும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் காரணம், தேர்வாளர் குழுவின் பெரும்பான்மை பெற்றிருந்ததேயாகும்.

சில வேளைகளில் ஒரு வேட்பாளர் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் தேர்வாளர் குழுவின் பெரும்பான்மையைப் பெறத் தவறியதால் தேர்தலில் தோற்றுமிருக்கலாம். உதாரணமாக 1824-ஆம் ஆண்டில் ஆண்ட்ரு ஜாக்சன் என்பவர் ஜான்குயின்சி ஆடம்ஸ் என்பவரை விட 37,000க்கும் மேல் மக்களுடைய வாக்குகளைப் பெற்றிருந்தும் தேர்வாளர் குழுவின் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காததால் தோல்வியுற்றார்.

அமெரிக்க அரசியல் முறை நாட்காட்டியின் அடிப்படையில் நடைபெறுகிறது. குடியரசுத் தலைவர் தேர்தல்கள் ஒவ்வொரு லீப் வருடமும் நவம்பர் மாதத்தில் நடத்தப்படுகின்றன. தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்னரே அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சாரங்களைத் துவக்கிவிடுகின்றன. ஆரம்பக் கட்டமாக அரசியல் கட்சிகள் தங்களது தேசிய மாநாடுகளைக் கூட்டி தங்களின் குடியரசுத் தலைவர் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. மாநில அளவிலான கட்சி அமைப்புகள் தங்களுடைய குடியரசுத் தலைவர் தேர்வாளர் குழுவுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. குடியரசுத் தலைவர் தேர்வுகளுக்கான தேர்தல் நவம்பர் மாதம் முதலாம் திங்கள் கிழமைக்குப் பின் வரும் செவ்வாய்கிழமையன்று நடத்தப்படுகிறது. வாக்காளர்கள் தங்களுடைய விருப்பத்தை கட்சி சமர்ப்பிக்கும் வேட்பாளர் பட்டியலுக்கே அளிக்க வேண்டும். ஒரு கட்சியின் வேட்பாளர் பட்டியலில் தரப்பட்டுள்ள வேட்பாளர் அனைவருக்கும் சேர்த்து வாக்களிக்கும் முறையில் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படுகின்றன. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மையான வாக்காளர்களின் வாக்குகள் கிடைக்கின்றனவோ அந்தக் கட்சியின் குடியரசுத் தலைவர் வேட்பாளரே அந்த மாநிலத்தின் எல்லாத் தேர்வாளர் வாக்குகளையும் பெற்று விடுகின்றார். எனவே தேர்வாளர் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறுகிறதோ அந்தக் கட்சியின் குடியரசுத் தலைவர் வேட்பாளரின் வெற்றி நிச்சயமாகி விடுகிறது. ஏனென்றால் தேர்வாளர்கள் தங்களை நியமித்த கட்சியின் கட்டுப்பாட்டிற்கு எதிராகச் செயல்பட மாட்டார்கள் என்பதால் அந்தக் கட்சியின் குடியரசுத் தலைவர் வேட்பாளருக்கே தங்களுடைய வாக்குகளை அளிக்கின்றனர். இந்த தேர்வாளாகள் டிசமபர் மாதம் இரண்டாவது புதன்கிழமைக்குப் பிறகு வரும் முதலாம் திங்கட்கிழமையன்று மாநிலத் தலைநகரில் கூடி குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்வாளர்களின் தேர்தல் முடிந்தவுடனே, குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் யார் என்று தெரிந்து கொள்ள முடிவதால் தேர்வாளர்கள்

தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வது அல்லது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்க தாங்கள் வாக்களிக்க வேண்டியிருப்பது பெயரளவில் நடைபெறும் ஒரு செயலாகவே கருதப்படுகிறது. தேர்வாளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்து கொண்டது பற்றிய சான்றிதழ்கள் செனட் சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஜனவரி மாதம் 6ம் நாளன்று காங்கிரஸின் இணைப்புக் கூட்டத்தில் வைத்துத் தேர்வாளர்கள் அளித்த வாக்குகள் எண்ணப்படுகின்றன. பெரும்பான்மையான தேர்வாளர்களின் வாக்குகளைப் பெறுபவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். புதிய குடியரசுத் தலைவர் ஜனவரி மாதம் 20-ம் நாள் பதவிப் பிரமாணம் செய்துவைக்கப்படுகிறார். எந்த ஒரு வேட்பாளருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லையெனில் பிரதிநிதிகள் சபை கூடுதல் வாக்குகளைப் பெற்ற முதல் வாக்காளர்களில் ஒருவரை குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும். இச்செயலில் ஒவ்வொரு மாநிலமும் ஒரு வாக்குதான் அளிக்க முடியும். மேலும் அதிபர் தேர்தலை சபை முடிவு செய்ய மாநிலங்களின் மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மை கணக்கிடப்படுகிறது.

**பதவியேற்கும் உரிமை**

குடியரசுத் தலைவர் பதவியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்துவிட்டாலோ அல்லது சுகவீனமடைந்து விட்டாலோ குடியரசுத் தலைவர் பதவியில் நெருக்கடி ஏற்படுகிறது. அரசியலமைப்பு அச்சமயங்களில் குடியரசுத் துணைத்தலைவர் பணியாற்ற முடியாதவராகிவிட்ட நிலையில் காங்கிரஸ் யார் அந்தப் பதவியை ஏற்க வேண்டும் என்பது பற்றி முடிவு செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது. இதனால் இரு கேள்விகள் எழுகின்றன (1) குடியரசுத் தலைவர் பணிபுரிய முடியாதவராகி விட்டார் என்பதை தீர்மானிப்பது யார்? (2) குடியரசுத் தலைவரும் துணை அதிபரும் ஒரே சமயத்தில் இறந்துவிட்டாலோ அல்லது பதவியிலிருந்து விலகிவிட்டாலோ யார் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்க வேண்டும்? 1967 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 25ம் திருத்தச்சட்டம் இக்கேள்விகளுக்கான பதிலைத் தருகின்றது. இத்திருத்தச் சட்டத்தின்படி குடியரசுத் தலைவர் பிரதிநிதிகளின் சபையின் சபாநாயருக்கும் செனட் சபையின் தற்காலிகத் தலைவருக்கும் (President protempore) தான் பணியாற்ற முடியாதவராகிவிட்ட நிலையைத் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் துணை குடியரசுத்தலைவர், குடியரசுத் தலைவர் திரும்ப கேட்டுக் கொள்ளும் வரையிலும் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்று நடத்துவார். மேலும் அமைச்சரவையின் பெரும்பான்மை அங்கத்தினர்களோ அல்லது காங்கிரஸ் குறிப்பிட்ட ஒரு குழுவின் பெரும்பான்மையானவர்களோ குடியரசுத் தலைவரின் இயலாமையை குறிப்பிட்டு குடியரசுத் துணைத் தலைவரை குடியரசுத் தலைவர் பதவியை ஏற்குமாறு கேட்டுக் கொண்டாலும் குடியரசுத் துணைத்தலைவர் குடியரசுத் தலைவராகச் செயலாற்ற வேண்டும். 25ஆம் திருத்த சட்டப்படி குடியரசுத் துணைத்தலைவரின் பதவி காலியாகுமிடத்து கீழ்சபையின் சபாநாயகர் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்பார். சபாநாயகருக்குப்பிறகு குடியரசுத் தலைவர் பதவியை ஏற்கும் உரிமை செனட் சபையின் தற்காலிகத் தலைவருக்கும் அதன்பின் அகர வரிசைப்படி காபினெட் செயலாளர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

**பதவி விலக்க முறை :**

குடியரசுத் தலைவரை அவரது பதவிக்காலம் முடிவதற்குள் சாதாரண

முறைகளில் பதவியிலிருந்து நீக்க முடியாது. ஆனால் அரசியலமைப்பின் முதலாவது விதியில் நான்காவது பிரிவு கூறியுள்ள படி அவரை இம்பீச் மெண்ட் அல்லது குற்ற விசாரணை மூலம் கொள்ளை, தேசத்துரோகம் போன்ற பெரிய குற்றங்களுக்காகப் பதவியிலிருந்து நீக்க முடியும். பிரதிநிதிகளின் சபை குற்ற விசாரணை பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்து செனட் சபையில் விசாரணை நடத்துவதற்கான தலைவர்களையும் தேர்ந்தெடுக்கிறது. செனட் சபை குடியரசுத் தலைவரைக் குற்ற விசாரணை செய்யும் ஒரு நீதிமன்றமாகச் செயல்படுகிறது. செனட் சபை இவ்வாறு குடியரசுத் தலைவரைக் குற்ற விசாரணை செய்யும் பொழுது அந்த சபையின் கூட்டத் தொடருக்கு தலைமை நீதிபதி தலைமை தாங்குவார். செனட் சபைக்கு வந்திருக்கும் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் குடியரசுத்தலைவர் மீது குற்றத்தீர்ப்பு அளிக்கும். குற்ற விசாரணையின் மூலம் குடியரசுத் தலைவரை பதவியிலிருந்து நீக்கி பொறுப்பான வேறு எந்தப் பதவியையும் வகிக்க அவரைத் தகுதியற்றவராக ஆக்குவதைவிட வேறு எந்த ஒரு தண்டனையும் அவர் மீது சுமத்த முடியாது. 1868ஆம் ஆண்டு ஜான்சன் என்னும் குடியரசுத் தலைவர் மீது குற்ற விசாரணை நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெரும்பான்மை ஆதரவு செனட் சபையில் கிடைக்காததால் அது கைவிடப்பட்டது. அதிபர் நிக்சன் வாட்டர் கேட் ஊழலில் சிக்கிய போது பதவியை ராஜினாமா செய்வதன் மூலம் குற்ற விசாரணையிலிருந்து தப்பித்துக் கொண்டார். அதிபர் கிளிண்டன் மீதும் கொண்டு வரப்பட்டு, தோல்வியுற்றது. குற்ற விசாரணை தவிர்த்து மற்றபடி அமெரிக்க குடியரசுத்தலைவர் சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவரல்லர். அதிபர் கிளிங்டன் மீதும் குற்றத் தண்டனை சட்டம் கொண்டு வரப்பட்டு, தோல்வியுற்றது.

## 5.9 குடியரசுத்தலைவரின் அதிகாரங்கள்

அரசியலமைப்பின் முதலாவது விதியில் இரண்டு மற்றும் மூன்றாம் பிரிவுகள் குடியரசுத்தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அமெரிக்க குடியரசுத்தலைவர் ஆங்கிலேயே நாட்டு அரசின் அல்லது அரசி மற்றும் இந்திய குடியரசுத்தலைவர் போலல்லாமல் உண்மையான அதிகாரங்களைப் பெற்றுள்ளார். அவருடைய சில அதிகாரங்கள் அரசியலமைப்பிலிருந்து கிடைப்பவை. சில அதிகாரங்கள் காங்கிரஸ் இயற்றும் சட்டங்கள் மூலம் கிடைக்கின்றன அரசியல் முறை சார்ந்த பழக்க வழக்கங்களும் வழக்காறுகளும் சில அதிகாரங்களை அவருக்கு அளிக்கின்றன. மேலும் சில அதிகாரங்கள் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பிற்குக் கூறிய விளக்கங்களிலிருந்து கிடைக்கப் பெற்றவை. தேசிய மற்றும் வெளிநாட்டுச் சின்னமாகவும், கோடிக்கணக்கான அரசு அலுவலர்களை வழி நடத்திச் செல்பவராகவும். குடியரசுத்தலைவர் திகழ்கிறார். தான் சார்ந்திருந்த அரசியல் கட்சியின் தலைவராகவும், கொள்கைகளை உருவாக்குபவராகவும், நடத்திச் செல்பவராகவும், குடியரசுத்தலைவர் விளங்குகிறார். உலகிலேயே ஒரு தலைசிறந்த ஆட்சித் துறையாக அமெரிக்க குடியரசுத்தலைவர் திகழ்கிறார்.

குடியரசுத்தலைவரின் ஆட்சித்துறை, சட்டமன்றத்துறை மற்றும் நீதித்துறை சார்ந்த அதிகாரங்களை கீழ்க்கண்டவாறு விளக்கலாம். குடியரசுத்தலைவரின் ஆட்சித்துறை அதிகாரத்தை கீழ்க்காணும் தலைப்புகளாகப் பிரிக்கலாம். 1) கூட்டாட்சி அரசாங்கத்தின் நிர்வாகத்தைக் கண்காணிப்பது 2) சட்டங்களை நடைமுறைப்படுத்துவது 3) நியமனங்கள் செய்வதும் பதவி விலகச் செய்வதும் 4) மன்னிப்பு வழங்குதல் 5)

**தன்னறிவு சோதனைக் கேள்வி**
4. குடியரசுத் தலைவரின் அதிகாரங்களைப் பட்டியலிடுக.

அயல்நாட்டு காரியங்களை நடத்துவதும், ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவதும். 6) இராணுவ படைகளுக்குத் தலைமைத் தளபதியாக விளங்குவது. 7) அவசரகாலப் பணிகள்

அரசின் தலைவராக விளங்கும் குடியரசுத்தலைவர் அரசாங்கத்திற்கும் தலைவராக விளங்குகிறார். மேலும், பல பணிகளை அமெரிக்க குடியரசுத்தலைவர் மேற்கொள்கிறார். உதாரணமாக வெளிநாட்டு தலைவர்களை வரவேற்பதும், அரசு விருந்தில் முக்கியமானவராக பங்கு கொள்ளுதல், முக்கியமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல் போன்ற சடங்கு முறைக்குட்பட்ட பணிகளையும் குடியரசுத்தலைவர் மேற்கொள்கிறார். குறிப்பாக, அவசர காலங்களில் மக்கள் அனைவரும் குடியரசுத்தலைவரைத் தான் எதிர் நோக்குகின்றார்கள்.

அரசியலமைப்புச் சட்டங்கள் சரியாக அமுல்படுத்தப்படுகின்றதோ என்பதைக் கவனிக்கும் அதிகாரத்தை குடியரசுத்தலைவருக்கு வழங்கியுள்ளது. மேலும் குடியரசுத்தலைவர் பதவிப் பிரமாணம் செய்யும் போது அரசியலமைப்பைக் கண்காணித்து காப்பாற்றி நிலைநிறுத்துவதாக உறுதிமொழி செய்துகொள்கிறார். எனவே சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் குடியரசுத்தலைவருக்கு அதிக பங்கு உண்டு என்று எண்ணத் தோன்றும். ஆனால் உண்மையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணியை நீதித்துறையும் கூட்டாட்சி மாவட்ட அட்டர்னியும், கூட்டாட்சி நீதிமன்றத்தின் மார்ஷலும் கவனித்துக் கொள்கிறார். ஆனால் குடியரசுத்தலைவர் எப்போது வேண்டுமானாலும் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி எல்லா சட்டங்களையும் அமல்படுத்தலாம். எனவே குடியரசுத்தலைவர் சட்டங்கள் செவ்வனே அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க மட்டும் செய்கிறார், கூட்டாட்சி நிர்வாகத் தலைவர் என்ற முறையில் உள்நாட்டுக் குழப்பங்களை சமாளிப்பதற்கும் குடியரசுத்தலைவருக்கு அதிகாரமுண்டு.

குடியரசுத்தலைவரின நியமன அதிகாரங்களும், பதவி விலக்கும் அதிகாரமும்

குடியரசுத்தலைவரின் அதிகாரங்களில் நியமனம் செய்யும் அதிகாரம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதன் விளைவாகக் கூட்டாட்சி அலுவலர்களை குடியரசுத்தலைவர் தன் அதிகாரத்திற்குட்படுத்தியுள்ளார். தன் கொள்கைக்கு நியமனம் செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தி குடியரசுத்தலைவர் ஆதரவு தேடுகின்றார். அரசியலமைப்பு விதி 2 இன் படி குடியரசுத்தலைவர் செனட் அவையின் ஆலோசனை மற்றும் அங்கீகாரத்துடன் அயல் நாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்கள், ஆலோசகர்கள், நீதிபதிகள் மற்றும் உயர் அதிகாரிகளை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

காங்கிரஸின் சட்டப்படி நீதிபதிகளைத் தவிர மற்ற அதிகாரிகளை பதவி நீக்கம் செய்ய குடியரசுத்தலைவருக்கு அதிகாரமுண்டு. ஆனால் ஜாக்சன் பதவிகாலத்தில், காங்கிரசுக்கும் குடியரசுத்தலைவருக்கும் பதவி நீக்கம் செய்வதில் கருத்து வேறுபாடு தோன்றியதன் விளைவாக தற்போது அதிபர் ஒரு அதிகாரியைப் பதவியிலிருந்து விலக்குமுன் செனட்சபையின் அனுமதியைப் பெறவேண்டும். இச்சட்டம் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சட்டத்தை புதுப்பித்துள்ளது என்று கூறலாம். அச்சட்டத்தின்படி, அதாவது 1876-ஆம் ஆண்டு சட்டத்தின்படி, முதல்நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, தபால்துறை அதிகாரிகளை செனட் அவையின் அனுமதியின் பேரில் தான் பதவி விலக்க முடியும். 1926-இல் நடைபெற்ற வழக்கில் (Hyers Vs United States) நீதிமன்றம் 1876-ம் ஆண்டுச் சட்டம் அரசியலமைப்புக் புறம்பானது என்று தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பின்படி பதவி நீக்கம் செய்வதற்குள்ள அதிகாரம் நியமனம் செய்வதற்குள்ள அதிகாரத்திலிருந்து பெறப்பட்டதல்ல: சட்டங்களை

அமல்படுத்தும் தலைமை ஆட்சித்துறைத் தலைவர் என்ற முறையில் குடியரசுத்தலைவர் கூட்டாட்சி அதிகாரிகளை பதவி நீக்கம் செய்யலாம் என்று கூறியது. 1935-ஆம் ஆண்டு நடைபெற்ற வழக்கில் நீதிமன்றம், ஆட்சித்துறை அதிகாரிகளை குடியரசுத்தலைவர் பதவி நீக்க அதிகாரம் கட்டுப்பாடு ஆணையாளர்களை (Regulatory Commissioners) பதவி விலக்கக்கூடாது என்று கருத்து தெரிவித்தது.

**போர் மற்றும் அயல்நாட்டு விவகாரங்களில் உள்ள குடியரசுத்தலைவரின் அதிகாரங்கள்**

அரசியலமைப்பு இத்துறைகளில் அதிகமான அதிகாரங்களை குடியரசுத்தலைவருக்கு அளித்திருந்த போதும் முழுமையானவைகள் அல்ல. குடியரசுத்தலைவர் நாட்டின் இராணுவப் படைகளுக்குத் தலைமை ·தளபதியாக விளங்குவதன் மூலம் முப்படைகளையும் அவர் விருப்பத்திற்கு பயன்படுத்தலாம். ஆனால், போர்ப் பிரகடனம் செய்யும் அதிகாரம் காங்கிரஸிற்கு மட்டும் தான் உண்டு. குடியரசுத்தலைவர் வெளி நாடுகளுடன் ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும், வெளிநாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கு செனட் அவை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தனது இசைவை அளிக்க வேண்டும். மேலும் உடன்படிக்கை நிதி சம்பந்தப்பட்டதாக இருப்பின் பிரதிநிதிகள் அவையின் அனுமதியையும் அது பெற வேண்டும்.

எனவே, அரசியலமைப்புப்படி குடியரசுத்தலைவரின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும், அமெரிக்க நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவது இவருடைய பொறுப்பாகும்.

**உடன்படிக்கை செய்து கொள்ளும் அதிகாரம்**

வெளிநாட்டுத் தொடர்புகளைத் பொறுத்தவரை குடியரசுத்தலைவரின் முக்கிய பங்கு உடன்படிக்கை செய்துகொள்ளும் அதிகாரத்தைப் பெற்றிருப்பதேயாகும். அமெரிக்க அரசியலமைப்பின்படி குடியரசுத்தலைவர் வெளிநாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். ஆனால், அவ்வுடன்படிக்கைகள் செனட் அவையின் அங்கீகாரம் பெற்றபின் தான் நடைமுறைக்கு வருகின்றன. எனவே சில சமயங்களில் குடியரசுத்தலைவருக்கும் செனட்டுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றக் காரணமாயிருக்கிறது. இதைத் தவிர்க்கும் முறையில் குடியரசுத்தலைவர் வெளிநாடுகளுடன் ஆட்சித்துறை உத்தரவு, ஆட்சித்துறை ஒப்பந்தம் போன்ற பெயர்களின் உடன்படிக்கைகளைச் செய்து கொள்கிறார். இவைகளுக்கு செனட் அவையின் அனுமதி தேவையில்லை.

**சட்டமன்றம் சாா்ந்த அதிகாரங்கள்**

அமெரிக்க குடியரசுத்தலைவர் நாட்டின் தலைமை ஆட்சியாளராக மட்டும் விளங்காமல் கணிசமான சட்டமன்ற அதிகாரங்களையும் பெற்று விளங்குகிறார். போட்டர் என்பவர் குடியரசுத்தலைவரை அரசியலமைப்பு முறையில் தலைமை சட்டமியற்றுபவர் என்று குறிப்பிடுகிறார். இங்கிலாந்து மற்றும் இந்தியத் தலைமை அமைச்சர்களைப் போலல்லாமல் அமெரிக்க சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருக்கும் கட்சியின் தலைவரன்று அவர். சட்டமன்றக் கூட்டத் தொடர்களைக் கூட்டவோ, ஒத்திப் போடவோ அல்லது அவையைக் கலைக்கவோ அதிபருக்கு அதிகாரம் உரிமையில்லை. இருப்பினும் குடியரசுத்தலைவரிடம் அளிக்கப்பட்டுள்ள மற்ற சட்டமன்றத்தைச் சார்ந்த அதிகாரிகளைப் பார்க்கும் போது அவரை ஒரு முக்கியமான சட்டமியற்றுபவர் என்றே கூற வேண்டியுள்ளது.

காங்கிரஸ் இயற்றும் ஒவ்வோரு சட்டமுன்வரைவும் குடியரசுத்தலைவரின்

கையெழுத்தையும் சம்மதத்தையும் பெற்ற பிறகே சட்டமாகிறது. ஒரு சட்டமுன்வரைவு மீது குடியரசுத்தலைவர் மூன்று வழிகளில் தனது மறுப்பு உரிமையினைப் பயன்படுத்துகிறார்.

1. குடியரசுத்தலைவர் தன் இசைவை ஒரு சட்டமுன்வரைவுக்கு மறுப்பு ஏதுமின்றி அளிக்கலாம். இவ்வாறு குடியரசுத்தலைவரின் இசைவு ஒரு சட்டமுன்வரைவைச் சட்டமாக்கி விடுகிறது.
2. சட்டமுன்வரைவில் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றிய தனது பரிந்துரைகளுடனோ அல்லது பரிந்துரைகளின்றியோ அந்த சட்டமுன்வரைவை அவைக்குத் திருப்பி அனுப்பிவிடலாம். இவ்வாறு திருப்பி அனுப்பிவிட்டதால் காங்கிரஸ் அந்த சட்டமுன்வரவை தனது ஒவ்வொரு அவையிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் திரும்பவும் நிறைவேற்றினால் குடியரசுத்தலைவர் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமலே அந்த சட்டமுன்வரைவு சட்டமாகிவிடும்.
3. குடியரசுத்தலைவர் ஒரு சட்டமுன்வரைவை தன்னிடமே நிறுத்தி வைத்து கொள்ளலாம். இவ்வாறு நிறுத்தி வைக்கும் பொழுது காங்கிரஸின் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்தால் 10 நாட்களுக்குப் பிறகு குடியரசுத்தலைவரின் கையெழுத்துப் பெறாமலேயே அந்த சட்டமுன்வரைவு சட்டமாகிவிடும். ஆனால் 10 நாட்களுக்குள் சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவடைந்துவிட்டால் அந்த சட்டமுன்வரைவு சட்டமாக வாய்ப்பில்லாமல் போய்விடும். குடியரசுத்தலைவர் காங்கிரசுக்கு செய்திகள் அனுப்பவும், தாம்விரும்பும் சில நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவும் உரிமை பெற்றுள்ளார். காங்கிரசின் சிறப்புக் கூட்டத்தொடரினைக் கூட்டவும் அவருக்கு அதிகாரமுண்டு.

**ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்கள்**

குடியரசுத் தலைவர் நாட்டிற்கும் நிர்வாகத்திற்கும் தலைவராவார். கூட்டாட்சியின் சட்டங்களையும் வெளிநாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கைகளையும் நாடு முழுவதும் நீதிமன்ற முடிவுகளை அமல்படுத்தவும் குடியரசுத் தலைவர் கடமை பெற்றுள்ளார். நாட்டின் சட்டங்களுக்குப் பணிதலைப் பெற, தேவைப்பட்டால் வலிமையைப் பிரயோகிக்கவும் அதிபருக்கு உரிமை உண்டு. குடியரசுத் தலைவர் நாட்டின் ராணுவப் படைகளுக்குத் தலைமை தளபதியாக விளங்குகிறார். இப்பொறுப்பின் மூலமாக குடியரசுத் தலைவர் முப்படைகளிலும் முக்கியமான உயர்பதவிகளுக்கு செனட் சபையின் ஒப்புதலுடன் பதவி நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

குடியரசுத் தலைவர் வெளிநாடுகளுடன் ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும், வெளிநாட்டுத் தூதுவர்களை நியமிக்கவும் உரிமை பெற்றுள்ளார். இவர் வெளிநாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கு செனட் சபை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தனது இசைவை அளிக்க வேண்டும். அமெரிக்க நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதும் இவருடைய பொறுப்பேயாகும்.

குடியரசுத் தலைவர் நிர்வாக உயர் அலுவலர்களையும் கூட்டாட்சிக்குழு நீதிமன்றத்தின் நீதிபதிகளையும் நியமிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். ஆனால் இவர் செய்யும் பதவி நியமனம் யாவும் செனட் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் "செனட்டரின் அன்புரிமைக் கோட்பாட்டின்" மூலம் பதவி நியமன அதிகாரத்தைப்

பயன்படுத்துவதில் குடியரசுத் தலைவருக்கு எந்தவித சிரமும் ஏற்படுவதில்லை. செனட்டரின் அன்புரிமைக் கோட்பாட்டின் மூலம் எந்த மாநிலத்தில் பதவி நியமனம் நடைபெற வேண்டுமோ அந்த மாநிலத்திற்கான செனட்டர்கள் குடியரசுத் தலைவர் செய்யும் பதவி நியமனத்திற்கு ஆதரவு அளித்துவிட்டால் செனட் சபை எந்த ஒரு எதிர்ப்பும் தெரிவிப்பதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக குடியரசுத் தலைவருக்கு கூட்டாட்சி நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதிகளையும் பொதுப்பணி விதிமுறைகளின் படி நியமிக்கப்பட்டோரையும் தவிர்த்து மற்ற பணியாளர்களைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

**சட்டமன்றம் சார்ந்த அதிகாரங்கள் :**

இங்கிலாந்து மற்றும் இந்தியத்தலைமை அமைச்சர்களைப் போலல்லாமல் அமெரிக்க குடியரசுத் தலைவர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருக்கும் கட்சியின் தலைவரல்லர். சட்டமன்றக் கூட்டத் தொடர்களைக் கூட்டவோ, ஒத்திப் போடவோ அல்லது சபையைக் கலைக்கவோ குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் இல்லை. சட்டமன்றத்தில் மசோதாக்களைத் துவக்கவும் அவருக்கு உரிமையில்லை. இருப்பினும் குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்பட்டுள்ள மற்ற சட்டமன்றத்துறை சார்ந்த அதிகாரங்களைப் பார்க்கும் பொழுது அவரை ஒரு "பிரதான சட்டமியற்றுனர்" என்றே கூற வேண்டியுள்ளது.

காங்கிரஸ் இயற்றும் ஒவ்வொரு மசோதாவும் குடியரசுத் தலைவரின் கையெழுத்தையும் சம்மதத்தையும் பெற்ற பிறகே சட்டமாகிறது. ஒரு மசோதா மீது குடியரசுத் தலைவர் மூன்று வழிகளில் தனது மறுப்பு உரிமையினைப் பயன்படுத்துகிறார். 1) தனது இசைவை ஒரு மசோதாவுக்கு மறுப்பு எதுவுமின்றி அளிக்கலாம். இவ்வாறு இசைவு அளிப்பின் அம்மசோதா சட்டமாகி விடுகிறது. 2) மசோதாவில் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றிய தனது சிபாரிசுகளுடனோ அல்லது சிபாரிசுகளின்றியோ அந்த மசோதாவை தனது ஒவ்வொரு சபையிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் திரும்பவும் நிறைவேற்றினால் குடியரசுத் தலைவரின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமலேயே அந்த மசோதா சட்டமாகிவிடும். 3) குடியரசுத் தலைவர் அந்த மசோதாவை தன்னிடமே நிறுத்தி வைத்துக் கொள்ளலாம். இவ்வாறு நிறுத்தி வைக்கும் பொழுது காங்கிரஸின் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்தால் 10 நாட்களுக்குப் பிறகு குடியரசுத் தலைவரின் கையெழுத்தைப் பெறாமலேயே அந்த மசோதா சட்டாகிவிடும். ஆனால் அந்த 10 நாட்களுக்குள் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவடைந்து விட்டால் அந்த மசோதா சட்டமாக வாய்ப்பேயில்லாமல் போய்விடும். இவ்வாறு, சட்டமன்றக் கூட்டத்தொடரின் கடைசி பத்து நாட்களிலும் குடியரசுத் தலைவர் மசோதாக்கள் மீது வரம்பிலா மறுப்பாணை அதிகாரத்தை பிரயோகிக்க முடிகிறது. இவ்வாறு குடியரசுத் தலைவர் பெற்றுள்ள மறுப்பாணை அதிகாரம், அவர் சட்டமியற்றலில் பங்கு கொள்ள வாய்ப்பு அளிக்கிறது. குடியரசுத் தலைவர் காங்கிரசுக்கு செய்திகள் அனுப்பவும் தாம் விரும்பும் சில நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவும் உரிமை பெற்றுள்ளார். குடியரசுத் தலைவர் இவ்வாறு அனுப்பி வைக்கும் செய்திகள் நாட்டின் உயர் அதிகாரியிடமிருந்து வரும் செய்திகள் என்பதால் அவைகளை காங்கிரஸ் எளிதில் புறக்கணித்துவிட முடியாது. குடியரசுத் தலைவர் செய்திகள் மீது நாட்டு மக்கள் எல்லோருக்கும் ஆர்வம் ஏற்படுவதால் காங்கிரஸ் அவைகளுக்குத் தன் மதிப்புக் கொடுக்கத்தான் செய்கின்றது.

குடியரசுத் தலைவர் காங்கிரஸின் சிறப்புக் கூட்டத்தொடரினைக் கூட்டுவிக்க அதிகாரம் பெற்றுள்ளார். இவர் சிறப்புக் கூட்டம் கூட்டுவிக்கப் பெற்றுள்ள உரிமையைக் கொண்டு பயமுறுத்தி காங்கிரஸின் சாதாரணக் கூட்டத் தொடரை நீடிக்கச் செய்து, சில வேளைகளில் சட்டங்களை இயற்றி முடிக்கச் செய்வதும் உண்டு.

**நிதித்துறை சார்ந்த அதிகாரங்கள்**

நிதித்துறை சார்ந்த காரியங்களிலும் குடியரசுத் தலைவருக்கு ஏராளமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குடியரசுத் தலைவரின் நேரடிப் பார்வையின் கீழ்தான் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. அந்த வரவு செலவுதிட்டத்தை அமல்படுத்தவும் இவரே பொறுப்பேற்றிருக்கிறார். வரவு செலவுத் திட்டத்தைத் திருத்த காங்கிரசுக்கு சகல உரிமைகளும் இருந்த போதிலும் பொதுவாகச் சமர்ப்பிக்கப்பட்ட அதே வடிவத்திலேயே காங்கிரஸ் வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றி விடுகிறது. இவ்வாறு குடியரசுத் தலைவர் பொது நிதியின் மேலாண்மைக்குப் பொறுப்பாளியாகக் கருதப்படுகிறார்.

**நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் :**

நீதித்துறையிலும் குடியரசுத் தலைவர் மன்னிப்பு வழங்கவும் தண்டனையை ஒத்திப் போடவும் அல்லது நிராகரிக்கவும் உரிமை பெற்றுள்ளார். இவ்வுரிமையைப் பொறுத்தமட்டில் கூட்டாட்சிச் சட்டங்களுக்கு எதிராகச் செய்த குற்றங்கள் மீது வழங்கப்பட்ட தண்டனைகளை ரத்து செய்யவோ அல்லது ஒத்திப்போடவோ முடியும். தவிர, மாநில அரசுகளின் சட்டங்களுக்கு எதிராகச் செய்த குற்றங்கள் மீது வழங்கப்பட்ட தண்டனைகளை ரத்து செய்யவோ அல்லது ஒத்திப்போடவோ இவருக்கு அதிகாரம் கிடையாது. மேலும் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளையும் பதவியில் நியமனம் செய்யும் அதிகாரம் இவருக்கு அளிக்கப்படுகிறது.

அமெரிக்க குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் ஹென்றி மெயினுடைய "அமெரிக்க குடியரசுத் தலைவர் இங்கிலாந்து அரசரைப் போலல்லாமல் உண்மையிலேயே ஆட்சி செய்கிறார்" என்னும் கூற்றினை நிரூபிப்பதாய் உள்ளது. இங்கிலாந்து அரசர் அல்லது அரசி நாட்டின் பெயரளவுத் தலைவராக இருக்கிறார். அவருடைய அதிகாரங்களையெல்லாம் நடைமுறையில் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடைய கேபினட் பயன்படுத்துகின்றது. அமெரிக்காவில் குடியரசுத் தலைவருக்கு உதவியாக ஒரு கேபினட் உள்ளது. ஆனால் இங்கிலாந்து அரசர் கேபினட்டின் ஆலோசனைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருந்தது போல அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அவருடைய கேபினட்டின் ஆலோசனைப்படி செயல்படுவதில்லை. இதிலிருந்து அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பாராளுமன்ற முறையிலுள்ள பெயரளவிலான தலைவர்கள் போலல்லாமல் உண்மையான அதிகாரங்களைப் பெற்றுள்ளார் என்பது புலனாகும்.

## 5.10 குடியரசுத் துணைத் தலைவர் (Vice President)

அரசியலமைப்பு ஒரு குடியரசுத் துணைத் தலைவர் பதவியையும் ஏற்படுத்தியிருக்கிறது. குடியரசுத் துணைத் தலைவரும் அதிபர் பெற்றிருக்க வேண்டிய தகுதிகளையே பெற்றிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்குக் காரணமென்னவெனில் குடியரசுத் தலைவர் இறந்துவிட்டாலோ அல்லது பதவியை ராஜினாமா செய்து விட்டாலோ அல்லது பதவியிலிருந்து குற்ற விசாரணை மூலம் நீக்கப்பட்டு விட்டாலோ அவருடைய பதவியை குடியரசுத் துணைத் தலைவர் ஏற்று

நடத்த வேண்டியிருக்கிறது. குடியரசுத் துணைத் தலைவரும் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொழுதே அதே முறைப்படியே தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்வாளர்கள் குடியரசுத் தலைவர் வேட்பாளருக்கு ஒரு வாக்கு, குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளருக்கு ஒரு வாக்கு என்னும் வகையில் இரண்டு வாக்குகளை அளிக்கின்றார். அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றி பெறுகிறார். எந்த ஒரு வேட்பாளருக்கும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லையென்றால் செனட் சபை கூடுதல் வாக்குகளை பெற்ற இரண்டு வேட்பாளர்களில் ஒருவரைக் குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறது. குடியரசுத் துணைத் தலைவருடைய முக்கிய பணி செனட் சபையின் கூட்டத் தொடர்களுக்குத் தலைமை தாங்குவதாகும். தனது பதவியின் காரணமாக குடியரசுத் துணைத் தலைவர் செனட் சபைக்குத் தலைவராகின்றார். செனட் சபையின் ஒரு அங்கத்தினரல்ல. ஆனால் அவருக்கு முடிவு செய்யும் வாக்கினை அளிக்கும் உரிமை உண்டு. துணைத்தலைவர் குடியரசுத் தலைவர் இல்லாவிடத்து அவரது பணிகளைச் செய்கிறார். குடியரசுத் தலைவருடைய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பே காலியாகுமானால் துணைத் தலைவர் மீதியிருக்கும் காலத்திற்கு குடியரசுத் தலைவராகச் செயல்படுகிறார். அமெரிக்க அரசியல் முறையில் குடியரசுத் துணைத் தலைவர் பதவி வகிக்க செல்வாக்குடைய ஒரு பதவியாக விளங்கவில்லை.

## 5.11 அமைச்சரவையும் நிர்வாகத் துறைகளும் :

குடியரசுத் தலைவர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் அவருக்கு ஆலோசனை கூறுவதற்கென ஒரு அமைச்சரவையும் ஏற்படுத்திக்கொள்ள அமெரிக்க அரசியலமைப்பு இடமளிக்கவில்லை. இருப்பினும் வழக்காற்றின் அடிப்படையில் ஒரு அமைச்சரவை வளர்ந்து நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. குடியரசுத் தலைவர் நியமிக்கும் பல்வேறு துறைகளின் தலைவர்களே இன்று அமைச்சரவையாகச் செயல்படுகின்றனர். துறைத் தலைவர்களை குடியரசுத் தலைவர் நியமித்தாலும் செனட் சபையும் அவர்களுடைய நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றுள்ளது. சாதாரணமாக செனட் சபை இந்த நியமனங்களுக்கு ஒப்புதல் அளிப்பது தான் வழக்கம். பொதுவாக இந்த தலைவர்களை தனது கட்சியிலிருந்தே குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கிறார். அமைச்சரவையின் அங்கத்தினர்கள் செயலாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் காங்கிரஸின் அங்கத்தினரல்லர். காங்கிரசுக்கு இவர்கள் பொறுப்புடையவர்களுமல்லர். இவர்கள் பதவியை ராஜினாமா செய்யலாம் அல்லது குடியரசுத் தலைவர் இவர்களை தனது விருப்பப்படி பதவியிலிருந்து நீக்கி விடவும் செய்யலாம். இங்கிலாந்து நாட்டு அமைச்சரவை உண்மையான அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றது. அமெரிக்க அமைச்சரவையின் ஆலோசனைகள் குடியரசுத் தலைவரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. இதை நிருபிக்க முன்னர் நடந்த ஒரு சம்பத்தை கூறலாம். லிங்கன் குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில் ஏழு அங்கத்தினர்களைக் கொண்ட அவருடைய அமைச்சரவை ஒரு முக்கியமான காரியத்தின் மீது தீர்மானம் எடுக்க வேண்டியிருந்தது. அமைச்சரவை கூட்டத்தில் அந்தக் காரியத்தின் மீது வாக்கெடுக்கப்பட்ட போது அங்கத்தினர் ஏழு பேருமே குடியரசுத் தலைவர் கருத்துக்கு எதிராக வாக்களித்தனர். இருப்பினும் அமைச்சரவையின் முடிவை அறிவித்த லிங்கன் 7 எதிர்ப்பு வாக்குகளும் ஒரு ஆதரவு வாக்கும் அளிக்கப்பட்டுள்ளன. எனவே ஒரு ஆதரவு வாக்குக்கே வெற்றி எனக்கூறி தனது முடிவே இறுதி முடிவு என்று சொன்னராம்.

இதிலிருந்து அமைச்சரவை எந்த அளவுக்கு குடியரசுத் தலைவருக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுகிறது என்ற உண்மை விளங்கும். அமைச்சரவை அங்கத்தினர்கள் காங்கிரஸின் கூட்டத் தொடர்களில் பங்கு கொள்வதில்லை. ஆனால் காங்கிரஸின் கமிட்டிகளுக்கு முன்னால் தோன்றி சில சட்ட வரைவுகள் மீது குடியரசுத் தலைவர் கொண்டுள்ள கருத்துக்களை விளக்கவும் நிர்வாகத் துறையின் செயல்களை விளக்கவும் அவர்கள் அழைக்கப்படலாம். அமைச்சரவையின் அங்கத்தினர்கள் பல்வேறு துறைகளுக்கும் தலைமை தாங்கும் முதன்மையான அலுவலர்களாவார். தற்பொழுது அங்கு 11 துறைகள் காணப்படுகின்றன. அவைகளைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

**1. அரசுத்துறை (State Department)** : இது 1759ம் ஆண்டு நிறுவப்பட்டது. இது அரசுச் செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ளது. இச்செயலாளர் அமைச்சரவை அங்கத்தினர்களின் வரிசையில் முதலிடம் பெற்றள்ளார். இவர் அமைச்சரவை கூட்டத் தொடரில் அதிபருக்கு வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். வெளிநாட்டுப் பணிக்கு இவரே தலைமை தருகிறார்.

**2. கருவூலத் துறை** : இது 1789ல் ஏற்படுத்தப்பட்டது. இத்துறைத் தலைவர் கருவூலச் செயலாளர் ஆவார். கூட்டாட்சி அரசாங்கத்தில் விதிக்கப்பட்ட வரிகளை வசூலிப்பதும் அவைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதும் இத்துறையின் முக்கிய கடமையாகும். ஒப்பந்த அல்லது கடன் பத்திரங்கள் மற்றும் நாணயம் முதலியவைகளை அச்சிடும் செயலை மேற்பார்வை செய்தலும் கருவூலச் செயலரின் பணியேயாகும்.

**3. நீதித்துறை** : இத்துறை 1870ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அட்டர்னி ஜெனரல் தான் இத்துறையின் தலைவராவார். இவர் குடியரசுத் தலைவர், காங்கிரஸ் மற்றும் மற்ற துறைகளின் தலைவர்கள் ஆகியோர்களுக்கு சட்ட ஆலோசகராகச் செயல்படுகின்றார். குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர்ந்து கூட்டாட்சி அரசாங்கத்தின் சட்டங்களை மீறியதற்கான தண்டனைகளை, அவர்களுக்கு வாங்கித் தருவதும் இவருடைய கடமையாகும்.

**4. தபால் அலுவலகத் துறை** : இது 1792 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் இத்துறையில் தலைவராவார். தபால் பட்டுவாடா செய்வதை மேற்பார்வை செய்தலே இவரது முக்கிய பணியாகும்.

**5. உள்நாட்டு விவகாரத்துறை** : இத்துறை 1849ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. உள்நாட்டு விவாகரத்துறைச் செயலாளர் இத்துறையின் தலைவராகச் செயல்படுகிறார். ஹவாய், அலாஸ்கா, போர்டோ ரிக்கா போன்ற பகுதிகளின் நிர்வாகம், சுகாதாரம், கல்வி, பொது நிலங்கள் விற்பனை போன்ற காரியங்களை இத்துறை கவனிக்கிறது.

**6. விவசாயத்துறை** : இத்துறை 1889 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. விவசாயிகளுக்கு உதவுவதற்கென ஆராய்ச்சி மேற்கொள்வதே இத்துறையின் முக்கிய பணியாகும். உணவு, மருந்து போன்றவை சம்பந்தப்பட்ட கூட்டாட்சி அரசாங்கச் சட்டங்களை அமல்படுத்துவதும் இத்துறையின் கடமையாகும்.

**7. வர்த்தகத்துறை** : இத்துறை 1903 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. புள்ளி விவரம், வெளிநாட்டு வர்த்தகம், வாங்கும் பொருட்களுக்கான சேதாரத்தை நிர்ணயிக்கும் சோதனைச் சாலைகளை நிர்வகித்தல், தரமான அளவுகளைத் தீர்மானித்தல் போன்ற செயல்களுக்கு இத்துறை பொறுப்பேற்றிருக்கிறது.

**8. தொழிலாளர் துறை** : இத்துறை 1913 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இத்துறையின் முக்கிய பணி அமெரிக்காவில் கூலி வேலை செய்வோரது நலனை

மேம்படுத்தி பாதுகாத்தலாகும்.

9. பாதுகாப்புத்துறை : இது 1947 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தரைப்படை, கடல்படை, ஆகாயப்படை சம்பந்தப்பட்ட மூன்று துறைகளுமே பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. இத்துறையின் தலைவர் பாதுகாப்புச் செயலாளராவார்.

10. சுகாதாரம் மற்றும் கல்வித்துறை : இத்துறை பொது மக்களுடைய பொது நலன், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை முன்னேற்றும் பணியை மேற்கொண்டுள்ளது.

11. வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை : மக்களின் வீட்டு வசதிகளையும் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய பிரச்சனைகளையும் தீர்த்து வைக்க இத்துறை உதவுகிறது.

## 5.12 முக்கிய வார்த்தைகள்

சமநிலைகளும் தடைகளும் - தேர்வாளர் குழு - தேர்வாளர் - சமயலறை அமைச்சரவை - குற்றத் தண்டனைச் சட்டம் - முழுமையான மறுப்பாணை.

## 5.13 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

| | | |
|---|---|---|
| கேள்வி எண் 1 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 5:2ல் அறிக |
| கேள்வி எண் 2 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 5:3ல் அறிக |
| கேள்வி எண் 3 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 5:6ல் அறிக |
| கேள்வி எண் 4 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 5:9ல் அறிக |

## 5.14 பார்வை நூல்கள்


1. S.V. Monsma, **American Politics - A system Approach,** dryden, 1973.
2. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.
3. R.C. Macridis and R.E. Ward, **Modern Political Systems : Europe and Asia,** 2nd Edn. Englewood Clifs NJ, Prentice Hall, 1968.
4. H.G. Nicolas, **The Nature of American Politics,** 2nd edn., Oxford, The Clarendon Press, 1986.
5. F.A. Ogg and Zink, **Modern Foreign Governments,** New York, Macmillan, 1964.


## 5.15 மாதிரி வினாக்கள்

1. அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகளை விளக்குக.
2. அமெரிக்க அரசியலமைப்பைத் திருத்தும் முறையை விவரிக்கவும்.
3. அமெரிக்க அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பங்கீட்டு முறையை விளக்குக.
4. அமெரிக்க குடியரசுத் தலைவரின் தேர்தல் முறையை விளக்குக.
5. அமெரிக்க குடியரசுத் தலைவரின் அதிகாரங்களையும், நிலையையும் இங்கிலாந்து தலைமை அமைச்சரின் அதிகாரங்களுடனும் நிலையுடனும் ஒப்பிடுக.

# அலகு - 6

# அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டமன்றம் - காங்கிரசு — தலைமை நீதிமன்றம், அரசியல் கட்சிகள்

**முன்னுரை**

அமெரிக்க ஐக்கிய நாட்டின் சட்டமன்றம் காங்கிரசு எனப்படும். இது பிரதிநிதிகள் அவை, செனட் என இரு அவைகள் கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்களாட்சியில் ஒவ்வொரு இரண்டு ஆண்டும் பிரதிநிதிகள் அவைக்கும் செனட் அவைக்கும் தேர்தல் நடைபெறும். ஒவ்வொரு நான்கு ஆண்டும் குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெறும். எனவே மக்களின் எண்ணங்களுக்கேற்பத்தான் அரசாங்கங்கள் ஏற்பட முடியும். அமெரிக்க சட்டமன்றத்தின் மேலவையான செனட் அவை உலகிலேயே அதிக அதிகாரம் வாய்ந்த மேலவை. சட்டமியற்றுவது நுணுக்கமான குழுக்களால் ஆய்வு செய்த பினனர்தான் நடைபெறும். மற்றொன்று நீதித்துறை ஆகும். அரசியலமைப்பு இன்னவென்று நிர்ணயிப்பதே நீதிமன்றம்தான் என்று கூறுவர். அந்தளவிற்கு அதிகாரம் வாய்ந்தது நீதித்துறை. அரசியலமைப்பின் காவலனாக, அரசியலமைப்பிற்கு புறம்பான சட்டங்களையும், நிர்வாகச் செயல்களையும் செல்லாது என்று கூறும் நீதிப்புனராய்வு அதிகாரம் கொண்டது. அரசியல் கட்சிமுறை, இருகட்சி முறையாகும். அரசியல் கட்சி பற்றியும் தன்னலக்குழுக்கள் பற்றியும் இப்பாடப் பிரிவில் படிப்போம்.

**நோக்கங்கள்**

அமெரிக்க அரசியலமைப்பின் சட்டமன்றம், அதன் ஈரவைகள் பற்றிப் படிப்பது

செனட் சபை அதிகாரமுள்ள அவை எப்படி என்பதை விவரித்தல்

தலைமை நீதிமன்றம் மற்றும் நீதிப்புனராய்வு அதிகாரத்தைத் தெரிந்து கொள்ளுதல்

கட்சிமுறை, தன்னலக்குழுக்கள் ஆகியன பற்றித் தெரிந்து கொள்தல்

**வடிவமைப்பு**

காங்கிரஸ்

பிரதிநிதிகள் சபை

செனட் சபை

சட்டமியற்றும் முறை

குழு முறை

நீதித்துறை

தலைமை நீதிமன்றம்

நீதிப்புனராய்வு

கட்சி முறை

தன்னலக்குழுக்கள்

அதிகார வர்க்கம்

## 6.1 காங்கிரஸ் (Congress) :

செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை என்ற இரு சபைகளைக் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டமன்றமாகிய காங்கிரசை அரசியலமைப்பின் முதலாவது விதி உருவாக்கி இருக்கின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பின் சட்டமியற்றும் அதிகாரங்கள் யாவற்றையும் காங்கிரஸ் என்று அழைக்கப்படும் இரு

சபைச் சட்டமன்றம் ஒன்றிடம் அளித்துள்ளது. இச்சட்டமன்றத்தின் மேல் சபை செனட் சபை என்றும் கீழ்சபை பிரதிநிதிகள் சபை என்றும் அழைக்கப்படுகின்றன. செனட் சபை அமெரிக்க கூட்டாட்சியில் உள்ள மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. இரு அவைகளும் சட்டமியற்றுவதில் கொள்கையிலும் நடைமுறையிலும் சம அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இருப்பினும் செனட் சபை பெற்றிருக்கும் சில சிறப்பு சலுகைகள் அச்சபையின் அந்தஸ்த்தை பிரதிநிதிகளின் சபைக்கும் மேலாக உயர்த்தியுள்ளது. இரு மன்றங்களும் பெற்றுள்ள அதிகாரங்களையும் அவைகளின் அமைப்பு முறைகளையும் பார்த்தால் செனட் சபை கீழவையை விட உயர்ந்த நிலையில் இருப்பது மட்டுமில்லாமல் உலகிலுள்ள இரண்டாம் அவைகளிலெல்லாம் கூடுதல் பலம் பொருந்திய ஒரு சபையாக விளங்குவதைக் காணலாம்.

## 6.2 பிரதிநிதிகள் சபை (House of Representatives) :

அரசியலமைப்பில் முதலாவது விதியின் இரண்டாவது பிரிவு பிரதிநிதிகள் சபையின் அமைப்பு பற்றி கூறுகிறது. பிரதிநிதிகள் சபை தான் காங்கிரஸின் மக்கள் சபையாக விளங்குகிறது. இச்சபையின் அங்கத்தினர்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் இச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை காங்கிரஸால் நிர்ணயிக்கப்படுகிறது. அரசியலமைப்புப்படி ஓர் உறுப்பினர் 39,000 மக்களுக்கு குறையாமல் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு மாநிலத்திலிருந்து ஓர் உறுப்பினராவது தேர்ந்தெடுக்கும் வகையிலும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது. இப்பொழுது இச்சபையின் எண்ணிக்கை 435 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை காங்கிரஸ் சட்டத்தால் மாற்றியமைக்க உரிமை பெற்றுள்ளது. இச்சபை' அதனுடைய 2 ஆண்டு காலம் முடிவதற்கு முன்பே கலைத்து விட முடியாது.

இச்சபை உறுப்பினர் 25 வயது நிரம்பியவராகவும், குறைந்தது 7 ஆண்டுகளாக அமெரிக்கக் குடியுரிமை பெற்றிருப்பவராகவும் எந்த மாநிலத்தில் போட்டியிடுகிறாரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். மேலும் அவர் அமெரிக்க அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவி எதுவும் வகிப்பவராகவும் இருக்கக்கூடாது.

இச்சபையின் கூட்டத்தொடர் ஒவ்வோரு ஆண்டும் ஜனவரி 3-ம் நாள் ஆரம்பமாகி அங்கத்தினர்கள் சபையை ஒத்திப்போட வாக்களிப்பது வரையிலும் தொடர்ந்து நடைபெறுகிறது. சபையின் சிறப்புக் கூட்டங்கள் குடியரசுத் தலைவரால் கூட்டுவிக்கப்படலாம்.

**அவைத்தலைவர்:** பிரதிநிதிகள் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதற்கென சபை உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை சபாநாயகராக தேர்ந்தெடுக்கின்றனர். அவைத் தலைவரின் தேர்தல் கட்சி அடிப்படையில் நடைபெறுகிறது. சபையில் பெரும்பான்மை பெற்று விளங்கும் கட்சியே அவரை நியமிக்கிறது. ஆங்கிலேயே சபாநாயகரைப் போலல்லாமல் அமெரிக்க நாட்டு சபாநாயகர் கட்சி சார்புடையவராகவும் வெளிப்படையாகப் பங்கு கொள்கிறார். அவர் பெரும்பான்மை பெற்று விளங்கும் கட்சியின் தலைவராக விளங்குகிறார். சபாநாயகரைத் தேர்ந்தெடுத்த பிறகும் அவர் கட்சியில் அங்கத்தினராயிருப்பதும், அதில் கூடுதல் ஈடுபாடு கொண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. ஒரு தடவை சபாநாயகர் எப்பொழுதும் சபாநாயகர் என்று ஆங்கிலேயர் போற்றும் வழக்காறு அமெரிக்க நாட்டில் அறவே பின்னற்றப்படவில்லை. சட்டமியற்றும்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

1. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிரதிநிதிகள் அவையின் அமைப்பினை எழுது.

செயல் சபாநாயகரின் தலைமையின் கீழ்தான் நமைபெறுகிறது. அவர் சபையின் கூட்டத்தொடர்களுக்கு தலைமை தாங்குகிறார். சபையில் அமைதியை நிலைநாட்டுகிறார். உறுப்பினர்களை அங்கீகரிக்கிறார். பிரச்சினைகளை வாக்கெடுப்பிற்கு விடுகிறார். நடைமுறை விதிகளுக்கு விளக்கம் கொடுக்கிறார். உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளை காப்பாற்றுகிறார். சபையிலுள்ள எல்லோருக்கும் பிரதிநிதியாக விளங்குகிறார். சபாநாயகர் இவ்வளவு அதிகாரங்கள் பெற்றிருந்தாலும் அவருடைய முடிவுகளைப் புறக்கணிக்க சபைக்கு முழு அதிகாரம் இருக்கிறது.

**சபையின் அதிகாரங்களும் கடமைகளும்:** அரசியலமைப்பின் முதலாவது விதியின் ஏழாவது பிரிவின்படி நிதிமசோதாக்கள் யாவும் பிரதிநிதிகள் சபையில் மட்டும்தான் அறிமுகப்படுத்தப்படவேண்டும். பிரதிநிதிகள் சபை சட்டமியற்றுவதில் செனட் சபையைப் போலவே சம அதிகாரங்களைப் பெற்று விளங்குகிறது. இரண்டு சபைகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் இரு சபைகளின் இணைப்பு குழுவின் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன.

இச்சபைக்கு குடியரசுத் தலைவர், கூட்டாட்சி அலுவலர்கள் மற்றும் தலைமை நீதிபதிகள் போன்றவர்களை விசாரணை மூலம் பதவியினின்றும், நீக்குவதற்கான தீர்மானம் கொண்டுவர அதிகாரமிருக்கிறது.

ஆட்சித்துறை காங்கிரசுக்குப் பொறுப்புடையதாக இல்லையாதலால் பாராளுமன்ற முறையில் காணப்படுவது போல் காங்கிரசுக்கு ஆட்சித்துறை மீது கட்டுப்பாடு எதுவும் இல்லை. எனினும் நிதிச்சட்ட வரைவு மீது இச்சபை பெற்றிருக்கும் கட்டுப்பாட்டின் வாயிலாக இச்சபைக்கு நிர்வாகத்தையும் கட்டுப்படுத்த வாய்ப்புக் கிடைக்கிறது.

புதிய மாநிலங்களை அங்கீகரிக்கவும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் கொண்டுவரவும் செனட் சபையுடன் சேர்ந்து இச்சபையும் அதிகாரம் பெற்றுள்ளது.

போர்ப் பிரகடனம் செய்யும் அதிகாரத்தையும் இச்சபை செனட் சபையுடன் சேர்ந்து உபயோகிக்கின்றது.

குடியரசுத் தலைவர் தேர்தலி தேர்வாளர் குழுவின் பெரும்பான்மை எந்த ஒரு வேட்பாளருக்கும் கிடைக்காத பொழுது அதிக வாக்குகள் பெற்ற முதல் மூன்று வேட்பாளர்களில் ஒருவரை குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் இச்சபைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## 6.3 செனட் சபை (Senate) :

அரசியலமைப்பின் முதலாவது விதியின் மூன்றாவது பிரிவு செனட் சபையின் அமைப்பைப் பற்றிக் கூறுகிறது. செனட் சபை காங்கிரசின் இரண்டாம் சபையாகும். இச்சபையில் மொத்தம் 100 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாநிலமும் அளவில் சிறியதாயிருப்பினும் பெரியதாக இருப்பினும் 2 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து செனட்டுக்கு அனுப்பலாம். செனட்டர்கள் 6 ஆண்டுகளுக்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களின் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் இரண்டாண்டுகளுக்கொருமுறை பதவி விலகுகின்றனர். பதவி விலகும் அங்கத்தினர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட உரிமை பெற்றுள்ளனர்.

ஒரு செனட்டர் 30 வயது நிரம்பியவராகவும் குறைந்தது 9 ஆண்டுகளாவது அந்நாட்டில் வசித்தவராகவும், அமெரிக்கக் குடியுரிமை பெற்றவராகவும், எந்த மாநிலத்தை அவர் செனட்டில் பிரதிநிதித்துவப் படுத்துகிறாரோ அந்த மாநிலவாசியாகவும் இருக்க வேண்டும். மேலும் அவர் அமெரிக்க அரசாங்கத்தில் ஊதியம் தரும் பதவி எதுவும்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

2. செனட் ஏன் அதிக அதிகாரம் கொண்ட அவை குழு முறையை விவரி.

வகிப்பவராகவும் இருத்தல் கூடாது. ஆரம்பத்தில் செனட்டர்கள் அந்தந்த மாநிலச் சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இப்பொழுது 7-ஆம் அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தினால் அவர்கள் தமது மாநில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**செனட் சபையின் அவைத் தலைவர் :** அமெரிக்காவின் குடியரசுத் துணைத் தலைவர் தனது பதவியின் காரணமாக செனட் சபையில் அவைத் தலைவராவார். அவர் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகருடைய அதிகாரங்களைப் பெற்றிருக்கவில்லை. செனட் சபை உறுப்பினர்களினின்று ஒரு தற்காலிகத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த தற்காலிகத் தலைவர் துணைக் குடியரசுத் தலைவர் வராதிருக்கும் பொழுது சபையின் கூட்டத் தொடர்களுக்குத் தலைமை தாங்குகிறார். குடியரசுத் துணைத் தலைவர் சபையின் அங்கத்தினரல்ல. ஆனால் தற்காலிக தலைவர் செனட் சபையில் பெரும்பான்மை ஆதரவுடைய கட்சியால் நியமிக்கப்பட்டவராவார். ஒரு விஷயத்தில் வாக்குகள் சமமாகப் பிரியும் பொழுது துணைக் குடியரசுத் தலைவர் முடிவு செய்யும் வாக்கினைப் பெற்றிருக்கிறார்.

**சபையின் அதிகாரங்களும் கடமைகளும் :** செனட்சபை, சட்டமன்றம் ஆட்சித்துறை மற்றும் நிதித்துறை சார்ந்த அதிகாரங்களைப் பெற்றுள்ளது. செனட் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஏராளமான அதிகாரங்களின் காரணமாக பிரதிநிதிகள் சபை மிகவும் பலவீனமடைந்துள்ளது.

சட்டமியற்றல் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட காரியங்களில் காங்கிரசின் இரு சபைகளும் சம அதிகாரங்களைப் பெற்றுள்ளன என்று ஏற்கனவே கண்டோம். சாதாரண மசோதாக்கள் எந்த சபையில் வேண்டுமானாலும் தாக்கல் செய்யப்படலாம். பெரும்பாலான அரசாங்க மசோதாக்கள் செனட் சபையில்தான் தாக்கல் செய்யப்படுகின்றன. இதிலிருந்து சட்டமியற்றும் முறையில் செனட் சபை பெற்றிருக்கும் முக்கியத்துவம் விளங்குகிறது. நிதி மசோதாக்கள் எல்லாம் பிரதிநிதிகள் சபையில்தான் துவக்கப்படுகின்றன. இதனால் பிரதிநிதிகள் சபையின் அந்தஸ்து அதிகரித்துவிடுவதில்லை. ஏனெனில் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றிய ஒரு நிதி மசோதாவை அதன் தலைப்பை தவிர்த்து மற்ற எல்லாப் பகுதிகளையும் மாற்றி அமைத்து முற்றிலும் மாறுபட்டதோர் மசோதாவை நிறைவேற்ற செனட் சபைக்கு பூரண அதிகாரம் இருக்கிறது. காங்கிரசின் இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று சட்டம் ஆகின்றது. ஒரு மசோதாவை நிறைவேற்றுவதில் இரு சபைகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏதாவது ஏற்பட்டால் இரு சபைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 3லிருந்து 9 அங்கத்தினர்களைக் கொண்டதொரு சமரச குழுவால் தீர்த்து வைக்கப்படுகிறது. பிரிட்டனில் இரண்டாம் சபையாக விளங்கும் பிரபுக்கள் சபைக்கு செனட் சபை போன்று சம அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. பிரபுக்கள் சபை மக்கள் சபை இயக்கிய மசோதாவை காலதாமதப்படுத்த முடியுமே தவிர நிராகரிக்க முடியாது.

குடியரசுத்தலைவர் வெளிநாடுகளோடு ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கைகளையும் உயர்பதவிகளுக்குச் செய்யும் நியமனங்களையும் உறுதி செய்யும் உரிமையை செனட் சபை பெற்றுள்ளது. இவ்வாறு குடியரசுத் தலைவரின் அதிகாரங்களில் பங்குபெறும் உரிமையின் மூலம் செனட் சபை பிரதிநிதிகள் சபைக்குக் கூட கொடுக்கப்படாத ஆட்சித்துறை மீதான கட்டுப்பாடு அதிகாரத்தை பெற்றுள்ளது.

பிரதிநிதிகள் சபைக்கு குடியரசுத் தலைவரோ அல்லது அவரது அமைச்சரவையோ பொறுப்பில்லை என்னும் நிலையுடன் செனட்டின் நியமன உறுதிப்பாடு அதிகாரத்தையும் சேர்த்து வைத்துப் பார்க்கும் பொழுது செனட் பிரதிநிதிகள் சபையைக் காட்டிலும் அதிக வலுவுடைய ஒரு சபையாக விளங்கும் உண்மை புலனாகும். குடியரசுத் தலைவரின் சுய உரிமை பாதிக்கப்படுவதில்லை. ஏனென்றால் செனட்டர்களின் அன்புரிமை கோட்பாட்டின் மூலம் குடியரசுத் தலைவர் செய்யும் எல்லா நியமனங்களுக்கும் செனட்டர்களின் ஒப்புதல் எளிதாகக் கிடைத்துவிடுகிறது. எந்த ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஒருவரை நியமனம் செய்கிறாரோ அந்த மாநிலத்தைச் சேர்ந்த செனட்டர்களின் ஒப்புதல் கிடைத்துவிட்டால் பொதுவாக அந்த நியமனத்திற்கு எதிராக யாரும் வாக்களிப்பதில்லை.

குடியரசுத் தலைவர் வெளிநாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கு ஒப்புதல் அளிப்பதன் மூலமாக செனட் சபை வெளிநாட்டுக் கொள்கை மீது அதிக செல்வாக்கினை பெற்றுள்ளது. வேறு எந்த இரண்டாம் சபையோ அல்லது ஒரு கீழ் சபையோ பெற்றிராத அளவுக்கு செனட் சபை ஆட்சித்துறை அதிகாரங்களைப் பெற்றிருப்பதனால் அதன் அந்தஸ்து மேன்மை பெற்று விளங்குகிறது.

நீதித்துறை சார்ந்த அதிகாரங்களையும் செனட் சபை பெற்றுள்ளது. குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் மற்றும் கூட்டாட்சி அரசாங்கத்தின் உயரதிகாரிகளை குற்ற விசாரணை மூலம் பதவியினின்று விலக்கும் உரிமை செனட் சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. செனட் சபை குற்ற விசாரணை மன்றமாக செயல்படும்போது தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தலைமை தாங்குவார். மேலும் செனட் சபையின் இசைவுடன் தான் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளை குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

செனட் சபை அரசியலமைப்பு திருத்த சட்ட வரவினைத் துவக்கவும், குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் எந்த ஒரு வேட்பாளருக்கும், தேர்வாளர் குழுவின் பெரும்பான்மை கிடைக்காவிட்டால், அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற முதல் இரண்டு வேட்பாளர்களின் ஒருவரை துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கவுமான உரிமையையும் பெற்றுள்ளது. இறுதியாக நிர்வாகத் திறமையின்மை மற்றும் லஞ்ச ஊழல் ஆகியவற்றை கண்டாயும் புலனாய்வுக் குழுக்களை நியமிக்கும் உரிமையும் செனட் சபைக்கு வழங்கப்படுகிறது.

மேற்படி அதிகாரங்கள் செனட் சபையை ஒரு பலம் பொருந்திய சட்டமன்ற பகுதியாக செயல்பட செய்கின்றன. இவ்வதிகாரங்கள் தவிர வேறு சில காரியங்களினாலும் செனட் சபை பிரதிநிதிகள் சபையைக் காட்டிலும் அதிக வலுவுடைய ஒரு சபையாக விளங்குகிறது. முதலாவதாக செனட் சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை மிகவும் சிறியதாக இருப்பதனால் பிரதிநிதிகளின் சபையைக் காட்டிலும் இச்சபையில் விரிவான விளக்கமான முறையில் விவாதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாவதாக செனட் சபை பிரதிநிதிகள் சபையை விடக் கூடுதல் கால வரையைப் பெற்றுள்ளதால் நல்ல முறையில் தொடர்ச்சியான நிர்வாகக் கொள்கைகளை உருவாக்க முடிகிறது. மேலும் இதன் காரணமாக அனுபவமுடைய அரசியல்வாதிகள் செனட் சபைக்கு வருவதால் செனட் சபை அனுபவத்திற்கும் அறிவிற்கும் உறைவிடமாக விளங்குகிறது. மூன்றாவதாக அநேக இரண்டாம் மன்றங்களைப் போலல்லாமல் அமெரிக்க செனட் சபை மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறது. மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட சபை நியமன சபை அல்லது மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படும் சபையை விட அதிக செல்வாக்குப் பெற்று விளங்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

நான்காவதாக பிரதிநிதிகள் சபையைக் காட்டிலும் செனட் சபையில் அங்கத்தினர்களுக்கு கூடுதல் பேச்சுரிமை வழங்கப்பட்டள்ளமையால் அவர்கள் எல்லாக் காரியங்கள் மீதும் விரிவான விவாதங்கள் மேற்கொண்டு முடிவெடுக்க முடிகிற... ஆனால் அதே நேரத்தில் இப்பேச்சு சுதந்திரம் ஒரு விஷயத்தின் மீது முடிவே எடுக்க முடியாமல் போவதற்கு வழிகோலுகிறது. ஒரு மசோதா நிறைவேற்றக்கூடாது என்ற கருத்து கொண்ட ஒருவர் அந்த மசோதா மீது எவ்வளவு நேரம் வேண்டுமா...ாலும் உரை நிகழ்த்தி, கடைசியில் அந்த மசோதாவை நிறைவேறவிடாமல் செய்துவிடலாம். இந்த முறையை பிலிப்பஸ்டரிங் (Filibustering) என்று அழைப்பர். பிலிப்பஸ்டரிங் என்னும் பேசியே மசோதாவைத் தடுக்கும் முறையிலிருந்து மசோதாக்களைக் காப்பாற்றுவதற்காக 1917-ஆம் ஆண்டு சபையில் அளிக்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரம் பற்றிய விதிமுறைகள் திருத்தப்பட்டன. திருத்தப்பட்ட விதிமுறைகளின் படி ஒரு மசோதா மீது நடைபெறும் விவாதத்தை அல்லது உரையை நிறுத்த 16 செனட்டர்கள் சேர்ந்து அதற்கான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர அந்த தீர்மானத்திற்கு சபையில் வந்திருப்பவர்களில் மூன்றில் இரு பங்கு அங்கத்தினர்களின் பெரும்பான்மை கிடைத்தால் அந்த விவாதம் முடிவு பெறும். ஆனால் இத்திருத்தம் விவாதத்தை நிறுத்துவதில் அதிக பலன் அளிக்கவில்லை. இந்த விவாத நிறுத்தம்பற்றிய விதி மறுபடியும் 1949ல் திருத்தப்பட்டது. இப்பொழுது ஒரு விவாதத்தை நிறுத்த செனட் சபையின் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை தேவைப்படுகிறது. இப்பெரும்பான்மை கிடைப்பது கடினம் என்பதால் பிரிப்பஸ்டரிங் முன்பு போலவே செயல்பட்டு வருகிறது என்றே கூற வேண்டும்.

செனட் சபையின் பேரும், புகழும் ஒரு பக்கமிருக்க ஒரு சிலர் அதில் காணப்படும் குறைகளை சுட்டிக்காட்டவும் தவறுவதில்லை. இவர்களுடைய கருத்துப்படி செனட்டர்கள், தங்களுடைய மாநிலங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குப் பதிலாக தங்களுடைய விருப்பத்திற்குட்பட்ட தொழில் வர்த்தக மற்றும் வியாபாரக் கூட்டத்தினரையே பிரதிநிதித்துவப் படுத்த முனைவதால் லஞ்ச ஊழல் ஏற்பட இது வழி வகுக்கிறது. இச் செனட்டர்களில் அன்புரிமைக் கோட்பாட்டின் மூலமும் லஞ்ச ஊழல் ஏற்படுகிறது. பிலிப்பஸ்ட்டரிங் மூலம் செனட் சபையின் பொன்னான நேரம் வீணாக்கப்படுகிறது. மேலும், மாநிலங்கள் அளவில் சிறியவைகளானாலும், பெரியவைகளானாலும் அவற்றிற்குச் சம பிரதிநிதித்துவம் செனட் சபையில் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக கொள்கைக்கு எதிரான பிரதிநிதித்துவ முறையாகக் கூறப்படுகிறது.

இவ்வளவு குறைகள் செனட் சபையிடம் காணப்படினும், இச்சபை கீழ் சபையான பிரதிநிதிகள் சபையைக் காட்டிலும் வலிமை பொருந்திய ஒரு சபையாகவும் உலகிலுள்ள இரண்டாம் சபைகளிளெல்லாம் அதிக அதிகாரமுடைய ஒரு சபையாகவும் விளங்குகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

**ஆட்சித்துறையுடனும், நீதித்துறையுடனும் காங்கிரஸ் கொண்டுள்ள தொடர்பு**

அமெரிக்க அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளிடையே உள்ள தொடர்புகள் பற்றி அதிகாரப்பிரிவினைப் பற்றி கூறும்பொழுது குறிப்பிட்டிருந்தோம். அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ள அமெரிக்க அரசியலமைப்பு

தடைகளும் சமநிலைகளும் என்னும் தத்துவத்திற்கும் இடமளிக்கும் வகையில் செயல்படுவதால் அரசாங்கம் திறமையான முறையில் செயல்பட உதவும் பல தொடர்பு நிலைகள் அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளிடையேயும் நிலவி வருகின்றன.

குற்ற விசாரணை அதிகாரம் மற்றும் நியமனங்களுக்கும் உடன்படிக்கைகளுக்கும் ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் ஆகியவற்றின் மூலம் காங்கிரசுக்கும், நீதிப் புனராய்வு அதிகாரத்தின் மூலம் நீதித்துறைக்கும் ஆட்சித் துறையின் மீது கட்டுப்பாடு மேற்கொள்ள முடிகிறது. அதே நேரத்தில் மசோதாக்களுக்கு இசைவளிக்கும் அதிகாரத்தின் மூலம் குடியரசுத் தலைவரும் நீதிப்புனராய்வு அதிகாரத்தின் மூலம் நீதித்துறையும் காங்கிரஸ் மீது கட்டுப்பாடு மேற்கொள்ள முடிகிறது. நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தால் குடியரசுத் தலைவரும் அந்த நியமனங்களுக்கு ஒப்புதல் அளிப்பதாலும் நீதிபதிகளை விலக்கல் செய்வதின் மூலமும் காங்கிரசும் நீதித்துறை மீது கட்டுப்பாடு மேற்கொள்கின்றன.

காங்கிரசு விரிவான முறையில் கொள்கைகளைச் சட்டமாக்குகிறது. குடியரசுத் தலைவர் குறிப்பிட்ட கொள்கைகளை உருவாக்கி நிர்வாகத்திற்கு பொறுப்பாயிருக்கிறார் என்னும் பழைய நிலை மாறி குடியரசுத் தலைவர் சட்டமியற்றுவதில் பெரும்பங்கு வகிப்பதும், காங்கிரசு நிர்வாகச் செயல்களில் கூடுதலாக தலையிடுவதும் காங்கிரஸ், குடியரசுத தலைவர் இருவரிடையே உள்ள தொடர்பில் ஏற்பட்டுள்ள மாறுதலாகும். காங்கிரஸின் அங்கத்தினர்களுக்கு ஆட்சித்துறையின் தலையீடு பிடிக்காவிட்டாலும், திரும்பவும் தேர்தலில் போட்டியிடும் பொழுது அவர்களுக்காக ஆதரவு திரட்டுவதிலும் நியமன காரியங்களிலும் குடியரசுத் தலைவரின் உதவி தேவைப்படுகிறது. அது போலவேதான் நிர்வாகத்தில் காங்கிரஸ் தலையிடுவதை, குடியரசுத் தலைவர் வெறுத்தாலும், தான் ஒரு திறமையான நிர்வாகியாக செயல்பட காங்கிரசின் உதவியை நாடுகிறார். எனவே ஆட்சித்துறைக்கும், காங்கிரசுக்ம் இடையேயுள்ள தொடர்பு பிரச்சனைக்குரிய ஒன்றாகவே உள்ளது. எனினும் இரு துறைகளுமே தத்தம் நோக்கங்களையுடைய ஒன்றுக்கொன்று ஒத்துழைக்கவும் சமரசத்துடன் நடந்துகொள்ளவும் வேண்டியதாய் உள்ளது. காங்கிரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் இடையே சச்சரவுகள் பல வழிகளில் ஏற்படலாம். குடியரசுத் தலைவரின் சில அதிகாரங்களை காங்கிரஸ் பகிர்ந்து கொள்வதில் சில தகராறுகள் ஏற்படலாம். குடியரசுத் தலைவர் தேச மக்களின் பிரதிநிதியாக விளங்கும்பொழுது காங்கிரசு உறுப்பினர் ஒரு சிறிய தொகுதிக்குதான் பிரதிநிதியாக இருக்கின்றார். எனவே குடியரசுத் தலைவர் தேசிய அளவில் ஒரு கொள்கைக்கு முக்கியத்துவம் தரலாம். காங்கிரஸ் உறுப்பினர்கள் வட்டார அளவில் தான் பிரச்சனையை அணுகுவார். இதனால் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு அல்லது சச்சரவு ஏற்படலாம்.

காங்கிரசின் மீது தனது செல்வாக்கை பயன்படுத்த குடியரசுத் தலைவருக்கு பல வழிகள் இருக்கின்றன. கூட்டாட்சியின் நிலை பற்றிய செய்தியை காங்கிரசுக்கு அனுப்பவும் தான் நினைக்கும் ஒரு நடவடிக்கையை அதன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்படியாகக் கூறவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. குடியரசுத் தலைவர் பெற்றுள்ள இந்த உரிமையின் மூலம் அவர் சட்டம் இயற்றுவதில் தனது செல்வாக்கைப் பயன்படுத்த முடியும். மேலும் காங்கிரசின் சிறப்புக் கூட்டத் தொடர்களை கூட்டவும் குடியரசுத் தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். இக்கூட்டத் தொடர்கள் குடியரசுத் தலைவர் சிபாரிசு செய்யும் விஷயங்களை நிறைவேற்றவே

கூட்டப்படுகின்றன. காங்கிரசின் கூட்டத்தொடர்களில் குடியரசுத் தலைவர் நேரடியாகப் பங்குகொள்ள முடியாததால், தன்னுடைய தொடர்பு அலுவலர்கள் மூலம் காங்கிரசின் நடவடிக்கைகள் மீது தனது செல்வாக்கினைப் பயன்படுத்துகிறார். கட்சி அங்கத்தினர்களின் பற்றுரிதியைத் தூண்டுவதின் மூலமும் காங்கிரசில் தனது கொள்கைகளுக்கு முதலிடம் முக்கியத்துவமும் பெற்றுக்கொள்ள முடியும். அடுத்த தேர்தலில் தனது கட்சியின் தோல்வியை விரும்பாத அங்கத்தினர்கள் சிலர் குடியரசுத் தலைவரை ஆதரிக்கின்றனர். கட்சியில் நாணயம் பற்றி கவலைப்படாத அங்கத்தினர்கள் சிலர் குடியரசுத் தலைவரின் கொள்கைகளை எதிர்க்கவும் செய்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் குடியரசுத்தலைவரின் கொள்கைகளை ஒத்துக் கொள்ளும் சில எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் குடியரசுத்தலைவரின் கொள்கைக்கு வெளிப்படையாகத் தங்கள் வாக்குகளை தரத் தயங்கவும் செய்யலாம். இவ்விரு தரப்பு காங்கிரஸ் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் எப்பாடுபட்டாவது ஒன்று சேர்த்து தன் வசப்படுத்திக் கொள்வதனால் தன்னுடைய கொள்கைகளுக்கு போதுமான ஆதரவைத் தேடிக் கொள்ளலாம்.

இம்முறை தவிர சில முறைசாரா வழிகளிலும் குடியரசுத் தலைவர் காங்கிரஸ் மீது தனது செல்வாக்கைப் பயன்படுத்த முடியும். பெரும்பான்மைக் கட்சித்தலைவர்கள், சிறுபான்மைக் கட்சித் தலைவர்கள், குழுத் தலைவர்கள் மற்றும் செல்வாக்குடைய காங்கிரசு அங்கத்தினர் ஆகியோர்களை நட்பாலும் பரிவாலும் ஒன்று சேர்த்து அவர்களுடைய உதவியுடன் காங்கிரசில் தன்னுடைய கொள்கைகளுக்கு ஆதரவு தேடலாம். எல்லாவற்றிற்கும் மேலாக பொதுக்கருத்தை தன் சார்பில் வைத்துக் கொள்வதன் மூலமும் காங்கிரசை தனது பரிந்துரைகளுக்குச் செவி சாய்க்க வைக்கலாம். சில வேளைகளில் காங்கிரசு இயற்றும் ஒரு சட்டத்திற்கு இசைவு தரமுடியாது என்று பயமுறுத்தியும் அல்லது தனது பதவி வழங்கும் அதிகாரத்தின் மூலமும் காங்கிரசின் மீது தனது செல்வாக்கை குடியரசுத்தலைவர் பயன்படுத்த முடிகிறது. இவ்வாறு காங்கிரசுக்கும் ஆட்சித்துறைக்குமிடையே சச்சரவு தோன்றினாலும் அச்சச்சரவுகளை நீக்கி இரு துறைகளிடையே சமரசத்தை ஏற்படுத்த மேற்கூறிய வழிமுறைகள் பெரிதும் உதவுகின்றன.

காங்கிரசைக் கட்டுப்படுத்த தலைமை நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரம் உதவுகிறது. ஆனால் இவ்வதிகாரம் காங்கிரசுக்கும் நீதித்துறைக்கும் இடையேயுள்ள உறவினையும் பாதித்துள்ளது. நீதிப்புனராய்வு அதிகாரத்தின் மூலம் அரசியலமைப்பிற்கு எதிராகக் காங்கிரசு இயற்றும் சட்டங்களைத் தலைமை நீதிமன்றம் நிராகரித்து விடுகிறது. எனவே காங்கிரசு எந்த ஒரு திட்டத்தையும் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள விதி முறைகளுக்கிணங்க இயற்ற வேண்டியுள்ளது. ஆனால் அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் சட்டத்தின் முறைப்படி நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது. அதாவது ஒரு சட்டம் பகுத்தறிவிற்கும் நேர்மைக்கும் பொருந்தாததாக இருந்தாலும் அமெரிக்கத் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் அச்சட்டத்தை அரசியலமைப்புக்கு முரணாக இல்லாமலிருந்தாலும் கூட அவர்கள் அதை நிராகரிக்கலாம். எனவேதான் தலைமை நீதிமன்றத்தை ஒரு மேன்மையான சட்டமன்றம் என்று கூட சிலர் கூறுகின்றனர். இதனால் நீதிப்புனராய்வு அதிகாரம் காங்கிரசின் பொறுப்புணர்வைப் பெரிதும் பாதித்துள்ளது. எவ்வாறாயினும், காங்கிரசும் நீதித்துறை மீது பல வழிகளில் கட்டுப்பாடு மேற்கொள்ளாமலில்லை. நீதிபதிகளின் எண்ணிக்கை, அவர்களுடைய ஊதியம்

ஆகியவற்றை நிர்ணயிப்பதன் மூலமும் குடியரசுத் தலைவர் செய்யும் நீதிமன்ற நியமனங்களுக்கு இசைவு அளிப்பதன் மூலமும் காங்கிரசு நீதிமன்றத்தின் மீது கட்டுப்பாடு மேற்கொள்கிறது. காங்கிரசுக்கு நீதித்துறையின் மேல் இவ்வளவு கட்டுப்பாடு இருப்பினும் நீதிப் புனராய்வு அதிகாரத்தின் மூலம் காங்கிரசு என்ன சட்டம் இயற்ற வேண்டும் என்பதையே நீதித்துறைதான் நிர்ணயிப்பதாகக் கூறவேண்டியதில்லை. எனவே காங்கிரசானது ஆட்சித்துறையுடனும் நீதித்துறையுடனும் தான் ஏற்படுத்திக் கொள்ளும் நல்ல தொடர்பின் மூலம் திறமையுடன் செயல்பட முடியும் என்பது திண்ணம்.

## 6.4 சட்டமியற்றும் முறை

அமெரிக்காவில் குடியரசுத் தலைவரும் அவரது அமைச்சரவையும் காங்கிரசில் இடம்பெறாததால் அங்கு அமைச்சர்களால் தாக்கல் செய்யப்படும் அரசாங்க மசோதாக்கள் கிடையாது. பொதுவாக, மசோதாக்கள் தனிப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்களிடமிருந்தும், நிர்வாகப்பிரிவிலிருந்தும், தன்னலக்குழுக்களிடமிருந்தும், காங்கிரசு குழுக்களிடமிருந்துமே வருகின்றன. ஒரு மசோதா எந்த ஒரு உறுப்பினராலும் துவக்கப்படலாம். சாதாரண மசோதாக்கள் எந்தச் சபையிலும் துவக்கப்படலாம். ஆனால் நிதி மசோதாக்கள் பிரதிநிதிகள் சபையில் தான் துவக்கம் பெறலாம். ஒரு மசோதா சட்டமாவதற்கு திட்டவட்டமான ஒரு வழிமுறை எதுவுமில்லையென்றாலும், எல்லா மசோதாக்களும் ஒரு சில பொதுவான முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவைகளைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

**அறிமுகம் :** சட்டமியற்றலில் முதல் கட்டம் அதனுடைய அறிமுகமாகும். மசோதாவைத் தாக்கல் செய்பவர் பிரதிநிதிகள் சபையைச் சேர்ந்தவராயின் செயலாளர் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் பெட்டியினுள் அந்த மசோதாவை இடுகின்றார். பிறகு அம்மசோதா அச்சிடப்பட்டு எல்லா அங்கத்தினர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது.

**முதல் வசிப்பு :** முதல் வசிப்பு மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட நாள் அல்லது சபையின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட ஒரு நாளில் நடைபெறுகிறது. மசோதா காங்கிரசின் ஏடுகளில் பதிவானதும் முதல் வாசிப்பு முடிந்து விடுகிறது.

**குழுக்கூட்டம் :** எல்லா மசோதாக்களும் அவற்றிற்குரிய குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன. குழுக்களின் அங்கத்தினர்கள் மசோதாக்களை ஒவ்வொரு பகுதியாகப் பரிசீலனை செய்கின்றனர். இக்கட்டத்தில் பொது மக்கள் கருத்துக்களும் விசாரிக்கப்படுகின்றன. சில வேளைகளில் மசோதாக்களின் உள்விளக்கங்களை ஆராய்வதற்கான துணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. பிறகு குழுவானது மசோதாக்களை தனது திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ சபையில் சமர்ப்பிக்கின்றது அல்லது மசோதாவை முழுவதுமாக மாற்றியமைத்து ஒரு புதிய வடிவில் சமர்ப்பிப்பதும் உண்டு அல்லது அந்த மசோதாக்களை சபையில் சமர்ப்பிக்காமலே வைத்துவிடவும் செய்யலாம். பிரதிநிதிகள் சபையின் பெரும்பான்மையுடன் அந்த மசோதாவை 15 நாட்களுக்குள் அனுப்பிவைக்கும்படியாக குழுவை அதைத் தாக்கல் செய்தவர் கேட்கலாம். ஆனால் சபையின் பெரும்பான்மை கிடைப்பது கடினம் என்பதால் பெரும்பாலும் குழுக்களின் தீர்மானமே முடிவானதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**சபையின் செயல்முறை :** குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட மசோதா சபையின் யூனியன் பட்டியல், சபைப் பட்டியல், தனிப்பட்டியல் என்னும் 3 பட்டியல்களுள் ஒன்றில் வைக்கப்படுகிறது. யூனியன் பட்டியலில் திருப்திகரமாகச் சமர்ப்பிக்கப்பட்ட

**தன்னறிவு சோதனைக் கேள்வி**
3. சட்டமாக்கச் செயல் முறையை விளக்கு.

நிதிச்சட்ட வரைவுகள் இடம் பெறுகின்றன. மற்ற பொது மசோதாக்கள் சபைப் பட்டியலில் இடம் பெறுகின்றன. தனிப்பட்டியலில் நிதி மசோதா தவிர மற்ற மசோதாக்கள் இடம் பெறுகின்றன.

**இரண்டாம் வாசிப்பு :** இக்கட்டதின் போது சபையில் திருத்தங்கள் முன்மொழியப்பட்டு ஒவ்வொரு விதியாக விவாதிக்கப்பட்டு வாக்கெடுக்கப்படுகின்றது. மசோதா இவ்வாறு நிறைவேற்றப்பட்டதும் அச்சிடப்பட்டு மூன்றாம் வாசிப்பிற்குத் தயாராக்கப்படுகிறது.

**மூன்றாம் வாசிப்பு :** இக்கட்டத்தில் மசோதாவின் தலைப்பு மட்டும் தான் வாசிக்கப்படுகிறது. மசோதா முழுமையாக வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. அது நிறைவேற்றப்பட்டதும் சபையின் தலைவருடைய கையெழுத்துடன் அடுத்த சபைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**அடுத்த சபையில் நிறைவேற்றம் :** ஒரு சபை நிறைவேற்றிய மசோதா அடுத்த சபைக்கு அனுப்பி வைக்கப்படும்பொழுது அந்த சபையிலும் முதல் சபையில் பின்பற்றப்பட்ட பல கட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. இரு சபைகளுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்படும்பொழுது சமரசக்குழுவிற்கு அவ்விஷயம் விடப்படுகிறது. சமரசக் குழுவில் முடிவு ஏற்படாது போனால் அந்த மசோதா கைவிடப்படுகிறது.

இரு சபையிலும் மசோதா நிறைவேற்றப்பட்டு விட்டால் அது குடியரசுத் தலைவரின் இசைவிற்காக அனுப்பி வைக்கப்படுகிறது. காங்கிரசு இயற்றும் அரசியலமைப்புத் திருத்த மசோதாவைத் தவிர வேறு எந்த மசோதாவும் குடியரசுத் தலைவரின் இசைவின்றிச் சட்டமாக முடியாது. குடியரசுத் தலைவரின் கையெழுத்திற்காக அனுப்பி வைக்கப்படும் மசோதாவை மறுபரிசீலனை செய்யக்கோரி காங்கிரசுக்கே அவர் திருப்பி அனுப்பலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் காங்கிரசு அந்த மசோதாவை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் திரும்பவும் நிறைவேற்றினால் குடியரசுத் தலைவர் மறுபடியும் மறுப்பு எதுவும் தெரிவிக்க முடியாது. மேலும் குறிப்பிட்ட 10 நாட்களுக்குள் அவர் தனது இசைவை அளிக்காமலிருந்து. காங்கிரசின் கூட்டத் தொடரும் முடிவடைந்து விடுகிறது என்றால் அந்த மசோதா நிறைவேறாமலே போய்விடுகிறது. இவ்வாறு காங்கிரசின் கூட்டத் தொடரின் கடைசி 10 தினங்களில் நிறைவேற்றப்படும் பல மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற முடியாமல் சட்டமாகாமல் இருந்திருக்கின்றன.

**நிதிமசோதாக்களை நிறைவேற்றும் முறை :** நிதி மசோதாக்களைப் பிரதிநிதிகள் சபையில் தான் துவக்க முடியும். வரவு செலவுத் திட்டவாரியத்தின் இயக்குனர், குடியரசுத் தலைவர் நேரடிக் கண்காணிப்பின் பேரில் வரவுசெலவுத்திட்டம் அதிபரின் பொறுப்பில் காங்கிரசின் கீழ்சபையில் அறிமுகமாகிறது. வருமான முன்மொழிதல்களடங்கிய வருவாய்ச் சட்டவரைவு வழிமுறைக் குழுவிற்கும் செலவுகள் பற்றிய ஒதுக்கீட்டுச் சட்டவரைவு ஒதுக்கீட்டுக் குழுவிற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இருவகைச் சட்டவரைவுகளும் குழுவால் விவாதிக்கப்பட்ட பின்பு சபையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. சபையின் விவாதங்களுக்குப் பின்பு வாக்கெடுப்பு நடைபெறுகிறது. இவ்வாறு கீழ்சபை நிறைவேற்றிய அந்த மசோதாக்கள் மேல்சபையாகிய செனட்சபைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. செனட் சபை நிதிமசோதாக்களைத் தன்விருப்பப்படி திருத்தவும் தேவையானால் முற்றிலும் மாறுபட்டதோர் மசோதாவாக அதை

மாற்றியமைத்து நிறைவேற்றவும் முடியும். செனட் சபையும் நிறைவேற்றிய பின் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற அனுப்பி வைக்கப்படுகின்றன. ஒரு வேளை இருசபைகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படின் சாதாரண மசோதாக்கள் விஷயத்தில் செயல்படுவது போலவே நிதி மசோதாக்கள் பற்றிய கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பொழுதும் சமரசக் குழுக்கள் மூலமாகவே சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு நிறைவேற்றப்படும் வருவாய்ச் சட்ட வரைவு வருவாய்ச் சட்டம் என்றும் வருவாய் சட்டத்தின் மூலம் வரிகளை சேகரிக்கவும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் செலவுகள் மேற்கொள்ளத் தேவையான நிதியைப் பெறவும் அரசாங்கம் உரிமை பெறுகிறது.

## 6.5 குழு முறை

அமெரிக்காவில் சட்டமியற்றும் முறையில் காணப்படும் பிரதான அம்சம் என்னவெனில் பிரதிநிதிகள் சபையானாலும் செனட் சபையானாலும் பெரும்பாலான செயல்கள் குழுக்களின் மூலமாகவே நடைபெறுகின்றன. தற்காலச் சட்டமன்றங்களிலெல்லாம் குழுக்களைப் பயன்படுத்துவதால் போதுமான நேரமின்றி அவதிப்படும் சட்டமன்றத்தின் பளு குறைவதுடன் மசோதாக்களை விரிவான முறையில் விவாதிக்கவும் முடிகிறது. இது கொள்கை அளவிலும் நடைமுறையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதேயென்றாலும் அமெரிக்கக் குழு முறையின் சிறப்பு யாதெனில் அமெரிக்கச் சட்டமன்றக் குழுக்கள் கூடுதல் சுதந்திரத்துடன் செயல்படுகின்றன என்பதேயாகும். பாராளுமன்ற முறை அரசுகளில் மசோதாக்கள் துவக்கம் முதல் முடிவு வரை அமைச்சர்களின் கண்காணிப்பிலேயே இருக்கின்றன. ஆனால் அமெரிக்காவிலோ மசோதாவுக்கு உருக்கொடுப்பதில் குழுக்களே பெரும்பங்கு வகிக்கின்றன.

பிரதிநிதிகள் சபையில் 20 நிரந்தரக் குழுக்களும், செனட்சபையில் 16 நிரந்தக் குழுக்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு நிரந்தரக் குழுவும் ஒரு குறிப்பிட்ட காரியம் குறித்து செயல்படுகிறது. இரு சபைகளிலும் விவசாயம், இராணுவப்பணிகள், சிவில் பணிகள், நிதி மற்றும் நாணயம், கொலம்பியா மாவட்டம், அரசாங்க நடவடிக்கைகள், பொதுத்துறைப்பணி, தொழிலாளர் விதிகள், வரி விதித்தல், வெளிநாட்டு உறவு, நிதித்துறை மற்றும் மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் ஆகியவை சார்ந்த பல நிரந்தரக் குழுக்கள் உள்ளன. பொதுவாக ஒவ்வொரு செனட்டரும் இவைகளில் ஏதாவது இரு குழுக்களில் இடம் பெற்றிருப்பார். பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொருவரும் ஏதாவதொரு குழுவில் மட்டும் இடம் பெற்றிருப்பர். 1946இல் சட்டமன்றச் சீரமைப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு 80 குழுக்கள் வரை இருந்தன. ஆனால் இப்பொழுது அவைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதன் விளைவாக குழுக்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் துணைக்குழுக்கள் பலதோன்றவும் அது ஏதுவாயிற்று. இப்பொழுது 250-க்கு மேற்பட்ட துணைக்குழுக்கள் இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் செனட் அல்லது பிரதிநிதிகள் சபை புலனாய்வு செய்து சில தகவல்களைச் சேகரிப்பதற்கென சிறப்புக்குழுக்களை ஏற்படுத்துவம் உண்டு. ஆனால் இப்பொழுது பெரும்பாலும் சிறப்புக் குழுக்களை ஏற்படுத்துவதற்குப் பதில் இது மாதிரிப் பொறுப்புக்கள் நிலைக்குழுக்களிடமே கொடுக்கப்படுகின்றன.

பிரதிநிதிகள் சபையில் மசோதாக்களின் விளக்கங்களை ஆராய்ந்து பொதுவான

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

4. அரசியல் கட்சிகளிடையே கொள்கை வித்தியாசமுண்டா? விளக்குக.

சம்மதத்தைப் பெறுவதற்கென சபையின் முழுக்குழுவைப் பயன்படுத்தும் முறையும் உள்ளது. சபை முழுக்குழுவாகச் செயல்படும்பொழுது சபையின் அங்கத்தினர்கள் யாவரும் முழுக் குழுவின் அங்கத்தினர்களாக அமைகின்றனர். முழுக் குழுவின் தலைவராக ஒருவரை நியமித்துக் கொள்கின்றனர். அவரே சபையிலிருந்தும் சம எண்ணிக்கையுடைய அங்கத்தினர்களைக் கொண்ட இணைப்புக் குழுக்களும் ஏற்படுத்துவதுண்டு. உதாரணமாக அணுசக்தி, பொருளாதார அறிக்கை, காங்கிரசின் நூலகம் மற்றும் உள்நாட்டு வருவாய், வரிவிதிப்பு போன்ற காரியங்கள் மீதான இணைப்புக் குழுக்களைக் கூறலாம். காங்கிரசின் இருசபைகளுக்குமிடையே தோன்றும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்படும் சமரசக் குழுவும் ஒரு இணைப்புக் குழுவேயாகும்.

எல்லா நிலைக் குழுக்களிலும் இரு அரசியல் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். செனட் சபையில் உள்ள நிலைக் குழுக்களில் 14லிருந்து 19 வரை அங்கத்தினர்கள் உள்ளனர். பிரதிநிதிகள் சபையில் உள்ள நிலைக்குழுக்களில் 9 முதல் 50 வரை அங்கத்தினர்கள் இடம் பெறுகின்றனர்.

குழுக்களின் தலைவர்கள் அதிக செல்வாக்குடன் சட்டமியற்றலில் பங்கு கொள்கின்றனர். ஒரு குழுத் தலைவர் குழுவின் கூட்டத்தொடர்களை ஆரம்பிக்கவும், தொழில் நுட்பப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் துணைக்குழுக்களின் அங்கத்தினர்களை நியமிக்கவும், மசோதாவைப் பரிசீலனை செய்யவேண்டிய முறையை நிர்ணயிக்கவும், ஒரு மசோதா பற்றி பொதுமக்களை விசாரிக்க வேண்டுமா என்பது பற்றி முடிவு செய்யவும், குழுவிலிருந்து சபைக்கு மசோதாவை அனுப்புவதற்கான ஏற்பாடு செய்யவும், சபையில் மசோதா மீது நடைபெறும் விவாதத்தைச் சமாளிக்கவும் மற்றும் அவசியமற்ற திருத்தங்களை நீக்கவுமான அதிகாரத்தைப் பெற்றுள்ளார். ஆனால் இவர் குழுவின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இவ்வதிகாரங்களைப் பயன்படுத்துகிறார். அவைத்தலைவர்கள், சபையில் கட்சித் தலைவர்கள், மற்ற கட்சி அலுவலர்கள், காங்கிரசின் முக்கிய அங்கத்தினர்கள் ஆகியோரிடமிருந்து குழுத்தலைவர் விடுபட்டுத் தனிப்பட்ட முறையில் இவ்வதிகாரத்தைப் பிரயோகிக்கின்றனர். இதிலிருந்து இவர் எவ்வளவு சுதந்திரமாகச் செயல்படுகிறார் என்பது புலனாகும். ஒவ்வொரு சபையிலும் பெரும்பான்மைக் கட்சியின் உறுப்பினர்கள் குழுக்களின் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றனர். பொதுவாக ஒரு குழுத்தலைவரை நியமிக்கும் பொழுது அவருடைய பணி முதுமை, அனுபவம் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

அமெரிக்கக் குழுவின் சிறப்புத் தன்மைகளை தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதை இங்கிலாந்து குழுமுறையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் அவசியமாகிறது. பிரிட்டனில் குழுக்கள் மசோதாக்களை மறுபரிசீலனை செய்யவும் சட்டமன்றத்திற்கு நுட்பமான ஆலோசனைகள் வழங்கவுமென ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அமெரிக்காவில் குழுக்கள் அவைத் தலைவர்களுக்கு கட்டுப்படாத நிலையில் சுதந்திரமாகச் செயல்படுவதால் அவைகளை சிறிய 'சட்டமன்றங்கள்' என்று கூட அழைக்கின்றனர். இங்கிலாந்திலுள்ள குழுக்கள் நடுநிலையாகவும் பாரபட்சமற்ற முறையிலும் செயல்படும்பொழுது அமெரிக்கக் குழுக்களோ கட்சிக் சார்புடையவைகளாக நடந்து கொள்கின்றன. மேலும், இங்கிலாந்தில் குழுக்கள் அமைச்சரவையின் தலைமையின் கீழ் பணியாற்றும் பொழுது அமெரிக்க குழுக்கள் குழுத்தலைவர்களின் கீழ் செயல்படுகின்றன. பிரிட்டனில் குழுவிற்கு அனுப்பப்படும் மசோதாக்கள் கண்டிப்பாக

சபைக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. ஆனால் அமெரிக்காவில் குழுவிற்கு பரிசீலனைக்காக அனுப்பப்படும் மசோதாக்கள் சபைக்குத் திருப்பி அனுப்பப்படாமலும் இருந்து விடுகின்றன. பிரிட்டனில் மசோதாக்களின் பொதுவான கோட்பாடுகள் விவாதிக்கப்பட்ட பிறகுதான் குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆனால் அமெரிக்காவில் மசோதாக்கள் சபையில் அறிமுகமானவுடன் குழுக்களுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றன. மற்றுமோர் அம்சம் என்னவென்றால் அமெரிக்கக் குழுக்களில் மசோதாக்கள் லாபியிங் போர்க் காரல் லாக் ரோலிங் போன்ற தீயவழிகளில் உருவாக்கப்படுகின்றன.

லாபியிங் என்னும் பழக்கத்தின் மூலம் தனிநலக் குழுக்களின் பிரதிநிதிகள் தங்களுடைய தொழில் அல்லது வர்த்தக நிறுவனங்களின் விருப்பங்களைப் பாதுகாக்க முனைகின்றனர். சில குறிப்பிட்ட விருப்பங்களையுடைய இப்பிரதிநிதிகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளல், நேரில் கண்டு தங்களுக்கு வேண்டிய தொழிற்சாலைகளுக்கோ அல்லது வியாபார நிறுவனங்களுக்கோ நன்மை பயக்கும் சட்டங்களை நிறைவேற்ற ஆவன செய்கின்றார்.

போர்க்பாரல், லாக் ரோலிங் ஆகியவை அமெரிக்காவில் ஏற்படுகின்ற பொருளாதார உபரியை தொழிலில் அல்லது வர்த்தக நிறுவனங்களுக்கிடையே பங்கிட்டுக் கொள்ளும் விருப்பத்தினால் தோன்றிய பழக்கங்களாகும். அந்தக் காலத்தில் அடிமைகளுக்கு அளிப்பதற்கென்ற பன்றி இறைச்சியைக் கொண்டு வருவதற்கு பயன்படும் பீப்பாய்க்கு போர்க் பாரல் என்று பெயர். அந்த பீப்பாயிலிருந்து குறிப்பிட்ட நாளன்று பன்றி இறைச்சி அடிமைகளுக்கு வழங்கப்பட்டது. இன்று பொருளாதார உரிமையை பல்வேறு தொழில் வர்த்தக அல்லது வியாபார கூட்டத்தினர்க்கு பகிர்ந்தளிக்கும் முறைக்கு போர்க் பாரல் என்னும் பெயர் சூட்டப்பட்டது. இந்த பொருளாதார உபரியில் பெரும் பங்கைப் பெற மற்ற உறுப்பினர்களின் உதவி தேவைப்படுகிறது. இது லாக் ரோலிங் என்னும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. லாக் ரோலிங் குடியேற்ற நாடுகளில் ஆரம்ப காலத்திலிருந்த ஒரு பழக்கமாகும். அதாவது அடிமைகள் பெரிய மரங்களை வெட்டி முறிக்கப் பயன்படுத்தப்பட்டனர். வெட்டிய மரத்தடிகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு உருட்டிச் செல்ல அடுத்தவர்களின் உதவி தேவைப்பட்டது. அது போலவேதான் இன்றும் பொருளாதார உபரியை தன்னுடைய விருப்பத்திற்குரிய தொழில் அல்லது வர்த்தகக் கூட்டத்தினருக்கு வாங்கிக் கொடுக்க மற்ற காங்கிரசு அங்கத்தினர்களின் உதவி தேவைப்படுகிறது. எனவே இதற்கு லாக் ரோலிங் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பழக்கவழக்கங்கள் ஜனநாயக நெறிகளைப் பொருளிழக்கச் செய்வதுடன் பொது வாழ்வில் லஞ்ச ஊழல் ஏற்படவும் வழிகோலுவதாயுள்ளது.

## 6.6 அமெரிக்க நீதிமன்றங்கள்

அமெரிக்க அரசியலமைப்பில் கூட்டாட்சி ஒரு சிறப்புமிக்க இடத்தைப் பெறுகின்றது. அரசியலமைப்பு நீதித்துறை அதிகாரத்தை தலைமை நீதிபதியிடம் ஒப்படைத்துள்ளது. அரசியலமைப்பாளர்கள் நீதித்துறை அரசாங்கத்தின் மூன்றாவது உறுப்பாக மற்ற உறுப்புக்களைக் காட்டிலும் முக்கியத்துவம் குறையாமல் உருவாக்கியுள்ளார்கள். கூட்டாட்சி நாடுகளின் வலுவான, சுதந்திரமான ஒரு நீதித்துறை மிகவும் அவசியமாகும். இந்தவகையில் அமெரிக்கதலைமை நீதிமன்றம் முக்கிய பங்கை வகிக்கின்றது. நீதிமன்றம் உண்மையிலேயே அரசியலமைப்பு விளக்கத்தின் கடைசி இடமாக அமைகிறது. அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பின் காவலனாக மட்டுமின்றி நீதிப்புனராய்வு அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. தலைமை நீதிமன்றம்

அரசியலமைப்பைப் பற்றிய சச்சரவுகளை தீர்க்கும் கடைசி இடம் என்ற கருத்து முக்கியமான ஒன்றாகும். அமெரிக்க அரசியல் முறையில் சுதந்திரமான கூட்டாட்சி நீதிமன்றம் மிக முக்கியமான அம்சங்களுள் ஒன்று. ஓர் எழுத்தாளர் கூறும்போது எவ்வாறு சூரியன் இல்லாத சூரிய மண்டலத்தை நினைத்துப் பார்க்க முடியாதோ அதே போன்று தலைமை நீதிமன்றமில்லாத ஓர் அமெரிக்க அரசியலமைப்பை நினைத்துப் பார்க்கவே முடியாது என்று கூறுகிறார்.

**நீதிமன்றங்கள் அமைப்பு (Structure)**

கூட்டாட்சி நீதித்துறை அமைப்பின் அடிமட்டத்தின் காணப்படுபவை மாவட்ட நீதி மன்றங்களாகும். அவைகள் Trial Courts என்றும் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாநிலமும் குறைந்தது ஒரு மாவட்ட நீதிமன்றத்தையாவது கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றமும் குறைந்தது ஒரு நீதிபதியைக் கொண்டு விளங்குகிறது. ஆனால் சில மாவட்டங்களில் வேலை அதிகமாக இருப்பின் அவைகள் ஒன்றுக்கதிகமான நீதிபதிகளைக் கொண்டுள்ளது. ஆனால் ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 24க்கு மேல் இருக்கக்கூடாது கூட்டாட்சி சட்டங்கள் குறித்த வழக்குகளை முதலில் விசாரிக்கும் உரிமை இந்நீதிமன்றங்கட்கு உண்டு. எல்லா வழக்குகளிலும் மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்பை எதிர்த்து அடுத்து நீதிமன்றமான முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யலாம்.

மாவட்ட நீதிமன்றங்களுக்கு மேலாக, மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் விளங்குகின்றன. அமெரிக்காவில் இதுபோல் 11 நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. நாடு முழுவதும் 19 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒரு (Circuit Court of Appeal) முறையீட்டு நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது. மேலும் கொலம்பியா மாவட்டத்தில் ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றங்கள் 1821ம் ஆண்டு தலைமை நீதிமன்றங்களின் வேலைப்பளுவை குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டன. இவைகளுக்கு முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மட்டுமே உள்ளது. மேலும் நீதிமன்றங்கள் தேசிய தொழிலாளர் போர்டு போனற முழுமையில்லா நீதிக்குழுக்களால் இயற்றப்படும் கட்டளைகளைச் சீர் தூக்கிப்பார்க்கும் அதிகாரமும் பெற்றுள்ளன. சர்க்கியூட் நீதிமன்றங்களுக்கு முன்வரும் எல்லா வழக்குகளுக்கும் இவற்றின் தீர்ப்புக்கள் முடிவானவை அல்ல. உதாரணமாக சர்க்கியூட் நீதிமன்றத்திலும் மூன்று முதல் ஒன்பது சர்க்கியூட் நீதிபதிகள் உள்ளனர். அவர்கள் குடியரசுத் தலைவரால் செனட் அவையின் அங்கீகாரத்துடன் நியமனம் செய்யப்படுகிறார்கள். நீதிபதியின் நன்னடத்தைக் காலம் வரை (During their good behaviour) பதவி வகிக்கலாம். மேலும் பல சிறப்புக் கூட்டாட்சி நீதிமன்றங்களை உயர்ந்த நுணுக்கங்களுடைய பண்புகளைக் கொண்ட வழக்குகளை விசாரிக்கின்றன. உதாரணமாக உரிமை நீதிமன்றம் (Court of Claims) கூட்டாட்சி அரசாங்கத்திற்கு எதிரான நீதி சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கிறது மற்ற சிறப்பு நீதிமன்றங்கள் சுங்கவரி நீதிமன்றம் (Customs Court) சுங்க வரிப்பிரிவு பொருள் மேல் முறையீட்டு நீதிமன்றம் (Court of Customs and Patent Appeals) வரி நீதிமன்றம் (Tax Court) ராணுவ நீதிமன்றம் (Military Court) போன்றவைகளாகும். கூட்டாட்சி நீதிமன்ற அமைப்பில் தலைமை நீதிமன்றம் உயர்மட்ட நீதிமன்றமாக விளங்குகிறது.

## 6.7 தலைமை நீதிமன்றம் (Supreme Court)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நீதித்துறையின் உச்சியில் காணப்படுவது

தலைமை நீதிமன்றமாகும். இந்நீதிமன்றம் 1789-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டப்படி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தலைமை நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையைக் குறித்து அரசியலமைப்பு எதுவும் குறிப்பிடவில்லை. முதலில் தலைமை நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் ஐந்து மற்றும் துணை நீதிபதிகளையும் கொண்டிருந்தது. நீதிபதிகளின் எண்ணிக்கை அவ்வப்போது மாற்றப்பட்டு தற்பொழுது இந்நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் எட்டு மற்ற நீதிபதிகளும் உள்ளனர். இந்நீதிபதிகள் குடியரசுத் தலைவரால் செனட் அவையின் ஆலோசனையும் அனுமதியும் பெற்று நியமிக்கப்படுகிறார்கள். குடியரசுத்தலைவரின் தலைமை நீதிமன்ற நீதிபதி நியமனம் செனட்டர்களுக்குக் காட்டப்படும் மரியாதைக்கு உட்பட்ட தல்ல. ஆனால் சில சமயங்களில் குடியரசுத் தலைவர் செய்யும் நீதிபதி நியமனம் செனட் அவையால் நிராகரிக்கப்படுகிறது. அரசியலமைப்பால் நீதிபதிகளின் தகுதிகள் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே பல முறை சட்டத்துறையில் அதிக அனுபவமில்லாத நீதிபதிகள் தலைமை நீதிபதிகளாக குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தீவிரமாக அரசியலில் ஈடுபட்ட பலரும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டதுண்டு. நீதிபதி நியமனத்தில் அரசியல் முக்கிய பங்கு வகிக்கின்றது. அவர்கள் நன்னடத்தைக் காலம் வரை பதவியிலிருக்கலாம் அல்லது எழுபது வயது முடிந்தவுடன் பதவியிலிருந்து ஓய்வு பெறலாம். இது நாள் வரையிலும் ஒரே ஒரு நீதிபதி மட்டும் தான் குற்ற விசாரணை செய்யப்பட்டுள்ளார். அக்குற்ற விசாரணைக்குட்பட்ட நீதிபதி வழக்கின் இறுதியில் குற்றவாளியல்ல என்று விடுவிக்கப்பட்டார். நீதிபதிகளின் ஊதியம் காங்கிரசால் நிர்ணயிக்கப்படுகிறது.

நீதிபதிகளின் பதவிக்காலத்தின் போது அவர்களது ஊதியத்தைக் குறைக்க முடியாது. தலைமை நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெறும் நீதிபதிகள் வாழ்நாள் முழுவதும் முழு ஊதியம் பெறுகிறார்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களை எந்தக் கூட்டாட்சி நீதிமன்றத்திலும் நீதிபதியாக பணியாற்றக் கோரலாம். ஆனால் பதவி விலகும் நீதிபதிகளுக்கு இச்சலுகை கிடையாது. தலைமை நீதிபதி தலைமை நீதிமன்றத்துக்குத் தலைமை தாங்குவதுடன் மற்ற நீதிபதிபதிகளுக்கு வேலைகளைப் பிரித்து அளிக்கின்றனர். மேலும் விசாரணை செய்யப்பட்ட ஒரு வழக்கிற்குத் தீர்ப்பு எழுதும் படியும் மற்ற நீதிபதிகளைத் தலைமை நீதிபதி கோரலாம்.

கூட்டாட்சி நீதிமன்றங்களின் அதிகார வரம்பு அரசியலமைப்பு விதி 11-இல் பிரிவு இரண்டில் கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் எழும் நடுநிலை மற்றம் சட்டம் நுணுக்கம் சார்ந்த வழக்குகள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டங்களும், உடன்பாடுகளும் கூட்டாட்சி நீதித்துறை அதிகாரத்தின் கீழ் வருகின்றன. வெளிநாட்டுத் தூதுவர் சம்பந்தப்பட்ட வழக்குகள், அமைச்சர் சார்ந்த வழக்குகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் சார்ந்த வழக்குகள், அரசுக்கும் இன்னொரு அரசின் குடிமக்களுக்கிடையே எழும் வழக்குகள், ஒரு அரசின் குடிமக்கள் பல அரசுகள் வழங்கிய நிலமானியங்களின் உரிமை கொண்டாடும் போது எழும் வழக்குகள் மற்றும் அரசு அல்லது அதன் குடிமக்கள் வெளிநாட்டு அரசு அல்லது குடிமக்களின் மீது எழுப்பும் வழக்குகள் ஆகியவற்றை விசாரித்து நீதி வழங்கும் அதிகாரத்தை அரசியலமைப்பு கூட்டாட்சி நீதிமன்றங்களுக்கு வழங்கியுள்ளது.

நேரடியாக விசாரணை செய்யும் அதிகாரமும், மேல்முறையீடு காரணமாக விசாரணை செய்யும் அதிகாரமும் தலைமை நீதிமன்றத்திற்குண்டு. அயல் நாட்டுத்

தூதுவர்கள் அல்லது அயல்நாட்டு பிரதிநிதிகள் அல்லது மாநிலம் சம்பந்தப்பட்ட வழக்குகள் மட்டும் தான் இந்த நீதிமன்றத்தில் நேரடியாக விசாரணை செய்யப்பட முடியும். இரண்டு அல்லது அதற்கதிகமான மாநிலங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் தலைமை நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யப்பட வேண்டும்.

இந்நீதிமன்றம் புரியும் பணியில் பெரும்பாலனவை அதற்கு மேல் முறையீடு மூலமாகக் கிடைப்பதாகும். பின்வரும் மூன்றில் ஏதாவதொரு முறையில் இந்நீதிமன்றத்தின் முன் வழக்குகள் கொண்டு வரப்படுகின்றன. சான்றிதழ் முறை மேல்முறையீடு ஆவணக்கேட்பு, நீதிப்பேராணை ஆகியவை இம்மூன்று முறைகளாகும். இக்கட்டான பிரச்சனையொன்றிற்காகப் பரிகாரம் காண்பதற்காகக் கீழ் நிலையிலுள்ள கூட்டாட்சி நீதிமன்றமொன்று தலைமை நீதிமன்றத்தின் உதவியை நாடுவதுதான் சான்றிதழ் முறை எனப்படுவது. இதனை அடிக்கடி பயன்படுத்துவதில்லை. மாநிலத்தலைமை நீதிமன்றத்தினின்றும், பிற கூட்டாட்சி நீதிமனறத்தினின்றும் மேல் முறையீடு செய்வதன் மூலம் தலைமை நீதிமனறத்திற்கு வழக்குகளைக் கொண்டு வரலாம். போதுமானவரை கூட்டாட்சி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அடங்கிய வழக்குகள் மட்டுமே தலைமை நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

தலைமை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் பெரும்பாலான வழக்குகள் ஆவணக்கேட்பு நீதிப் பேராணை என்பது லத்தீன் பதமான செர்ஷியேரேரை என்பதன் மொழி பெயர்ப்பாகும். நன்கு உறுதிப்படுத்துதல் என்பதைத்தான் இந்த லத்தின் பதம் குறிப்பிடுகிறது. இந்நீதிப் பேராணை அனுமதிக்கப்படும் பொழுது வழக்கை விசாரணை செய்த கீழ்நீதிமன்றம் அவ்வழக்கு சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்கள் யாவற்றையும் புனராய்வு செய்வதற்கு தனக்கனுப்பப்பட்ட வேண்டும் என்று தலைமை நீதிமன்றம் உத்தரவிடும். விசேடமான, அல்லது முக்கியமான காரணங்கள் இருப்பதாகத் தென்படின் இந்நீதிப் பேராணையைத் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளில் யாராவது நான்கு பேர் வழங்கலாம். காரணம் கூறாமலேயே மேல் முறையீட்டை மறுக்கவும் நீதிப்பேராணையை மறுக்கவும் தலைமை நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. மேல்முறையீடுகளை ஏற்றுக் கொள்வதென்பது தலைமை நீதிமன்றத்தின் விருப்பத்தைப் பொறுத்தது. இதற்கு காரணம் அந்நீதிமன்றத்திற்குள்ள வேலைப் பளுதான்.

இந்தியத் தலைமை நீதிமன்றத்தைப் போல அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்திற்கு ஆலோசனை கூறும் அதிகாரம் கிடையாது. தலைமை நீதிமன்றம் சட்டமன்றம் அல்லது ஆட்சித்துறை ஒரு சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்தும் போது சட்டத்தைக் குறித்து ஏதாவது வினா எழுமேயானால் தான் நீதித்துறை தலையிடும். தலைமை நீதிமன்றத்தின் முடிவுகள் இறுதியானவை. அவற்றை எதிர்க்க யாராலும் முடியாது. இத்தலைமை நீதிமன்றம் முதல் கூட்டம் அக்டோபர் முதல் திங்கள் கிழமை தொடங்கி ஜுன் மாதம் நடுவில் முடிவடைகின்றது. முடிவுகள் எடுக்கப்படும் போது, எல்லா நீதிபதிகளும் இருந்து பெரும்பான்மை விருப்பத்தின் படி முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் அரசு செய்தி தொகுப்பின் மூலம் வெளியிடப்படுகின்றன.

தலைமை நீதிமன்ற அதிகார வரம்பு இதன் உண்மையான நிலையையும், மதிப்பையும் அதிகாரத்தையும் பற்றி தெளிவாக விளக்கவில்லை. எனவே அமெரிக்க அரசியல் அமைப்பில் தலைமை நீதிமன்றத்தின் பங்கைப் பற்றித் தெரிந்து கொண்டால்

தான் தமக்கு அதன் உண்மை நிலை விளங்கும்.

தலைமை நீதிமன்றம் முதலாவதாக அரசியலமைப்பு விளக்கும் முடிவான நிலையை பெற்றுள்ளது. இதனடிப்படையில் நீதித்துறை உயர் அதிகாரம் படைத்தது. என்ற கோட்பாட்டை தக்கவைத்துக் கொண்டது. இதனை விளக்கும் வகையில் ஹியுஸ் என்பவர் அமெரிக்கர்கள் அரசியலமைப்பைப் பின்பற்றுகிறார்கள். ஆனால் அரசியலமைப்பு என்பது நீதித்துறை என்ன கூறுகின்றதோ அதுதான் அரசியலமைப்பு என்று கூறுகிறார். மேலும் நீதித்துறையின் மிக முக்கியமான பணி நீதிப்புரனராய்வாகும். அரசாங்க நிறுவனங்கள் நடவடிக்கைகள் அரசியலமைப்புக் கோட்பாடுகட்கு உட்பட்டுள்ளனவா என்று பரிசீலிப்பது நீதிப்புனராய்வு என்று குறிக்கப்படுகிறது. சமீபகாலம் வரை உலகிலேயே சட்டமன்றம் இயற்றும் ஒரு சட்டம் அரசியலமைப்புக்குட்படாமல் இருந்தால் அதைச் செல்லாது என்று கூற அதிகாரம் பெற்றிருந்த நீதிமன்றம் அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் மட்டுமேயாகும். இம்முறை நன்மை பயப்பதாகவே உள்ளது. சில கருத்தாய்வாளர்கள் அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் நீதிப்புனராய்வு அதிகாரத்தைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துவதாகக் கருதுகிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல, 225 ஆண்டுகளில் தலைமை நீதிமன்றம் 10 சட்டங்களை மட்டும் தான் செல்லாது என்று கூறியுள்ளது. இதனடிப்படையில் நாம் இரண்டு கருத்துக்களைத் தெரிந்து கொள்ளலாம். ஒன்று தலைமை நீதிமன்றம் செல்லாது என்று கூறிய 10 சட்டமுன்வரைவுகளும் அமெரிக்க மக்களின் அரசியல் பொருளாதார விருப்பங்களை வெகுவாகப்பாதிப்பாக இருந்தது. இரண்டாவது, நீதிப்புனராய்வு என்ற அதிகாரமே காங்கிரசும் மாநில சட்டமன்றங்களும் இயற்றும் சட்டங்களின் பொருளை மிகவும் பாதிக்கின்றது.

தலைமை நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரம் அதை ஒரு சாதாரண சட்டங்களால் ஆன நீதிமன்றத்தை விட உயர்ந்ததாக ஆக்குகிறது. லாஸ்கி கூறுவதுபோல, நீதிமன்றம் அமெரிக்காவின் மூன்றவாது அவையாக ஆகிறது. சட்டங்கள், இயற்றப்படுவதுடன் முடிந்துவிடுவதில்லை. சட்டமாக்கம் ஒரு சட்டத்தைத் தொடங்குவதுடன் நின்றுவிடுகிறது. ஆனால் நீதிமன்றங்கள் தான் சட்டங்களின் விதியையும் அதன் விளக்கத்தையும், நடைமுறையில் அவை எப்படிப் பின்பற்ற வேண்டும் என்பதையும் நிர்ணயம் செய்கின்றது என்று கூறுகிறார். நீதித்துறையின் முடிவு சட்டங்களின் விளக்கத்தையும் அளிக்கின்றது. அதே போன்று நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு புதிய விளக்கங்களை நீதிமன்றம் அளிக்கின்றது.

எனவே தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பின் அடிப்படை விதிகளை சட்டமன்றம், ஆட்சித்துறை இவற்றின் பிடியிலிருந்து காப்பாற்றுகின்றது. அவ்வாறு செய்யும் போது தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பை ஒரு வழிகாட்டியாகப் பாவிக்கின்றது.

ஜேம்ஸ் பீக் (James Beck) என்பவர் தலைமை நீதிமன்றம் நீதிவழங்கும் நீதிமன்றமாக மட்டுமல்லாமல் தகுதியின் அடிப்படையில் தொடர்கின்ற அரசியலமைப்பு மரபு என்று கூறுகிறார்.

தலைமை நீதிமன்றத்தைப் பற்றிய குறைபாடு அது அமெரிக்க அரசியலில் பழமையின் பாதுகாவலனாக உள்ளது என்பதாகும். தலைமை நீதிமன்றம் எப்பொழுதும் பொதுமக்கள் சுதந்திரத்தையும், மக்கள் உரிமையையும் பாதுகாக்கும் அங்கமாக விளங்குகிறது. எப்பொழுதும் சொத்துரிமையை நிலைநாட்டுகிறது. எனவே பல

புரட்சிகரமான, ஏழைகளுக்கு நன்மை செய்யும் சமூகச் சட்டங்களுக்கு எதிராகச் செயல்படுகிறது. தலைமை நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு 1857-ஆம் ஆண்டில் அடிமை முறைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. அதேபோன்று 1952-ஆம் ஆண்டு எ∴கு தொழிற்சாலையை அரசாங்கமயமாக்க காங்கிரஸ் கொண்டு வந்த சட்டத்தைச் செல்லாது என்று தலைமை நீதிமன்றம் புறக்கணித்தது. பொதுவாக தனிமனிதர் பொருளாதார கொள்கையின் அடிப்படையில் அரசாங்க ஆக்கிரமிப்பை முறியடிக்கும் வகையில் தலைமை நீதிமன்ற நீதிப்புனராய்வு அமைந்துள்ளது.

## 6.8 நீதிப்புனராய்வு

ஒரு சட்டம் அல்லது அதிகாரிகளின் செயற்பாடு அடிப்படைச் சட்டத்திற்கும், அரசியலமைப்பிற்கும் முரணாக இருப்பின் அது செல்லுபடியாகாது என்று கூறும் அதிகாரம் நீதிப்புனராய்வு என்று கூறப்படுகிறது. இன்னொரு விதமாகச் சொன்னால், ஆட்சித்துறை, சட்டத்துறை மற்றும் நிர்வாகத்துறை அதிகாரிகளின் செயல்களில் எவை எல்லாம் அரசியலமைப்புக்குப் புறம்பானதோ அவையெல்லாம் அரசியலமைப்புக் கெதிரானது. எனவே அவைகள் சட்டமாகாது என்று நீதிமன்றம் உரைக்கின்றது. பொதுவாக, ஆனால் கண்டிப்பாக இல்லாமல், நீதிப்புனராய்வு கூட்டாட்சி நாடுகளில் காணப்படுகிறது. ஏனெனில் அங்கு அதிகாரங்கள் மத்திய மாநில அரசுகளுக்கிடையே பிரித்தளிக்கப்படுகின்றது.

எனவே, நீதிப்புனராய்வு என்பது நிர்வாகத் துறையின் செயல்கள் அல்லது சட்டத்துறையில் சட்டமுன்வரைவுகள் அரசியலமைப்புக்கு உட்பட்டதா என்பதை நீதிமன்றம் ஆராயும் அதிகாரத்தைக் குறிக்கிறது. அவ்வாறு அரசியலமைப்பிற்கு உட்படாமல் இருப்பின், சட்டமன்றத் துறையால் இயற்றப்பட்ட சட்டமுன்வரைவு செல்லாது என்று கூறும் அதிகாரம் நீதித்துறைக்கு உண்டு. அமெரிக்க நீதித்துறையின் இவ்வதிகாரம் சில கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவைகளை நாம் இங்கு காண்போம்.

நீதிமன்றம் ஒரு வழக்கில் சட்டம் அல்லது ஒரு சச்சரவு ஆகியவற்றைப் பற்றி விசாரிக்க வேண்டுமாயின் சட்டம் அல்லது சச்சரவினால் பாதிக்கப்பட்ட கட்சிகள் நீதிமன்றத்திடம் முறையிட வேண்டும்.

நீதிமன்றம் ஒரு சட்டத்தைப் பொதுவான முறையில் நீதிப்புனராய்வு செய்யாது அச்சட்டத்தில் சிக்கலான ஒரு குறிப்பிட்ட பிரச்சனைக்கு விளக்கம் அளிக்க வேண்டிய நிலை இருந்தால் தான் அச்சட்டத்தை நீதிப்புனராய்வுக்கு எடுத்துக் கொள்ளும்.

நீதிப்புனராய்வு நீதிமன்றத்திற்கு வழக்கைக் கொண்டு வருபவர் பாதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். மேலும் அவர் தலைமை நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்னால் மற்ற எல்லா நீதிமன்றங்களிலும் பரிகாரம் தேடியவராக இருக்க வேண்டும்.

நீதிமன்றம் அரசியல் சச்சரவுகளை நீதிப்புனராய்விற்கு எடுத்துக் கொள்ளாது. சட்ட அம்சத்தை மட்டும்தான் அது நீதிப்புனராய்விற்கு எடுத்துக் கொள்ளும்.

நீதிப்புனராய்வின் விளைவாக நீதிமன்றம் ஒரு சட்டத்தை முழுவதுமோ அல்லது அந்த ஒரு பகுதியையோ செல்லுபடியாகாது என்று கூறும் அதிகாரம் படைத்துள்ளது. ஒரு சட்டத்தைச் செல்லுபடியாகாமல் செய்வதற்கு அச்சட்டம் அரசியலமைப்பிற்கு எவ்வளவு தூரம் முரண்பட்டது என்பதைத் தான் ஆராயுமே ஒழிய அச்சட்டத்தை

இயற்றியவர்களின் உள்நோக்கத்தை பற்றி நீதிமன்றம் ஆராயாது.

அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பல அறிஞர்கள் குறை கூறியுள்ளார்கள். நீதிப்புனராய்வு அதிகாரம் ஆட்சித்துறைக்கும் நீதித்துறைக்கும் இடையே மோதலை உண்டாக்குகின்றது. மேலும் பழமை விரும்பிகளான நீதிபதிகளுடைய கையில் நீதிப்புனராய்வு அதிகாரம் மக்களின் முன்னேற்றத்தைத் தடை செய்யும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, நீதிப்புனராய்வு அதிகாரம் நீதிமன்றத்தின் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் பன் மடங்கு உயர்த்தியுள்ளது. எனவே நீதிமன்றம் சட்டமன்றத்தின், மூன்றாவது அவையாக அல்லது ஒரு உச்சி அவையாக இன்று மாறியுள்ளது. நீதிமன்றம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அதிகாரத்தைப் பெரிதும் குறைந்து விட்டது.

ஆயினும் நீதிப்புனராய்வு என்ற கோட்பாட்டில் இவ்வளவு குறைபாடுகள் இருப்பினும் அது ஒரு மக்களாட்சி நாட்டில் இன்றியமையாதது என்பதை யாரும் மறுக்க முடியாது. சாதாரண மக்களின் உரிமையையும், சுதந்திரத்தையும், ஆட்சித்துறை மற்றும் சட்டத்துறை ஆகியவைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றுவதற்கு நீதிப்புனராய்வு அதிகாரம் ஒரு கருவியாக விளங்குகின்றது.

**நீதிப்புனராய்வு-திறனாய்வு**

நீதித்துறையின் உண்மையான நிலையையும் அதன் பங்கையும் தெரிந்து கொள்ள நாம் நீதித்துறையின் அமைப்பு மற்றும் நிலையைப் பற்றி மட்டும் அறிந்து கொள்ளாமல் அதன் செயல்முறைகளையும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. பாரம்பரியக் கருத்தின்படி நீதித்துறை ஒரு அரசாங்கத்திற்குத் தேவையான ஒன்றாகும். சான்சலர் கென்ட் என்பவர் ஆட்சித்துறையின் சட்டங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒரு நீதித்துறையில்லாத போது, மற்ற அரசாங்கத் துறைகள் அதிகாரம் பெற்று மக்களுடைய சுதந்திரத்தையும் உரிமையையும் அழிக்கும் நிலை ஏற்பட்டு விடும் என்று கூறுகிறார்.

அனுபவத்தால் நீதித்துறையின் நிலையை நாம் ஆராய்ந்தால், அரசியல் நீதித்துறையின் எல்லா இடங்களிலும் புகுந்திருப்பதைக் காணலாம். நீதிபதிகளை நியமிக்கும் முறையிலிருந்தே நீதித்துறை அரசியலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பது நமக்குப் புலனாகின்றது. அமெரிக்காவில் குடியரசுத்தலைவர் நீதிபதிகளின் நியமனம் முழுவதும் அரசியலுக்கு உட்பட்டிருக்கின்றது. மேலும் நீதித்துறையில் அரசியல் கலந்திருப்பது ஆட்சித்துறை மற்றும் சட்டத்துறையின் ஆக்கிரமிப்பினால் ஏற்படுகின்றது. பல நாடுகளில் நீதித்துறையின் முடிவுகள் உண்மையான ஆட்சித்துறையின் தலைவரின் கருத்துக்களுக்குப் புறம்பாக அமையுமானால் நீதித்துறையை ஆணவத்துடன் புறக்கணிக்கிறார்கள். எனவே, நீதித்துறையின் சுதந்திரம், சுய ஆட்சி என்ற கருத்துக்களுக்கு இடமில்லாமல் போகின்றது. உதாரணமாக 1969ஆம் ஆண்டில் இந்தியாவில் வங்கிகள் தேசீயமயமாக்கப்பட்ட சட்டத்தைச் செல்லாது என்று நீதிமன்றம் கூறியவுடன் அந்நீதிபதிகளை பதவி விலக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இறுதியாக, நீதிபதிகளும், ஏனைய மக்களைப் போலவே நாட்டில் வாழ்கிறார்கள். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நடைபெறுகின்ற செயல்களை அறிந்து கொள்ள வானொலி, பத்திரிக்கை, தொலைக்காட்சி போன்ற தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள். அதனால் நீதிபதிகள் தங்கள் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றனர்.

நீதிபதிகளின் சமூகப்பின்னணியும் அவர்களிடம் செல்வாக்கு பெற்று விளங்குகிறது.

எனவே, அரசியல் நடைமுறையில் நீதிமன்றங்களுக்கும் ஒரு பங்கு உண்டு என்று கூறலாம். இது ஒரு அரசியல் அமைப்பின் தன்மையைப் பொறுத்து மாறுபடுகின்றது. நீதித்துறைக்கும் மற்ற அமைப்புகளுக்கும் பிரச்சனைகளும், ஒற்றுமையும் சேர்ந்தே இருந்தால்தான் அரசியல் அமைப்பு தேய்ந்து போகாமல் வளர்ச்சியுறும். எல்லா அ[illegible]ங்க அங்கங்களும் அதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து மற்ற அமைப்புடன் சுமுகமான தொடர்புடன் இயங்க வேண்டும். நீதிமன்றங்கள் அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருந்து ஆட்சித்துறையின் ஒரு உட்பிரிவாக இருந்து மற்ற அமைப்புகளுடன் அரசியல் அமைப்பில் விளங்க வேண்டும்.

## 6.9 அமெரிக்க அரசியல் கட்சிகள்

அமெரிக்க அரசியல் கட்சிகளுக்கே உரிய தனிப்பட்ட இயல்பு உண்டு. இங்கு கட்சி என்ற சொல்லுக்கே வேறுபாடான பொருள் இருக்கின்றது. இங்கு தன்னலக் குழுக்கள் கட்சிகளின் முக்கியத்துவத்தையும் மிஞ்சிவிடுகின்றன. ஒரு பொறுப்பான முறையிலே ஒரு பெரிய அரசாங்கம் இயங்குவதற்கு வேண்டிய எல்லாவற்றையும் தன்னலக் குழுக்களால் செய்தல் இயலாது என்று அமெரிக்க மக்கள் உணர்ந்தனர். இச்சூழ்நிலையில் கிளின்ட்டன் ராசிட்டர் என்ற ஆசிரியர் கூறுவதாவது குடியாட்சி இல்லாமல் அமெரிக்கா இல்லை. அரசியலில்லாமல் குடியாட்சி இல்லை கட்சிகளில்லாமல் அரசியல் இல்லை. விட்டுக்கொடுக்கும் இயல்பும் நிதானப் போக்கும் இல்லாமல் கட்சிகள் இல்லை.

பிரிட்டனில் 'அரசியல் கட்சிகள்' என்பதற்கு உரிய பொருள் அமெரிக்க அரசியல் முறைக்குப் பொருந்தாது. அமெரிக்க அரசியல் முறையில் அரசியல் முறை என்பது பர்க் கூறியவாறு ஒரு சமூக சமுதாயமென்ற வழக்கமான முறையில் அல்லாமல் வேறு வகையாகக் குறிப்பிடப்படுகிறது. "அரசாங்க இயந்திரத்தைத் தாம் நேரடியாகப் பயன்படுத்துவதன் மூலம் சமூக, பொருளாதார நலன்களை அரசியல் அதிகாரமாக மாற்ற விரும்பும் தனியாட்களின் கூட்டமே அரசியல் கட்சி ஆகும்" என்பது அமெரிக்காவின் அரசியல் கட்சி பற்றிய கருத்தாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு அரசியல் கட்சி என்பது வாக்குகளைத் தேடிப்பிடிக்க உதவும் ஓர் இயந்திரம் அல்லது வாக்குகளைத் திரட்டும் செயலாள் என்று பி.ஹெரிங்க் என்பவர் கூறுகிறார். அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் இலட்சியத்துக்காக தங்களை ஒப்படைத்தல் என்ற தன்மையில் இல்லை, எனவே அங்கு அமைப்பில் கடுமையான கட்டுப்பாடும் இல்லை. ஆனால், பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளில் இந்த இரண்டும் அடிப்படையான கூறுகளாகும். பிரிட்டனைப் போல, அமெரிக்காவில் கட்சி முறையின் வளர்ச்சியானது, அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு அப்பால் ஏற்பட்ட ஒன்றாகும். அங்கு அரசியலமைப்பு வரையப்படும் போது கட்சி முறையின் வளர்ச்சியைப் பற்றி கருத்தும் தோன்றிற்று என்பது அமெரிக்கக்கட்சி முறையைக் கூர்ந்து ஆராய்ந்தால் தெரியவரும். அரசியலமைப்பை உருவாக்கியவர்களே கட்சி அடிப்படையில் பிளவுபட்டிருந்தனர். ஒரு ஆற்றல் மிக்க மைய அரசாங்கம் வேண்டுமென்ற கருத்தை ஆதரித்த ஒரு குழுவினர் (கூட்டாட்சியினர்) இருந்தனர். மாநிலங்களுக்கு கூடுதலான அதிகாரம் வேண்டுமென்று கூறியவேறொரு குழுவினரும் (எதிர்க் கூட்டாட்சியினர்) இருந்தனர். காலப்போக்கில் கூட்டாட்சிக் கட்சியானது குடியாட்சிக்கட்சி என அழைக்கப்பட்டது. எதிர் கூட்டாட்சிக் கட்சியினர் குடியரசுக் கட்சி என அழைக்கப்பட்டனர். உட்ரோவில்சன், பிராங்களின் டி. ரூஸ்வெல்ட்,

எஸ். ட்ருமன், ஜே.எப். கென்னடி, லின்டன் பி. ஜான்சன், ஜிம்மி கார்ட்டர், ஜார்ஷ்புஷ் போன்ற குடியரசுத்தலைவர்களின் காலங்களின் குடியாட்சி ஆட்சி அதிகாரம் செலுத்திற்று. ஆபிரகாம் லிங்கன், தியோடோர் ரூஸ்வெல்ட், ஐசன்ஹோவர் ஆகியோருடைய பதவிக்காலங்களில் குடியரசுக் கட்சி அதிகாரத்தில் இருந்தது. இவ்வாறு இரண்டு கட்சிகளின் தோற்றமும் வளர்ச்சியும் அங்கு இருகட்சி முறை நிலைத்து நிற்பதற்கு வழிவகுத்தன. இம்முறை அமெரிக்க அரசியல் வாழ்வில் ஒரு பாகமாகவே அமைந்து விட்டதாகையால் இதை அமெரிக்க மக்கள் ஒரு மரபாகவே எடுத்துக் கொள்கின்றனர்.

தற்கால அரசியல் முறைகளிலே, ஒவ்வொரு நாட்டின் கட்சி முறையும் தனக்கே உரிய சில இயல்புகளைக் கொண்டுள்ளது. இதைப் போல அமெரிக்கக் கட்சி முறைக்கு சில தனிப்பட்ட இயல்புகள் இருக்கின்றன. அமெரிக்கர்களைப் பொறுத்தவரையில் குடியாட்சி அரசாங்கம் என்பது கட்சி அரசாங்கமே ஆகும். அமெரிக்க முறையிலே இருபெருங்கட்சிகள் உள்ளன என்ற அளவில் அது கிரேட் பிரிட்டனின் முறையை ஒத்து இருக்கின்றது. அவ்வப்போது மூன்றாம் கட்சிகளும் தோன்றியுள்ளன என்பது உண்மை தான். 1920-ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பொதுவுடைமைக்கட்சி அமைக்கப்பட்டது. வேறு மூன்று அல்லது நான்கு சிறிய கட்சிகளும் இருக்கின்றன. ஆயினும் பல 'மூன்றாம் கட்சிகள்' விரைவில் மறைந்து விடுகின்றன. மேலும், அவற்றில் எதுவும் தேசியத் தேர்தல்களில் வெற்றி எல்லைக்கு அருகில் கூட எப்போதும் வந்ததில்லை. சாதாரணப் பெரும்பான்மைத் தேர்தலை உடைய ஒற்றை உறுப்பினர் தொகுதிகளே இரண்டு கட்சிகளின் வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கின்றன. இவ்வகைத் தொகுதிகள் பிரிட்டனிலும் இதே விளைவை ஏற்படுத்தின. அமெரிக்காவில் இரு கட்சிகள் இருப்பதற்கு மேலும் ஒரு காரணம் உண்டு. இரண்டு குழுக்களாகப் பிரிந்திருத்தல் என்ற அமெரிக்கருடைய இயல்பில் இக்காரணம் காணப்படுகிறது.

அரசியலமைப்புக்கு அப்பாற்பட்ட வளர்ச்சி, இருபெரும் கட்சிகள் இருத்தல் ஆகியவை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள கட்சிகளுக்கிடையே நிலவும் சில ஒற்றுமைகள் என்று நாம் பார்த்தோம். எனினும் இரு நாடுகளின் கட்சிகளின் அமைப்பில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. அமெரிக்காவில் இரண்டு பெரிய கட்சிகளுக்குமிடையே இலட்சியம் அல்லது கோட்பாட்டளவில் வேறுபாடு எதுவும் கிடையாது. அமெரிக்கக் கட்சிகள் இலட்சிய அல்லது கோட்பாடு ஒற்றுமைக்கும் பிரச்சனை அளவில் போராட்டத்திற்கும் பெயர் பெற்றிருக்கின்றன என்று ஆர்.தால் என்பவர் ஒரு முறை குறிப்பிட்டார். அவைகளைத் தெளிவாக வேறுபடுத்தக் கூடிய அடிப்படையான பிரச்சனைகள் அங்கு இல்லை என்று கூறலாம். அவற்றின் தேர்தல் மேடைகளும் கோட்பாடில்லாமல் சொல் அளவில் வேறுபடுகின்றன. பிரிட்டனில் முக்கிய கட்சிகளுக்கிடையே கொள்கைகளிலும், திட்டங்களிலும் தெளிவான வேறுபாடுகள் இருக்கின்றன.

அமெரிக்காவில் இலட்சிய வேறுபாடுகள் என்பனவெல்லாம் முழுவதும் மறைந்து விடுகின்ற காரணத்தால், அங்கு இரு கட்சிமுறை இருப்பதாகக் கூறுவதே பெரும்பாலும் சரியான கூற்று அல்ல. ஃபைனர் என்பவருடைய கூற்றுப்படி "அமெரிக்காவில் குடியரசுக் கட்சியும் குடியாட்சிக் கட்சியும் இணைந்த ஒரே ஒரு கட்சிதான் இருக்கிறது. வழக்கங்களினடிப்படையிலும் ஆட்சியைத் கைப்பற்றுதல் என்ற அடிப்படையிலும் அது

பெரும்பாலும் இரண்டு சமபாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அக்கட்சியின் ஒரு பாதியாக குடியரசுக் கட்சியும், இன்னொரு பாதியாகக் குடியாட்சிக் கட்சியும் இருக்கின்றன". ஓர் அமெரிக்கர், ஒரு குறிப்பிட்ட கட்சியிலிருக்கிறார் என்றால் அதற்கு அடிப்படையான காரணம் அவருடைய தகப்பனாரும், பாட்டனாரும் அதில் இருந்தனர் என்பது அல்லது அக்கட்சி அவர் வாழும் பிரதேசத்தில் நன்றாக வேரூன்றியுள் ்டு என்பதே ஆகும். சுருங்கக் கூறின் ஒரு அமெரிக்கக் கட்சியானது, கொள்கைகள் நிறைந்த ஒரு அமைப்பாக அல்லாமல், பல நலன்களை சேர்ந்த ஒரு தொகுதி ஆகும்.

கட்சி அமைப்பு: அமெரிக்காவில், அரசியல் கட்சிகள் தேசியக் ச ்சிகளாக இருப்பதால் அவற்றின் அமைப்பைப் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும். ஆனால் அவற்றின் அமைப்பை உருவாக்கும் ஈர்ப்புச் சக்திகள் மாநிலங்களிலும், நகரங்களிலும், கவுண்ட்டிகள் எனப்படும் உள்ளாட்சிப் பிரிவுகளிலும் காணப்படுகின்றன. தேசிய மட்டத்தைவிட உள்ளூரி மட்டத்திலும், மாநில மட்டத்திலும் கட்சி அமைப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனென்றால், அங்கும் தேர்தல்களெல்லாம் மாநிலங்களால் நடத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றன. அமெரிக்க அரசியலமைப்பை செனட்டின் உறுப்பினர்களும், பிரதிநிதிகள் அவையின் உறுப்பினர்களும், தாங்கள் எந்த மாநிலத்தின் பிரதிநிதிகளாகவும் மாவட்டத்தின் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனரோ, முறையே அந்தந்த மாநிலத்திலும் மாவட்டத்திலும் குடியிருக்க வேண்டும். ஆகையால் மாநில உள்ளூர் கட்சிக் கூறுகளுக்கு வேட்பாளர்களைப் பெயர் குறித்து நிறுத்துவதில் இறுதியான பங்கு இருக்கிறது. தேசிய உயர் பதவிக்கும் அந்நிலை பொருந்தும். இதன் விளைவாக, தேசிய கட்சி அமைப்பானது மாறுபட்டுள்ளது. அங்கு கட்சி அமைப்பின் முழு ஆற்றலும் தெளிவாக உயர்மட்டத்திலேயே காணப்படுகிறது. அமெரிக்கக் கட்சிகள் மிகவும் தளர்வாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கு கட்சி ஏணியில் கீழிருந்து மேலாகவோ, மேலிருந்து கீழாகவோ அதிகாரம் செலுத்துவதில்லை, உண்மையான இணைப்பும் இல்லை.

கட்சி அமைப்பை நுட்பமாக நோக்கும் போது, இரண்டு கட்சிகளும் பிரமிட் கோபுர அல்லது கூம்பு வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. இந்தக் கோபுரத்தின் அடித்தளத்தில் கட்சியின் அமைப்பு, அடித்தள அலகு தொகுதி, நகரம், வட்டம் முதலிய பிரிவுகளில் காணப்படுகின்றது. அடித்தள அலகு என்பது அமெரிக்காவில் கட்சி அமைப்பின் கீழ்மட்டத்திலுள்ள கூறு அல்லது அலகு ஆகும். அந்நாட்டில் 1,30,000 அடித்தள அலகுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் 1000 முதல் 5000 வரை வாக்காளர்கள் இருக்கின்றனர். அவர்களே கட்சி அமைப்பில் காணப்படும் முக்கியமான ஆட்கள் ஆவார். தொகுதிக் குழு என்பது நகர்புற பகுதியில், கட்சி அமைப்பில் அடித்தள அலகுக்கு அடுத்த மேல்மட்டத்தில் இருக்கிறது. தொகுதிக் குழுவுக்கு மேல்மட்டத்தில் இருப்பது நகரக்குழு. இது அடித்தள அலகுகளிலும், தொகுதிகளிலும் உள்ள கட்சி கூறுகளின் வேலையை மேற்பார்வை செய்கிறது. இதற்கும் உயர் மட்டத்திலும் கட்சி அமைப்பில் இருப்பது வட்டத்தில் உள்ள கட்சி அமைப்பாகும். இதில் ஒரு தலைவரும், நடு அல்லது மையக் குழுவும் இருக்கின்றனர். வட்டத்தின் தலைவர் தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட மாநில, கூட்டாட்சி அலுவல்களில் எல்லாம் ஆட்களை அமர்த்துவதில் பெருமளவு ஆதிக்கம் செலுத்துகின்றார். அமெரிக்காவில் இத்தகைய வட்டங்கள் 5000க்கும் கூடுதலாக இருக்கின்றன.

மாநில மட்டத்தில் கட்சி அமைப்பில், ஒரு மாநில நடுக்குழுவும் ஒரு தலைவரும்

இருக்கின்றனர். மாநிலக் குழுக்கள் அளவில் வேறுபடுகின்றன. அவைகள் அமைக்கப்படும் விதமும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது. மாநில நடுக்குழு மாநிலத்திலுள்ள கட்சியின் எல்லா அமைப்புக்களையும் மேற்பார்வை செய்கிறது. அவைகள் நிதி திரட்டுகின்றன. தேர்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. சில சிறிய அலுவல்களுக்கான ஆட்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. சில மாநிலங்களில் நடுக் குழுக்கள் குடியரசுத் தலைவர், துணைக்குடியரசுத் தலைவர் ஆகிய பதவிகளுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கிற தேசிய நியமன அமைப்புக்கு வேண்டிய மாநிலப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன.

தேசிய மட்டத்தில் கட்சியின் முக்கிய உறுப்பாக இருப்பது தேசீயக் குழு ஆகும். குடியாட்சியின் தேசீயக் குழுவில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் ஒரு ஆண் உறுப்பினரும், ஒரு பெண் உறுப்பினராக இரண்டிரண்டு உறுப்பினர்கள் இருக்கின்றனர். 1952-ஆம் ஆண்டில் குடியரசுக் கட்சி தனது தேசீயக்குழுவில், மாநில நடுக் குழுக்களின் தலைவர்களைச் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்தது. தேசீயக் குழுவின் தலைவர், கட்சியினால் குடியரசுத்தலைவர் பதவிக்கான வேட்பாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் குழுவின் முறையாகத் தோந்தெடுக்கப்படுவது தான் வழக்கம். அவர் (தலைவர்) கட்சி அமைப்பில் மிக முக்கியமானவர். அவரே கட்சியின் கள அலுவலகத்தையும், விளம்பர துறையையும் கட்டுப்படுத்துகிறார். அவர் ஒரு நிர்வாகக் குழுவை அமர்த்துகிறார். இக்குழு குடியரசுத்தலைவர் தேர்தல் நடைபெற இருக்கும்போது, அத்தேர்தலைக் கவனித்துக் கொள்கிறது.

தேசியக் குழுவே மிக உயர்ந்த கட்சி உறுப்பாக இருந்த போதிலும், இதைவிட உயர்வானது தேசீய மாநாடு ஆகும். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும், அதை ஒத்த எண்ணிக்கையில் மாநிலங்களிலிருந்தும், பிரதேசங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுபட உறுப்பினர்களும் இருக்கின்றனர். இந்த தேசிய மாநாடு தான் குடியரசுத்தலைவர் மற்றும் துணைக்குடியரசுத் தலைவர் பதவிகளுக்கு உரிய வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கிறது. இதுவே தேசீயக்குழு தயாரிக்கும் கட்சிப் பரச்சாரத் திட்டத்துக்கு ஒப்புதலளிக்கிறது.

அண்மைக் காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கட்சி அமைப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டவை நேர்முக அடிப்படைக் குழுக்கள (Direct Primaries) ஆகும். இது தேர்தல்களுக்கு கட்சி வேட்பாளர்களை நிறுத்துவதில் பெருமளவு பங்கு கொள்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் மூவகை அடிப்படைக் குழுக்கள் இருக்கின்றன. முதலாவதாக வெளிப்படையான அடிப்படைக் குழுக்கள் 14 மாநிலங்களில செயல்படுகின்றன. இவற்றில் எல்லாக் கட்சிகளின் வேட்பாளர்களையும் நிறுத்துவதில் எல்லா வாக்காளர்களும் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி பங்கு எடுத்து கொள்கின்றனர். இரண்டாவதாக 'இரகசிய அடிப்படைக்குழுக் கூட்டத்தில்' ஒரு குறிப்பிட்ட கட்சியின் உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்ட வாக்காளர்கள் மட்டுமே பங்கு எடுத்துக்கொள்கின்றனர். மூன்றாம் வகையாக கட்சிச் சார்பற்ற அடிப்படைக் குழு ஒன்றும் இருக்கிறது. இது நடத்தும் தேர்தலில் எல்லா வாக்காளர்களும் கலந்து கொள்கின்றனர். வேட்பாளர்களின் கட்சித் தொடர்பு வாக்குச் சீட்டுகளில் குறிக்கப்படுவதில்லை. இந்த நேர்முக அடிப்படைக் குழு முறையானது கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில கட்சித் தலைவர்களைவிட விட கட்சியிலுள்ள எல்லா சாதாரண உறுப்பினர்களும் மிகவும் கூடுதலான அதிகாரத்தை வழங்குகிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கட்சித் தலைவர்களும், கட்சி இயந்திரங்களும் கட்சி அமைப்புக்களைக் கவனமாக இயக்குகின்றனர். கட்சி அமைப்புக்கள் நியூயார்க், சிகாகோ, கான்சாஸ் நகரம் போன்ற நகரங்களில் நன்றாக வேரூன்றியுள்ளன. தலைவர் என்பவர் ஊழல் முறைகளைக் கையாண்டு, கட்சியின் ஒரு நகரக் கிளையின் மீது தமக்கு முழுக் கட்டுப்பாட்டை தேடிக் கொள்ளும் ஒரு அரசியல் தொழிலாளர் ஆவார். அவர் கட்சி அமைப்பைக் கைப்பற்றுவதற்கு உதவும் கட்சி அலுவலக செயலர்களும், பணியாளர்களும் கட்சித்தலைவருடைய 'இயந்திரம்' ஆவார்கள். இவர்கள் மக்களாட்சி வடிவங்களையே சிதைத்து, அமெரிக்க அரசியல் முறையில் அதன் வேர்களை அரித்து, உருமாற்றி நாட்டின் கட்சி அரசியலில் ஒரு அருவருக்கத்தக்க இயல்பை உண்டாக்குகின்றனர். புரோகன் என்பவர், "அவர்கள் அமெரிக்க அரசியலில் ஆழமாக வேரூன்றி உள்ளனர்" என்று கூறுகின்றார். கட்சித்தலைவர் தனது இயந்திரத்தின் துணையுடன் தனது அதிகார எல்லைக்குள் பெருவாரியான அளவு வாக்குகளைத் தம் கட்டுப்பாட்டில் கொணரவும், அவற்றைத் தேர்தல் நாளில் பதிவு செய்யவும் கூடிய நிலையில் இருக்கிறார். இவர் இந்த அதிகாரத்தை வாக்காளர்களுக்கு அலுவல்கள் தேடித் தருதல், வெகுமதி அளித்தல் போன்ற பல பணிகளின் மூலம் பெறுகின்றார். இதனால் தலைவரும் அவருடைய ஆதரவாளர்களும் வேண்டுமளவு பயனடைந்து கொள்கின்றனர் என்பது உண்மை. இவ்வாறு செயல்பட்டு 1860 முதல் 1871 வரை நியூயார்க் நகரத்தை ஆண்ட பாஸ்ட் வீடு என்பவர் இறுதியாக ஆறு மில்லியன் டாலர் பணத்தைத் திருடியதாகக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டார். அமெரிக்காவில் மிக மோசமான அரசியல் இயந்திரம் நியூயார்க் நகரத்திலுள்ள குடியாட்சிக் கட்சி இயந்திரம் ஆகும். இது பேச்சு வழக்கில் டமனி மண்டம் (Tammany Hall) என்றழைக்கப்படுகிறது. இது கூட்டாட்சி அரசியலமைப்பு வரையப்படுவதற்குச் சில காலத்துக்கு முன்னர் நாட்டுப் பற்றுடைய, நன்மை பயக்கும் நோக்கங்களுக்காக முதன் முதலில் நிறுவப்பட்டு அறிவு, அமைதியை நாடும் இயல்பு உயர்பண்புடன் கூடிய வாழ்க்கை ஆகியவற்றில் சிறந்து விளங்கிய டமனி என்ற சிவப்பிந்தியத் தலைவர் பெயரால் அழைக்கப்பட்டது. காலப்போக்கில் டமனி கழகமானது அரசியலில் தலையிடத் தொடங்கி நகரத் தேர்தல்களில் கூடுதலான கட்டுப்பாட்டைப் பெற்றது. இவ்வாறு அமெரிக்க அரசியல் முறையமைவில் கட்சிக்குள் ஒரு முக்கிய பங்கைப் பெற்றுள்ளன.

## 6.10 அமெரிக்க ஐக்கிய நாட்டில் தன்னலக் குழுக்கள்:

இக்காலத்தில் தன்னலக் குழுக்களின் செயல்கள் அமெரிக்க அரசியல் அமைவு இயங்குவதற்கு இன்றியமையாதனவாக அமைந்துள்ளன. அதனை நிறுவியோர்கள், ஒரு குடியாட்சி சமுதாயத்தில் குழுக்கள் தோன்றுதலை வெறுத்த போதிலும், தன்னலக் குழுக்களை தம் கட்டுப்பாட்டில் கொணரவும் அவற்றைத் தேர்தல் நாளில் பதிவு செய்யவும் கூடிய நிலையில் தவிர்த்தல் இயலாது என்று நன்கு உணர்ந்திருந்தார்கள். இத்தகைய குழு முறை அமெரிக்க ஐக்கிய நாட்டில் இயற்கையான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஏறக்குறைய 500 தன்னலக் குழுக்கள் உள்ளன. அவை அளவில் பெரியனவாகவும், சிறியனவாகவும், இருந்து தேசிய மட்டத்திலும், மாநில உள்ளாட்சி மட்டங்களிலும் செயல்படுவதைக் காணலாம்.

மற்ற நாடுகளைப் போல அமெரிக்கத் தன்னலக்குழுக்களும் தங்களுக்கே உரிய சில தனித்த இயல்புகளைப் பெற்றுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாட்டில்

தன்னறிவு சோதனைக் கேள்வி

5. தன்னலக் குழுக்கள் ஏன் அதிகாரம் வாய்ந்ததாக உள்ளன?

தன்னலக் குழுக்கள் பெருமளவில் சுய ஆட்சித் தன்மையோடு இருக்கின்றன. எண்ணிக்கையில் அதிகமான தன்னலக் குழுக்களை கட்டுப்பாட்டில் வைக்க முடியாத அளவுக்கு அவை மிகவும் வலுப்பெற்று இருக்கின்றன. இது மட்டுமின்றி, அரசியல் கட்சிகளின் செயல்கள் சில சமயங்களில் இக்குழுக்களினால் தீர்மானிக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் அரசியல் முறையில் இதற்கு நேர்மாறான நிலை காணப்படுகிறது. அரசாங்க உறுப்புகளின் அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு அமெரிக்காவில் செயல்படுவதால், தன்னலக்குழுக்கள் ஆட்சித்துறையின் எல்லா மையங்களின் மீதும் தனது கவனத்தைச் செலுத்துகின்றன.

அமெரிக்க முறையானது பிரிட்டிஷ் முறையினின்று அடிப்படையில் வேறுபட்டு இருக்கிறது. பிரிட்டனில், அமெரிக்காவில் இருப்பது போன்று அரசாங்க உறுப்புகளின் அதிகாரப் பிரிவினை இல்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியரசுத்தலைவர் நடைமுறைகளில் நாட்டின் ஆட்சியாளராக இருப்பதால், தன்னலக் குழுக்கள் எப்போதும் அவரையே கட்டுப்படுத்துவதற்கு முயலுகின்றன. குடியரசுத்தலைவர் மீது அதிருப்தி அடையும்பொழுது தான் அவை சட்டமன்றத்தின் மீது தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்த முயலுகின்றன. சில வேளைகளில் இச்செயல் அமெரிக்க குடியாட்சியில் ஒரு முடக்க நிலையைத் தோற்றுவிக்கும், தன்னலக் குழுக்கள் குடியரசுத்தலைவரின் மீதோ அல்லது காங்கிரசின் மீதோ தங்களுடைய செல்வாக்கைக் கையாள இயலாமல் போய்விட்டால், நிர்வாகத்துறையின் ஆணைகளையே செல்லுபடியாகாமல் செய்வதற்காக நீதித்துறை அதிகாரிகளைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவர முயல்கின்றன. இந்தக் காரணத்தினால் அமெரிக்கத் தன்னலக் குழுக்களுக்கும் "நிறுவன வகையில் ஆன வரம்புகள் கிடையாது. முடிவுகள் சட்டமன்றத்தினாலோ அல்லது குடியரசுத் தலைவரினாலோ அல்லது நீதிமன்றத்தினாலோ எடுக்கப்படுமாயின் அவற்றைத் தமது ஆதரவு திரட்டும் உத்தி மூலம் கட்டுப்படுத்தும் முறையைக் கையாளுகின்றன. ஆதரவு திரட்டும் உத்தி பிரதிநிதித்துவ அரசாங்க முறையின் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கிறது. அதை ஊக்கப்படுத்தி ஒப்புக்கொள்வது அவசியமாகும் என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல தன்னலக்குழுக்கள் செயல்படுவதால் அவற்றை எல்லாம் தெள்ளத்தெளிவாக விளக்குதல் என்பது ஒரு கடினமான வேலையாகும். அவைகளைப் பகுத்தறிந்து அவற்றை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். அவை, வணிகர்குழு, பண்ணை ஆட்கள் மற்றும் தொழிலாளர் குழு, பணியாளர் குழு, கருத்தாளர் குழு, சிறுபான்மையோர் குழு என்பனவாகும்.

வணிகர் குழுக்கள், அமெரிக்க ஐக்கிய நாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அவைகளிடம் ஆள் பலமும், பணபலமும் இருக்கின்றன. இந்த வகை தன்னலக்குழுக்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் வணிகச் சங்கமும், தேசிய பொருள் உற்பத்தியாளர் கழகமும் இருக்கின்றன. இவற்றிற்கு அடுத்தபடியாகத் தொழிற் சங்கங்கள் வருகின்றன. அவற்றுள் அமெரிக்கத் தொழிலாளர்களின் கூட்டமைப்பும் தொழில் அமைப்புகளின் காங்கிரஸ் மன்றமும் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இந்த இரண்டு குழுக்களைத் தவிர, அமெரிக்காவில் பெரிதும் சிறிதுமாக வேலை செய்கின்ற பல தொழிலாளர் தன்னலக்குழுக்களும் இருக்கின்றன. மேலும் வழக்கறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், கட்டிடம் கட்டுவோர்கள் முதலியோரெல்லாம் தங்களுடைய

நலன்களை அடையும் பொருட்டு பல பணியாளர் நிறுவனத்தின் மூலமாக தங்களுக்குப் பிரதிநிதித்துவம் தேடிக்கொள்கின்றனர். இதன் தொடர்பாக அமெரிக்க மருத்துவக் கழகத்தையும், அமெரிக்க வழக்கறிஞர்கள் கழகத்தையும் கூறலாம். சில குழுக்களுக்கு கோட்பாட்டளவில் ஏதேனும் ஓர் ஆதாரம் இருப்பதையும் நாம் காணலாம். இத்தகைய குழுக்களின் உறுப்பினர்கள் தங்களுடைய நம்பிக்கைக்கும் எண்ணங்களுக்கும் ஏற்பச் செயல்படும் நோக்கத்தோடு இருக்கின்றனர். குடியாட்சி நடடிவக்கைக்கான அமெரிக்க நிறுவனம், அமெரிக்க சிவில் உரிமைகளின் கழகம் முதலியவை இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆகும். நீக்ரோக்களும், யூதர்களும் சில குறிப்பிட்ட இன, சமய, சமுதாய நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு தங்களுக்கே உரிய சில குழுக்களை அமைத்துக் கொள்கின்றனர்.

இந்தக் குழுக்களெல்லாம் சிறுபான்மைக் குழுக்கள் என்றழைக்கப்படுகின்றன. அமெரிக்கத் தன்னலக் குழுக்களைப் பற்றிய மிக சுவையான செய்தி என்னவென்றால் நாட்டில் அரசியல் செயல் முறையில் அவை பங்கெடுத்துக்கொள்ளும் வகையேயாகும். அவை தங்களுடைய நலனை அடைவதற்கான பல்வேறு செயல்முறைகளைக் கையாளுகின்றன. அந்தச் செயல் முறைகள் சமுதாய அணிப்பிரச்சாரம் என்றும், முயற்சிச் செயல் என்றும் இருவகைப்படும். பல சட்டமன்ற உறுப்பினர்களைத் தெரிந்து கொள்ளும் பழக்கத்தை அவை கையாண்டு சமுதாய அணியை நெருக்குகின்றன. இத்தகைய தொடர்பு ஏற்படுத்தும் முறையானது சாதாரணமான எளிய விருந்து அளிக்கும் முறையிலிருந்து பொருள், வெகுமானங்கள் அளிப்பது வரையில் பல வகைப்படும். பொதுமக்கள் கருத்தை உருவாக்கும் பொருட்டு அவை மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலமாக பிரச்சாரம் செய்கின்றன. தேர்தல் நடக்கும் காலத்தில் அவை வெற்றி வாய்ப்புடைய வேட்பாளர்கள் சார்பாக பிரச்சாரம் செய்தலும், ஆதரவும் அளிக்கின்றன.

இவ்வகையான செய்முறைகளெல்லாம் தன்னலக் குழுக்களினால் கையாளப்பட்ட போதிலும், தொடர்பு கொள்ளுதல் என்ற முறைக்கு தனியானதொரு பொருள் இருக்கவே செய்கின்றது. அது ஒரு புதுமையான அமெரிக்க அமைப்பு என்று விளக்கப்படுகிறது. லாபி என்பது முடிவு செய்பவர்களின் மீது தங்களுடைய செல்வாக்கைக் கையாளுதல் என்பது தான். லாபியில் தொடர்பு கொள்வோர் மிகத் திறமை வாய்ந்த செயலாளர்களாகவும், சிக்கல் நிறைந்த கடினமான விஷயங்களை யாவருக்கும் விளங்கக் கூடிய வகையில் தெளிவாகக் கூறும் வல்லுநர்களாகவும் இருக்கின்றனர். தொடர்பு கொள்வோர் சுருக்கமான விளக்கங்கள், நினைவுக் குறிப்புக்கள், சட்டங்களைப் பற்றிய ஆய்வுகள், சட்டவரைவுகள் ஆகியவற்றைச் சட்டமன்ற உறுப்பினர்களின் உபயோகத்திற்காகவும் தயார் செய்கின்றனர். ஆகவே அவர்கள் தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள விஷயங்களில் திறமையானவர்களாக விளங்குகின்றனர். உண்மையில் அவர்கள் வேறு எவ்வகையிலும் கிடைக்க முடியாத செய்திகளையும், பயனுள்ள புள்ளி விவரங்களையும் அடிக்கடி தருகின்றனர். இவ்வாறு தொடர்பு கொள்வோர், சட்டம் இயற்றும் முறையில் முக்கியமான ஒரு பங்கை ஏற்றுக் கொண்டுள்ளனர்" என்று கூறுகிறார் இந்நாளில் தொடர்பு கொள்ளும் முறையானது அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும் செயல்படுகிறது. தொடர்பு கொள்ளும் முறை செயல்படுவதை ஒழுங்குபடுத்தும் பொருட்டு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1946-ஆம் ஆண்டில், தொடர்பு கொள்தல் பற்றிய சட்டத்தின் கூட்டாட்சி விதிகள் என்ற ஒரு சட்டம் நடைமுறைக்கு வந்தது. இது தொடர்பு கொள்வோர் சட்டமன்ற எழுத்தரிடம்

தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்தல் வேண்டும் என்றும் தொடர்பு கொள்தல் மூலம் தாங்கள் சம்பாதிக்கும் பொருளையும் காட்டுதல் வேண்டும் என்று கூறிற்று. இந்தச் சட்டமும் கூட போதுமான ஒன்றாகக் கருதப்படவில்லை. 1976-ஆம் ஆண்டில் செனட் ஒரு சட்டமுன்வரைவை நிறைவேற்றியது. இது தொடர்பு கொள்ளும் செயல் முறையில் மீது பல கடுமையான தடைகளை விதித்து கடுமையான விதிகளையும் விதித்தது.

அமெரிக்கத் தன்னலக் குழுக்கள் தங்களுடைய நலன்களைப் பெறும் பொருட்டு குடியாட்சி முறைக்கு ஒவ்வாத முறைகளைப் பின்பற்றுவதாக அதனைக் குறை கூறுபவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் எல்லா நலன்களுக்கும் தன்னலக் குழுக்களின் மூலமாக சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. நடைமுறையில் உள்ள உள்நாட்டு, வெளிநாட்டு பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு கான்பதற்கு ஒன்றுக்கொன்று தொடர்பான நிலையான முழுமையான கோட்பாடு தேவைப்படுகிறது. சில தனிப்பட்ட நலக்குழுக்களுடைய கூட்டு முயற்சியினால் தான் ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு காண்பதற்கும் ஒன்றுக்கொன்று தொடர்பான நிலையான முயற்சியினால் தான் ஒரு கோட்பாட்டை வகுக்க முடியும். தன்னலக் குழுக்களிடம் சில தீமைகள் இருந்தபோதிலும் அமெரிக்கக் குடியாட்சி முறையானது வெற்றியாகச் செயல்படுவதற்குத் தன்னலக் குழுக்கள் அளித்துள்ள உதவியை யாராலும் மறக்க முடியாது. குழுக்கள் "சமுதாயத்திலுள்ள நலன்களை அல்லது விருப்பங்களை இனங்கண்டு கொள்தல்" என்ற இன்றியமையாத பணியைச் செய்கின்றன. இந்த விருப்பங்களுக்கு ஏற்பவே அரசியல் முறையும் செயல்படுதல் வேண்டும். இவ்வாறு தன்னலக் குழுக்கள் சட்டப்படியாக அமைந்துள்ள பிரதிநிதித்துவ முறைக்கு வேண்டிய இன்றியமையாத உதவியைச் செய்கின்றது. இங்ஙனம் தன்னலக்குழுக்கள் அமெரிக்க அரசியல் முறையமைவில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

**அமெரிக்கத் தேர்தல் முறை**

அமெரிக்க காங்கிரஸ் செனட், பிரதிநிதி அவை என்ற இரண்டு சபைகளால் ஆனது. செனட் மேல்சபையாக இருந்து எல்லா மாநிலங்களிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. மக்கள் பிரதிநிதி அவை பல தரப்பட்ட மக்களைக் கொண்டு விளங்குகிறது. 17வது அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி எல்லா செனட் உறுப்பினர்களும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவ்விதி கீழ்க்காணும் கருத்துக்களைத் தெளிவாக்குகிறது. அமெரிக்கச் சட்டமன்ற மேலவையான செனட் ஒவ்வொரு மாநிலங்களிலும் இருந்து இரண்டு உறுப்பினர்களைக் கொண்டதாகவும், இவர்கள் 6 வருட பணிக்காலத்தைக் கொண்டவர்களாகவும், இவர்களுடைய தகுதிகள் அந்த மாநிலச் சட்டமன்றங்களால் நிர்ணயம் செய்யப்படும் என்று இந்தத் திருத்தம் கூறுகிறது. மேலும் அமெரிக்கச் சட்டமன்றமானது (Congress) தேர்தல் நடத்துவது குறித்து வரையறை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது. இதில் மனுத்தாக்கல் செய்தலும் அடங்கும். மாநிலச் சட்டமன்றங்கள் மேலவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வரையறை வகுக்கின்றன. அமெரிக்க அரசியலமைப்பு முதல் விதியின் 6-ஆம் பிரிவின்படி ஒவ்வொரு சட்டமன்ற அவையும் தங்களது உறுப்பினர்களின் தகுதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட முறை ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் அதிகாரம் கொண்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் உடனே பதவிக்குச் செல்லாமல் அவரது தேர்வு முறை தகுதிகள் போன்றவை

ஆய்வு செய்யப்பட்டு, அவர் தகுதியானவர், முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று அறிவித்த பின்னர்தான் அவர் பதவியில் அமர முடியும்.

**பிரதிநிதிகள் அவை (The House of Representatives) :** அமெரிக்காவைப் பொறுத்தவரை நாடு முழுவதும் ஒரே மாதிரியான தேர்தல் முறை இல்லை. வாக்காளரைப் பதிவு செய்தல் முதல் தேர்வுகள் அறிவிப்பது வரை உள்ள எல்லா வேலைகளையும் அந்தந்த மாநிலங்களே கவனித்துக் கொள்கின்றன. ஒவ்வொரு மாநிலமும் அந்த மாநிலத்திற்குத் தேவையான தேர்தல் சட்டங்களையும் கட்டுப்பாடு விதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் 18வது அரசியல் திருத்த மசோதா, ஒரு அமெரிக்கக் குடிமகனை இன, நிறம் மற்றும் தொழில் அடிப்படையில் வாக்களிக்கும் உரிமையிலிருந்து விலக்க மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் அதிகாரம் இல்லை என்று குறிப்பிடுகிறது. 19வது அரசியலமைப்புத் திருத்தம் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியுள்ளது.

**வாக்காளர்கள் தகுதி (Qualifications for voting) :** குடியுரிமை தான் வாக்களிக்க அடிப்படைத் தகுதியாகும். வாக்குரிமை பெற ஒரு குடிமகன் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். எல்லா மாநிலங்களும் வாக்குரிமை பெறும் ஒரு குடிமகன் சட்டபூர்வமாக அத்தொகுதியில் 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை வசித்திருக்க வேண்டும் என்ற விதியைக் கொண்டுள்ளன. இன்னும் சில மாநிலங்களில் சில கூடுதல் தேவைகளையும் குடிமகன் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அத்தேவைகள் எழுதப்படிக்கத் தேவையான அளவு படிப்பு, வரிகட்டுதல் போன்றவை ஆகும். தேர்தலில் ஊழல் செய்தால் வாக்குரிமையை இழத்தல், புத்திசுவாதீனம் இழத்தல் முதலியவை சில பொதுவான தகுதியின்மைகள் என்று மாநிலச் சட்டங்கள் கூறுகின்றன.

**தேர்தல் ஒழுங்கு முறைகள் (Electoral Regulations) :** தேர்தல் ஒழுங்கு முறைகளை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை வாக்குரிமை, வாக்காளர் பதிவு, தேர்தல், பிரச்சாரம் போன்றவைகளாகும். வாக்குரிமை குறித்து நாம் முன்பே அறிந்து கொண்டோம். எந்த ஒரு குடிமகனும் தேசியத் தேர்தலுக்கு வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதில்லை. ஒவ்வொரு குடிமகனும் மாநிலத் தேர்தலுக்கு வாக்களாராகப் பதிவு செய்யப்படும் போது அந்தப் பதிவேடு தான் தேசியத் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் பதவிக்கு நான்காண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறுகிறது. மூன்றில் ஒரு பகுதி செனட் உறுப்பினர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தலும், மக்கள் பிரதிநிதி அவைக்கு இரண்டாண்டுக்கு ஒரு முறை எல்லா உறுப்பினர்களுக்குத் தேர்தல்களும் நடைபெறுகின்றன. எனவே நாம் இரண்டாண்டுக்கு ஒரு முறை அமெரிக்காவில் தேர்தல் நடைபெறுகிறது என்று அறிந்து கொள்கிறோம். மேலும் நான்காண்டின் முடிவில் முக்கியமான குடியரசுத் தலைவர் தேர்தலும் நடைபெறுகிறது.

## 6.11 அதிகார வர்க்கம்

அதிகாரவர்க்கம் பற்றிய ஆய்வு அமெரிக்க ஐக்கிய நாட்டினைப் பொறுத்தமட்டில் முக்கியமானதாகும். திறமை மிக்க துறைத் தலைவர் பெருமளவிற்குத் தமது நேரத்தினை குடியரசு தலைவருக்கு ஒதுக்கவும் முடிகின்றது. அரசியலில் ஒரு துணை அமைப்பான அதிகாரவர்க்கம் கொள்கையை வரையறுக்கும் பணிகளில் செயலாற்றுகின்றது.

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

6. அமெரிக்க அதிகார வர்க்க முறையை விவரி.
7. உள்ளாட்சி முறைமையின் கட்டமைப்பை விளக்கு.

அமெரிக்க அரசியலமைப்பு, இவ்வமைப்பு பற்றி எதுவும் கூறவில்லை. காங்கிரஸ் புதிய நிர்வாகத் துறைகளை உருவாக்கினால், குடியரசுத் தலைவர் அதன்

பணியாளர்களை செனட்டின் ஒப்புதலுடன் நியமனம் செய்யலாம். இன்று கூட்டரசு நிர்வாகத் துறை குடியரசுத் தலைவர் மற்றும் அமைப்பு ஏராளமான செயலர்களையும், ஆயிரக்கணக்கான துணை அலுவலர்களையும் கொண்டு இயங்குகின்றது. ஆரம்ப காலக் குடியரசுத் தலைவர்கள் செனட்டின் ஒப்புதலோடு நிர்வாக அதிகாரிகளை நியமனம் செய்த பொழுதிலும் தம்முடைய விருப்பம் போல அவர்களைப் பதவி நீக்கம் செய்தமையால் 'அதிகாரக் கொள்கை முறை' (Spoils System) உருவாக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் வாஷிங்டன் தகுதியடிப்படையில் நியமனம் செய்யும் முறையைக் கொணர்ந்தார். ஆனால் பின் வந்தவர்கள் தமக்கு வேண்டியவர்களைப் பதவிகளில் அமர்த்தினார்கள். இதனால் மக்கள் அதிகாரக் கொள்கை முறையின் தவறுகளின் மீது கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாயினர். பாரபட்சம் காட்டும் முறையினால் ஆட்சித் துறையின் திறமை குறையலாயிற்று. இதனால் மீண்டும் தகுதி முறையினை நடைமுறைப்படுத்த வாய்ப்புகள் தோன்றின. 1883 ஆம் ஆண்டில் "பென்டில்டன் சட்டம்" (Pendleton Act) மூலம் தகுதி முறை ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி அரசுப் பணி ஆணையம் (Civil Service Commission) தோற்றுவிக்கப்பட்டது. அது தேர்வரின் தகுதிக்கு முக்கியத்துவம் அளித்தது. அரசியல் கட்சி சாராத உறுப்பினர்களை உடைய அவ்வமைப்பினை குடியரசுத் தலைவர் செனட்டின் ஒப்புதலுடன் நியமிக்கிறார். ஆட்சித் துறைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடிய அமைப்பாகவும் அது திகழ்கின்றது. ஒவ்வொரு நகரிலும் தனது அலுவலகங்களைக் கொண்டு செயலாற்றுகின்றது. இங்கு இருமுக்கிய கருத்துக்களை நினைவிற் கொள்ள வேண்டும். துறைத்தலைவர்கள் போன்ற உயர்நிலை நிர்வாக அதிகாரிகள், குழுத்தலைவர்கள் ஆகியோர் அரசுப்பணி ஆணைத் தலைவரின் கட்டுப்பாட்டில் வருவதில்லை. "டெனஸ்வேலி அத்தாரிட்டி" போன்ற அமைப்புகளுக்கென தனிப்பட்ட ஆட்சிப்பணிக் குழுக்கள் உள்ளன.

பிரிட்டனைப் போல் அமெரிக்காவின் நிர்வாகத் துறையில், அரசியல் மற்றும் அரசியலற்ற நிர்வாகப் பிரிவுகள் உள்ளன. குடியரசுத் தலைவர் மற்றும் அவருடைய சகாக்கள் முதல் துறையைச் சார்ந்துள்ளனர். உயர்நிலை அதிகாரிகள் மற்ற பிரிவினைச் சேர்ந்துள்ளனர். முதல் பிரிவான அரசியல் சாராத நிர்வாகப் பிரிவினர் அவர்களுடைய திறமை, தகுதி மற்றும் அனுபவம் சார்ந்து செயல்பட வேண்டியவர்களாயுள்ளனர். அரசியலமைப்பைக் காத்து, சார்ந்து செயல்பட வேண்டியவராயுள்ள குடியரசுத் தலைவர் நிர்வாகத்துறை தலைவர்களில் செயல், விவேகம் மற்றும் திறமைக் காரணமாக அவர்களை நம்பிச் செயல்பட வேண்டியவராயுள்ளனர். ஆகவே அமெரிக்காவில் நிலையான நிர்வாக அமைப்பு முக்கியமானதொன்றாகச் செயல்படுகின்றதென்பதை உணரலாம்.

அதிகாரப் பகிர்வு, படிநிலை, அமைப்புமுறை, அடிப்படைச் சட்ட நெறிமுறைகள், பகுத்தறிவு அடிப்படையிலான தொடர்பு மற்றும் திறமையடிப்படையில் பணி புரியத் தேர்ந்தெடுக்கப்படல் ஆகியவற்றை உள்ளடக்கிய பெரும் அமைப்பே அதிகார வர்க்கமாகும். இங்கு அமெரிக்காவில் அதிகார வர்க்கத்தின் தன்மையை நாம் உணரவேண்டும். இது நான்கு நிலைகளை உடையது. நிர்வாகத் துறைகள், சுதந்திரமான நெறிகளுடைய குழுக்கள், பொதுத்துறைகள் மற்றும் அரசுக் கழகங்கள் என்பவையே அவை. செயலர்களால் நிர்ணயிக்கப்படும் 12 நிர்வாகத்துறைகள் உள்ளன. அவைகளே கூட்டரசு அமைச்சரவை எனப்படுகின்றன. செயலாளர்களை குடியரசுத் தலைவர் செனட்டின் ஒப்புதலுடன் நியமிக்கிறார். அவர் விருப்பம் போல் அவர்களை

வெளியேற்றலாம். ஒவ்வொரு செயலருக்கும் கீழ் அலுவலகங்கள் வாரியங்கள், பிரிவுகள், குழுக்கள் உள்ளன. அவை குறிப்பிட்ட சிறப்புப் பகுதிகளுக்குப் பொறுப்பேற்றுச் செயல்படுகின்றன. அவை தவிர தனிப்பட்ட வாரியங்களையே தலைமையாகக் கொண்டு செயல்படும் சுதந்திரமான ஒழுங்கமைப்புக் குழுக்கள் இருக்கின்றன. இவ்வாரிய உறுப்பினர்களை குறிப்பிட்ட காலத்திற்குப் பதவியிலிருக்கும்படி குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார். கமிஷனர்களை 5 ஆண்டு அல்லது 7 ஆண்டுகட்குப் பதவியிலிருக்கும்படி நியமிக்கிறார். ஆனால் அவர்களை அவர் பதவி நீக்கம் செய்ய முடியாது. பொருளாதாரப் பணிகளை ஒழுங்கு செய்யும் பணியினைத் தலையாயதாகக் கொண்டிராத தனிப்பட்ட நிறுவனங்கள், கமிஷனர்கள் அல்லது குழுக்களின் கீழ் இயங்கி வருகின்றன. இறுதியாக வாரியங்கள், கமிஷன்களால் நிர்வகிக்கப்படும் அரசாங்கக் கழகங்களும் உள்ளன. அவை மற்ற அரசியல் பிரிவுகளை விட அதிக அளவு சுதந்திரமாக இயங்குகின்றன. அமைப்பு, செயல் முறைகளில் அவை தனியார் நிறுவனங்களை ஒத்தவையாயுள்ளன.

அமெரிக்க அரசியலிலுள்ள அதிகார வர்க்கத்தின் நடவடிக்கைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, அரசியல் அமைப்புகளுக்கான ஆதரவை உருவாக்குகின்றன. பொதுவிதிகளை சூழ்நிலைகளுக்கொப்ப செயல்படுத்தி அவை பொது மக்களுடன் நேரடித் தொடர் கொள்கின்றன. இதன் மூலம் பொதுமக்களிடையே அரசியல் பற்றிய அறிவு உருவாக்கப்படுகிறது. ஆட்சித் துறையினரின் நேர்மை, திறமை அல்லது லஞ்சம் மற்றும் எதிர்ப்புணர்வு ஆகியவற்றிற்கேற்ப தமது ஆதரவினை அரசியலில் உள்ளவர்களுக்குப் பொதுமக்கள் நல்குகின்றனர். இரண்டாவது, சிக்கலை தீர்த்து வைப்பதாகும். அலுவலக நடைமுறைகளைச் செயல்படுத்த விழையும் பொழுது மாறுபட்ட சூழ்நிலைகள் உருவாகின்றன. பொதுமக்கள் தமது விருப்பங்களின்படி விதிமுறைகளை விவரித்துக் கொள்கின்றனர். அந்த மாறுபட்ட எதிரிடையான சூழ்நிலையில் இறுதியான தீர்ப்பிற்காக அவர்கள் நீதிமன்றத்தை நாடுதலும் உண்டு. மூன்றாவதாக, குடியரசுத் தலைவர், காங்கிரஸ் மற்றும் நீதிமன்றங்கள் அளித்துள்ள அதிகாரங்களின் பேரில் அதிகார வர்க்க அமைப்புப் பிரிவுகள் சிறு பணிகளையும் மேற்கொள்கின்றன.

உண்மையில் அதிகார வர்க்கமே அமெரிக்க அரசியல் முடிவுகளை மேற்கொள்ளும் பிரிவாக உள்ளது. சட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்களும் அவர்களே. சட்டமியற்றும் துறையினையும் அவர்கள் கட்டுப்படுத்த முயலுகின்றனர். இவ்வடிப்படையில் அதிகார வர்க்கத்தின் முக்கியமான செயல்களை நாம் காணலாம்.

**அதிகாரவர்க்கமும் குடியரசுத் தலைவரும்**

முடிவுகள் எடுத்தல், ஒருவரையொருவர் கவர முனைதல் என்ற இருவழிப்பாதையில் இவ்விரு சாராரும் செயல்படுகின்றனர். பல வழிகளில் குடியரசுத் தலைவர் அதிகார வர்க்கத்தின் மீது தமது கொள்கைகளைத் திணிக்கலாம். அவரது கட்டுப்பாட்டிலுள்ள வரவு செலவுத் திட்டப் பிரிவு ஒரு பொது மேற்பார்வை அமைப்பாகவும், அதிகார வர்க்கத்தினை ஒருங்கிணைத்துச் செயலாற்றச் செய்யும் அமைப்பாகவும் உள்ளது. உயர் அதிகாரிகள் நியமனம், ஊக்கப் பரிசுகளை நிர்வகிக்கவும் அவற்றிற்குப் பரிந்துரைக்கவும் உரிமை போன்ற முக்கிய கருவிகளின் துணையுடன் குடியரசுத் தலைவர் அதிகார வர்க்கத்தின் மீது தமது கட்டுப்பாட்டினைச் செலுத்தலாம். எல்லாவற்றிற்கும் மேலாக பட்ஜெட்டில் குறைப்பு செய்தல், அவர்கள் கோரும் திட்டங்களைக் கைவிடல் போன்ற இருவழிகளின் மூலம் அதிகார வர்க்கத்தை குடியரசுத்

தலைவரும், அவரைச் சார்ந்தவர்களும் கட்டுப்படுத்த இயலும்.

அதுபோல அதிகார வர்க்கத்தினர் குடியரசுத் தலைவரைக் கவரவும் வழிகள் உண்டு. குடியரசுத் தலைவர் அதிகார வர்க்கத்தின் மீது முழுக் கட்டுப்பாட்டினையும் செலுத்த இயலாதவராயுள்ளார். ஆட்சித்துறை பற்றிய செய்திகள் பலவற்றைக் குடியரசுத் தலைவர் அறிய வேண்டியவராயிருக்கையில் அவருக்கு முன்பாகவே அதிகாரிகள் அவற்றைப் பற்றி நன்கு உணர்ந்திருக்க வேண்டியவர்களாயுள்ளனர். சில தவறான போக்குடைய அதிகாரிகள் வெகு காலத்திற்குத் தமது தவறான நடத்தை, தவறுகள் ஆகியவற்றை மறைத்து வைக்க முடியும். குடியரசுத் தலைவரது ஆலோசகர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோரின் ஆழ்ந்த கவனம் தவறாக செயல்படும். அதிகார வர்க்கத்தைக் கண்காணிக்கக் கூடியதாக இருப்பினம், சில நேரங்களில் அதிகாரவர்க்கம் தவறாக செயல்படுவதால் குடியரசுத் தலைவர் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார். சில வேளைகளில் துறைகள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் குடியரசுத் தலைவரின் கொள்கைகளை வெளிப்படையாக எதிர்ப்பதும் உண்டு.

**அதிகாரவர்க்கமும் காங்கிரசும்**

இவ்விரு பிரிவுகளுக்கிடையிலும் இரு வழித் தொடர்பே காணப்படுகின்றது. முடிவுகளை மேற்கொள்வதற்கு முன்பு காங்கிரசின் கருத்துக்கள் எவ்வாறிருக்கும் என்பதை அதிகார வர்க்கத்தினர் சிந்திக்க வேண்டியவர்களாயுள்ளனர். அதிகார வர்க்கத்தைக் கட்டுப்படுத்த காங்கிரசுக்கு மூன்று வழிகள் உள்ளன. (1) நாட்டின் பொருளாதாரத்தை நடத்திச்செல்லும் காங்கிரஸ் பல துறைகளுக்குமான பணத்தேவைகளை ஒதுக்கீடு செய்யும அமைப்பாக உள்ளது. (2) ஒரு திட்டத்திற்கு அங்கீகாரமளிப்பதற்கும், அதனைத் திருத்தியமைப்பதற்கும் காங்கிரஸ் பொது அதிகாரம் பெற்றுள்ளது. (3) குழுமுறை (Committee System) யில் மூத்த, அனுபவம் வாய்ந்த கூட்டரசு சட்டமன்றம் இயற்றும் அமைப்புடன் நல்லிணக்கத்தோடு செயல்பட வகை செய்கின்றனர். காங்கிரஸின் உறுப்பினர்களோடு நல்லுறவு இல்லையெனில் சில துறைகளுக்கான பணத் தேவைகளைக் குறைக்கும் அதிகாரமும் காங்கிரஸிடம் உண்டு. எனவே பெரும்பாலான துறைகள் மற்றும் தேசிய அரசின் பிரிவுகள் காங்கிரஸ் உறுப்பினர்களுடன் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளவே முயலுகின்றன. 1962-ம் ஆண்டு கென்னடியின் கல்வி மற்றும் பொதுநலச் செயலாளர் ஏறத்தாழ 3,562 டாலர்கள் செலவழித்து காங்கிரஸ் உறுப்பினர்களுக்குத் தந்தி அனுப்பி குடியரசுத்தலைவரைக் கண்டிக்கும் தீர்மானத்தை நிறுத்தி வைக்க முற்பட்டார்.

ஆர்வக் குழுக்கள் (Interest Groups) மீது தமது செல்வாக்கைச் செலுத்தக் கூடிய அதிகாரவர்க்கம் அதன் மூலம் தனது காரியத்தை சாதித்துக் கொள்கிறது. பட்ஜெட் குறைப்பு மற்றும் பண உதவி போன்றவற்றால் அதிகார வர்க்கம் பயமுறுத்தப்படுகையில் ஆதிக்கக்குழுக்கள் ஓர் இணைப்பு முறையை உருவாக்கி அதிகாரவர்க்கத்திற்குத் துணைபுரிகின்றன. அதிகாரவர்க்கம் நிர்வாகம் மற்றும் சட்டமியற்றுத் துறைகளுடன் பணி விவகாரங்களிலும் செல்வாக்குப் படைத்ததாகவே திகழ்கின்றது.

இதனை விட அமெரிக்கர்கள் பலதரப்பட்ட சுதந்திரமாக இயங்கும் குழுக்களின் வாயிலாக அதிகார வர்க்கத்தின் செயல்பாட்டை ஆராய்ந்து மறுபரிசீலனை செய்ய பல கோரிக்கைகளை அவ்வப்போது விடுக்கின்றனர். எவ்வாறெனினும் அமெரிக்க அரசியல் முறையமைவில் அதிகார வர்க்கம் சக்திமிக்க நான்காவது பிரிவாக

செயல்பட்டு வருகின்றதென்பதை யாராலும் மறுக்க இயலாது.

**அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கத்தின் அமைப்பும் பணியும் (Structure and Funcitons of Local Government in U.S.A.)**

அமெரிக்காவில் கூட்டாட்சி அமைப்பு உள்ளது. அங்கு அரசியலமைப்பு தேசிய அரசாங்கம் மற்றும் பல மாநிலங்களின் அரசாங்கம் என இருவகையான அரசுகளை உருவாக்கியுள்ளது. உள்ளாட்சி ஆட்சி கூட்டு அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டதல்ல. எனவே அவை மாநில அரசுக்கு உடையவை. மாநில சட்டமன்றங்களே உள்ளாட்சி உருவாக்கும் அதிகாரம் பெற்றுள்ளன. "ஒவ்வொரு மாநிலத்திலும் தனிப்பட்ட உள்ளாட்சி பிரிவுகள் இருப்பினும் அவை ஒத்த தன்மையுடையன. அடிப்படைக் கொள்கைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுவதும் பொதுவாக உள்ளன. ஆனால் வரலாறு, அனுபவம் மற்றும் சூழல்களின் அடிப்படையில் அவை பல பிரிவுகள், அமைப்புகள் நடைமுறைகளைக் கொண்டியங்குகின்றன. அங்கு நிரந்தரத் தன்மை மற்றும் நெகிழும் தன்மை போன்ற அரசாங்கத்திற்குத் தேவையான அடிப்படைக் கொள்கைகள் என்ற அளவில் அவை உருவாக்கப்பட்டுள்ளன."

மேற்கண்டவற்றின் மூலம் உள்ளாட்சி மாநில அரசாங்கத்தால் உருவாக்கப்படுகின்றனவென்பது விளங்கும். சட்டமன்றங்கள் அவற்றின் அமைப்பு மற்றும் பணிகளைத் தீர்மானிக்கின்றன.

**உள்ளாட்சி வகைகள் (Types of Local Government)**

முனிசிபல் முழுமையில்லா கார்ப்பரேஷன் (Quasi Municipal Corporation), முனிசிபல் கார்ப்பரேஷன் என இரு பிரிவுகளாக அவை காணப்படுகின்றன. முதலில் குறிப்பிட்டுள்ளவை அரசினாலோ அல்லது கவுண்டிகள், நகரங்கள், டவுன்ஷிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கவுண்டி என்ற அரசின் பிரதிநிதித்துவ அமைப்புகளாலோ உருவாக்கப்படுகின்றன. இரண்டாம் பிரிவில் தொடர்பற்ற நகரங்கள், பரோக்கள், கிராமங்கள் ஆகியன அடங்கியுள்ளன. முதற்பிரிவு உள்ளாட்சி விருப்பங்களின் அடிப்படையில்லாத பொழுது பின்னவை உள்ளாட்சி விருப்பங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவைகளாகும். ஆண்டுதோறும் புதிய அமைப்புகள் தோன்றுதலாலும், பல மறைவதாலும் அமெரிக்காவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் எண்ணிக்கையைக் கூறுவது கடினமே. புதிய உள்ளாட்சி அரசாங்கங்களும் மாநிலங்களுக்கு மாநிலம் மாறுபடுகின்றன. ஒரு மாநிலத்திலிருப்பது போன்ற அமைப்பு மற்ற மாநில அரசில் இருப்பதில்லை.

**அமெரிக்க உள்ளாட்சி பகுப்புகள் : கவுண்டி**

கவுண்டிகள்; அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுவதுமே உள்ளாட்சிக்காக கவுண்டிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தற்போது அங்கு 3,000க்கும் மேற்பட்ட கவுண்டிகள் உள்ளன. அவை "போர்டு ஆப் கமிஷனர்ஸ்" (Board of Commissioners) போர்டு ஆப் சூபர்வைஸர்ஸ் (Board of Supervisors) மற்றும் போலீஸ் ஜூரி (Police Jury) என்ற ஆட்சிக்குழுவினால் இயக்கப்படுகின்றன. அவை இரண்டு அல்லது நான்காண்டுகள் பதவியிலிருக்குமாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அவற்றுள் சூபர்வைஸர்ஸ் என்ற மேற்பார்வையாளர்கள் நாற்பது பேர் முதல் 50 பேர் உள்ளனர். "வார்ட்" (ward) என்பது சிறு எண்ணிக்கையுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட கமிஷனர்களடங்கிய குழுவாகும்.

பொதுவாக கவுண்டி சேர்மன் கவுண்டி வாரியத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த வாரியம் மாதம் ஒரு முறை கூடி தன்னால் உருவாக்கப்பட்ட குழுக்களின்

மூலம் பலதரப்பட்ட பணிகளை ஆற்றுகின்றது.

**பணிகளும் அதிகாரங்களும் :**

கவுண்டிகள் மாநில அரசாங்கத்தினால் உருவாக்கப்படுகின்ற படியால் மாநில அரசாங்கம் தரும் அதிகாரங்களை மட்டுமே அது கொண்டுள்ளது. அவை சார்புப் பணிகள் (Agency functions) உள்ளாட்சிப்பணிகள் (Local functions) என்ற இருவகையான பணிகளை ஆற்றுகின்றன. அப்பணிகள் கீழ்க்கண்டவையாகும்.

1) நீதிமன்றம், சிறைச்சாலை, பிச்சைக்கார விடுதி, மருத்துவமனை, நூல் நிலையம் போன்ற பொதுச் சொத்துக்கள் பராமரிப்பு 2) நாட்டின் அதிகாரிகள் மற்றும் அலுவலகங்கள் ஆகியோருக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டுதல் அல்லது பெற்றுத் தருதல் 3) நாட்டுக் கட்டிடங்கள் அலுவலகத் தேவைகள் மற்றும் நாட்டு அலுவல் அமைப்புகளுக்குத் தேவையான அச்சடிப்பு மற்றும் கருவிகளைத் தருவதற்கான ஒப்பந்தங்களைச் செய்தல் 4) தணிக்கையாளர் (Auditor), கணக்குத் தணிக்கையாளர் (Comptroller) ஆகியோரில்லாத இடங்களில் கணக்குகளைப் பார்த்தல், பணம் தரவேண்டியவர்களுக்குத் தருதல் மற்றும் பல பணியாளர்களை நியமனம் செய்தல், சில நேரங்களில் பதவி நீக்கம் செய்தல் 6) மதுபான விற்பனை, ஹோட்டல்கள், விடுதிகளை நடத்துதல், ஏலமிடல் போன்றவற்றுக்கு அனுமதிச் சான்றுகள் வழங்குதல் 7) டவுன் ஷிப்புகள், பள்ளிகள், சாலைகள், சிறப்புக் காரணங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள கவுண்டி மற்றும் டிஸ்மிக் துணைப் பிரிவுகளை நிருவகித்தல் 8) நெடுஞ்சாலைகள், பாலங்கள் உருவாக்கிப் பராமரித்தல், சில வேளைகளில் ஆகாய விமானத் திடல்களை உருவாக்கிப் பராமரித்தல் 9) கழிவு நீர்த்திட்டம், விமானத் திடல்களில் நீர்வசதி போன்ற பொதுப் பணிகளையும் மேற்கொள்ளல் 10) கவுண்டிகளுடைய ஏழைகள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களைப் பராமரித்தல்.

**நகர அரசாங்கங்கள் (City Governments)**

அமெரிக்க உள்ளாட்சியில் முக்கியமான அங்கம் நகரங்களேயாகும். நகர அரசாங்கம் என்பது கிரேட் பிரிட்டனின் பரோ அமைப்பினை ஒத்ததாகும். இவ்வமைப்புகள் கிராமிய அமைப்புகளை விட வலிமை பொருந்தியவையாக நகரத்தின் உள் விஷயங்களனைத்தும் சாசனம் ஒன்றின் மூலம் நடத்திச் செல்லப்படுகின்றன. அச்சாசனம் மாநிலச் சட்டமன்றங்களாலோ அல்லது நகரங்களாலோ உருவாக்கப்பட்டுள்ள முனிசிபல் அமைப்புகள் மூலமாகவோ வழங்கப்படுகின்றன. இச்சாசனங்கள் அல்லது பட்டயங்களின் அடிப்படையில் அமெரிக்க நகரங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மேயர் - கவுன்ஸில் என்பது பழமையும் செல்வாக்கும் கொண்ட அமைப்பாகும். இதில் மேயர் என்பர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகத் தலைவராகத் திகழ்கிறார். அவர் குழுவின் ஒப்புதலுடன் நிர்வாகப்பிரிவுத் தலைவர்களை நியமிக்கிறார். கவுன்ஸிலானது நகரங்களுக்கான சட்டதிட்டங்களை உருவாக்கும் அமைப்பாகும். மேயரால் உருவாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டப் பட்டியலை கவுன்சில் அங்கீகரிக்கின்றது.

கமிஷன்கள் அமைப்பு முறை என்பது மற்றொரு வகையான நகர அமைப்பாகும். இந்த அமைப்பில் அரசாங்கப் பணிகளை கூட்டாக செயல்படுத்தக்கூடிய மூன்று முதல் ஏழு உறுப்பினர்களடங்கிய கமிஷன் ஒன்று செயல்படுத்துகின்றது. நகர அரசாங்கத்தின் ஆட்சிப் பணியானது பல துறைகளாகப் பகுக்கப்பட்டு கமிஷனின் ஒவ்வொரு உறுப்பினரும் துறையின் தலைவராகச் செயல்படுகின்றனர். 1951ல் 78 சதவிகித அமெரிக்க நகரங்கள் 10,000 மற்றும் அதற்கு மேலும் உள்ள மக்கள்

தொகையை உள்ளடக்கியதாய் கமிஷன் அமைப்பு அரசாங்கங்களைக் கொண்டிருந்தன. நகர அரசாங்கத்தின் ஆட்சித்துறைத் தலைவராகச் செயல்பட மேயர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. சில நகரங்களில் மேயர்கள் குறிப்பிட்ட சில காரியங்களுக்காக பொதுச் செயல்களின் கமிஷனர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஒருங்கிணைப்பு சிக்கல்கள் காரணமாக இத்தகைய முறை செல்வாக்கிழந்து வருகிறது.

மூன்றாவது வகை அமைப்பு நகர மானேஜர் அமைப்புகளாகும். இந்த அமைப்பானது "உலகத்தின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கக் கூடிய அளவிற்கு வியக்கத்தகு சாதனைகளை முனிசிபல் அரசாங்கம் மற்றும் ஆட்சித் துறையில் புரிந்துள்ளதென்று" கிரிபித்ஸ் (Griffiths) குறிப்பிடுகிறார். இவ்வமைப்பிலும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவானது நகரின் சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. வரவு செலவுத் திட்ட முறையைக் கொண்டு இந்த அமைப்பு முறையில் அனுபவம் வாய்ந்த ஆட்சியாளர் ஒருவர் "மானேஜர்" ஆக நியமிக்கப்படுகிறார். அவர் நிர்வாகத் துறைத்தலைவர்களை நியமிக்கிறார்; வரவு செலவுத் திட்டப்பட்டியலைத் தயாரித்து அவையில் சமர்ப்பிக்கிறார். தன் சொந்த முயற்சியினால் அல்லது குழுவினால் கேட்டுக் கொள்ளப்பட்டபடியோ கொள்கைகளைப் பரிந்துரைக்கிறார். இந்த அமைப்பு முறை மிகவும் வெற்றிகரமான ஒன்றாகும்.

**அதிகாரங்களும் பணிகளும்**

ஒவ்வொரு நகரிலும் குழுக்கள் விரிவான பலதரப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளன. நகரின் நல்லாட்சிக்கான சட்ட திட்டங்களை உருவாக்குவதில் குழுக்கள் பெரும்பகுதி நேரத்தைச் செலவிடுகின்றன. 'காவல் அதிகாரம்' பொது அதிகாரங்களில் முதன்மைத் தன்மை பெற்றுள்ளது. நகரச் சாசனங்கள் அல்லது பட்டயங்கள் 'நகரில் அமைதியை நிலை நாட்டவும், சமுதாயம் நன்முறையில் இயங்கவும் பொதுநல மேம்பாட்டிற்கான வழிகளைப் பின்பற்றவும் தேவையான வழிகளை கவுன்ஸில்கள் மேற்கொள்ள வகைசெய்கின்றன. இரண்டாவதாக சுகாதாரம், பூங்காக்கள், நெருப்பினின்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான திட்டங்களை உருவாக்குகின்றன. மூன்றாவதாக பிச்சைக்காரர்கள், சோம்பேறிகள், தெருச் சண்டைகள், பொதுப் பொழுதுப்போக்கு, போதைப் பொருள்கள், சந்தைகள், சூதாட்டம், கழிவறைகள், ஒழுக்கக் குறைபாடுகளை ஒழித்தல், நெருப்புக் கருவிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றிற்காக சட்டதிட்டங்களையும் அவை உருவாக்குகின்றன. நகரின் தலைமை ஆட்சித்துறை அதிகாரியை நியமிப்பது நீக்கம் செய்வதும் இக்குழுவின் கடமையே. நிதி விவகாரங்களில் நகரங்களில் அதிகாரங்கள் குறைவாகவே உள்ளன. மாநில அரசுகள் அவற்றைக் கட்டுப்படுத்துகின்றன.

**கமிஷன் அரசாங்கம் (Commission Government)**

கமிஷன் அரசாங்கம் அமெரிக்காவிலுள்ள மற்றொருவகை நகர அரசாங்கமாகும். இதில் ஒவ்வொரு கமிஷனரும் ஒரு துறையில் தலைமை வகிக்கின்றார். அல்லது ஒரு கோட்டத்தின் (Division) தலைவர்களாயிருக்கிறார். கூட்டாகச் சேர்ந்து கமிஷனர்கள் இருவகை பொறுப்புக்களை உடையவர்களாகின்றனர். கூட்டாகச் சேர்ந்து சட்டமியற்றும் அமைப்பாக இயங்கி கொள்கைகளை வரையறை செய்யும் அவர்கள் தனித்தனியாக ஆட்சித்துறைப் பிரிவுகளின் தலைவர்களாகவும் இயங்குகின்றனர். மேயர் கவுன்சில் திட்டத்தில் கமிஷனர்கள் கவுன்சிலர்களை விட அதிகளவு ஊதியம் பெறுகின்றனர். கமிஷனர்களை மக்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

மேயர் என்பவரை கமிஷனர்கள் தேர்ந்தெடுப்பர். சில நகரங்களில் மேயர்கள் பொதுச் செயல்களின் கமிஷனர் என்ற அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**நகர உள்ளாட்சி அரசாங்கம் (Town Local Government)**

அமெரிக்காவில் ஆறு மாநிலங்களில் நிலப்பகுதிகள் நகரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை தனக்கென அரசு அமைப்பினைக் கொண்டுள்ளன. நகரங்கள் தனித்தனி கூட்டுகளாகச் செயல்படுகின்றனவாதலால் அவற்றுக்கெனத் தனிப்பட்ட பட்டயங்கள் கிடையாது. பாதியளவு மாநகராட்சிகளாக இயங்கக் கூடிய அவை பொதுவாக வழங்கப்பட்டுள்ள சட்ட அமைப்புகளடிப்படையில் செயல்படுகின்றன. அவற்றின் மீது வழக்காடவும் உரிமை பெற்றுள்ளன. வரிவிதிக்க, வசூலிக்க, விதிகளை ஏற்படுத்தி நல்லரசினை நிறுவ அவற்றுக்கு உரிமை உண்டு. டவுன்களில் ஆட்சிக்குழுவானது 'டவுன் மீட்டிங்' (Town Meeting) எனப்படுகின்றன. இது தகுதியுடைய வாக்காளர் அனைவரையும் உள்ளடக்கி டவுனின் ஆட்சிப் பணிகளைனைத்தும் டவுன் மீட்டிங்கினாலும் அல்லது அப்பிரிவு நியமிக்கக் கூடிய பிரதிநிதிகளாலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டிற்கு ஒரு முறை கூடும் டவுன் மீட்டிங்கானது தேவைக்கேற்ப சிறப்புக் கூட்டங்கள் கூட்டுதலும் உண்டு. அடிப்படைச் சட்டங்களை உருவாக்குதல், வரவு செலவுத் திட்டப் பட்டியலை ஒப்புக்கொள்ளல் போன்ற பணிகளை இது மேற்கொள்ளுகிறது. இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவும் உண்டு. 'செலக்ட் மென்' (Select men) எனப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஓராண்டு அல்லது இரண்டாண்டுகட்கு தேர்ந்தெடுக்கப்படுவர். அடிப்படைச் சட்டங்களை இயற்ற உரிமையில்லாதவர்களால் டவுன் மீட்டிங்கினை கட்டளைகளை நிறைவேற்றுதல் கொள்கைகளை நடைமுறைப் படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது நலன் பேணுதலும் பள்ளி வசதிகளைத் தருவதும் டவுன்களின் முக்கியப் பணிகளாகும். காவல்துறை, நீர்வழங்கல், சாலைகள், பாலங்கள், தோட்டங்கள், பூங்காக்கள், மருத்துவமனைகள், நூல் நிலையங்கள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றையும் கட்டுப்படுத்துகின்றனர்.

**டவுன்ஷிப் (Township)**

சில மாநிலங்களில் கவுண்டிகள் டவுன்ஷிப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இது செயற்கையான அமைப்பே. இதன் பணிகளும் டவுன் கூட்டங்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. சில மாநிலங்களில் டவுன்ஷிப் அதிகாரிகளே அதன் பணிகளைச் செய்து வருகின்றனர். மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் இவ்வதிகாரிகள் ஆட்சி பற்றி வினாக்கள் பொதுமக்கள் கருத்துக்கு வைக்கப்படுகின்றன. டவுன்ஷிப்பில் எழுத்தர் மிக முக்கியமான அதிகாரியாவார். டவுன்ஷிப் கூட்டங்களில் அச்செயலாளராகப் பணியேற்கின்றனர்.

**அதிகாரங்களும் பணிகளும்**

மாநிலங்களின் அரசுகளால் வழங்கப்பட்டுள்ளன. சில அதிகாரங்களை டவுன் ஷிப்புகள் பெற்றுள்ளன. பள்ளிகள், ஏழைகள் மற்றும் சாலை பராமரிப்பு ஆகியன அதன் முக்கிய பணிகளாகும். காவல் பணிகளைப் பொறுத்தமட்டில் அதன் பணிகள் கட்டுப்படுத்தப்பட்டவையாயிருக்கின்றன. பூங்காக்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றை நிருவகித்தல், பாசன வசதி, மருத்துவமனைகள், தெருவிளக்கள், நெருப்புக்கு எதிரான பணிகளைச் செய்து தருதல் போன்றவை வேறு சில பணிகளாக இருக்கின்றன.

### கிராமம் அல்லது பரோ (Borough)

கிராமப் பிரிவுகள், ஓரளவு நகரப் பிரிவினை ஒத்த நிலையை அடையும் பொழுது சில சிறப்பான உள்ளாட்சி அரசாங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. அவை கிராமங்கள் அல்லது பரோக்கள் எனப்படுகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து அல்லது ஏழு பேர் கொண்ட வாரியமானது அரசாங்க அதிகாரப் பிரிவாகத் திகழ்கின்றன. அவர்களது பதவிக் காலம் ஓர் ஆண்டு, சில வேளைகளில் இரண்டாண்டுகளாக இருப்பதும் உண்டு. 'பிரசிடென்ட்' என்ற தலைவர் நிருவாகத் தலைவராகத் திகழ்கின்றார். கிராம எழுத்தர்கள், பொக்கிஷதார் மற்றும் ஒரு கான்ஸ்டபிள் ஆகியோர் கிராம அதிகாரிகளாவர்.

### அதிகாரங்களும் பணிகளும்

தீயணைப்புத் துறை, காவலர்கள் நியமனம், தெருக்கள் மற்றும் கழிவறைகள் அமைத்தல் ஆகியன இதன் பணிகள். இது சுற்றுப்புறச் சுவர்களையும் கட்டிப் பராமரிக்கின்றது. சூதாட்டத்தை தடைசெய்தல் அல்லது கட்டுப்படுத்தல், நீர் வழங்குதல், பூங்காக்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றையும் பொதுக்கூட்டங்களை, நிறுவுதல், அவற்றிற்கான பணத் தேவைப் பத்திரங்கள் விற்றல் அல்லது விரிவித்தல் முதலியவையும் அதன் பணிகளாகும்.

## 6.12 தொகுப்புரை

அமெரிக்க ஐக்கிய நாட்டின் சட்டமன்றம், நீதித்துறை, கட்சிமுறை, விருப்பக் குழுக்கள் ஆகியன பற்றி தெளிவாக அறிந்து கொண்டோம்.

## 6.13 முக்கிய வார்த்தை

நீதிப்புனராய்வு - வாழ்நாள் பதவி - தன்னலக்குழுக்கள் - செனட்டரின் அன்புரிமைக் கோட்பாடு - செனட்டரின் நீண்ட நெடிய பேச்சு.

## 6.14 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

| | | |
|---|---|---|
| கேள்வி எண் 1 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 6:2ல் அறிக |
| கேள்வி எண் 2 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 6:3ல் அறிக |
| கேள்வி எண் 3 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 6:4ல் அறிக |
| கேள்வி எண் 4 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 6:5ல் அறிக |
| கேள்வி எண் 5 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 6:10ல் அறிக |
| கேள்வி எண் 6 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 6:11ல் அறிக |
| கேள்வி எண் 7 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 6:11ல் அறிக |

## 6.14 பார்வை நூல்கள்

1. S.V. Monsma, **American Politics - A system Approach,** dryden, 1973.
2. J. Blondel, **An Introduction to Comparative Government,** London, Weidenfeld and Nicolson, 1969.

3. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.
4. R.C. Macridis and R.E. Ward, **Modern Political Systems : Europe and Asia,** 2nd Edn. Englewood Clifs NJ, Prentice Hall, 1968.
5. R. Maddex, **Constitutions of the World**, 2nd edn., Washington DC and London, CQ Press, 2000.

## 6.15 மாதிரி வினாக்கள்

1. அமெரிக்க செனட் சபை உலகிலுள்ள இரண்டாம் மன்றங்களிளெல்லாம் வலிமையானதொரு மன்றமாகும் என்னும் கூற்றை ஆராய்க.
2. அமெரிக்க காங்கிரசில் ஒரு மசோதா நிறைவேற்றப்படும் முறையை விவரி.
3. அமெரிக்க குழு முறையின் சிறப்பியல்புகளைக் கூறுக.
4. நீதிப்புனராய்வு என்றால் என்ன? அமெரிக்காவில் அது செயல்படும் விதத்தை திறனாய்வு செய்க.
5. அமெரிக்காவில் அரசியல் கட்சிகளும், தன்னலக்குழுக்களும் பெற்றுள்ள பங்கினை ஆராய்.

# அலகு - 7

# பிரான்சின் அரசியலமைப்பு – பண்புகள் - குடியரசுத் தலைவர் - அரசாங்கம்

## முன்னுரை

பிரான்சு நாடு முடியாட்சிக்குப் பின்னர், நான்கு குடியரசுகளுக்குப் பின்னர் ஐந்தாம் குடியரசு இன்று உள்ளது. பிரான்சு நாடு அரசியல் பரிசோதனைகளின் களமென்று சொல்லப்படுகிறது. ஏனெனில் பலவிதமான அரசாங்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. இந்த அலகில் பிரான்சு நாட்டின் அரசியல் வளர்ச்சி, அரசியல் முறைமை, ஆட்சித்துறையான குடியரசுத் தலைவரின் நிலை, அதிகாரங்கள் மற்றும் அமைச்சரவை பற்றித் தெரிந்து கொள்வோம்.

## நோக்கங்கள்

பிரான்சு நாட்டு அரசியல் வளர்ச்சியை விளக்குவது

பிரான்சு நாட்டு குடியரசுத் தலைவரின் நிலையைப் புரிந்து கொள்தல்

பிரான்சு அமைச்சரவை பற்றி விவாதிப்பது

## வடிவமைப்பு

நாடும் மக்களும்

அரசியல் கலாச்சாரம்

அரசியலமைப்பின் பண்புகள்

குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள், பணிகள்

பிரான்சு அரசாங்கம்

அமைச்சரவை

பணிகளும் அதிகாரங்களும், அமைச்சரவை

## 7.1 நாடும், மக்களும்

பல சிறப்புக்காரணங்களினால் பிரெஞ்சு அரசியல் முறையமைவை ஆழ்ந்து ஆராய வேண்டியுள்ளது. மனித வரலாற்றில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூன்று இலட்சியங்களை அடைய ஒரு மாபெரும் புரட்சி இந்த நாட்டில்தான் 1789-ஆம் அண்டு தோன்றிற்று. 1791-ஆம் ஆண்டு இந்த நாடுதான் மனித உரிமைப் பிரகடனத்தை உலகிற்கு பிரகடனம் செய்து மக்களாட்சியின் துவக்கத்தைக் குறித்தது. 1789-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின் இந்நாட்டு மக்கள் குடியரசு அரசாங்க முறையில் ஏராளமான சோதனைகள் செய்து பார்த்தார்கள். அச்சோதனைகளுக்கிடையே நெப்போலியன், பூர்பன் அரசர்கள் போன்றோர்களின் எதேச்சதிகார ஆட்சியும் தோன்றி மறைந்தது. 1789-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பல அரசியலமைப்புகள் இந்த நாட்டில் தோன்றி மறைந்துள்ளன. இந்த சோதனைகளின் விளைவாக மக்களின் உள்ளத்தில் "பாராளுமன்ற அரசாங்க முறை பிரதிநிதித்துவ அரசாங்க முறையாகும். ஆனால் முடியாட்சி அரசாங்க முறை அப்படிப்பட்டதல்ல, எனவே மக்களாட்சி அரசாங்க முறை பாராளுமன்ற முறையாகவும் குடியரசாகவும் இருக்க வேண்டும்" என்ற கருத்து வலுப்பெற்றது.

நிலப்பரப்பு வாரியாகப் பார்க்கின் பிரான்சு உலக நாடுகளில் 13-வது இடத்தில் இருக்கிற ஒரு சிறிய நாடாகும். அதன் தற்போதைய நிலப்பரப்பு 551,662 சதுர கிலோமீட்டர் ஆகும். நான்கு புறமும் மலைச் சிகரங்களால் சூழப்பட்டிருக்கும். பிரான்சின்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

1. பிரான்சு அரசியலமைப்பின் மக்கள் கலாச்சார குழுவின் ஆறு பண்புகள் யாவை?

கிழக்கு எல்லையில் சுவிட்சர்லாந்தும், தென்கிழக்கில் இத்தாலியும், மேற்கில் ஸ்பெயினும் எல்லை நாடுகளாக இருக்கின்றன. வடக்கே ஜுரா (Jura) மலை எல்லையாக விளங்குகின்றன.

பிரான்சின் மக்கள் தொகை 2001-ஆம் ஆண்டு 87 மில்லியன்களாக இருந்தது. மக்கள் தொகையில் உலக நாடுகளில் 13-வது இடத்திலும் ஐரோப்பிய நாடுகளில் ஐந்தாவது இடத்திலும் பிரான்ஸ் இருக்கிறது. ஆயினும் மக்கள் தொகை அடர்த்தி (Density of Population)யைப் பார்க்கின் மற்ற அண்டை நாடுகளை விட பிரான்சில் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. இங்கிலாந்தில் அது சதுர கிலோமீட்டருக்கு 216, ஜெர்மனியில் 218 ஆகவும் இருக்கும்பொழுது பிரான்சில் அது வெறும் 25 மட்டுமேயாகும். வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக அல்ஜுரியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள், குடும்பத்துடன் குடியேறிய தொழிலாளர்கள் ஆகியவர்கள் நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தனர். இரண்டு உலகப் போர்களின் காரணமாக நாட்டின் மக்கள் தொகையும் பிறப்பு விகிதமும் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஆயினும், இரண்டாவது உலகப் போருக்குப் பின் நாட்டின் மக்கள் தொகை ஓரளவு சீராக வளர்கிறது.

பிரெஞ்சு மக்கள் கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றுகிறார்கள். மக்களில் 90 சதவீதம் கத்தோலிக்க சமயத்தையும், 2 சதவீதம் மகக்ள் பிராட்டஸ்டண்ட் சமயத்தையும் சார்ந்தவர்களாவார்கள். இதைத் தவிர 2 சதவீதம் மக்கள் யூதர்களும், சிலர் சமயச் சார்பில்லாதவர்களோ அல்லது வேறு சிறு சமயத்தைச் சார்ந்தவர்களோ ஆவர். ஆனால் மேற்கூறிய கணக்கு பிரெஞ்சு மக்கள் எந்த அளவிற்கு சயமக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்கின்றார்கள். என்பதை முழுமையாகப் புலப்படுத்துவது ஆகாது. 90 சதவீதம் கத்தோலிக்கு மக்களில் வெறும் 7 சதவீதம் மக்கள் தான் கடவுளில் நம்பிக்கையுடையவர்கள்; 40 சதவீதம் மக்கள் கிறிஸ்து ஒரு தெய்வீகமானவர் என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள்; 20 சதவீதம் மக்கள் மட்டும் தான் கத்தோலிக்கச் சமயக் கட்டுப்பாடுகளை முறையாக கடைப்பிடிக்கின்றனர். நாட்டில் ஓரளவு சமய ஒருமைப்பாடு காணப்படினும், பிரான்சு சமயச் சார்பின்மைக் கொள்கையை கடைப்பிடிக்கிறது. 1905-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பிரிவினைச் சட்டம் என்ற சட்டத்தின் கீழ் திருச்சபை அரசிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் மக்களுக்கு சமய உரிமையை வழங்கியிருப்பதோடு அரசு ஒரு குறிப்பிட்ட சமயத்தை அங்கீகரிக்கவோ, சமயக் குருமார்களுக்கு ஊதியம் வழங்கவோ கூடாது எனக் கூறுகிறது.

## 7.2 அரசியல் கலாச்சாரம்

ஐரோப்பா நாடுகளில் பிரபலமான ஜனநாயக நாடாகத் திகழும் பிரான்சு அதற்கென ஒரு தனி அரசியல் கலாச்சாரத்தைக் கொண்டு விளங்குகிறது. அதனுடைய அந்த அரசியல் கலாச்சாரத்தை குடியரசுப்பற்று (Republicanism) என ஒரே வார்த்தையில் குறிப்பிடலாம். குடியரசுப்பற்று என்பதற்கு துல்லியமான பொருள் விளக்கம் கொடுக்க இயலாது. எனினும், அதிலுள்ள முக்கியமான அம்சங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். கிளர்ச்சி செய்வதற்குள்ள உரிமை, குடிமக்களின் அடிப்படை உரிமைகள், மக்கள் இறைமை, ரகசிய வாக்குரிமை, சமயச் சார்பிலா ஜனநாயக, சமதருமக் குடியரசு அரசாங்க முறை ஆகியவைகள் அதன் சிறப்பான அம்சங்களாகும். ஆயினும், குடியரசுப் பற்று என்பதை பல கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு அரசியல் தத்துவமாகக் கொள்ளக் கூடாது. மாறாக, அது அரசுக்கும் மக்களுக்குமிடையேயும், அரசாங்கத்திற்கும்

சட்டமன்றத்திற்கிடையேயும் இருக்க வேண்டிய உறவைப் பற்றிய மக்களின் சில நம்பிக்கைகளைக் குறிப்பிடுகிறது. அந்த நம்பிக்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பிரெஞ்சு மக்கள் பல போராட்டங்களை நடத்தி, உயிர் தியாகங்களையும் செய்ய வேண்டி இருந்தது.

குடியரசுப்பற்று என்ற பிரெஞ்சு மக்களின் அரசியல் கலாச்சாரத்தில் மூன்று அடிப்படைக் கொள்கைகள் உண்டு என்று டோரத்தி பிக்கிள்ஸ் கூறுகிறார். அவையாவன:

1. தனிமனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவனுக்குச் சில அடிப்படை உரிமைகளும் இருக்க வேண்டும்.
2. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற அவைக்கு அரசாங்கம், மேலவை ஆகியவற்றை விட உயர்வான அந்தஸ்து இருக்கவேண்டும்.
3. குடியரசு முறையில் பற்றுடையவர்களும், அதில் பற்று இல்லாதவர்களும் அரசியலமைப்பில் ஈடுபாடு உடையவர்களாக இருக்க வேண்டும்.

பேராசிரியர் ராய் சி. மாக்ரிடிஸ் (Prof. Roy C. Macridis) பிரெஞ்சு அரசியல் கலாச்சாரத்தில் கீழ்க்காணும் ஆறு பண்புகள் உண்டு எனக் கூறுகிறார்.

**1. தாராளப்போக்கு (Liberalism)**

வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடைய அரசு, தடையில்லாப் பொருளாதாரம், தனி மனித உரிமைகள், அரசியல் சுதந்திரம், பாராளுமன்ற ஜனநாயகம் ஆகியவற்றில் பிரெஞ்சு மக்களுக்கு தீவிரப் பற்று உண்டு.

**2. தீவிரவாதம் (Radicalism)**

பிரெஞ்சுப் புரட்சியின் வாரிசுகளான பிரெஞ்சு மக்கள், அரசையும் அரசின் நிறுவனங்கள், குருமார்கள், ஆட்சித்துறை ஆகியவற்றையும் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கின்றார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அரசாங்கம், சட்டமன்றம் ஆகியவைகள் குறைகளற்ற தன்மையுடன் விளங்கவேண்டுமென்பதில் அவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.

**3. கிறிஸ்துவ ஜனநாயகம் (Christian Democracy)**

அரசிலிருந்து திருச்சபை பிரிக்கப்பட்டுள்ளதை ஆதரிக்கும் பிரெஞ்சு மக்கள், சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண கத்தோலிக்க மக்களும், குருமார்களும் இணைந்து தீவிரமாக செயல்படவேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

**4. தொழில் ஆக்கம் (Industrialism)**

அரசாங்கம் திறமைமிக்க, பயிற்சிபெற்ற தொழில் நிபுணர்களால் நடத்தப்பட வேண்டுமென பிரெஞ்சு மக்கள் விரும்புகிறார்கள். இக்கருத்து 19-ஆம் நூற்றாண்டில் செயின்ட் சைமனால் வலியுறுத்தப்பட்டதாகும்.

**5. சமதருமம் (Socialism)**

உற்பத்திக் கருவிகளின் மீது அரசு கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும். பலம் குன்றியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு பொருளாதாரத்துறையில் தலையிட வேண்டும் என்பது அவர்கள் கருத்தாகும். ஆயினும், குடியரசு, பிரதிநிதித்துவ அரசாங்க முறை ஆகியவற்றை அவர்கள் ஆதரிக்கின்றார்கள்.

**6. காலிசம் (Gaulism)**

ஒரு வலுவான தலைவனின் உறுதியான ஆட்சியில் பிரெஞ்சு மக்களுக்கு முழு நம்பிக்கை உண்டு. மக்களின் இந்நம்பிக்கை “காலிசம்” என அறியப்படுகிறது.

அரசியல் முறையமைவிலுள்ள தடைகள், முரண்பாடுகள், அரசியல் கட்சிகள், பிரதிநிதிக்குழுக்கள் ஆகிய எல்லாவற்றையும் உதறித்தள்ளி விட்டு, மக்கள் ஒப்பம் (Referendum), மக்கள் கருத்தறிதல் (Plebiscite) போன்ற கருவிகள் மூலம் மக்களிடம் நேரடித் தொடர்பு ஏற்படுத்தி ஆட்சி செய்யக்கூடிய தலைவனை பிரெஞ்சு மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். அப்படிப்பட்ட ஒரு தலைவராக சார்லஸ் டிகால் இருந்தார்.

பிரெஞ்சு மக்களின் அரசியல் கலாச்சாரத்தின் மேற்கூறிய பண்புகளின் அடிப்படை நோக்கம் ஒன்றே. அதாவது, அரசின் அதிகார நிலைக்கும், மக்களின் சுதந்திரத்திற்குமிடையே ஒரு சமூக நிலையை உருவாக்குவது என்பதுதான். பிரெஞ்சு மக்களின் பெருமை, தேசிய ஒற்றுமை ஆகியவற்றின் அடையாளமாகத் திகழ்வது அரசாகும். அந்த அரசை அவர்கள் போற்றி வணங்குகிறார்கள். அதற்காக பல தியாகங்களையும் செய்துள்ளனர். ஆயினும் அதே அரசு வரம்பிலா அதிகாரத்தைப் பெறும்போது மக்களைத் துன்புறுத்தி, அடிமைகளாக மாற்றிவிடக்கூடும் எனவும் அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

பிரான்சின் ஐந்தவாது குடியரசு அரசியலமைப்பு 1958-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் நாள் அமுலுக்கு வந்தது. 1958-ஆம் ஆண்டு ஜுன் மாதம் சார்ல்ஸ் டி. காலினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் இந்த அரசியலமைப்பு வரையப்பட்டது. அதே ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட ஒரு மக்கள் ஒப்பந்தத்தில் இவ்வரசியலமைப்பை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

## 7.3 அரசியலமைப்பின் பண்புகள் :

1958 ஆம் ஆண்டைய பிரெஞ்சு அரசியலமைப்பில் ஓர் அணிந்துரையும் 92 விதிகளும் உள்ளன. அரசியலமைப்பைப் பதினைந்து தலைப்புகளாகப் பிரித்துள்ளனர். இவ்வரசியலமைப்பு டிகாலுக்கென்ற தயாரிக்கப்பட்டதென்றும், மன்னராட்சியை ஒத்ததென்றும், குடியரசுத் தலைவராட்சியை ஒத்ததென்றும், பாராளுமன்றப் பேரரசென்றும் கூறுவர். இவ்வரசியலமைப்பின் சிறப்புப் பண்புகளைத் தொகுத்தளிப்பது சிரமம். அரசைக் குறித்துள்ள ஏழு விளக்கத்தை அரசியலமைப்பில் காணமுடியாது. பாராளுமன்ற முறையிலான மக்களாட்சி அரசும், தனி நபரது தலைமையும் இவ்வரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

1. ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பு தெளிவற்றது என்று டோரதி பிக்கிஸ் கூறுகின்றார். முக்கியமான பல நிறுவனங்களைப் பற்றி அரசியலமைப்பு ஒன்றும் கூறவில்லை. இவ்வரசியலமைப்பு சில இடங்களில் தெளிவற்றதாகவும், சில இடங்களில் குழப்பமுள்ளதாகவும் தென்படுகிறது. பல விதிகளின் சரியான கருத்தைப் புரிந்து கொள்வது இயலாது. ஐந்தவாது குடியரசின் கீழ் காணப்படும் பல நிறுவனங்கட்கு விளக்கமளிக்க இயலாது. அரசாங்கத்திற்களிக்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி ஏராளமான பிரகடனங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இப் பிரகடனங்கள் நிர்வாகத்துறையையும், நீதித்துறையையும் வெகுவாக மாற்றியமைத்துள்ளன.

2. பின்வரும் இரண்டு கோட்பாடுகளின் விளக்கம் தான் இவ்வரசியலமைப்பு. பாராளுமன்ற முறையான மக்களாட்சிதான் முதற்கோட்பாடு. அரசியலமைப்பு இவ்வகை அரசாங்கத்திற்கு வழிகோலுகின்றது. கொள்கையளவில் நோக்குமிடத்து, நாட்டின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ஒருவரல்லர். பாராளுமன்றத்தின் இரு அவைகளும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆட்சித்துறை தனித்தியங்குகிறது. அரசியலமைப்பு தேசிய அவையின் அதிகாரத்தைப் பெருமளவு குறைத்துள்ளது.

> தன்னறிவு சோதனைக் கேள்வி
> 2. பிரான்சு அரசியலமைப்பின் பண்புகளை எழுது.

அரசாங்கத்திற்கு நிலையான தன்மை அளிப்பதற்கென்றே இம்முறை வகுக்கப்பட்டது. பாராளுமன்றத்திற்கு உயர்வான நிலை அளிக்கப்பட்டிருப்பினும், விதிகள் உருவாக்கும் அதிகாரம் பெருமளவில் அரசாங்கத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளது.

தனிநபரது தலைமைதான் இவ்வரசியலமைப்பில் காணப்படும் இரண்டாவது கோட்பாடு ஆகும். பல கோணங்களினின்று பார்க்கும்போது இவ்வரசியலமைப்பு டிகாலுக்கென்றே உருவாக்கப்பட்டது என்று கூறத் தோன்றுகிறது. அரசியலமைப்பில் காணப்படும் பல விதிகள் டிகாலின் ஆலோசனைக்கேற்பத் தான் சேர்க்கப்பட்டன. நாட்டின் தலைவர் மக்களின் பிரதிநிதியாக இருக்க வேண்டுமேயன்றி பாராளுமன்றத்தின் பிரதிநிதியாக அல்ல என்று டிகால் கூறினார். இவ்வரசியலமைப்பு ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்களைக் குடியரசுத் தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் பகிர்ந்தளிப்பதனின்று குடியரசு தலைவருக்குள்ள முக்கியத்துவம் புலனாகும். சாதாரண காலங்களில் பயன்படுத்தக்கூடிய அதிகாரங்களும் நெருக்கடி நேரத்தில் பயன்படுத்தக்கூடிய அதிகாரங்களும் குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

3. சட்டமியற்றும் அதிகாரங்களையும், ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்களையும் பிரித்துள்ளமை, இவ்வரசியலமைப்பிற் காணக்கூடிய குறிப்பிடத்தக்கதொன்றாகும். அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் அங்கத்தினராக இருத்தல் கூடாது. ஆட்சித்துறை அதிகாரம் பாராளுமன்றத்திடமிருந்து ஆரம்பிக்கக் கூடாது. அங்ஙனம் ஆரம்பித்தால் குழப்பம்தான் விளையும் என்று 1946 ஆம் ஆண்டு டிகால் கூறினார்.

4. அரசியலமைப்பின் நான்காவது விதி அரசியல் கட்சிகளின் பங்கை எடுத்துரைக்கின்றது. சாதாரண அரசியல் வாழ்க்கையில் அரசியல் கட்சிக்கு குடியாட்சி அரசியலமைப்பின் அங்கீகாரம் அளிப்பது இதவே முதல் தடவை. தேசீய இறைமை, மக்களாட்சி போன்ற கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதற்கு அரசியல் கட்சிகள் தேவைப்படுகின்றன. ஒரு கட்சி முறை அரசியலமைப்பிற்குப் புறம்பானது என்று அரசியலமைப்பு கூறுகின்றது.

5. ஐந்தாவது குடியரசால் உருவாக்கப்பட்டுள்ள விசேட அமைப்புக்களிலொன்று அரசியலமைப்புக்குழு (Constitutional Council) ஆகும். அரசாங்கத்தின் நடவடிக்கைகளும், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளும் அரசியலமைப்பிற்குட்பட்டவைதானா என இக்குழு நிர்ணயிக்கின்றது. அரசியலரங்கில் இக்குழு மிக முக்கியமான இடம் வகிக்கின்றது.

**அரசியலமைப்பின் திருத்த முறை :**

ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பைத் திருத்தும் விசேட முறை அதனில் கொடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புத் திருத்தப் பிரேரணையை தலைமை அமைச்சரது ஆலோசனைக்கேற்பவோ அல்லது தனிநபர்களது ஆலோசனைக்கேற்பவோ குடியரசுத் தலைவர் துவக்கலாம். அப்பிரேரணையை ஒரே வடிவத்தில் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஆமோதித்து அதன்பின் பொதுமக்கள் விருப்ப வாக்கெடுப்பில் மக்கள் ஆமோதிக்க வேண்டும். குடியரசுத் தலைவர் விரும்பினால் இப்பிரேரணை இரு அவைகளின் இணைப்புக் கூட்டத்தில் ஐந்தில் மூன்று பங்குப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படலாம். மக்களாட்சி முறை அரசை மாற்ற திருத்தங்கள் கொண்டு வரமுடியாது. அரசியலமைப்புத் திருத்தம் சம்பந்தப்பட்ட விதிகள் யாவும் தெளிவற்றவையாகக் காணப்படுகின்றன.

## 7.4 பிரெஞ்சு குடியரசுத் தலைவர்

பிரெஞ்சு அரசாங்க அமைப்பானது. பாராளுமன்றம் மற்றும் குடியரசுத் தலைவர் முறையிலான அரசாங்க அமைப்பைக் கொண்டுள்ளது. ஆயினும், பாராளுமன்ற முறையைக் காட்டிலும் குடியரசுத் தலைவர் முறைக்கே அதில் அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. நியுமென் கருத்துப்படி, அரசியலமைப்பு ஆட்சித்துறையை வலுப்படுத்தி, பாராளுமன்றத்தின் பங்கைக் குறைத்து விடுகிறது; இரண்டு முறையிலான ஆட்சித் துறையைக் கொண்டிருப்பினும் தலைமை அமைச்சரைக் காட்டிலும் குடியரசுத் தலைவருக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஐந்தாவது குடியரசில் குடியரசுத் தலைவர் இங்கிலாந்து அரசரைப் போல் அல்லாமலும், அமெரிக்க குடியரசுத் தலைவரைப் போல் அல்லாமலும் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் இருக்கிறார். இதற்குக் காரணமாக நான்காவது குடியரசின் இறுதிக் காலத்தில் பிரான்ஸ் சமாளிக்க வேண்டியிருந்த பிரச்சனையை முக்கியமாகக் கூறலாம். எனவே, அன்றிருந்த சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக அரசியலமைப்பாளர்கள் ஒரு வலிமை வாய்ந்த குடியரசுத் தலைவரை உருவாக்கினார்கள். தற்பொழுது பிரெஞ்சு அரசியலமைப்பில் முக்கியமானவராக குடியரசுத் தலைவர் திகழ்கிறார்.

**தேர்தல்**

ஆரம்பத்தில் ஐந்தாவது குடியரசு அரசியலமைப்பு, குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு மறைமுகத் தேர்வு முறையைப் பின்பற்ற வழிவகுத்திருந்தது. அதன்படி குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க 80,000 பேர் கொண்ட ஒரு தேர்தல் குழு அமைக்கப்பட்டது. இம்முறையை சில அரசியல் தலைவர்களும், பல வழக்கறிஞர்களும் எதிர்த்தனர். தற்போது பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசுத் தலைவர் ஐந்தாண்டு காலத்திற்குப் பதவி வகிக்கிறார். அவர் விரும்பினால் மீண்டும் அப்பதவிக்கான தேர்தலில் போட்டி இடலாம். குடியரசுத் தலைவர் தேர்தலில் பதிவாகும் மொத்த வாக்குகளில் ஏதாவது ஒரு வேட்பாளர் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றால், இரண்டாவது வாக்கெடுப்பு நடைபெறாது. தற்பொழுது தேர்தலில் ஓர் உறுப்பினர் போட்டியிட குறிப்பிடத்தக்க 100 பாராளுமன்ற உறுப்பினர் முன்மொழிய குறிப்பிட்ட பிராங்குகள் முன்பணமாகவும் கட்ட வேண்டும். இந்த முன்பணம் கட்டும் வேட்பாளர் தேர்தலில் 5 சதவீதம் வாக்குகளைப் பெறும் எல்லா வேட்பாளர்களுக்கும் தேர்தல் செலவிற்காக அரசு நிதி வழங்குகிறது. மேலும், ஒவ்வொரு சம அளவு நேரம் ரேடியோ, டெலிவிஷன் போன்ற மக்கள் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அரசு அனுமதிக்கிறது. 50% வாக்குகளை எந்த ஒரு வேட்பாளரும் பெறத் தவறினால் அதிக வாக்குகளை பெற்ற முதல் இரண்டு வேட்பாளர்களைக் கொண்டு மறுபடியும் தேர்தல் நடத்தப்படும். 1979-ஆம் ஆண்டு தேர்தலில் டிஎஸ்டாங் (De Estang) இரண்டாவது முறை வாக்கில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசுத் தலைவரின் தகுதிகளைக் குறித்து அரசியலமைப்பு எதுவும் கூறவில்லை.

## 7.5 குடியரசுத் தலைவரின் நிலை, அதிகாரங்கள், பணிகள்

பிரெஞ்சு குடியரசுத் தலைவரின் நிலை சர்ச்சைக்குட்பட்டதாகும். அவர் அரசுத் தலைவர், மைக்மல் டிபர் என்பவர், பிரெஞ்சு அரசியலமைப்பு பாராளுமன்ற முறையிலானது என்று கூறுகிறார். அவ்வாறு நாம் பிரெஞ்சு அரசாங்க முறையைப் பாராளுமன்ற முறையிலான அரசாங்கம் என்று கருதினால் பிரெஞ்சு குடியரசுத் தலைவர் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு ஒப்பானவர் எனலாம். ஆனால் உண்மையில்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

3. பிரெஞ்சு குடியரசு தலைவரின் தேர்தல் முறையை விளக்குக.
4. பிரான்சு குடியரசுத் தலைவரின் அதிகாரங்களை விவரி.

பிரெஞ்சு அரசாங்கம் பாராளுமன்ற முறைக்கு மாறாக, குடியரசுத் தலைவர் முறையிலான அரசாங்கம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உண்மையான அதிகாரங்கள் குடியரசுத் தலைவரிடம் உறைந்துள்ளன. தலைமை அமைச்சரை நியமிப்பதுடன் உண்மையில் குடியரசுத் தலைவர் ஆட்சி செய்கிறார். மேலும், அரசியலமைப்புக்குப் பாதுகாவலராக குடியரசுத் தலைவர் திகழ்கிறார். அரசியலமைப்பு ஐந்தாவது விதியின்படி அரசியலமைப்பை எல்லோரும் ஏற்றுச் செயல்படுகிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டியது குடியரசுத் தலைவரின் கடமையாகும். இரண்டாவதாக, குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் எஜமானராக விளங்குகிறார். அமைச்சரவையின் தீர்மானங்களை மறுக்கவும் குடியரசுத் தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். தலைமை அமைச்சர் ஓர் இக்கட்டான நிலையில் உள்ளார். அவர் குடியரசுத் தலைவரை எப்பொழுதும் ஆதரிக்க வேண்டும். அவ்வாறு செய்யாதபோது பதவி விலக வேண்டும். மேலும், குடியரசுத் தலைவரின் முக்கியமான தீர்மானங்களில் தலைமை அமைச்சரும் கையொப்பமிட வேண்டும். தலைமை அமைச்சர் நியமனம், பதவி நீக்கம் மற்றும் ஏனைய அமைச்சர்கள் நியமனங்கள் தவிர குடியரசுத் தலைவரின் மற்ற எல்லா செயல்களிலும் தலைமை அமைச்சர் குடியரசுத் தலைவரின் முடிவுகளை ஏற்றுக் கையொப்பமிட வேண்டும். பிரெஞ்சு அரசியலமைப்பு முறையில் ஒரு வியக்கத்தக்க நிலை என்னவெனில் தலைமை அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள் என்பதாகும். இதில் குடியரசுத் தலைவர் எல்லா செயல்களையும் செய்கிறார். ஆனால் அவர் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பானவர் அல்ல. தேசிய சபை தலைமை அமைச்சரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இயற்றி அவரைப் பதிவியிலிருந்து விலக்க முடியும். ஆனால் குடியரசுத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது.

தன் கருத்துக்களைப் புகுத்துவதற்காக குடியரசுத் தலைவர் எப்பொழுது வேண்டுமானாலும் எந்தக் காரணமுமின்றி தேசிய அவையைக் கலைத்துவிடலாம். அவ்வாறு செய்யும்வேளையில் தலைமை அமைச்சரையும் தேசிய அவையின் தலைவரையும் செனட் அவையின் தலைவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்பது ஒரு சம்பிரதாயமே தவிர அது முக்கியமானதல்ல. இவ்வாறு செய்யும் போது எந்த அமைப்பிடமும் அவர் அனுமதி பெறத் தேவையில்லை. குடியரசுத் தலைவரின் அதிகாரத்திழல் ஒரு தடையாக விளங்குவது புதிய தேசிய அவை தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு ஆண்டு முடிவதற்குள்ளாக குடியரசுத் தலைவர் அந்த சபையைக் கலைக்கக் கூடாது என்ற விதியாகும். ஆனால் அரசாங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட மக்கள் வாக்கெடுப்பை நடத்த குடியரசுத் தலைவர் மறுக்கலாம்.

அரசியலமைப்பின் விதி 16 குடியரசுத் தலைவரின் அவசரகால அதிகாரங்களைப் பற்றிக் கூறுகின்றது. இவ்வதிகாரங்கள் குடியரசுத் தலைவர் சட்டபூர்வமான சர்வதிகாரியாகச் செயல்பட வழிவகை செய்கின்றது. அரசியலமைப்பின்படி அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு முன் நான்கு அமைப்புக்களை குடியரசுத் தலைவர் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று இருப்பினும், அவசரகால அதிகாரங்களைப் பொறுத்தவரை குடியரசுத் தலைவரின் முடிவே இறுதியானது. அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தவதற்க முன் அவர் தலைமை அமைச்சரையும், பாராளுமன்ற இரண்டு அவைகளின் தலைவர்களையும், அரசியலமைப்புக் கவுன்சிலின் தலைவரையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அரசியலமைப்பு கூறுகிறது. ஆனால்

அவசரகால அதிகாரங்களைப் பெற்றுவிட்டால் அவர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவர் தேசிய அவையைக் கூட கலைத்துவிடலாம். இறுதியாக, குடியரசுத் தலைவர் நாட்டின் வழிகாட்டியாக விளங்குகிறார். மேலும் அரசின் உயர் அதிகாரத்தைப் பயன்படுத்துபவராகவும், அதிகார ஒப்படைப்புச் செய்பவராகவும் விளங்குகிறார். பிரெஞ்சு அரசியலமைப்பில் குடியரசுத் தலைவர் பதவி முக்கியமான பதவியாக விளங்குகிறது. அவர் அரசியலமைப்புத் தலைவராக மட்டுமல்லாமல் பிரெஞ்சு சமுதாயத்தின் தலைவராகவும் திகழ்கிறார்.

பிரெஞ்சு குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் அவரை ஒரு வலுவான ஆட்சியாளராக மாற்றுகிறது. சட்டமன்றம் மற்றும் ஆட்சித்துறை அதிகாரங்களைத் தவிர குடியரசுத் தலைவர் அவசரகால அதிகாரங்களையும் கொண்டுள்ளார். அளவு கடந்த அதிகாரங்களைப் பெற்றிருக்கும் அவர் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டவரல்ல.

குடியரசுத் தலைவரின் ஆட்சித்துறை அதிகாரங்களை இனி பார்ப்போம். அவர் அரசின் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும் விளங்குகிறார். அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவதுடன் அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்குக் கையொப்பமளிக்கிறார். அமைச்சரவைக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் முக்கியமான நியமனங்களைச் செய்கிறார். இவர் இராணுவ அதிகாரிகளையும், அரசியலமைப்புக் கவுன்சிலர்களையும், வெளிநாட்டுத் தூதுவர்களையும், தலைமை ஆடிட்டர்களையும் நியமனம் செய்கிறார். மேலும், குடியரசுத் தலைவர் வெளிநாட்டுத் தூதுவர்களை நியமனம் செய்வதுடன் பிற நாட்டுக்குப் பிரதிநிதிகளை வரவேற்கவும் செய்கிறார். முப்படைகளின் தலைமைத் தளபதியாக விளங்கும் குடியரசுத் தலைவர் இராணுவ உயர்கவுன்சில் கூட்டங்களுக்கும், தேசிய பாதுகாப்புக் குழுவிற்கும் தலைமை தாங்குகிறார்.

ஆட்சித்துறை அதிகாரங்கள் மட்டுமல்லாமல் குடியரசுத் தலைவர் சில சட்டத்துறை சார்ந்த அதிகாரங்களையும் பெற்றுள்ளார். சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டமுன்வரைவுகளை 15 நாட்களில் குடியரசுத் தலைவர் பிரகடனம் செய்கிறார். அவ்வாறு செய்யாமல் பாராளுமன்றம் இயற்றிய ஒரு சட்டமுன்வரைவை பாராளுமன்றத்திற்கே திருப்ப அனுப்பி மறுபரிசீலனை செய்யும்படி பாராளுமன்றத்தைக் கோரலாம். அதேபோன்று ஒரு சட்டமுன்வரைவை மக்களின் வாக்கெடுப்பிற்கு விடுவது குடியரசுத் தலைவர் விருப்பமேயாகும். குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சரையும் பாராளுமன்ற அவைத்தலைவர்களையும் அரசுக்குழு தலைவரையும் கலந்தாலோசித்து தேசிய அவையைக் கலைக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். மேலும், அரசியலமைப்புப்படி, இரண்டு அவைகளுக்கும் செய்திகளை அனுப்பும் அதிகாரங்களையும் குடியரசுத் தலைவர் பெற்றுள்ளார். பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஒரு சட்டமுன்வரைவு அரசியலமைப்பிற்கு உட்பட்டிருக்கின்றதா என்பதை குடியரசுத் தலைவர் அறிந்து கொள்ள அரசியலமைப்பு கவுன்சிலின் ஆலோசனையையும் கோரலாம். ஆனால் அமெரிக்க குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள மறுப்பாணை அதிகாரம் பிரெஞ்சு குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்படவில்லை. ஆனால் பிரெஞ்சு குடியரசுத் தலைவர் தற்காலிக மறுப்பாணை அதிகாரம் பெற்றுள்ளார். இதன்படி குடியரசுத் தலைவர் ஒரு சட்டமுன்வரைவை மறுபரிசீலனை செய்யும்படி பாராளுமன்றத்திற்குத் திருப்பி அனுப்பலாம்.

இறுதியாக குடியரசுத் தலைவர் ஆட்சித்துறை, சட்டத்துறை அதிகாரங்களோடு

அவசர கால அதிகாரங்களையும் பெற்றுள்ளார். அரசியலமைப்பு விதி 16ன் கீழ் எப்பொழுதாவது வெளிநாட்டுப் படையெடுப்பின் மூலமோ அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் மூலமோ அரசின் பாதுகாப்பு சீர்குலையுமானால் குடியரசுத் தலைவர் அச்சூழ்நிலையைச் சமாளித்து நாட்டைக் காக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். இவ்வாறு அவசரகால அதிகாரங்களைப் பெறுமுன் குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சரவையும், இரு அவைகளின் தலைவர்களையும், அரசியலமைப்பு கவுன்சிலையும் கலந்து ஆலோசனை செய்கிறார். இவ்வாறு அவசரகால அதிகாரங்களைப் பெறும்போது அதை ஒரு செய்தியின் மூலம் நாட்டிற்குத் தெரிவிக்கிறார்.

மேற்கூறிய கருத்துக்களிலிருந்து பிரெஞ்சு குடியரசுத் தலைவர் பெயரளவிலான ஆட்சித்துறை தலைவர் அல்ல என்பது தெளிவாகிறது. அவர் தலைமை ஆட்சியாளராக இருந்து பாராளுமன்றத்தைக் தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுள்ளார். ஆகவே, ஹெர்மன் பைனர் என்பவர் "குடியரசுத் தலைவரின் உண்மையான அதிகாரங்களின் விளைவால் ஆட்சித்துறை பலப்படுத்தப்பட்டுள்ளது" என்று கூறுகிறார். பிக்கிள்ஸ் என்பவர், "பாராளுமன்றமும், அரசாங்கமும் குடியரசுத் தலைவரின் பிரதிநிதிகள்" என்று கூறுகிறார். எனவே, பிரெஞ்சு குடியரசுத் தலைவர் இந்திய குடியரசுத் தலைவரைப் போலல்லாமல் உண்மையான அதிகாரங்களைப் பெற்றுத் திகழ்கிறார்.

குடியரசுத் தலைவர் அரசாங்க முறைக்கான கூறுகளை ஐந்தாவது அரசியலமைப்பில் காணலாம். குடியரசுத் தலைவர் ஆட்சித்துறைத் தலைவராக மிகுதியான அதிகாரங்களுடன் திகழ்கிறார். சட்டத்துறையில் குடியரசுத் தலைவருக்கு அதிக அதிகாரங்கள் உண்டு. அவர் சட்டமன்றத்தைக் கலைக்கவும் செய்யலாம். அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் குடியரசுத் தலைவர் தேசிய அவையைக் கலைத்து புதிய தேர்தலுக்கு வழி வகுக்கிறார். அமைச்சர்கள் தேசிய அவையில் உறுப்பினராக இருக்க முடியாது. குடியரசிற்கு ஆபத்து ஏற்படும் போது குடியரசுத் தலைவர் நெருக்கடி கால நடவடிக்கைகளை எடுக்க அதிகாரம் பெற்றுள்ளார். இத்தகைய அதிகாரங்களால் பிரெஞ்சு அரசாங்க அமைப்பு நிறையா குடியரசுத் தலைவர் முறையில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுகிறது என்று கூறலாம்.

அதே சமயத்தில் பாராளுமன்ற முறையிலான அம்சங்களையும் பிரெஞ்சு அரசியல் அமைப்பில் காணலாம். அரசியலமைப்பு தலைமை அமைச்சரின் கீழ் ஓர் அமைச்சரவையை ஏற்படுத்துகிறது. அவர்கள் பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். தலைமை அமைச்சர், மற்ற அமைச்சர்களின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் குடியரசுத் தலைவர் நிர்வாகம் நடத்துகிறார். தலைமை அமைச்சர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டாலும் அவர் பாராளுமன்றத்தில் தனக்குப் பெரும்பான்மை பலம் உண்டு என்பதை நிருபிக்க வேண்டும். பாராளுமன்றம் குடியரசுத் தலைவரின் நடத்தையைக் குறித்து கலந்துரையாடவும், அவரைப் பதவியிலிருந்து நீக்கவும் முடியும். பிரெஞ்சு அரசியல் முறை அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து அரசாங்க முறைகளின் ஒரு கலவையாகத் தோன்றினாலும் இது அதிகமாக "நிறையா குடியரசுத் தலைவர் முறை" (Quasi Presidential System)யைக் கொண்டிரக்கிறது என்று கூறலாம். ஏனெனில், குடியரசுத் தலைவர் மிகவும் அதிகாரம் வாய்ந்தவராகத் திகழ்கிறார். இன்று கொள்கை வகுப்பதில் குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சரைக் காட்டிலும் முதன்மை பெற்றுத் திகழ்கிறார். மேலும், வெளிநாட்டுறவு, இராணுவம், தற்காப்பு

போன்ற காரியங்களில் குடியரசுத் தலைவரின் தீர்மானங்கள் இறுதியானவை. குடியரசுத் தலைவர் டிகால் கொள்கைகளை வகுத்து அவைகளுக்கு பொதுமக்கள் ஆதரவை அவ்வப்போது மக்கள் வாக்கெடுப்பு மூலம் பெற்று அமுலாக்கினார். எனவே. ஐந்தாவது குடியரசு இங்கிலாந்து மற்றும் அமெரிக்க குடியரசுத் தலைவர் முறையை ஒத்தே இருந்தது என்று கூறலாம். ஏனெனில் அங்கு இரண்டு ஆட்சியாளர்கள் நடைமுறை நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்கள். இம்மாதிரியான அரசாங்க முறையில் தலைமை அமைச்சர் குடியரசுத் தலைவரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டால்தான் அரசாங்கம் சிறப்பாக நடைபெறும். உதாரணமாக 1976-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் கருத்து வேறுபாடு தோன்றி தலைமை அமைச்சர் பதவி விலக வேண்டி வந்தது. இப்பிரச்சனை குறிப்பிட்ட கொள்கையளவில் குடியரசுத் தலைவர் அரசாங்கத்தை குடியரசுத் தலைவர் முறை சார்ந்ததாய் மாற்ற முனைவதோடு, தலைமை அமைச்சரின் சுதந்திரம் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் விரும்புவதாக அப்போதை தலைமை அமைச்சர் அச்சம் கொண்டிருந்தார்.

## 7.6 பிரெஞ்சு அரசாங்கம்

ஐந்தாம் குடியரசு அரசியலமைப்பு பிரான்சில் பாராளுமன்ற முறை அரசாங்கம் செயல்பட வகை செய்கிறது. அம்முறை அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவர் பிரதம மந்திரியாவார். பிரான்சின் அரசியலமைப்பு பிரதம மந்திரி பதவியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவர் பிரதமர் என அழைக்கப்படுகிறார். அவர் குடியரசுத் தலைவருக்கு அடுத்த நிலையில் அதிகாரம் பெற்றுள்ளவராகத் திகழ்கிறார்.

### பணிகளும் அதிகாரங்களும்

பிரதமர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். கீழ் அவையில் பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியின் தலைவரை குடியரசுத் தலைவர் பிரதமராக நியமிக்க வேண்டிய நிலையில் இருந்தாலும் இந்த விஷயத்தில் அவர் இங்கிலாந்து அரசியாரை விட அதிகாரம் பெற்றுத் திகழ்கிறார் எனலாம். பிரதமர் அரசாங்கத்தின் தலைவராகத் திகழ்கிறார். அவர் நாட்டின் ஆட்சித்துறை சம்பந்தமான கொள்கை முடிவுகளை மேற்கொள்கிறார். குடியரசுத் தலைவரின் பல நிர்வாக ஆணைகளில் பிரதமரின் ஒப்புதலும், கையொப்பமும் இருக்க வேண்டும். பாராளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கைவிடுக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் சார்பில் பேசுபவராகத் திகழ்கிறார் பிரதமர். அரசாங்கத்தின் கொள்கைகளை ஆதரித்தும் நடவடிக்கைகட்கு விளக்கம் தந்தும் அவர் பேசுகிறார்.

### பிரதமரின் நிலை

இங்கிலாந்தில், பிரதம மந்திரி அரசியாரால் நியமிக்கப்படுகிறார். நியமனம் செய்யப்பட்டதும் எல்லா அதிகாரங்களையும் பிரதம மந்திரி பெற்றுவிடுகிறார். பிரதம மந்திரியை நியமனம் செய்த பின்னர், அரசியார் அவரது ஆலோசகரைப் போல் செயல்படுகிறார். அரசாங்கத்தின் எல்லா நிர்வாகச் செயல்களுமே அரசியாரின் பெயரால் செய்யப்பட்ட போதிலும் அவற்றை உண்மையில் செய்வது பிரதம மந்திரியும், அமைச்சர் குழுவும் தான். எனவே இங்கிலாந்தின் அரசியார் பெயரளவிலான தலைவராக மட்டுமே திகழ்கிறார். ஆனால் பிரெஞ்சு குடியரசுத் தலைவர் வெறும் பெயரளவிலான தலைவர் மட்டுமல்ல. அவருக்குப் பல உண்மையான அதிகாரங்கள் உள்ளன. அந்த வகையில் ஆங்கிலேய பிரதம மந்திரி அதிக முக்கியத்துவம் பெறுகிறார். அத்தகைய முக்கியத்துவம்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

5. பிரான்சு பிரதமரின் அரசியலமைப்பு நிலையை எழுது.

பிரான்சின் பிரதமருக்குக் கிடையாது. இங்கிலாந்தில் அமைச்சர் குழுக்கூட்டங்களுக்குப் பிரதம மந்திரி தலைமை வகிக்கிறார். அமைச்சர்குழு பல முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளும் அமைப்பாகத் திகழ்கிறது. அரசியார் அமைச்சர் குழு கூட்டங்கட்கு வருகை புரிவதில்லை. அமைச்சர் குழுவின் முக்கிய முடிவுகளைப் பிரதம மந்திரி அரசியார்க்குத் தெரிவிக்கிறார். ஆனால் பிரான்சின் அமைச்சரவைக் கூட்டங்களுக்கு குடியரசுத் தலைவர் தலைமை வகிக்கிறார். அவர் இயலாமையாலோ அல்லது வேறு காரணத்தாலோ அவர் பிரதமரை அமைச்சரவைக் கூட்டங்கட்கு தலைமை தாங்கப் பணிக்கலாம். இந்த விஷயத்தில், பிரதம மந்திரி அமைச்சரவையின் தலைவர் என்கிற நிலையில் இருந்து கீழிறக்கப்படுகிறார் எனலாம். அமைச்சரவையின் உறுப்பினர்களிடையே பணிமூப்புள்ள அமைச்சரைப் போல் அவர் நடத்தப்படுகிறார். பிரிட்டனின் பிரதம மந்திரியின் அதிகமான அதிகாரங்களின் காரணமாக அந்நாட்டின் அரசாங்கம் பிரதம மந்திரி அரசாங்கம் என்றழைக்கப்படுகிறது. ஆனால் பிரான்சின் பிரதமர் அந்நிலையில் இல்லை. பிரதம மந்திரி ஆலோசனையின்படி அரசியார் மக்களவையைக் கலைக்கலாம். இந்த அதிகாரம் பிரதம மந்திரியினால் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பிரான்சில் பாராளுமன்றத்தின் கீழ் அவையைக் கலைக்கின்ற அதிகாரத்தை குடியரசுத் தலைவரே பெற்றுள்ளார். எந்தக் காரணத்திற்காக வேண்டுமானாலும் அவர் தேசிய சபையைக் கலைக்கலாம். அவ்வாறு தேசிய அவையைக் கலைக்கும்போது பிரதம மந்திரியை அவர் கலந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. எனவே பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற விஷயத்தில் பிரதமருக்கு அதிகாரம் இல்லை. பிரிட்டனில் பிரதம மந்திரி பாராளுமன்றத்திற்குப் பொறுப்பானவர். பிரெஞ்சு பிரதமரின் பணி, நிலை, அதிகாரம் ஆகியவற்றை இங்கிலாந்தின் பிரதமருடைய பணி, நிலை, அதிகாரம் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது பிரெஞ்சு பிரதமரின் பலவீன நிலை புலனாகும். அவரது அதிகாரங்களும் செல்வாக்கும் மிகக் குறைவானவை எனச் சொல்லலாம். எனவே தான் பிரான்ஸ் ஒரு முழுமையான பாராளுமன்ற அரசாங்கம் எனச் சொல்லப்பட முடியாத நிலையில் உள்ளது.

இங்கிலாந்து பிரதம மந்திரி அதிக முக்கியத்துவமும், அதிகாரங்களும் பெற்றுத் திகழ்கிறார். அவரது அதிகாரங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றன. ஆனால், பிரெஞ்சுப் பிரதமர் மிகக் குறைவான அதிகாரங்களையே பெற்றுள்ளார் எனலாம். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அரசியல் நிறுவனங்கள் அந்நாட்டின் அரசியல், வரலாறு, மனோநிலைச் சூழல்களைப் பொறுத்தே அமைகின்றன. பிரெஞ்சு மக்களின் இத்தகைய சூழல்கள் ஒரு நிறையா குடியரசுத் தலைவர் ஆட்சிமுறை அந்நாட்டில் ஏற்படுத்தப்படுவதற்கான அவசியத்தை உண்டாக்கி இருக்கின்றன எனலாம். ஒவ்வொரு அரசியலமைப்பு நிறுவனத்திற்குமெனச் சில தனி இயல்புகள் உள்ளன. பிரெஞ்சுப் பிரதமர் பதவியும் அத்தகைய சில தனித் தன்மைகளைப் பெற்றுத் திகழ்கிறது.

## 7.7 அமைச்சரவை

பிரான்சின் ஐந்தாம் குடியரசு அரசியலமைப்பு, அதற்கு முந்திய அரசியலமைப்பில் இருந்த சில குறைபாடுகளைக் களைய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது. எனவே நான்காம் குடியரசின் அரசியலமைப்பின் அம்சங்கள் பல மாறுதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு ஐந்தாம் குடியரசில் சேர்க்கப்பட்டன. ஐந்தாம் குடியரசு அரசியலமைப்பின் எட்டாவது விதி அமைச்சரவையும் பிரதமரையம் பற்றிக் குறிப்பிடுகிறது.

**அமைப்பு**

பிரதம மந்திரி குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் பிற அமைச்சர்களை நியமிக்கிறார். அமைச்சர்களை நியமனம் செய்வதிலும் நீக்குவதிலும் பிரதமரின் ஆலோசனைப்படி குடியரசுத் தலைவர் செயல்படுகிறார். அமைச்சரவையின் கூட்டங்கட்கு குடியரசுத் தலைவர் தலைமை தாங்குகிறார். அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு பொறுப்பானதாகத் திகழ்கிறது. இதை பிரெஞ்சு அரசியலமைப்பின் நாற்பத்தொன்பதாவது விதி கூறுகிறது. அமைச்சரவையின் கொள்கைகளில் ஏதாவது ஒன்று, தேசிய அவையில் ஒப்புதல் மறுக்கப்பட்டாலோ, அல்லது அமைச்சரவையின் செயலைக் கண்டிக்கிற வகையில் கீழ் அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலோ அமைச்சரவை பதவி இழக்கும்.

## 7.8 பணிகளும், அதிகாரங்களும் - சட்டமியற்றுதல்

பெரும்பாலான சட்டமுன்வரைவுகள் அமைச்சரவையில் தயாரிக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் பணியில் அமைச்சரவைக்குத் தொடர்பு உண்டு என்பதை பிரெஞ்சு அரசியல் அமைப்பின் முப்பத்து எட்டாவது விதி கூறுகிறது. சட்டத்திற்கு உட்பட்டுத் தேவையான காலங்களில் அவசரச் சட்டங்கள் இயற்றவும் அமைச்சரவை அதிகாரம் பெற்றுள்ளது. அத்தகைய அவசரச் சட்டங்களைப் பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.. அவ்வாறு இயற்றப்படும் அவசரச் சட்டங்கள் அரசுக்குழுவைக் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சரவைக் கூட்டத்தில் தான் இராணுவச் சட்டப் பிரகடனம் செய்யப்பட முடியும். அத்தகைய இராணுவச் சட்டப் பிரகடனம் பன்னிரண்டு நாட்களுக்கு மேல் நடைமுறையில் இருக்கவேண்டுமெனில் அது பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

**நிர்வாகத்துறை அதிகாரங்கள்**

நாட்டின் கொள்கையை முடிவு செய்வது, போர்ப் படையினரின் நிர்வாகத்தை மேற்கொள்தல் போன்ற நிர்வாக அதிகாரங்களையும் பிரெஞ்சு அரசியலமைப்பு அரசாங்கத்தின் கரங்களில் அளிக்கிறது.இதைஅரசியலமைப்பின் இருபதாவது விதி கூறுகிறது. பிரெஞ்சு அமைச்சரவையின் நடைமுறையில் ஒரு மாறுபட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமைச்சரும் தனக்கென சில ஆலோசகர்களை நியமித்துக் கொள்ள அரசியலமைப்பு வகை செய்கிறது. இத்தகைய ஆலோசகர்களை நாட்டின் அதிகாரவர்க்க உறுப்பினர்களிடையே அமைச்சரவை சேர்ந்து எடுத்துக் கொள்ளுகிறது. குடியரசுத் தலைவர் மேற்கொள்ளும் பல நிர்வாக ஆணைகளில் பிரதம மந்திரியோ அல்லது வேறு அமைச்சரோ கையொப்பமிட்டால் தான் அவ்வாணைகள் செல்லும். இவ்வாறு பிரெஞ்சு அமைச்சரவை நிர்வாகத்துறையின் பிரிவு எனும் நிலை இந்நாட்டிலும் பின்பற்றப்படுகிறது.

**நிலை**

பிரெஞ்சு அமைச்சரவை பல வினோதமான சூழ்நிலைகட்கு ஆளாக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற அரசாங்கம் நடைமுறையில் உள்ள நாட்டில் அமைச்சரவை மேலாதிக்கம் செலுத்தக் கூடியதாக இருக்கும். ஆனால் பிரெஞ்சு அமைச்சரவை மேலாதிக்கம் இல்லாததாக மட்டுமின்றி பின் தள்ளப்பட்ட நிலையிலும் இருக்கிறது. வேறெந்தப் பாராளுமன்ற அரசாங்கத்திலும் இல்லாதவாறு அரசின் தலைவராகத் திகழும் குடியரசுத் தலைவர் பல உண்மையான அதிகாரங்களைப் பெற்றுத் திகழ்கிறார். அரசியலமைப்பின்

இருபத்து மூன்றாவது விதியின்படி அமைச்சரவையின் உறுப்பினர் எவரும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடாது. பாராளுமன்ற உறுப்பினர் எவரும் அமைச்சரவையில் இடம்பெற்றால், ஒரு மாத காலத்துக்குள் அவர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். இத்தகைய நிலை வேறு எந்தப் பாராளுமன்ற அரசாங்கத்திலும் காணப்பட முடியாத வினோதமான ஒன்றாகும். பிரதமரும் அவரது அமைச்சர்களும், மிகக் குறைந்த அதிகாரங்களையே பெற்றுள்ளனர். பல நிர்வாக அதிகாரங்கள் குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்குமிடையே பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அவசர நிலை அதிகாரங்களும் அதிகமானவை என சொல்லப்படுகிறது. இத்தகைய வினோதமான ஏற்பாடுகளின் காரணமாக அமைச்சரவையின் நிலை மிகவும் தாழ்த்தப்பட்டுள்ளது எனலாம். ஆனால் இத்தகைய ஏற்பாடுகள் பிரான்சில் இருந்த அரசியல், அரசியலமைப்புச் சூழ்நிலைகளின் காரணமாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன எனலாம். நான்காம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அமைச்சரவை மிகவும் பலவீனமானதாகத் திகழ்ந்தது. பல அமைச்சரவை கவிழ்ந்தன. உதாரணமாக 1924-க்கும் 1931-க்குமிடையே சுமார் பதினாறு அமைச்சரவைகள் பதவி வகித்தன. இது அரசாங்கத்தின் செயலாற்றலை மிகவும் பாதித்தது. எனவே இத்தகைய குறைபாட்டைக் களைய மேற்கண்ட ஏற்பாடுகள் புதிய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்க நிலைத்தன்மை உறுதி செய்யப்படுவதற்காக அமைச்சரவையின் நிலை தாழ்த்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்றைய பிரெஞ்சு அமைச்சரவையின் நிலை, மற்றெல்லாப் பாராளுமன்ற அரசாங்கத்திலுள்ள அமைச்சரவையின் நிலையை விடத் தாழ்ந்தது என்பதில் ஐயப்பாடில்லை. பாராளும்ன்ற முறை அரசாங்கத்தின் அடிப்படைக்கூறு மேலாதிக்கம் பெற்ற அமைச்சர் குழுவைப் பெற்றிருப்பதாகும். பிரான்சு பாராளுமன்ற அரசாங்கத்தைக் கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் அமைச்சரவையின் சிறப்பியல்புகள் பிற பாராளுமன்ற அரசாங்க அமைப்புக்களின் கீழ் இயங்கும் அமைச்சரவைகளின் சிறப்பியல்புகளிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளன. இத்தகைய அமைச்சரவை இருப்பதாலேயே பிரான்ஸ் நிறையா குடியரசுத் தலைவர் அரசாங்கம் என்றழைக்கப்படுகிறது.

## 7.9 தொகுப்புரை

இதுகாறும் பிரெஞ்சு அரசியலமைப்பின் பண்புகள், குடியரசுத் தலைவர், பிரதமர் அமைச்சர் குழு ஆகியன பற்றி விரிவாகக் கண்டோம்.

## 7.10 முக்கிய வார்த்தைகள்

கடல் கடந்த கோட்டங்கள் - பிரி.்.பெக்ட் - அரசியலமைப்பு மன்றம்

## 7.11 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

கேள்வி எண் 1 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 7.1ல் அறிக

கேள்வி எண் 2 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 7.3ல் அறிக

கேள்வி எண் 3 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 7.4ல் அறிக

கேள்வி எண் 4 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 7.5ல் அறிக

கேள்வி எண் 5 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 7.6ல் அறிக

## 7.12 பார்வை நூல்கள்


1. Pickles, Dorothy, **The Fifth French Republic,** B.I., 1978.
2. F.F. Ridley, **The Study of Govt. George & Allan,** London, 1975.
3. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.
4. R.C. Macridis and R.E. Ward, **Modern Political Systems : Europe and Asia,** 2nd Edn. Englewood Clifs NJ, Prentice Hall, 1968.
5. R. Maddex, **Constitutions of the World,** 2nd edn., Washington DC and London, CQ Press, 2000.
6. F.A. Ogg and Zink, **Modern Foreign Governments,** New York, Macmillan, 1964.


## 7.13 மாதிரி வினாக்கள்

1. ஐந்தாம் பிரான்சுக் குடியரசின் முக்கிய அம்சங்களை விவரித்துரைக்கவும்.
2. பிரான்சின் ஐந்தாவது குடியரசுத் தலைவரின் தேர்தல், அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றைப் பற்றி விவரிக்கவும்.

# அலகு - 8

## பிரான்சின் சட்டமன்றம் – அமைப்பு – சட்டமியற்றும்முறை

### முன்னுரை

பிரான்சு நாட்டின் சட்டமன்றம் சிறப்பான ஒன்று. பிரான்சு நாட்டில் அமைந்துள்ள சட்டமன்றத்தின் அமைப்பு அதன் வளர்ச்சி மற்றும் சட்டமியற்றும் முறை ஆகிய இவ்வலகில் கூறப்பட்டுள்ளது. பிரான்சு நாட்டில் சிறப்பம்சமான நிர்வாகச் சட்டம், நிர்வாக நீதிமன்றங்கள், உள்ளாட்சி மற்றும் பலகட்சி முறையிலான பிரான்சு அரசியல் முறைமை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

பிரான்சு நாட்டு சட்டமன்றத்தை விவரிப்பது

பிரான்சு நாட்டின் நிர்வாகச் சட்டம், நிர்வாக நீதிமன்றங்களின் செயல்பாட்டினை விளக்குதல்.

உள்ளாட்சி அரசாங்கத்தைப் பற்றிக் கூறுதல்

பலகட்சி முறையின் காரணங்களை விவரித்தல்

### வடிவமைப்பு

பிரான்சின் சட்டமன்றம்

மூன்றாவது குடியரசின் சட்டமன்றம்

நான்காவது குடியரசின் சட்டமன்றம்

ஐந்தாவது குடியரசின் சட்டமன்றம்

சட்டமியற்றும் முறை

குழுமுறை

பிரான்சின் நீதித்துறை

நீதித்துறையின் அமைப்பு

நிர்வாக நீதிமன்றங்கள்

அரசுக்குழு

உள்ளாட்சி அரசாங்கங்கள்

கட்சிமுறை

பிரான்சின் முக்கிய அரசியல் கட்சிகள்

### 8.1 பிரான்சின் சட்டமன்றம் :

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்குள் பிரான்சு நாடு தனக்கென்று பல அரசியலமைப்புகளை ஏற்படுத்தியது. அவ்வரசியலமைப்புகளில் சில ஓரவை மன்ற முறையைப் பிரான்சு நாட்டிற்குள் வழங்கியது. மன்றோவின் கூற்றுப்படி முடியாட்சி விரும்பிகள் ஒரு மன்ற முறையையும் குடியரசு விரும்பிகள் இரு மன்ற முறையையும் ஆதரித்தனர். அதற்கென்று வரையறுக்கப்பட்ட எந்த மரபும் பிரான்சில் இல்லை. இந்த அடிப்படையில் பிரான்சின் மூன்றாவது குடியரசு தேசிய சபை (National Assembly) என்ற ஒரு மன்றத்தோடு அரசியலமைப்பு நிர்ணய சபையின் பணிகளையும் ஆற்றியது. மேல்சபை வேண்டுமா என்ற பிரச்சனையில் தேசிய சபையில் பெரும்பான்மை அங்கம் வகிக்கும் குடியரசு எதிர்ப்பாளர்களுக்கும் முடியாட்சி விரும்பிகளுக்கும் பழைமை விரும்பிகளுக்கும் குடியரசு ஆட்சி முறை திருப்தியளிக்கவில்லை. எனவே அவர்கள் மக்களாட்சியில் ஏற்படும் குழப்பங்களைத் தடுக்க பழைமை விரும்பிகள் அதிகாரம் படைத்த செனட் என்ற மேல்சபையை

அமைக்க விரும்பினார்கள்.

## 8.2 மூன்றாவது குடியரசின் சட்டமன்றம் :

மூன்றாவது குடியரசின் அரசியலமைப்பில் பாராளுமன்றம் இரு மன்றங்களைக் கொண்டிருந்தது. மேல் சபை செனட் (Senate) என்றும் கீழ் சபை பிரதிநிதிகள் மன்றம் (Chamber of Deputies) என்றும் அழைக்கப்பட்டன. செனட்டில் 324 உறுப்பினர்கள் இருந்தனர். இதில் 249 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயும், 75 உறுப்பினர்கள் ஆயுட்காலத்திற்கு பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1875 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு 1884 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. அதன் படி ஒரு ஆயுட்கால உறுப்பினர் இறந்து ஒரு இடம் காலியானால், அவ்விடத்தை நிரப்ப சாதாரண உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பின்பற்றப்பட்டது. தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் ஒரு தேர்வுக்குழுவினால் (Electoral College) தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்வுக்குழு உறுப்பினர்கள் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுருங்கக்கூறின், நாடு முழுமையும் செனட் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மூன்றாண்டுகளுக்கொருமுறை ஓய்வு பெற்றனர்.

இது ஒரு சிறப்பான மேல் சபையாகக் கருதப்பட்டது. உறுப்பினர்கள் அனுபவமிக்கவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் இருந்தனர். கீழ் சபையிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் கூடுமானவரை பிரதிநிதித்துவம் வழங்கும் ஒரு சபையாக இது திகழ்ந்தது. அரசியல் நிலையில்லாத் தன்மையே வழக்கமாகி விட்ட பிரான்சில் இது ஒரு நிலையான சபையாக அமைந்தது. சிறிய சபையாக அமைந்ததால், கீழ் சபையை விட மசோதாக்களை திறம்பட விவாதிக்கும் ஒரு சபையாக இது பணியாற்றியது.

நிதி மசோதாக்கள் கீழ் சபையில் தான் துவக்கப்பட்டது. ஏனைய சட்டங்களை இயற்றுவதில் செனட் சம அதிகாரங்களைப் பெற்றிருந்தது. செனட்டிற்கு நிதி மசோதாக்களைத் திருத்தி அமைக்கும் அதிகாரமும் வரிவிதிப்பைக் குறைக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தன. சில விசேட அதிகாரங்களும் இதற்குக் கொடுக்கப்பட்டன. இதனுடைய ஒப்புதலுடன் குடியரசுத் தலைவர் கீழ்சபையைக் கலைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். குடியரசுத் தலைவர், அமைச்சர் ஆகியோரை விசாரிக்கும் துரோகக் குற்ற விசாரணை உயர்நீதிமன்றமாக இது பணியாற்றியது.

கீழ்சபையாகிய பிரதிநிதிகள் மன்றம் மேல்சபையாகிய செனட்டை விட அதிகாரம் பெற்றதாகத் திகழ்ந்தது. இதில் 612 உறுப்பினர்கள் இருந்தனர். 21 வயது நிரம்பிய அத்தனை பேராலும் இரகசிய வாக்குப் பதிவின் மூலம் கீழ்சபை தேர்ந்தெடுக்கப்பட்டது. 25 வயது நிரம்பிய வாக்காளர்கள் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்பட்டார்கள். பிரான்ஸ் நாட்டை முன் ஆட்சி புரிந்த குடும்பங்களைச் சார்ந்த அங்கத்தினர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை.

கீழ் சபையின் சபாநாயகர் அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருந்தார். பொதுவாக இவர் விவாதங்களில் தலையிடாமல் இருந்து வந்தார். பிரான்சின் அரசியலில் இப்பதவி ஒரு முக்கியமான பதவியாகக் கருதப்பட்டது. இவர் சில நேரங்களில் அமைச்சர் குழு அமைக்குமாறு அழைக்கப்பட்டார். பிரான்சின் சபாநாயகர் பதவி குடியரசுத் தலைவர் பதவியை அடையும் முதற்படியாகக் கருதப்பட்டது.

அரசியலமைப்பை மாற்றியமைக்கும் நேரங்களில் இரு சபைகளும் ஒன்றாகக் கூடி தேசிய சபையாக உருவெடுத்தன. இரு சபைகளும் ஒருங்கிணைந்து ஒரு தேர்வுக் குழுவாக மாறிக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுத்தன.

மசோதாக்கள் நிறைவேற்றுவதில் இரு சபைகளுக்குமிடையே சிக்கல்கள் எழுந்தால், அதை நிவர்த்தி செய்ய இரு சபைகளும் ஒவ்வொரு குழுவை நியமித்தன. இக்குழுக்கள் ஒன்றுகூடிச் சிக்கல்களை விவாதித்தன. தனித்தனியே வாக்கெடுப்பு நடத்தின. இம்முறையில் உடன்பாடு காண முடியவில்லையெனில் மசோதாக்கள் கைவிடப்பட்டன.

## 8.3 நான்காவது குடியரசின் சட்டமன்றம் :

பாராளுமன்றத்தில் இரு சபைகள் இருந்தன. இவை தேசிய சபை (National Council), குடியரசு சபை (Council of the Republic) என்பன. கீழ்சபையான தேசிய சபை ஐந்தாண்டுக் காலத்திற்குப் பொதுத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேல் சபையான குடியரசு சபை மறைமுகத்தேர்தலின் மூலம் 6 ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்தலை தேர்தல் குழு நடத்தியது. சில உறுப்பினர்களைத் தேசிய சபை தேர்ந்தெடுத்தது. 1946 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நிறைவேற்றிய சட்டத்தைப் பின்பற்றி விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைப்படித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனால் ஒருவருக்கு ஒரு வாக்குதான் அளிக்கப்பட்டது. அரசியல் கட்சிகளால் வரிசைக் கிரமமாகத் தயாரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல்களுக்குத் தான் வாக்காளர்கள் வாக்களித்தனர். தேசிய சபை 23 வயதிற்கு மேற்பட்ட 627 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

இருமன்ற கூட்டத்தொடர்களும் ஓரே நேரத்தில் நடந்தன. கூட்டத் தொடரின் நடவடிக்கைகள் வெளிப்படையாகவே நடந்தேறின. ஆனால் அவசியப்பட்டால் இரசியக் கூட்டத் தொடர்களை இருமன்றங்களும் கூட்டலாம். இரு மன்ற கூட்டத் தொடரில் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்.

## 8.4 ஐந்தாவது குடியரசின் சட்டமன்றம் :

ஐந்தாவது குடியரசு பாராளுமன்றத்தில் தேசியமன்றம் (National Assembly) செனட் (Senate) ஆகிய இரு மன்றங்கள் உள்ளன. மேல் சபையாகிய செனட் 1946 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் தான் இழந்த பெயரை திரும்ப பெற்றது. ஆனால் மூன்றாவது குடியரசில் தான் பெற்ற அத்தனை அதிகாரங்களையும் ஐந்தாவது குடியரசு அரசியலமைப்பின் வாயிலாகப் பெறவில்லை. கீழ்சபை 1946ஆம் ஆண்டு அரசியலமைப்பபில் தான் பெற்ற பெயரை திரும்பவும் பெற்றது.

1958 ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி செனட் உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேல்சபை 9 ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மூன்றாண்டுக்குகொருமுறை ஓய்வு பெறுகின்றார். 35 வயது நிரம்பிய பிரெஞ்சுக் குடிமகன் இதன் உறுப்பினராகத் தகுதி பெற்றவராக் கருதப்படுகிறார். தேசிய மன்றத்தின் உறுப்பினர்கள் (Deputies) நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இதன் உறுப்பினர்கள் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்ற அடிப்படையைப் பின்பற்றி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
> 1. ஐந்தாம் குடியரசின் சட்டமன்ற அமைப்பை எழுது.

நிதி மசோதாக்களைத் தவிர ஏனைய மசோதாக்களைப் பொறுத்த மட்டில் இரு மன்றங்களும் சம அதிகாரம் படைத்தனவாக உள்ளன. மேல்சபையில்

அரசாங்கத்திற்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டு வரமுடியாது. இரு மன்றங்களுக் கிடையே ஏதாவது ஒரு மசோதாவைப் பற்றி கருத்து வேறுபாடு ஏற்படின் சம எண்ணிக்கையில் இரு மன்றங்களின் உறுப்பினர்களையும் கொண்ட இணைப்புக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலோ அல்லது ஏற்றுக் கொண்ட மசோதாவை எந்தவொரு மன்றமாவது நிராகரித்தாலோ அரசாங்கம் தேசிய மன்றத்திடம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக் கொள்கிறது. செனட் 283 உறுப்பினர்களைக் கொண்டது. தேசிய சபை 490 உறுப்பினர்களைக் கொண்டது.

அரசியலமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சில கடமைகளையும் விதித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்கு பொறுப்பில்லாத தொழில் புரிவதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமைக்கட்டளை (mandatory instructions) விதிப்பதை அரசியலமைப்பின் 27வது விதி தடை செய்கிறது. அதே விதி பாராளுமன்ற உறுப்பினர்கள் பதிலாள் (Proxy) வாக்குரிமையை தடை செய்கிறது. பாராளுமன்ற உறுப்பினரின் வாக்குரிமை அவர் தம் சொந்த உரிமையாகக் கருதப்படுகின்றது. நான்காவது குடியரசு காலத்தில் பாராளுமன்ற நடவடிக்கைகளில் உறுப்பினர் பங்கெடுக்காமல் இருப்பது ஒரு பழக்கமாக இருந்து வந்தது. எனவே அப்பொழுது பதிலாள் வாக்குரிமை பொதுவான பழக்கமாக கடைப்பிடிக்கப்பட்டது. ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பு இவற்றையெல்லாம் மாற்ற எண்ணியது. இப்பொழுது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பின்வரும் ஐந்து காரணங்களுக்காக தனது வாக்கை பதிலாளுக்கு அளிக்கலாம். சுகவீனமாய் இருத்தல், விபத்து அல்லது குடும்பச் சூழ்நிலை, ஒரு அரசாங்க செயல் முறைத் திட்டத்தை மேற்கொள்ளுதல் அல்லது இராணுவ சம்பந்தமான வேலையில் ஈடுபடுதல், ஒரு சிறப்பு கூட்டத்தொடர் கூட்டப்படும் போது வெளிநாட்டில் இருத்தல், சர்வதேச சபைகளில் பிரான்சின் பாராளுமன்றம் பிரதிநிதியாக செல்வது போன்ற நிலைகளில் பாராளுமன்ற கூட்டத் தொடரில் பங்கெடுக்க முடியாமலிருந்தால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒரு நேரத்தில் ஒரு பதிலாள் வாக்குதான் அளிக்க முடியும். அரசியலமைப்பின் மூலமாக உறுப்பினர்கள் அனைவரும் ஒழுங்காய் வாக்களிக்க வற்புறுத்தப்படுகின்றனர்.

பாராளுமன்றம் இப்பொழுது குறிப்பிட்ட நாட்களில் நடைபெறுகிறது. அரசியலமைப்பில் 1963 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் படி ஒவ்வோரு ஆண்டும் இருமுறை பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் நடைபெறுகின்றன. பாராளுமன்ற முதற் கூட்டத்தொடர் ஒவ்வோரு ஆண்டும் அக்டோபர் மாதம் இரண்டாம் நாள் ஆரம்பித்து 80 நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும். இரண்டாவது கூட்டத் தொடர் ஒவ்வோரு ஆண்டும் ஏப்ரல் மாதம் இரண்டாம் நாள் ஆரம்பித்து 90 நாள் காலவரையறையை மிகாமல் முடிக்கப்படுகின்றன. எனவே இப்பொழுது பாராளுமன்றம் ஒவ்வோரு ஆண்டும் ஆற மாதத்திற்கு தான் கூடுகிறது. ஆனால் நான்காவது குடியரசில் பாராளுமன்றம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது ஏழு மாதங்கள் கூடியது. பாராளுமன்ற முதல் கூட்டத் தொடர் பெரும்பாலும் பணமசோதா சம்மந்தப்பட்ட பணிகளைக் கவனிக்கும். இரண்டாவது கூட்டத் தொடர் ஏனைய சட்டங்கள் இயற்றும் பணியை மேற்கொள்ளும். ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி பரிசீலினை செய்ய வேண்டும் என்று குடியரசுத் தலைவரோ அல்லது தலைமை அமைச்சரோ தேசிய மன்றத்தின் உறுப்பினர்களில் பெரும்பாலரோ வேண்டினால் பாராளுமன்றம் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டலாம். சிறப்புக் கூட்டம் தேசிய மன்றத்தின் உறுப்பினர்களில் பெரும்பாலோரது

விருப்பத்தின் பேரில் கூட்டப்பட்டால் எப்பொருளைப் பற்றி விவாதிக்க கூட்டம் கூட்டப்பட்டதோ அப்பணி முடிந்ததும் அச் சிறப்புக் கூட்டத்தை 12 நாட்களுக்கு மேல் நடத்தக் கூடாது. தேசிய மன்றத்தின் உறுப்பினர்களில் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தேசிய மன்றத்தின் இரசியக் கூட்டங்களைக் கூட்டலாம். இவை தவிர பொதுச் தேர்தல் முடிந்தவுடனும், நெருக்கடி நேரங்களிலும் பாராளுமன்றம் கூட்டப்படலாம்.

இரு சபைகளின் அக்டோபர் மாத கூட்டத்தொடர் ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு சபையும் தனது குழு (Bureau) அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. இரு சபைகளின் தலைவர்கள் அடங்கிய குழுவிற்கு 6 துணைத் தலைவர்கள் தேசிய மன்றத்திலிருந்து 8 செயலர்கள் செனட்டிலிருந்து 3 கொஸ்டியர்கள் (Questeurs) இருமன்றங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். செயலர்கள் சபையின் பதிவேடுகளையும், வாக்கெடுப்புக்களையும் மேற்பார்வை செய்கின்றனர். கொஸ்டியர்கள் நிர்வாகம், நிதி சம்பந்தப்பட்ட பணிகளை மேற்பார்வை செய்கின்றனர். தேவைப்பட்டால் இக்குழு குடியரசுத் தலைவருக்கு ஒழுங்கு நடடிக்கைகள், மசோதாக்கள், தீர்மானங்கள் போன்றவற்றிற்கு அனுமதி வழங்கல் போன்ற காரியங்களுக்கு அனுமதி வழங்கலாம்.

சபை நடவடிக்கைகளை நடத்திச் செல்லுகின்ற சபையின் தலைவர் ஒவ்வோரு சபையிலும் அதன் முதல் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார். இக்கூட்டம் சபையிலுள்ள வயது முதிர்ந்த உறுப்பினரால் நடத்தப்படும். தேசிய மன்றத்தின் தலைவர் இப்பொழுது சபையின் ஆயுட்காலம் முழுமைக்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஏதாவதொரு காரணத்திற்காக குடியரசுத் தலைவர் பதவி காலியானால், செனட் தலைவர் குடியரசுத் தலைவரின் பணிகளை ஆற்றுகிறார். 1958 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சில அதிகாரங்களை வழங்கியுள்ளது. நாட்டில் நெருக்கடி நிலை உருவாவதை இரு மன்றத் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பிறகே குடியரசுத் தலைவர் அறிவிக்க வேண்டும், அல்லது தீர்க்க வேண்டும் என்று அரசியலமைப்பின் 16 வது விதி கூறுகிறது. ஒரு தனி நபரின் மசோதா அல்லது திருத்தம் அரசியலமைப்பின் விதிகளுக்குட்பட்டிருக்கிறது என்று மன்றத் தலைவரும், உட்படவில்லை உன்று அரசாங்கமும் கருதினால் அம்மசோதாவை அரசியலமைப்புக் குழுவிடம் சமர்பிக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ மன்றத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவை தவிர ஏனைய உலக நாடுகளின் பாராளுமன்றத் தலைவர்கள் ஆற்றும் பணிகளையும் பிரான்சின் பாராளுமன்றத் தலைவர்கள் ஆற்றுகின்றனர்.

உறுப்பினர்கள் சபையில் ஒழுங்கினைக் கடைபிடிக்கக் கூறுதல், விவாதங்களை முடித்துவைத்தல் போன்ற பணிகளில் மூன்றாவது, நான்காவது குடியரசின் சபைகளின் தலைவர்களைக் காட்டிலும் ஐந்தாவது குடியரசின் இரு சபைகளின் தலைவர்களுக்கும் அதிக தன் விருப்புரிமை இரு சபைகளின் நிலையாணைகள் (Standing order) மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் பிரிட்டனின் கீழ்சபையின் சபாநாயகருக்கு அளிக்கப்பட்டுள்ள உயர் அதிகாரங்கள் பிரான்சின இரு மன்றத் தலைவர்களும் தாங்கள் பதவியில் அமர்த்த பிறகும் தாங்கள் சார்ந்திருக்கின்ற அரசியல் கட்சிகளின் தீவிர அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

## 8.5 சட்டமியற்றும் முறை :

சாதாரண மசோதாக்கள் இரு மன்றங்களின் ஏதாவதொரு மன்றத்தில் முன்மொழியப்படலாம். ஆனால் பணமசோதாக்கள் தேசிய மன்றத்தின் தான் கொண்டு

வர முடியும். ஒரு மசோதாவை முன் மொழிந்தவுடன் ஆறு பெரும்பான்மைக் குழுக்களில் (Comissions) ஒரு குழுவின் முன் அம் மசோதாவைச் சமர்பிக்கலாம் அல்லது இரு மன்றங்களின் வேண்டுகோளுக்கிணங்க அம்மசோதாவுக் கெனத் தனியாக அமைக்கப்படும் ஒரு பொறுப்பாண்மை குழுவின் முன் சமர்ப்பிக்கலாம். தனியாக அமைக்கப்படும் ஒரு பொறுப்பாண்மை குழுவின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை முப்பதுக்கு மேல் போகக்கூடாது. ஒரு அமைச்சரின் அறிவிப்பைத் தொடர்ந்து பொறுப்பான்மை குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அரசாங்க மசோதாக்களின் மேல் விவாதம் ஆரம்பமாகிறது.

சட்டத் துவக்க உரிமை தலைமை அமைச்சருக்கும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. தனிநபர்கள் கொண்டு வரும் மசோதாக்கள் பொது வரவு செலவு திட்டங்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அம்மசோதாக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏதாவதொரு தனிநபரின் முன்மொழிவுகள் அல்லது திருத்தங்கள் அரசியலமைப்பிற்கு முரண்பட்டிருந்தால் அத்தனிநபரின் முன்மொழிதலை அல்லது திருத்தத்தை தள்ளுபடி செய்ய அரசாங்கம் சபையின் தலைவரைக் கேட்டுக்கொள்கிறது. அரசாங்கத்திற்கும் குறிப்பிட்ட மன்றத்தின் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க ஒருவார காலத்திற்குள் அரசியல் அமைப்புக்குழு அந்தப் பிரச்சினைக்குத் தீர்ப்பு வழங்குகின்றன.

அரசாங்கம் எப்படி ஒரு மசோதாவை முன் மொழிகின்றதோ அல்லது பெரும்பான்மைக்குழு எப்படி தன் அறிக்கையைச் சமர்பிக்கின்றாரோ அவ்வண்ணம் அதன் கோட்பாடுகளை முதலாவது சபை விவாதிக்கின்றது. விவாதத்திற்குபின், அந்த மசோதாவின் ஒவ்வோரு விதியையும் தனித்தனியே எடுத்து அவற்றின் மீது வாக்கெடுப்பு நடத்துகின்றது. கடைசியில் மசோதா எங்ஙனம் திருத்தியமைக்கப்படுகிறதோ அங்ஙனம் முழுமையாக அம்மசோதாவின் மேல் வாக்கெடுப்பு நடத்துகின்றது.

இத்துடன் அம்மசோதாவின் முதல் வாசிப்பு நிலை முடிகிறது. இந்நிலை முடிந்தவுடன் மசோதா செனட்டிற்கு அனுப்பப்படுகிறது. மசோதா செனட்டில் முதலில் முன் மொழியப்பட்டால் தேசிய மன்றத்திற்கு அனுப்பப்படுகிறது. எந்த சபைக்கு அனுப்பப்படுகிறதோ அங்கும் மற்ற சபையில் எந்தெந்த வழிமுறைகளை கடந்து வந்ததோ அவ்வழிமுறைகளைக் கடந்து வருகிறது. இரு மன்றங்களும் நிறைவேற்றிய பின் மசோதா சட்டமாக்கப்படுகிறது. குடியரசுத் தலைவருக்கு மறுப்பாணை அதிகாரம் கிடையாது. ஒரு மசோதா குடியரசுத் தலைவரை அடைந்த பதினைந்து நாட்களுக்குள் அவர் பாராளுமன்றத்திற்கு மறுபரிசீலனை செய்ய அனுப்பி வைக்கலாம். குடியரசுத் தலைவர் இங்ஙனம் ஒரு வேண்டுகோள் விடுத்தால் பாராளுமன்றம் அதற்கு உடன்படுதல் வேண்டும். இரு மன்றங்களுக்கிடையே ஒரு மசோதா நிறைவேற்றுவதில் கருத்து வேறுபாடு எழுந்தால் தலைமை அமைச்சர் தேசிய மன்றத்திடம் முடிவு செய்யும் அதிகாரத்தைக் கொடுத்தால், தேசிய மன்றம் செனட்டின் முடிவை நிராகரிக்கலாம்.

எல்லாச் சட்டங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று அரசியலமைப்பின் 14-ஆம் விதி கூறுகின்றுது. மேலும் இவ்விதி பட்டியல் படுத்தப்பட்ட காரியங்களாகிய சிவில் உரிமை, பொது உரிமைப் பாதுகாவல், தேசிய பாதுகாப்பிற்கு குடிமக்களின் கடமை, நாட்டுரிமைப்பண்பு, தனிமனித அந்தஸ்த்து, நீதித்துறை அமைப்பு, வரிவிதிப்பு, வாக்குப் பதிவு முறை, அரசு ஊழியர்கள் மற்றும் இராணுவத்தினர் இவர்கட்கு அடிப்படை பாதுகாப்பு, பரம்பரை உடைமை, தனிநபர் சொத்துக்கள் தேசிய உடைமையாக்கல், பொதுக் கழகங்கள் தோற்றுவித்தல் போன்றவற்றின் விதிமுறைகளை நிர்ணயிக்கும் சட்டங்கள் இயற்றும் உரிமை ஆகியன பாராளுமன்றத்தின்

சட்டமியற்றும் அதிகாரத்தில் உட்படுவதாக கூறுகிறது. மேலும் தேசியப் பாதுகாவல், சொத்து, சம்பந்தப்பட்ட சட்டங்கள், வாணிபச் சட்டங்கள், தொழிலாளர் சம்பந்தப்பட்ட சட்டங்கள் போன்றவற்றின் அடிப்படை கோட்பாடுகள் சம்பந்தப்பட்ட சட்டங்களை நிர்ணயிக்கும் உரிமையும் அரசியலமைப்பின் 34ம் விதிப்படி பாராளுமன்றத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கடைசியாக மேற்கூறிய காரணங்களுக்கு வழிவகை செய்யும் சட்டங்களை விரிவுபடுத்தவும் முழுமையாக்கவும் அடிப்படைச் சட்டத்திற்கு அதிகாரமுண்டு என்று அரசியலமைப்பின் 34ஆம் விதி கூறுகின்றது. 1958ஆம் ஆண்டின் முன் இரண்டுவிதச் சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. அவை சாதாரண சட்டங்களும் அரசியலமைப்புச் சட்டங்களுமாகும். பாராளுமன்றத்தைவிட அரசாங்கத்தை வலிமையுடையதாக்குவதற்காக, சட்டமியற்றும் சில அதிகாரங்களை அரசாங்கத்திற்கு விட்டுக்கொடுக்க 1958 ஆம் ஆண்டு அரசியலமைப்பு இரண்டு வித சட்டங்களைக் கொண்டு வந்தது. அவை அடிப்படைச் சட்டம், மேலாணை என்பன ஆகும். அடிப்படைச் சட்டம் நிறைவேற விசேஷ வழிமுறையை அரசியலமைப்பு விதித்துள்ளது. அடிப்படைச் சட்டம் என்பது பாராளுமன்ற இரு சபைகளிலும் அறுதிப் பெரும்பான்மையோடு நிறைவேற்றப்படும் ஒரு சட்டமாகும். அடிப்படைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரலாம். அடிப்படைச்சட்டம் அரசியலமைப்போடு ஒத்துதிருக்கிறது என்று அரசியலமைப்புக்குழு அறிவித்தால்தான் அடிப்படைச்சட்டத்தைப் பிரகடனப் படுத்த முடியும்.

பின்வரும் விசேஷ வழிமுறையை பின்பற்றி நிதி மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன. இம்முறை பின்பற்றப்படுவதால் காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. 1958 ஆம் ஆண்டிற்கு முன் பிரெஞ்சுப் பாராளுமன்றம் வரவு செலவு திட்டத்தை அடிக்கடி காலதாமதம் செய்தது. 1958ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடிப்படையில் நிதிமசோதாக்கள் தேசிய மன்றத்தில் நாற்பது நாட்களுக்குள் முதல் வாசிப்பு நிலையை முடிக்க அனுப்புகிறது. மேலும் மசோதாவின் மேல் உள்ள வாக்கெடுப்பு 70 நாட்களுக்குள் முடியவில்லையெனில் அரசாங்கம் ஒரு மேலாணை மூலம் நிதி மசோதாவைப் பிரகடனப்படுத்தும். நிதி ஆண்டு ஆரம்பிக்கும் முன் அரசாங்கம் நிதி மசோதாவைச் சமர்ப்பிக்கவில்லையெனில் வரிவிதிப்பு, பணசெலவு போன்ற காரியங்களுக்கு முன் ஆண்டுகளில் மன்றங்கள் ஒத்துக் கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் செயல்பட அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கிறது. இரு அவைகளிடையே கருத்து வேறுபாடு எழுந்தால் சாதாரண மசோதாக்களின் மேல் எழுகின்ற கருத்து வேறுபாட்டை நிவர்த்தி செய்யும் அதே முறை பின்பற்றப்படுகிறது.

**சட்டமன்ற முரண்பாடுகள் தீர்க்கப்படும் முறை :**

1958 ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி தேசிய மன்றம் செனட்டை விட மேலான ஒன்றாகக் கருதப்படமாட்டாது. அரசாங்கம் தேசிய மன்றத்தின் சார்பில் தலையீடு செய்தால் தேசிய மன்றத்தின் மேலாண்மை ஓங்க வாய்ப்பிருக்கின்றன. ஒரு மசோதாவில் இரு மன்றங்களும் தமக்குள் கருத்து வேறுபாடு கொண்டால், அரசு தலையிடாமல் இருக்கும் பட்சத்தில் அம்மசோதா இரு மன்றங்களுக்கிமிடையே போவதும் வருவதுமாக இருக்கும் இரண்டாவது வாசிப்பும், அதற்கு மேலுள்ள வாசிப்பு நிலைகளும் இந்த மசோதாவின் கருத்து வேறுபாடுள்ள பிரிவையே சார்ந்திருக்கும். இப்படி நிலையாக உள்ள ஒரு வேறுபாட்டைத் தீர்க்க எந்த வழி முறையையும் அரசியலமைப்பு கூறவில்லை.

இரு மன்றங்களும் ஒரு மசோதாவைப் பொறுத்தமட்டில் கருத்து வேறுபாடு

எழுந்தால், அரசாங்கம் இரு முறைகளில் தலையிடுகிறது. முதலாவதாக, ஒரு கருத்து வேறுபாடுள்ள மசோதா இரு மன்றங்களிலும் இரண்டு வாசிப்பு நிலைகளைக் கடந்துவந்தால் அரசாங்கம் இரு மன்றங்களிலும் பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒரு ஆணையத்தை (commision) உருவாக்கக் கேட்டுக் கொள்கின்றது. அப்பொருப்பாண்மை குழு ஒரு ஒப்பந்தம் கண்டால் அம்மசோதாவை அவ்வொப்பந்த அடிப்படையில் அரசாங்கம் இரு மன்றங்களின் முன்னால் வாக்கெடுப்பிற்குச் சமர்ப்பிக்கின்றது. ஆணையம் ஒப்பந்தம் காணவில்லையெனில் அல்லது அல்லது ஒப்பந்தம் கண்ட மசோதா இன்னொரு முறை ஏதாவது ஒரு மன்றத்தில் நிராகரிக்கப்படுமெனில், இரு மன்றங்களும் ஒப்பந்தம் காண முயல்கின்றன அல்லது அந்த மசோதா தள்ளிவைக்கப்படுகின்றது அல்லது அவைகள் கைவிடுகின்றன. இரண்டாவதாக அரசாங்கம் இரு மன்றங்களிலும் இன்னொரு முறை அம்மாசோதாவை வாசிப்பு நிலையைக் கடந்து செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளும். இந்நிலையிலும் கருத்து வேறுபாடு தொடருமானால், தேசிய மன்றம் அந்த மசோதாவின் மேல் செனட் சொல்லும் திருத்தத்தை ஏற்றுக்கொண்டோ அல்லது நிராகரித்தோ வாக்குப் பதிவு நடத்த அரசாங்கம் கேட்டுக் கொள்ளும். அம்மசோதா அடிப்படைச் சட்டம் இல்லையென்றால், சாதாரணப் பெரும்பான்மையுடன் செனட்டின் கருத்துக்களை நிராகரிக்கலாம்.

அரசாங்கம் ஒரு மசோதாவின் மேல் ஆர்வம் காட்டவில்லையெனில் செனட் தேசிய மன்றம் நிறைவேற்றும் சட்டங்களைத் தடுத்து நிறுத்தலாம்.

## 8.6 குழுமுறை:

1958-ஆம் ஆண்டு வரை சட்டமன்றக் குழுக்கள் பிரான்சில் மிகவும் வலிமை வாய்ந்ததாய் திகழ்ந்தன. ஆதலால் அரசாங்கத்துடன் பல நேரங்களிலும் முரண்பாடுகள் எழுந்தன. இந்நிலை 1958-ஆம் ஆண்டு அரசியல் அமைப்பால் மாற்றியமைக்கப்பட்டது. அரசியலமைப்பு விதி 43ல் கூறியபடி நிரந்தர குழுக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மன்றத்திற்கும் ஆறாகக் குறைக்கப்பட்டது. முன் 44 அங்கத்தினர்களைக் கொண்ட 19 குழுக்கள் இயங்கி வந்தன. குழுக்களுக்கு அளிக்கப்பட்ட மேலான அதிகாரங்களைக் குறைத்தல், காலதாமதமாகும் நிலையைக் தடுத்தல் ஆகிய இரு குறிக்கோள்களின் அடிப்படையில் குழுக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. 40 முதல் 120 வரையிலான அங்கத்தினர்கள் அடங்கிய (அரசியல் கட்சிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறையில்) 6 குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 30-ம் அதற்கு மேலும் அங்கத்தினர்களைக் கொண்ட ஒருங்கமைப்புடைய பிரிவுகளிலுள்ளவர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. பல்வேறு பிரிவினர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கிய பின்னர் ஏதாவது இடங்கள் காலியாக இருந்தால் எந்தவொரு பிரிவிலும் சாராத அங்கத்தினர் அல்லது தனிநபர் ஒருவரைப் பாராளுமன்றம் ஒருங்கிணைந்து தேர்ந்தெடுத்தால் அத்தனிநபருக்கு குழு உறுப்பினர் பதவி அளிக்கப்படுகின்றது.

குழுக்கள் மசோதாக்களைப் பெற்றுக்கொண்டபின் அவற்றை ஆராய்ந்து அமைச்சர்களின் கருத்துக்களை கேட்டு ஏதாவது மாற்றங்களைக் கொண்டுவர ஆலோசனை கூறலாம். மசோதாக்களில் எழும் திருத்தங்களை ஏற்பதும் நிராகரிப்பதும், அவற்றைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைப்பதும் அரசாங்கத்தின் முடிவைப் பொறுத்திருக்கின்றது. அரசு மசோதா அமைச்சரின் அறிவிப்போடு விவாதத்திற்கு வருகின்றது. அதன்பின் தான் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்டுகிறது.

செனட்டின் நிலை:

நிதி மசோதா தவிர ஏனைய மசோதாக்களைப் பொறுத்தவரையில் இரு மன்றங்களும் சம அதிகாரம் பெற்றவையாகத் திகழ்கின்றன. 1958-ஆம் ஆண்டு அரசியலமைப்பு தேசிய மன்றத்தை செனட்டை விட வலுப்பெற்றதாக இருக்குமாறு அனுமதிக்கவில்லை. அரசாங்கம் விரும்பினால் ஒரு சட்டத்தின் மேல் செனட் தடுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

ஆட்சித்துறையை செனட் கட்டுப்படுத்தவில்லை. அரசாங்கம் தேசிய மன்றத்திற்கு மாத்திரம் பொறுப்புள்ளதாக இயங்குகின்றது. சட்டமியற்றும் அதிகாரம் இரு மன்றத்திற்கும் சமமாக இருக்கின்றது. செனட்டின் நிலைக்குப் பாதகம் விளைவிக்கும் சட்டம் இயற்றப்பட்டால் அதைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் செனட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஏதாவதொரு காரணத்திற்காக குடியரசுத் தலைவர் பதவி காலியானால், செனட்டின் தலைவருக்கு அதை நிரப்புவதற்கு அதிகாரமுண்டு. புதுக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வரை செனட் தலைவர் குடியரசுத் தலைவராகப் பணியாற்றலாம். அரசியலமைப்பு விதி 16-ன் மூலம் நெருக்கடி நிலை அமலுக்குக் கொண்டுவருமுன்பும் தேசிய மன்றத்தைக் கலைக்கு முன்பும் குடியரசுத் தலைவர் செனட் தலைவரைக் கலந்தாலோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் செனட்டின் தலைவர் மசோதாக்களை அரசியலமைப்புக் குழுவிற்கு அனுப்புகின்றார். தேசிய மன்றத் தலைவரைப் போல் இவரும் அரசியலமைப்பக்குழு உறுப்பினர்களை நியமனம் செய்கின்றார். உயர்நீதிமன்றத்தில் (The High Court of Justice) தேசிய மன்றத்திற்குச் சமமான பிரதிநிதித்துவம் செனட்டிற்கு உண்டு. தேசிய மன்றம் குடி ஒப்பந்தத்திற்கு செனட்டின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். செனட் குடியரசுத் தலைவர் அனுப்பும் செய்திகளையும் தகவல்களையும் பெறுகிறது. தலைமை அமைச்சரும் தான் விரும்பியபோதெல்லாம் செனட்டின் அங்கீகாரத்தைப் பெறுகிறார். மேற்கூறிய அதிகாரங்கள் செனட்டின் தகுதியையும், புகழையும் கூட்டினாலும், தேசிய மன்றத்தோடு ஒப்பிடுங்கால் செனட் அதைவிட ஒருபடி கீழாகத்தான் இருக்கின்றது.

## 8.7 பிரான்சின் நீதித்துறை

பிரெஞ்சு நாட்டுச் சட்டம் உரோமானியச் சட்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது. வரலாற்றின் இடைக்காலத்தில் இச்சட்ட அமைப்பு வழக்காற்றுச் சட்டத்திலிருந்து (Customary Law) தோன்றிய ஒன்றாக அமைந்திருந்தது. பின்னர் பிரெஞ்சு நாடு நிலமானிய முறையைப் (feudalism) பின்பற்றும் நாடாக மாறியது. பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த கோமகன்களும், உயர்குடி மக்களும் தங்களது பண்ணைத் தனியாட்சிப் பகுதிகளில் மிக்க அதிகாரம் படைத்தவர்களாய்த் திகழ்ந்தனர். ஆகவே ஒவ்வொரு பண்ணைத் தனியாட்சிப் பகுதியும் தனக்கென்று ஒரு வழக்காற்றுச் சட்டத்தை ஏற்படுத்திக்கொண்டது. நாளடைவில் இவ்வழக்காற்றுச் சட்டங்கள் எழுத்துருவம் பெற்று வட்டார நீதிமன்றங்களால் நிர்வகிக்கப்பட்டன. 1789 - ஆம் ஆண்டைய புரட்சி வரை பிரான்சில் நாடு முழுமைக்கும் ஒரு பொதுச் சட்ட அமைப்பு உருப்பெறவில்லை. மன்னரால் பிரகடனப்படுத்தப்பட்ட ஆணைகளாலும், கட்டளைகளாலும், மேலாணைகளாலும், நாட்டில் நீதித்துறை நிர்வகிக்கப்பட்டது. பிரெஞ்சு புரட்சித் தலைவர்களால் இந்நீதி நிர்வாக முறையின் வலுவற்ற நிலையைத் தெளிவாக உணரமுடிந்தது. எனவே அவர்கள் பழைய நீதி நிர்வாக முறையை ஒழித்துக் கட்டினர். அதை ஈடுகட்டப் பொதுச் சட்டங்களை உருவாக்கினர். நாட்டில் நடைமுறையிலிருந்த

பழைய சில சட்டங்களும் உருவாக்கப்பட்ட புதுச்சட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன. 1791, 1795-ஆம் ஆண்டுகளில் முதலாவது தண்டனைச் சட்டத் தொகுப்போடு (Penal Code), குற்றவியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பேடு (Code of Criminal Procedure) போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டன.

நெப்போலியன் போனப்பார்ட் அதிகாரத்துக்கு வந்தவுடன் பிரெஞ்சு சட்டத்தொகுப்புப் பணியை மேற்கொண்டார். அதன்பயனாக முதலாவது சிவில் சட்டத்தொகுப்பு 1804-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து 1807-ஆம் ஆண்டு சிவில் நடைமுறைச் சட்டத்தொகுப்பு (Code of Civil Procedure) வெளியிடப்பட்டது. பின்னர் படிப்படியாக வாணிபச் சட்டத்தொகுப்பு போன்ற ஏனைய பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இங்ஙனம் இயற்றப்பட்ட பிரெஞ்சு நாட்டுச் சட்டங்களில் உரோமானியச் சட்ட ஆதிக்கம் மேலோங்கி நின்றது. இச்சட்டங்களின் அடிப்படைக் கருத்துக்களில் எந்த மாற்றமும் ஏற்படாத வண்ணம் நாளடைவில் இச்சட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. 1904-ஆம் ஆண்டு சிவில் சட்டத்தொகுப்பு சிறிது மாற்றத்துடன் மறுவெளியீடு செய்யப்பட்டது. 1959-ஆம் ஆண்டு புதுவகைக் குற்றவியல் சட்டத்தொகுப்பு வெளியிடப்பட்டது. 1961, 1979-ஆம் ஆண்டுகளில் விவாக உடன்பாடுச் சட்டத்திற்கு (Law of marriage settlement) மறு வடிவமளிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. வாணிபச் சட்டத் தொகுப்புக்களிலும் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. சுருங்கக்கூறின் நெப்போலியன் சட்டத் தொகுப்பை மறு ஆய்வு செய்து, சேர்ப்பு செய்து, விரிவு செய்து உருவாக்கிய ஒரு புதுச் சட்டத் தொகுப்புதான் இன்று பிரான்சில் காணப்படும் சட்டமாகும்.

பிரெஞ்சு நீதித்துறையில் சில சிறப்புத் தன்மைகள் உள்ளன. பிரான்சில் உள்ள சட்டம் தொகுக்கப்பட்ட ஒன்றாகும். இச்சட்டங்கள் எழுதப்பட்டவைகளாகும். நாடு முழுமைக்கும் ஒரே சீரான சட்ட அமைப்பு முறைகள் பின்பற்றப்படுகின்றன. சட்டத் தொகுப்புகளில் இடம் பெறும் சட்டங்கள் தெளிவாக, இலகுவானதாக அமைந்துள்ளன. துல்லியமான மொழிநடையும் தெளிவான சொல்லமைப்பும் பிரெஞ்சு சட்டத்தின் இன்னொரு குறிப்பிடத்தக்க சிறப்புத் தன்மையாகும். பிரான்சில் நீதிபதிகள் சட்டத் தொகுப்பு விதிகளின் அடிப்படையிலும் சட்ட மன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையிலும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர். சட்டமன்றங்கள் நிறைவேற்றிய சட்டங்களுக்கு முரண்படாத அளவில், முன்வழக்கு முடிவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், நீதிபதிகள் பிரான்சில் சுதந்திரமாக வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர். முன்வழக்கு முடிவுகள் பிரெஞ்சு நீதிமன்றங்கள் சில நேரங்களில் பயன்படுத்தப்பட்டாலும், அவற்றிற்கு மிக முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. பிரெஞ்சு சட்ட அமைப்பில் சாதாரணச் சட்டங்கள்,ஆட்சித் துறை சட்டங்கள் ஆகிய இரு சட்டங்களின் வேற்றுமை உணர முடிகின்றது. இவ்வேற்றுமையின் அடிப்படையில் அங்கு ஆட்சித்துறை நீதிமன்றம், சாதாரண நீதிமன்றம் ஆகிய இரு நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. அதன் அதிகாரங்கள் இங்கிலாந்தைப் போல் ஒருமுகப்படுத்தப்படாமல் பன்முகப்படுத்தப்பட்டதாகக் காட்சியளிக்கின்றன. பிரெஞ்சு நீதித்துறை அந்நாட்டின் பொதுத்துறை அலுவல்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

## 8.8 நீதித்துறையின் அமைப்பு (Organization of the Judiciary)

பிரெஞ்சு நீதித்துறை ஒன்றுக்கொன்று வேறுபட்ட இருவகை நீதி மன்றங்களைக்

கொண்டுள்ளது. ஆட்சித்துறை நீதிமன்றங்கள் ஒரு வகையைச் சார்ந்தவை. அவை அரசிற்கும் குடிமக்களுக்குமிடையே தோன்றும் வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றன. இன்னொரு வகையில் சாதாரண நீதிமன்றங்கள் உள்ளன. இவை குடிமக்களுக்கிடையே எழும் சாதாரண சிவில் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும் தீர்த்து வைக்கின்றன. 1958-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ஆம் நாள் அறிவிக்கப்பட்ட சில ஆணைகளைப் பின்பற்றி இன்றைய நீதித்துறை அமைக்கப்பட்டுள்ளது.

**சாதாரண நீதிமன்றங்கள் (Ordinary Courts)**

சாதாரண நீதிமன்றங்கள் படிப்படியாக ஒன்றின் கீழ் ஒன்றாக அமைக்கப்பட்டு ஒரு நிறுவன அமைப்பைக் கொண்டிருக்கின்றன. ஐந்தாவது குடியரசிற்கு முன் சிறு சிவில் வழக்குகளைத் தீர்த்து வைக்க 3000க்கும் மேற்பட்ட அமைதிக் காவல் நீதிபதிகளைக் (Justice of Peace) கொண்ட நீதிமன்றங்கள் இயங்கி வந்தன. அமைதிக் காவல் நீதிபதிகள் குடியரசுத் தலைவரால் நீதித்துறை அமைச்சரின் பரிந்துரையின் பேரில் நியமனம் செய்யப்பட்டனர். இந்நீதிபதிகள் சிறு வழக்குகளை விசாரித்து வந்தார்கள். குறைந்தது முன்னூறு ஃபிராங்குகள் அபாரதம் விதிக்கப்பட்ட குற்றவியல் வழக்குகளையும், இவர்களது தீர்ப்புக்கு எதிராக முறையீடு செய்ய, வட்டார நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லலாம். 1958-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நீதித்துறைச் சீரமைப்பின்படி அமைதிக்காவல் நீதிமன்றங்களின் எண்ணிக்கையைப் பெருமளவில் குறைத்தது. இச்சீரமைப்பின்படி செயல்பட்டு வந்த 8000-க்கும் மேற்பட்ட அமைதிக்காவல் நீதிபதிகள் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். அவர்களின் பொறுப்புகள் முதல் நிலை நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டன. இவ்வகை நீதிமன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரி நான்கு அமைக்கப்பட்டன. இந்நீதிமன்றங்கள் முன்னர் அமைதிக் காவல் நீதிபதிகள் விசாரித்த சிறு சிவில் வழக்குகளை விசாரித்து வருகின்றன. இன்று பிரான்சில் 467 முதல் நிலை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. முக்கியமான சிவில் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் முதல் நிலை உயர்நீதி மன்றங்கள் என அழைக்கப்படுகின்றன. இன்று நாடு முழுவதும் 178 முதல் நிலை உயர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்கள் நாட்டில் இயங்கி வருகின்ற சில சிறப்பு நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிரான முறையீடுகளையும் விசாரிக்கின்றன. வர்த்தகத் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்க உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் ஆகியோர் அடங்கிய வர்த்தக நீதிமன்றங்கள் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்குமிடையே தோன்றும் தொழில் தகராறுகளை விசாரிக்க, முதலாளிகளின் பிரதிநிதிகளும் தொழிலாளிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய சமரச நீதிமன்றங்கள் சார்ந்த நீதிபதிகளையே அங்கங்களாகக் கொண்டு இயங்கி வருகின்றன. முதல் நிலை நீதி மன்றங்களில் மட்டும் ஒரே நீதிபதி வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்கிறார். முதல் நிலை உயர்நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிப்பார்கள். இம்மன்றங்களில் அறங்கூறாயத்தார் (Jury) கிடையாது. சிறப்பு நீதிமன்றங்களில் மட்டும் நீதித்துறையைச் சாராத சாதாரண அங்கத்தினர்கள் பதவி வகிக்கின்றனர்.

சிறு குற்ற வழக்குகள், காவல் துறை நீதிமன்றங்களால் விசாரிக்கப்படுகின்றன. சற்று பெரிய குற்ற வழக்குகள், திருத்த நீதி மன்றங்கள் எனப்படும் மன்றங்களால் முடிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு திருத்த நீதி மன்றத்திலும் மூன்று நீதிபதிகள் வழக்கை விசாரிப்பார்கள். குற்ற வழக்குகளில் மிகப்பெரியவை அஸைஸ் நீதிமன்றங்கள்

என அழைக்கப்படும் மன்றங்களால் விசாரிக்கப்படும் ஒவ்வொரு அஸைஸ் நீதிமன்றத்திலும் மூன்று நீதிபதிகள் ஒன்பது அறங்கூறாயத்தார் ஆகியோர் அமர்ந்து வழக்கை விசாரிப்பார்கள். மொத்தமுள்ள பன்னிரண்டு பேரில் எட்டுப்பேர் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்ப்பு நீதிமன்றங்களின் தீர்ப்பாக அறிவிக்கப்படும். பொதுவாக, அறங்கூறாயத்தாராக அமரும் குடிமக்கள் நீதிபதிகள் கருத்தை ஏற்றுக்கொள்வது வழக்கம்.

நாடு முழுவதும் 31 மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் (Court of Appeal) உள்ளன. இவை சில மாநில நகரங்களில் உள்ளன. இவை சிவில் வழக்குகளை மட்டும் விசாரிக்கின்றன. குற்றவியல் வழக்குகளை இந்நீதிமன்றங்கள் விசாரிக்காது. சட்ட உட்பொருள் விளக்கத்தின் மேல் எழுகின்ற மேல் முறையீடுகளையும் இந்நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன.

எல்லா நீதிமன்றங்களும் மேலான தலைமை நீதிமன்றம் பாரிஸ் நகரில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது சிவில் வழக்குகளுக்காகவும், குற்றவியல் வழக்குகளுக்காகவும் நிறுவப்பட்டுள்ளது. இது எப்போதும் சுறுசுறுப்பாக இயங்குகிறது. இதற்கு மூலவழக்கு விசாரணை அதிகாரம் கிடையாது. வழக்குகளில் சட்டத்தின் பொருள் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை முடிவு செய்வது இந்நீதிமன்றத்தின் பொறுப்பாகும். அதனிடம் முறையீடு செய்யும் வழக்கில் அது கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்யலாம். அல்லது அதை ரத்து செய்து கீழ் நீதிமன்றம் வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமென்று கட்டளையிடலாம். கீழ்நீதிமன்றம், மறு விசாரணையின் பொழுது, தலைமை நீதிமன்றம் வழக்கில் தொடர்புடைய சட்டத்திற்குக் கூறிய பொருளை ஏற்று, அதன் அடிப்படையில் வழக்கை விசாரித்து முடிவு செய்வது அவசியமாகும். இது ஐயப்பாடுகள் உள்ள சட்டங்களுக்கு மட்டும் தான் விளக்கங்கள் தருகிறது. இத்தலைமை நீதிமன்றத்தில் 88 நீதிபதிகள் உள்ளனர். இந்நீதிபதிகள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு பணியினை ஆற்றுகின்றன. சிவில் பிரிவு இரண்டு, குற்றவியல் பிரிவு ஒன்று வாணிபப்பிரிவு ஒன்று. ஒரு வழக்கு இரண்டாவது மேல முறையீடாக தலைமை நீதிமன்றத்தின் முன் வந்தால் அதை ஐந்து பிரிவு நீதிபதிகளும் ஒருங்கிணைந்து விசாரிக்கின்றனர்.

1960-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டமொன்று அரசுப்பாதுகாப்பு நீதிமன்றம் (Court of State Security) ஒன்றை அமைத்திருக்கின்றது. அரசாங்க நீதிபதிகளில் மூவரையும் இராணுவத் தளபதிகளில் இருவரையும் தன்னகத்தே கொண்டிருக்கும் இப்பாதுகாப்பு நீதிமன்றம் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயலும் குற்றங்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும். இந்நீதிமன்றத்திலிருந்து மேல் முறையீடுகளை தலைமை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லலாம். இதைத் தவிர்த்து தொழில்துறை மன்றங்கள் (Industrial Councils), வாணிப நீதிமன்றங்கள் (Commercial tribunals) இளம் குற்றவாளிகள் பற்றிய வழக்குகளை ஆராயும் நீதிமன்றங்கள் (Juvenile courts) சமூகப் பாதுகாப்புக் குழுக்கள் (Social Security Commissions) நிலக்குத்தகை நீதிமன்றங்கள் (Courts Farm Leases) போன்ற சிறப்பு நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

சாதாரண நீதிமன்றங்களின் அமைப்பினைப் பொறுத்தமட்டில் சில முக்கியமான பொது இயல்புகள் காணப்படுகின்றன. முதலாவதாக, நீதித்துறையின் இரு பிரிவுகளாகிய சிவில், குற்றவியல் ஆகியவற்றிடையே ஓர் ஒற்றுமையைப் பார்க்க முடிகின்றது. இரு நீதிமன்றங்கிலும் ஒரே நீதிபதிகள் அமர்ந்து பணியாற்றுகின்றனர். நீதித்துறையில் நீதிபதிகளை தவிர பாக்குகியுட் (Parquet) என்று அழைக்கப்படும். வழக்குரைஞர்களும்

(Prosecutors) உண்டு. இவ்வழக்குரைஞர்கள், சிவில், குற்றவியல் ஆகிய இருவகை வழக்குகளையும் கவனிக்கின்றனர். ஆனால் மேல் மட்ட நீதிமன்றங்களைப் பொறுத்த மட்டில் சிவில், குற்றவியல் ஆகிய இருவகைப் பிரிவுகள் தனித்தனியாகச் செயல்படுகின்றன.

பிரான்சில் உலா நீதி மன்ற முறை (System of Cirucuit Courts) இல்லை. ஆனால் சில அஸைஸ் நீதிமன்றங்கள் (Assize Courts) உள்ளன. வழக்குத் தொடர்பவர்கள் நீதிமன்றங்களைத் தேடிச் செல்கின்றனரே தவிர நீதிபதிகள் வழக்குத் தொடர்பவர்களைத் தேடிவருவதில்லை. இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் செயல்பட்டு வரும் உலாவரும் நீதிமன்ற முறை பிரான்சில் செயல்படவில்லை.

பிரெஞ்சு நீதிமன்றம் பல நீதிபதிகளைக் கொண்ட மன்றமாகக் காட்சியளிக்கின்றது. ஒரு நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்படுதல் பிரெஞ்சு நீதித்துறையில் அனுமதிக்கப்படவில்லை. ஒரு தீர்ப்பு செல்லுபடியாக வேண்டுமெனில், அது குறைந்தது மூன்று நீதிபதிகள் ஒருங்கிணைந்து எடுத்த முடிவாக இருத்தல் வேண்டும். நீதித்துறையின் மேல் எழும் தப்பெண்ணத்தைத் தவிர்க்க இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

**நீதித்துறையின் சுதந்திரம்**

நீதித்துறையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற வகையில் அரசியலமைப்பானது நீதித்துறை சுதந்திரமாக இயங்க குடியரசுத் தலைவர் உத்திரவாதமளிப்பார் எனத் தெரிவிக்கின்றது. 1958ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 64-ஆம் விதி நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்யமுடியாது என்று கூறுகின்றது. மேலும் அரசியலமைப்பு நீதித்துறையின் உயர் குழுவின் பரிந்துரையின் பேரில் ஒழுக்கம் தவறிய நீதிபதிகள் பதவி நீக்கம் செய்யப்படலாம் என்று கூறுகின்றது. எனவே நீதித்துறையின் உயர்குழு ஒழுக்கம் தவறிய நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்கும் நீதிமன்றமாக இயங்கி வருகிறது. அவ்வாறு நீதிபதிகளை விசாரிக்கும் பொழுது, தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி குழுவிற்குத் தலைமை வகிப்பார்.

## 8.9 நிர்வாக நீதிமன்றங்கள் (Administrative Courts)

பிரான்சின் நீதிமன்றங்கள் இருமுறையில் இயங்கிவருகின்றன. குடிமக்களிடையே எழும் வழக்குகளைத் தீர்த்துவைக்க சாதாரண நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அரசு அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்திப் பணியாற்றும் போது எழும் வழக்குகளைத் தீர்த்துவைக்க நிர்வாக நீதிமன்றங்கள் இயங்கிவருகின்றன.

நெடுங்காலமாகப் பழக்கத்திலிருந்தும் நிர்வாகச் சட்டத்தின் (Droit Administratil) அடிப்படையில் 1872ஆம் ஆண்டு இவ்வாட்சித்துறை நீதிமன்றங்கள் சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகின்றன. பிரான்சில் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) நடைமுறையில் இல்லை.

நிர்வாகச் சட்டம், நெடுங்காலமாகவே பிரான்சு நாட்டில் பழக்கத்திலிருந்து வருகின்றது. நெப்போலியன் அந்நாட்களில் எழுந்த நிலைமைகளுக்கு ஏற்ப இச்சட்டத்தைப் பின்பற்றினர். அவர் இரு தத்துவங்களை நிர்வாகச் சட்டத்தில் புகுத்தினர். அரசு அதிகாரிகளுக்கு சாதாரண குடிமக்களை விட சில உரிமைகளும், சிறப்புரிமைகளும், தனிச்சிறப்புரிமைகளும் அளிக்கப்படல் வேண்டும் அரசு அதிகாரிகள் நீதித்துறைக்கு அடிபணியாமல் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். இத்தத்துவங்களின் அடிப்படையில் ஆட்சித்துறைச் சட்டத்திற்கு 4 சிறப்பியல்புகள் தோன்றின. முதலாவதாக, ஓர் அரசு அதிகாரிக்கும் குடிமகனுக்கும் இடையே உள்ள தொடர்பினை வரையறுக்கும்

விதிகளிலிருந்து மாறுபட்டிருக்கின்றன. இரண்டாவதாக ஒரு அரசு அதிகாரிக்கும் ஒரு குடிமகனுக்கும் இடையே எழும் வழக்குகளைச் சாதாரண நீதிமன்றங்கள் தீர்மானிக்கக்கூடாது. அவ்வழக்குகள் அதற்கென்றே உருவாக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களால் மட்டும் தீர்த்து வைக்கப்படுகின்றன. மூன்றாவதாக ஒரு குறிப்பிட்ட வழக்கு நிர்வாகச் சட்டத்தின் கீழ் வருகின்றதா அல்லது சாதாரணச் சட்டத்தின் கீழ் வருகின்றதா என்பதனை முடிவு செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நடைமுறையில் இப்பணியைக் குடியரசுத் தலைவரின் சார்பில் அரசுக் குழு (Council of State) செய்கின்றது. நான்காவதாக, ஓர் அரசு அதிகாரி அரசின் பிரதிநிதி என்ற நிலையில் பணியாற்றும்போது எழுகின்ற வழக்குகளைச் சாதாரண நீதிமன்றங்கள் விசாரிக்கும் பொழுது சிக்கல்கள் எழும். அச்சிக்கல்களிலிருந்து அதனைப் பாதுகாக்க இச்சட்டத்தால் முடிகின்றது. நெப்போலியனுடைய காலத்திற்குப் பிறகு இச்சட்டத்தில் சில சிறிய மாறுதல்கள் செய்யப்பட்டன.

அரசாங்கத்திற்கும் தனிமனிதர்களுக்குமிடையே உள்ள தொடர்பகளை நிர்ணயிக்கும் நியதிகளின் தொகுப்புத்தான் நிர்வாகச் சட்டமாகும் (Droit Administrative or Administrative Law) பேராசிரியர் டைசியின் கருத்துப்படி இச்சட்டம் அனைத்து அரசு அலுவலர்களின் நிலையையும், பொறுப்பையும் நிர்ணயிக்கும். தனிமனிதர்களுக்கிடையேயும் அரசைச் சார்ந்த அலுவலர்களுக்கிடையேயுள்ள தொடர்புகளில் தனிமனிதர்களின் சிவில் உரிமைகளையும், பொறுப்புகளையும் நிர்ணயிக்கும். எந்த முறையின் அடிப்படையில் இவ்வுரிமைகளும் பொறுப்புகளும் அமல்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நிர்ணயிக்கும். அரசு அதிகாரிகள் அவர்களுடைய செயல்களுக்குப் பொறுப்பேற்கின்றனர். அவர்களுடைய செயலுக்காக அவர்கள் ஆட்சித்துறை நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றனர். முறையற்ற செயல் ஏதாவது தப்பெண்ணத்தையோ இழப்பையோ ஏற்படுத்தினால் அம்முறையற்ற தவறான முடிவு எடுத்தல் அல்லது வகுக்கப்பட்ட வழி முறையிலிருந்து விலகல் அல்லது சட்டத்திற்குப் புறம்பான செயல்புரிதல் அல்லது அதிகார துஷ்பியோகம் போன்றவை தவறான செயல்களாகக் கருதப்படுகின்றன. பொது ஆட்சித்துறை நிறுவனங்களிடையே உள்ள தொடர்புகளையும், அவைகளுக்கும் தனிமனிதர்களுக்குமிடையே உள்ள தொடர்புகளையும், நிர்ணயிக்கும் நியதிகளின் தொகுப்புதான் நிர்வாகச் சட்டம் என்ற அரசியல் அறிஞர்களால் கருதப்படுகின்றது.

நிர்வாகச் சட்டம் சிவில் சட்டங்களைப்போல் ஒரு ஆவண வடிவில் தொகுக்கப்படவில்லை. சில ஆட்சித்துறைச் சட்டவிதிகள் பிரகடனப்படுத்தப்பட்ட நிர்வாக மேலாணைகளாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பெரும்பாலான சட்டவிதிகள் ஆட்சித்துறை நீதி மன்றங்கள் (முக்கியமாக அரசுக்குழு) அளித்த தீர்ப்புகளிலிருந்து சேகரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே நிர்வாகச் சட்டம் பெருமளவு இங்கிலாந்தின் பொதுச்சட்டத்தை (Common Law) ஒத்திருக்கின்றது. நிர்வாகச் சட்டத்தின் அதிகார வரம்பு பரந்து காணப்படுகின்றது. அரசாங்க உத்தரவுகள் சட்டத்திற்கு உட்பட்டவையா, அப்பாற்பட்டவையா எனத் தீர்மானிப்பது அரசு. அதிகாரிகள் சட்டத்தின் மூலம் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகார வரம்பை மீறிச் செயல்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்பிற்கு நிவாரணம் அளிக்கும் 'வழிமுறையை வகுப்பது, பொதுப்பணியால் தனிமனிதருக்கும் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு வழங்கப்படும் நஷ்ட ஈட்டை நிர்ணயிப்பது,

அரசு அலுவலர்களின் பொதுச் செயல்களுக்கும் தனிச் செயல்களுக்கும் இடையே வேற்றுமை காண்பது போன்ற காரியங்களை நிர்வாகச் சட்டங்களும் நீதிமன்றங்களும் கவனிக்கின்றன.

அரசு ஊழியரைச் சாதாரண நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டிலிருந்து காப்பது என்பதை அவரது தனிப்பட்ட அல்லது பொதுப்பணி அல்லாத செயலில் புரிந்த குற்றத்திலிருந்து பாதுகாப்பது என்று அர்த்தம் கொள்ளல் கூடாது. மேலும் அரசு அதிகாரி பொதுப் பணியாற்றும்போது தனது கவனக்குறைவால் அல்லது தனிப்பட்ட தவறால் பாதிப்பு ஏற்படுத்தினால் அதிகாரிக்குப் பாதுகாப்பு கிடையாது. பொதுநலன் கருதி அரசு அதிகாரி அச்செயல் புரிந்திருந்தால் மட்டுமே அரசு பொறுப்பேற்க வேண்டுமே தவிர, அரசு மற்றபடி பொறுப்பேற்காது. தனிப்பட்ட விதத்தில் தவறு புரிந்த அதிகாரி சாதாரண நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார். ஒரு வழக்கு சாதாரண நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டுமா, நிர்வாக நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டுமா அல்லது ஒரு செயல் தனிப்பட்ட செயலா, பொதுச் செயலா என்பனவற்றைத் தீர்மானிப்பது முரண்பாடு நீக்க நீதிமன்றத்தின் (Court of Conflicts) பணியாகும்.

நிர்வாக நீதிமன்றங்கள் படிப்படியாக ஒன்றின்கீழ் ஒன்றாக அமைக்கப்பட்ட நிறுவன அமைப்பைக் கொண்டதாகும். இவைகளில் சில பொது நிர்வாகக் காரியங்களையும், மற்ற சில குறிப்பிட்ட பிரச்சனைகளையும் கவனிக்கின்றன. நெடுங்காலமாக இயங்கிவரும் இந்நீதிமன்றங்கள் நெப்போலியனுடைய காலத்தில் 90க்கும் மேற்பட்டிருந்தன. 1946ஆம் ஆண்டு இதன் எண்ணிக்கை 23ஆகக் குறைக்கப்பட்டு 1953ஆம் ஆண்டு இதற்கு நிர்வாகதுறை நீதிமன்றங்கள் (Tribunax Administratifs) எனப் பெயர் சூட்டப்பட்டது. அரசிற்கும் குடிமக்களிடையே தோன்றும் வழக்குகளைத் தீர்த்து வைக்கவும் அலுவலர்களின் செயலின்மேல் தனிநபர்கள் தொடரும் வழக்கை தீர்த்து வைக்கவும் இவை கடமைப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிர்வாகதுறை நீதிமன்றத்திலும் ஒரு தலைவரும் 4 அங்கத்தினர்களும் பணியாற்றுகின்றனர். பொதுவாக நிர்வாகதுறை நீதிபதிகள் நிர்வாகப் பொறுப்பு வகித்தவர்களாகவும், வகிக்கின்றவர்களாகவும் இருக்கின்றனர்.

## 8.10 அரசுக்குழு (Council of State)

அரசுக்குழு என்னும் அமைப்பு ஆட்சித்துறை நீதிமன்றங்களின் தலைமை நீதிமன்றமாக இயங்கிவருகிறது. 150க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் அரசுக்குழுவின் நீதிபதிகள் பிரான்சில் புகழ்மிக்க ஆட்சித்துறைப்பள்ளி (School of Administration) மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அரசுக் குழுவில் பல பிரிவுகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்குவதற்கு 4 பிரிவுகளும் வழக்குகளை விசாரிப்பதற்கு ஒரு பிரிவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வழக்குகளை விசாரிக்கும் பிரிவுகள் இன்னும் சில பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வழக்கு விசாரிக்கும் பிரிவிலும் பொதுவாக ஐந்து நீதிபதிகள் அமர்ந்து வழக்குகளைத் தீர்மானிப்பர். முக்கியமான வழக்குகளைப் பத்து அல்லது பதினைந்து நீதிபதிகள் விசாரிக்கின்றனர்.

அரசுக்குழுவின் அங்கத்தினர் பதவி பெருமைக்குரிய பதவியாகக் கருதப்படுகிறது. இதில் ஒரு வழக்குப் பிரிவு (Litigation Section) உள்ளது. இப்பிரிவு வட்டார நீதிமன்றங்களிலிருந்து (Regional Courts) தன் முன்வரும் மேல் முறையீடுகளைக் கவனிப்பதிலும், அரசாங்க உத்தரவுகள் சட்டத்திற்கு உட்பட்டவையா அப்பாற்பட்டவையா என்று தீர்மானிக்கும் நேரடி வழக்குகளைக் கவனிப்பதிலும், பொதுமக்களின்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

2. பிரான்சு நீதிமன்ற அமைப்பை எழுது
3. அரசுக்குழு என்றால் என்ன? எவ்வாறு அமைக்கப்படுகின்றது?

உரிமைகளைப் பாதுகாப்பதிலும் தான் தன் முழுநேரத்தையும் செலவிடுகின்றது. இந்நீதிமன்றத்தை அணுகுவது எளிதாகவும் வசதியாகவும், சிக்கனமாகவும் இருக்கின்றது. மேல் முறையீடுகளை இக்குழுவிடம் தபால் மூலம் சமர்ப்பிக்கலாம். மேல் முறையீடு சமர்ப்பிக்க அவ்வழக்கிற்கு ஆதரவான ஆவணங்களும் அதற்குரிய நகலும் மட்டும் தேவை. வழக்குத் தொடர்பவர் ஒரு சிறிய கட்டணம் செலுத்துகின்றனர். அக்கட்டணமும் தீர்ப்பு அவருக்கு சாதகமாக அமைந்தால் திருப்பி அளிக்கப்படுகின்றது.

ஆட்சிமுறைச் சட்டத்தைப் பின்பற்றாத நாடுகளைச் சார்ந்தவர்கள் ஆட்சிமுறைச் சட்டத்தையும் நீதிமன்றங்களையும் கடுமையாக விமர்சிக்கின்றனர். ஆட்சிமுறை நீதிமன்றங்களில் நிர்வாகப்பொறுப்பு வகித்தவர்களும், வகிக்கின்றவர்களும் நீதிபதிகளாக அமர்ந்து தீர்ப்பு வழங்குவதால் அரசாங்கத்திற்கு ஆதரவாக அத்தீர்ப்புகள் அமையும் என்று விமர்சகர்கள் எண்ணுகின்றனர். குற்றம் புரிகின்றவரும், தீர்ப்பு வழங்குகின்றவரும் ஒரே பிரிவைச் சார்ந்திருப்பதால் தீர்ப்புகள் பாகுபாடற்ற முறையில் அமையாது என்ற கூறுகின்றனர். தீர்ப்பு வழங்குகின்றவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியாது என்றும் கருதுகின்றனர். எனவே இது இலகுவான முறையில் பொதுமக்களின் உரிமைகளை அபகரிக்கின்றதாக அமைகின்றது என்று விமர்சர்கள் கருதுகின்றனர். ஆனால் பிரெஞ்சு நாட்டில் ஆட்சித்துறைச் சட்டம் இயங்கும் நிலையை நோக்கும்போது ஆட்சிமுறைச் சட்டம் குடிமக்களின் உரிமைகளை அபகரிக்கின்றது என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பது புலனாகிறது உண்மையில் பிரெஞ்சுக் குடிமக்கள் தங்கள் உரிமைகளை அரசாங்கத்திற்கு எதிராகப் பாதுகாக்கும் விரும்பத்தக்க நிறுவனமாக இதைக் கருதுகின்றனர். எனவே ஆட்சிமுறை நீதிமன்றங்கள் அரசு ஊழியர்களுக்குச் சாதகமானவை என்ற கூற்று ஒவ்வாததாகும்.

அரசுக்குழு ஆட்சிமுறை நீதிமன்றங்களின் தலைமை நீதிமன்றமாக அமர்ந்து பல பாகுபாடற்ற தீர்ப்புகளை வழங்கியுள்ளது மறுக்கமுடியாத உண்மையாகும். இந்நீதிமன்றங்களில் நீதிபதிகளில் பலர் நிர்வாகப் பொறுப்பு வகித்தவர்களாகவும், வகிக்கின்றவர்களாகவும் இருப்பதால் நிர்வாகத்துறைகள் இயங்கும் முறையிலுள்ள மேடுபள்ளங்கள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மேலும் குடிமக்களுக்கு அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து நிவாரணம் கிடைக்கின்றது. ஆட்சிமுறை நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வது சிக்கனமாய் இருப்பதாலும், வழிமுறை இலகுவாக இருப்பதாலும், பணிகளை கீழ் நிலையில் 26 வட்டார நீதிமன்றங்களுக்கு பகிர்ந்தளித்திருப்பதாலும், நீதிமன்றத் தீர்ப்புகள் உடனுக்குடன் காலதாமதமின்றி குடிமக்களுக்கு கிடைக்கின்றது.

வட்டார நீதிமன்றங்கள் போன்றவற்றைத் தவிர்த்து பிரான்சில் ஏறக்குறைய 40 சிறப்பு ஆட்சிமுறை நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. இச்சிறப்பு நீதிமன்றங்களில் மிக முக்கியமானதாக மதிப்பீட்டு நீதிமன்றம் (Council of Accounts) இருக்கின்றது. இந்நீதிமன்றம் நாட்டின் மேம்பட்ட தணிக்கைக் குழுவாகப் பணியாற்றுகின்றது. சிறப்பு நீதிமன்றங்களின் பணிகளை அரசுக்குழு (Council of State) மேற்பார்வை செய்கின்றது. இந்நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் சட்டத்திற்குப் புறம்பானதாக அமைந்திருந்தால், அரசுக்குழு அத்தீர்ப்பை நிராகரித்துத் தீர்ப்பு வழங்கி, நீதிமன்றங்களின் சமநிலையிலுள்ள வேறொரு நீதிமன்றத்திற்கு அவ்வழக்கை எந்த மாற்றமும் செய்யாமல் அனுப்புகின்றது.

ஆட்சிமுறை நீதிமன்றங்கள் அரசு அலுவலர்களுக்கு தங்கள் பணியை செவ்வனே ஆற்றத் தேவையான அதிகாரத்தை வழங்குகின்றன. நாட்டுப் பணியாற்றும் போது ஏற்படும் விளைவுகளை அரசு ஏற்றுக்கொள்ளுவதால் பணியாளர்கள்

பாதிக்கப்படுவதில்லை. இதனடிப்படையில் அரசு அலுவலர்கள் சுதந்திரமாக முடிவெடுத்து சட்டங்களை நிறைவேற்ற அரசு அவர்களுக்கு உத்திரவாதம் கொடுக்கின்றது. மேலோட்டமாக நோக்குங்கால் பிரான்சில் அரசு ஊழியரின் சட்ட விரோதமான செயல்களிலிருந்து குடிமக்கள் சரிவரப் பாதுகாக்கப்படவில்லை என்று தோன்றலாம். அரசு அலுவலர்களுக்கு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட சுதந்திரம் அளிக்கப்படுகின்றது என்றும் தோன்றலாம். ஏனென்றால் அரசு அலுவலர்களை அவர்கள் பணியாற்றும்போது எழும் வழக்குகளுக்காக சாதாரண நீதிமன்றங்களில் விசாரிக்க முடியாது. மேலும் அவர்களை விசாரிக்க ஆட்சித்துறை நீதிமன்றங்கள் உருவாக்கிய சட்டங்களே பயன்படுத்தப்படுகின்றன. ஆட்சித்துறைச் சட்டங்கள் சட்டத் தொகுப்பாக ஆவணவடிவில் இடம் பெறவில்லை என்பது உண்மைதான். ஆட்சித்துறைச் சட்டங்கள் முன் வழக்கு முடிவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது என்பதும் உண்மைதான் என்றாலும் இச்சட்டங்கள் அரசியல்வாதிகளால் உருவாக்கப்படாமல் சட்டம் படித்த, சட்ட வல்லுநர்களால் உருவாக்கப்பட்டதென்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு உண்மையாகும்.

இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள ஆட்சிமுறை நீதி நிர்வாக முறை விமர்சகர்களும் இன்று ஆட்சிமுறை நீதிமன்றங்களை ஓரளவு ஆதரிக்கும் நிலையை அடைந்துள்ளனர். நிர்வாக அமைப்பு எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் ஆட்சிமுறைச் சட்டங்கள் தேவை என்பதனை அவர்கள் இப்பொழுது உணர்ந்துள்ளனர். எனவே இன்று இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆட்சிமுறை நீதிமன்றங்களின் குணநலன் படைத்த ஆட்சிமுறைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**பிரான்சில் அரசியல் கட்சி முறை**

பிரான்சின் அரசியலமைப்பிலுள்ள கட்சி அரசியலை ஆய்வு செய்கையில் அதற்கென்ற ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது புலனாகிறது. பிரெஞ்சு அரசியல் முறையானது மேற்கத்திய நாடுகளிலேயே, ஒருவேளை உலகத்திலேயே ஒரு தனியான இடத்தைப் பெற்றிருக்கிறது. பிரான்சின் நாடு பல அரசியல் கட்சிகளைப் பெற்றிருப்பதை யாவரும் அறிவர். பிரான்ஸ் அரசியல் கட்சிகள் உறுதியாக அமைக்கப்படாமலும் ஒழுங்கு, கட்டுப்பாடுகள் இல்லாமலும் இருக்கின்றன. ஆகையால் கட்சிகளை இணைத்தலும் மாற்றியமைத்தலும் பிரான்சின் அரசியல் பூசல்களின் சாதாரணமாகக் காணப்படுகிற இயல்பாக ஆகிவிட்டது. பிரெஞ்சு அரசியல் கட்சிகளின் அமைப்பிலும் போக்கிலும் பெருமளவு வேறுபாடு காணப்படுகிறது. கட்சி அமைப்பானது ஒழுங்குடன் அமைக்கப்பட்ட இடதுசாரிக் கட்சிகளிடமிருந்து, அடிக்கடி நிலை மாறும் வலதுசாரிக் கட்சிகளின் வரையில் பல தரப்பட்டதாக இல்லை. பிரெஞ்சு அரசியல் கட்சிகளுக்கு லட்சிய வகையிலான அடிப்படை அல்லது ஆதாரம் எதுவும் இல்லை. அரசியல் நோக்கங்களைப் பொறுத்த வரையில் பிரிட்டனிலுள்ள கன்சர் வேட்டிவ் கட்சியைப் போலவோ அல்லது தொழிற்கட்சியைப் போலவோ இருக்கக்கூடிய கட்சி எதுவும் பிரான்சில் இல்லை. இதே போல அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாக்குகளைத் திரட்டும் இயந்திரங்களாக இருககின்ற குடியரசுக் கட்சியுமான ஜனநாயகக் கட்சியுடனோ ஒப்பிடப்படக்கூடிய கட்சியும் பிரான்சில் இல்லை.

பிரான்சில் பல கட்சிகள் வளர்வதற்கு அந்நாட்டின் பூகோள அமைப்பும் ஒரு முக்கிய காரணம் ஆகும். நாட்டின் வடபகுதி, தென்பகுதியை விட வலதுசாரிப்

போக்கு உடையதாகவும் மேற்குப்பகுதியும் கிழக்குப் பகுதியும் கிறித்தவ நெறியையும் மரபுகளையும் பழமைப் போக்கையும் ஆதரித்தும் இருக்கின்றன. ஆனால் நடுப்பகுதியும் தென்மேற்குப்பகுதியும் முற்போக்கு இயல்பிலும் கிறித்தவ நெறியினின்று விலகியும் இருக்கின்றன. எனவே பிரான்சில் அரசியல் நிலையற்றதும் எப்போதும் நெருக்கடி நிறைந்ததாகவும் இருக்கின்றது. ஆகையால் அரசியல் கட்சிகள் தங்களுடைய அமைப்பிலும் கட்டுக்கோப்பிலும் வலுவற்றும் திட்டவட்டமான இலட்சியங்கள் இல்லாமலும் பல தரப்பட்ட நோக்கங்களை உடைய, அடிக்கடி நிலை மாறுகின்ற ஆதரவாளர்கள் உடையதாகவும் இருக்கின்றன. மன்றோ, அயரஸ்ட் என்ற ஆசிரியர்களின் கருத்துப்படி பிரான்சில் பல கட்சிகள் இருப்பதற்குக் காரணம் 1. அரசில் தொடர்ச்சி என்பது இல்லாமை 2. பிரெஞ்சு மக்களின் மனப்பான்மை 3. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை 4. கட்சிக் கட்டுப்பாட்டின்மை முதலியவை ஆகும். பிரான்சின் முக்கிய அரசியல் கட்சிகளை நாம் ஆய்வு செய்வோம்.

புதிய குடியரசின் யூனியன் கட்சி 1946 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரான்சின் மிக முக்கியமான இயக்கமாக இருப்பது காலிஸம் எனப்படும் தத்துவமாகும். டிகால் என்பவருடைய தலைமையின் கீழ் இந்த இயக்கம் பிரெஞ்சு மக்களின் அணி (R.P.F.) என்ற பெயரில் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிற்று. ஆயினும் 1958-ல் டிகால் ஆட்சிக்கு வந்தபின் புதிய குடியரசின் யூனியன் என்று பெயர் மாற்றப்பட்டது. காலிஸம் என்ற தத்துவம் இந்தக் கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும். காலிஸம் என்பதற்கு முழு வளர்ச்சி பெற்ற பாராளுமன்ற முறை எகிப்திலிருந்து ஒரு வலுவான ஜனாதிபதி முறை என்பது வரையில் பல்வேறு பொருட்கள் பலரால் கொள்ளப்படுகின்றன. ஒரு அதிகாரமிக்க தலைவரின் கீழ் ஒரு வலுவான அரசாங்கம் என்பது தான் காலிஸத்தின் மறுபெயராகும். இது பொதுவுடைமைக்கு எதிரான ஒரு கட்சியாகும். வேறு சில வகைகளில் யாவரையும் விட திறமையான ஒரு தலைவராகிய டிகாலினால் பிரெஞ்சு மக்களின் அணி தோற்றுவிக்கப்பட்ட காரணத்தினால், காலிஸம் என்பது பாசிஸம் என்ற எதேச்சதிகாரக் கோட்பாட்டுடனும் இணைக்கப்படுகின்றது. இதற்கு இன்னொரு காரணம், இந்தத் தத்துவம் "தீவிர சமுதாய மாறுதல் என்பதை வலுவான தேசிய உணர்வோடு கலந்தது தான்" இது பாராளுமன்ற நெறிமுறைக்கும், தொழிற்சங்க நெறிமுறைக்கும் எதிரானது. இந்த ஆய்வில் காணப்படுகின்ற வியத்தகு உண்மை என்னவெனில் ஐந்தாவது குடியரசு பிரான்சில் நிறுவப்பட்ட பின்னர், இந்த புதிய குடியரசின் யூனியன் கட்சியானது, ஏற்கெனவே பதவிக்கு வந்துவிட்ட டிகாலுக்கு ஆதரவு அளிப்பதற்கு அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாக ஆயிற்றே தவிர அவருக்குத் தேர்தலின் வெற்றியின் மூலமாக ஆதரவளிப்பதற்காக இயங்கவில்லை என்பது தான். மேலும் இக்கட்சி, டிகால் ஈடுபடாமல் அவருடைய ஆதரவாளர்களால் அமைக்கப்பட்ட ஒன்று ஆகும். ஆதரவாளர்களைத் தேடுவதற்காக அவரால் இது அமைக்கப்படவில்லை. மேலும் "இடதுசாரி காலிஸம்" என்ற ஒரு போக்கும், இப்பெருந்தலைவருடைய ஆதரவின் மூலம் தோன்றிற்று என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். புதிய குடியரசின் யூனியன் கட்சியின் ஒரு முற்போக்குப் பிரிவு வேறு ஒரு நெறியில் சென்றது. 1974-ஆம் ஆண்டின் தேர்தல்களில் எஸ்டாங்க் ஜனாதிபதியாக வெற்றி பெற்றது மேற்படி புதிய போக்கை எடுத்துக்காட்டுகிறது. நாடு மீண்டும் அரசியலில் நிலையற்ற தன்மையில் வீழ்வதினின்றும் அதை மீட்க காலிசத்தினால் இயலாது என்று இப்பிரிவினர் எண்ணினர். இந்தப் புதிய போக்கு, அரசியல் அரங்கில் புதிய தலைவர்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தது.

புதிய குடியரசின் யூனியன் கட்சியினுள் மாறுபட்ட குழுக்களை அமைப்பதன் மூலமாகவோ தான் அந்த கட்சியை அழிக்க முடியுமே தவிர, வேறு எதனாலும் அதனை அழித்தல் இயலாது. இத்தகைய தலைவர்கள் கடுமையான வாரிசுப் பிரச்சனைகளைத் தோற்றுவிக்காமல், அமைதியாக ஆட்சிக்கு வருவராயின் புதிய குடியரசின் யூனியன் கட்சி நீடித்து இருக்க இயலும்.

**பொதுவுடைமைக் கட்சி**

இதுவே ஒரு குடியாட்சி அமைப்பிலும் சர்வாதிகார மார்க்சிய கட்சி இருக்கிறதென்று காட்டுகின்ற அளவிலான ஒரு முக்கியமான கட்சியாக பிரான்சில் இருக்கிறது. இது 1950-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட போதிலும், பிரெஞ்சு அரசியல் முறையில் 1920-ஆம் ஆண்டிற்குப் பின்னரே உறுதியாக வேரூன்றி இருக்கிறது. இந்தக் கட்சியானது இயல்பிலும் கொள்கையிலும் போல்ஷ்விக் முறையிலேயே இருக்கிறது. இது மிகக் கடுமையாக அமெரிக்க முதலாளிகளால் அளிக்கப்பட்ட மார்ஷல் உதவியையும் வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்த உறுப்பினர்களையும் மற்ற இராணுவ ஒப்பந்தங்களையும் கண்டனம் செய்துள்ளது. வேறு வகையாகக் கூறினால் இது அமெரிக்காவுக்கு எதிராக இருக்கிறது. ஜெர்மனி மீண்டும் படைவலிமை பெறுவதையும், ஆசியா, ஆப்பிரிக்கா நாடுகளில் நடைபெறும், ஆக்கிரமிப்புக்களை அரசாங்கம் ஆதரிப்பதையும் இது எதிர்க்கிறது. சமுதாயப் புரட்சி ஏற்படுத்தல் வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இக்கட்சி கோபுர அமைப்பாக இருக்கிறது. அடித்தளத்தில் தொழிலாளர் குழுக்கள், சுரங்கங்கள், பட்டறைகள், தொழிற்சாலைகள் முதலியவைகளில் இருக்கின்றன. ஒவ்வொரு குழுவிலும் மூன்றிலிருந்து முப்பது வரை உறுப்பினர்கள் இருக்கின்றனர். இது வாரம் ஒருமுறை கூடி தனது வேலைத் திட்டங்களையும், முறையையும் வகுக்கிறது. இதன் மேல்பிரிவுகளும், கூட்டமைப்புக்களும், மாகாண அமைப்புக்களும் இருக்கின்றன. இதில் கீழ்நிலைக் குழுவின் பிரதிநிதிகளுடன், உட்பிரிவு நிர்வாகக் குழுப்பிரதிநிதிகளும் இருக்கின்றனர். கட்சியின் மேல்மட்டக் கூறு தேசிய காங்கிரஸ் ஆகும். இதில் ஒவ்வொரு மாகாண மாநாட்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் இருக்கின்றனர். 60-லிருந்து 80 வரை உள்ள உறுப்பினர்கள் காங்கிரசினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 14 பேரடங்கிய அரசியல் குழு தான் கட்சியின் மேலிடம் ஆகும். கட்சியின் கட்டுப்பாட்டு அதிகாரம் கடுமையானதும், நெகிழ்ச்சியற்றதுமாகும்.

1958, மே, ஜுன் மாதங்களில் இக்கட்சி ஜனாதிபதி டிகாலுக்கு எதிராகக் கலகம் செய்யுமாறு மக்களைத் தூண்டியது. ஆனால் மக்கள் இதனுடைய கோரிக்கையை ஏற்கவில்லை. ஆகையால் கட்சி 1958-ஆம் ஆண்டுத் தேர்தல்களில் மிகவும் ஆதரவு இழந்தது. தேசியச் சட்டமன்றத்தில் அதற்கு இடம் 145-லிருந்து 10 ஆகக் குறைந்தது. தேசியச் சட்டமன்றமும் தனது பல்வேறு குழுக்களில் இக்கட்சியில் உறுப்பினர்களை அமர்த்த மறுத்துவிட்டது. இந்த நிகழ்ச்சி கட்சியில் ஒரு மாறுதலை ஏற்படுத்திற்று. அல்ஜீரிய நெருக்கடியின் போது இந்தக் கட்சி குடியரசுத் தலைவர் டிகாலுக்கு ஆதரவு அளிக்கத் தொடங்கிற்று.

**சோசலிசக் கட்சி**

இந்தக் கட்சி 1879-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது பொறுப்பான குடியாட்சி முறையையும் உரிமையையும் ஆதரிக்கின்றது. தொடக்கத்தில் இது இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட குழுக்கள். அதாவது, ஜீன் ஜராஸ் என்பவரால் நடத்தப்பட்ட

தாராளக் கட்சியினரும், ஜீல்ஸ் கெஸ்டே என்பவர் தலைமை தாங்கிய சிண்டிகலிஸ்களும் மார்க்சிஸ்ட்களும் இணைந்த ஒரு கலவையாக இருந்தது. 1920-ஆம் ஆண்டில் இந்தக் கட்சியில் ஒரு பிளவு ஏற்பட அதன் பல உறுப்பினர்கள் பொதுவுடமைக் கட்சியில் சேர்ந்தனர். இது அதிகாரப் பூர்வமாக எஸ்.இ.ஐ.ஓ (S.E.I.O) என்ற எழுத்துக்களால் குறிப்பிடப்படுகிறது. இதற்கு 1950-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 2வது சர்வதேச பொதுவுடமை மாநாட்டின் பிரெஞ்சுப் பிரிவு என்று பெயர்.

இந்தக்கட்சி, பிரான்ஸின் மக்களாட்சிக் குடியாட்சியின் ஆதரவாளராக விளங்குகிறது. தேசியம்மயமாக்குதல், நல அரசை நிறுவுதல், திட்டமிட்ட பொருளாதார முதலீடு செய்தல் முதலிய திட்டங்களை ஆதரிக்கிறது. இது வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்தம், ஐரோப்பிய பொருளாதார சமுதாயம், சூடன் திட்டம், ஐரோப்பிய அணுசக்தி நிறுவனம் முதலியவற்றில் பிரான்சு உறுப்பினராகச் சேர்ந்ததை ஆதரிக்கின்றது. இது குடியேற்ற நாடுகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்படுவதை ஆதரிக்காமல் அவற்றுக்கு சுய ஆட்சி விரிவாக வழங்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. 1956-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் அந்தக்கட்சி வெற்றிபெற்று கை மாலே என்பவரைத் தலைமை அமைச்சராகக் கொண்ட அரசாங்கத்தை நிறுவிற்று. ஆயினும் 1958-ஆம் ஆண்டு தேர்தல்களில் இது தோல்வியுற்றது.

இந்தக் கட்சியின் அமைப்பானது தாராள இயல்பும் குடியாட்சி இயல்பும் உடையது. கட்சியின் தொடக்க உறுப்புக்கள் கான்டன்களிலும் கம்யூன்களிலும் அமைக்கப்படுகின்றன. டிபார்ட்மென்ட்டுகளில் அமைக்கப்படும் எல்லா கூட்டமைப்புக்களும் சேர்ந்து தேசிய காங்கிரசாக உருவெடுக்கின்றன. கட்சியின் நிர்வாகக் குழு தேசிய காங்கிரஸினால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அது கட்சி செயல்களைக் கட்டுப்படுத்தி கட்சியின் கீழ்மட்டக் கூறுகளில் கட்டுப்பாட்டை நிறுவுகிறது.

**தீவிரக் கட்சி**

இது 1901-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது உள்ளூர் பிரமுகர்களைக் கொண்டு அமைக்கப்படுகின்றது. இது மூன்றாவது குடியரசுக் காலத்தில் வலுவான செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆனால், இப்பொழுது இது ஒரு மாகாணக் குழுவாக மட்டுமே இருந்து வருகிறது. இந்தக் கட்சியிலிருந்து பல உறுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டு, வலது இடது சாரி கூட்டு அமைச்சரவைகளிலும், மைய கூட்டு அமைச்சரவைகளிலும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இது ஜெர்மனிக்கு எதிரான கோட்பாட்டை உடையது. இது மூன்றாவது குடியரசு மீண்டும் நிறுவப்படுவதை விரும்புகிறது. எனினும், இது மேற்கத்திய நாடுகளின் சார்பாகவும் இருக்கிறது. அதனால் பல இராணுவ ஒப்பந்தங்களில் பிரான்ஸ் உறுப்பினராதலை இது வற்புறத்தியது. 1958-ஆம் ஆண்டில் தீவிரக் கட்சி பிளவுபட்டது.

இந்த கட்சிக்கு நாடு முழுவதிலும் கிளைகள் உண்டு. இதற்கு உட்பிரிவுக் குழுக்களும் மாவட்டக் கூட்டமைப்புக்களும் இருக்கின்றன. கூட்டமைப்புக்கள் மிகவும் சுதந்திரமாக இருக்கின்றன. இதற்கு ஒவ்வொரு ஆண்டும் கட்சியின் தேசிய காங்கிரஸ் கூடுகிறது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கின்றனர். கட்சிச் செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் பதவி வழி பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள். நிர்வாகக் குழுவில் உள்ள 70 உறுப்பினர்கள் கட்சிச் செயல்கள் முழுவதையும் கட்டுப்படுத்துகின்றனர்.

சுருங்கக்கூறின், பிரெஞ்சுக் கட்சி முறையைப் பற்றிய ஆய்வு நமக்குப் பல

சுவையான செய்திகளையும், சில புதுமையான இடர்ப்பாடுகளையும் எடுத்துக்காட்டுகிறது. 1962-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட தேர்தல் சீர்திருத்தமானது பிரெஞ்சு அரசியல் முறையில் பல கட்சிகள் தோன்றி வளர்வதற்குக் காரணமாக இருந்தது. எல்லா அரசியல் கட்சிகளுமே தாங்கள் பிரெஞ்சு அரசியல் கட்சிகளைப் பற்றிய ஆராய்ச்சியானது 'ஒரு ஆழ்ந்த ஆய்வு முறையாகும். அது பிரெஞ்சு மக்களுடைய கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை; ஆனால் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவது மிகவும் கடினமானதும் இடர்ப்பாடானதும் ஆகும்.'

**பிரான்சில் தன்னலக் குழுக்கள்**

பிரான்சின் அரசியலமைப்பில் தன்னலக் குழுக்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. பிரான்ஸ் ஒரு பன்முக நாகரிகமும் சுதந்திரமான வெளிப்படையான சமுதாயமும் உடையது. அது வலுவற்ற பலகட்சி முறைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அரசியல் கட்சிகளைப் போல பிரெஞ்சு மக்கள் பலவகையான தன்னலக் குழுக்களை அமைத்துள்ளனர். அவற்றிற்கெனத் தனித்த இயல்புகள் உள்ளன.

முதலில், நிலையாக அரசியல் கட்சிகள் இல்லாத காரணத்தினால் பல தன்னலக் குழுக்கள் அங்கு தோன்றியுள்ளன. அதற்குக் காரணம் அவர்களுடைய பன்முகக் கலாச்சாரமும், கடுமையான தத்துவப் போக்குமேயாகும். பாகுபாடுகள் அனைத்தும் பிரதேச, சமுதாய பொருளாதார, கலாச்சார, அரசியல் வகையிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். பல பாகுபாடுகள் இடதுசாரிக்கும் வலதுசாரிக்கும் இடையில் உள்ள போட்டியோடு தொடர்புடையவை. மேலும் அரசியல் குழுக்கள் அல்லது 'குடும்பங்கள்' பல உட்குழுக்களாக உடைந்துள்ளன. அவைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அவற்றில் முழு உறுப்பினர்களாக இருப்பவர்கள் மட்டுமே அறிந்து கொள்ளுதல் இயலும். பிரெஞ்சு அரசியல் முறையில் உள்ள சுவையான ஒரு அம்சம் அங்குள்ள சில குழுக்களுக்கு இடையே பொதுவான நோக்கமும் நலன்களும் இருந்த போதிலும், அவை சிறு உட்குழுக்களாகப் பிரிந்துள்ளன என்பது தான். முன்னாள் இராணுவத்தினர் குடியானவர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் பல்வேறு முரண்பட்ட அரசியல் தொடர்புகளையும் இலட்சிய நோக்கங்களையும் உடைய பல்வேறு அமைப்புக்களிடையே பிரிந்து காணப்படுகின்றனர். எனவே தான் மாக்கிரிடிஸ், பிரவுன் என்ற ஆசிரியர்கள் பிரான்ஸ் நாட்டில் இருப்பதைப்போல் வேறு எந்த ஒரு அரசியல் துறையிலும் பலவகையான பணிக்குழுக்களும், தொழிற்குழுக்களும் இலட்சிய அல்லது தத்துவ இயல்புகளோடு கலந்து காணப்படவில்லை; தன்னலக்குழுக்கள் அரசியல் தன்மையுடையனவாக ஆக்கப்படுகின்றன என்று கூறுகின்றனர். பிரான்சில் உள்ள கட்சி அரசியலானது அரசியல் கட்சிகளுக்கும் தன்னலக் குழுக்களுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. இதற்குக் காரணம் அரசியலில் ஒருமித்த கருத்து எதுவும் இல்லாதிருப்பது தான். பிரெஞ்சு மக்களுக்கு திட்டவட்டமான அரசியல் நோக்கங்களை உருவாக்கும் இயல்பு இல்லை. அவர்களுடைய இயல்பு நெகிழ்ச்சியான ஒன்று. ஆகையால் எந்த ஒரு அரசியல் கட்சியும் சமுதாயத்தின் எந்த ஒரு குறிப்பிட்ட பிரிவின் அல்லது வகுப்பின் உறுதியான ஆதரவைக் கோருதல் இயலாது. ஆகையால் கட்சிகளை விட தன்னலக்குழுக்கள் வலுவான இடத்தைப் பெறுகின்றன. மக்கள் வாக்கு அளிக்கும்போது, தாங்கள் எந்தக் கட்சிக்கு வாக்கு அளிக்கிறார்களோ, அந்தக் கட்சி வேட்பாளர்கள் தங்களுடைய சிறந்த பிரதிநிதி என்று எண்ணுவதில்லை. வலுவான பிரான்சில் கட்டுப்பாடான கட்சி முறை இல்லாத காரணத்தினால் தன்னலக்

குழுக்களின் அரசியல் சிறந்து விளங்குகிறது.

பிரான்சில் சமுதாய, அரசியல், பொருளியல் போன்ற எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் தன்னலக் குழுக்கள் இருக்கின்றன. அரசியல் கட்சிகளைப் போல, அவற்றிற்கென அமைக்கப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. பிரான்சில் ஒவ்வொரு நலனுக்கும் பல்வேறு கழகங்கள் இருக்கின்றன. வேலை அளிப்போர் தேசிய கழகம் போன்ற பெரிய அமைப்புடைய குழுக்களும், முன்னாள் இராணுவத்தினர் இணைப்பைப் போன்று குறிப்பிட்ட பிரிவனர்களுக்கு மட்டுமே பிரதிநிதித்துவம் வழங்குகின்ற சிறிய குழுக்களும் இருக்கின்றன. சிறிய நடுத்தர அளவுள்ள தொழில் அதிபர்களின் தேசிய கழகத்தைப் போல சில முக்கியமான தொழில் அமைப்புக்களும், அறிவுசார்ப் பணியாளர்களின் அமைப்பைப் போல கல்வி இயல்புடைய சில அமைப்புக்களும் அங்கு இருக்கின்றன. பிரான்சில் மிக முக்கியமான தொழிற்சங்கமானது தொழிலாளர்களின் பொதுவான இணைப்பு (General Confederation of Labour) பிரான்சில் உள்ள தன்னலக் குழுக்களை தொழிலதிபர்கள், வேலை கொடுப்போர் குழு, தொழிலாளர் குழு, விவசாயிகள் குழு, அறிஞர்கள் மாணவர் குழு, இராணுவத்தினர், முன்னாள் போர் வீரர் குழு என்று பிரிக்கலாம்.

தொழிலதிபர்கள் வேலையளிப்போர் கழகமானது பிரான்சில் உள்ள குழுக்களில் மிகவும் உறுதியாக அமைக்கப்பட்டுள்ள குழுவாகும். இதில் தொழிலதிபர்கள், கழகங்களின் மேலாளர்கள், வங்கியர், வணிகர்கள் முதலியோர் இருக்கின்றனர். இதனுடைய முக்கியமான அலுவல்கள் தொழிலுக்கும் வணிகத்திற்கும் இடையே தொடர்பை உண்டாக்குதல், நாட்டின் பொருளாதார, சமுதாய நிலையைச் சீர்படுத்துதல், அரசாங்க அதிகாரிகளின் முன்னர் வணிக நிறுவனங்களுக்குப் பிரதிநிதியாக இருத்தல், அதனுடைய உறுப்பினர்களுக்குச் செய்திகள் வழங்குதல் முதலியனவாகும். பல ஆற்றல்மிக்க நலன்களின் சார்பாக இந்தக் குழு வாதிடுகிறது.

தொழிலாளர்களுக்கெனத் தனியாக அமைக்கப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. அவற்றுள் தொழிலாளர்களின் பொதுவான இணைப்பு என்பதுதான் மிக முக்கியமானது ஆகும். அதில் தொழிலாளர்களின் பல சங்கங்களும் எ.்கு இரும்புத் தொழிலாளர்கள் சங்கங்களும் இருக்கின்றன. தேசிய இணைப்புக் குழு என்ற ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழு, இந்த அமைப்பை இயக்குகின்றது. இதனுடைய தலைவர்கள் பலரும் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களுடைய செயல்முறைகளையே கையாளுகின்றனர். இந்த அமைப்பில் உள்ள ஒரு பிரிவினர் வன்முறைகளை ஆதரித்து இதை விட்டுப் பிரிந்து தேசிய தொழிலாளர் இணைப்பு என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கினர். இந்த இணைப்பு அரசின்மைக் கோட்பாட்டினால் இயக்கப்படுகிறது. குடியானவர்களுடைய, முக்கியமாக செல்வம் மிக்க குடியானவர்களுடைய நலன்களுக்குப் பிரதிநிதியாக இருப்பது தேசிய குடியானவர் இணைப்பு என்பதாகும். இது 7,00,000 குடியானவர்களை உறுப்பினராக உடையதென்று கூறப்படுகிறது. சோசலிஸ்டுகளும், பொதுவுடைமையாளர்களும், தங்களுக்கென்று அமைப்புகளைப் பெற்றுள்ளனர். அறிஞர்களும் கூட்டமைவு ஏற்படுத்தியுள்ளனர். இதில் அச்சுத் தொழிலாளர்கள், வண்ணம் பூசுவோர், எழுத்தாளர்கள், செய்தித்தாள் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் போன்றோர் இருக்கின்றனர். அந்த அமைப்பின் உறுப்பினர்கள், பொருளாதாரப் பிரச்சனைகளின் தன்மைகளைப் பற்றியும், தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக கையாளப்பட வேண்டிய செயல்முறையைப் பற்றியும் பெருத்த வேறுபாடான கருத்துக்களைக்

கொண்டுள்ளனர். இது மாணவர்களுக்கு உதவிச் சம்பளம், கடன்கள், விடுதி வசதி போன்ற விஷயங்களையும், அவர்களுடைய தர உயர்வு முதலியவற்றையும் பற்றிக் கவனிக்கிறது. இராணுவ உயர் அதிகாரிகள், சாதாரண இராணுவ அதிகாரிகள், பல்வேறு இராணுவப் பள்ளிகளில் உள்ள பட்டதாரிகள் ஆகியோருக்குத் தனியான அமைப்புகள் இருக்கின்றன. அவை ஓய்வூதியம் பெறுதல் போன்ற பல நிதி உரிமைகளைப் பற்றிக் கவனம் செலுத்துகின்றன. முன்னாள் படை வீரர்களின் தேசிய இணைப்பு, முன்னாள் படைவீரர்களின் குடியரசுக் கழகம் முதலியவை மேற்கூறிய அமைப்பு வகைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

பிரான்சிலுள்ள தன்னலக் குழுக்களின் செயல், அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் உள்ள செயல்வகைகளை விட வேறுபட்டது. பிரான்சின் தன்னலக் குழுக்கள் ஆதிக்கமான பங்கு வகிப்பது மட்டுமல்லாமல், பொறுப்பில்லாத வகையிலும் செயல்படுகின்றன. ஏனெனில், அங்கு ஒரு குறிப்பிட்ட சாராரின் நலன்களே தேசிய நலனை விட முக்கியத்துவம் பெறுகின்றன. தன்னலக் குழுக்கள் அங்கு உறுதியாக அமைக்கப்படுகின்ற பொழுதிலும், அவை பிளவுபட்டு நிற்கின்றன. ஆகையால் அவை ஒரு பொதுவான செயல் திட்டத்தையும் பொதுவான செயல் முறையையும் ஏற்படுத்தத் தவறிவிடுகின்றன.

அதிகாரிகளுடன் தொடர்பு கொள்தல் என்பது தான் தன்னலக் குழுக்களின் முக்கியமான செயல் முறையாகும். இந்தத் தொடர்புக்காக குழுக்கள் தேர்தல் நேரத்தில் வேட்பாளர்களுக்குப் பண உதவி செய்கின்றன. தங்களுடைய ஆட்சிகளை ஆட்சி அமைப்பின் உயர் நிலைகளில் சேர்க்கின்றன. தங்கள் சார்பாகப் பொது மக்கள் கருத்துக்களை ஈர்க்கின்றன. அவை இவ்வாறு பல செயல்களைச் செய்து அமெரிக்கத் தன்னலக்குழுக்களை ஒத்து இருக்கின்றன. அவைகளுடைய செயலாட்கள் அவற்றின் நலன்களைக் காப்பதற்காக, ஆட்சித்துறை முழுவதிலும் பரந்து உள்ளனர். ஆயினும் இவ்வாறு தொடர்பு கொள்ளும் செயல் திறத்தை வணிக அமைப்புகள் கையாளுகையில், தொழிற்சங்கங்கள் வன்முறைச் செயல்களை ஆதாரமாக வைத்தே பேரம் பேசுகின்றன. ஆர்ப்பாட்டமும், வன்செயலும் தான் தொழிற்சங்கங்கள் தங்களுடைய நோக்கங்களை அடைவதற்குக் கையாளும் வழிகளாகும்.

ஆயினும், பிரான்சிலுள்ள தன்னலக் குழுக்களின் அரசியல் நடப்பு முறையானது, ஆங்கில அமெரிக்கத் தன்னலக் குழுக்களின் நடப்பு முறையை விட மிகவும் வேறுபட்ட ஒன்று ஆகும். பிரான்சில் அரசியல் கட்சிகளுக்கும் தன்னலக் குழுக்களுக்கும் இடையே வேறுபடுத்திக் காட்டக் கூடிய வேறுபாடு எதுவும் இல்லை. ஒன்றில் மற்றொன்று ஊடுருவிச் செல்கின்றது. தன்னலக் குழுக்கள் இரண்டு காரணங்களினால் தாம் விரும்பும் நோக்கங்களை அடைகின்றன. ஒன்று அரசாங்கங்கள் நிலையில்லாமல் இருக்கின்ற காரணத்தால் எவருடைய கோரிக்கைகளையும் அவை மறுப்பதில்லை. இரண்டாவதாக அரசாங்க அதிகாரிகள் எல்லாம் தலைமை அமைச்சர், பாராளுமன்றக் குழுக்கள், சிவில் பணி அதிகாரிகள் முதலிய பல்வேறு நிறுவனங்களிடையே பரந்து கிடக்கின்றன. எல்லா தன்னலக் குழுக்களும் தங்களைச் காப்பாற்றிக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து சலுகைகளை முயற்சிப்பதால், அவைகளால் கோட்பாட்டில் தீவிரமான மாறுதல்களைக் கொண்டு வர இயலாது. இவ்வாறு பல்வேறு குழுக்களும் ஒன்றுக்கொன்று தடையாக இருத்தல் கூடும். தன்னலக் குழுக்களிடையே நிலவும் இத்தகைய பன்முக கோட்பாட்டினால் அவைகளால் ஒற்றுமையுடன் செயல்பட முடிவதில்லை. பிரான்சின்

நடுத்தர வகுப்பார் இரகசியமாக இந்தத் தொடர்புமுறைச் செயல்களைக் கையாளுவதால் அவர்களுடைய நலன்களைப் பேணிக் கொள்ள முடிகிறது. பிரெஞ்சுத் தன்னலக் குழுக்களின் நடப்பு முறையில் இத்தகைய பல தன்மைகள் இருக்கிறபடியால் அவை ஆங்கில, அமெரிக்கத் தன்னலக் குழுக்களின் அரசியலினின்றும் வேறுபடுகின்றன.

**பிரெஞ்சுத் தேர்தல் முறை**

பிரெஞ்சுத் தேர்தல் முறை 1958-ஆம் ஆண்டு அக்டோபர் 13-ம் நாள் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் பாராளுமன்றம் எப்பொழுது வேண்டுமானாலும் தேர்தல் முறையை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. தேசிய சட்டமன்றத்துக்கு நடைபெறும் தேர்தல், ஒற்றை உறுப்பினர் தொகுதி அடிப்படையிலும் நடைபெறுகிறது. ஆனால் தேசீயச் சட்டமன்றம் எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரே மாதிரியான தேர்தல் முறையைக் கொண்டிருக்கவில்லை. 470 உறுப்பினர்கள் ஒற்றை உறுப்பினர், இரட்டை வாக்குகள் என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இம்முறையில் வெற்றி பெற வேண்டிய உறுப்பினர் வாக்களித்த வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையில் பாதிக்கு மேல் பெற்றிருக்க வேண்டும். (50% + 1) அதாவது முதல் வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற வேண்டும். தேர்தலில் வாக்களிக்க ஒரு குடிமகன் கீழ்க்காணும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். (1) பிரெஞ்சுக் குடியுரிமை (2) 21-வயது நிரம்பல் (3) சிவில் மற்றும் அரசியல் உரிமையைப் பெற்றிருத்தல். ஒரு குடிமகன் தேர்தலில் போட்டியிட 23 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். ஒரே வேட்பாளர் இரண்டு தொகுதிகளில் போட்டியிட முடியாது. தேர்தலில் போட்டியிடுபவர் முன்பணமாக குறிப்பிட்ட பிராங்குகளை தேர்தல் அதிகாரியிடம் கட்ட வேண்டும். தேர்தலில் அந்த வேட்பாளர் மொத்த வாக்குகளில் 5% வாக்குகளைப் பெற்றால் அவர் கட்டிய முன்பணம் திருப்பித் தரப்படும். தேர்தலில் வாக்களிக்க மற்றும் போட்டியிட ஆண் பெண் அனைவருக்கும் சம உரிமையுண்டு.

பிரெஞ்சுத் தேர்தல் முறையில் உள்ள ஒரு முக்கிய பண்பு தேர்தலில் போட்டியிடுபவர் தனக்குப் பதிலாக (substitute) ஒருவரை நியமனம் செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஏதாவது ஒரு காரணத்தால் பதவி வில நேர்ந்தால் அந்த இடத்தை பதிலுள்ளவர் பெறுவார். வாக்குச் சீட்டில் முக்கிய வேட்பாளர் பெயருக்குக் கீழ் பதில் வேட்பாளர் பெயரும் அச்சிடப்பட்டிருக்கும். பிரெஞ்சு பாராளுமன்றத்தில் செனட் உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் தல கவுன்சிலர்களால் 9 ஆண்டுகளுக்கு மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். செனட் நிரந்தரமான சபையாக விளங்குவதால் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மூன்றாண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கீழவையின் பிரதிநிதிகள் (Deputies) ஐந்தாண்டிற்கு ஒரு முறை மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

பிரெஞ்சுத் தேர்தல் முறையில் இரண்டு முக்கியப் பண்புகள் உள்ளன. ஒற்றை உறுப்பினர் இரட்டை வாக்குகள் என்ற முறையில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. பிராந்திய மற்றும் தேசீய குழுக்களுக்கு நேரடி, மறைமுகத் தேர்தல் மற்றும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் போன்ற பல முறைகள் பல தேர்தல்களில் பின்பற்றப்படுகின்றன. இரண்டாவதாக ஒரு குறிப்பிட்ட தேர்தல் முறையின் நன்மைகள் பற்றி பிரெஞ்சு மக்கள் இன்னும் இறுதியான முடிவெடுக்கவில்லை.

### 8.10.1 உள்ளாட்சி அரசாங்கங்கள்

உள்ளாட்சி அரசாங்கம் என்பது ஒரு நாட்டின் பிரிக்க முடியாத, தேவையான ஒரு அம்சமாகும். ஒரு நாட்டின் பல்வேறு இடங்களில் வாழ்கின்ற மக்கள் தேவைகளை, துன்பங்களை மரபுகளை, உணர்வுகளை எடுத்தியம்பும் நிறவனமாக இவ்வமைப்புகளின் குழுக்கள் திகழ்கின்றன. எதேச்சதிகாரம் அல்லது தனிமனிதனின் ஆட்சி என்பது இக்காலத்திற்கு ஒவ்வாத கூற்று. பிரான்சு இக்கூற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு நாடல்ல.

அதிகார மையப்பாட்டு நிலையே பிரெஞ்சு உள்ளாட்சி அரசாங்கத்தின் சிறப்பியல்பு. இதனமைப்பை நெப்போலியன் வழங்கியது எனலாம். ஏனென்றால் நெப்போலியன் புரட்சியாளர் கொண்டு வந்த அதிகாரம் பரவலாக்கப்படும் வழிமுறைகளை நிராகரித்தார். உள்ளாட்சி அதிகாரிகளை மேற்பார்வை செய்தல், உள்ளாட்சி நிறுவனங்கள் மத்திய அரசுப் பிரதிநிதிகளால் நடத்தப்படல் போன்ற எதேச்சதிகாரத் திட்டங்களை நெப்போலியன் கடைப்பிடித்தார். 19ஆம் நூற்றாண்டில் அதிகார மையப்பாட்டு கொள்கை ஓரளவு தளர்த்தப்பட்டது. ஆனால இச்சீர்திருத்தம் தீவிரமடையவில்லை. அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசின் கட்டுப்பாடு தொடர்ந்து இருந்து வந்தது. முற்போக்கு எண்ணம்படைத்த சீர்திருத்தவாதிகள் கூட உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு முழு அதிகாரங்கள் வழங்குவதை ஆபத்தாகவே கருதினர். எல்லா இடங்களிலும் பணிகள் ஒரே விதமாக அமையவேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் அதிகார மையப்பாட்டுத் தத்துவம ஆதரிக்கப்பட்டது. உள்ளாட்சி அரசாங்க அதிகாரிகள் தமது விருப்பத்திற்கு விடப்பட்டால் அரசுப் பணிகளின் நிலை திருப்திகரமாக அமையாது என்று எண்ணினார். பணிகளை திறம்பட நடத்த தேவையான வசதிகளும் அமைப்பும் உள்ளாட்சி அரசாங்க அதிகாரிகளிடம் இல்லை. ஆகவே மத்திய அரசின் திறனும் வசதியும் தேவை. எனவே உள்ளாட்சி அரசாங்கங்களில் கீழ் நிலையில் இருக்கும் கம்யூன் முதல், மேல் நிலையில் பாரிஸில் அமைந்திருக்கும் உள்நாட்டு அமைச்சரகம் வரை, உள்ளாட்சி அரசாங்க அமைப்ப சங்கிலித் தொடர்போல் அமைந்திருக்கிறது. அதிகார மையப்பாட்டையும் அதன் அடிப்படையில் உருவான ஒரே மாதிரியான உள்ளாட்சி நிர்வாக அமைப்பையும் கொண்ட பிரான்சின் உள்ளாட்சி அரசாங்கம் இங்கிலாந்தின் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட உள்ளாட்சி அரசாங்கத்திலிருந்து வேறுபட்டு அமைந்திருக்கின்றது.

பிரான்சின் உள்ளாட்சி அரசாங்கங்களை விரிவாக எடுத்தியம்ப இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் எழுதிய நூலைத் தவிர்த்து வேறு எந்த நூலும் கிடையாது. பிரான்சின் அரசியலமைப்பில் உள்ளாட்சி அரசாங்களைப் பற்றி சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளது. 1875ம் ஆண்டு அரசியலமைப்பு இதைப் பற்றிக் கூறவேயில்லை. நான்காவது குடியரசின் அரசியலமைப்பில் 10வ்து தலைப்பின் கீழ் உள்ளாட்சி அரசாங்களைப் பற்றி கூறியிருப்பதும் பொதுவாகவே அமைந்திருக்கின்றது. உள்ளாட்சி நிர்வாக அமைப்புகள் வயது வந்தோர்க்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களால் (Councils) நிர்வகிக்கப்படுகின்றன. இக்கவுன்சில் நிறைவேற்றிய முடிவுகளைச் செயலாக்க ஒரு மேயர் அல்லது தலைவர் இருக்கிறார். ஒருங்கிணைவு, கட்டுப்பாடு, தேசிய நலன் பேணல் போன்ற பணிகள் அமைச்சர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பின் 11வது தலைப்பின் கீழ்வரும் 12வது விதி உள்ளாட்சி அரசாங்களைப் பற்றி சுருக்கமாகக் கூறுகின்றது. உள்ளாட்சி ஆட்சியின் அடிப்படைக் கூறுகள் கம்யூன், டிபார்ட்மெண்ட்

தன்னறிவு சோதனைக் கேள்வி
4. பிரான்சின் உள்ளாட்சி முறையை எழுது.

(Department) கடல் கடந்த கோட்டங்கள் போன்றவை என்று அவ்விதி கூறுகின்றது. இப்பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களால் சட்டத்திற்குக் கட்டுப்பாட்டு நிர்வகிக்கப்படலாம். டிபார்ட்மெண்டுகளிலும், கடல் கடந்த கோட்டங்களிலும் தேசிய நலன் பேணல், நிர்வாக மேற்பார்வை, சட்டங்களை மதித்தல் போன்ற பணிகளையாற்ற மத்திய அரசின் பிரதிநிதி பொறுப்பேற்கின்றனர். எனவே இன்றையளவும் பிரான்சில் நெப்போலியன் பின்பற்றிய மையப்பாட்டு தத்துவத்தின் அடிப்படையிலேயே எந்த குறிப்பிடத்தக்க மாற்றமும் இன்றி உள்ளாட்சி அரசாங்கங்கள் இயங்கி வருகின்றன.

## 8.11 உள்ளாட்சி அரசாங்கங்களின் அமைப்பு

நிர்வாக வசதிக்காகவும், உள்ளாட்சி மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிப்பதற்காகவும் மத்திய அரசின் ஆட்சிப்பரப்பு நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை கம்யூன் (Commune), காண்டன் (Canton) அரன்டைஸ்மன்ட் (Arrondissement) டிபார்ட்மெண்ட் (Department) என்பவை. 19வது நூற்றாண்டில் உள்ளாட்சி ஆட்சியின் அடிப்படைப்பிரிவாக கீழ்மட்டத்தில் புரட்சியாளர்கள் உருவாக்கிய நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் ஒரே சீரான கம்யூன்கள் அமைக்கப்பட்டன. மத்திய அரசு கட்டுப்பாட்டை கையில் வைத்திருந்தாலும் ஓரளவு உண்மையான சுயாட்சி பெற்ற முதல் நிறுவனமாக அமைந்தது கம்யூன். மேல்மட்டத்தில் அமைந்த காண்டன். அரன்டைஸ்மன்ட் போன்ற பிரிவுகள் அவைகளுக்கிருந்த அதிகாரங்களை கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, இன்று டிபாட்மெண்டினுள் அமைந்த தேர்ந்தெடுக்கும் அதிகாரங்கள் மட்டும் கொண்ட பிரிவுகளாகக் காட்சியளிக்கின்றன. இவ்வமைப்புகள் பிரான்சில் இயங்கி வந்த ஆட்சிப் பிரிவுகளை உடைக்க புரட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட செயற்கையான அமைப்புகள் என்றே கூறலாம்.

### கம்யூன்கள் (The Communes)

கம்யூன் உள்ளாட்சி அரசின் அடிப்படைப்பிரிவு ஆகும். 1300 மக்கள் தொகை கொண்ட ஏறக்குறைய 38,000 கம்யூன்கள் உள்ளன. 35,000 கம்யூன்களில் 2000 மக்களுக்குக் குறைவாகவே வாழ்கின்றனர். அவைகளின் சராசரி மக்கள் தொகை 450. இவ்வாறு குறைந்த அளவில், மக்கள் தொகை இருக்கின்ற உள்ளாட்சி அரசாங்க அமைப்புகளைப் பராமரிப்பது அதிகாரிகளுக்கு இயலாத ஒரு காரியம் ஆனாலும் கம்யூன்களின் எண்ணிக்கையைக் குறைக்க போதுமான முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. கம்யூன்கள் கூட்டுக் குழுக்கள் ஏற்படுத்திப் பணியாற்றியது ஒரு மரபாக இருந்தது. 1960-ம் ஆண்டு உருவாக்கிய சட்டத்தின் அடிப்படையில் சிறிய கம்யூன்கள் அண்டையிலுள்ள பெரிய நகரங்களுடன் இணைந்து கூட்டு அமைப்புகள் உருவாக்கிச் செயல்படலாம். இரண்டாவது உலகப்போருக்குப்பின் நகர்ப்புற மாவட்டங்கள் (Urban Districts) உருவாக்கப்பட்டன. இவ்வமைப்பு பெரிய நகரங்களின் அண்டையில் அமைந்திருக்கும் சிறிய கம்யூன்களின் நிலையை மாற்றியமைக்கவில்லை. ஆனால் சில முக்கியமான சமுதாயப் பிரச்சனைகளைக் கையாள ஒரு குழு (Council) அமைக்க வழி வகுத்தது. 1960ம் ஆண்டு இறுதியில் பெரிய நகரங்கள் அண்டையிலுள்ள இடங்களுடன் சேர்ந்து நகர்ப்புற சமுதாய அமைப்புகளை (Urban Communities) உருவாக்கியது. ஆனாலும் நகர்ப்புற அமைப்புச்சட்டம் அரசின் அமைப்பிலிருந்து பழைய கம்யூனிகளை ஒழிக்கவில்லை. சமுதாயச் சுதந்திரம் என்ற அடிப்படையில் எதிர்க் கட்சிகளால் பாராளுமன்றத்தில் இச்சட்டம் தீவிரமாக எதிர்க்கப்பட்டது. அரசு உள்ளாட்சி அதிகாரிகளிடம் இவ்வமைப்பைத் திணிக்கின்றது என்று கூறப்பட்டது.

ஆனால் இந்த புதிய அமைப்பு உள்ளாட்சி அரசு அதிகாரிகளுக்கும் மக்களுக்குமிடையே பரந்த இடைவெளியை ஏற்படுத்தியது. படிப்படியாக, முதலில் உருவாக்கப்பட்ட அமைப்பிலிருந்து மாறுபட்ட ஒரு புதுவகையான நகர்புற அமைப்பு தாமாகவே உருவெடுக்க ஆரம்பித்தது. நகர்ப்புற சமுதாய அமைப்பு எண்ணம் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படும் நிலையை அடையும்போது, பொதுத்தேர்தல் எண்ணமும் மக்களிடம் வளரலாம். அவ்வெண்ணம் வளரும் போது சமுதாய ஒருங்கிணைப்புத் தத்துவம் ஏற்றுக்கொள்ளப்படாமல் போகும் என்று எண்ணப்பட்டது.

இறுதியில் சிறிய கம்யூன்களின் பிரச்சனைகளைத் தீர்க்க அரசாங்கம் முடிவெடுத்து உள்ளாட்சி அரசுகளிடையே இணைப்பு ஏற்படுத்தும் ஒரு சட்டத்தை நிறைவேற்ற 1971-ஆம் ஆண்டு பாராளுமன்றத்தை அரசாங்கம் கேட்டுக் கொண்டது. அதற்கு எதிர்ப்பு தீவிரமானது. அரசாங்கம் நேரடியாக எந்த உள்ளாட்சி அரசையும் இணைப்பிற்கு கட்டாயப்படுத்தாது. ஆனால் பெருவாரியான கம்யூன்கள் இணைப்பை விரும்பினால் சட்டம் மறைமுகமாக அவற்றைக் கட்டாயப்படுத்தி ஒருங்கிணைக்கும். இந்த ஒருங்கிணைப்பை பொருளாதாரத் தூண்டுதல் துரிதப்படுத்தியது. முதலில் சில கம்யூன்களே ஒருங்கிணைப்பிற்கு முன் வந்த போதிலும், ஒருங்கிணைப்பின் முக்கியத்துவம் உள்ளாட்சி உணர்வுகள் குறைதல், தங்கள் பணிகளையாற்ற கம்யூன்கள் வெயிலிருந்து ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் நிலையின் கஷ்டங்கள், பெரிய உள்ளாட்சி அமைப்புகளினால் மக்களுடையும் நன்மைகள் போன்றவைகளால் உணர முடிந்தது. கம்யூன்களின் சிறிய அமைப்புக்களினால் பிரான்சின் கிராமப்புறங்களில் பொருளாதார, சமுதாய வளர்ச்சி குன்றிய நிலை ஓரளவிற்குச் சமாளிக்கப்பட்டது.

1830, 1880-ஆம் ஆண்டுகளின் சீர்திருத்தங்களினால், கம்யூன்கள் ஜனநாயக ரீதியில் ஆறாண்டிற்கு ஒரு முறை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்க்குழுக்களினால் (Municipal Council) நடத்தப்படுகின்றன. நகரக் குழுக்களின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை சிறிய கம்யூன்களில் ஒன்பது முதல் பெரிய கம்யூன்களில் 37 வரை இருக்கின்றது. பாரிஸ் போன்ற நகரங்களில் இன்னும் அதிக அங்கத்தினர்கள் உள்ளனர். இக்குழு ஒரு மேயரையும் அவருக்குத் துணையாளரையும் தேர்ந்தெடுக்கின்றது. இவர்கள் இக்குழுவின் செயற்குழுவாக அமைந்து, நிர்வாக முடிவெடுத்து கொள்கைகளைச் செயலாக்கி, நகர அதிகாரிகளின் வேலைகளை மேற்பார்வை செய்கின்றனர். ஓர் ஆண்டில் நகர்க் குழு நான்கு கூட்டத் தொடர்களை நடத்துகின்றது. மேயருக்கும் குழுவிற்குமிடையே கருத்து வேறுபாடு எழுந்தால் குழு மேயரை பதவி துறக்கச் செய்யலாம். இப்படி ஒரு நிலையெழுந்தால் மத்திய அரசு குழுவைக் கலைத்து புதுத் தேர்தல் பிரகடனம் செய்யலாம். பொதுவாக இச்சூழ்நிலை எழுவது அபூர்வம். தேர்தல் முறை நகரக் குழுவில் ஒரு பெரும்பான்மை கட்சியைத் தோற்றுவிக்கின்றது. அக்கட்சி மேயரை ஆதரிக்கும் கட்சியாகச் செயல்படும். மேலும் மேயர்கள், கம்யூன்களில் செல்வாக்கு மிகுந்தவர்களாகவும், பலருக்கு சலுகைகள் புரிபவர்களாகவும் இருக்கின்றனர். தேசியப் பாராளுமன்றப் பணிக்கு அடியெடுத்து வைக்கும் முதற்படியாக மேயர் பதவி கருதப்படுகின்றது.

கம்யூன் குழுக்களின் அதிகாரத்தை 1884-ஆம் ஆண்டு எழுந்த ஒரு சட்டம் ஒழுங்குபடுத்தியது. நகர்ப்புற குழுக்கள் சமுதாயப் பணிகளையே ஆற்றவேண்டும் என்று அச்சட்டம் கூறுகின்றது. இவ்விரிவான பணி அதற்கு அளிக்கப்பட்டதால் நகர்க்குழு சமுதாயப் பணியாற்றுவதோடு புதுப் பணிகளையும் மேற்கொண்டு பல வசதிகளை

மக்களுக்கு அளித்து வருகின்றது. மேயர் நாட்டின் பிரதிநிதி என்ற முறையில் தன் பழைய பணிகளாகிய பிறப்பு, இறப்பு சம்பந்தப்பட்ட காரியங்களைக் கவனிப்பதோடு, சட்டம் ஒழுங்கு நிலைநாட்டும் பணிகளையும் ஆற்றுகின்றார். சட்டம், ஒழுங்கிற்கு ஆபத்து ஏற்படும் நிலை எழும்போது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றையடக்க அவருக்கு அதிகாரமுள்ளது.

டிபார்ட்மெண்ட் உள்ளாட்சி அரசின் அடுத்த பிரிவாகும். 1964-ஆம் ஆண்டு பாரிஸ் வட்டார அமைப்பைப் பின்பற்றி 65 டிபார்ட்மெண்டுகள் பிரிக்கப்பட்டுள்ளன. கம்யூன்களுக்கும் டிபார்மெண்டுகளுக்கும் இடையே காண்டன், அரன்டைஸ்மெண்ட் என்ற இரு அமைப்புகளை புரட்சியாளர்கள் உருவாக்கினர். ஆனால் அவ்விரு அமைப்புகளும் உள்ளாட்சி சுய அரசுகளாக உருவெடுக்கவில்லை. கம்யூன்களின் அரசாங்கங்கள் சுயாட்சி பெற்றிருப்பினும் சில டிபார்ட்மெண்டுகள் இன்றும் கோட்ட அமைப்பிலேயே நிர்வகிக்கப்படுகின்றன. டிபார்ட்மெண்டின் குழு பொதுக்குழு (General Council) என்றழைக்கப்படுகின்றது. இக்குழுவின் அங்கத்தினர்கள் ஆறாண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாதி அங்கத்தினர் ஒவ்வொரு மூன்றாவது ஆண்டும் பதவி ஓய்வு பெறுகின்றனர். இக்குழு டிபார்ட்மெண்டின் காரியங்களைக் குறிப்பாக வரவு செலவுத் திட்டத்தைக் கவனிக்கிறது. இக்குழு ஒரு நிரந்தரக் குழுவை (Standing Committee) பொதுக்குழு கூட்டத்தொடர் இல்லாதபோது நடைபெறுகின்ற நிர்வாகப் பணியை மேற்பார்வை செய்வதற்காக நியமனம் செய்கின்றது. பொதுக்குழு வருடம் இருமுறை கூடி, ஏறக்குறைய இரண்டு வாரம் தன் கூட்டத் தொடரை நடத்துகின்றது.

டிபார்ட்மெண்டின் நிர்வாக அதிகாரம் முழுவதும் நெப்போலியனால் உருவாக்கப்பட்ட பிரி∴பெக்ட் என்கின்ற அதிகாரியிடமே இன்றும் இருக்கின்றது. பிரி∴பெக்ட் டிபார்ட்மென்டின், நிர்வாகப் பிரதிநிதியாகத் திகழ்கின்றார். இவரை கம்யூனிலுள்ள மேயருடன் ஒப்பிடலாம். ஆனால் இவர் மத்திய அரசால் நேரடியாக நியமனம் செய்யப்படுகிறார். எனவே இவர் கடல்கடந்த கோட்டங்களிலுள்ள ஆளுநரைப் போன்ற நிலையிலுள்ளார். முதலாவதாக, இவர் தான் பணியாற்றுகின்ற உள்ளாட்சி அரசின் எல்லைக்குட்பட்ட ஒரு குடிமகன் அல்ல. மத்திய அரசு உள்ளாட்சிப் பகுதிகளின் பிரச்சனைகளுக்கு அப்பாற்பட்டவர்களை பிரி∴பெக்டாகத் தேர்ந்தெடுக்கின்றது. இரண்டாவதாக, மத்திய அரசு பிரி∴பெக்டுகளை இரண்டு ஆண்டிற்கொருமுறை இடமாற்றம் செய்கின்றது. இல்லையெனில் அவர்கள் தல பகுதிகளில் ஏற்படும் பல காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு மத்திய அரசின் கொள்கைகளைச் சரிவரச் செயலாக்க முடியாத ஒரு நிலைக்குத் தங்களை உருவாக்கி விடுகின்றனர். மூன்றாவதாக பிரி∴பெக்டுகள் தங்கள் மத்திய அரசின் பணியோடு நகரக் குழுக்கள், மேயர்கள் ஆகியவர்களின் பணிகளை மேற்பார்வை செய்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் அளித்து வருகின்றனர்.

பிரி∴பெக்ட் இருவகை நிலையில் அமர்ந்தப்பட்டிருக்கின்றார். முதலாவதாக, மத்திய அரசின் பிரதிநிதியாக இருந்து பல்வேறு அமைச்சர்களின் செயல்களை ஒருங்கிணைத்து மத்திய அரசின் வெளியுறவுப் பணிகளை டிபார்ட்மெண்டில் ஆற்றுகின்றார். இரண்டாவதாக டிபார்ட்மெண்டில் பொதுக்குழுவின் நிர்வாகத் தலைவராக அமர்ந்து, குழுவின் முடிவுகளைச் செயலாக்குகின்றார். பிரி∴பெக்டால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுக் கணக்குகள் பொதுக்குழுவால் விவாதிக்கப்பட்டு திருத்தப்படுகின்றன. வரவு

செலவுக் கணக்குகள் பொதுக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதால் பிரி.ஃ.பெக்ட் தனது நிதி மேலாணை அதிகாரத்தைப் பொறுத்தமட்டில் பொதுக்குழுவிற்குப் பொறுப்புள்ளவராயிருக்கிறார்.

உள்ளாட்சி அதிகாரிகள், மத்திய அரசைச் சார்ந்திருப்பதால் இப்பிரி.ஃ.பெக்ட் பதவி தொடர்ந்து காக்கப்படுகின்றது. இப்பதவி நீடிப்பதால் உள்ளாட்சி அரசுகளின் மேல் மத்திய அரசு சரியான ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, டிபார்ட்மெண்டு முழுமையாக உள்ளாட்சி அரசின் ஒரு அங்கமாக மாறிவிடாமல் காக்கப்படுகிறது.

பொதுக்குழு, பொதுவாக நலிவுற்ற, அடங்கி நடக்கும் ஒரு நிறுவனமாகக் காட்சியளிக்கின்றது. தல தன்னாட்சிக்கு சம்பந்தமற்ற கவுரவ பிரச்சனைகளில் மட்டும் இக்குழு தலையிடுகின்றது. பொதுக்குழுவின் நலிவுற்ற நிலை அதனைத் தேர்ந்தெடுத்த முறையிலிருந்து தோன்றியதாகும். ஒவ்வொரு காண்டனும் ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகினறன. இம்முறையில் நகர்ப்புறத்தைக் காட்டிலும் கிராமப்புறங்கள் அதிக அளவில் அங்கத்தினர்களை அனுப்புகின்றன. காண்டனுடைய வரைபடம் மாற்றி வரையப்பட்டு, அதன் அடிப்படையில் பொதுக்குழுவின் அமைப்பு மாற்றப்பட்டால் பொதுக்குழுவிற்கு சரியான பிரதிநிதித்துவம் அளிக்கமுடியும். பெரிய நகரங்களின் தற்காலப் பிரச்சனைகளாகிய வீட்டு வசதி, போக்குவரத்து, கல்வி போன்றவை பொதுக்குழுவால் கவனியாமல் புறக்கணிக்கப்படுகின்றது. இப்பிரச்சனை அதிகார மையப்பாட்டின் தேவையை வலியுறுத்துகின்றது.

மத்திய அரசிற்குப் பொது அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது பாதுகாப்புப் பொறுப்பு (Tutelege) என்றழைக்கப்படும். இது மேற்பார்வை அதிகாரத்தோடு சம்பந்தப்பட்டிருக்கின்றது. மேயருடைய அல்லது நகரக் குழுக்களுடைய முடிவுகள் பிரி.ஃ.பெக்டின் அல்லது மிக முக்கிய முடிவென்றால் மத்திய அரசின் அங்கீகாரத்தையும் பெறல் அவசியம். மேயரின் சட்ட மேலாணைகளும், நகரக் குழுக்களின் வாக்குகளும் இவ்வகை அங்கீகாரம் பெறவில்லையெனில் செயலற்றதாகி விடுகின்றன. இவ்விதமாய் உள்ளாட்சி அதிகாரிகளின் தன்னாட்சி அதிகாரம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

பிற நாடுகளில் உள்ளாட்சி அரசுகளாற்றும் பல பணிகள், பிரான்சில் உள்ளாட்சி அரசின் அதிகாரங்களில் மத்திய அரசின் தலையீட்டால் தடை செய்யப்பட்டள்ளன. காவல் துறைப்பணி கல்வித்துறைப்பணி ஆகிய இவ்விரண்டையும் இம்மையப் பாட்டதிகாரத்திற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மூன்றாவது குடியரசுக் காலத்தில் இவ்வதிகாரங்கள் பிரி.ஃ.பெக்டின் பாதுகாப்புப் பொறுப்போடு மேயரின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. ஆனால் 1940-ஆம் ஆண்டு முதல் இந்த நிலை மாற்றப்பட்டது. முதலாவதாக பெரிய நகர்ப்புறங்களிலும் படிப்படியாக எல்லா நகர்ப் புறங்களிலும் காவல் துறைப்பணி மையப்பாட்டதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

காவல்துறை, கல்வித்துறை போன்றவைகளில் மத்திய அரசின் கட்டுப்பாடு அதிகம் இருக்கின்றது. மேலும் மத்திய உள்ளாட்சி அரசுகளுக்குப் பொதுவாக இருக்கும் பணிகளில் மத்திய அரசின் தலையீடு அதிக அளவில் இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, தீயணைக்கும் பிரிவின் பணிகள் உள்ளாட்சி அரசுகளின் சார்பாக மத்திய அரசுப் பிரதிநிதிகளால் செய்யப்படுகின்றது. மத்திய அரசின் தொழில் வல்லுநர்கள் சாலையிடும் பணியை மேற்கொள்ளும்போது கம்யூன்கள் பொதுவாக சிறிது அமைப்பைக் கொண்டதாய் இருப்பதால் தொழில் வல்லுநர்களை அளிக்காமல் நிதி அளிப்பதோடு தம் பணியை

நிறுத்திக்கொள்கின்றன. சாலை, பாலம் சம்பந்தப்பட்ட பணி மேற்கொள்ளும் பிரிவு மத்திய அரசில் பெரிய அளவில் சகலவித கருவிகளுடன் அமைந்திருப்பதால், அவர்கள் கம்யூன்களுக்கு உதவி புரிய ஆவலாய் இருக்கின்றனர். இது போன்ற முறைகளால் கிராமப்புறங்களில் பொறியாளர்கள் குடிநீர் திட்டம், வடிகால் திட்டம், நிலவள பாதுகாப்புத் திட்டம் போன்ற பல சமூக நலத்திட்டங்களை செயலாக்குகின்றனர். உள்ளாட்சி அரசுகளின் உருவில் மத்திய அரசு அதிகாரிகளால் செயலாக்கப்படும் இத்திட்டத்தால் மக்கள் பெரிதும் பயனடைவதோடு. பணிகள் ஒரே சீராக உயர்நிலையில் செயலாக்கப்படுகின்றன. பெரிய நகரங்களில் கொள்கைகளையும், பணிகளையும் உருவாக்குவதிலும் வருங்காலத் திட்டங்களைத் தீட்டுவதிலும் மேயர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். 1960-ஆம் ஆண்டிலிருந்து இந்நிலை உருவாகி வருகின்றது. நகராட்சிப் பணிகள் தெருவிளக்கு, தெரு சீரமைப்பு, கழிவுநீர் சம்பந்தப்பட்டவை என்ற நிலை இப்பொழுது ஓரளவு மாறியுள்ளது. எனவே ஆர்வமிக்க உள்ளாட்சி அதிகாரிகளின் ஆலோசனைக்கும் வழி காட்டலுக்கும் மத்திய அரசு அதிகாரிகளைச் சார்ந்திருக்கும் நிலை இன்று குறைந்து வருகின்றது. இன்றைய ஆக்கமிக்க நிலை உள்ளாட்சித் தன்னாட்சியைத் தூண்டும் ஒன்றாக பிரான்சில் உருப்பெற்றுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களின் கீழ் வாழும் மக்கள் தங்கள் முன்னோர் எண்ணியிராத பல கோரிக்கைகளை விடுக்கும் நிலை இன்று உள்ளாட்சி அரசாங்கங்களைப் பொறுத்தமட்டில் பிரான்சில் உருவாகியுள்ளது.

## 8.12 கட்சி முறை

பிரெஞ்சுக் கட்சிமுறை பல கட்சிமுறையைச் சார்ந்தாகும். பொதுவாகக் கட்சிகளின் எண்ணிக்கை பிரான்சில் ஒரு டஜனுக்கு மேலிருக்கின்றது. அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை பல கட்சி முறை ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இருப்பினும் பிரான்சுக்கு இணையான முறையை ஐரோப்பாவில் இத்தாலியில் மட்டுமே நாம் பார்க்கலாம். ஆனால் அங்கும் பிரான்சின் கட்சி முறையில் இருப்பது போன்ற சிக்கல்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. பிரான்சில் 1960-ஆம் ஆண்டிலிருந்து எதிர் மாறான கொள்கைகளைக் கொண்ட ஏராளமான கட்சிகள் இருந்த நிலை ஓரளவுக்கு மாறி அரசியலில் ஒரு திடநிலை உருவாகியுள்ளது போற்றத்தக்க மாற்றமாகும். ஸ்காண்டினேவியன் நாடுகளைப் போன்று ஒரு கட்சியின் மேம்பாட்டைக் கொண்ட பலகட்சி முறை பிரான்சில் இயங்கி வருகின்றது எனக் கூறலாம். அடிப்படையை நோக்குமிடத்து பிரான்சில் பழமையில் பற்றுக்கொண்ட ஒரு பெரிய அரசியல் கட்சியான காலிஸ்ட் கட்சி (Gaullist Party) 1947 ஆம் ஆண்டு முதல் பல பெயர்களுடன் இயங்கி வருகின்றது. இன்று இக்கட்சி புதிய குடியரசிற்கான கட்சி என்றழைக்கப்படுகின்றது. காலிஸ்ட் கட்சியிடம் செல்வாக்குடைய நபர்களைக் கொண்ட பல சிறிய கட்சிகள் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டி இடுகின்றன. ஐந்தாவது குடியரசு உதயமானதிலிருந்து இச்சிறு கட்சிகள் காலிஸ்டுகளுடன் இணைந்து செயல்படுகின்றன. இன்னொருபுறம் இரண்டு மித அளவில் உள்ள கட்சிகள் சேர்ந்து இடதுசாரி வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றிருக்கின்றன. அவை பொதுவுடைமைக்கட்சியும் சோசலிசக் கட்சியுமாகும். இவர்களுடன் சில சிறிய பிரிவுகளும் சேர்ந்திருக்கின்றன. பிரான்சில் எந்தவொரு கட்சிக்கும் அரசு அமைக்கும் அளவிற்கு தனிப்பட்ட முறையில் ஒரு பெரும்பான்மை கிடைப்பது என்பது அரிதான காரியமாகும். ஆகவே பல கட்சிகள் ஒருங்கிணைந்த கூட்டு அமைச்சரவை தான் பிரான்சில் பெரும்பாலும் தோன்றுகின்றது.

இவ்வாறு பல கட்சிகள் சேர்ந்து அமைக்கும் அமைச்சரவைகளின் ஆட்சிக்காலம் குறுகியதாய் அமைகின்றது. ஏதாவது ஒரு கட்சியின் ஆதரவை இழக்கையில் அமைச்சரவை கவிழ்கின்றது.

இவ்விதமாய் அமைச்சரவை என்பது மற்ற நேரங்களில் விரோதிகளாய் செயல்பட்டு வரும் பல கட்சிகளின் உடன்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒரு அவையாகத் திகழ்கின்றது. ஒரே அரசியல் பிரிவாக இதைக் கட்டுப்படுத்தத் தேவையான அரசியல் தலைமை பிரான்சில் இல்லை. எனவே அமைச்சரவையில் பங்கேற்கும் பிரிவுகளின் அங்கத்தினர்கள் பிரதம அமைச்சருக்கு விசுவாசமுடையவர்களாயிராமல் தங்கள் கட்சித் தலைவருக்கே விசுவாசமுடையவர்களாய்ச் செயல்படுகின்றனர். சில பிரிவுகளுக்கு பாராளுமன்றத்திற்கு வெளியில் இருப்பது போல் பாராளுமன்றத்தினுள் நிறுவன அமைப்புகள் கிடையாது. சில கட்சிகளும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் தாங்கள் தேர்தலில் போட்டியிடும் சின்னத்திலிருந்து வேறுபட்ட நிலையைப் பாராளுமன்றத்தில் கடைப்பிடிக்கின்றனர். கட்சிச் சின்னங்களைப் பின்பற்றுவது தெளிவற்ற நிலையிலிருப்பதால், பாராளுமன்ற அங்கத்தினர்கள் அவ்வப்போது ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவுக்கு மாறுகின்றனர். அவர்கள் அமைச்சர்களின் முன் தங்கள் தொகுதிக்கான எண்ணற்ற கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றனர். அமைச்சர்கள் அக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத போது அமைச்சரவைக்கு ஆபத்து வருகின்றது. மேலும் பாராளுமன்ற அங்கத்தினர்கள் தங்கள் தொகுதி நலனுக்கு அளிக்கும் முக்கியத்துவதைத் தேசிய நலனுக்குக் கொடுக்கவில்லை. எனவே பிரெஞ்சு கட்சிமுறை சிக்கல்கள் நிறைந்த, பொது வாழ்வில் துன்பமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

பிரான்சில் கணக்கற்ற கட்சிகள் இருப்பதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக பிரெஞ்சு அரசியலின் தொடர்ச்சியின்மை. பிரான்சு பல புரட்சிகளைச் சந்தித்து அதன் வாயிலாக பல வகையான அரசியலமைப்புகளைப் பரிசோதனை செய்துள்ளது. அரசியல் கட்சிகள் வளர ஒரு வளர்ச்சியுற்ற அரசியல் பாரம்பரியம் தேவை. அவ்வரசியல் பாரம்பரியத்தை பிரான்சில் வளர்க்க முடியவில்லை. இரண்டாவதாக பிரெஞ்சு மக்களின் மனப்போக்கு. பிரெஞ்சு குடிமகன் தத்துவரீதியாக வாழுகின்ற ஒரு தத்துவ மேதையாகக் காட்சியளிக்கின்றான். அவன் தன் சிந்தனைக்கு எட்டிய அறிவின் அடிப்படையில் அரசியலை நோக்குகின்றானேயொழிய நடைமுறை அரசியலை நோக்கவில்லை. அவன் தன் சொந்தக் கருத்தை அது என்ன அரசியல் விளைவை ஏற்படுத்தும் என்று எண்ணாமல் விடாப்பிடியாக மேற்கொள்கிறான். இவ்வாறான ஒரு மனநிலை அரசியல் தீவிரத்தைத் தோற்றுவிக்கின்றது. இவ்வகை அரசியல் எண்ணம் கொண்ட மக்களை ஒரு உடன்பாட்டின் கீழ் கொண்டு வருவது கடினமான செயலாகக் கருதப்படுகின்றது.

புரட்சி செய்யும் பழக்கம் ஒரு மரபு வழி வந்த பண்பாக பிரான்சில் நிலவுகின்றது என பிரைஸ்பிரபு கூறுகின்றார். இப்பண்பு நாட்டில் அதிகாரத்திற்குப் பணியாமை, ஒருங்கிணைந்து பணியாற்ற மறுப்பு, தனிநபர் முக்கியத்துவத்தைக் கட்சிக்காக விட்டுக்கொடுக்க முன்வராமை போன்ற நிலைகளைத் தோற்றுவிக்கின்றது. பிரான்சில் அரசியல்வாதிகளும் உணர்ச்சியால் உந்தப்பட்டவர்களாய்க் காட்சியளிக்கின்றனர். எனவே ஒரு பிரெஞ்சு குடிமகன் அரசியலை விளையாட்டாகக் கருதாமல் ஒரு போராகக் கருதுகிறான். மதம் ஒரு நபரின் வாழ்வில் முக்கியப் பங்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மதம் நாட்டினுடைய சமூக, அரசியல், பொருளாதார அமைப்பாகவே கருதப்படுகின்றது.

நாட்டிற்கும் மத ஸ்தாபனங்களுக்கும் இடையே எழுந்த நீண்ட கால மோசமான உறவுகள் பல அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்தன. பொருளாதார நிலை பிரான்சில் அரசியல் கட்சிகள் தோன்ற ஒரு முக்கியமான காரணமாகும். பிரான்சின் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் சிறு தொழிலை யாவரும் ஆதரித்ததோடு, விவசாயத்தையும் ஊக்குவித்தனர். பிரெஞ்சு நாடு சிறு நகர, கிராம, பண்ணை அமைப்புகளையும் ஒரு மனிதன் அல்லது ஒரு குடும்பம் நடத்தும் தொழில்களையும் கொண்ட நாடாகும். சிறு நகரப் பொருளாதார நிலை சிறு நகர அரசியலை ஊக்குவித்தது. மேலும் ஒரு சாதாரண நபரின் வாழ்க்கை அரசாங்க அல்லது பாராளுமன்ற நடவடிக்கைகளால் நிர்ணயிக்கப்படவில்லை. இவர்கள் அரசியலை சின்னம், தத்துவம் போன்ற அடிப்படையில் நோக்கவில்லை. கடைசியாக பிரெஞ்சு பாராளுமன்ற முறை செயல்பட்ட விதம் பல அரசியல் கட்சிகள் தோன்றக் காரணமாயிருந்தது.

## 8.13 பிரான்சின் முக்கிய அரசியல் கட்சிகள்

ஐந்தாவது குடியரசு ஆரம்பமானதிலிருந்து அரசியல் கட்சி முறையில் ஒரு மாற்றம் ஏற்படத் தொடங்கியது. பழைய கட்சிகள் மறைவதும் புதிய கட்சிகள் தோன்றுவதும், ஒன்றாக இருந்த கட்சி பலவாகப் பிரிவதும், பலவாக இருந்த கட்சிகள் ஒன்றாக இணைவதும், உயர்ந்த நிலையில் இருந்த கட்சிகள் தாழ்ந்த நிலை அடைவதும், தாழ்ந்த நிலையில் இருந்த கட்சிகள் உயர்ந்த நிலை அடைவதும் பிரெஞ்சு அரசியலை கடினமானதாக ஆக்குகின்றன. இம்மாற்றங்களின் விளைவாக 1967-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நான்கு முக்கிய கட்சிகளே ஒன்றையொன்று எதிர்த்தன. இந்நிலைக்குப் பல காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, காலிஸ்டுகள் பழமையில் பற்றுக் கொண்டவர்களையும் (Conservatives) மிதவாதப்போக்கு கொண்டவர்களையும் தன்னகத்தே இழுத்தனர். அதிபர் டிகாலுக்கு கிடைத்த பெரும்பான்மை இரு இடதுசாரி கட்சிகளாகிய சோசலிசக் கட்சியையும் ரேடிகல் கட்சியையும் ஒருங்கிணையச் செய்தது. இதனால் இடதுசாரி சோசலிச ஜனநாயக கூட்டமைப்பு உருவாகியது. ஜனநாயக நடுநிலைக்கட்சி நான்கு, ஐந்து கட்சிகள் ஒருங்கிணைத்து தோற்றுவித்த இன்னொரு அமைப்பாகும்.

1958-ஆம் ஆண்டு அரசியலமைப்பு பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு அளித்தது. ஆகவே டிகால் தன் பதவிக்காலத்தில் பலமுறை பாராளுமன்றத்தைக் கலைப்பதாய் பயமுறுத்தி எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்க முனைந்தார். இம்முயற்சி எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து ஒத்துழைக்க ஒரு தூண்டுதலாய் அமைந்தது. இப்பொழுது பாராளுமன்றத்தில் ஒரு கட்சி பாராளுமன்றப் பிரிவாக கருதப்படவேண்மெனில் அக்கட்சியில் 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இது சிறிய பிரிவுகளை ஒருங்கிணைக்க வழிவகுத்தது. ஒரு பாராளுமன்றப் பிரிவின் அங்கத்தினருக்குத்தான் பாராளுமன்றக் குழுக்களில் பிரதிநிதித்துவம் கிடைக்கும். கட்சிகள் ஒருங்கிணைவது இன்னொரு முக்கிய காரணமாகத் தற்காலத் தேவைகளுக்கு ஏற்ப பிரான்சு தன்னைத் தயார்படுத்திய நிலையைக் கொள்ளலாம். தல வட்டார உணர்ச்சிகள் மறைய ஆரம்பிக்கின்றன. தேசிய உணர்வு பிரெஞ்சு குடிமகனின் மனதில் எழ ஆரம்பித்தது. மக்கள் தங்களுக்கு அறிமுகமில்லாத வேட்பாளர்களுக்கு வாக்களிக்க ஆரம்பித்தனர். பிரெஞ்சு அரசியல் கட்சி முறையை எளிதாக்கும் சகாப்தம் ஆரம்பித்தது. ஆனால் இதுவரை குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எழவில்லை. எனினும் பல கட்சி முறை

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

5. பிரான்சு அரசியல் கட்சி முறைமையை விளக்கு.

மாற்றியமைக்கப்பட்டு முடிவில் கட்சித் தலைவர், கட்டுப்பாடு என்ற குணநலன் பொருந்திய மூன்று அல்லது நான்கு கட்சிகளைக் கொண்ட கட்சி முறை பிரான்சில் தோன்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சில முக்கிய அரசியல் கட்சிகள்**

**பொதுவுடைமைக் கட்சி (The Communist Party)**

இது 1920-ஆம் ஆண்டு பிரான்சில் நிறுவப்பட்டது. ஆனால் சோசலிசக் கட்சியில் ஒரு பிளவு ஏற்பட்டபின் இக்கட்சி முறையாக செயல்பட ஆரம்பித்தது. மார்க்சிய – லெனினியக் கொள்கைகளை இக்கட்சி பின்பற்றுகிறது. முதலாளித்துவத்தை ஒழித்து தொழிலாளர்களின் அரசை நிறுவி, அதன் வாயிலாக, நாட்டின் உற்பத்தியை தேசிய உடமையாக்கி, செல்வத்தைப் பகிர்ந்தளித்தல் இதன் அடிப்படைக் கொள்கையாகும்.

இக்கட்சிக்கு பிரான்சில் முதலிலிருந்த செல்வாக்கு இன்று இல்லை. கட்சியின் உட்பூசல்களும் மாஸ்கோவின் தலைமையை புரட்சி எண்ணங்கொண்ட பிரெஞ்சு மக்கள் ஏற்றுக்கொள்ளா நிலையும் 1924-ஆம் ஆண்டு முதல் 1928 ஆம் ஆண்டு வரை இக்கட்சியின் அங்கத்தினர்கள் பெருமளவில் குறைவதற்கான முக்கிய காரணங்களாகும். கட்சியின் அமைப்பு முறையில் மாற்றங்கள் கொண்டுவந்து, சிலரை கட்சியை விட்டு வெளியேற்றி, கட்சியை ஒழுங்கான ஒரு இயக்கமாக மாற்றி ரேடிகல் கட்சி, லியோன் கட்சி போன்றவையோடு இணைந்து பொது மக்கள் முன்னணியினை ஏற்படுத்திய போது தேசிய அளவில் செல்வாக்குப் பெற்றதோடு, அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் பெருகியது. ஹிட்லர், ஸ்டாலின் ஆகியோரிடையே எழுந்த உடன்பாட்டின் விளைவாகக் கட்சியிக் செல்வாக்கு மீண்டும் குறைந்தது. இரண்டாவது உலகப்போரின் சமயம் கட்சி சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டது. கட்சித் தலைவர்கள் தலைமறைவானார்கள். ஹிட்லர் பிரான்சைக் கைப்பற்றியபோது பொதுவுடைமைக் கட்சி மீண்டும் தலையெடுத்தது. போர் முடியும் நேரம் கட்சி நன்முறையில் வளர்ந்தது, முதலாவது, இரண்டாவது அரசியலமைப்புச் சட்டமன்றங்களுக்கு நடந்த தேர்தல்களில் இக்கட்சி முறையே 159, 150 இடங்களைக் கைப்பற்றியது. ஆனால் 1951-ஆம் அண்டு தேர்தலில் தேசிய மன்றத்தில் இது 103 இடங்களைச் கைப்பற்றியது. ஐந்தாவது குடியரசில் பொதுவுடைமைக் கட்சி டிகாலுக்கு வலுவான எதிர்ப்பு அளித்ததுடன், 1958-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பைக் கடுமையாக விமர்சிக்கவும் செய்தது.

நாட்டில் வேறு எந்த கட்சிக்கும் இல்லாத நல்ல ஒரு அமைப்பு இக்கட்சிக்கு இருக்கின்றது. அடிமட்டத்திலுள்ள கட்சி உறுப்பு செல் (Cell) என்றழைக்கப்படுகிறது. ஒவ்வொரு செல்லும் ஒரு செயலரையும் ஒரு செயற்குழுவையும் தேர்ந்தெடுக்கின்றது. இதன் மேற்பிரிவாக செக்ஷன் (Section) இருக்கின்றது. செக்ஷனில் செல் செயலர்களும், செயற்குழு உறுப்பினர்களும் பிரதிநிதிகளாயிருக்கின்றனர். செக்ஷனுக்கு மேல் டிபார்ட்மென்டல் பெடரேஷன் (Departmental Federation) என்ற அமைப்பு காணப்படுகின்றது. இதில் செக்ஷனிலுள்ள பிரதிநிதிகள் அமர்கின்றார்கள். பொதுவுடைமைக் கட்சியின் உயர்ந்த உறுப்பாக கட்சியின் பேரவை (National Congress) அமைகின்றது. கட்சியின் பேரவை மத்தியக்குழு (Central Committee) ஒன்றைத் தேர்ந்தெடுக்கின்றது. இக்குழு பேரவையிலிருந்து செயற்குழு, செயலகம் போன்ற பல அமைப்புகளைத் தேர்ந்தெடுக்கின்றது.

அங்கத்தினர்கள் தேசிய அளவில் காணப்படுகின்றனர். அரசாங்கத்தின் மீது

அதிருப்தி அடைந்திருக்கும் குடியானவர்களும், தொழிலாளர்களும் பொதுவுடைமைக் கட்சியின் கரங்களை வலுப்படுத்துகின்றனர். மத்தியதர வகுப்பைச் சார்ந்த அறிஞர் பலர் இதில் பல பதவிகளையும் வகிக்கின்றனர். மார்க்ஸிய கொள்கைகளைப் பின்பற்றுகின்ற தொழிலாளர்களின் கட்சி என்ற முறையில் உற்பத்திச் சாதனங்களை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல், குடியானவர்களுக்கு நில உரிமை வழங்கல் போன்றவைகளுக்காக முயற்சித்து வருகின்றனர். பொருள்களின் விலையை உயர்த்தாமல் கூலியை உயர்த்த முடியும் என தங்கள் அன்றாட அரசியலில் நம்புகின்றனர். இன்று இக்கட்சியின் செல்வாக்கு நலிவுற்றிருந்தாலும் இளைஞர்களின் பேராதரவு இதற்கு இருந்து வருகிறது.

**ஜனநாயக சோசலிச இடதுசாரி கூட்டமைப்பு (The Federation of the democratic and Socialist Left)**

1965-ஆம் ஆண்டு தேர்தலில் டிகாலின் சாவலைச் சமாளிக்க இடதுசாரிக் கட்சிகளின் ஒருங்கிணைப்பின் அவசியம் உணரப்பட்டது. ரேடிகல், சோசலிச இடதுசாரி கூட்டமைப்பு தோன்றியது. கூட்டமைப்பாக உருவெடுத்த போதிலும் ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய தனித்தன்மையை இழக்காமல் அங்கத்தினர்களைச் சேர்த்து பொதுக்குழு கூட்டங்களை நடத்தி, தங்கள் கட்சி அமைப்புகளை தாங்களே நிர்வகித்து பொதுக் கூட்டங்களையும் நடத்தி வந்தனர். ஆனால் கூட்டமைப்பு இயங்கவும் அதில் கூட்டுறவு வரவும் தேவையான பொது வழி வகைகள் வகுக்கப்பட்டன. கூட்டமைப்பிற்கு கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு தேசிய குழுவும் (National Bureau) ஓர் இயங்கும் குழுவும் (Directing Committee) அமைக்கப்பட்டன.

**சோசலிசக் கட்சி (Socialist Party)**

இக்கட்சி 1879-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1905-ஆம் ஆண்டு உறுதியாக செயல்பட ஆரம்பித்தது. இக்கட்சியை அதன் பெயரில் முதல் எழுத்துக்களை வைத்து S.F.I.O. (The French Section of the Second International) என்று அதிகாரப்பூர்வமாக அழைப்பார்கள். 1915-ஆம் ஆண்டு வரை அறவழியில் நின்று சமதர்மச் சமுதாயத்தை ஏற்படுத்துவதே இக்கட்சியின் முதன்மையான கொள்கையாக இருந்தது. ஆனால் ரஷ்யப்புரட்சிக்குப் பின்னர் தீவிரவாதக் கொள்கை இக்கட்சியில் வலுப்பெற்றது.

பழைய சோசலிசக் கட்சி ரேடிகல் கட்சியோடு கூட்டு வைத்து ஹெரியட் (Herriot) என்பவரின் தலைமையில் பாராளுமன்ற பெரும்பான்மையைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இவ்விரு கட்சிகளின் பொருளாதாரக் கொள்கை வேற்றுமையின் காரணமாக இக்கூட்டு நிலைபெறவில்லை. 1932-ஆம் ஆண்டு இத்தேர்தல் கூட்டு மீண்டும் தொடரப்பட்டது. 1936-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் அரசை நிறுவிய கட்சிகளுள் பெரும்பான்மை இடங்களைப் பெற்ற கட்சியாக இக்கட்சி திகழ்ந்தது. 1945-ஆம் ஆண்டு தேர்தலில் இக்கட்சி மூன்றாவது இடத்தைப் பெற்று, அந்நிலையை அதுமுதல் நிலை நிறுத்தி வருகின்றது.

சமதர்மம் படைத்தல் இதன் கொள்கையாய் இருந்தபோதிலும் இது ஒரு தொழிலாளர் கட்சியல்ல. ஆசிரியர், கடைநிலை அரசு ஊழியர் போன்ற நடுத்தர வகுப்பு மக்களை அங்கத்தினராகக் கொண்ட புரட்சியை எதிர்க்கும், ஜனநாயகக் குடியரசைப் பாதுகாக்கும் ஒரு கட்சியாக இது திகழ்கின்றது. பொதுநல அரசு, திட்டமிட்ட பொருளாதார மூலதனம், பொது வீட்டு வசதி, தொழில்மயம், கல்வி வாய்ப்பு, சமவரி விதிப்பு, அதிக நகராட்சி உரிமைகள், அதிக வட்டார முன்னேற்றப்

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

6. பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைகள் யாவை?
7. சோசலிச கட்சி பற்றி எழுது.

பணிகள் போன்றவை இதனுடைய கொள்கைகளாகும். சோசலிசவாதிகள் மேற்கத்திய வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுகின்றனர். டிகாலின் உள்நாட்டுப் பொருளாதார அரசியல் கொள்கையை இக்கட்சி எதிர்க்கின்றது.

**ரேடிகல் கட்சி (The Radicals)**

பிரான்சின் மிகப் பழைய கட்சியாக இருக்கும் பெருமை இக்கட்சியைச் சார்ந்ததாகும். மூன்றாவது நான்காவது குடியரசுகளில் இக்கட்சி மிகச் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. இது மக்களுக்குப் பல பொதுவான வாக்குறுதிகளை அளித்தது. ஆனால் குறிப்பிட்ட யாருக்கும் எந்த வாக்குறுதியும் அளிக்கப்படவில்லை. தொழிலாளர் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதை எதிர்த்தது. குடியானவர்கள், கிராமிய மருத்துவர்கள், கடை உடைமையாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் போன்றோர் இக்கட்சியில் அங்கத்தினராயிருந்தனர். இது முறையான ஒரு நிறுவன அமைப்பைக் கொண்ட கட்சியல்ல. 1949-ஆம் ஆண்டு முதல் பல கூட்டமைப்புக்களை ஏற்படுத்தி தேர்தல்களில் போட்டியிட்டது. இன்று இக்கட்சி முற்றிலும் தேய்ந்து காணப்படுகின்றது.

**குடியரசு நிறுவனங்களின் கன்வென்ஷன் (The Convention of Republican Institutions)**

மாணவர், அறிஞர், தொழில்நுட்பம் படைத்தோர் போன்றோரின் அரசியல் குழுக்கள் அரசைப் பற்றி கடுமையாக விவாதித்து வந்தன. பல்வேறு நகரங்களில் செயல்பட்டு வந்த இவ்வகையிலான ஆறு குழுக்கள், ஒத்த குணநலன் படைத்த குழுக்களை ஒன்றிணைக்க தீவிர முயற்சிகள் எடுத்தன. அம் முயற்சியின் பயனாக கன்வென்ஷன், பொதுவுடைமைக் கட்சியைச் சாராத இடதுசாரிகளை அதிபர் டிகாலுக்கு எதிராக ஒன்று திரட்டி, 1964-ஆம் ஆண்டு உருவெடுத்தது. இக்கன்வென்ஷன் டிகாலின் தனிப்பட்ட ஆளுகையை எதிர்த்து சீரிய பொருளாதார, சமூக திட்டங்களின் அடிப்படையில் ஒரு ஜனநாயக அரசை நிறுவி, ஐரோப்பியர்களின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கத் தன்னை அர்ப்பணித்தது. இது குயடிரசுத் தலைவர் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முயற்சித்தது. அவ்வடிப்படையில் ஜனநாயக சோஷலிச இடதுசாரிக் கூட்டமைப்பில் ஓர் அங்கமாகத் தன்னை இணைத்தது.

**சோசலிச ஒருங்கிணைப்புக் கட்சி (The Socialist United Party - S.U.P)**

பிரெஞ்சு கட்சியமைப்பு சின்னாபின்னமாக உடையும் நிலையை உணர்த்த இக்கட்சி சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

**ஜனநாயக நடுநிலைமைக் கட்சி**

பிரான்சில் பல கட்சிகள் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தபோதிலும் அவைகள் வெளிப்படையாக தங்களை நடுநிலைக் கட்சிகள் என்று கூறுவதற்கில்லை. மிதவாதிகள், இணையாத சுயேட்சைகள், குடியானவர்கள், குடியரசுவாதிகள் போன்ற சிறிய பிரிவுகள் அடங்கிய அமைப்புதான் இது. நாடு சுதந்திர அமைப்பைப் பெற்றபின் இவ்வமைப்பிலிருந்து கொள்கைகளைக் கொண்ட ஒரு கட்சி (The Movement Republican Populate) தோன்றி பிரெஞ்சு நாட்டின் 25 சதவிகித வாக்காளர்களைக் கவர்ந்தது. இவ்வமைப்பிலுள்ள கட்சிகள் அவ்வப்போது தங்கள் பெயர்களை மாற்றியமைப்பதோடு யாராலும் நிர்ணயிக்கமுடியாத அளவில் சில நேரங்களில் இடதுசாரியோடும் சில நேரங்களில் வலதுசாரியோடும் கூட்டு வைத்துக் கொண்டன. 1962-ஆம் ஆண்டிற்குப் பின் இக்கட்சிகள் தாங்களாக பாராளுமன்றத்தின்

ஒரு பிரிவை அமைக்கத் தேவையான அங்கத்தினர்களைத் தேர்நதெடுக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். ஆனால் 1965-ஆம் அண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவரின் நேரடித் தேர்தலில் இந்நடுநிலைப் பிரிவுகளை இணைத்து, ஒரே வேட்பாளருக்கு ஆதரவு அளிக்கவைத்ததின் மூலம் தோன்றிய அமைப்பிற்கு ஜனநாயக நடுநிலையாளர்கள் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இவ்விணைவிற்கு 1967-ஆம் ஆண்டு தேர்தலில் கிடைத்த ஆதரவு இவ்வமைப்பைத் தொடர்வதற்கு சிறிய நம்பிக்கையை அளித்தது.

**வலதுசாரிக் கட்சிகள் (The Parties of the Right)**

அங்கத்தினர்களையும், பெயர்களையும் அவ்வப்போது மாற்றிக் கொள்ளுகின்ற சிறிய பிரிவுகளைக் கொண்ட அமைப்புதான் வலதுசாரி கட்சிகளின் அமைப்பு. இரண்டாவது உலகப் போருக்குப்பின் குடியரசு அமைப்பை மாற்றி சர்வாதிகார அமைப்பை உருவாக்குவதில் ஆர்வம் கொண்ட இரு பிரிவுகள் பிரான்சில் தோன்றின. இவ்விரு இயக்கங்களும் குடியரசு விரோத வலதுசாரி இயக்கங்கள் என்றழைக்கப்பட்டன. கடை உரிமையாளர்கள், கலைஞர்கள், குடியானவர்கள், சில அரசியல் தலைவர்கள் போன்றோர் இவ்வியக்கத்தை ஆதரித்தனர். இவ்வியத்தினர் இயக்கத் தலைவர் பெயரின் அடிப்படையில் Poujadist என்றழைக்கப்பட்டனர். இவர்கள் அரசியல் நிறுவனங்களை முழு அளவில் மாற்றியமைக்க கோரிக்கை விடுத்தனர். இவர்கள் பாராளுமன்றத்தை மாற்றியமைத்தல், குடியரசுத் தலைவர்களை உயர்நீதிமன்றத்தில் விசாரித்தல் போன்றவைகளை எடுத்தியம்பினர். 1958-ஆம் ஆண்டு டிகால் பதவியேற்றவுடன் இவ்வியக்கம் வீழ்ந்தது. குடியரசு விரோத அமைப்பினர் விறுவிறுப்பாக செயலாற்றுபவர்கள் (Activists) என்றழைக்கப்பட்டனர். அல்ஜீரியாவில் போர் நடந்தபோது சில படை அதிகாரிகள் ஐந்தாவது குடியரசிற்கும் அதிபர் டிகாலுக்கும் எதிராக எழுந்தனர். இவர்களுக்கு அல்ஜீரியாவில் வாழ்ந்த பிரெஞ்சு மக்கள் ஆதரவளித்தனர். மேலும், பிரான்சிலுள்ள சில சர்வாதிகார தத்துவச் சீடர்களைக் கொண்ட இரகசிய பிரிவுகளும் பாஸிஸவாதிகளும், தீவிரவாதிகளும் இவ்வியக்கத்தை ஆதரித்தனர். O.A.S. என்ற அமைப்பை இவர்கள் உருவாக்கினர். இவ்வமைப்பு கொலைபாதக செயல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதிபர் டிகாலைக் கொல்ல சதி செய்தது. 1964-ஆம் ஆண்டு இதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வமைப்பு உடைத்தெறியப்பட்டது.

**வலதுசாரிக் குடியரசுக் கட்சி (The Republican Right)**

இப்பிரிவில் சில சுயேட்சகைளும், காலிஸ்டுகளும் இடம் பெற்றனர். இவர்களது ஐந்தாவது குடியரசிற்கும், காலிஸ்டுகளுக்கும் ஆதரவு அளித்ததால் 1958-ஆம் அண்டு தேர்தலில் 20 இடங்களைக் கைப்பற்றினர். பொருளாதார சமூக சீர்திருத்தங்களைப் பொறுத்தமட்டில் இவர்கள் பழமையில் பற்றுக்கொண்ட அமைப்பாகவே பாராளுமன்றத்தில் காட்சியளித்தனர். இந்நிலையால் இவர்கள் டிகாலின் வெறுப்பைச் சம்பாதித்தனர். நேரடி குடியரசுத் தலைவர் தேர்தல், 1962-ஆம் ஆண்டு தேர்தல் போன்றவை இக்கட்சியை பிளவுபடுத்தி, இதிலுள்ள சுதந்திர குடியரசுவாதிகள் என்ற பிரிவை காலிஸ்டுகளோடு இணைத்தது. இக்கட்சியில் எஞ்சியவர்கள் தங்களை நடுநில்லயாளர்களோடு இணைத்துக் கொண்டனர்.

**காலிஸ்டுகள் (Gaullists)**

1944-ஆம் ஆண்டு அதிபர் டிகால் பிரான்சின் தற்காலிக அரசாங்கத்திற்குத்

தலைமையேற்றார். அவர் வலுவுள்ள அதிபர் அரசு, நிலையாக நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைத்தல், விரிவான சமூக முன்னேற்றச் செயல்கள் போன்றவற்றின் தேவையை எடுத்துரைத்தார். ஆனால் அவர் 18 மாதம் ஆட்சி புரிந்தவுடன் பதவியை விட்டு விலகினார். டிகால் மீண்டும் பெரியதொரு அரசியல் இயக்கத்தின் தலைவராக அரசியலில் புகுந்தார். நான்காவது குடியரசின் அரசியலமைப்பை நாட்டிற்கு கொண்டு வருதலே இவ்வியக்கத்தின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது. 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற நகராட்சி மன்றத் தேர்தல்களில் இவ்வியக்கம் ஒரு பெரிய அளவிலான வெற்றியைப் பெற்றது. 1951-ஆம் அண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் இவ்வியக்கம் 117 இடங்களையே தேசிய மன்றத்தில் கைப்பற்றியது. எந்நிலையிலும் டிகாலைப் பின்பற்ற வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொண்ட டிகாலின் ஆதரவாளர்களுக்கு டிகால் முழு சுதந்திரம் அளித்ததோடு தன்னையும் அரசியலிலிருந்து விடுவித்துக் கொண்டார்.அல்ஜீரியாவில் போர் மோசமான நிலையை அடைந்தது. நான்காவது குடியரசின் அரசுக்கு இராணுவத்தின் மேல் திறனான கட்டுப்பாடு வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனவே டிகால் முதலாவதாக தலைமை அமைச்சராகவும், பின்னர் 1958-ஆம் ஆண்டு அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தவுடன் ஐந்தாவது குடியரசின் தலைவராகவும் பதவிகள் வகித்தார். காலிஸ்டு கட்சிக்கு புத்துயிரளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1958-ஆம் ஆண்டு தேர்தலில் காலிஸ்டுகள் புதிய குடியரசிற்கான கட்சி (The Union of the New Republic U.N.R.) என்ற பெயரில் போட்டியிட்டு 186 இடங்களை தேசிய மன்றத்தில் கைப்பற்றினர். சில பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பொருந்திய பிரிவாக மாறியது. 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்தில் 482 இடங்களை இக்கட்சி கைப்பற்றியது. காலிஸ்டுகள் வலது சாரிகள், நடுநிலைவாதிகள், கத்தோலிக்கர்கள் போன்றோரின் ஆதரவோடு வலுப்பெற்ற அமைப்பாக உருவெடுத்தனர். இக்கட்சிக்கு ஆண்களைவிட பெண்களின் பேராதரவு கிடைத்தது. ஆனால் இளைஞர்களை இக்கட்சி கவரத் தவறியது. தேர்தலில் பணியாளர்கள், மேலாணைப் பிரிவினர்கள், நிர்வாகிகள், தொழிலதிபர்கள், வியாபாரிகள் போன்றோரின் வாக்குகள் காலிஸ்டுகளுக்கு கிடைத்தன. இம்முறையிலான கட்சியமைப்பால் பல செயல்முறை விளைவுகள் நிகழலாம். முதலாவதாக பிரான்சில் ஒரு குறிப்பிட்ட காரியத்தில் பொதுமக்கள் கருத்தை அறிவது கடினம். இரண்டாவதாக, பல கட்சி முறை நாளடைவில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையைப் புகுத்தலாம். மூன்றாவதாக, எல்லா கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற நிலையிலிருப்பதால் பல புதுக்கட்சிகள் உருவாக வாய்ப்பிருக்கின்றது. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமுறை புகுத்தப்பட்டால் அமைச்சரவையின் நிலையற்ற தன்மையும், அதனால் ஏற்படும் விளைவுகளும் தொடரும். இம்முறையில் பொறுப்பை யார் மேலும் சுமத்த முடியாது. கூட்டு அமைச்சரவை உருவாக்கப்படுவதால் எந்த கட்சியையும் பொறுப்புடையதாக்க முடியாத நிலை ஏற்பட்டு, அரசு பொறுப்பற்றதாகக் காணப்படும். பொறுப்பற்ற அரசு நாளடைவில் லஞ்சம் ஊழல் போன்ற தீங்குகளுக்கு வழி வகுக்கும். கடைசியாக, இந்நிலைகளினால் பாராளுமன்ற அரசு தோல்வியுற்று மக்களுக்கு ஜனநாயகத்தின் மீது இருக்கின்ற நம்பிக்கை குறைய வாய்ப்பிருக்கின்றது.

**பிரான்சின் அரசுப்பணி**

பிரான்சு நாட்டிலுள்ள அரசுப்பணி பிறநாடுகள் போல்தான் இருக்குமென்றாலும்,

தனி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. ஆயிரக்கணக்கான பணியாளர்கள் பணியாற்றி வந்தாலும், தனியார் துறையிலிருந்து மிக அதிகமான அளவில் வேறுபாடு கொண்டவர்களாக உள்ளனர். அரசுப் பணியாளர்கள் சமூகத்தில் ஒரு சிறப்பான அந்தஸ்தைப் பெற்று விளங்குவதால் மக்கள் அனைவரும் அரசுப் பணிகளில் சேர்வதற்கு மிகவும் விருப்பமானவர்களாக உள்ளனர். 1871-ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தைக் காட்டிலும் அதிகமான பணியாளர்கள் கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகமாக உள்ளனர். ஆனால் பிரான்சு நாட்டின் எல்லையும், மக்களும் இங்கிலாந்தைக் காட்டிலும் குறைவு. ஆகவேதான் ஏராளமான பணிகள் செய்யக்கூடியவர்களாக பிரான்சு நாட்டில் அரசுப் பணியாளர்கள் ஆட்சியாளர்களாகச் செயல்பட்டுப் பின்னர், மறுபடியும் அரசுப் பணியாளர்களாக வருவதற்கும் பிரான்சு நாட்டில் வாய்ப்பு உண்டு. தவிர, அரசுப் பணி மையமாக, எல்லா அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தில் குவிந்து இருப்பதால் அரசுப் பணியாளர்கள் தங்களது வாழ்வுப் பணியாகத் தேர்ந்தெடுத்து, அரசுக்காக உழைக்கும் ஆசிரியர்கள் அரசுப் பணியாளர்களாவர்.

**சிறப்பு நிர்வாகிகள் (Grand Corps)**

பிரான்சு நிர்வாகத்தில் ஒவ்வொரு தனித்தனிப் பிரிவும் ஒவ்வொரு பணியில் கவனம் செலுத்தி, அப்பணிகளைச் செய்வதில் ஒவ்வொன்றும் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுத்தி வந்துள்ளன. இதனால் இவர்களுக்கிடையேயும், பணிகளுக்கிடையேயும் ஒருங்கிணைப்பு இல்லாமல் இருந்தது. சொல்லப்போனால், 1945-ஆம் ஆண்டு வரை பிரான்சு அரசுப்பணி என்பது அமைக்கப்படவில்லை, சிறப்புச் சட்டங்கள் ஆகியவற்றின் மூலம் அரசுப் பணியாளர்கள் செயல்பட்டனர். பொதுவிதிகள் என்பது எல்லா அரசுப் பணியாளர்களுக்குமென உருவாக்கப்படவில்லை. நியமனங்கள் அனைத்தும் பிரிவின் தன்மைக்கேற்ப தகுதிகளும், நியமன முறைகளும் அமைந்திருந்தன. நெப்போலியன் இந்த பிரிவுமுறைச் செயல்பாட்டை விரும்பியே போதும், அவற்றை ஒன்றாக்க இன்றைய அரசுப்பணி முறையைக் கொண்டு வர முயற்சித்தார். 1945-ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொது ஒழுங்கு முறைகள், விதிகள் ஆகியன உருவாக்கப்பட்டாலும், பழைய தனித்தனிச் செயல்பாட்டுக் கலாச்சாரம் மறையவில்லை. 1946-ஆம் ஆண்டு அரசுப் பணி இயக்ககம், அரசுப் பணி அமைப்பு, அரசுப் பணியாளர் ஒழுங்குவிதிகள், அரசுப் பணி ஒழுங்குவிதிகளுக்கு பிரதமர் ஒப்புதலும், நிதிதொடர்பான அரசுப் பணியாளர். ஒழுங்கு விதிகளுக்கு நிதியமைச்சர் ஒப்புதலும் தேவை என்பதெல்லாம் வரையறுத்து, அரசுப் பணியை முழுமையாக்கியது 1946-ஆம் ஆண்டுச் சட்டம். சிறப்பு நிர்வாகிகள் என்போர் அரசிலும் சமூகத்திலும் ஆதிக்கம் நிறைந்தவர்களாக இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் காரணம் யாதெனில், மக்களில் உயர்மட்ட, அந்தஸ்துள்ள பள்ளிகளில் படித்தவர்கள்தான் முதலில் சிறப்பு நிர்வாகிகளாக இருந்தனர். இரண்டாவது தேர்வு முறை மிகவும் கடினமானது. உண்மையிலேயே திறமையும், கடின உழைப்பும், அறிவும் இருந்தால்தான் சிறப்பு நிர்வாகிகளாக வரமுடியும். காலகட்டத்தில் சிறப்பு நிர்வாகிகள் தொழில்நுட்பம் நிறைந்த அறிவும் பெற்ற காரணத்தால் நிர்வாகத்தில் மூத்தோர் குழாமாக மாறினர். இவர்கள் அறிவிலும், கல்வியிலும் மூத்தோர் குழாமே தவிர, வெறுமனே சமூக மூத்தோர் குழாம் அல்ல. சுரங்க பற்றியப் பள்ளி (School of Mines) வரிகள் பற்றிய ஆய்வுப்பள்ளி போன்ற பள்ளிகளில் சென்று படித்து, அறிவுத்திறனை வளர்த்தவர்கள் இந்த சிறப்பு நிர்வாகிகள்.

1975-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தொழில் நுட்பப் பள்ளியும் (Ecole

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

8. பிரான்சின் சிறப்பு நிர்வாகிகள் பற்றி எழுது.

Polytechnique) 1945-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய நிர்வாகப்பள்ளி (National School of Admn) ஆகிய இரண்டும் தொழில்நுட்ப அறிவிற்கும், பொது நிர்வாக மேலாண்மைக்கும் வழிவகுத்தவை. இது மாதிரியே பல தொழில் நுட்ப கல்வி நிலையங்கள் இவர்களது அறிவை மேம்படுத்த உதவியுள்ளன. சிறப்பு நிர்வாகிகள் என்போர் அதிகமான திறமை கொண்டவர்களாக இருப்பதால், இவர்களைத் தனியார்துறை இழுக்க முயற்சிக்கின்றது. எனவே தனியார் துறையிலும் இவர்கள் செல்வா ந இருப்பதால், சிறப்பு நிர்வாகிகள் அவர்களை உருவாக்கிய அரசு நிறுவனங்கள், உயர்மட்ட தனியார் நிறுவனங்கள் ஆகியவை பிரெஞ்சு சமூகத்தில் உயர்வான மதிப்பைப் பெற்று விளங்குகின்றன. அனுபவம் வாய்ந்த, மூத்த வயதுடையோர் தான் உயர் மட்ட நிர்வாகப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பதில்லாமல், இளம வயதிலேயே அறிவு முதிர்ச்சி, பயிற்சி, நடைமுறை அனுபவம் பெறுவதால், இளம் வயதினர் உயர்பதவிகளில் அதிகமாக இருக்கின்றனர். தேசிய நிர்வாகப் பள்ளி (Ecole d' Administration) என்பது உயர்மட்டப் பணியாளர்களை உருவாக்கும் நிறுவனம். இது பணியாளர்களுக்கு 28 மாதப் பயிற்சி வழங்கி, பணிக்கு பணியாளர்களை பக்குவமாக்குகின்றது. ஒட்டு மொத்ததில் தொழில்நுட்ப, தொழில்நுட்பமில்லாப் பணிகள், திட்டமிடல், செயலாக்கப் பிரிவு என நான்கு பிரிவுகளாக பிரான்சு நாட்டின் அரசுப்பணி பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் தனித்தனியாகவும், கூட்டாகவும் பிரான்சு நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றன.

## 8.14 தொகுப்புரை

இவ்வலகில் பிரான்சு நாட்டின் சட்டமன்றம், சட்டமியற்றும் முறை, நிர்வாகச் சட்டம், நிர்வாக நீதிமன்றம் அதன் செயல்பாடுகள், உள்ளாட்சி அரசாங்கம் அரசியல் கட்சிகளின் பணிகள் ஆகியவற்றைப் பார்த்தோம்.

## 8.15 முக்கிய வார்த்தைகள்

காலிஸ்டு - கம்யூன் - அரசுக்குழு

## 8.16 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

| | | |
|---|---|---|
| கேள்வி எண் 1 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.4ல் அறிக |
| கேள்வி எண் 2 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.9ல் அறிக |
| கேள்வி எண் 3 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.10ல் அறிக |
| கேள்வி எண் 4 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.10.1ல் அறிக |
| கேள்வி எண் 5 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.13ல் அறிக |
| கேள்வி எண் 6 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.13ல் அறிக |
| கேள்வி எண் 7 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.13ல் அறிக |
| கேள்வி எண் 8 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 8.13ல் அறிக |

## 8.17 பார்வை நூல்கள்


1. Pickles, Dorothy, **The Fifth French Republic,** B.I., 1978.
2. F.F. Ridley, **The Study of Govt. George & Allan,** London, 1975.
3. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.
4. R.C. Macridis and R.E. Ward, **Modern Political Systems : Europe and Asia,** 2nd Edn. Englewood Clifs NJ, Prentice Hall, 1968.
5. R. Maddex, **Constitutions of the World**, 2nd edn., Washington DC and London, CQ Press, 2000.
6. F.A. Ogg and Zink, **Modern Foreign Governments,** New York, Macmillan, 1964.


## 8.18 மாதிரி வினாக்கள்

1. பிரான்சின் ஐந்தாவது குடியரசில் சட்ட மன்றத்துறையின் அமைப்பு, அதிகாரங்கள் பணிகள் ஆகியவற்றை விளக்கவும்.
2. ஆட்சித்துறை சட்டம் என்றால் என்ன? இது எவ்வாறு பிரான்சில் செயல்படுகின்றதென்பதை விளக்கவும்.
3. பிரான்சு நாட்டின் கடல் கடந்த கோட்டங்களின் அமைப்பு முறையை விவரிக்கவும்.
4. பிரான்சு நாட்டின் அரசாங்கத்தின் செயல்முறையில் அரசியல் கட்சிகளின் பங்கைக் கூர்ந்தாராய்க.
5. பிரான்சு உள்ளாட்சி அரசாங்கம் எங்ஙனம் அமைக்கப்பட்டுள்ளது என்பதனை விரிவாகக் கூறவும்.

## அலகு - 9

# சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பு - பண்புகள் - கூட்டாட்சி – சட்டமன்றம் - நீதித்துறை

### முன்னுரை

சுவிட்சர்லாந்து பல்வகை சிறப்புத்தன்மை கொண்ட நாடு. ஐரோப்பாவின் கோடைவாசஸ்தலம் என அழைக்கப்படும் சுவிட்சர்லாந்து அரசியலமைப்பு உலகிலுள்ள அரசியலமைப்புகளிலிருந்து வித்தியாசமான அரசியலமைப்பாகும். குழுமுறையிலான ஆட்சிமுறை என்று பெயர். இது பாராளுமன்ற, குடியரசுத் தலைவர் முறையிலிருந்து வேறுபட்டதாகும். சுவிட்சர்லாந்து நாட்டில் பழமொழி, இனம், தேசியம், கலாச்சாரம் இருப்பதால் அவை அனைத்தையும் பிரதிபலிக்கும் வகையில் கூட்டாட்சி முறை அரசாங்கம் உள்ளது. நேரடி மக்களாட்சி என்பது மற்றுமொரு சுவிட்சர்லாந்தின் சிறப்பு அம்சமாகும். கூட்டாட்சியில் உள்ள சட்டமன்றம், நீதித்துறை ஆகியவற்றைப் பற்றிப் பார்ப்போம். சுவிட்சர்லாந்தின் சட்டமன்றமும் சிறப்பம்சமானதுதான். ஏனெனில் நேரடி மக்களாட்சி நடைபெறுவதால், ஈரவையும் மக்கள் விருப்பத்திற்கேற்பதான் சட்டம் இயற்ற வேண்டுமே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணங்களுக்கேற்ப சட்டம் இயற்ற முடியாது. சட்டமன்ற உறுப்பினர்களின் சட்டம் மக்களினால் நிராகரிக்கப்பட்டால், சட்டமன்றமும் கலைக்கப்பட்டுவிடும். சுவிட்சர்லாந்தின் நீதித்துறையும் சிறப்பான ஒன்று.

### நோக்கங்கள்

அரசியலமைப்பின் சிறப்பம்சங்களை அறிதல்

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சி அம்சங்களைத் தெரிதல்

கூட்டாட்சிக்குழுவின் அமைப்பு மற்றும் அதிகாரங்களை அறிதல்

கூட்டாட்சி சட்டமன்றம் பற்றி அறிதல்

சுவிட்சர்லாந்தின் நீதித்துறையைப் புரிந்து கொள்ளல்

### வடிவமைப்பு

நாடும் மக்களும்

வேற்றுமையில் ஒற்றுமை

மக்களின் அரசியல் கலாச்சாரம்

சுவிஸ் கூட்டாட்சி

சுவிஸ் நாட்டில் மையமாக்கம்.

சுவிஸ் அரசியலமைப்பைத் திருத்தும் முறை

கூட்டாட்சிக் குழு

அதிகாரங்களும் பணிகளும்

சட்டமன்றத்துறை

மாநிலக்குழு

தேசியக்குழு

கூட்டாட்சி சட்டமன்றத்தின் அதிகாரங்கள்

நீதித்துறை

கூட்டாட்சித் தீர்ப்பாயமும் நீதிப்புனராய்வும்

> தன்னறிவு சோதனைக் கேள்வி
> 1. சுவிட்சர்லாந்து நாட்டின் சிறப்புத் தன்மையை எழுது.

### 9.1 நாடும், மக்களும்

சுவிட்சர்லாந்து, நானகு புறத்திலும் தரையால் சூழப்பட்ட ஒரு சிறிய ஐரோப்பிய நாடாகும். எனினும் அதனுடைய அரசியல் நிறுவனங்கள் உலகத்திலுள்ள முக்கியமான

அரசியலமைப்பு முறைமைகளில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. சமூக, பொருளாதார, கலாச்சார, சமய, மொழி வேற்றுமைகளைக் கொண்ட மக்களை ஒற்றுமைப்படுத்தி ஒரு நாட்டை உருவாக்கி அது வெற்றிகரமாக செயல்படுகிறது. மேலும், சுவிட்சர்லாந்து அதனுடைய வரலாற்று முழுவதும் ஒரு குடியரசு நாடாகத் திகழ்வதோடு நேரடி மக்களாட்சி முறைமையின் தாயகமாகவும் விளங்குகிறது.

ஐரோப்பா கண்டத்தின் மேற்குப் பகுதியில் இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளால் சூழப்பட்ட இச்சிறிய நாட்டின் நிலப்பரப்பு 15,900 சதுர மைல்களாகும். இதன் பூகோள அமைப்பை பார்க்கின், நாட்டின் பெரும்பகுதி மலைகளால், குறிப்பாக ஆல்பைன் (Alpines) குன்றுகளால், சூழப்பட்டுக் கிடக்கின்றது. நாட்டின் 60 சதவிகிதம் நிலப்பரப்பில் இம்மலைத்தொடர் பரந்து கிடக்கிறது. சுவிட்சர்லாந்தை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். ஜுரா (Jura) மலைப்பகுதகிளில் நாட்டில் 10 சதவிகிதம் நிலப்பரப்பையும், பீடபூமி (Plateau) கிட்டத்தட்ட 30 சதவிகிதம் நிலப்பரப்பையும், மீதியுள்ள 60 சதவிகிதம் நிலப்பரப்பை ஆல்ப்ஸ் மலைகளும் கொண்டுள்ளன.

தட்பவெப்ப நிலையிலும், பயிர் வளர்ச்சியிலும் நாட்டின் பல பாகங்களுக்கிடையே வேற்றுமை காணப்படுகிறது. நாட்டின் நிலப்பரப்பில் நான்கில் ஒரு பகுதி வனங்களைக் கொண்டது; நான்கில் ஒரு பகுதி உற்பத்தித் திறனற்றது. மலைப்பகுதிகளில் கால்நடை வளர்த்தல், பால் பண்ணை ஆகிய விவசாயத் தொழில்கள் மட்டும் தான் மேற்கொள்ளப்படுகின்றன. மற்ற பகுதிகளில் உணவுப்பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. விவசாயம் செய்யக்கூடிய இந்த மையப்பகுதி பல ஆறுகளினால் துண்டிக்கப்பட்டிருப்பதோடு, அங்கு தொழில் வளர்ச்சியின் காரணமாக மக்களின் ஏராளமான குடியேற்றப் பகுதிகள் தோன்றி அதன் பரப்பை சுருங்கச் செய்து கொண்டிருக்கின்றன. சுவிட்சர்லாந்து இயற்கை வளங்கள் அதிகம் இல்லாத ஒரு நாடாகும். ஆகையினால் அந்நாடு மூலப்பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை உபயோகப் பொருள்களாக மாற்றி ஏற்றுமதி செய்கின்றது. அந்நாட்டின் உள்நாட்டுப் பொருளாதாரம் இந்த ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டதாகும். இதன் விளைவாக சுவிட்சர்லாந்து ஒரு விரிவான தொழில் மயமான நாடாக விளங்குகிறது. அப்படித் தொழில் மயமாவதற்கு அதனுடைய வரம்பில்லா நீர் மின்சார உற்பத்தி வழி கோலுகிறது. சுவிட்சர்லாந்தினுடைய மிகப்பெரிய சொத்து அதனுடைய இயற்கை அழகாகும். இந்த இயற்கை அழகு சுற்றுலா ஒரு பெரும் தொழிலாக வளர்வதற்கு வழி கோலுகிறது. நாட்டின் பொருளாதாரத்தில் சுற்றுலாவுக்கு (Tourism) ஒரு பெரும் பங்குண்டு.

சுவிட்சர்லாந்து, மக்கள் அடர்த்தி அதிகமுள்ள ஒரு நாடாகும். 2000-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுவிட்சர்லாந்தின் மக்கள் தொகை 7.1 மில்லியன். அதன் மக்கள் தொகையின் அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு 152 பேர். சுவிஸ் மக்களின் வளர்ச்சி விகிதம் வெறும் 0.3 சதவிகிதம் ஆகும். தற்பொழுது மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 30 லட்சம் பேர் தொழிற்களிலும், பலதரப்பட்ட வேலைகளிலும் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 10 சதவிகிதத்தினர் சுயதொழில்களிலும், 8 சதவிகிதத்தினர் விவசாயத்திலும் 48 சதவிகிதத்தினர் தொழில் வணிகம் ஆகியவற்றிலும் மீதியுள்ள 34 சதவிகிதத்தினர் மருத்துவம், அரசாங்க சேவை போன்றவற்றிலும் ஈடுபட்டுள்ளனர்.

சுவிஸ் மக்கள் தொகை வளர்ச்சியில் ஒரு முக்கிய சிறப்புக் கூறு உள்

நாட்டு மக்கள் தொகையின் வளர்ச்சி விகிதம் அண்மைக்காலத்தில் வெகுவாகக் குறைந்து வரும் பொழுது, வெளிநாடுகளிலிருந்து சுவிட்சர்லாந்துக்கு வருவோர்களின் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருவதாகும். அப்படி குடியேறியவர்களின் எண்ணிக்கை 1970-ஆம் ஆண்டு 10 லட்சமாக இருந்தது. இது மொத்த மக்கள் தொகையில் 17 சதவிகிதம் ஆகும். சுவிட்சர்லாந்தின் மொத்த மக்கள் தொகையின் பெருக்கத்திற்கு இந்த குடியேற்றம் தான் முக்கிய காரணமாகும். நாளுக்கு நாள் பெருகி வரும் வெளிநாட்டவர்களின் குடியேற்றம் உள்நாட்டில் பல கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக வெளிநாட்டிலிருந்து குடியேறுபவர்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்க வேண்டுமெனக் கோரி 1970ஆம் ஆண்டு மக்கள் துவக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அம்முயற்சி மக்கள் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டது.

## 9.2 வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity)

இயற்கை எழில் கொஞ்சும் சுவிட்சர்லாந்தின் இன்னொரு சிறப்புக் கூறு அதன் மொழி சமய வேற்றுமைகள் ஆகும். மக்களில் 65% பேர் ஜெர்மன் மொழியையும், 18% பேர் பிரெஞ்சு மொழியையும், 9% இத்தாலிய மொழியையும், 1% மக்கள் ரோமனாஷ் (Romanasch), மொழியையும் பேசுகின்றனர். இந்நான்கு மொழிகளும் நாட்டின் தேசிய மொழிகளாகவும் (National Languages) முதல் மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாகவும் (Official Languages) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கூட்டாட்சித் தீர்ப்பாயத்திற்கு (Federal Tribunal) நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது இந்த மூன்று ஆட்சி மொழிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பு வற்புறுத்துகிறது.

மொழி வேற்றுமையைப் போன்று மக்களிடையே தீவிரமான சமய வேற்றுமையும் காணப்படுகிறது. சுவிஸ் மக்கள் கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றிய போதிலும், அவர்கள் பிராட்டஸ்டண்ட், கத்தோலிக்கர் என இரண்டாகப் பிரிந்து கிடக்கின்றனர். இவர்களைத் தவிர, ஒரு சிறு பகுதியினர் எந்த சமயத்தையும் பின்பற்றுவதில்லை. துவக்கத்தில் கத்தோலிக்க மக்களை விட பிராட்டஸ்டண்ட் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. ஆனால் வெளிநாட்டவர்களின் குடியேற்றத்தின் விளைவாக தற்பொழுது கத்தோலிக்க மக்களின் எண்ணிக்கை பிராட்டஸ்டண்ட்களை விட சற்று அதிகமாக ஆகிவிட்டது. மொத்த மக்கள் தொகையில் 49.4% பேர் கத்தோலிக்கர்களும், 47.4% பேர் பிராட்டஸ்டண்ட்களும், 2.9% பேர் பிற சமயத்தவர்களும் ஆவார்கள். அரசியலமைப்பு மக்கள் எல்லோருக்கும் சம உரிமையை வழங்கியுள்ளது. நாட்டில் கத்தோலிக்க சமய அமைப்புகள் அமைப்பதற்கு தடையாக இருந்த அரசியலமைப்பு விதிகளை 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்கள் விருப்ப வாக்கெடுப்பு அரசியலமைப்பிலிருந்து நீக்கிவிட்டதோடு மக்கள் முழு சமய உரிமையைப் பெற்று விளங்குகின்றனர்.

இவ்வளவு வேற்றுமைகளுக்கிடையேயும் சுவிஸ் மக்கள் வியக்கத்தகு வண்ணம் அவர்களிடையே ஒற்றுமையைப் பேணிவளர்த்துள்ளனர். அதுதான் அவர்களின் தனிச்சிறப்பு. சுவிட்சர்லாந்து ஒரு நடுநிலை நாடு. ஆகையினால் அது ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உறுப்பு நாடாக இதுவரை சேரவில்லை.

> தன்னறிவு சோதனைக் கேள்வி
> 2. சுவிஸ் மக்களின் அரசியல் கலாச்சாரத்தை விவரி.

## 9.3 மக்களின் அரசியல் கலாச்சாரம்

சுவிஸ் மக்கள் சுறுசுறுப்பில்லா, பழமைப் பற்றுடைய, ஆக்கப்பூர்வ செயல்திறனில்லாதவர்கள் ஆவார்கள் என சில அறிஞர்கள் அவர்களைக் குறை

கூறுவதுண்டு. புதுமைக் கருத்திற்கும், சிந்தனைக்கும் சுவிட்சர்லாந்தில் இடமில்லை எனக் கருதி, புகழ்பெற்ற கட்டிடக்கலை நிபுணர் லாகார்புயுசியர் (Le Carbusier) நாட்டை விட்டு வெளியேறியதை இதற்குச் சான்றாக அந்த அறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். ஆனால் இந்த குற்றஞ்சாட்டு ஆதாரமற்றவையாகும். நாட்டின் அந்தஸ்து, பாதுகாப்பு ஒற்றுமை ஆகியவற்றிற்கு ஆபத்து ஏற்படும்பொழுது சுவிஸ் மக்கள் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் ஒன்றாகத் திரள்வது அம்மக்களின் ஒரு தனிச்சிறப்பாகும்.

சுவிஸ் மக்களின் மிகப்பெரிய சிறப்பியல்பு அவர்களுடைய தேசியப் பண்பு (National Character) ஆகும். நிதானம் (Sobriety), பொறுமை (Tolerance), தன்னடக்கம் (Modesty), அவர்கள் வாழும் நிலப்பகுதியின் பால் பற்று (Local Patriotism) ஆகியவைகள் அத்தேசியப் பண்பின் அம்சங்கள் ஆகும். இவ்வம்சங்கள் தான் அவர்களுடைய அரசியல் கலாச்சாரத்தின் முக்கிய கூறுகள். நிதானம் என்பது நேர்மை, சிக்கனம், ஒழுங்கு, சுயதேவையைப் பூர்த்தி செய்வதில் நாட்டம் போன்ற அவர்களுடைய குணவியலைக் குறிக்கிறது. விடா உறுதியுடைய சுவிஸ் மக்கள் போலிப் பகட்டிலும், ஆடம்பரத்திலும் ஈடுபடுவதில்லை. வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்கள் நேர்மையாக உழைக்கின்றனர். வெற்றியும் செல்வமும் ஒரு மனிதனுடைய சிறப்பின் அடையாளச் சின்னங்களாகும் என்ற கால்வினுடைய (Calvin) கோட்பாட்டில் சுவிஸ் மக்களுக்கு அயராத நம்பிக்கையுண்டு. மேலும் சுவிஸ் கூட்டாட்சியில் மைய அரசாங்கம் வலுவானதாக இருப்பினும் மாநிலங்களின் சுயாட்சித் (Autonomy) தன்மை முழுமையாக மதிக்கப்படுகின்றன. குறு நிலப்பகுதியான கம்யூன்களின் (Communes) சுயாட்சித் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அரசியல் கலாச்சாரம், சுவிட்சர்லாந்து மக்களிடம் நிலவுவதினால் தான் அவர்களிடையே சமய, மொழி, கலாச்சார, அரசியல் பிரச்சனைகளும் சச்சரவுகளும் காணப்படுவதில்லை.

## 9.4 சுவிஸ் கூட்டாட்சி

சுவிட்சர்லாந்து ஒரு கூட்டாட்சி அமைப்புள்ள நாடாகும். முன்னர் அது ஒரு ஐக்கியக் கூட்டமைப்பு அல்லது கூட்டமைவு (Confederation) என அழைக்கப்பட்டது. ஆனால் தற்போது அது ஒரு கூட்டாட்சி நாடாகத் திகழ்கின்றது. ஐக்கியக் கூட்டமைப்பில் மாநிலங்களிடையே இணைப்பு இறுக்கமாக இருப்பதில்லை. மத்திய அரசாங்கம் மிகவும் வலிமை குன்றிய நிலையில், குறைந்த அளவே அதிகாரங்களைப் பெற்றதாகத் திகழும் கூட்டாட்சி அமைப்பில் இறுக்கமான இணைப்பு இருப்பதுடன் மத்திய அரசாங்கம் ஓரளவு வலிமை பெற்று விளங்கும். ஆரம்ப காலத்தில் சுவிட்சர்லாந்து ஒரு ஐக்கியக் கூட்டமைப்பு போல இருந்தாலும் தற்போது ஓர் கூட்டாட்சி அமைப்பாகவே திகழ்கிறது. கூட்டாட்சி அமைப்பிற்கான பல சிறப்பியல்புகள் அதனிடம் காணப்படுகின்றன.

### கூட்டாட்சிப் பண்புகள்

கூட்டாட்சி என்பது சுதந்திரமான அரசுகளின் தன்னிச்சையான இணைவு எனச் சொல்லப்படுகிறது அமெரிக்க சுதந்திரப் போரின் முடிவில் சுதந்திரம் பெற்ற மாநிலங்கள் இணைந்து அங்கு கூட்டாட்சியை உண்டாக்கின. சுவிஸ் நாட்டின் குறுநிலப் பகுதிகள் (Cantons) 1848ஆம் ஆண்டில் இணைந்து கூட்டாட்சியை உருவாக்கின. ஒரு சிறந்த கூட்டாட்சி அமைப்பில் எழுதப்பட்ட, நெகிழா அரசியலமைப்பு இருத்தல் அத்தியாவசியமான பண்பு ஆகும். அமெரிக்க அரசியலமைப்பைப் போல சுவிஸ் அரசியல் அமைப்பும் எழுதப்பட்ட, நெகிழா அரசியலமைப்பாகும். அரசியலமைப்புத்

தன்னறிவு சோதனைக் கேள்வி
3. சுவிஸ் கூட்டாட்சியின் தன்மைகளை விவரி.

திருத்தங்களை எளிதில் மேற்கொள்ள முடியாது. கூட்டாட்சி அமைப்பில் இருவகையான அரசாங்கங்கள் உள்ளன. சுவிஸ் நாட்டிலும் இத்தகைய அரசாங்கங்கள் உண்டு. கூட்டாட்சி அரசாங்கம் என தேசிய அளவில் ஒரு அரசாங்கமும், குறுநில அரசாங்கங்கள் எனப் பல அரசாங்கங்களும் உள்ளன. சுவிஸ் கூட்டாட்சி மொத்தம் 23 குறுநில பகுதிகளைக் கொண்டது. சில வரலாற்றுக் காரணங்களால் அண்டல்வால்டன், பேசல் அபென்செல் ஆகிய குறு நிலப்பகுதிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டன. எனவே சுவிஸ் கூட்டாட்சி அமைப்பில் இருபது முழுமையான குறுநிலங்களும் (full cantons), ஆறு அரை அளவு குறுநிலங்களும் (half cantons) உள்ளது. கூட்டாட்சி அமைப்பின் முக்கிய அம்சம் அதிகாரப் பங்கீடு ஆகும். அதன்படி அதிகாரங்கள் தேசிய அரசாங்கத்திற்கும் கான்டன் அரசாங்கங்களுக்குமிடையே பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அதிகாரப் பங்கீடு செய்யும்போது கான்டன்களின் சுயாட்சிக்கு வகை செய்தல் சிறந்த கூட்டாட்சியின் தன்மையாகும். சுவிஸ் அரசியலமைப்பு இவ்வகைக் கூட்டாட்சிக்கு வழி செய்கிறது. அதிகாரப் பங்கீடு குறுநிலப்பகுதிகட்கு சுயாட்சி வழங்குகின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசியலமைப்பினைப் போன்று சுவிஸ் அரசியலமைப்பிலும் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. போர்ப்பிரகடனம், அமைதி, அறிவிப்பு, வெளியுறவு, நாணய வெளியீடு, தபால் தந்தித்துறை, இரயில் போக்குவரத்து, உள்நாட்டு வெளிநாட்டு விமானப் போக்குவரத்து, இராணுவம், ஒழுங்கு பராமரிப்பு போன்றவை கூட்டாட்சி அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களாகும். இவை தவிர வேறுசில அதிகாரங்களையும் கூட்டாட்சி அரசாங்கம் குறு நிலப்பகுதிகளோடு பகிர்ந்து கொள்கின்றது. தொழிற்சாலைகள், காப்பீடு (Insurance), பெருவழித்துறை (Highways), அச்சுக்கட்டுப்பாடு, கல்வி போன்றவை இப்பட்டியலில் அடங்கும். இத்தகைய அதிகாரங்களில் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் முரணான சட்டங்களை இயற்றினால், மத்திய அரசாங்கத்தின் சட்டமே செல்லும். குறு நிலப்பகுதிகள் தங்களுக்கெனத் தனியே அரசியலமைப்புகள் வைத்துக் கொண்டுள்ளன. அத்தகைய குறுநில அரசியலமைப்புகள் நாட்டின் குடியரசுத் தன்மையைப் பாதிக்காத அளவிலும் தேசிய அரசியலமைப்பிற்கு எதிராக இல்லாமலும் இருக்க வேண்டும். சுவிஸ் நாட்டு கூட்டாட்சி சட்ட மன்றத்தின் மேலவையான மாநிலங்களவையில் குறுநிலப்பகுதிகட்குச் சமப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதுவும் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஒரு நல்ல பண்பாகும். சுவிஸ் குறு நிலப்பகுதிகள் அமெரிக்க மாநிலங்கள் பெற்றுள்ளதை விடச் சற்று அதிகமான உரிமைகளைப் பெற்றுள்ளன. சில விஷயங்களில் அவை வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ள உரிமையுண்டு. பொதுச் சொத்தை நிர்வகித்தல், எல்லைப் பிரச்சனை, காவலர் பணி போன்ற விஷயங்களில் இவ்வுரிமையுண்டு. குறுநிலப் பகுதிகள் முந்நூறுக்கும் அதிகமில்லா எண்ணிக்கையுள்ள வீரர்களைக் கொண்ட இராணுவத்தை வைத்துக் கொள்ளவும் உரிமை பெற்றுள்ளன. கூட்டாட்சி அரசாங்கம் தனது சட்டங்களை நடைமுறைப்படுத்த குறுநிலப் பகுதிகளையே சார்ந்துள்ளது. குறுநிலப் பகுதிகளின் அரசாங்க அலுவலர்களே கூட்டாட்சி சட்டங்களையும் அமுல்படுத்துகின்றார்கள். இவ்வாறு சுவிஸ் அரசியலமைப்பு பல கூட்டாட்சிப் பண்புகளைப் பெற்று ஒரு சிறந்த கூட்டாட்சியாகத் திகழ்கிறது.

## 9.5 சுவிஸ் நாட்டில் மையமாக்கம்

பொதுவாக எல்லா கூட்டாட்சி நாடுகளிலும் அதிகார மையமாக்கம் என்பது

நடைமுறையிலுள்ளது. அரசியலமைப்பு எப்படி இருந்தாலும் பல சமுதாய, பொருளாதார, அரசியல் மாற்றங்களால் மத்திய அரசாங்கத்தின் கரங்கள் வலுப்படும் நிலை ஏறத்தாழ உலகின் அனைத்துக் கூட்டாட்சிகளிலும் காணப்படுகிறது. சுவிஸ் கூட்டாட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல. அங்கும் இத்தகைய மையமாக்கம் மெதுவாக நடந்து வருகிறது எனலாம். அரசியலமைப்பின் 16வது விதிப்படி எந்தக் குறுநிலப் பகுதியிலாவது அமைதி குலையும் நிலையைச் சரிசெய்து அமைதியைக் காக்கக் கூட்டாட்சி அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையையும் எடுக்கலாம். இந்த விதி மத்திய அரசாங்கத்தின் கரங்களை வலுப்படுத்துகிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம் குறுநிலங்களின் விவகாரங்களில் தலையிடுகின்ற போக்கு வளர்ந்துள்ளது. மேலும், மத்திய அரசாங்கம் குறு நிலங்கட்கு வழங்குகின்ற மானியங்களைக் குறைக்கலாம் அல்லது நிறுத்திவிடலாம். சுவிஸ் நீதித்துறை குறுநிலப்பகுதிகளின் சட்டங்கள் மீது நீதிப் புனராய்வு அதிகாரம் பெற்றுள்ளது. அதன் பயனாகக் குறுநிலங்களின் சட்டங்களை அது செல்லாது என அறிவிக்க முடியும். ஆனால் அத்தகைய நீதிப்புனராய்வு அதிகாரம் கூட்டாட்சிச் சட்டங்களின் மீது இல்லை. கூட்டாட்சிச் சட்டமன்றம் இயற்றுகின்ற சட்டங்களை நீதிமன்றம் செல்லாது என அறிவிக்க முடியாது. இத்தகைய அம்சங்களை நோக்குங்கால் குறுநிலப்பகுதிகளின் சுயாட்சி ஏட்டளவில் தானேயன்றி நடைமுறையில் அல்ல என்ற கருத்தினைச் சில சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். இத்தகைய மையமாக்கம், கூட்டாட்சித் தன்மையைப் பாதிக்கிறது எனலாம்.

அமெரிக்கக் கூட்டாட்சி அமைப்பில் உள்ள பல அம்சங்கள் சுவிஸ் கூட்டாட்சி அமைப்பில் காணப்படுகின்றன. அமெரிக்க மாநிலங்கள் பெறாத சில உரிமைகளைக் கூட சுவிஸ் குறுநிலப் பகுதிகள் பெற்றுள்ளன. அதிகார மையமாக்கம் என்ற அண்மைக் காலப்போக்கின் காரணமாக ஏட்டளவில் சொல்லப்படும் உரிமைகள் நடைமுறையில் பாதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஓரளவு மையமாக்கம் இருப்பது உண்மை என்றாலும் அரசு சுவிஸ் அரசியலமைப்பின் கூட்டாட்சித் தன்மையை சந்தேகிக்கின்ற அளவு இல்லை எனலாம். சுவிஸ் நாட்டின் நேரடி மக்களாட்சி வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சட்டங்கள், அரசியல் அமைப்புத் திருத்தங்கள் ஆகியவை நிறைவேற்றப்படும் ஒவ்வொரு நிலையிலும் மக்கள் கருத்துக்களைத் தெரிவித்து அவற்றை நடைமுறைப்படுத்தவும் வாய்ப்புக்கள் உள்ளன. இந்நிலையில் சுவிஸ் நாட்டின் குறுநிலப்பகுதிகளின் சுயாட்சி மறைந்துவிட்டது எனச் சொல்ல முடியாது. காலத்தால் ஏற்படும் பல மாற்றங்கட்கு ஏற்ப கூட்டாட்சி அமைப்பில் சில மாறுதல்கள் வரலாம்.

## 9,6 சுவிஸ் அரசியலமைப்பைத் திருத்தும் முறை

ஒவ்வொரு எழுதப்பட்ட அரசியல் அமைப்பும் அதைத் திருத்துவதற்கான வழிமுறையையும் கொண்டிருக்கும். அரசியலமைப்பு என்றும் திருத்தமுறை சிறப்பானதாகவும், கடினமானதாகவும் இருந்தால் அவ்வரசியலமைப்பு நெகிழா அரசியலமைப்பு என்றும் அழைக்கப்படுகின்றன. ஒரு சிறந்த கூட்டாட்சி நெகிழா அரசியலமைப்பைப் பெற்றிருத்தல் அவசியம் எனக் கருதப்படுகிறது. சுவிஸ் கூட்டாட்சியின் அரசியலமைப்பு நெகிழா அரசியலமைப்பாகும். அதன் திருத்த முறை மிகவும் கடினமானதாகும். சுவிஸ் அரசியலமைப்புத் திருத்தம் இருவகைப்படுகிறது. அரசியலமைப்பின் ஒரு விதியை அல்லது பகுதியைத் திருத்தம் செய்வது பகுதி மாற்றம் (Partial Revision) என்றும், அரசியல் அமைப்பு முழுவதையுமே மாற்றுவது என்பது முழு மாற்றம் (Total Revision) என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. இந்த இரு

வகையான மாற்றங்களையும் குடியொப்பம் (Referendum), துவக்கவுரிமை (Initiative) என்ற இரண்டு வழி முறைகளில் செய்யலாம்.

**சட்டமன்றத்தின் மூலம் அரசியலமைப்பு மாற்றம்**

அரசியலமைப்பின் பகுதி மாற்றமோ அல்லது முழுமாற்றமோ கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் துவங்கலாம். அத்தகைய மாற்றத்தைக் கொண்டுவரும் திருத்த சட்டமுன்வரைவு கூட்டாட்சிச் சட்ட மன்றத்தின் இரு சபைகளில் ஏதேனும் ஒன்றில் அறிமுகப்படுத்தப்படலாம். அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் சட்டமுன்வரைவு இரு அவைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது மக்களின் ஒப்புதலுக்காக குடியொப்பத்திற்கு விடப்படுகிறது. அவ்வாறு வாக்கெடுப்பிற்கு விடபபடும் பொழுது பெரும்பான்மையான மக்களும் பெரும்பான்மையான குறுநிலப் பகுதிகளும் அச்சட்டமுன்வரைவிற்கு ஆதரவாக வாக்களித்தால் அத்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வரும்.

கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் கருத்து வேறுபாடு வரலாம். ஒரு அவை ஏற்றுக்கொண்டு மற்றொரு அவை திருத்த சட்டமுன்வரைவை நிராகரிக்கலாம். அத்தகைய நிலை வந்தால் மக்களின் கருத்து அறியப்படுகிறது. அந்தத் திருத்த சட்டமுன்வரைவு தேவையா அல்லது தேவையற்றதா என்ற கேள்வி மக்கள் முன் வைக்கப்பட்டு மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. பெரும்பான்மையான மக்கள் தேவையில்லை என்று வாக்களித்தால் சட்டமுன்வரைவு கைவிடப்படும். பெரும்பான்மையான மக்கள் திருத்த சட்டமுன்வரைவு தேவை என வாக்களித்தால் கூட்டாட்சிச் சட்ட மன்றம் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடக்கும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டாட்சிச் சட்ட மன்றத்தின் இரண்டு அவைகளும் அரசியலமைப்புத் திருத்த சட்டமுன் வரைவை மீண்டும் விவாதிக்கின்றன. நிச்சயம் அவை அச்சட்டமுன்வரவை ஏற்றுக்கொள்ளும். ஏனெனில் மக்கள் வாக்கெடுப்பும், தேர்தலும், அதை உறுதிப்படுத்தி விடுகின்றன. அவ்வாறு நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வரைவு மக்களின் ஒப்புதலுக்காக மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. பெரும்பான்மையான மக்களும் பெரும்பான்மையான குறுநிலப்பகுதிகளும் ஏற்றுக் கொண்டால் திருத்தம் நடைமுறைக்கு வரும்.

**மக்கள் துவக்கம் மூலம் அரசியலமைப்பு மாற்றம்**

மக்கள் துவக்கவுரிமை மூலமாகவும் அரசியல் அமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படலாம். துவக்கவுரிமை என்பது மக்கள் தாங்களே அரசியல் அமைப்புத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காகப் பெற்றுள்ள உரிமை ஆகும். சுவிஸ் அரசியலமைப்பு துவக்கவுரிமைக்கு வகை செய்கிறது. இந்த உரிமையைப் பயன்படுத்தி அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரும்போது இரண்டு வழி முறைகள் பின்பற்றப்படுகின்றன. பகுதி மாற்றத்திற்கு ஒரு முறையும் முழு மாற்றத்திற்கு ஒரு முறையும் உள்ளன. அரசியலமைப்பின் முழு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையை குறைந்த பட்சம் 50,000 பேர் எழுப்பினால் அது பரிசீலிக்கப்படும். அத்தகைய முழுமாற்றம் தேவையா என்ற கேள்வி மக்களிடம் மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படும். பெரும்பான்மையானவர்கள் தேவை இல்லை என வாக்களித்தால் முழுமாற்றத்திற்கான கோரிக்கை நிராகரிக்கப்படும். பெரும்பான்மையானவர்கள் அரசியலமைப்பில் முழு மாற்றம் தேவை என வாக்களித்தால் கூட்டாட்சிச் சட்டமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்படும். புதிய கூட்டாட்சிச் சட்டமன்றம் கோரிக்கையாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் புதிய அரசியலமைப்பு

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
> 4. மக்கள் துவக்கம் என்றால் என்ன?

உருவாக்கப்படும். அந்த புதிய அரசியலமைப்பு மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படும். அது பெரும்பான்மை மக்களாலும், பெரும்பான்மை குறுநிலப் பகுதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நடைமுறைக்கு வரும்.

அரசியலமைப்பில் பகுதி மாற்றத்திற்கான துவக்க வேண்டுகோளை மக்கள் இரு விதமாக அளிக்கலாம். தெளிவாக எழுதப்பட்டு ஒரு சட்டமுன்வரைவைப் போல் அளிக்கப்படலாம். அவ்வாறு அது அமைக்கப்பட்டால் அதை வடிக்கப்பட்டது (Formulated) எனலாம். தெளிவாக சட்டமுன்வரைவு அமைப்பில் எழுதப்படாமல் பொதுவான கருத்துக்களை மட்டும் சொல்லும் வகையில் அமையலாம். அவ்வாறு அமைந்தால் அதை வடிக்கப்படாதது (Unformulated) எனலாம். வடிக்கப்படாத நிலையில் பகுதி மாற்ற வேண்டுகோளை 50,000 பேர் கொடுத்தால் அதைக் கூட்டாட்சி ஏற்றுக் கொண்டால் அது அரசியலமைப்புத் திருத்த பொதுக் கருத்தை கூட்டாட்சிச் சட்டமன்றம் ஏற்றுக் கொண்டால் அது அரசியலமைப்புத் திருத்த சட்டமுன்வரைவை ஏற்படுத்துகிறது. பின்னர் அச்சட்டமுன்வரைவு மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. பெரும்பான்மையான மக்களும், பெரும்பான்மையான குறுநிலப் பகுதிகளும் ஏற்றுக்கொண்டால் அத்திருத்தம் நடைமுறைக்கு வரும். கோரிக்கையில் சொல்லப்பட்ட கருத்தைக் கூட்டாட்சிச் சட்டமன்றம் ஏற்காமல் விட்டுவிடலாம். அவ்வாறு அது ஏற்காமல் விட்டு விட்டால் அத்தகைய கருத்தின் அடிப்படையில் திருத்தம் தேவையா என்ற கேள்வி மக்களிடம் மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. இந்நிலையில் குறுநிலப் பகுதிகளைக் கேட்பதில்லை. பெரும்பான்மையான மக்கள் தேவை என வாக்களித்தால் கூட்டாட்சிச் சட்டமன்றம் கோரிக்கையின் கருத்துக்களின் அடிப்படையில் திருத்த சட்டமுன்வரைவை உருவாக்கிறது. ஏற்கனவே அது எதிராக முடிவு செய்திருந்த போதிலும் மக்களின் விருப்பத்திற்கேற்ப திருத்த சட்ட முன்வரைவை ஏற்படுத்துகிறது. பின்னர் அச் சட்டமுன்வரைவு மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு பெரும்பான்மையான மக்களாலும், பெரும்பான்மையான குறுநிலப் பகுதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நடை முறைக்கு வரும்.

குறைந்த பட்சம் 50,000 பேர்களால் கையொப்பமிடப்பட்ட, வடிக்கப்பட்ட கோரிக்கையை கூட்டாட்சிச் சட்டமன்றம் பரிசீலிக்கும் - அந்த சட்டமுன்வரைவு கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் குடியொப்பத்திற்கு விடப்பட்டு பெரும்பான்மையான மக்களாலும், பெரும்பான்மை குறுநிலப்பகுதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் நடைமுறைக்கு வரும். கூட்டாட்சிச் சட்டமன்றம் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இருவழிகளில் செயல்படலாம். மக்களால் கொடுக்கப்பட்ட சட்டமுன்வரைவை நிராகரிக்குமாறு கருத்துத் தெரிவித்து மக்கள் வாக்கெடுப்பிற்கும், குறுநிலப்பகுதிகளுக்கு அனுப்பலாம் அல்லது மக்களால் அளிக்கப்பட்ட சட்டமுன்வரைவிற்குப் பதிலாக வேறொரு சட்டமுன்வரைவை வடித்து அதனையும் உடன்சேர்த்து மக்கள் வாக்கெடுப்பிற்கு, குறுநிலப் பகுதிகட்கும் அனுப்பி வைக்கலாம். இவ்விரண்டு வழிகளிலும் பெரும்பான்மையான மக்களும் பெரும்பான்மையான குறுநிலப் பகுதிகளும் செய்யும் முடிவு நடைமுறை வரும்.

மேற்கண்டவாறு சுவிஸ் நாட்டின் அரசியலமைப்பு பகுதியாகவோ முழுவதுமாகவோ, சட்டமன்றத்தினாலோ அல்லது மக்கள் மூலமாகவோ திருத்தி அமைக்கப் பெறலாம். எந்த வகையிலான அரசியலமைப்புத் திருத்தமாக இருந்தாலும் அது மக்களின் ஒப்புதலின்றி நிறைவேற முடியாது என்பது தெளிவு. அமெரிக்க

அரசியலமைப்புத் திருத்த முறையினைக் காட்டிலும் சுவிஸ் அரசியலமைப்புத் திருத்த முறை கடினமானதாகும். 1874 இருந்து இதுவரை இரண்டு முறை தான் அரசியலமைப்பின் முழு மாற்றத்திற்கான கோரிக்கைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. கொண்டுவரப்பட்டு, அவற்றில் சில ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. சட்டமன்றத்தின் மூலமாகவும் அரசியலமைப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில அரசியலமைப்புத் திருத்தங்கள் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை அதிகப்படுத்தியுள்ளன எனச் சொல்லப்படுகிறது. சுவிஸ் நாட்டில் அரசியலமைப்புத் திருத்தங்களை மக்களே கொண்டுவரத் துவக்கவுரிமை உள்ளது. ஆனால் சாதாரணகச் சட்டங்களைத் துவக்க உரிமை மூலம் கொண்டு வர முடியாது. எனவே சாதாரணச் சட்டங்களாக வந்திருக்க வேண்டிய சில விஷயங்கள் கூட அரசியலமைப்புத் திருத்தங்கள் வடிவில் வந்துள்ளன. சுவிஸ் நீதித்துறைக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் முழுமையாக இல்லாத காரணத்தால் அரசியலமைப்புத் திருத்தங்கள் மட்டுமே அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. சுவிட்சர்லாந்து மிகக் கடினமான திருத்த முறையைக் கொண்டிருந்த போதும் தேவையான அளவு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றே சொல்லலாம்.

## 9.7 கூட்டாட்சிக்குழு (Federal Council) :

**அமைப்பும் நிலைமையும் :**

சுவிட்சர்லாந்தின் நிர்வாக அதிகாரமனைத்தும் ஏழு அங்கத்தினரடங்கிய கூட்டாட்சிக்குழுவிடம் உள்ளது. இது ஒரு பன்மை ஆட்சித்துறையாகும். சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் ஜனாதிபதி முறையிலான ஆட்சித்துறை, பாராளுமன்ற முறையிலான ஆட்சித்துறை ஆகியவற்றின் நிறைகளை ஒருங்கிணைத்து இவ்விரண்டின் குறைகளைத் தள்ளிவிட்டு இவற்றிற்கு மாறான ஆட்சித்துறை ஒன்றை உருவாக்கினார். சுவிட்சர்லாந்தின் ஆட்சித்துறையை பிரைஸ் பிரபு பின்வருமாறு விளக்குகின்றார். “வேறெந்தக் குடியரசிலும் ஆட்சித்துறை அதிகாரம் ஒருவரிடமின்றி ஒரு குழுவிற்கு அளிக்கப்படவில்லை. வேறெந்த நாட்டிலும் ஆட்சித்துறை கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு காணப்படவில்லை. இக்கூட்டாட்சிக்குழு பிரிட்டனில் காணப்படுவது போன்ற அமைச்சர் குழுவல்ல. ஏனெனில் இது கட்சிமன்றத்திற்கு தலைமை தாங்கவுமில்லை. சட்டமன்றத்தால் அகற்றப்படக் கூடியது மல்ல. அமெரிக்க ஆட்சித்துறையைப் போன்று சட்டமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட்படாததாகவும் இது விளங்கவில்லை. மேற்கூறிய இருவகைகளின் சில சிறப்புப் பண்புகள் அக்கூட்டாட்சிக் குழுவிற்கு உண்டெனினும் கட்சி அரசிலுக்கு அப்பாற்பட்டது என்ற காரணத்தால் இக்குழு அவற்றினின்று மாறுபடுகின்றது. இது கட்சிப் பணி புரியத் தேர்ந்தெடுககப்பட்டதல்ல. இக்குழு கட்சிக் கொள்கையை நிர்ணயிப்பதில்லை. கட்சி சாயல் அறவே இக்குழுவிற்கில்லை எனக் கூறவும் முடியாது.”

கூட்டாட்சிக்குழுவின் ஏழு அங்கத்தினர் தேர்தல் நான்காண்டுகட்கொருமுறை டிசம்பர் மாதத்தில் நடைபெறுகின்றது. பாராளுமன்றத்தின் இரு அவைகளின் முதல் இணைப்புக் கூட்டத்தில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இக்குழுவில் தற்காலிகமாக எழும் காலியடங்கள் இதே பாணியில் நிரப்பப்படுகின்றது. இவர்கள் பாராளுமன்றத்தின் கீழவையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கத் தகுதி படைத்தவர். கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்களில் இருவர் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடாது. நெருங்கிய உறவினர்களும், விவாகத்தில் ஏற்படும் உறவினர்களும் ஒரே வேளையில் இக்குழுவின் அங்கத்தினராக இருத்தல் கூடாது. மரபின் அடிப்படையில் மிகப்பெரிய மாநிலங்களான

ஜூரிக்கும் (Zurich), பெர்னும் (Berne) ஒவ்வொரு அங்கத்தினரை இக்குழுவில் கொண்டுள்ளன. மீதமுள்ள ஐந்து இடங்களும் பிற மாநிலங்களால் நிரப்பப்படுகின்றன. ஒரு அங்கத்தினர் எத்தனை முறை வேண்டுமென்றாலும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஒருவர் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்தான் அங்கத்தினராக இருக்க முடியமென்று நியதி கிடையாது. பதினைந்திலிருந்து முப்பது வருடங்கள் வரை இக்குழுவின் அங்கத்தினராக இருந்தோரும் உண்டு. சாதாரணமாக இக்குழுவின் அங்கத்தினர்கள் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்தினின்று தான் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பு கூறவில்லை. பாராளுமன்றத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டாடட்சிக் குழுவின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்கள் இங்கிலாந்தில் நடப்பதுபோல் பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மைக் கட்சியினின்று தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. கட்சி சார்புடையதல்ல இக்கூட்டாட்சிக்குழு. இக்கூட்டாட்சிக் குழுவினர் நான்கு அரசியல் கட்சிகளினின்று தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நிர்வாகத்திறன், அறிவாற்றல், நல்லொழுக்கம், சாதுரியம் போன்றவற்றின் அடிப்படையில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கூட்டாட்சிக் குழுவினரைத் தேர்ந்தெடுக்கும் பொழுது மொழிகட்கும், நாட்டின் பகுதிகட்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது. இதனால் சிறுபான்மையோரது நலன்களும் காக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்களில் ஒருவர் தலைவராகவம் மற்றொருவர் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஓர் ஆண்டு துணைத் தலைவராக இருப்பவர் அடுத்த ஆண்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். எவரும் இரு ஆண்டுகள் தொடர்ந்து தலைவராகவோ அல்லது துணைத் தலைவராகவோ பணியாற்ற முடியாது.

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சித் தலைவர், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், நாட்டின் பிரதிநிதியாக இவர் செயல்படுகிறார். கூட்டாட்சிக் குழுவின் அலுவல்களை இவர் நடத்தி அதன் பணிகளை மேற்பார்வை செய்கின்றார். நெருக்கடி நேரத்தில் குழுவின் சார்பாக இவர் செயல்புரியலாம். குழுவினர் வாக்கெடுப்பில் சமநிலை கண்டால் இவர் இரண்டாவது வாக்கைப் பயன்படுத்தலாம். சட்டங்களுக்கு மறுப்பாணை தெரிவிக்க இவருக்கு அதிகாரம் கிடையாது. குழுவின் இதர அங்கத்தினர்களைப் போல் இவரும் நிர்வாகத் துறையொன்றின் தலைவராவார். இவருக்கு விசேடச் சலுகைகளும், அதிகாரங்களும் கிடையாது. சுவிட்சர்லாந்தின் தலைவர் என்பவர் விசேட முக்கியத்துவம் ஏதுமில்லாத தலைவர். ஆயினும் இத்தலைவர் பதவியின் மிக்க செல்வாக்கும் மதிப்பும் அரசியல் வளர்ச்சிக்குச் சாதகமானவரும் ஆவர்.

கூட்டாட்சிக்குழு என்பது சுவிட்சர்லாந்தின் அரசாங்கத்தின் ஒரு தனியான பிரிவென்றோ, இணைக்கும் பிரிவென்றோ எண்ண முடியாது. பாராளுமன்றத்தின் சார்நிலை நிறுவனமாக இது செயல்படுகின்றது. கூட்டாட்சிக் குழுவிலுள்ள ஏழு அங்கத்தினருக்கு இணையான ஏழுதுறைகளால் நிர்வாகம் நடத்தப்படுகின்றது. அயல்நாட்டு விவகாரத்துறை, உள்நாட்டு விவகாரத்துறை, நீதித்துறையும் காவல் துறையும், படைத்துறை, நிதித்துறை, வேளாண்மை, தொழிற்சாலைத்துறை, போக்குவரத்துச் செய்தித் தொடர்பு, மின்சக்தித்துறை போன்றவைதான் இவ்வேழுதுறைகளும். ஒவ்வொரு ஆண்டும்

கூட்டாட்சிக்குழுவின் அங்கத்தினருக்கு துறைகள் மாற்றியளிக்கப்படுகின்றன. ஒரு துறையின் தலைவராக இருப்பவர் மற்றொரு துறையின் மாற்றுத் தலைவராகவும் (Substitute Head) பணிபுரிகின்றார். இதனால் துறைகள் திறம்படச் செயல்படவும், அங்கத்தினர்கள் எல்லாத் துறைகளைப் பற்றி அறியவும் முடிகின்றது. இங்கிலாந்தின் அமைச்சர் குழுவைப் போன்றதல்ல சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிக்குழு. இக்குழு அதன் அதிகாரங்களை அரசியலமைப்பினின்று பெறுகின்றது. பாராளுமன்றத்தில் காணப்படும் பெரும்பான்மைக் கட்சியினின்று உருவாக்கப்பட்டதல்ல இக்குழு. பல அரசியற் கட்சிகளின்று இது உருவாக்கப்படுகின்றது. இதற்குத் தலைமை அமைச்சர் கிடையாது. இக்குழு பின்பற்றும் கொள்கை பாராளுமன்றத்தால் தயாரிக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தைக் கலைத்துவிடும் அதிகாரம் இக்குழுவிற்குக் கிடையாது. அதேபோல் பாராளுமன்றம் கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்களைப் பதவியினின்று நீக்க முடியாது.

கூட்டாட்சிக் குழுவின் குறைவெண்வரம்பு நான்கு. இக்குழு வாரத்தில் இருமுறை கூடுகின்றது. பெரும்பான்மை அங்கத்தினரது ஒப்புதலுடன் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் தனித்தனியாகப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ளவர்கள். இதனால் ஒரு அங்கத்தினர் மற்றொரு அங்கத்தினரைப் பாராளுமன்றத்தில் எதிர்ப்பது கூட உண்டு. பிரிட்டனில் காணப்படுவது போன்ற கூட்டுப் பொறுப்பு சுவிட்சர்லாந்தில் கிடையாது. கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்கள் பாராளுமன்றத்தின் இரு அவைகளில் ஆஜராயிருந்து பேசுவதற்கும் வழிவாதங்களில் பங்கெடுப்பதற்கும் உரிமை பெற்றுள்ளனர். ஆனால் பாராளுமன்றத்தில் வாக்களிக்கும் உரிமை இவர்கட்குக் கிடையாது. கூட்டாட்சிக் குழுவின் கூட்டங்கள் ரகசியமாகவே நடக்கின்றன.

## 9.8 அதிகாரங்களும் பணிகளும்

பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களைக் கூட்டாட்சிக் குழு அமலாக்குகின்றது. தான் புரியும் உள்நாட்டுப்பணிகள், அயல்நாடு சம்பந்தப்பட்ட பணிகள் போன்றவை குறித்த வருடாந்திர அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றது. சுவிட்சர்லாந்தின் அயல்நாட்டு விவகாரங்களைக் கூட்டாட்சிக் குழு கவனிக்கின்றது. படைகளைக் கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்வதும் இதன் பணியே. மாநிலங்களின் அரசியலமைப்புகட்கு இது உத்திரவாதமளிக்கின்றது. மாநிலங்கள் தமக்குள்ளும், அயல்நாடுகளுடனும் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களை கூட்டாட்சிக் குழு பரிசீலிக்கின்றது. தேவைப்படும் பொழுது மாநிலங்களின் நிர்வாகத்தையும் மேற்பார்வை செய்கின்றது. கூட்டாட்சிப் பணியாளர்கள் எல்லோருடைய நடவடிக்கைகளும் இக்குழுவின் மேற்பார்வைக்குட்பட்டவை. நாட்டின் நிதி விவகாரங்களை இக்குழு கவனித்து, வருடாந்திர வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்கின்றது.

கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஆஜராயிருந்து கேள்விகட்குப் பதிலளிக்கின்றனர். இங்கு இவர்கட்கு வாக்குரிமை கிடையாது. பெரும்பாலான மசோதாக்களும் நாட்டின் வரவு செலவுத் திட்டமும் இக்குழுவின் அங்கத்தினராலேயே தாக்கல் செய்யப்படுகின்றன. பாராளுமன்ற அங்கத்தினரால் தாக்கல் செய்யப்படும் மசோதாக்கள் கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகின்றன. கூட்டாட்சிக் குழுவின் ஆமோதிப்பிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாநிலச் சட்டங்களை இக்குழு பரிசீலிக்கின்றது.

கூட்டாட்சி அதிகாரிகளின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கூட்டாட்சிக் குழு விசாரிக்கின்றது. கூட்டாட்சி நீதிமன்றத்தின் தீர்ப்புகள்

அமலாக்கப்படுகின்றனவா என்று இக்குழு சரிபார்க்கின்றது. பல்வேறு துறைகளின் தீர்மானங்களுக்கெதிராக தனிநபர்கள் செய்யும் மேல் முறையீடுகள் கூட்டாட்சிக் குழுவால் விசாரிக்கப்படுகின்றன. வர்த்தகம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள், பதிவுரிமை, சுங்கவரி, மாநிலத் தேர்தல்கள் போன்றவை சம்பந்தப்பட்ட வழக்குகளில், மாநில அரசுகள் எடுக்கும் தீர்மானங்களில் வேற்றுமை ஏற்பட்டால் இவை கூட்டாட்சிக் குழுவின் அதிகார வரம்பிலிருந்து அகற்றப்பட்டு கூட்டாட்சி நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்படுத்தப்பட்டுள்ளன.

கூட்டாட்சிக் குழுவின் பணிகள் யாவும் மேற்பார்வை சார்ந்தவையே ஆகும். கொள்கைகளை வகுக்கும் அதிகாரம் சட்டமன்றத்திடம் உள்ளது. சுவிட்சர்லாந்து அரசியலமைப்பின் 71வது விதியின் படி கூட்டமைவில் தலைமை அதிகாரம் சட்டமன்றத்திடமேயுள்ளது. அம்மன்றம் கூட்டாட்சிக் குழுவிற்கு அளிக்கும் அதிகாரங்கள் எந்த நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம். கூட்டாட்சிக் குழு சட்டமன்றத்திற்கு வருடாந்திர அறிக்கையை அளிக்கவேண்டும். சில விசேஷ அறிக்கைகளையும் அளிக்குமாறு சட்டமன்றம் ஆட்சிக்குழுவிடம் கோரலாம். ஆட்சிக்குழு சட்டமன்றத்திற்குக் கீழான நிலையிலிருக்கிறது. இருப்பினும் ஆட்சிக்குழுவின் தீர்மானங்களைச் சட்டமன்றம் ஏற்காவிடில், ஆட்சிக்குழுவினர் பதவி விலகுவதில்லை. மாறாக அவர்கள் சட்டமன்றத்தின் விருப்பத்திற்குக் கட்டுப்படுகின்றனர். ஏ.வி. டைசி கூறுவது போல, சட்டமன்றத்தின் கொள்கையை நிறைவேற்றுவதே கூட்டாட்சிக் குழுவின் பணியாகும். அதன் மூலம் அது நாட்டின் கொள்கையையே நிறைவேற்றுகின்றது.

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிக் குழு பாராளுமன்ற முறையையும் சார்ந்ததன்று. ஜனாதிபதி முறையையும் சார்ந்ததன்று. அது தனித்தன்மை வாய்ந்தது. அரசியல் ஒருமைப்பாடு, ஒற்றுமையுணர்வு ஆகியவை இல்லாத காரணத்தினால், அதனை பாராளுமன்ற முறையிலமைந்த அமைச்சர் குழுவெனக் கொள்ள முடியாது. பாராளுமன்ற முறையில் அமைச்சர்கள் யாவரும் பாராளுமன்றப் பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்தவர்கள். தமது அதிகாரபூர்வமான செயல்களுக்குத் தனியாகவும், கூட்டாகவும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர்கள். பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில் தான் அவர்கள் அதிகாரத்திலிருக்கின்றனர், ஆனால் சுவிட்சர்லாந்தின் ஆட்சிக்குழுவினரோ சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லர். அவர்களனைவரும் சட்டமன்ற பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்தவர்களல்ல. அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அல்ல. ஆனால் அவர்கள் பல்வேறு மக்கள், கான்டன்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளாய் விளங்குவதோடு சிறந்த நிர்வாகிகளாயும் உள்ளனர். சட்டமன்ற விவாதங்களில் கலந்து கொண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கும் அவர்கள் எந்தவொரு கொள்கையையும் வகுப்பதில்லை. ஆட்சிக்குழுவினர் ஒருவரையொருவர் ஆதரிக்கவேண்டுமென்று கட்டாயமில்லை. சட்டமன்றத்தில் அவர்கள் வெவ்வேறு கருத்துகளை ஆதரிக்கின்றனர். அமைச்சரவை பாராளுமன்றத்திற்குத் தலைமை வகிப்பது போல ஆட்சிக்குழு அதிகாரத்தைக் கொண்டிருப்பினும், ஆட்சிக்குழுவின் பரிந்துரைகளை அது ஏற்காவிடில் ஆட்சிக்குழுவினர் பதவி விலகுவதில்லை. இத்தகைய காரணங்களினால், சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிக்குழுவை பாராளுமன்ற முறையெனக் கொள்ளல் கூடாது.

சுவிட்சர்லாந்தின் ஆடசிக்குழுவை ஜனாதிபதி முறை சார்ந்ததென்றும் கூற முடியாது. ஏனெனில், இது அமெரிக்காவின் ஆட்சிமுறை போன்ற தனியொரு அரசாங்கப்

பிரிவில்லை. அது சட்டமன்றத்திற்குக் கீழ்ப்பட்ட நிலையில் இருக்கின்றது. அமெரிக்காவில் காங்கிரஸ் ஜனாதிபதியின் அதிகாரங்களில் தலையிட முடியாது. அவருடைய அமைச்சரவை உறுப்பினர்கள் அவராலேயே நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர்கள் ஜனாதிபதிக்கே பொறுப்புடையவர்கள். சுவிட்சர்லாந்திலோ கூட்டாட்சிக் குழு சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதேயாகும். அக்குழுவிற்கு சட்டங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் அதிகாரமும் கிடையாது. எனவே சுவிட்சர்லாந்தின் ஆட்சிக்குழுவை ஜனாதிபதி முறையைச் சார்ந்ததாகவும் கருத முடியாது.

பாராளுமன்ற முறை அரசியலிலும் ஜனாதிபதி முறை அரசியலிலும் காணப்படும் நன்மைகள் யாவும் சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிக்குழுவில் இணைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றத்திற்கும், ஆட்சித்துறைக்குமிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும், நம்பிக்கையும் சுவிட்சர்லாந்தில் காணமுடியும். எல்லாக் கட்சிகளுக்கும் நாட்டின் பகுதிகளுக்கும் பிரதிநிதியாக விளங்கும் கூட்டாட்சிக்குழு ஒரு குறிப்பிட்ட அரசியல் கொள்கையைக் கொண்டதல்ல. எதிர்க்கட்சிகளின் நடவடிக்கை என்பது சுவிட்சர்லாந்தில் காணமுடியா ஒன்றாகும். கட்சி சார்பற்ற கூட்டாட்சிக்குழு பாராளுமன்றத்திற்கு ஆலோசனை வழங்கி அதன் நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றது. அமெரிக்க ஆட்சித்துறையைப் போல சுவிட்சர்லாந்து ஆட்சித்துறையும் நிலையானது. இதனால் கொள்கைத் தொடர்ச்சியும் மரபுகள் உருவாகும் சூழ்நிலையும் அங்கு காணப்படுகின்றன.

மேற்பார்வை மட்டும் செய்யக்கூடிய கூட்டாட்சிக்குழு தன்னிச்சைப்படி செயல்பட முடியாது. தனது சிறப்புரிமைகளை இக்குழு பயன்படுத்துவதற்குப் பாராளுமன்றத்தின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் அப்பணி முடிந்தவுடன், அதற்கு ஒப்புதல் பெற வேண்டும். காலப்போக்கில் கூட்டாட்சிக் குழுவின் அதிகாரங்கள் அதிகரித்துள்ளன. பல வருட காலம் தொடர்ந்து பதவியில் கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்கள் நீடிப்பதனால், அவர்களது நிர்வாகத்திறன் அதிகரிக்கின்றது. அவர்களது அரசியல் வியூகமும் வளர்கின்றது. பெரும்பாலான மசோதாக்கள் தற்போது கூட்டாட்சிக் குழுவாலேயே துவக்கப்படுகின்றன. நெருக்கடி நேரங்களில் கூட்டாட்சிக் குழுவிற்கு வரம்பற்ற அதிகாரங்கள் பாராளுமன்றத்தால் அளிக்கப்படுகின்றது.

முக்கியமாகச் சொல்லக்கூடிய அளவிற்கு அரசாங்கத்தில் குழப்பமோ அல்லது தகராறோ சிறிதளவு கூட இருந்ததில்லை. ஒரு முறை கூட்டாட்சிக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இது நடந்து நூறாண்டுகளுக்கு மேலாகின்றது. சராசரியாகக் கூட்டாட்சிக் குழு உறுப்பினர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் பதவியிலிருக்கிறார்கள். இது வரையில் அதிக அளவு ஒருவர் பதவியிலிருந்து 32 ஆண்டுகளாகும்.

## 9.9 சட்டமன்றத்துறை :

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சி சட்டமன்றத்துறை கூட்டாட்சிச் சட்டமன்றம் (Federal Assembly) என அழைக்கப்படுகிறது. இது இரு அவைகளை உடையது. கீழவை தேசியக்குழு (National Council) என்றும் மேலவை மாநிலக்குழு (Council of States) என்றும் அறியப்படுகின்றன. இவ்விரு அவைகட்கும் விசேடமான அதிகாரங்கள் ஏதுமில்லை. சமமான அதிகாரங்கள் இவ்விரு அவைகட்கும் உள்ளன. கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கட்கு மறுப்பாணை தெரிவிக்க அதிகாரமில்லை. இச்சட்டங்களை செல்லாதவை எனக் கூறும் உரிமை எந்த நீதிமன்றத்திற்கும் கிடையாது. இக்காரணங்களால் சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிச் சட்டமன்றம் மிக உயர்வான

நிலையிலேயே காணப்படுகிறது. அரசியலமைப்பின் 71வது விதிப்படி, மக்கள், கான்டன்கள் ஆகியோரது உரிமைகளுக்குட்பட்டு கூட்டாட்சியின் தலைமை அதிகாரம் கூட்டாட்சிச் சட்டமன்றத்திடம் உள்ளது.

## 9.10 மாநிலக்குழு

கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் மேலவையாகத் திகழ்வது மாநிலக்குழுவாகும். இது எல்லா கான்டன்க்கும் சமப் பிரதிநிதித்துவம் அளிக்கின்றது. ஒவ்வொரு முழு கான்டனிலிருந்தும் இரு பிரதிநிதிகளும், ஒவ்வொரு அரை கான்டனிலிருந்து ஒரு பிரதிநிதியும் இந்த அவையில் உள்ளனர். மாநிலக்குழுவின் அங்கத்தினரது தகுதிகளை பற்றியும் அவர்களை தேர்ந்தெடுக்கும் முறையைப் பற்றியும் அரசியலமைப்பு ஒன்றும் கூறவில்லை. கூட்டாட்சிக் குழுவின் அங்கத்தினர்களும் கூட்டாட்சித் தீர்ப்பாயத்தின் (Federal Tribunal) அங்கத்தினர்களும் ஒரே வேளையில் மாநிலக் குழுவின் அங்கத்தினராக இருக்க முடியாது. மாநிலக் குழுவின் அங்கத்தினர்கள் மூன்று விதமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பெர்ன் கான்டனில் இவர்களை கான்டன் சட்டமன்றம் தேர்ந்தெடுக்கிறது. மூன்று கான்டன்களில் இவர்களை முதல் நிலை மன்றம் தேர்ந்தெடுக்கின்றது. மற்ற கான்டன்களில் சுவிஸ் குடிக்கள் இரகசிய வாக்கின் மூலம் இவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். சுவிட்சர்லாந்திலுள்ள 26 கான்டன்களில் கிளாரஸ் என்ற கான்டனில் மட்டும் மாநிலக் குழுவின் அங்கத்தினர்கள் 3 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். மற்ற கான்டன்களில் அவர்கள் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எவ்வளவு காலம் அவர்கள் பதவி வகிக்க விரும்புகின்றனரோ அவ்வளவு காலம் மாநிலக்குழுவின் அங்கத்தினர்கள் திரும்பவும் தேர்ந்தெடுக்கின்றனர். இது அந்த அவைக்கு நிரந்தரத் தன்மையளிக்கின்றது. இந்த அங்கத்தினரது ஊதியமும் பிரயாணப்படியும் கான்டன்களால் அளிக்கப்படுகின்றன. இது அரசியலமைப்பிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. மாநிலக்குழுவின் அங்கத்தினர்கள் சட்டமன்றக் குழுக்களில் பங்கெடுக்கும் பொழுது அவர்கட்கு கூட்டாட்சி அரசாங்கம் படி அளிக்கின்றது.

மாநிலக் குழுவின் அங்கத்தினர்கள் தம்மிடையினின்று ஒரு தலைவரையும் ஒரு துணைத் தலைவரையும் தேர்ந்தெடுக்கின்றனர். ஒரு கூட்டத் தொடருக்கு ஒரே கான்டனைச் சேர்ந்தவர்கள் தலைவராகவும் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. (ஒரு ஆண்டில் நடக்கும் கூட்டங்கள் யாவற்றையும் ஒரு கூட்டத்தொடர் என்பர்). ஒரே கான்டனைச் சேர்ந்த பிரதிநிதிகள் இரு கூட்டத்தொடர்கட்குத் தொடர்ந்து இப்பதவிகட்குத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. ஒரு ஆண்டு துணைத்தலைவராகப் பதவி வகிப்பவர் அடுத்த ஆண்டு தலைவராக்கப்படுவது வழக்கம். அவைத் தலைவரே சபையின் அன்றாட அலுவல்களை நிர்ணயிப்பதற்குப் பொறுப்பு வாய்ந்தவர். அவையில் வாக்கெடுப்பு நடக்கும் பொழுது சமநிலை காணப்பட்டால் அவைத் தலைவர் தமது தீர்ப்பு வாக்கை அளிப்பார்.

மாநிலக்குழுவின் சாதாரணக் கூட்டத்தொடர் ஆண்டிற்கொரு முறையாவது நடக்கும். ஐந்து கான்டன்களின் விண்ணப்பத்திற்கேற்பவோ அல்லது நான்கில் ஒரு பங்கு அங்கத்தினரது விண்ணப்பத்திற்கேற்பவோ அல்லது கூட்டாட்சிக் குழுவாலோ மாநிலக்குழுவின் விசேடக் கூட்டங்கள் கூட்டப்படலாம்.

சபையின் அலுவல்கள் நிறைவேற்ற அதன் உறுப்பினர்களில் அறுதிப் பெரும்பான்மையினர் பங்கெடுக்க வேண்டியது அவசியம். அதாவது குறைந்த பட்சம்

23 உறுப்பினர்களாவது இருந்தால் தான் சபை ஒவ்வொரு காரியத்தையும் தீர்மானிக்க முடியும். மாநிலக் குழுவின் உறுப்பினர்கள் தத்தம் கான்டன்களின் கருத்துக்களுக்கேற்ப வாக்களிக்க வேண்டுமென்பதில்லை. (விதி 91) ஆகவே உறுப்பினர்கள் தமது மனச்சாட்சிக்கு இணங்கி வாக்களிக்க முடிகிறது.

தேசியக் குழுவிற்கு இணையாக உரிமைகளும், அதிகாரங்களும் மாநிலக் குழுவிற்குண்டு. சாதாரண மசோதாக்களும் பண மசோதாக்களும் இரு அவைகளிலும தாக்கல் செய்யப்படலாம். எல்லா மசோதாக்களும் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட வேண்டும். அங்கத்தினரது எண்ணிக்கை குறைவாதலால் மாநிலக்குழுவில் நடக்கும் விவாதங்கள் விரிவானவையாகவும், நடுநிலைமையுடனும் இருக்கும். இந்த அவை அதன் பணிகளை மிகத்துரிதமாக முடிக்கின்றது. இந்த அவை அமெரிக்க செனட்டைப் போல் அதிகார வலிமை படைத்ததல்ல. ஆயினும் மேலவைக்குள்ள பணிகளை இது சரிவரப் புரிகின்றது.

## 9.11 தேசியக்குழு (National Council)

கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் கீழவை தேசியக்குழுவென்று அழைக்கப்படுகின்றது. இந்த அவை மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டது. இந்த அவையின் அமைப்பு கூட்டாட்சியின் அரசியலமைப்பால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேசியக்குழுவின் அங்கத்தினர்கள் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேசியக்குழுவில் நான்கு ஆண்டுகட்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 200 அங்கத்தினர்கள் உள்ளனர். அரசியல் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாச்சாரப்படி அவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. நான்காண்டுக்காலம் முடிவதற்கு முன்னர் இந்த அவை கலைக்கப்படுவதில்லை. அரசியலமைப்பு முழுவதும் மாற்றியமைப்பது குறித்து இரு அவைகளுக்கிடையே கருத்து வேற்றுமை என்றால் தேசியக்குழுவும், மாநிலக்குழுவும் கலைக்கப்படலாம்.

இருபது வயது நிரம்பிய எல்லா குடிமக்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. மதக்குருக்களல்லாத வாக்காளர்கள் தேசியக் குழுவின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஒவ்வொரு கான்டனும், அரைக் கான்டனும் ஒரு தேர்தல் தொகுதியாக அமைக்கப்படுகின்றது. சாதாரணமாக பிற நாடுகளில் தேர்தல் தொகுதிகளை நிர்ணயிக்கும் பொறுப்பு ஆட்சித்துறையைச் சார்ந்ததாகும். ஆனால் சுவிட்சர்லாந்திலோ அதனை நிர்ணயிப்பது கூட்டாட்சிச் சட்டமன்றமேயாகும். ஒருவர் ஒரே வேளையில் கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் அங்கத்தினராக இருக்க முடியாது. தேசியக்குழு ஒவ்வொரு ஆண்டும் நான்கு முறை (மார்ச், ஜூன், செப்டம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில்) கூடுகின்றது.

தேசியக்குழு மற்றும் மாநிலக்குழுவின் எந்தவொரு உறுப்பினரும் மசோதாவைத் துவக்குவதற்கு கூட்டாட்சி அரசியலமைப்பின்படி உரிமையிருக்கிறது. எந்தவொரு உறுப்பினரும் மசோதாவைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது ஆணை தயாரிப்பதற்கு உரிமை உண்டு. ஆனால் இது வரையிலும் அந்த உரிமை பயன்படுத்தப்படவில்லை.

தேசியக்குழுவில் எதிர்க்கட்சி என்பது கிடையாது. சுவிட்சர்லாந்தின் சட்டமன்றத்தில் அரசியற்கட்சிகட்கு முக்கியமான பங்கு இல்லை. தேசியக் குழுவால் கூட்டாட்சிக் குழுவைப் பதவியினின்று அகற்ற முடியாது. இறைமை மக்களிடம் உறைகின்றதேயொழிய சட்டமன்றத்திடமல்ல.

தேசியக்குழுவின் தலைவரும், துணைத்தலைவரும் தேசியக்குழுவின்

அங்கதினர்களால் தமக்குள்ளிருந்து ஒவ்வொரு கூட்டத்தொடரின் தொடக்கத்திலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு ஆண்டில் நடக்கும் கூட்டங்கள் யாவும், ஒரு கூட்டத் தொடராகக் கணக்கிடப்படுகின்றன. அவைத் தலைவருக்கு சாதாரண வாக்கும், தீர்ப்புவாக்கும் உள்ளது. அமெரிக்கப் பிரதிநிதிகள் மன்றத்தலைவருக்குள்ள அதிகாரத்திற்கிணையாக அதிகாரம் சுவிட்சர்லாந்தின் தேசியக்குழுவின் தலைவருக்குக் கிடையாது. வருடாவருடம் தலைவர் மாற்றப்படுவதால் ஒரு தனி நபரிடம் அதிகாரம் குவிதல் தவிர்க்கப்படுகின்றது.

## 9.12 கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள்

தேசியக்குழுவையும் மாநிலக்குழுவையும் அவைகளாகக் கொண்டுள்ள கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு சட்டமியற்றும் அதிகாரங்களும், நிர்வாகம் சம்பந்தப்பட்ட அதிகாரங்களும், நீதித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்களும் உள்ளன. சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு இடமில்லை. கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் தீர்ப்புகளைத் தள்ளுபடி செய்யும் அதிகாரம் அரசியலமைப்பால் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றத்தின் இரு அவைகட்கும் ஓரளவு சமமான அதிகாரங்கள் தான் உள்ளன.

### சட்டமியற்றும் அதிகாரங்கள்

கூட்டாட்சிக் குழுவால் தயாரிக்கப்படும் சட்டவரைவுகள் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் சட்டங்களாக இயற்றப்படுகின்றன. சட்டங்களையும் தீர்ப்பாணைகளையும் (Decrees) இயற்றும் அதிகாரம் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு உண்டு. கூட்டாட்சியின் அரசியலமைப்பு செயலாற்றப்படுவதற்குத் தேவையானதும், கூட்டாட்சியின் கடமைகளை நிர்வகிக்கத் தேவையானதும், நாட்டின் சுதந்திரத்தையும் நடுநிலைமையையும் பாதுகாப்பதற்குத் தேவையானதுமான சட்டங்களை கூட்டாட்சிச் சட்டமன்றம் இயற்றுகின்றது. வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தை இச்சட்டமன்றம் நிறைவேற்றுகின்றது. பொது வாக்கெடுப்பில் குடிமக்கள் ஒப்புதல் தெரிவித்தாலன்றி கூட்டாட்சியோ கான்டனோ அல்லது கம்யூன்களோ எந்த வரியையும் விதிக்கமுடியாது. கூட்டாட்சிக் குழுவின் கணக்குகளைத் தணிக்கை செய்து ஆமோதிப்பது இச்சட்டமன்றமாகும். கடனெடுக்க உத்தரவளிப்பதும், கூட்டாட்சி அலுவலகங்களை நிறுவுவதும் கூட்டாட்சி அலுவலர்களின் ஊதியங்களை நிர்ணயிப்பதும் கூட்டாட்சியின் அரசியலமைப்பைத் திருத்தியமைப்பதும் இச்சட்டமன்றத்திற்குள்ள பிற பணிகளாகும். எந்தச் சட்டங்களும், தீர்மானங்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றன என்று கூட்டாட்சிச் சட்டமன்றம் நிர்ணயிக்கிறது. கூட்டாட்சியின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட எல்லாத் தகவல்களும் சட்டமன்றத்திற்கு அளிக்கப்படல் வேண்டும் என்று இது கேட்கலாம். கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் ஒரு சட்டம் இயற்றப்பட்ட 90 நாட்களுக்குள் 30,000 குடிமக்களோ அல்லது எட்டு கான்டன்களோ அச்சட்டம் மக்களின் ஒப்புதலுக்கு விடப்பட்ட வேண்டுமென்று கேட்டால் அதற்கேற்ப பொதுமக்களின் ஒப்புதலறிய வாக்கெடுப்பு நடத்தவேண்டும்.

### நிர்வாக அதிகாரங்கள்

கூட்டாட்சிச் சட்டமன்றம் அதன் இரு அவைகளின் இணைப்புக் கூட்டத்தில் கூட்டாட்சிக் குழுவின் ஏழு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. அவர்களுள் ஒருவரைக் கூட்டாட்சித் தலைவராகவும் மற்றொருவரைத் தலைவராகவும், கூட்டாட்சிச் சட்டமன்றம் தேர்ந்தெடுக்கிறது. கூட்டாட்சித் தீர்ப்பாயத்தின் நீதிபதிகள், கூட்டாட்சிக்

காப்புறுதித் தீர்ப்பாயத்தின் அங்கத்தினர்கள், படைத்தலைவர் ஆகியோர் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நியமிக்கப்படுகின்றனர். பிற அதிகாரிகளைத் தேர்வு செய்யவும், பதவியில் ஊர்ஜிதப்படுத்தவும் சட்டமன்றத்திற்கு அதிகாரமளிக்கப்படலாம். அரசுத்துறைப்பணியாளர் தொகுதியின் நடவடிக்கைகளை இச்சட்டமன்றம் கட்டுப்படுத்துகிறது. மேற்பார்வை நிர்வாகம் சம்பந்தப்பட்ட தகராறுகளும், கூட்டா அதிகாரிகளிடையே அதிகார வரம்பு குறித்து எழும் வழக்குகளும் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் விசாரிக்கப்படுகின்றன. கூட்டாட்சியின் படைகளைக் கட்டுப்படுத்துவதும், போர்ப்பிரகடனம் செய்வதும், அமைதி உடன்படிக்கை செய்வதும், ஒப்பந்த களை ஆமோதிப்பதும் இச்சட்டமன்றத்தின் பணிகளாகும். கூட்டாட்சிக் குழுவினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற மேல் முறையீட்டினை விசாரிக்கிறது. கான்டன்கள் தமக்குள்ளும் அயல்நாடுகளுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளை இச்சட்டமன்றம் ஆமோதிக்க வேண்டும்.

**நீதித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்**

கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் இணைக்கூட்டத்தில் குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்படுகின்றது. இரு அவைகளும் தனித்தனியே மன்னிப்பு (amnesty) அளிக்கலாம். ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட வழக்குகளில் கூட்டாட்சிக் குழு அளித்த தீர்ப்புகட்கெதிராகச் செய்யப்படும் மேல் முறையீடுகளைக் கூட்டாட்சிச் சட்டமன்றம் விசாரிக்கின்றது.

கூட்டாட்சி சட்டமன்றத்தின் இரு அவைகளும் கூட்டாட்சியின் அரசியலமைப்பைத் திருத்தியமைப்பதில் பெரும் பங்கு கொண்டுள்ள என்பதை ஏற்கனவே கண்டோம். அரசியலமைப்புத் திருத்தத்தையோ அல்லது முழுமாற்றத்தையோ துவக்கும் உரிமை இரு அவைகட்குமுண்டு. அரசியலமைப்புத் திருத்தம் மக்களால் துவக்கப்படும்பொழுது சட்டமன்றம் அதற்கு உரிய பங்கை ஆற்றுகின்றது.

கூட்டாட்சி சட்டமன்றத்தின் இரு அவைகட்கும் சமமான அதிகாரங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மசோதாக்கள் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்படலாம். எல்லாச் சட்டங்களும், தீமானங்களும் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட வேண்டும். வரவு செலவு திட்டம் போன்ற வருடாந்திர பணிகளை இரு அவைகளும் மாறி மாறிப் புரிகின்றன. இரு அவைகளுக்கிடையே முரண்பாடுகள் எழுந்தால் அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான இரு அவைகளின் பிரதிநிதிகள் அடங்கிய இணை மாநாட்டுக் குழு ஒன்று கூட்டப்படுகின்றது. தகராறை தீர்த்து வைக்க முடியாமல் போனல் தகராறுக்குரிய விஷயம் கைவிடப்படுகிறது. இரு அவைகளின் இணைக் கூட்டங்கள் மூன்று காரணங்களுக்காக கூட்டப்படுகின்றன. அவையாவன :

1. கூட்டாட்சிக்குழு, கூட்டாட்சித் தீர்ப்பாயம், கூட்டாட்சிக் காப்புறுதித் தீர்ப்பாயம், சான்சலர், படைத்தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கு.
2. மன்னிப்பளிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்த.
3. கூட்டாட்சி நிறுவனங்களுக்கிடையே எழும் அதிகார வரம்பு குறித்த பிரச்சனையைத் தீர்த்து வைக்க.

தனது பணிகளைச் செவ்வனே புரியும் சட்டமன்றம் சுவிட்சர்லாந்தினுடையது. அமைதியாகத் தனது பணியை இது புரிகின்றது. இதற்குக் காரணம் அதன் அங்கத்தினரது தன்மைதான். மாநிலக்குழுவின் அங்கத்தினரில் ஐந்தில் மூன்று பகுதியினரும் தேசியக் குழுவின் அங்கத்தினரில் ஐந்தில் மூன்று பகுதியினரும்

பல்கலைக்கழகக் கல்வி பெற்றவர்கள். கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் அங்கத்தினர்கள் சட்டமன்றத்தின் கூட்டங்களில் தவறாமலும் குறித்த நேரத்திலும் பங்கெடுக்கின்றனர். சொல்லணிக் கலையை (rhetoric) எந்த அங்கத்தினரும் பயன்படுத்துவதில்லை.

நேரடி மக்களாட்சி சட்டமன்றத்தின் முக்கியத்துவத்தை ஓரளவு குறைத்துவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சட்டங்களை ஏற்பதற்கோ மறுப்பதற்கோ மக்களிடம் அதிகாரமுள்ளது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டம் குடிபொப்பத்தில் ஏற்கப்பட்டால் அச்சட்டத்தை இயற்றியதற்கான பெருமை மக்களைச் சாரும். இது நிராகரிக்கப்பட்டாலோ பழி சட்டமன்றத்தின் மீது சுமத்தப்படுகின்றது. இதனால் கூட்டாட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் மனங்களில் ஒருவித பொறுப்பின்மை தோன்றுகிறது. கடமையுணர்வு குறைகின்றது. எனவே சட்டமியற்றுதலில் தற்பொழுது கூட்டாட்சிக் குழு முக்கியத்துவம் பெற்று வருகின்றது. பெரும்பான்மையான சட்ட மசோதாக்கள் கூட்டாட்சிக் குழுவால் கொண்டு வரப்படுகின்றன. சட்டமன்றம் வேண்டுகோள் விடுக்கும்போதெல்லாம் கூட்டாட்சிக்குழு மசோதாவைத் தயாரித்து அதோடு அதன் குறிக்கோள் பற்றிய ஒரு அறிக்கையும் சேர்த்து சட்டமன்றத்திடம் சமர்ப்பிக்கின்றது. கூட்டாட்சிக் குழுவின் அறிக்கை சாதகமாய் இல்லாவிடில் தானே மசோதாவைத் தயாரிக்கும்படி அதனைக் கோரியிருந்தாலும், கூட்டாட்சிச் சட்டமன்றம் அதனை நிறைவேற்றுவதில்லை. வழக்கமாக கூட்டாட்சிக் குழுவின் உறுப்பினரொருவரே மசோதாவை சட்டமன்றத்தில் முன்மொழிந்து, அதனை நிறைவேற்ற வேண்டிய முறையில் பல கட்டங்களில் அதனை வழிநடத்திச் செல்கின்றார். இவ்வாறு கூட்டாட்சிக்குழு சட்டமியற்றுதலில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

## 9.13 சுவிட்சர்லாந்தின் நீதித்துறை

கூட்டாட்சியின் நீதித்துறை கூட்டாட்சித் தீர்ப்பாயம் (Federal Tribunal) என அறியப்படுகின்றது. இத்தீர்ப்பாயம் 1874-ஆம் ஆண்டின் அரசியலமைப்பால் உருவாக்கப்பட்டதாகும். 1874-ஆம் ஆண்டு இத்தீர்ப்பாயம் நிறுவப்பட்டது. லாசேன் என்ற நகரத்தில் இத்தீர்ப்பாயம் உள்ளது. இத்தீர்ப்பாயத்தில் 2 நீதிபதிகளும் 15 துணை நீதிபதிகளும் உள்ளனர். இந்நீதிபதிகள் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் ஆறு ஆண்டு காலத்திறகு தேர்ந்தேடுக்கப்படுகின்றனர். இந்நீதிபதிகள் அவர்களது பதவிக்காலம் முடிந்த பிறகு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். இரண்டாண்டு காலம் பதவி வகிக்கும் தீர்ப்பாயத் தலைவரையும், துணைத்தலைவரையும் சட்டமன்றம் தேர்ந்தெடுக்கின்றது. இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. தேசியக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். தேசியக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படத் தகுதி படைத்த குடிமகன் எவனும் தீர்ப்பாயத்தின் அங்கத்தினராக நியமிக்கப்படலாம். தீர்ப்பாயத்தின் அங்கத்தினரை நியமிக்கும் பொழுது கூட்டாட்சியின் நான்கு ஆட்சிமொழிகளுக்கும் பிரதிநிதித்துவமுள்ளதா என்று கூட்டாட்சிச் சட்டமன்றம் கவனிக்க வேண்டும். தீர்ப்பாயத்தின் அங்கத்தினர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதால் தற்பொழுது அவர்கள் ஆயுட்காலம் முழுவதும் பதவி வகிக்கும் நிலை வந்துள்ளது. ஆனால் எழுபது வயது நிரம்பியவுடன் அவர்கள் பதவியினின்றும் தாமே விலகுகின்றனர். கூட்டாட்சித் தீர்ப்பாயத்திற்குக் கீழான கூட்டாட்சி நீதிமன்றங்கள் ஏதுமில்லை. நீதித்துறை சம்பந்தப்பட்ட பெரும்பாலான செயல்கள் கான்டன்களின் நீதிமன்றங்களாலேயே செய்யப்படுகின்றன. லூஸேர்ன் என்ற இடத்திலுள்ள கூட்டாட்சிக் காப்புறுதித் தீர்ப்பாயம் மற்றுமொரு

உயர்வான விசேடத் தன்மை கொண்டதொரு நீதி நிறுவனமாகும்.

**அதிகார வரம்பு :**

உரிமையியல், குற்றவியல், பொதுச்சட்டம் போன்றவை சம்பந்தப்பட்ட வழக்குகள் யாவும் கூட்டாட்சித் தீர்ப்பாயத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டவையாகும். கீழ்க்காணும் வழக்குகளில் இத்தீர்ப்பாயத்திற்கு முதல் நிலை அதிகார வரம்பும் இறுதிநிலை அதிகார வரம்பும் உண்டு.

1. கூட்டாட்சிக்கும் கான்டன்களுக்கும் இடையே எழும் வழக்குகள்.
2. கான்டன்களிடையே எழும் வழக்குகள்.
3. கூட்டாட்சியோ அல்லது கான்டன்களோ ஒரு புறமும், கூட்டு நிறுவனங்களோ அல்லது தனி நபர்களோ மற்றொரு புறமும் உள்ள வழக்குகள்.
4. தனிநபர்களால் சமர்ப்பிக்கப்படும் வழக்குகள்.
5. அரசியல் அமைப்பாலோ அல்லது கான்டன்களின் சட்டங்களாகவோ இத்தீர்ப்பாயத்தின் அதிகார வரம்பிற்குட்படுத்தப்படும் வழக்குகள்.
6. பலவகைப்பட்ட ரெயில்வே வழக்குகள்

கூட்டாட்சிச் சட்டங்களைச் செயல்படுத்தும் கூட்டாட்சி நிறுவனங்கள், கான்டன்களின் நிறுவனங்கள் போன்றவற்றின் தீர்ப்புக்கெதிராகச் கூட்டாட்சித் தீர்ப்பாயத்திற்கு மேல் முறையீடு செய்யலாம். கூட்டாட்சிக்கெதிராகப் புரியும் குற்றங்களுக்காகவும், ராஜ துரோகக் குற்றத்திற்காகவும் தனிநபர்களை இத்தீர்ப்பாயம் விசாரிக்கலாம். கூட்டாட்சித் தீர்ப்பாயம் பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பொதுச்சட்டம் மற்றும் ஆட்சித் துறைச்சட்ட நீதிமன்றம் (Court of Public and Administrative Law), இரு அரசுத்துறை நீதிமன்றங்கள் (Civil Courts), திவாலா நீதிமன்றம் (Bankruptey Courts), தலைமை குற்ற வழக்கு நீதிமன்றம் (Court of Arraignment) குற்றவியல் நீதிமன்றம், கூட்டாட்சித் தண்டனை நீதிமன்றம் (Federal Penel Court) முதலியன.

கான்டன்களின் அரசியல் அமைப்பிற்கும் கூட்டாட்சியின் அரசியலமைப்பிற்குமிடையே தகராறு எழுந்தால் கூட்டாட்சி அரசியலமைப்பை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு கூட்டாட்சித் தீர்ப்பாயத்தினுடையதாகும். அரசியலமைப்பிற்கு விளக்கமளிப்பதற்கும் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களைச் செல்லாதெனக் கூறவும் கூட்டாட்சித் தீர்ப்பாயத்திற்கு அதிகாரமில்லை.

## 9.14 கூட்டாட்சித் தீர்ப்பாயமும் நீதிப்புனராய்வும் :

சுவிட்சர்லாந்து ஒரு கூட்டாட்சி நாடு என்பதை ஏற்கனவே கண்டோம். ஆனால் சுவிட்சர்லாந்திலுள்ள தலைமை நீதிமன்றமான கூட்டாட்சித் தீர்ப்பாயம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைமை நீதிமன்றத்திற்கிணையான வலிமையுடையதல்ல. இந்தியத் தலைமை நீதிமன்றத்தை விடவும் வலிமை குறைந்ததுதான் இத்தீர்ப்பாயம். இந்தியாவிலும், அமெரிக்காவிலும் காணப்படும் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றங்கள் அந்நாடுகளில் அரசியலமைப்புகளைப் பாதுகாக்கின்றன. இது குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காணப்படும் நிலையாகும். அமெரிக்கக் காங்கிரஸ், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவை இயற்றும் சட்டங்களும் அரசியலமைப்பிற்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பின் வரம்பு கடப்பனவற்றைச் செல்லாது எனக் கூறும் அதிகாரத்தை அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் பெற்றுள்ளது.

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சித் தீர்ப்பாயத்திற்கு நீதிப்புனராய்வு செய்யும் அதிகாரம்

ஓரளவே உள்ளது. கூட்டாட்சித் தீர்ப்பாயத்தின் அரசியலமைப்புப் பிரிவு, குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல் கடமையைக் கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும் கூட்டாட்சிச் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு ஒத்திருக்கின்றனவா என்று ஆய்வு செய்வதற்குரிய அதிகாரம் இப்பிரிவிற்குக் கிடையாது. மாநிலச் சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களை மட்டும் தான் இத்தீர்ப்பாயம் செல்லாதெனக் கூற முடியும். பொதுமக்கள் விருப்ப வாக்கெடுப்பு (Referendum), பொதுமக்கட் துவக்க உரிமை (Initiative) போன்ற நேரடி மக்களாட்சிக் கருவிகள் பயன்படுத்தப்படும் காரணத்தால் கூட்டாட்சித் தீர்ப்பாயம் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களைச் செல்லாதெனக் கூறும் அதிகாரத்தைப் பெறவில்லை. கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களை இத்தீர்ப்பாயம் செயல்படுத்த வேண்டுமென்று அரசியலமைப்பு கூறுகின்றது. மேலும் கூட்டாட்சி சட்டமன்றத்தால் ஆமோதிக்கப்படும் உடன்டிக்கைகளுக்கொப்ப இத்தீர்ப்பாயம் பணிபுரியவேண்டும்.

சட்டமியற்றுவதிலும், சட்டங்களை ஆமோதிப்பதிலும் பொது மக்கட்கும் பங்குள்ள காரணத்தால் நீதிப்புனராய்விற்கு சுவிட்சர்லாந்தில் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

## 9.15 தொகுப்புரை

சுவிட்சர்லாந்து அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகள், கூட்டாட்சிக் குழுவின் அமைப்பு மற்றும் அதிகாரங்களைத் தெரிந்து கொண்டோம்.

## 9.16 முக்கிய வார்த்தைகள்

முழுமையில்லா காண்டன் - கூட்டாட்சிக்குழு - நேரடிமக்களாட்சி - காண்டன்

## 9.17 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

| | | |
|---|---|---|
| கேள்வி எண் 1 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 9.1ல் அறிக |
| கேள்வி எண் 2 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 9.3ல் அறிக |
| கேள்வி எண் 3 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 9.4ல் அறிக |
| கேள்வி எண் 4 | : | இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 9.6ல் அறிக |

## 9.18 பார்வை நூல்கள்


1. C.J. Frederick, **Constitutional Govt. and Democracy,** Oxford, 1974.
2. J. Blondel, **An Introduction to Comparative Government,** London, Weidenfeid and Nicolson, 1969.
3. H. Finer, **Theory and Practice of Modern Governments**, London, Methuen, 1969.
4. R.C. Macridis and R.E. Ward, **Modern Political Systems : Europe and Asia,** 2nd Edn. Englewood Clifs NJ, Prentice Hall, 1968.
5. R. Maddex, **Constitutions of the World,** 2nd edn., Washington DC and London, CQ Press, 2000.


## 9.19 மாதிரி வினாக்கள்

1. கூட்டாட்சி என்றால் என்ன? சுவிட்சர்லாந்தின் முக்கிய கூட்டாட்சிப் பண்புகளைக் கூர்ந்தாராய்க?

2. சுவிட்சர்லாந்து அரசியலமைப்பைத் திருத்தும் முறைகளை விளக்குக.

3. சுவிட்சர்லாந்தின் நிர்வாகக்குழு செயல்படும் முறையை ஆய்க. பிரிட்டிஷ் நிர்வாகக் குழுவிலிருந்து இது எப்படி மாறுபடுகிறது?

# அலகு - 10

## சுவிட்சர்லாந்தின் அரசியல் கட்சிகள் - தன்னலக்குழுக்கள் - தேர்தல்கள்

### முன்னுரை

அரசியல் கட்சிகள் கூட்டாட்சி இலக்கணங்களுக்கொப்ப செயல்படுகின்றன். அரசியல் கட்சிகள் நிரந்தரமாகப் போராட்டம், கடையடைப்பு என்று ஆர்ப்பாட்டம் செய்வது கிடையாது. தேர்தலின்போதும், மக்கள் பொதுமக்கள் வாக்கெடுப்பின் போதும் மட்டுமே சுறுசுறுப்பாக இருக்கும். மற்ற நேரங்களில் இருக்கும் இடமே தெரியாது. மக்கள் பூர்வாங்கம், பொதுமக்கள் வாக்கெடுப்பு மற்றும் திரும்ப அமைத்தல் ஆகிய நேரடி மக்களாட்சி முறைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் பார்ப்போம்.

### நோக்கங்கள்

சுவிட்சர்லாந்து அரசியல் கட்சி முறைமையை அறிதல்

சுவிட்சர்லாந்தில் தன்னலக்குழுக்கள்

சுவிட்சர்லாந்தில் நேரடி மக்களாட்சியின் செயல்முறைகளை விவரித்தல்

சுவிட்சர்லாந்தில் தேர்தல் முறையை விவரித்தல்

### வடிவமைப்பு

அரசியல் கட்சி முறை

பெரிய அரசியல் கட்சிகள்

அரசியல் கட்சிகளின் அமைப்பு

தன்னலக்குழுக்கள்

தேர்தல் முறை

நேரடி மக்களாட்சி

குடியொப்பம்

மக்கள் துவக்க உரிமை

முதல்நிலை மன்றம்

நேரடி மக்களாட்சியின் நிறை, குறைகள்

### 10.1 சுவிட்சர்லாந்தில் அரசியல் கட்சி முறை

ஒரு குடியாட்சி அரசாங்கத்துக்கு அரசியல் கட்சிகள் இன்றியமையாதவை ஆகும். இந்தப் பொது விதிக்கு சுவிட்சர்லாந்து விலக்கு அன்று. சுவிட்சர்லாந்து நாட்டில் நன்கு அமைக்கப்பட்ட ஆறு கட்சிகள் இருக்கின்றன. அதே சமயத்தில் சுவிஸ் கட்சி அமைப்பில் சில புதுமையான இயல்புகள் இருக்கின்றன. உண்மையில் சுவிஸ் நாட்டில் இருப்பதைப் போல மற்றெந்த ஐரோப்பிய நாட்டிலும் அரசியல் கட்சிகள் கூடுதலாக இருப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. அங்கு இன, சமய, மொழி மற்றும் மாறுபட்ட பொருளாதாரக் கருத்துக்கள் அடிப்படையில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. சுவிஸ் நாட்டில் 'கட்சி வாழ்க்கை வலுவாக இருக்கிறது. கட்சி அமைப்புக்கள் வலுவாக இருக்கின்றன. கட்சி செல்வாக்கு கூடுதலாகக் காணப்படுகிறது. ஆயினும் கட்சிப்பூசல் என்பது கடுமையாக இல்லை. சுவிஸ் நாட்டினைப் போல, வேறு எந்த நாட்டிலும் அரசியல் என்ற கப்பல் கட்சி மாறுதல்களினால் அலைக்கழிக்கப்படாமல் இருந்ததில்லை'. சுவிஸ் மக்களுடைய மனப்பான்மை அவர்களுடைய அரசியல் கட்சிகளில் காணப்படுகிறது. சுவிஸ் அரசியல் கட்சிகள்

நிதானத்துக்கும் பழமை இயல்புக்கும் பெயர் பெற்றவை. அவை தீவிரமான நிலைகளுக்குப் போகும் இயல்புடையவை அல்ல. பிரைஸ் பிரபு, "சுவிட்சர்லாந்தில் அரசியல் கட்சிகள், பிரான்சில் அல்லது இங்கிலாந்தில் கட்சிகள் செயல்படும் நிலையிலிருந்து தாழ்ந்த ஒரு நிலையில் செயல்படுகின்றன" என்று கூறுகிறார். இக்கருத்து பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சுவிஸ் அரசியல் கட்சிகளின் பலவீனத்துக்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

சுவிஸ் கூட்டாட்சிக்குழு அல்லது நிர்வாகம் ஒருநிலையான நிர்வாக அமைப்பு. அதனைச் சட்டமன்றத்தால் நீக்குதல் இயலாது. மேலும் அது கட்சி சார்பற்ற ஒரு நிர்வாக அமைப்பு. இதன் விளைவாக பிரிட்டன் போன்ற பாராளுமன்ற முறை நிலவுகின்ற நாடுகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு கட்சிகள் போராட்டத்தில் ஈடுபடுவது போல், சுவிஸ் நாட்டுப் பாராளுமன்றத்தில் அதிகாரத்துக்காக கட்சிகள் போராட்டம் நடத்துவதில்லை. எனவே உறுதியான அமைப்புக்களைக் கொண்ட கட்சிகள் அங்கு தேவைப்படவில்லை. சுவிஸ் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் மாவட்ட வாரியாகப் பதவி ஏற்று இருக்கின்றரே தவிர கட்சிகளின் அடிப்படையில் அல்ல. இதுவும் சுவிஸ் நாட்டில் வலுவான கட்சி அமைப்பு வளராதிருப்பதற்கு ஒரு காரணமாகும். மேலும் மக்கள் துவக்கம், மக்கள் ஒப்பம் ஆகிய நேரடிய ஜனநாயக செயல்முறைகளும் சட்டமன்றத்தைச் செயலற்றவையாக ஆக்குகின்றன. சட்டம் இயற்றுதல் பற்றிய இறுதித் தீர்ப்பு மக்களிடமே இருக்கின்றது. இதனால் சட்டமன்றத்தில் வலுவான கட்சி அமைப்பு தோன்றுவதற்குத் தேவை இல்லை.

பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, சுவிஸ் கட்சிகள் இறுக்கமாக அல்லாமல் நெகிழ்ச்சியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மாநிலங்களாகிய கான்டன்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியரசுத்தலைவர் தேர்தல் நாடு முழுவதும் நடைபெறுவதைப் போல் சுவிட்சர்லாந்து நாட்டில் நாடு முழுவதும் நடைபெறக்கூடிய தேர்தல் எதுவும் நடைபெறுவதில்லை. தேசிய மட்டத்தில் ஒரு வலுவான கட்சி அமைப்பு இல்லாததற்கு இது ஒரு காரணமாகக் கொள்ளப்படுகிறது. சுவிஸ் அரசியல் கட்சிகள் வலுவற்று இருப்பதற்கு இன்னொரு காரணம், அவைகள் போராடிப் பெறுவதற்கு உரிய வெகுமானம் ஒன்றும் இல்லாமலேயே ஆகும். "சலுகை அளிக்கும் முறை" (Spoils System) என்ற முறை அங்கு இல்லை. ஒவ்வொரு நியமனமும் தகுதியின் அடிப்படையில் செய்யப்படுகிறது. வேறு வகையாகக் கூறினால் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள கட்சிகளைப் போல, சுவிஸ் கட்சிகள் பணிகளை வழங்கும் உரிமை பெற்றிருக்கவில்லை. அவை தமது உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய சன்மானம் எதுவும் இல்லை.

இறுதியாக, சுவிஸ் நாடு ஒரு ஒற்றுமை உடைய நாடே தவிர ஒரே சீரான தன்மை உடைய நாடு அல்ல. அங்கு பல இன மொழி வேறுபாடுகள் இருந்த போதிலும், அவர்களை ஒன்றுக்கொன்று எதிரான வகையில் பிரிக்கக்கூடிய பிரச்சனைகள் எழவில்லை. சுருங்கக்கூறின் சுவிட்சர்லாந்து நாட்டின் சமுதாய, பொருளாதார வாழ்க்கையானது, அங்குள்ள கட்சி இயந்திரங்கள் வளர்வதற்கு வேண்டிய ஊட்டம் கொடுக்கவில்லை. ஏனைய குடியாட்சி நாடுகளைப் போல, சுவிட்சர்லாந்திலும் அரசியல் கட்சிகள் பற்றி அரசியலமைப்பில் யாதொரு குறிப்பும் இல்லை. இருந்த போதிலும் அவைகள் இருப்பதை அது அனுமானித்துக் கொள்கிறது. பிரிட்டனைப் போலவும், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போலவும் அல்லாமல் சுவிட்சர்லாந்தில் பல கட்சிமுறை

**தன்னறிவு சோதனைக் கேள்வி**

1. சுவிட்சர்லாந்து கட்சி முறையை விவரி.
2. ஏன் அரசியல் கட்சிகள் வலுவாக அமையவில்லை?

இருக்கிறது. பல கட்சி இருப்பதனால் அங்கு வலுவற்ற, நிலையற்ற அரசாங்கம் இருக்குமென்றே எண்ணமும் தோன்றுகிறது. ஆனால் இதற்கு மாறாக, சுவிட்சர்லாந்தில பல கட்சிமுறை வியக்கத்தகு முறையில் இயங்கி வருகிறது. சுவிஸ் கட்சிமுறையின் இன்னொரு முக்கிய இயல்பு, அங்கு எதிர்க்கட்சி இல்லாமல் இருப்பதுதான். பிரிட்டனைப் போன்று அல்லாமல் சுவிஸ் நாட்டு அரசியல் அமைப்பு பற்றுறுதியோடு கூடிய எதிர்க்கட்சி எதுவும் இல்லாமல் நன்முறையில் செயல்படுகிறது. சுவிட்சர்லாந்தின் நிர்வாகக் குழுவான கூட்டாட்சிக்குழு எப்போதும் பல கட்சிகளால் அமைக்கப்பட்ட கூட்டு அமைச்சரவையாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

சுவிஸ் நாடு பல வகைகளிலும் புதுமை இயல்புடைய நாடாகப் புகழ் பெற்றுள்ளது. நேர்முகக் குடியாட்சி முறை இருப்பதும் அது நல்ல முறையில் இயங்குவதும், உலகத்திலேயே சுவிஸ்நாடு ஒன்றில்தான். மேலும் அது ஐக்கிய நாடுகள் அவையில் உறுப்பினரும் அல்ல. இதேபோல், நாம் மேலே குறிப்பிட்டபடி, சுவிஸ் அரசியல் கட்சிகளும் மற்ற தற்கால அரசு முறைகளினின்று வேறுபட்ட புதுமையான இயல்புகளைப் பெற்றுள்ளன.

## 10.2 சுவிட்சர்லாந்திலுள்ள பெரிய அரசியல் கட்சிகள்

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சி அரசியலமைப்பில் ஆதிக்கம் செலுத்துகின்ற கட்சிகள் ஏறக்குறைய ஆறு இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் பற்றிய சுருக்கமான விளக்கம் கீழே கொடுக்கப்படுகிறது.

### 10.2.1 தாராளக் கட்சி

இப்பொழுது இருக்கின்ற சுவிஸ் கட்சிகளுள் இதுவே மிகவும் பழமையானது. ஒரு காலத்தில் நாட்டினுடைய நிலையை உருவாக்குவதில் இந்த கட்சியே முக்கிய பங்கெடுத்துக் கொண்டது. தற்கால சுவிட்சர்லாந்து நாட்டை உருவாக்கிய சிறப்பும், 1848-ஆம் ஆண்டின் அரசியலமைப்பை உருவாக்கிய சிறப்பும் இந்தக் கட்சிக்கே உரியவை. 1890 ஆம் ஆண்டு வரை சுவிஸ் கூட்டாட்சி அரசாங்கத்தில் முக்கிய பங்கை தாராளக் கட்சியினர் பெற்றிருந்தனர். இப்பொழுது அவர்களுக்குக் கூட்டாட்சி நிர்வாகக் குழுவில் பிரதிநிதித்துவம் இல்லை. இன்று இந்தக் கட்சி கூட்டாட்சி இயல்புடையதாக இருக்கிறது. அதாவது மாநில உரிமைகளின் கட்சியாகவும் அரசாங்க அதிகாரம் வளர்ந்து வருவதை எதிர்ப்பதாகவும் பிரெஞ்சுமொழி பேசுகின்ற புரட்டஸ்டண்டு உயர்குடி மக்களையும், மேல் நடுத்தர வகுப்பாரையும் உடையதாகவும் இருக்கிறது. இது வலிமை பெற்று இருக்கின்ற இடங்கள் ஜெனீவா, லாசேன், நவ்ஷேட்டல் பேஸில் நகரம் ஆகியவையாகும். எவ்வாறெனினும் தாராளக்கட்சி இப்பொழுது ஒரு சிறிய அரசியல் குழுவாகவே இருக்கிறது.

### 10.2.2 தீவிரக் குடியரசுக் கட்சி

இன்று சுவிஸ் அரசியல் முறையமைவில் வலுவான கட்சிகளுள் ஒன்றாக தீவிரக் குடியரசுக் கட்சி திகழ்கிறது. அது அதிகார குவிப்பும், தாராள இயல்பும், சமயச் சார்பற்ற இயல்பும், குடியாட்சி முறையும் உடைய ஒரு அரசை நிறுவுவதில் பெரும் பங்கு எடுத்துள்ளது. தாராளத் தத்துவமும் இக்கட்சியினர் மக்கள் ஒப்பம், மக்கள் துவக்கம் ஆகியவற்றின் மூலமாக நாட்டில் குடியாட்சி அரசியல்முறை விரிவாக்கப்படல் வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றனர். கூட்டாட்சி அதிகாரக் குவிப்பு என்ற முறையை உருவாக்குவதில் இக்கட்சிக்கு முக்கியப் பங்கு உண்டு. இக்கட்சியின் பிரச்சாரக் கூறுகளாக இருப்பவை சமயச்சார்பின்மை, தனிமனித சுதந்திர

உரிமை, அரசியல் வகையான குடியாட்சி ஆகியவையாகும். அடிப்படையில் தீவிரவாதிகள் அரசாங்கம் தலையிடுதல் கூடாது என்ற கோட்பாட்டை விரும்பினாலும், அண்மைக் காலத்தில் சமுதாயத்தை எல்லா வகைப்பட்ட பொருளாதாரத் தவறுகளிலிருந்தும், தீங்குகளிலிருந்தும் காப்பாற்றும் பொருட்டு அரசு தலையிடுதல் அவசியம் என்று உணர்ந்துள்ளனர். எழுபது ஆண்டுகளுக்கு மேலாகத் தீவிரவாதிகள் சுவிஸ் அரசியலில் முக்கியமான பிரச்சனையாக இருந்துள்ளனர். தற்கால சுவிஸ் நாட்டின் அடிப்படைகளை அமைப்பதில் தாராளக் கட்சிக்குப் பெரும் பங்கு உண்டென்றால், இன்று சுவிட்சர்லாந்து நாடு இருக்கிற நல்ல நிலைமைக்கு அதனை உயர்த்திய பெருமை தீவிரவாதிகளேயே சாரும் எனலாம்.

### 10.2.3 கன்ஸர்வேட்டிவ் கட்சி

கத்தோலிக்க கன்சர்வேட்டிவ் கட்சி கிறிஸ்தவக் குடியரசுவாதிகள் கட்சி என்றும் அழைக்கப்படும். இது வாக்காளர் ஆதரவைப் பொறுத்த வரையில் மேற்கூறப்பட்ட கட்சிக்கு அடுத்த முக்கியத்துவம் உடையதாகும். மேலும் இது சுவிஸ் அரசியலமைப்பில் உள்ள பெரிய கட்சிகளில் ஒன்றாகும். அடிப்படையில் இந்தக் கட்சி கூட்டாட்சி முறைக்கு மிகவும் வலுவான எதிர்ப்பைக் கொண்டிருந்தது.

ஆனால் அது மற்ற கட்சிகளோடு நெடுங்காலம் ஒத்துழைத்ததன் பயனாக தன்னுடைய பழைய கருத்துக்களை மாற்றிக்கொண்டது. இன்றும் கூட இந்தக் கட்சி, சுவிஸ் நாட்டின் உண்மையான மாநில உரிமைகளின் கட்சியாக விளங்குகிறது. அதன் கொள்கை தனியார் உரிமையும் தாராள இயல்பும் அன்று. ஆனால் அது தெளிவான சமயச் சார்புடைய கொள்கையாக இருக்கிறது.

### 10.2.4 சமுதாயக் குடியரசுக் கட்சி

அண்மைக் காலத்தில் சமுதாயக் குடியரசுக் கட்சி சுவிஸ் அரசியலமைப்பில் ஒரு முக்கிய பங்கை பெற்றுள்ளது. அது 1933 ஆம் ஆண்டு தேர்தலில் சட்ட மன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. சமுதாயக் குடியரசுக் கட்சியானது ஆலைத் தொழிலாளர்களாலும், அரசாங்க அலுவலர்களாலும் மற்ற தொழிலாளர் வகுப்புக்களாலும் ஆதரிக்கப்படுகிறது. அதன் கொள்கை அரசியல் தாராளமயம், மார்க்சிய பொருளாதாரம், திட்டமிடும் கொள்கை ஆகியவையெல்லாம் சேர்ந்த ஒரு புதுமையான கலவையாகும். இதுதான் முன்பு பின்பற்றி வந்த தீவிரப் போக்கை விடுத்துத் திட்டமிட்ட பொருளாதாரக் கோட்பாட்டின் மூலமாக சோஷலிசமும் மாற்றியமைக்கப்பட்ட முதலாளித்துவமும் சேர்ந்த ஒரு புது முறையை ஏற்படுத்த முயலுகிறது.

### 10.2.5 பொதுவுடைமைக் (தொழில்) கட்சி

இதுவே நாட்டின் ஒரே இடதுசாரிக் கட்சியாகும். தற்சமயத்தில் இதை ஆதரிப்பவர்கள் மிகக் குறைவே. சுவிட்சர்லாந்தில் இது வலுவற்று இருப்பதற்கு முக்கியக் காரணம், அந்நாட்டில் நிலவுகின்ற நிலையான பொருளாதார அரசியல் நிலைமைகளும், நடைமுறை நிலையைப்பற்றி எவருக்கும் மனக்குறைவு இன்மையுமே ஆகும். கூட்டாட்சி அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் உறுதியான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருப்பதனாலும், சமுதாயத்தின் வாழ்க்கை செழிப்பாக இருப்பதனாலும் இந்தக் கட்சிக்கு சிறப்பான வெற்றி எதுவும் கிட்டவில்லை.

### 10.2.6 சிறுபான்மைக் கட்சிகள்

மேற்கூறிய கட்சிகளைத் தவிர சுவிட்சர்லாந்தில் தாராள சோசலிஸ்டுகள்,

குடியரசுவாதிகள், சுயேச்சையாளர்கள் ஆகிய சிறுபான்மைகள் கட்சிகளும் இருக்கின்றன. சுயேச்சையாளர்கள் சாதாரண மக்களின் நலன்களைத் தாங்கள் பாதுகாப்பதாகவும், திறமை மிக்க ஆட்களைத் தம்முடன் சேர்த்துக் கொள்ள விழைவதாகவும் கூறுகின்றனர்.

## 10.3 சுவிட்சர்லாந்தின் அரசியல் கட்சிகளின் அமைப்பு

அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல சுவிட்சர்லாந்தின் அரசியல் கட்சிகள் நன்கு அமைக்கப்படவில்லை. அவற்றின் அமைப்பும் சிக்கல் நிறைந்தது அல்ல. அவை மூன்று நிலை அமைப்பை உடையவை. அடித்தளத்தில், மாநிலகட்சிகளிடமிருந்து வருகின்ற பிரதிநிதிகள் கொண்ட ஒரு பெரிய குழு இருக்கிறது. இதனுடைய முக்கிய அலுவல் கட்சிக் கொள்கைகளை வகுப்பதும், அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதும், கட்சிக் கொள்கைகளை வகுப்பதும் மற்ற கட்சி உறுப்புகளுக்கு ஆணை விடுத்தலும் ஆகும். இவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாவது கூடுகின்றனர். நடுமட்டத்தில் நடுவணக் குழு ஒன்று இருக்கிறது. இது கட்சி அலுவல்களை இயக்குகிறது. இது தவறாமல் கூட்டம் நடத்துகிறது. உயர்மட்டத்தில் இருபதிலிருந்து இருபத்தி நான்கு வரை உறுப்பினர்களையுடைய ஒரு சிறிய குழு இருக்கிறது. அது கட்சி அமைப்புக்களின் தீர்மானங்களை நிறைவேற்றுகிறது. அது கட்சிக்குத் தலைவர்களையும் அளிக்கிறது. முழு நேரப் பணியாளரான ஒரு செயலாளர் பர்ன் நகரத்தில் சில உதவியாளர்களோடு தலைமை அலுவலகத்தை நிர்வகிக்கிறார்.

எனினும் சுவிட்சர்லாந்தில் அரசியல் கட்சிகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகளிலுள்ள கட்சிகளை விட மிகத்தாழ்ந்த நிலையில் தான் செயல்படுகிறது. சுவிட்சர்லாந்தில் சட்டம் இயற்றும் முறையில் இறுதித் தீர்ப்பு மக்களிடையே இருக்கிறது. இந்த நிலை கட்சிகளின் செயல்களைப் பின்னணிக்கு ஒதுக்கிவிட்டது. மேலும் சுவிஸ் மக்கள் சர்வதேச உறவுகளில் நடுநிலைமையும், சுதந்திரமும், பொருளாதார நலனும் தங்களுக்கு இருக்க வேண்டும் என்பதில் பெருமளவு வேறுபட்ட கருத்துக்களைப் புகுத்துவது இல்லை. இந்த காரணங்கள் அரசியல் கட்சிகளைப் பயனற்றவையாக ஆக்கிவிட்டன.

## 10.4 சுவிட்சர்லாந்தில் தன்னலக் குழுக்கள்

சுவிஸ் அரசியலமைப்பு ஒரு சிறந்த அல்லது வெளிப்படையான அமைப்பு ஆகும். அங்கு நேர்முகக் குடியாட்சி இன்றும் நடைபெறுகிறது. அதன் அரசியல் செயல் முறையில் தன்னலக்குழுக்கள் வெளிப்படையாகவும் நேரடியாகவும் பங்கு கொள்வதற்கு அரசியல் முறையானது அமெரிக்க அரசியலமைப்பை விட கூடுதலான வாய்ப்புக்களை அளிக்கிறது. சுவிஸ் அரசியலமைப்பில் தன்னலக் குழுக்களுக்கு சில தனித்த இயல்புகள் இருக்கின்றன. அங்கு தன்னலக் குழுக்களின் செயலானது சாதாரண அரசியலோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் செயல்முறையில், பல கட்சி முறை முழுவதும் நிலை பெற்றிருக்கிறது. கட்சிகளுக்கு இடையே மிகத் துல்லியமான வகையில் தத்துவ வேறுபாடுகள் இல்லாவிடினும் அவைகள் தங்களுடைய நோக்கங்களை அடைவதற்கு பல்வேறு வழிகளைக் கையாளுகின்றன. சுவிட்சர்லாந்தில் தன்னலக் குழுக்களுக்கு தங்களுடைய தரத்தையும், நோக்கங்களையும் எடுத்துக் கூறக் கூடிய கட்சியின் உதவி எப்போதும் கிடைக்கிறது. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை அங்கிருப்பதனால் அங்கு பல தன்னலக் குழுக்கள் தோன்றியுள்ளன. சுவிஸ் சட்டமன்றத்திற்கும் தன்னலக் குழுக்களைப் பொறுத்தவரையில் சில குறிப்பிட்ட செயல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நீண்ட பாராளுமன்ற கூட்டக் காலமும் குறைந்த

ஊதியமும் அங்கு இருப்பதால், அங்கு அரசியலையே பிழைப்பாக உடையவர்கள் இருப்பதில்லை. நேர்முகக் குடியாட்சி முறை இருப்பதனால், தன்னலக் குழுக்கள் பெருமளவில் செயல்பட முடிகிறது. இவ்வகையில், மக்கள் துவக்கம், ஒப்பம் ஆகிய முறைகள் மட்டும் மக்களுடைய கருவிகளாக இல்லாமல், அரசியல் அறிவுமிக்க தன்னலக் குழுக்களும் கருவிகளாக இருக்கின்றபடியால் தன்னலக்குழுக்கள் தங்களுடைய நோக்கங்களுக்கு ஏற்ப நாட்டின் அரசியல் செயல்முறையில் பங்குகொள்ள முடிகிறது. சுவிட்சர்லாந்தில் வாணிபத்திலிருந்து தொழில்துறை வரையிலும், வேளாண்மையிலிருந்து பணிவகை வரையிலுமாகப் பல்வேறு தன்னலக் குழுக்கள் இருக்கின்றன. பெரிய தன்னலக் குழுக்கள் ஏதேனுமொரு அரசியல் கட்சியின் மூலமாகவோ அல்லது நேர்முகக் குடியாட்சி முறையின் மூலமாகவோ அரசியல் செயல்முறையில் ஈடுபடுகின்றன.

சுவிஸ் அரசியல் முறையில் காணப்படும் தன்னலக்குழுக்களின் செயல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலோ, பிரான்சிலோ காணப்படும் தன்னலக்குழுக்களின் செயலைப் போல வலிமையோ பயனோ உள்ளதல்ல. சுவிட்சர்லாந்தில் பொதுவாகத் தன்னலக்குழுக்கள் அதற்குள்ள முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. இதற்குக் காரணம் சுவிஸ் மக்கள் மரபு வழியாக அரசியலைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணம் தான். இயல்பில் சுவிஸ் மக்கள் பழமையைப் போற்றுபவர்கள். அவர்கள் வன்முறையிலான தந்திர முறைகளையும் விரும்புவதில்லை. நிலைமையைத் தம் விருப்பம் போல் கையாளுவதற்கு நேர்முகக் குடியாட்சி முறையே தன்னலக்குழுக்களுக்கு இருக்கும் சிறந்த முறையாகும். சாதாரண மக்கள் அரசியல் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் முந்திய நிலையில் தீவிர மாறுதல்களை ஏற்படுத்துகிற விஷயங்களை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இதன் விளைவாக மக்கள் முழுவதுமாக நாட்டின் அரசியலைக் கட்டுப்படுத்தாமல், ஒரு வல்லுநர் குழு மூலமாக கட்டுப்படுத்துகின்றனர்.

## 10.5 தேர்தல் முறை

சுவிட்சர்லாந்து உண்மையான மக்களாட்சி முறையில் அமைந்த நாடு என்று கூறுவதில் தவறில்லை. ஆனால் 1971 ஆம் ஆண்டு வரை பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படாததைத் தொடர்ந்து அது சரியில்லாத மக்களாட்சி முறையைக் கொண்ட நாடு என்று கருதப்பட்டது. இக்குறைபாடு 1971 ஆம் ஆண்டைய அரசியலமைப்பு திருத்தத்தின் விளைவாக களையப்பட்டது. இங்கு நேரடி மக்களாட்சியும், பிரதிநிதித்துவ மக்களாட்சியும் நடைபெறுவதால் பிரதிநிதிகளை நியமனம் செய்யும் முறை சுதந்திரமான தன்னிச்சையான முறையில் எல்லா வயது வந்தவர்களையும் கொண்டு நடைபெறுகிறது. அரசியலமைப்பின் 74வது விதி, இருபது வயது கடந்த எல்லா மக்களுக்கும் தேர்தலிலும், மக்கள் ஒப்பத்திலும் (referendum) கலந்து கொள்ள உரிமை அளிக்கிறது. மத்திய அரசு ஒரே மாதிரியாகத் தேர்தலில் வாக்களிக்கும் முறையைக் கொண்டுவர சட்டங்களை உருவாக்கலாம். அதே போன்று தேர்தலில் வாக்குளிக்கும் உரிமையை ஒரு குடி மகனுக்கு மறுக்கும் சட்ட விதிகளையும் உருவாக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. அதே போல் கூட்டாட்சிச் சட்டமன்றம் (Federal Assembly) வாக்குரிமையைக் குறித்த சட்டங்களை இயற்றும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. இந்த அதிகாரம் அரசியலமைப்பு விதி 69இல் கூறப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு சுவிஸ் குடிமகன் புத்தி சுவாதீனமில்லாதவராக, குற்றம் புரிந்தவராக, திவாலானவராக

இருப்பின் அவருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது. சில கான்டன்கள் மேலும் சில நிபந்தனைகளை விதித்துள்ளன. பொதுப்பணி செய்தலில் தவறிழைத்தவனுக்கும் மற்ற நாடுகளின் பணியை மேற்கொண்டவனுக்கும் மது அருந்தும் பழக்கம் கொண்ட, பொது விடுதிகளில் தங்குவதற்கு அனுமதி பெறத் தகுதி இல்லாதவர்களுக்கும் வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது. எல்லா குடிமக்களுக்கும் தாம் வாழும் பகுதியிலுள்ள வாக்குச்சாவடியில் வாக்களிக்க உரிமை அளிக்கப்படுகிறது. சில கான்டன்கள் வாக்கு அளிக்கும் உரிமையை அவரவர் விருப்பத்திற்கு விட்டுள்ளன. மேலும் சில கான்டன்களில் வாக்களிப்பது ஒரு குடிமகனின் முக்கிய கடமையாகும். சில கான்டன்களில் மத்தியச் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் கடமை கட்டாயமாகவும், கான்டன் தேர்தலில் வாக்களிப்பது அவரவர் விருப்பத்திற்கும் விடப்படுகிறது.

தேர்தல்களில் விகிதாச்சார மற்றும் பட்டியல் முறை நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன. தேர்தலின் போது, கட்சிப்பட்டியல் போன்றவை குறித்த வேலைகள் கான்டன்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. தேர்தலுக்கு முன், போட்டியிட விரும்பும் ஒவ்வொரு கட்சியும் வேட்பாளர் அடங்கிய பட்டியல் ஒன்றை 15 வாக்காளரின் கையொப்பத்துடன் கான்டன் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். ஒரு பட்டியல் ஒரு கான்டனுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கைக்குக் குறைவாக வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு அதிகமான பெயர்களைக் கொண்ட பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இரண்டு கட்சிகளில் ஒருவர் பெயர் இடம் பெற்றிருப்பின், தேர்தலுக்கு 30 நாட்களுக்கு முன் அந்த வேட்பாளர் தான் எந்தக் கட்சிப் பட்டியலில் போட்டியிட விரும்புகிறார் என்பதைத் தேர்தல் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும். மனுக்களைப் பரிசீலித்த பின் எல்லா வேட்பு மனுக்களும் கூட்டாட்சிக் குழுவிற்கு (Federal Council) அனுப்பப்படும். அவர்கள் அனுமதி வழங்கியவுடன் போட்டியிடும் கட்சிகளும், அதில் அடங்கிய வேட்பாளர்களின் பெயர்களும் பொதுமக்களுக்கு பொது அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படும்.

ஒரு வாக்காளர் எத்தனை வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமோ அத்தனை வாக்குகளைப் பெறுகிறார். ஒரு வாக்காளர் தன் வாக்குகளை ஒரு பட்டியலுக்கோ அல்லது பட்டியலில் உள்ள சில வேட்பாளருக்கு மட்டுமோ அளிக்கலாம். தேர்தல் முடிவுற்றவுடன் எல்லா கட்சிகளுக்கும் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையோடு ஒரு எண் சேர்த்து வகுக்கப்படும். இவ்வாறு கிடைக்கும் ஈவு எண் தான் வெற்றிபெறத் தேவையான தேர்தல் வாக்குகள் இந்த எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு கட்சிக்கும் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

## 10.6 நேரடி மக்களாட்சி (Direct Democracy)

மக்களாட்சி என்பது மக்களே மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம் எனச் சொல்லப்படுகிறது. மக்கள் அனைவரும் ஆட்சிச் செயல்களில் பங்கு பெற முடியாத வகையில் அவர்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்கிறார்கள். அத்தகைய மக்களாட்சி மறைமுக மக்களாட்சி (Indirect Democracy) எனப்படும். பிரதிநிதிகளின் கையில் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தாலும் மக்கள் தாங்களே நேரடியாகப் பங்கு பெற வாய்ப்புள்ளது. அத்தகைய நேரடி மக்களாட்சி வழிமுறைகள் சுவிஸ் நாட்டில் நடைமுறையில் உள்ளன.

## 10.7 குடியொப்பம்

சாதாரணமாகப் பல அரசியலமைப்புகளில் சட்டமியற்றுதல், அரசியலமைப்பைத் திருத்துதல் போன்ற பணிகள் சட்டமன்றத்தால் மட்டுமே செய்யப்படுகின்றன. அத்தகைய பணிகளில் மக்கட்கு நேரடியான பங்கு கிடையாது. ஆனால் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அல்லது அரசியலமைப்புத் திருத்தம் மக்கள் முன் வைக்கப்பட்டு அவர்களின் கருத்தை அறிய வாய்ப்பளிப்பது குடியொப்பமாகும். மக்கள் வாக்கெடுப்பில் பெரும்பான்மையானவர்கள் இயற்றப்பட்ட சட்டம் அல்லது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தால் அது நடைமுறைக்கு வரும். பெரும்பான்மையானவர்கள் எதிராக வாக்களித்தால் அது கைவிடப்படும். அவ்வாறு சட்டங்கள் இயற்றுவதில் மக்கள் தம் முடிவைத் தாங்களே எடுக்கும் வாய்ப்பளிப்பது குடியொப்பம்.

சுவிஸ் நாட்டில் குடியொப்பம் கட்டாயக் குடியொப்பம் (Compulsory Referendum), விருப்பக் குடியொப்பம் (Optional Referendum) என இருவகைப்படும். சுவிஸ் கூட்டாட்சிச் சட்டமன்றம் இயற்றும் எல்லா அரசியலமைப்புத் திருத்தங்களும் கட்டாயமாகப் பெரும்பான்மையான மக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். எனவே, எல்லா அரசியலமைப்புத் திருத்தங்களும் மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படுகின்றன. இது கட்டாயக் குடியொப்பமாகும். கூட்டாட்சிச் சட்டமன்றம் இயற்றும் சாதாரணச் சட்டங்கள் குடியொப்பத்திற்கு விடப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் மக்கள் விரும்பினால் ஒரு குறிப்பிட்ட சட்டம் குடியொப்பத்திற்கு விடப்பட வேண்டும் எனக் கோரலாம். விருப்பத்தின் அடிப்படையில் எழுவதால் அது விருப்பக் குடியொப்பம் எனப்படுகிறது. ஒவ்வொரு கூட்டாட்சிச் சட்டமும் சட்டமன்றத்தால் இயற்றப்பட்டவுடன் அதிகாரப் பூர்வமான அரசாங்க இதழில் வெளியிடப்படுகின்றது. இவ்விதழின் பிரதிகள் எல்லா குறுநிலப்பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன. அவ்வாறு சட்டம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் அச்சட்டத்தின் மீது மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கோரலாம். எட்டுக் குறுநிலப் பகுதிகளோ அல்லது 30,000 மக்களோ அத்தகைய வேண்டுகோள் விடுத்தால் மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். பெரும்பான்மையினர் எதிராக வாக்களித்தால், அது நடைமுறைக்கு ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது (Budget) குடியொப்பத்திற்கான வேண்டுகோள் விடுக்க முடியாது. கூட்டாட்சிச் சட்டமன்றம் அவசரமானவை எனும் அறிவிப்புடன் நிறைவேற்றும் சட்டங்கள் மீதும் குடியொப்பம் நடத்தக் கோரிக்கை விடமுடியாத நிலை இருந்தது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கூட்டாட்சிச் சட்டமன்றம் பல சட்டங்களை அவசரமானவை என அறிவித்து மக்கள் வாக்கெடுப்பிற்கு உட்படுத்த விடாமல் செய்யத் தலைப்பட்டது. எனவே 1947-ல் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தம் சட்டமன்றத்தின் இந்த அதிகாரத்தைக் குறைத்தது. தற்போது அவசரமானவை என்று கூட்டாட்சிச் சட்டமன்றம் சொல்லுகின்ற சட்டங்கள் மீது கூட மக்கள் விருப்ப வாக்கெடுப்பு நடத்தக் கோரிக்கை விடுக்கலாம் என்ற நிலை உள்ளது. குறுநிலப் பகுதிகளில் அவற்றின் அரசியல்மைப்புத் திருத்தங்கள் கட்டாய குடியொப்பத்திற்கு உட்பட்டவை. சில குறுநிலப் பகுதிகளில் அவற்றின் சட்டமன்றங்கள் இயற்றும் சாதாரணச் சட்டங்கள் கூட விருப்பக் குடியொப்பத்திற்கு உட்பட்டவை.

> **தன்னறிவு சோதனைக் கேள்வி**
> 3. நேரடி மக்களாட்சி முறை என்றால் என்ன?
> 4. நேரடி மக்களாட்சி முறைகள் யாவை?

விருப்பக் குடியொப்பம் நடத்தப்படும் விதம் சுவையானதாகும். கூட்டாட்சிக் குழு தகுதி பெற்ற வாக்காளர்கட்கு அஞ்சல் தலை ஒட்டப்பட்ட அட்டைகளை

அனுப்பிவைக்கிறது. குறிப்பிட்ட சட்டம் வெளியாகி சுற்றுக்கு விடப்பட்டவுடன் அது மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும் என விரும்பும் வாக்காளர்கள் தங்களிடம் உள்ள அட்டையில் கையொப்பமிட்டுக் கூட்டாட்சிக் குழுவிற்கு அனுப்புகின்றனர். தேவையான குறைந்த பட்ச அளவு வாக்காளர்கள் கையொப்பமிட்டு அனுப்பினால் அரசாங்கம் குடியொப்பம் நடத்த ஆயத்தமாகிறது. குறைந்தது நான்குவார கால அவகாசம் கொடுக்கப்பட்டு ஒரு ஞாயிற்றுக்கிழமையில் வாக்கெடுப்பு நடக்கிறது. குறுநிலப்பகுதிகளின் அதிகாரிகள் இத்தகைய வாக்கெடுப்பை நடத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். வாக்குச்சீட்டுகள் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன. தேவாலயங்கள் (Churches) வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய மக்கள் வாக்கெடுப்புகளில் லஞ்சம், ஆள் மாறாட்டம் போன்ற தவறுகள் நேர்வது அரிது எனச் சொல்லப்படுகிறது.

## 10.8 மக்கள் துவக்க உரிமை

மக்களே சட்டமியற்றுதலைத் துவக்குதல் துவக்கவுரிமை (Initiative) எனப்படும். இந்தியாவில் மத்தியில் பாராளுமன்றமும் மாநிலத்தில் சட்டமன்றமும் மட்டுமே சட்டமியற்ற முடியும். ஆனால் சுவிஸ் மக்கள் தாங்கள் விரும்புகின்ற சட்டத்தை இயற்றச் செய்கின்ற உரிமை பெற்றுள்ளனர். தாங்கள் விரும்பும் சட்ட வடிவை மக்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்து அதன் அடிப்படையில் சட்டமியற்ற முயற்சிக்கலாம். குறைந்த பட்சம் 50,000 பேர் கையொப்பமிட்டுக் கொடுக்கின்ற வேண்டுகோள்கள் அரசாங்கத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சுவிஸ் நாட்டில் இத்துவக்கவுரிமை அரசியலமைப்புத் திருத்தங்கட்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. தங்களது கருத்தை வடிக்கப்பட்ட நிலையில் ஒரு சட்டமுன்வரைவைப் போல எழுதியே மக்கள் கொடுக்கலாம். அவ்வாறு கொடுப்பதை வடிக்கப்பட்ட துவக்கம் எனலாம். வடிக்கப்படாத நிலையில் அது அமைந்தால் அதற்கு வடிவங்கொடுத்தும் பின் திருத்தங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது வேறு அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

## 10.9 முதல் நிலைமன்றம்

முன் காலத்தில் கிரேக்க நகர் அரசுகளில் (City States) வாக்குரிமை பெற்ற அனைவருமே மன்றத்தில் கூடிச் சட்டமியற்றுதல், ஆட்சிக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தல் போன்ற பணிகளைச் செய்தனர். இது நேரடி மக்களாட்சியின் முழுமையான நடைமுறை எனலாம். இத்தகைய மன்றம் சுவிஸ் நாட்டின் சில சிறிய குறுநிலப் பகுதிகளில் இயங்குகிறது. அப்பகுதியிலுள்ள வயது வந்த ஆண்கள் அனைவரும் ஆண்டுக்கொருமுறை ஒரு திறந்த வெளியில் கூடி பல முக்கிய அரசியல் பணிகளைச் செய்கின்றனர். அதைத் திறந்த வெளிமன்றம் அல்லது முதல் நிலை மன்றம் எனலாம். அது எல்லா பணிகளையும் செய்கிறது. இது சிறப்பாகச் சட்டமன்றம் செயல்பட ஏழுபேர் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்படுகிறது. லாண்டமேன் எனும் தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த அமைப்புப் போல உலகில் வேறெங்குமில்லை எனலாம். 17-ஆம் நூற்றாண்டில் இத்தகைய அமைப்புக்கள் 11 குறுநிலப் பகுதிகளில் செயல்பட்டன. ஆனால் தற்போது 4 அரைக் குறுநிலப் பகுதிகளில் மட்டுமே செயல்படுகின்றன.

## 10.10 நேரடி மக்களாட்சியின் நிறை, குறைகள்

சுவிட்சர்லாந்தில் மேலே குறிப்பிட்ட நேரடி மக்களாட்சி வழி முறைகள்

நடைமுறையில் உள்ளன. இத்தகைய நேரடி மக்களாட்சியில் மக்கள் தங்களது கருத்துக்களை வலுவாகச் சொல்லவும் அவற்றைச் செயல்படுத்தவும் நல்ல வாய்ப்பு உள்ளது. மக்களின் உணர்வுகளைத் துல்லியமாகப் பிரதிபலிக்கும் வகையில் சட்டங்கள் அமைய வாய்ப்பு உள்ளது. மக்களின் ஒப்புதலின்றி அவர்கள் மீது எவ்வித அரசியலமைப்பையும் திணிக்க முடியாது. இத்தகைய வழி முறைகள் இருப்பதால் சட்டமன்ற உறுப்பினர்கள் கவனத்துடனும், கடமையுணர்வோடும் செயலாற்றுகின்றனர். மக்களிடையே பொறுப்புணர்வும் நாட்டுப்பற்றும் வளர்கின்றன. நேரடி மக்களாட்சி நடைமுறையில் உள்ளதால் அரசியல் கட்சிகளின் தீங்குகள் பேரளவு குறைக்கப்பட்டுள்ளன. வீண்குழப்பங்கள், கூச்சல்கள் இவற்றை மூலதனமாக வைத்து அரசியல்கட்சிகள் பிழைக்க முடியாது. தாங்களே ஆட்சியாளர்கள் என்ற உண்மையான மக்களாட்சித் தத்துவம் மக்கள் மனதில் எழ இது உதவுகிறது.

நேரடி மக்களாட்சியில் சில குறைகளும் உள்ளன. மக்களே சட்டத்தைத் துவக்கவும் அரசியல் அமைப்புகளின் நிலையை முடிவு செய்யவும் உரிமை பெற்றுள்ளதால் சட்டமன்றம் தனது வலுவை இழக்கிறது. சட்டங்களை இயற்றவும் அரசியலமைப்புத் திருத்தங்களைப் புரிந்து கொள்ளவும் நுணுக்கமான அறிவும் தேவை. திருத்தங்களை இத்தகைய பணிகளை சாதாரண மக்களிடம் விடுவதால் பொருளற்ற சட்டங்கள் இயற்றப்படவும் தேவையான திருத்தங்கள் நிராகரிக்கப்படவும், வாய்ப்புண்டு. நேரடி மக்களாட்சி மக்களைப் பழமை விரும்பிகளாகவே வைத்திருக்கிறது என்றும் குறை சொல்லப்படுகிறது. அடிக்கடி மக்கள் வாக்கெடுப்புகள் நடத்துவதால் அதிக பணம் செலவாகிறது. மேலும் மக்கள் சலிப்படைந்து அவற்றில் அதிக ஆர்வம் காட்டாமல் விட்டு விடுகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

சுவிட்சர்லாந்தில் நேரடி மக்களாட்சி திறம்படவே செயல்பட்டு வருகிறது. 1848 முதல் 1949-க்குள் அரசியலமைப்புக்களின் திருத்தம் பற்றிய கட்டாய வாக்கெடுப்புகளின் எண்ணிக்கை 96. அவற்றில் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருக்கின்றனர். மக்கள் விருப்ப வாக்கெடுப்பு நடைபெற்றது. இவற்றில் பலமுறை சாதாரணச் சட்டங்களை மக்கள் நிராகரித்துள்ளனர். சுவிட்சர்லாந்தில் நேரடி மக்களாட்சி வெற்றி பெற பல காரணங்கள் உள்ளன. வரலாற்று அடிப்படையில் சுவிஸ் மக்கள் இத்தகைய அரசியல் பரிசோதனைக்கு ஏற்றவர்கள். அங்கு இயங்கி வந்துள்ளன. ஊழல், மோசடி, பயம் போன்றவை நேரடி மக்களாட்சியின் எதிரிகள் இவற்றால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டில் நேரடி மக்களாட்சி வெற்றி பெற முடியாது. சுவிஸ் மக்களிடம் இத்தகைய குறைகள் இல்லை. எனவே அவர்கள் நேரடி மக்களாட்சிக்குத் தகுதியானவர்கள் எனலாம். சுவிஸ் மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் பண்பு மிகுந்தவர்கள். அவர்கள் தெளிவான சிந்தனையுடனும் நிதானமுடனும் செயலாற்றுகிறார்கள். சுவிஸ் நாட்டின் பத்திரிக்கைகள் மக்களிடையே குழப்பத்தை விளைவித்து அதை மூலதனமாக்கி முன்னேற எண்ணுவதில்லை. அவை நேரடி மக்களாட்சியின் வெற்றிக்கு மனப்பூர்வமான ஒத்துழைக்கின்றன. சுவிட்சர்லாந்தின் புவியியல் அமைப்பு, அதன் அளவு ஆகியவையும் இதற்கு உதவுகின்றன.

## 10.11 தொகுப்புரை

**தன்னறிவு சோதனைக் கேள்வி**
5. நேரடி மக்களாட்சியின் குறைகளை எழுது.

சுவிட்சர்லாந்தின் சட்டமன்ற அமைப்பு, அதிகாரங்கள் பற்றியும், நீதித்துறை, அரசியல் கட்சிமுறை மற்றும் நேரடி மக்களாட்சி ஆகியன பற்றி தெளிவாக அறிந்து கொண்டோம்

## 10.12 முக்கிய வார்த்தைகள்

மக்கள் பூர்வாங்கமுயற்சி - பொதுமக்கள் வாக்கெடுப்பு - திரும்ப அமைத்தல்.

## 10.13 தன்னறிவு கேள்விக்கான பதில்கள்

கேள்வி எண் 1 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 10.1ல் அறிக

கேள்வி எண் 2 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 10.2ல் அறிக

கேள்வி எண் 3 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 10.6ல் அறிக

கேள்வி எண் 4 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 10.7ல் அறிக

கேள்வி எண் 5 : இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 10.10ல் அறிக

## 10.14 பார்வை நூல்கள்


1. C.J. Frederick, **Constitutional Govt. and Democracy,** Oxford, 1974.
2. H. Finer, **Theory and Practice of Modern Governments,** London, Methuen, 1969.
3. R.C. Macridis and R.E. Ward, **Modern Political Systems : Europe and Asia,** 2nd Edn. Englewood Clifs NJ, Prentice Hall, 1968.
4. R. Maddex, **Constitutions of the World,** 2nd edn., Washington DC and London, CQ Press, 2000.
5. F.A. Ogg and Zink, **Modern Foreign Governments,** New York, Macmillan, 1964.


## 10.15 மாதிரி வினாக்கள்

1. சுவிட்சர்லாந்தின் சட்டமன்றம் எவ்வாறு அமைக்கப்படுகிறது? அதன் அதிகாரங்களை ஆய்க.
2. சுவிட்சர்லாந்துக் கூட்டாட்சித் தீர்ப்பாயத்தின் அமைப்பு, அதிகாரங்கள், நிலை ஆகியவற்றை விளக்குக.
3. நேரடி மக்களாட்சி முறைகள் யாவை? அவை சுவிட்சர்லாந்தில் எவ்விதம் செயல்படுகின்றன என்பதை விளக்கி அவற்றின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டுக.

# மாதிரி வினா

## ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு பதில் அளிக்கவும்

1. அரசியலமைப்பு என்றால் என்ன? அதனை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
2. இங்கிலாந்து அரசியலமைப்பின் வளர்ச்சியைப் பற்றி விளக்குக.
3. இங்கிலாந்தின் தலைமை அமைச்சரது நிலையையும் அதிகாரங்களையும் ஆராய்க. இவரது அதிகாரம் அதிகரிப்பதற்கான காரணங்கள் என்ன?
4. அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகளை விளக்குக.
5. அமெரிக்க குடியரசுத் தலைவரின் தேர்தல் முறையை விளக்குக.
6. அமெரிக்க செனட் சபை உலகிலுள்ள இரண்டாம் மன்றங்களிளெல்லாம் வலிமையானதொரு மன்றமாகும் என்னும் கூற்றை ஆராய்க.
7. ஐந்தாம் பிரான்சுக் குடியரசின் முக்கிய அம்சங்களை விவரித்துரைக்கவும்.
8. ஆட்சித்துறை சட்டம் என்றால் என்ன? இது எவ்வாறு பிரான்சில் செயல்படுகின்றதென்பதை விளக்கவும்.
9. கூட்டாட்சி என்றால் என்ன? சுவிட்சர்லாந்தின் முக்கிய கூட்டாட்சிப் பண்புகளைக் கூர்ந்தாராய்க?
10. நேரடி மக்களாட்சி முறைகள் யாவை? அவை சுவிட்சர்லாந்தில் எவ்விதம் செயல்படுகின்றன என்பதை விளக்கி அவற்றின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டுக.